*Annamalai University Tamil Series No. 1.*

# PARI KATHAI

(WITH COMMENTARY)

BY

BHĀSHĀ KAVIŚĒKHARA MAHĀVIDVĀN

R. RAGHAVA AIYANGAR

*(Ramnad Samsthanam).*

*Tamil Research Department*

ANNAMALAI UNIVERSITY

1937

[Price Rs. 2

# பொருளடக்கம்

—·:o:—


| | |
|---|---|
| உரிமையுரை | |
| முகவுரை | 1—52 |
| உரிமையுரைப் பாடல்கள் | 53—54 |
| சிறப்புப்பாயிரம் | 55—67 |
| மேற்கோள் நூற்குறிப்பகராதி | 68—69 |
| செய்யுள் முதற்குறிப்பகராதி | 70—92 |
| பாரிகாதை | 1—384 |
| பொருட்குறிப்பகராதி | 385—403 |
| வேள்பாரியைப்பற்றிய மேற்கோள்கள | 404—415 |
| பிழையும் திருத்தமும் | 416—420 |
| திறங்களுக்குரிய பக்கங்கள் | |
| அநுபந்தம் | |

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு—1

# பாரி காதை

(உரையுடன்)

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர்
இராமநாதபுரம் ஸம்ஸ்தான மஹாவித்வான்
பாஷா கவிசேகரர்
**ரா. இராகவையங்கார்**
இயற்றியது

அண்ணாமலைச் சர்வகலாசாலை
அண்ணாமலைநகர்
1937
[விலை ரூபா 2

# பொருளடக்கம்


| | |
|---|---|
| உரிமையுரை | |
| முகவுரை | 1—52 |
| உரிமையுரைப் பாடல்கள் | 53—54 |
| சிறப்புப்பாயிரம் | 55—67 |
| மேற்கோள் நூற்குறிப்பகராதி | 68—69 |
| செய்யுள் முதற்குறிப்பகராதி | 70—92 |
| பாரிகாதை | 1—384 |
| பொருட்குறிப்பகராதி | 385—403 |
| வேள்பாரியைப்பற்றிய மேற்கோள்கள் | 404—415 |
| பிழையும் திருத்தமும் | 416—420 |
| திறங்களுக்குரிய பக்கங்கள் | |
| அநுபந்தம் | |

ஸ்ரீ

கடவுள் துணை

# உரிமையுரை

இத் தமிழ் நாடு
எல்லா நலத்தானும்
சிறந்து இனி தோங்கி
விளங்கும் பெருவிருப்பால்
தெய்வத்தன்மை நிறையும்
தில்லைத்தலமருங்கிற் பெரும்பொன் பொழிந்து
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
உலகு புகழ நிலைபெறுவித்த
அரிய பெரிய நல்லுதவியைப் பாராட்டிச்
செட்டிநாட்டு அரசர் பெருந்தகையார்
மகாராஜராஜஸ்ரீ மாட்சிமைதங்கிய
ஸ்ரீமான் டாக்டர்
**ராஜா. ஸர். அண்ணாமலை**
வள்ளலார்க்குப்
பெருங்கொடை நூலாகிய
இப்பாரிகாதை
உரிமையாக்கப் பெற்றது.

ஸ்ரீ :

கடவுள் துணை

# முகவுரை

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்'' (தண்டியலங்காரவுரை.)

"இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்"

(திருவையாறு. திருப்பாட்டு.)

பாரிகாதை என்பது பாரியைப்பற்றிய பாடலாகிய நூல் என்று பொருள்படும். காதை என்பது பாடற்கு வழங்கிய காதா என்னும் வடமொழியின் திரிபாகும். காதை, பாடற்குப் பெயராதல் மணிமேகலையுள் ஒவ்வொரு கதைையும் பாட்டு என வரைந்துகாட்டுமாற்றாற் றெரியலாம். இவ்வாறே சிலப்பதிகாரத்தும் ஒரோரு பாட்டே ஓரோருகாதையாய்ப் பெரும்பாலும் வந்தனவேனுஞ் சிறுபான்மை வழக்குரை காதை, வாழ்த்துக் காதை என்பன போலப் பலபாடற் றொகுதியையும் இப்பெயரான் இளங்கோவடிகள் வழங்கல் கண்டு, பாரிகதைமேற் றொடர்ந்து வந்த இப்பாடற் றொகைக்கும் இக்குறியீடு செய்யலாயிற்று. கதையையுடையது காதையாம் என்று கொண்டார் அடியார்க்கு நல்லார் (சிலப். பதிகவுரை.)

இனிப் பாரி என்பவன் தமிழ்நாட்டுக்கொடையறத் தானும் படைவலியானு மேம்பட்ட வேளிருட் சிறந்த தலைவள்ளலாவன்.

வேளிரென்பார், நாவலந் தண்பொழிலிற் றென்னாடு செல்வத்தானுங் கல்வியானும் வளஞ் சிறத்தற்குப் பெருந் துணையாய் விளங்கிய பெருமுடி வேந்தர்க்குப் பெண் கொடுத்தற்குரியராய்க், குறுமுடி குடியிற் பிறந்தோர் முதலியோராய், வேள் எனவும் அரசெனவும் உரிமை எய்தினோராய ஒரு வகைச் சிற்றரசராவர்.

இதற்கேற்ப, இவ்வேளிர்குலத்து நன்மக்களை நல்லிசைப் புலவர்பாடிய பல இனிய பாடல்களில் இவர் கொடைத்திறமும் படைத்திறமுமே பாராட்டப்படுதல் காணலாம். இங்ஙனம் பண்டைத் தமிழ்ப் பெரும்புலவர் அன்பு பொதிந்த இன்பப்பாடற்கு இலக்காகத் தலைசிறந்த வேளிர்கள், வேள் பாரி, வேள் எவ்வி, வேள் ஆய், நன்னன் வேண்மான், வேள் எயினன் முதலிய பலராவர். தமிழ் நாடு, அறிவானும், அரசியலானும், வீரத்தானும், கொடையானும், அறத்தானும், பிற நலங்களானும் மூவேந்தரான் எவ்வளவு மேம்பட்டதோ அவ்வளவு இவ்வேளிரானும் வளர்ந்து ஓங்கிய தென்று பண்டை நூல்களாற்றுணியலாகும். இவ்வேளிர் குலத்து, மூவேந்தரும் பெண்மணந்து பெற்ற பெருமுடியரசரும் இந்நாட்டுண்மை கேட்கப்படுதலான், இந்நாட்டுவளர்ச்சியிற் பல்வகையானும் உதவியவர் வேளிர் என்பது நன்கு தெரியப்படும். சோழன் கரிகாற் பெருவளத்தான் அழுந்தூர்வேள் மகள் மகனவன்

"வடதிசை யதுவே வான்றோ யிமையம
தென்றிசை யாஅய்குடி யின்றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே" (புறம். 132)

என இவ்வேளிருள் ஆய் என்னும் வள்ளலை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னுஞ் செய்யா கூறுப்

பொய்யாநாவிற் புலவர் பாடுதலான் இவர் பெரு நல்லுதவி யைத் தமிழ்நிஞர் எவ்வளவாக மதித்தன ரென்பது உணர லாம். பெருமுடியரசரினுஞ் சிறப்பித்துப் பேரன்புடன் புலவர் பாடும் புகழுடையராயினரிவரென்பது, பதிற்றுப் பத்துள், ஏழாம் பத்து முதற்பாட்டிற், கபிலர் என்னும் புலவர் தலைவர் செல்வக்கடுங்கோவாழியாதன் என்னும் பெருமுடியரசன் முன்னின்று அவன் காதாரக் கேட்கும் படி வேள்பாரியின் உத்தமக் கொடைப்பண்பினைப் பல படியாகப் பாராட்டி வாயாரப் புகழ்தலான் அறியலாம். இவர் வீரத்தானும் மூவேந்தர்க்குங் குறைந்தவராகாமை

"இன்முகங் கரவா துவந்துநீ யளித்த
அண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே" (புறம் 130)

என வேள் ஆயும்,

"கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே" (ஷ 110)

என வேள் பாரியும் பாடப்படுதலான் அறியலாம். இங்ஙனம் பல்வகைச் சிறப்பானும் மேம்பட்ட வேளி ருள்ளே வைத்து வேள்பாரி என்னும் வள்ளல், நம்தமிழ் நன்மக்களால், தலைமையின் மதிக்கப் பெற்றவனென்பது பண்டைத்தமிழ் நூல்களிற் புக்க அறிவாளர் கண்ட துணி பாகும். புறப்பாட்டுத் தொகுத்த நல்லாசிரியர், தொல் காப்பியனார்

"போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்"

(தொல். பொருள். புறம். 5.)

என முடியுடைவேந்தர் மாலையைக் கூறிய முறையிற், சேரர், பாண்டியர், சோழர் எனக்கருதிய நெறியே போற்றிச், சேரர் பாட்டும், பாண்டியர் பாட்டும், சோழர் பாட்டுமாக வைத்துத் தொகுக்கின்றவர், 86-ம் பாட்டாகிய போர்வைக் கோப் பெரு நற்கிள்ளி என்னுஞ் சோழன் பாட்டின் பின்னர் அதிகமான் சிறப்பினை ஒரு பதினெட்டுப் பாடல்களால் எடுத்துக்காட்டி, அதன்மேல் எல்லாவேளிரினும் வள்ளலினும் முற்படவைத்து வேள்பாரி பாடல்களைத் தொகுத்தலான் நன்கறியலாகும். அதிகமானை மூவேந்தர யடுத்து நிறுவியது அவன் சேரமான் குடியினனாதற் சிறப்பாலென்று துணியலாம். இவ்வுண்மையை

"நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர்" (புறம். 99.)

என அதிகமானை ஔவையார் பாடுதலான் அறியலாம். இப்பாட்டிலிவனைச் சேரமானாகவே கருதி "இரும்பனம் புடையல்" எனப் பனைமாலை கூறுதலுங் காண்க. (புறம்-99). பின், புறப்பாட்டுத் தொகுத்தார், பாரி பாடற்கு முன்னே அதிகன் பாடலை வைத்தாரேனும் அப் புறநானூற்றிற் பலபாடல்கள் பாடிய பெருஞ்சித்திரனார் என்னும் நல்லிசைப் புலவர்

"முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வண்ண னேவேரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும்" (புறம்-158.)

என வள்ளல் எழுவருள் முதற்கண்வைத்துக் 'கோமான் பாரி' எனச் சிறப்பித்தல் கண்டு இப்பெரியோன் அருமையும், முதன்மையும் நன்கறியலாகும். கபிலரும்,

"பாரிய, தருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்" (புறம்-116.)

எனப் பாரிய தருமையைப் பாராட்டி இரங்குதல் காண லாம். இவ்வள்ளலருமை பாராட்டியே

"தடங்கடன் மண்ணிற் றருமருள் விரும்பிய
சின்மேன் கிளவித் தெய்வப் பாரி" (யா,வி, பக்கம்-496.)

எனப் புலவர் புகழ்ந்தனர். 'பாரி யோரி' (தொல். செய்-125 மேற்கோள்-நச்.) எனவும் 'மன்புகழ் பாரி காரி' (திருப் புகழ்) எனவும் வருதல் காண்க. பாரியின் பாடல்களை யடுத் துக் காரியின் பாடல்களைப் புறப்பாட்டில் வைத்தது இரு வர் குடியு மணமியைந்த தொடர்பு பற்றி யெனின் இழுக் காது.

"ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை—காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தாஅணுந் தோளாள்
நிறனுள்ளு ருள்ள தலர்" (தொல், சொல், எச்ச, 13-சேனா)

என்ற பழம்பாட்டினுஞ் சேரவருதல் காண்க. சிறுபா ணாற்றினும் பாரியும் காரியும் சேரவைக்கப்பட்டனர். இவ் வாறு பண்டை நல்லிசைப் புலவர் பலர் வாயாரப் புகழ்ந்த வேள்பாரியின் மெய்ம்மைக் கொடைத்திறம் சைவசமயா சாரியருள் ஆளுடைய நம்பிகள் எனச் சிறப்பிக்கப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனாரால்

"கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங்
கொடுப்பாரிலை"
(திருப்புகலூர்ப்பதிகம்)

என மக்களைப்பாடாது எந்தை புகலூர்பாடுமின் என்று ஏற்புறக்குந் திருப்பதிகத்தே எடுத்துப் பாராட்டப்

பெற்றிருப்பது நற்றமிழ் கற்றோரெல்லாம் அறிவர். பொய் யடிமையில்லாத புலவர் என்று போற்றப்பட்ட வான்றோய் பெரும்புகழ்ச்சான்றோருள்

"தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதனாற்பத் தோன்பது பல்புலவோர்"
(திருத்தொண்டர் திருவந்தாதி, 49.)

என நம்பியாண்டார் நம்பியாசாரியரால், தலைமையின் வைத்துப் பரவப்பட்ட புலனழுக்கற்ற வந்தணாளனாகிய பொய்யா நாவிற் கபிலனென்னும் புல்வர் பெருமானாற் கல்லுமுருகக் கனிந்து பாடப்பட்ட பழம்பாடல்களிற் கண்ட வேள் பாரியின் அருமைக்குணங்களே ஆளுடைய நம்பிகள் திருவுள்ளத்தையுங் கவர்ந்து திருநெறித்தமிழிற் பாடுவித்தன என்று சொல்லின் அது மிகையாகாது.

இத்தமிழ்நாட்டுச் சுற்றேறக்குறைய ஒருபதினெட்டு நூற்றாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த, இம்பாரியனைய வண்மைப் பாரியின் உண்மை வரலாற்றினை ஆராயும் பேரவாவினை முதற்கண் என்கண் விளைத்தது, இவ்வரிய திருப்பாட்டின் அடியேயாகும். தமிழ்ப்புலவர்கட்கு முற்றூட்டாகப் பலவூர்கள் வழங்கிய புண்ணியச்சேதுபதிகளின் தலைநகராகிய முகவையில், தேவாரம், திருவாய்மொழி முதலிய தெய்வப்பாடல்கள் மிகப்பலர்வாயினும் அக்காலத்து வழங்கியதுண்டு.

என்பாக்கியப் பயத்தினால் எனக்கு எல்லா நன்மையுந் தந்தருளிய குணக்கடலாகிய என்னருமை மாதுலர் சேது ஸம்ஸ்தான் வித்வான் சதாவதான முத்துஸ்வாமி ஐயங்கார் (இவர் வட்டெழுத்திருப்பெயர் சேஷசர்மா என்பது; தமிழில் அநந்தாழ்வான் என்றும் வழங்கப் பெற்றனர்.) அவர்கள் பேரன்பிற்குரியனாகி அவர்கள் பால் தமிழிற் சில

பயிலற்கு வாய்த்த நன்னாள் முதலே இவ்வாராய்ச்சியின்கண் அவாப் பெருகத்தலைப்பட்டது.

பாரியின் வரலாறு ஆராய்ந்து கொள்ளுதற்கு என் இளங்காலத்துத் துணையாயிருந்த அச்சுநூற் பகுதிகள் சிலவேயாகும். அவற்றுள் மண்டல புருடர் செய்த சூடாமணி நிகண்டில்

"பாரியா யெழிலி நள்ளி பசுந்தொடை மலையன் பேகன்
ஓரியே கடையி லுற்றோ ருறுபொரு டண்டா தீந்தும்
வாரியி லிரந்தோர்க் கிட்டும் வளர்புகழ் துதிக்க வீந்துய
பேரியல் வைய மெண்ணப் பெற்றனர் முப்பா லாகும்"
(மக்கட்பெயர்-24.)

என்பது ஒன்று. இந்நிகண்டு இற்றைக்கு 86-வருடங் கட்கு முன்னர்ச் சௌமியயாண்டில், சிறந்த தமிழ்ப் பெரியாரராற் பதிப்பிக்கப்பட்டதேயாகும். அரியகற் றுசற்றார் கண்ணும் அந்நாளில், தமிழ்ச்சரிதவாராய்ச்சி எம்மட்டி லிருந்த தென்பது இந்நிகண்டுப்பாட்டில் 'எழினி' என்னும் பெயரை 'எழிலி' என்று வெளியிட்டு அவ்வாறே உரையினும் வரைந்து சென்றதனால் நன்கு ஊகித்தலாகும். மேகம்போலக் கொடுப்பது பற்றி எழிலி என்று ஒருவற்குப் பெயராயிற்றெனக் கருதப்பட்டதுபோலும். இதற்குப் பின்னர், ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்துச் செய்யுளியலுரையில்,

"பாரி யோரி நள்ளி யெழினி
யாயே. பேகன் பெருந்தோண் மலையனை
றேழுவரு ளொருவனு மல்லை" (சூ-125.)

என்று (கி-பி. 1885) வெளியிட்டது தெரிந்தும் சூடாமணி நிகண்டுப் பதிப்பிலுள்ள பெருநம்புதலாற்

"பாரி யெழிலி நள்ளியாய் மலையன்
ஓரி பேக னிவர்கடை வள்ளல்" (ஆடவர்வகை. 32.)

எனப் பிங்கல நிகண்டிற் பதிப்பித்தாரும் (கி-பி. 1890.) உண்டு. இவற்றால், தமிழ் நாட்டு வள்ளல்கள் எழுவர் பெயரும் உள்ளவாறு சொல்லத் தெரியாத காலமும் உண்டாதலுணரலாம். மண்டல புருடர் பிங்கலர் கூறியவாறே நாவலந்தீவில் வள்ளல்களை முதல், இடை, கடை என முத்திறப்படுத்துத் "தண்டாதிந்து" முதல்வள்ளல்கள் எனவும், "இரந்தோர்க்கிட்டு" இடைவள்ளல்கள் எனவும், "புகழ் துதிக்க ஈந்து" கடைவள்ளல்கள் எனவும், மூன்று பாகுபட வையம் எண்ணப் பெற்றனர் என்று கருதி விளங்கக் கூறுதல் காணலாம். இவ்வாசிரியர் இரவாதீந்தவரைத் தலைவள்ளல் என்றும், இரந்தபின்னரீந்தவரை இடைவள்ளல் என்றும், இரந்தவர் புகழ் துதிக்க ஈந்தவரைக் கடைவள்ளல் என்றும் தெளிந்தனராவர். இதனால் முதல், இடை, கடை என்பன காலம் பற்றியனவாகாது கொடையின் ஏற்றத்தாழ்வு பற்றியனவாக அவர் கொள்ளுதல் உணரலாம். மண்டல புருடர் செம்பியன் முதலிய எழுவர் தலை வள்ளல்களெனவும், அக்குரன் முதலிய எழுவர் இடை வள்ளல்களெனவும், பாரி முதலிய எழுவர் கடை வள்ளல்களெனவும் பகுத்தது, உத்தமம், மத்திமம், அதமம் என்னு முறைபற்றிய தென்று நன்கு தெளியத்தகும். மண்டலபுருடர் நிகண்டு செய்தது விஜயநகரம் ஆண்ட கிருஷ்ணதேவ மகாராசர் காலத்தென்பது அவர் ஒன்பதாந் தொகுதியில், (செய்-10.)

"படைமயக் குற்ற போதும் படைமட மொன்றி லாதான்
மடைசேறி கட்கத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
கேடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டின ராயன் கைபோற்
கோடைமட மென்று சொல்ப வரையாது கொடுத்த லாமே."

எனப்பாடுதலான் அறியப்படும். ஆந்திரவேந்தர் கிருஷ்ண தேவராயர்காலம் கி-பி. 1510—1530 என்று கூறுவர். இவ்வரசர் காலத்துத் தமிழ் வள்ளல்கள் வரலாறுகள் எங்ஙனம் உணரப்பட்டுப் பாராட்டப்பட்டன என்றறிதற்கு, "பாரியாய்......முப்பாலாகும்" என்ற நிகண்டுப் பாடல் ஓர் பெருஞ்சான்றாகும். மண்டல புருடர், தண்டாது ஈதல் தலைவள்ளல் இயல்பென்று துணிந்தவர், பாரிவேள் அங்ஙனம் ஈந்தவன் என்று தெரியாமல், புகழ் துதிக்க ஈந்தவன் என்று துணிந்து கொண்டதனால் தமிழ் வள்ளல்கள் உண்மைச்சரிதம் பயிலப்படாமல், அந்நாளில் நிலைதடுமாறிய தென நன்கு உய்த்துணரலாகும். இவர் கடைவள்ளல் எனக் கருதித் தலையில் வைத்த வேளிர் முதல்வன் மெய்ம்மைக் கொடை

> "பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி" (புறம்-200.)

என்னுஞ் சான்றோர் வாக்கிற்கு விரோதமாக, எத்துணை அருகி வழங்கிய சரிதமாகப் போயதென்று தெரியலாம். தண்டாமலீந்தவன் தலை வள்ளலாயின் முல்லைக்குத் தேரீனை அது தண்டாமலே யீந்த பாரி கடைவள்ளலாவ தெங்ஙனம் எனவினவி யறிந்துகொள்க. தமிழ்நாடு வேற்றுமொழியரசர் ஆட்சியிற் பட்ட பழங்காலத்து, அந்நாட்டுத் தொன்மை வரலாறுகள் மிகவும் மறந்துபோயின என்று கூறின் இழுக்காகாது. பண்டைத்தமிழ் நல்லிசைப் புலவர்கள் பாரி முதலியோரைப் பிற்காலத்தார் போலக் கடை வள்ளல் என்று நினைத்தலுஞ் செய்யாமை அவர் நூல்களிற் கண்டு கொள்க. இவ்வாற்றான் முன், இடை, கடை என்பன காலம்பற்றியன என்பதே கருத்தாகக் கொள்க. பிங்கலர் முதலிடை கடை என்றது இக்கருத்தே பற்றியதெனின் அமையும். அவர் மண்டல புருடர் போலக்

கொடையினேற்றத்தாழ்வு குறிக்காமை கண்டு கொள்க. நந் தமிழ்ப் பெரியார் நத்தத்தனர்,

> "எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்"
> (சிறுபாண்-அடி, 113)

என்பதனல் இவ்வள்ளல்களைத் 'தானதுரந்தரர்' ஆகக் கருதுதல் தெளியக் காணலாம்.

ஏணிச்சேரி முடமோசியார், ஆய் என்னும் வள்ளலைப் பாடிய இடத்து,

> "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
> அறவிலை வாணிக னுஅ யல்லன்" (புறம்-134.)

எனக் கூறுதலான் இவ்வள்ளல்கள் மீக்கொண்ட அருட்கொடையியல்பு நன்குணரலாம். இவ்வுண்மையானன்றே,

> "தடங்கடன் மண்ணிற் றருமருள் விரும்பிய
> சின்மேன் கிளவித் தெய்வப் பாரி"

என யாப்பருங்கல விருத்தி மேற்கோளிற் கூறப்பட்டதென நினைக.

இனி யாப்பருங்கலக்காரிகையில் ஒரு விகற்பச்சிந்தியல் வெண்பாவிற்கு உதாரணமாகக் காட்டிய

> "நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
> பிறர்நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
> பறநாட்டுப் பெண்டி ரடி"

என்புழிப் பறநாடு என்பது எழுதினர் தவறும், பதித்தவர் தவறும் ஆகுமென்று கூறி 'அறநாட்டுப் பெண்டி ரடி' என்று மோனைக்கியைவது காட்டித் திருத்திப்படித்தாரும், படிப்பித்தாரும் பலராவர் : பறநாட்டுப் பெருங் கொற்றனர் என்று பெயர் சிறந்த நல்லிசைப் புலவர் ஒருவருண்டென்

பது 323-ம் அகப்பாட்டால் இக்காலத்துப்போல அக்காலத்துத் தெளிந்ததில்லை. மாம்பாக்கம் திருச்சிற்றம்பல நாவலர் என்பவர் பாடிய அண்ணாமலைச் சதகத்தில் இப்பறநாட்டைச் சிங்களதேயம் எனத் துணிந்துபாடினர். அப்பாடல்,

"சிங்கள மேனுந்தேய முழுதாளு மன்னன்
சிறந்தபேர்ப் பாரி சாளன்*
செய்தவப் பயனாற் பிறந்தநற் குணமான
சிறுமி யங்கவை சங்கவை,
மங்கையர்க ளிருவரை வளர்ந்தேடுத் தெளவையார்
மாமுகக் கணபதி கையான்
மணவோலை யெழுதிமூ மன்னரைக் கோவலூர்
வரவழைத் தறுகி டற்குத்,
தங்கிப் பனந்துண்ட மரமாகி யேபழந்
தரநதிப் பெண்ணை நெய்பால்
தான்வரப் பாடியப் பெண்களைத் தெய்விகத்
தலைவன் மணம் புரியவே,
அங்குதவு மெளவைதொழு மைங்கரன் றந்தையே
யருள்பெறு வசந்த ராயர்
அண்ணா வினிற்றுதிசே யுண்ணா முலைக்குரிய
அண்ணாமலைத் தேவனே.

என்பதாகும்: இதனாற் பாரியின்பறநாடு மறந்தது தெரியலாம்.

இற்றைக்கு 72 ஆண்டுகட்குமுன், நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரவர்களால் அச்சிடப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை மூலப்பிரதியில் "முல்லைக்குத் தேருமயிலுக்குப் போர்வையும்... .....தொல்லை, யிரவாம லீந்த விறைவர்." என்பது படிக்கப்பட்டாலும் அதன்கண் ஓதிய முல்லைக்குத் தேரீந்த இறைவன் இவனென்று துணியப்பட்டதேயில்லை. கீழ்க்கணக்கு நாலுட் பழமொழியினும்

* சாளன் வழியினனெனக் கருதினர் போலும்.

"முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையுந்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்"
(பழமொழி, செ, 74)

என்றதன்றி, உரையாலும் பெயர் விளங்காவாறறமொழிய நாளும் உண்டு.

முல்லைக்குத் தேரீந்தவன் வேள்பாரி யென்று துணியப்படாமைக்கு முக்கிய காரணம் இரட்டைப் புலவர் பாடிய தெய்வீக வுலாவில்,

"மல்லற் றேடைத்தொண்டை மான்கடவுந் தேரை யொரு
முல்லைக் கொடிதடுத்த மூதூரும்"

என வந்துள்ளதேயாகும். இது வடதிருமுல்லைவாயிற் றலபுராண கதையாகும். தொண்டைமான் தேரூர்ந்து செல்லும் போது காட்டில் ஒரு முல்லைக் கொடி தடுத்த தென்று விளங்கக் கேட்ட பின்னர், முல்லைக்குத் தேரீந்தவன் ஒரு தொண்டைமான் என்று கொள்வதல்லது வேறென் தெளியலாகும். இவ்வுலாவடிகளைத் துணையாகக் கொண்டு பாரியூர் தொண்டை நாட்டதென்று வாதித்தால், வேறு சான்றுகளில்லாத அக்காலத்து, உடன்பட வேண்டிய நிலையிலிருந்த தென்று தெரியலாம்.

இதன்கட் கூறப்பட்ட முல்லைக் கொடிக்கும், பாரி தேரீத்த முல்லைக் கொடிக்கும், யாதோரியைபும் இல்லை யென்று தேவாரத்தை ஒழுங்காக ஓதினவர் அறிவர். தொண்டை நாட்டுத் திருவட முல்லை வாயிலைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருப்பதிகத்திற்,

"சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட் டருளிய
விறைவனே" (10)

எனக் கூறுதலான் இத்தொண்டைமான் முல்லை வரலாறு வேறென்பது நன்கு தெளியலாம். பாரியைக் கூறிய ஆளுடைய நம்பிகளே இங்ஙனந் தொண்டைமான் வரலாற்றையுங் கூறுதல் காண்க. நம்பியாரூரர் வெளிப்படுத்திய இவ் வரலாற்றையே இரட்டைப் புலவர் "தொண்டைமான் கடவுந்தேரை ஒரு முல்லைக் கொடி தடுத்த" தாகக் கூறினரென்று நன்குணரலாம். தேவாரத்தில், தொண்டைமான் களிறு என்றது இத்தெய்விக வுலாவில் தொண்டைமான் தேராயது காண்க.

சோணாட்டுத் தென் திருமுல்லைவாயிற் புராணம், கிள்ளி வளவன் குதிரை யூர்ந்து செல்லும்போது ஒரு முல்லைக் கொடி அக்குதிரைக்காலைப் பிணித்ததென்று கூறும். இதனை அந்நூலுள்,

"மேல்விசை மருத்து நேராய் வேகவெம் புரவி செல்லுங்
காலோடு முல்லை வல்லி பிணித்தது"
(கிள்ளிச் சோழன் முத்தி பெற்ற சருக்கம். 22)

என்பது முதலாக வருவனவற்றானுணரலாகும். ஒரு நாட்டு உண்மையினிகழ்ந்த சரிதம் அயல் நாடுகளில் வேறு வேறாக அவதரித்துச் செல்வது இயல்புதான். தமிழ்நாட்டு முல்லையைப் பற்றிய இம்மூன்று செய்திகளும் பல காலத்து ஆங்காங்கு நிகழ்ந்தனவே யாமென்று நம்பியிருப்பது நன்மைத்தாகும்.

நச்சினார்க்கினியர் சிறுபாணாற்றுப்படையுள் "முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய" (89.) என்னுமிடத்து, "முல்லைக் கொடி தடுத்ததற்கு அது வேண்டிற்றாகக் கருதிப் பெரிய தேரைக் கொடுத்த" என உரை கூறிச் சென்றது

ஈண்டைக்கு ஆராயத்தக்கது. விரைந்து செல்லுந் தேரினை ஓர் சிறு கொடிமுல்லை தடுத்தது எவ்விதமோ தெரிகிலேன். தேரினைத் தடுத்ததாயின் அவ்வளவிலே அதனுருவிற் பாதிக்கு மேற் சிதைந்ததாதல் தெள்ளிதாம். அது தடுக்குமளவும் ஊர்ந்தானுயின் வேள் பாரி நாக நெடுவழியில் (சுரபுன்னை யடர்ந்த நெடியமலை வழியில்) முன்னே நன்று நோக்காமல், தேரைக் கடவியவனுவன்: தடுத்தற்குக் கொடுத்தான் என்றால் அருளால் ஈந்தவனுகான். மேலும் இது பழைய நல்லோர்

"தடங்கடன் மண்ணிற் றருமருள் விரும்பிய
சின்மேன் கிளவித் தேய்வப் பாரி"

(யாப்பருங்கலவிருத்தி, பக்கம், 496.)

எனப் பாடியதனேடு மாறுபடுதலுங் காண்க. இப்பாடற்கண், 'தரும்' என்றதனுற் செயலும், 'அருள் விரும்பிய' என்றதனுல் உள்ளமும், 'சின்மென்கிளவி' என்றதனுற் சொல்லும் ஆகிய திரிகரணமும் ஒத்துச் சிறந்த மேன்மையால் இவன் தெய்வத்தன்மையன் என்று விளங்கவைத்தல் கண்டுகொள்க. "பனிவரை நிவந்த" (200.) என்னும் புறப்பாட்டில், "முல்லை......பாடாதாயினும்.........தேர் கொள்கெனக் கொடுத்த பரந்தோங்குசிறப்பிற் பாரி" எனக் கபிலர் பாடுதல் காண்க. இதன்கட் "பாடாதாயினும்" என்றதனுல் அருளாற் கொடுத்தல் புலப்படுத்தினுர். தேர் கொள்கெனக் கொடுத்த என்றது, தேரினைக் கொள்க என்று சொல்லிக் கொடுத்த, என்றவாறு. இது கொள்ளவுந் தெரியாதுள்ளதனை நோக்கித் தன் அருள் பொங்கி வாயின் வழிந்த சொல்லாதல் காட்டியவாறும். கொடி செவியில்லதாதலறிந்தும், கொள்க என்று இவன் வாயாற் கூறியதும் அருளினுதல் எளிதினுணரலாம். புறப்பாட்டுரைகாரரும் "தேரைக் கொள்கவென்று சொல்லிக் கொடுத்த பரந்து மேம்பட்ட தலைமையினையுடைய பாரி" என வுரைத்தார். இதனுற் கபிலர் என்னும் புலவர் பெரு

யான், இவ்வரிய கொடையை யாண்டும் அறியாமையின் நிகழ்ச்சியாகக் கூறுமை கண்டு கொள்க. இத்தலைமை யானன்றே இவ்வள்ளலைப் பெரும்பாலும் நம் முன்னையோர் எழுவருள் முற்பட வைத்தனரென வுணரலாம்.

இனிப் புறப்பாட்டுரைகாரரும், "ஊருடனிரவலர்க் கருளித் தேருடன், முல்லைக் கீத்த செல்லா நல்லிசை...... பாரி" (புறப்-201.) என்பதனுரையில் "தேரை...ப்புரவி யொடுங் கூட முல்லைக்கு வழங்கிய...பாரி" என்று உரையிற் கூறினர். பழந்தமிழ் நயமெல்லாம் வடித்துணர்ந்து மிகவுஞ் சிறந்த பேரறிவினராகிய இந்நல்லுரைகாரர் இவ்வரிய கொடைத்திறத்தைச் சிறிது நுணுகியாராயாது, குதிரையுடன் முல்லைக்கு வழங்கினனெனக் கருதியது சரிதச் செய்தி வகைகளில் நுழைதற்கு விருப்ப மில்லாத அக்கால நிலையை நன்கு புலப்படுத்தும். இவ்வுரையைப் பற்றி, என் இனிய நண்பர் ஸ்ரீமான் கந்தசாமிப் பிள்ளை யவர்களிடம் யான் பேசியபோது, அவர்கள் இவ்வுரைப் படி கொண்டால், பாரி, முல்லைக்குத் தேர்கொடுத்த தாகாது, தன்தேர்க் குதிரைக்கு முல்லை கொடுத்ததேயாம் என்று கூறியது, பலருங் கேட்டின்புறத்தக்கதாம். பதினெட்டு நூற்றாண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த இப்பெரு வண்மை வரலாறு, அரியகற்றுசற்ற நல்லுரையாளராலும், இவ்வாறு பல படியாக வரையப் படுமாயிற், பிற்காலத்தவர் தமிழ் வள்ளல்களைப் பெயரினுஞ் செய்தியினும் பிழைக்க வுணர்ந்தன ரென்பது வியப்பினதாகாது.

"ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

(தொல், புறம், 36.)

என்பதனுரையில் நச்சினார்க்கினியர் விறலியாற்றுப் படைக்கு எடுத்துக் காட்டிய

"சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி"
(புறம்-105.)

என்னும் பாட்டின் ஈற்றடி 'பாரி வேள்பாற் பாடினை செலி னே" என்றிருக்க வேண்டுவது "பாரி வெண்பாப் பாடினை செலினே" என்று பதிப்பிக்கப் பெற்றுப். 'பாரி வெண்பா' ஒன்றுண்டு கொல்லோ என ஐயம் விளைத்து நடந்தகாலமு முண்டு.

இத்தடுமாற்ற மெல்லாந் தீர்ந்து, பண்டைத் தமிழ் வள்ளல் சரிதங்களை உண்மையா னுணர்தற்குப் பெருந் துணையாயின, தாக்ஷிணாத்ய கலாநிதி, மஹா மஹோபாத் யாய, டாக்டர், ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் தேடி யாராய்ந்து நன்று அச்சிற் பதிப்பித்த சங்கநூற்றொகை களேயாகும். இவர்கள் பெரு நன்றியை இத்தமிழுலகம் என்ஞான்றும் பாராட்டுவதாகும். இவர்கள் கி.பி-1889ல் அச்சிட்டுதவிய பத்துப்பாட்டுச் சிறுபாணாற்றுப்படை நச்சினார்க்கினியருரையாற்றான் இத்தமிழ் வள்ளல் எழுவர் வரலாறுகள் முதல் முதல் ஒருவாறு தெளியலாயின. இதன்பின் இவர்கள் வெளியிட்ட புறநானூறு, பதிற்றுப் பத்து முதலியனவும் பிறவும் இவ்வள்ளல்கள் வரலாறு ஆராய்தற்குப் பெரிதும் உதவியாயின. நல்லிசைப் புல வர் அன்பின் வழிந்த இன்பப் பாடல்கட்கு இலக்காகிய இவ்வள்ளல் எழுவரும் தலைசிறத்தற்குரிய காரணங்கள் பல இத்தொகை நூல்களால் நன்கு விளங்கின.

இவ்வெழுவரும் கொடையானும் படைவீரத்தா னும் சிறந்தவரென்பது, இவர் கொடை கூறுமிடத் தெல்லாம் இவர் படைவன்மையும் உடன் கூறுதலான் அறியலாம். "வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே, கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே" (புறம். 111) எனப்பாரியையும், "ஆடுமகள் குறுகி னல்லது பீடுகெழு மன்னர் குறுகலோ வரிதே" (புறம்-128) என ஆயை

யும், "கொடை மடம் படுதலல்லது, படைமடம் படான்" (ஷை, 142) எனப் பேகனையும், "நீர்த்துறை படியும் பெருங் களிறு போல், வினியை பெரும வெமக்கே, மற்றதன், றுன்னருங் கடாஅம் போல, வின்னாய் பெருமநின் னொன்னாதோர்க்கே" (ஷை-94) என அதிகனையும், "உடலு நருக்கார்.....நின்னாடே, யழல்புறந் தரூஉ மந்தணரதுவே" (ஷை-122) எனக் காரியையும், "இரப்போர்க்கீயும்......... அடுபோரானா வாதனோரி" (ஷை-153) என ஓரியையும், "தகைசால் வண்மைக், கொள்ளா ரோட்டிய நள்ளியும்" (ஷை-158) என நள்ளியையும் பாடுதலானறியலாம்.

இனிப் பாரிக்குக் கபிலரும், ஆய்க்கு ஏணிச் சேரி முடமோசியாரும், பேகனுக்குப் பரணர் முதற் சிலரும், அதிகற்கு ஔவையாரும், காரிக்கு வடமவண்ணக்கன் பேரி சாத்தனார், நப்பசலையார் முதலியோரும், ஓரிக்கும், நள்ளிக் கும், வன்பரணரும் நண்பின ரென்பது அவரவர் பாடல் களாற் றுணியப்படுவது.

இப்புலவர் இவ்வெழுவர்க்கும் தனித்தனி மலையுடைமை கூறுவது நினையத்தகும். பாரிக்குப் பறம்புமலையும் (புறம்-109), ஆய்க்குப் பொதியில் மலையும் (ஷை-128), பேகனுக்குப் பொதினி மலையும் (அகம்-1), அதிகற்குக் குதிரை மலையும் (ஷை-158), காரிக்கு முள்ளூர் மலையும் (ஷை-123), ஓரிக்குக் கொல்லி மலையும் (ஷை-152), நள்ளிக்குத் தோட்டி மலையும் (ஷை-150) உரிய வெற்புக் களாகும். பேகனுக்குப் பொதினி கூறியது அவன் குடி முன்னோனாகிய ஆவியின் மலையாதல் பற்றி யென்க. நள்ளி தோட்டிமலை, சேலஞ் சேகரத்தைச் சேர்ந்த ஒசூர்ப் புறத் துள்ள அங்குசகிரி என்பதாகும். பொதினிமலை இக்காலத் துப் பழனிமலைப் புறமாக நினைக்கப் படுவது.

இவருட் பாரி ஓரறிவுயிர்க்கு அருளுதலும் (புறம்-200) [illegible]க்களித்தலும், பேகன் மயிலுக்குப் போர்வை யளித்த லும் மறுமை நோக்காது வறுமை நோக்கி நல்குதலும்

(ஷை-141) ஆய் பயன் கருதாது அறஞ் செய்தலும் (புறம்-134) தனக்கரிதிற் கிடைத்த கலிங்கத்தைக் கடவுட் படிமைக்குப் போர்த்தலும் (சிறுபாண்), அதிகன் ஔவை சாதனீங்க அமுதவிளை நெல்லிக்கனியளித்தலும் (புறம்-91), ஓரி சுரத்திடை நின்றும் பொன்னு மணியும் பாணர்க் களித்தலும் (புறம்-152), நள்ளி தன்பெயர் சொல்லாயலே தன் கழுத்திலிட்ட ஆரத்தையும் தன்கைக் கடகத்தை யும் (புறம்-150) இரவலர்க் கீத்தலும், இப்புலவர்கள் கண்ட சிறப்பியல்புகளாகும்.

இவ்வாறு கொடை, வீரம், செல்வ முதலிய பல்வகை யினும் ஒத்த இவ்வள்ளல் எழுவருள் வேள்பாரியைத் தலைமையில் வைத்துப் பெருஞ் சித்திரனர் (புறம்-158) முதலாய புலவர்கள் சிறப்பித்துப் பாடற்குக்காரணம், "ஈத்த திரங்கான், ஈத்தொறு மகிழான், ஈத்தொறு மாவள்ளியன்" (பதிற்-61) எனக் கபிலர் உலகறியக் கூறிய அரிய பெரும் பண்புகள் பற்றியா மென்று துணியப்படும். இவ்வுண்மை, தங்காலப் புலவரும் புகழ்ந்த புலவர் தலைவ ராகிய அக்கபிலராற் "பாரிய தருமை யறியார்" (புறம்-116) எனப் பாடப்பட்டதனும், மூவரையும் வென்று அவர் ஓடுகழற் கம்பலை கண்டதனும், ஓரறிவுயிர்க்கும் அருள் செய்தலானும், புலங்கந்தாகச் சென்ற இரவலர்க்குத் தன் முந்நூறூரும் வழங்குதலானும் (ஷை.-110), தன் மகளிரைக் கல்வி வீறுடையராகப் பயில்வித்த லானும், அறம் பற்றி மகளிர்க்கு அரசுத்திருவும் வேண்டா மென்று முடியுடையரசற்கு மணமறுத்தலானும், வஞ்சித்த பகைவர்க்கும் தன்னை வழங்கியதனும், தெளிந்து கொள் ளலாகும்.

இங்ஙனம் அருமணி போல நல்லிசைப் புலவர் ஆங்காங்குப் பொதிந்துவைத்த வேள் பாரியின் வரலாறு களை என்னறிவிற் கியன்றவரை தொகுத்துத் தொடர்பு பெறவைத்து, வெண்பா யாப்பினல், என் ஆசையாற் சிஃ சொற்றேன். பெரியோர் வெண்பா யாப்பிற் பெரிய வர

லாறுகளைச் செய்தல் 'பாரத வெண்பா', 'நளவெண்பா,' 'அரிச்சந்திர வெண்பா' என்பவற்றானறியலாம். இந்நல்லோர் போய்வழியில் நாலடி தொட்டுச் சென்றேன். "நல்லோர்கள் போனவழி நாலடிப் போயினும் பொல்லாங்கு நீங்கிப் புகழாய்ப் புண்ணியமுமாகும்" என்பது நீலகேசித் தெருட்டு.

## வேள்பாரி காலம்.

நக்கீரனார் அகப்பாட்டில்

"உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச்சேய் நின்று
செழுஞ்சேய் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தா ளாம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளமருழக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி"

என்னப் பாடுதலாற் கபிலரும் பாரியும் நட்புற்று வதிந்தது கேட்கப்படுவது. பேகன் இல்லறக் கிழத்தி கண்ணகி காரணமாகப் பாடியவர்களிற் கபிலரும் பரணரு முண்மை 144, 145-ஆம் புறநானூற்றுப் பாடல்களா னறியலாம். இதனால் இப்பெரும் புலவரிருவரும் ஒரு காலத்தவ ரென்பது துணிபு.

"கபிலபரணர் தங்களிலே வாதுசெய்தாரென இயைபு தோற்ற நின்றமையால் இதரேதரத் தொகையாயிற்று" (தொகை. 6)

என வீரசோழிய வுரைகாரர் பெருந்தேவனார் கூறியவாற்றானும் இவர் ஒரு காலத்தவரேயாதல் உணரலாம். பரணர், கோவலன் மனைவி கண்ணகிக்குக் கோயிலெடுத்த செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தாற் பாடியவராதலாற் பரணருஞ் செங்குட்டுவனும் ஒத்தகாலத்தின ராதல் தெரிந்தது. செங்குட்டுவன் கண்ணகி கோயிலெடுத்துச் செய்த

மங்கல விழாவில் உடனிருந்த அரசர் வரிசையில் இலங்கை வேந்தன் கயவாகுவும் ஒருவன் என்பது கேட்கப் படுதலான், கயவாகு வேந்தன், செங்குட்டுவன், பரணர், கபிலர் இவரெல்லாம் ஒரு காலத்தவரென்பது துணியப்பட்டதாம். இந்நால்வருட் கயவாகு காலம் இலங்கை மகா வமிசம் என்னும் பௌத்த சரிதத்தால் கி. பி. இரண்டா நூற்றாண்டின் றொடக்கமென்று ஆராய்ச்சியாளர் துணிதலால் அக்கயவாகு காலத்தவராகக் கண்ட கபிலராற் பாடப்பட்ட பாரியின் காலமும் அதுவே யாமென்று நினைதல் தகும்.

இப்பாரிகாதை பாயிரத்திற முட்படப் பதினன்கு திறமாகப் பகுத்துக் கொள்ளப் பெற்றது.

## பாயிரத்திறம்

இது கடவுள் வாழ்த்தும், துறவோர்ப் பேணலும், குரவர்ப் போற்றலும், செய்ந்நன்றி யறிதலும், அவையடக்கமுங் கூறுதலுடன், இந்நூல் கொடையறன் வலியுறுத்தற் கெடுத்துக் கோள்ளப்பட்டதென்பதும், இக்கால நிலையே இவ்வரிய பாரிவேள் கொடையைப் பாடத் தூண்டியதென்பதும், இவ்வேள் கோடைச்சரிதம், பழைய சங்கப் புலவர் பெரு நூல்களில் ஆங்காங்குக் குறிக்கப்பட்ட அரிய செய்திகளையே தொகுத்துத் தொடர்புபெற வைத்துப் பாடப்படுவதென்பதும், இவ்வரலாறு பெரும்பாலுங் கபிலர் என்னும் நல்லிசைப் புலவர் பாடல்களிலே தழைத்ததென்பதும், பிறவும் உரைப்பதாகும். 'பாரிகொடை' எனவும், 'வேள்கொடை' எனவும் இக்காதையை எடுத்தாளுதலால் இது தொல்காப்பியனார் புறத்திணையியலுட் கூறிய,

"கோடுப்போ ரேத்திக் கோடாஅர்ப் பழித்தலும்"
(சூ-35)

என்பதனுட் 'கொடுப்போரேத்திய' தென்று தெளிய வைத்தவாறும், கொடுப்போரேத்தியதற்குப், "பாரி பாரி

யென்று பல வேத்தி..............மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே" (புறம்-107.) எனப் பாரியைப் பற்றிய கபிலர் பாட்டை இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டுதல் நினையலாம்.

## 2. வளம்பாடுதிறம்.

இது வேள் பாரியின் நாடும், மலையுஞ், சுனையும் வளஞ் செய்தலைப் பண்டையோர் செய்புள்களிற் கண்ட வாற்றொடு பொருந்தச் சிறப்பித்துப் பாடியதாகும். நாட்டின் வளம் அதனை ஆளும் அரசனாற் சிறக்க வேண்டுதலின், ஈண்டுப் பறம்பு நாடாளும் வேள்பாரியின் மேம்பாடும், அவன் இல்லறத்தேவி கற்புத் தலைமையும், அவன் குலமகளிர் கல்விச் சிறப்பும், ஒழுக்கமும், பிறவும் உடன் கூறப்பட்டன. இது

"மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" (புறம்-186.)

என்ற சான்றோர் கருத்தினைத் தழீஇ யுரைத்ததாம்.

பாரி நாடு, பறம்பு நாடு, பறநாடு எனவும், அவன் மலை, பறம்பு மலை எனவும், அம்மலைச்சுனை, பனிச்சுனை எனவும் பழையநூல்களில் வழங்கப்படும். இவற்றைப் பாடிய புலவர், கபிலர், ஔவையார், மிளைக்கந்தனார், நக்கீரனார் முதலியோர். இப்பாரி நாடு, பாண்டி நாட்ட தென்பது,

"புரிசைப் புறத்தினிற் சேரனுஞ் சோழனும் போர்புரிய
இரியச் சயங்கொண்ட போழ்தினில் யாமினி
யீங்கிவனைப்
பரிசிற்கு நல்ல கவிபாடி னல்வரும் பாக்யமேன்றே
வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டிய மண்டலமே"

எனவரும் பாண்டிமண்டல சதகச் செய்யுளானறிந்தது. கபிலர்,

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகோண் முரசின் மூவிரு முற்றினும்" (புறம்-109.)

எனவும்,

" கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகோளற் கரிதே"
(புறம்-110.)

எனவும் கூறியிருக்கவும் சேரனுஞ் சோழனுமே பாரி யொடு பொருது தோற்றா ரென்று இச்சதகத்துட் கூறியது, இவர் பாண்டிமண்டல சதகம் என எடுத்துக் கொண்டு, அம்மண்டலத்து வேந்தனை இழித்தற்கு மன மில்லாமை பற்றி யென்று எளிதிற்றுணியலாம்.

பறம்பு நாடு என்பது பறம்பு மலையைத் தலைமையாகக் கொண்ட நாடு என்பதாம். பாண்டிநாட்டு, இப் பறம்பு மலை யாண்டையதென்று ஆராயப்புகின், இந்நாட்டுக் கொடுங் குன்ற மென்ற பிரான்மலையே இஃதென்று பல காரணங்களாற்றுணியப்படுவது. இம் மலைமங்கைநாதர் கோயி லில் அறுகான்மண்டபத்துக் * கல்வெட்டில் "இந்நாட்டு அறுநூற்றுவ னேரிப் பற்றிற் பாரீச்வரமும்" என்று பொறிக்கப் பட்டிருப்பது ஓர் முக்கிய காரணமாகும்.

" திணிநெடுங் குன்றந் தேன்சோரியும்மே" (புறம்-109.) என்ற கபிலர் பாட்டிற் கண்டவாறு இன்று மிம்மலை தேன் சொரிவது காணலாம். நக்கிரனார், "பாரி நீடுபெரும் பைஞ் சுனை" (அகம்-78.) என்று கூறியவாறு தேன்சுனையுடை மையுந் தெரியலாம். இம்மலையிற் றோன்றி போடும் நதி தேனாறு எனப் பெயர் சிறப்பதும் இதற்கேற்ப துணரலாம். இம்மலையில் "பாரி பலவுறு குன்றம்" (நற்றிணை, 253) என்றபடி பலாப்பழம் மிகவுண்டு. மூங்கில் இப்போது மிக இல்லையேனும் ஆளுடைய பிள்ளையார் இக்கொடுங் குன்றத் திருப்பதிகத்து இம்மலையை வேய்களுடையதாகப் பாடுதல் காணலாம். மற்றுக் கபிலர் கூறியவாறு வள்ளிக் கிழங்கும், தினையும், அவரையும், வரகும், எள்ளும், பிறவும் இம்மலையில் உண்டாவன வாதல் காண்க. சிறுபாணாற்றில்

* என் அருமை அம்மான் சேய் பண்டித மு. இராகவையங்கா ரவர்கள் எழுதிய வேளிர் வரலாறு பார்க்க.

" பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பு" (அடி-90-91.)

எனவும், புறப்பாட்டில்,

" கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பு" (புறம்-158.)

எனவுங் கூறியதற் கியைய ஆளுடைய பிள்ளையார் திருக்கொடுங் குன்றப் பதிகத்து,

" குளிரும்புனல் பாயுங்குளிர் சாரற்கொடுங் குன்றம்"

எனவும்,

" விரிசாரற், குருமாமணி பொன்னோடிழி யருவிக்
கொடுங் குன்றம்"

எனவும் பாடுதல் கண்டு கொள்க. அவர்,

" கரியின்னின முதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனை யவைமண்டிநின் றுடுங்கொடுங்
குன்றம்"

என்பதனால், சுனையும் மூங்கிலுங் கூறுதல் காணலாம்.

" அளிதோ தானே பேரிருங் குன்றே" (புறம்-114.)

என்றதற் கேற்பக் கொடுங்குன்றம் என்று பாடுதலும் நினைக. இக் கொடுங்குன்ற நாடு, கபிலர் பாரி மகளிரை மணப்பிக்கக் கருதிய எவ்வி மிழலை நாட்டுக்குத் தூரமாகாமையு முணர்க. " எவ்வி குடியிற் படீஇயர்" (புறம்-202.) என்றது காண்க.

இனிப் பாண்டிநாட்டுட்பட்ட புதுக்கோட்டை இராச்சியத்துக் குளத்தூர்ச் சேகரத்து, ஒளிப்பற்று என ஒர் நாடுண்மை அவ்விராச்சியச் சாசனத்தால் (No. 145) தெரிகிறது. செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரு

நிலத்தில் ஒளி நாடென ஒன்றுண்மை இளம்பூரணர் முத லான உரையாளர் பலரும் தொல்காப்பியச் சொல்லதிகார வுரைக்கண் (எச்சவியல், சூ-394.) கூறுதலானறிந்தது. அவ்வொளி நாட்டார் வேளாளர் என்றும், அவர் மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரியர் என்றும் பட்டினப்பாலை யுரையில் (அடி-274.) "பல்லொளியர் பணிபொடுங்க" என்புழி நச்சினார்க்கினியர் உரைகூறிச் செல்வதனுற் றெரியலாம். இவ்வொளிப்பற்றுள்ள, குளத்தூர்ச் சேக ரத்தைக் 'குன்று சூழ்நாடு' என்றும் (No. 121-125.), இதன்கட் பறம்பூரைக் 'குன்றுசூழ் நாட்டுப் பறம்பூர்' என்றும் (No. 151.), இந்நாட்டு மலையைக் 'குன்று சூழ் நாட்டுக் குடுமியான்மலை' என்றும் இச்சாசனங்கள் கூறு கிற்கும் இப்பறம்பூரில் வேளாளர் சிறந்து வளர்ந்தது,

"தேனூர் பொழில்சூழுந் தென்பறம்பை வேளாளர்
கோனூர் குறிச்சியைக் கொண்டளித்தார்—மானேய்
மழுவின் படையானு மாதுமையும் போதும்
விழவின் படியாக விட்டு" (ஷை 1115)

என்னுஞ் * சாசனப்பாடலான் அறியக் கிடப்பது. இவ் வொளி நாட்டுப் பகுதியிலுள்ள அழும்பிலே அழும்பில் வேளுக்குரியதாகும். இதனால், இப்பக்கத்து, முற்காலத்து, வேளிர் நலைசிறத்த லறியலாம். அழும்பில் பாண்டி நாட்டு ரென்பது,

"பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி
அழும்பி லன்ன வறுஅ யாணர்......
......தண்குடவாயில்" (அகம்-44.)

எனவரும் அகப்பாட்டுக் கெழுதிய பழைய உரையால் நன் கறியலாகும். உரைகாரர் 'சென்னி குடவாயில் என்க' எனவும், 'அழும்பிலன்ன என்றதே தொடங்கிக்

* இது பறம்பூர் ஈச்வரன் கோயிலிற் சுவாமிகோயிலின் தென் புறச் சுவரிலுள்ள சாசனம்.

குடவாயிற்கு அடை, அழும்பில் பாண்டி நாட்டூர்' எனவும் தெளியவுரைத்தலானறிக. இதனாற் சென்னி அழும்பில் என்றியைப்பது பொருந்தாமை தெளியலாம்.

இவற்றால் வேளிர் சிறந்திருந்த ஒளிப்பற்றுடைய குன்றுசூழ் நாட்டுப் பறம்பூரும், குடுமியான்மலைப் புறமும் வேள்பாரி யிருந்த நாடாகுமோ என்னும் ஐயம் உண்டாவது. இந்நாட்டைச் சாசனங்கள் செயசிங்ககுலகால வளநாடென (புதுக்கோட்டை யிராச்சிய சாசனம் No. 518)க் கூறுதலான் இது முதலிற் செயசிங்ககுல நாடாயிருந்தது, பின்னொருகாலத்து இக்குலத்தலைவரை வென்ற அரசன் செயசிங்க குலகாலனாகி அவன் பெயரான் வழங்கப்பட்டதோ என ஊகிக்கப் படுகின்றது. இந்தச் சிங்ககுல நாடென்னும் வழக்கே நாளடைவிற் சிங்கள நாடு எனப் பிழைபடச் சொல்லலாகி அப்பிழைத்த வழக்கையே கொண்டு அண்ணாமலைச்சதக முடையார் "சிங்கள மெனுந் தேய முழுதாளுமன்னன் சிறந்தபேர்ப் பாரி சாளன்" எனப் பாடின ரென்று துணிதல் பொருந்துவதாகும். இச் சிங்ககுல நாடு கொடுங்குன்றமலையுட்படத் தன் தென் எல்லையை யுடையதாய் அக்காலத்திருந்ததெனக் கொள்வது பொருந்தும். இப்போதும் புதுக்கோட்டை யிராச்சியம் பிரான்மலை வடபுற வெல்லையைத் தொட்டிருப்பதுங் காண்க. வேள் எவ்வி மிழலைநாடும், மான விறல் வேள் அழும்பில நாடும், "மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்" (பத்துப், பட்டினப்பாலை, அடி, 274. உரை.) வதிந்த ஒளிப்பற்றும், பாரீச்வரமும், வேளிர் முத்தூற்றுக் கூற்றமும், பாண்டி நாட்டகத் துள்ளனவாதல் அறியப் படுதலால் அவ்வேளிருட் சிறந்தவனாய், எவ்விகுடியிற் பெண் கொடுத்தற்குரியவனாகிய, பாரி வாழ்ந்த நாடும் அப்பாண்டியர் பெருநாட்டி னொருபுறமா யிருந்ததென்று தெளிவதே பல்லாற்றானும் ஏற்புடைத்தாவது. எவ்வி மிழலை நாட்டையும், வேளிர் முத்தூற்றுக் கூற்றத்தையும் பாண்டியன் தன்னாட்டொடு சேர்த்தது, 24-ஆம் புறப்

பாட்டில், "எவ்வி.........மிழலையொடு......வேளிர்......முத்தூறுதந்த......செழிய" என வருதலானறிந்தது. இந்நாட்டார் 'முடிகொண்ட வேளார்' எனத் தம்மைப் பெயரிட்டு வழங்குதலுங் கேட்கப்படும் (புதுக்கோட்டைச் சாசனம் No. 546.)

இராசத்தானத்து இவ்வாறே வேள்வியிலுண்டாகியவரென்று தம்வழி கூறும் அக்கினி குலத்தவர், தம்பெயரையடுத்துச் சிங்கம் என்ற பெயரை வைத்து வழங்குதலால் இச்சிங்க குல வழக்கு வேளிர் குலத்தும் உண்டாதலை வலியுறுத்தும். "வேள் புலவரசர் சளுக்கு வேந்தர்" (திவா, மக்கட் பெயர்.), (பிங்கலம், 752.) எனத் திவாகரத்திலும், பிங்கலத்திலும், வருதலாற் றெரிந்த வேள்புலவரசராகிய சளுக்கியர் செயசிங்க குலத்தவராதல் சாசனங்களிற் கண்டது. சளுக்கியர் ஜெயஸிம்மன் முதலாகத் தம் வழிமுறை கூறுதல் * சரித்திரகாரர் நன்கறிந்தது. சளுக்கரைப் பல்லவன் வென்றுளுதலாற் செயசிங்க குலகாலன் என்பது பல்லவன் பட்டப் பெயராகு மென்க. திருநெல்வேலிப் புறத்துச் சிங்கிகுளம் என்பது சிங்ககுல சதுர்வேதி மங்கலமெனச் சாசனத்தா லறியப்படுதலுங் காண்க. இவற்றாற் சிங்ககுலம் என்பது வேளிர் குலமாத லுணரலாம். இதற்கேற்பவே 'சிங்க வேள்குன்றம்' என ஓர் திருமால் திருப்பதியைத் தெய்வத்தமிழ்ப் பெரியார் பாடுதலுங் காண்க.

இனித் திருச்சிராப்பள்ளிச் சில்லாவில் இப்போது சேர்ந்துள்ள பச்சைமலைப் புறத்துத் தென்பறநாடு, கீழ்பறநாடு எனச் சில பாகுபாடுபட்ட நிலப்பகுதிகள் உண்மையறியப்படுவது. இவை பச்சை மலையை நடுவண் வைத்து, அதன் பல திசைகளையுங் கருதிப், பச்சைமலைத் தென்புறநாடு, பச்சைமலைக் கீழ்புற நாடு என வழங்கப்பட்டுப், பின்னர்ச் சிதைந்து, தென்பற நாடு, கீழ்பற நாடு எனச் சொல்லப் பட்டனவோ வென்று உய்த்துணரலாவது. இவ்வாறே

* Mysore Gazetteer Vol. II. பக்கம் 706.

பறம்லை நாடு என்பதும் திரிந்து பிரான்மலைப்பக்கத்துப் புறமலை நாடெனப் பட்டதோ என்று ஊகித்தலுமாம்.

## 3. தேர் முல்லைக்கு ஈத்ததிறம்.

பாரி முல்லைக்குத் தேரீத்தன னென்று முதன் முதல் வெளியிட்டவர் கபிலரேயாவர். அவர் இவ்வரலாற்றை விச்சிக்கோ முன்னரும் (புறம்-200.), இருங்கோ வேள் முன்னரும் (புறம்-201.), புகழ்ந்து கூறினர். இவர் கூறியது போற்றி இவ்வரலாறெடுத்தாண்டவர் சிறுபாணாறு பாடிய இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரும், புறப்பொருள் வெண்பாமாலை பாடிய ஐயனாரிதனாரும், பழமொழி பாடிய முன்றுறை யரையனாரும் ஆவர். கபிலர்,

> " பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி " (புறம்-200.)

எனப் பாடியதன்கட் 'கொடிமுல்லை' என்றதனால் இது செடிமுல்லையின் வேறெனத் தெரியலாயிற்று. இங்குப் 'பாடாதாயினுங் கொடுத்த' என்றதனால் அதன் வருத்தம் பொறாது உடனே அது படர்தற்குக் கொடுத்தான் எனப் பட்டது. 'கறங்குமணி நெடுந்தேர் கொடுத்த' என்றதனால் அத்தேரினுள்ள விலையுயர்ந்த உறுப்புக்கள் எவையுங் கொள்ளாமற் கொடுத்தது கூறப்பட்டது. குதிரையுடன் ஈத்தானென யாண்டுங் கூறாமையானும் அங்ஙனங் குதிரையுடன் ஈத்தால் அது முல்லைக்கு உதவியதாகாமையானும் " பண்பரிமாப் பூட்டுப் பறித்து " ஈத்தான் எனப் பட்டது. ஓரறிவுயிர்மாட்டும் அருளாற் செய்த கொடையாதலின் முந்துறவைக்கப்பட்டது. " தேர் கொள்கெனக் கொடுத்த பரந்தோங்கு சிறப்பிற் பாரி " என்றதனால் இக்கொடையே இவன் புகழ் படர்தற்குக் காரணமாதலுணர்க. இது நிகழ்ந்தது மலைவழியிலென்பது " நறுவீயுறைக்கு நாகநெடு

வழி" (சிறுபாண், அடி-88) எனச் சிறுபாணாற்றிற் கூறிய தனாற் கொள்ளப்பட்டது. 'நாக நெடுவழி-சுரபுன்னை மரங்களையுடைய நெடிய வழி என்றவாறு. சுரபுன்னை மலைமரமாதல் "வழைவளர் சாரல்" (கலித்-50) எனக் கலித்தொகையில் வருதலானுணர்க. 'பூத்தலையறா முல்லை' என்றது பற்றிக் காருமாலையுங் கூறலாயிற்று. அரசர் காடு பார்த்து மகிழ்வதுண்டென்பதுகொண்டு பாரி தனி நிலையில் வைத்து இது கூறப்பட்டது. காடுபார்த்து மகிழ்தல் "புறவே நின்னைக் காணியவருதும்" (ஐங்குறு 420) என்னும் ஐங்குறுநூற்றானுணர்க.

தனிநிலை வேண்டியது இவ்வருட் கொடை தடைப்படாமைப் பொருட்டென வுணர்க. காட்டிற் றனிநிலையில் நிகழ்த்திய இவ்வரிய தேர்க்கொடைச் செய்தி ஊர்க்குத் தெரிதற்குக் குதிரை தேரின்றிப் பந்தி புகுவதே வாயிலாதல் உய்த்துணர்ந்து கொள்க. வள்ளல் தன்வாயினாலிது கொடை செய்தேனென்று சொல்லிலனாதலின் இங்ஙனம் கருதப்பட்டது. பரணர் பயிலுக்குப் போர்வை யீந்த பேகன்பாற் கொடைமடமுண்மை கூறியதுபோலப் பாரி பாற்கூறாமை நோக்கிக் கொள்க.

## 4. கபிலர் நட்புக்கோட்டிறம்.

கபிலர் வேள்பாரியோடு நட்புற்றுச் சிறந்தது 236-ஆம் புறப்பாட்டில்,

"மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கோவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பி னட்பிற் கோல்லா
தோருங்குவரல் விடாஅ தோழிகெனக் கூறி
யினையை யாதலி னினக்கு மற்றியான்
மேயினே னன்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி யும்மை

யிடையில் காட்சி நின்றே
டேனுறை வாக்குக வுயர்ந்த பாலே''

என வருதலால் நன்கறியலாம். பண்டைக்காலத்து அரசரும் புலவரும் எங்ஙனம் நட்டிருந்தன ரென்றறிய வேண்டின் அதற்கு இதுவே பெரியதோர் சான்றாகத் திகழுமென்றுணர்க.

இத்திறத்திற் பாரி கபிலர்க்குத் தன் அரசும் ஈந்தனன் என்று கூறியது, இப்புறப்பாட்டில் (236) "பெருந்தகு சிறப்பினட்பு" என்றதனானும், "பாடினிர் செலினே, நாடுங் குன்று மொருங்கீயும்மே" (புறம்-109) எனத்தம் முன்னை அநுபவமே கூறுதலானும், பண்டைக் காலத்துப் பெருவள்ளியோர் கொடை இற்றெனத் தெரிதலானுமென்று கொள்க. "புகழுநர்க், கரசுமுழுது கொடுப்பினு மமரா நோக்கமொடு" என மலைபடுகடாத்து (அடி-73-74.) வருதலையும், அரிசில் கிழார்க்குப் பெருஞ் சேரலிரும்பொறை யீந்த பெருங் கொடையையும் (பதிற்று. 8. பதிகம்) ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. கபிலர் அரசேலாமை அவர் பெருந்தகைமைக் கேற்பக் கூறப்பட்டது. பாரிக்குங் கபிலர்க்கும் வேற்றுமையே யில்லாமை பாரிமகளிரை "இவரென் மகளிர்" (புறம்-201.) எனக் கூறுதலானறியலாம். இந்நட்பின் அருமை பெருமைகளை அங்ஙனங் கலந்த அவ்விருவருமே காண்டலல்லது எம்மனோர் நினைதற்கு நெஞ்சிடம் போதாதென்க.

## 5. பாண்டியற்கு மணமறுத்த திறம்.

பெருமுடியரசன் மகட்பேசியவிடத்து, அதற்குடன்பட்டால் தன்மகளிர்க்கு அரசச் செல்வ இன்பந் துய்த்தலும் 'உலக முழுதுடையாள்' என்னும் பெரும் பெயரும், உலகாளும் மகப்பேறும் கிடைத்தற்கு அஃது ஏதுவாகவும், அப்பெருமை யனைத்தும் வேண்டாமைக்கு ஒரு தருமவிரோதமே உள்ளதென்று கருதிப் பல்பெண்டிரராற்கு மகட்கொடை நேர்ந்திலன் என்று கூறப்பட்டது.

" நிரப்பிடும்பை பல்பெண்டி ராள னழியும் "
(நான்மணி-95.)

எனச் செந்தமிழ்ச் சான்றோர் பழித்துரைத்தது கொண்டு, வதுவை முறையில் ஒருவற் கொருத்தியாய் வாழும் இல்லற வியல்பே வற்புறுத்துக் கூறப்பட்டது. இதுவே கபிலர் திருவுள்ள மென்பது அவர் காரியை நோக்கிக் கூறிய புறப் பாட்டில்,

" வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென விலை நீ " (புறம்-122.)

என ஏகபத்தினி விரதத்தைப் புகழ்தலானறியலாம். பாரி யை நல்லோள் கணவன் என்று இவர் பாடுதலல்லது பல் பெண்டிராளன் எனக் கூறாமையும் நினைக்கலாம். பாரி மாய்ந்த பின்னர் இடர்ப்பட்டுப் பறம்பு விடுத்துச் செல்லும் போது, இவ்விருமகளிர்க்கும் இருமண மக்களைத் தேடுங் கருத்தினராய், " மகளிர் நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே " (புறம்-113.) என இவர் கூறுதலுங் கண்டு கொள்க. துன்ப நிலையிலும், மகளிரும் தக்க பருவமுற்று மணத்திற்குக் காலந் தாழ்க்கும் சமயத்தும் யாரேனும் இவர்குலத் தொருவன்பாற்புகச் செய்தல் கருதாமல் 'கிழ வரைப் படர்ந்தே செல்லுதும்' என்று தெளியக் கூறுதல் காண்க. இனித் தொல்காப்பியப் புறத்திணையியலுள் (சூ-24.)

" நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானும் "

என்புழிப், " பெண்கோ ளொழுக்கத்தினொத்து மறுத்தல் பற்றிப் பகைவனாய் வலிந்து கோடற்கு எடுத்து வந்த அரச னொடு முதுகுடித்தலைவராகிய வாணிகரும் வேளாளரும் தந்தம் மகளிரைப் படுத்தற் கஞ்சிய மகட்பாற்காஞ்சியா னும் " என்று நச்சினார்க்கினியர் உரை கூறி " வேந்திய

லாவது உயிர்போற்றுது வாழ்தலின் அவாது நிலையின்மை நோக்கி அவரோடொத்து மகளிரைப் படுத்தற் கஞ்சி மறுப்பார்" என்று விளக்கினர். படைமடம் படாத இம் முதுகுடி, சாவிற் கஞ்சி மணமறுத்ததெனறலினும், தொன்று தொட்டு வந்ததம் வீரக்குடியோர் பிறர் குடிக் கலப்பால் தம் தொன்மை மரபு கேடுபடாமை கருதியும், தம்மகளிர்க்கு ஒத்த இல்லறத்து நல்லின்பங்கருதியும் மறுத்தாரென்றல் சாலப் பொருந்துவதாகும். தொல் காப்பியனார் "ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப" - (தொல், கள, 2.) என்று கூறி அவ்வொப்புமை வகையுள் "பிறப்பே குடிமை" (தொல், மெய்ப், 25.) எனக் குலப் பிறப்பை முற்படவைத்திருத்தல் ஈண்டைக்கு நினைக்க.

இனிப் புறப்பொருள் வெண்பாமாலையுடைய ஐயனாரிதனார் மகட்பாற் காஞ்சியையும், மகண்மறுத்து மொழிதலையும் முறையே அரசர்க் குரித்தென்றும் மறவர்க் குரித்தென்றுங் கருதிக் கூறினாற் போலத் தொல்காப்பியனார் கூறாமை காண்க. தொல்காப்பியனார் நொச்சித்திணையென ஒன்றுடன் படாமையால் அதனுட்டுறையாக ஐயனாரிதனார் கூறிய மகண் மறுத்து மொழிதற்கு அந்நூலுள் இடனே இல்லாமை துணியலாம். மற்றுப் புறப்பாட்டுரை யாசிரியர் ஐய்னாரிதனார் மதம் பற்றியவரென்பது 109, 110, 111-ம் பாடல்களை நொச்சித்திணையுள் மகண் மறுத்தற்றுன்றப் பாடல்களாகக் கூறுதலான் அறியலாம். நொச்சித்திணையுள் வைத்து மகண் மறுத்தலாக இவர் கூறியது மகண் மறுத்தலே காரணமாகப் போர் நிகழ்கின்ற நிலையில் எயில்காத்தல் பற்றி என்று கொள்ளத்தகும். இவர் மகட்பாற்காஞ்சி எனவும் மகண் மறுத்தலெனவுந் துறை கூறிய பாடல்கள் பெரும்பாலும் வேந்தர்க்கு மகண் மறுத்தலாகவே இருத்தல் கண்டு கொள்க. பாரியைப் பற்றிய பாடல்களில் "மூவிருமுற்றினும்" (புறம்-109.) எனவும், "மூவிருங்கூடியுடன்றனிராயினும்" (புறம்-110.) என்வும், "வேலின் வேறல் வேந்தர்க்கோவரிதே" (புறம்-111.) எனவும் வரு

வன வற்றால் இவை மறவர்க்கு யுணபமறுத்தலாகாமை நோக்கிக் கொள்க. போர் நிகழும் போது அரசரை நோக்கிக் கூறியன மகண் மறுத்தலெனவும், படையெடுத்துவந்த நிலையிலோ வருநிலையிலோ பொருவதோ அல்லது மகட்டருவதோ என்ற அளவில் தம்முட் கூறுவன மகட்பாற்காஞ்சியெனவும், இரண்டாகப் பகுத்தற்கே புறப்பாட்டில் மகண் மறுத்தற்றலைப்பிலும் மகட்பாற் காஞ்சித் தலைப்பிலு முள்ள பாடல்கள் இடந்தந்து நிற்றல் நோக்கிக் கொள்க. ஈண்டுக் கூறப்பட்டுள்ள மகண் மறுத்தற்றுறைப் பாடல்கள் மூன்றும் (109, 110, 111,) மூவேந்தரையும் நோக்கியனவாக இருத்தலாற் புறப்பொருள் வெண்பாமாலை யுரைகாரர் மகண் மறுத்தல் மறவர்க் குரியது என்று கூறியது இயையாமை காண்க. இம்மகண்மறுத்தல் மறுத்தானைப் பற்றியும் மறுக்கப்பட்டானைப் பற்றியும் இருபிரிவாகக் கருதப்படும். நொச்சியான் மகண் மறுத்தலாகக் கருதும்போது நொச்சித்திணையுள் மகண் மறுத்தலாகவும் உழிஞையானுக்கு மகண் மறுத்தலாகக் கருதும் போது உழிஞைத் திணையுள் மகட்பாலிகலாகவுங் கொள்ளுதல் பொருந்தும். நச்சினார்க்கினியர் (தொல். பொ, 68) "இனிமகண் மறுத்தோன் மதிலைமுற்றுதல் மகட்பாற் காஞ்சிக் கணடங்கும்" என உரைத்ததுங் காண்க.

## 6. ஔவை பறியுண்ட திறம்.

இது "பாரி பறித்த பறியும்" என்ற ஔவை பாடற் பகுதியைக் கொண்டு கூறியதாகும். 'பறித்தபறி' என்றதனால் வழிபறித்த பறி என்று துணியப்பட்டது. "வழி பறித்த குற்றமற்ற செங்கையான்" எனவும், "திருமாலெழுத் தெட்டும் பறித்த விடம்" எனவும் மணவாளமா முனிவர் பாடுதலா லுண்மையுணர்க. பாரி வழிபறித்தான் என்றால் அவ்வள்ளற்குப் பொருள் பறிப்பது கருத்தாகாதென்றும், ஔவையைப் பிரிதற்கு உளமில்லாமையால் அவளைத் தன்னகத்திற்கு மீட்டுக்கொள்ளலே விருப்பமென்றும் துணிந்து கூறலாயிற்று. பறித்தபொரு

ளால் ஔவை மீளவேண்டிய தின்றியமையாமைப் பொருட்டு ஔவையால் பாரி பறித்த பொருள் தெய்வப்படிமை யென்று அமைக்கப்பட்டது ; ஔவை மூத்த பிள்ளையாரை நாளும் விடா தருச்சிப்பவளென்பது வழிவழியாகக் கேட்கப் படுதலுண்மையான் இஃதே ஏற்பதாதல் உணர்க. இருவரையும் இயைக்கத் தெய்வமே இடை நின்றதென்று கொள்ளுதல் பொருத்த மென்க.

இத்திறத்தில், ஔவை, பாரியை மிகுத்துக் கூறல் கேட்டுப் பாண்டியற்கு அழுக்காறு விளைதலும் உடன் கூறப்பட்டது. "அண்ணல்யானை வேந்தர்க் கின்னான்" (புறம்-115.) என்று பாரியைக் கபிலர் பாடுதலாற் புலவர்க்கு வழங்கி வீறிய புகழால், வேந்தர்க்குப் பாரி இன்னாதலன்றி வேறு வகையால் அவன் இன்னாமை யுடையவனாகாமை யுணர்க.

## 7. பொன்றுறந்து புகா நல்கு திறம்.

"மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுட்
பொன்றுறந்து கொண்டு புகாவாக நல்கினா
ளொன்றுறா முன்றிலோ வில்" (பழமொழி. செ, 381.)

என்னும் வரலாறு பழமொழி நூலுட்கண்டது ; இப் பாடற்பொருள் கொண்டு இத்திறம் விளக்கப்பட்டது. இதற்குரை யிட்டபழையோர் "ஒன்றுறா முன்றிலோவில்" என்பதற்கு ஒரு துன்ப முறாத மனையில்லை என்று பொருள் கூறிக் கொண்டே உண்மை தெளிய இயலாமையால் "உலையுட் பொன்னைப் பெய்து கொண்டு திறந்து சோறாகவே நல்கினாள்" எனவும், "சோறும் அரிதாகிய காலத்துப் பொன்னை சோறாக உதவினாளாதலாற் சென்றிரந்தால் ஒரு பயன்படாத மனையில்லை என்றுமாம்"

எனவும் உரைத்தார். இவர் உரையால், இப் பாரி மடமகளென்பவள் பாரியின் மனைவியோ பயந்தமகளோ என

நன்கு விளங்கவில்லை. இப்பாட்டிட் புகாவாக என்பது தான் பாடமெனவும், புகர்வாக வென்பது பாடமன் றென வும் காண்டற்கு நெடுங்காலஞ் சென்றது அறிஞர் தெரிவர். நீருலையுட் புகாவாக நல்கினுள்=வெந்நீர் அடுப்பில்வைத்த உலைநீருட் சோறு ஆயின அளவிற் பாண்மகற்கு நல்கினுள் எ-று. வெறு நீரிற் சோறு எங்ஙனமாகுமென்னும் ஐயந் தீரப் பொன்தந்து கொண்டு அல்லது பொன்றுறந்து கொண்டு என்றுரென்க. தரத்தகாத மாங்கலியப் பொன் னையுந் தந்து அரி கொண்டு என்றுர் என்க. இதனுற் பாரி மடமகள் - பாரி மனைவியாதலுங் கருதினராவர். தரத் தகாத பொன் தாலிப்பொ னென்பது "ஈகையரிய விழை யணி மகளிரொடு, சாஅயின் றென்ப வாஅய் கோயில்" எனச் சான்றோர் கூறுதலான் அறியலாம். இப்பாட்டிற் பொன்றிறந்து கொண்டென்பதும் பொன்றந்து கொண் டென்பதும் பொன்றுறந்து கொண்டென்பதும் பாடமாக ஏடுகளிற் காணலாம். ஒருபடியாக உரை தெளியாமைக் கும் பாடம் பலவாதற்கும் காரணம் உண்மை புலப்படாமல் மறைந்ததே என்று நினையலாம். இந்நிலையில் உண்மை யுணர்தற்குப் புறநானூற்றிற் கண்ட "ஈகையரிய விழை யணி மகளிரொடு" என்ற அடியும், அதன் "கொடுத்தற் கரிய மாங்கலிய சூத்திரத்தை யணிந்த மகளிர்" என்ற பழைய வுரையுமே துணையாதல் உய்த்துணர்ந்து கொள்க. தரற்கரிய பொன்றந்து கொண்டு நீருலையுட் புகாவாக நல்கி னுள் என்று கொடையின் சிறப்பினைக் கூறுமுகத்து மாரி யொன்றின்றி வறந்திருந்த காலத்துப் பெருவேள் கோயி லும் துன்புற்றவாறு காட்டியதாகக் கொள்வதே பொருந் திற்றுதல் காண்க. வறந்திருந்தகாலம் உணவுப் பொரு ளோடு அது கொள்ளும் பொன்னும் வறந்திருந்த காலத் தையே குறிக்கு மென்க. மாரி யொன்றின்றி என்பத னல் உணவில்லாமையும் வறந்திருந்த என்றதனுற் பொன் னில்லாமையுங் கருதினராதல் பொருந்தும். மாரி பொன்றில் லாமைக்கு இவையே பயனுதல் காண்க. இங்ஙனங் கொள் ளாது பொன்னே சோருக உதவினுள் என்னின் "நீருலை

யுள்" என்ற தொடர் ஈண்டு வேண்டாதாம். பொன்னையே பெய்து அதனையே சோருக (தனது தெய்வக்கற்பினுல் மாற்றி) நல்கினுள் எனின், முன் 'கொண்டு' என்பது சேர்வ தன்று. பழமொழி யுரைகாரர் இவ்விடர்ப்பாடு தெரிந்தே பொன்கொண்டு எனவியைத்துப் பொன்னைப் பெய்து கொண்டு என இல்லாத சொற்பெய்து கூறுதல் நோக்குக. ஈகை யரிய இழை—பொன்னில்லாத நூலெனினும் இங்குப் பொருந்தும். ஈகை—பொன். "ஈகைக் கண்ணி யிலங்கத் தைஇ" என்பது காண்க. (புறம். 353)

## 8. மூவேந்தர் தளர்ந்த திறம்.

மூவேந்தரும் பகைத்துப் பறம்பு முற்றிய செய்தி "மூவிருங்கூடி யுடன்றனிராயினும்" (புறம்-110) எனவும், "நளிகொண்முரசின் மூவிருமுற்றினும்" (புறம்-109) எனவும் வருவனவற்ருனறிந்தது. இவர் பறம்பை வளைத்த காலம் பலயாண் டென்பதும், முடிவில் மூவரே தளர்ந்தன ரென்பதும் அகப்பாட்டில் நக்கீரனுர்,

"யாண்டுபல கழிய வேண்டுவேயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளமருழக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" (அகம்-78.)

எனக் கூறுதலானறியலாம். இதற்கேற்பவே பாரிக் குயிர்த் துணையாகிய கபிலர், "பகைவர், ஓடுகழற் கம்பலை கண்ட செருவெஞ் சேஎய்" (புறம்-120) எனக் கூறுதல் காண்க. மூவேந்தருங் கூடிப் பொருதற்கு ஒரு பொதுவாகிய பகை வேண்டுதலின் மகண் மறுத்தலாகிய சினத்துடன் நாட்டுக் கிறைவணுகிய பாண்டியற்குப் பாரிபால் அழுக்காறு முண்டாதற்குக் காரணங் கூறி அவ்வழுக்காறே சேர சோழர்க்கும் ஏதுவாக இத்திறத்தமைத்துக் கூறப்பட்டது. மூவர்க்கும் மகண் மறுத்தல் கூறின் அம்மூவர்க்குட் கலகமே விளையும் என்றும், அது ஒருங்கு கூடுதற்குக் காரணமாகாதென்றும் நினையலாம். இப்போர்க்குக் காரணம்

மகண் மறுத்தல் என்பது 109, 110, 111 ஆகிய, மூன்று புறப்பாட்டானும் அறியலாம். நூல் தொகுத்தோர் துறை விளக்கிவைத்த வாற்றானும் நன்கு தெளியலாம். பழைய வுரைகாரர் இத்துறை விளக்கமே துணையாகக் கொண்டு, "பாடினிர் செலினே, நாடுங் குன்று மொருங்கீயும்மே" (புறம்-109.) என்புழிப் "பாடினிராய்ச் செல்லின் அவன் நுமக்கு நாட்டையும் மலையையுங் கூடத்தருவன்" என்று விளங்க வுரைத்தார். இதனாற் பாடிச் சென்றால் நீவிர் வேண்டிய மகளிரையன்றி, நீவிர் மூவிருங் கூடியுடன்றும் வெல்லற் கரிய நாடுங் குன்றுங் கூட ஸ்திரீதனமாகக் கொடுத்து விடுவன் என்று கருதிக் கூறுதல் கண்டு உண்மை யுணரலாம். மூவரும் பறம்பு மலையையும் அஃதுடைய பாரி நாட்டையுங் கொள்ளப் பொருதவரல்ல ரென்பது இதனால் உணர்ந்து கொள்ளலாம். இதுவே புலவர் பெருமான் கபிலர் திருவுள்ள மென்பது,

"யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் சேலினே" (புறம்-110.)

என விளக்கிக் கூறுதலாற் றுணியலாம். இதன்கட்பாடினிர் செலின் நுமக்குப் பரிசிலாக உதவ யாமுளேோம். பாரி தானுமுளான், குன்றுமுண்டு, என்பதனாற் பாரி எம்மையும், தன்னையும், குன்றையும் வழங்குவன் என்று தெளிய வைத்தல் கண்டுகொள்க. கபிலர், யாம் என்றது தம்மொடு மகளிரையும் உளப்படவைத்தென வுணர்க. முதற்கண்ணே யாமும் உளம் என்றார், அரசர் கருத்து, மகளிரொடு கபிலரையுங் கொள்ளும் விருப்பாதல் கருதியதனாலென்று கொள்க. இனிப் பறம்பென்னும் பெரிய குன்றைக் கொண்டால் அதன்கணுள்ள மகளிரையுங் கொள்ளலாம் என்பது அரசர் கருத்தாமெனின் அதுபற்றியே, "பேரிருங் குன்றே, வேலின் வேறல் வேந்தர்க்கோவரிதே" என்று கூறித் தெளியப் (புறம்-111) * . பாடின

* குன்றுமுண்டு பாடினிர் செலினே என்றது பாடிக்கொள்ளலாவதன்றிப் பொருதுகொள்ள லாவதில்லை. என்றவாறு.

ரென்றுகொள்க. இவற்றிற்கெல்லாம் இயையவே இரு மகளிர்க்கும் ஒத்த தலைவரைத் தேடிப் பறம்புவிடுத் துச் செல்லுங் கபிலர் "இரும்பல் கூந்தல் மடந்தையர் தந்தை.........பகைவ ரோடுகழற் கம்பலை கண்ட............ பெருவிறனடே" (புறம்-120) எனவும் "ஆய்தொடியரிவை யர் . தந்தைநாடே புன்புலத்ததுவே" (புறம், 117) என வும் வருமிடங்களில், இம்மகளிர் தந்தை நாடு இனிக் கெடுமோ என்று மகளிர் காரணமாக நிகழ்ந்தது தெளிய வைத்து இரங்குதல் காண்க. "வேந்துகுறையுறவுங் கொடா அன்" (புறம்-341) என்னும் புறப்பாட்டிற் பரணர், "இக் காரிகையோள் தந்தை.......தண்பணை யூரே......பெருங்கவி னிழப்பதுகொல்லோ" என இப்பாரியைப்பற்றிய பாடல் களைப்போலவே பாடுதலானும் மகண் மறுத்தலே உண்மை யாதலுணர்க. 337-ஆம் புறப்பாட்டிற் கபிலர், "கவிகை மண்ணாள் செல்வராயினும், வாள்வலத் தொழியப் பாடிச் சென்றோர், வரைமுறக மலர......ஈதலானா விலங்கு தொடித் தடக்கைப் பாரி" எனப்பாடியுள்ளனர். இதன் கண், தங்கவிகைபால் மண் முழுதும் ஆள்கின்ற செல்வ வேந்தராயினும், வாள்வலி யொழியப், பாடிச் சென்றன ராயின் அவர் வருதலைச் செய்யுந்தோறும் அகமலரக் கொடுத்தல் தவிராத பாரி என்று கூறினர். இதனால் முடி வேந்தரும் தம் வாள் வலியால் ஒன்று கொள்ளலாகாதவன் என்றும், பாடிச் சென்றோர் தம் பாடலால் எதுவுங் கொள்ள எளியனவன் என்றும் கருதியதல்லது வேறாகாது. இது பாரிபால் முன்னிகழ்ந்த செய்தியையே குறித்துக் கூறிய தாகும். பெருவேந்தர் இப்பாரிபாற்கொள்ள வெண்ணு வது, பொன்னும், புவியும் என்று கூறுதல் பொருந்தாது; அவற்றால் அவர் குறையிலராவர். அவர்கட்கு அருமையாய் அவர் வேட்கும் வண்ணம் இவன்கணுள்ளார் இவன் செல் வக் கல்வித் திருமகளிரேயாதலுணர்க. பேரரசர் ஓர் சிற் றரசன்பாற் பெண்ணையிரந்துகொள்ளுதல் இழிவென்று வலியாற் கொள்ளப் படையெடுப்பதே பண்டைவழக் கென்க. அம்முடிவேந்தரிரந்துகொள்ளாது படை யெடுத்த

தற்குச் சினந்து எதிர்த்துத் தம்வீரந் தோன்றப் பொரு தலே சிற்றரசர்க்குப் புகழெனக். மகண் மறுத்த துறையில் வரும் பலபாடல்களை உற்று நோக்கின் இக்கருத்தே தெளிய லாகும். 338-ம் புறப்பாட்டில்,

"வேம்பு மாரும் போந்தையு மூன்றும்
மலைந்த சென்னிய ரணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினுந் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்.........
ஓரேயின் மன்ன னொருமட மகளே"

எனவருதலான் இதனுண்மை நன்கு துணியலாம். இதன் கண் ஓரெயின் மன்னனாகிய சிற்றரசன் ஒரு மடமகளை வேட்டு மூவேந்தர்தம் வில்லெடுத்து வருதலுண்டென்றும், அத்தகையாராயினும் வணங்கி வந்திலார்க்கு மகளீதல் செய்யானென்றும் கூறுதலான் இவ்வரலாறு தெளிந் துணர்க. ஔவையார் மூவேந்தர்க்கெழுதுவித்த ஓலைப் பாடல்களும் இக் கருத்தையே வலியுறுத்தல் உய்த்துணர லாம். மூவரையும் நோக்கி முறையே 'உட்காதே' 'நகாதே' 'செய்யத்தகாதென்று தேம்பாதே' வருக என்று விடுத்தல் காண்க. இவையெல்லாந் தெளிந்துணர்ந்த நல்லுரையாளர் உண்மை வரலாறு இஃதெனப் புலப்படுத்த வேண்டியே "நாடுங் குன்று மொருங்கியும்மே' (புறம்-109) என்புழி, "நாட்டையுங் குன்றையுங்கூடக் (மகளிரோடே) கொடுப்பன்" என்று பொருள்விளங்க வுரைத்தாரென வுணர்க. திருக்கோவலூர் வீரட்டேச்வரர் கோவிற் கல் வெட்டிற் "பாரி தன் அடைக்கலப் பெண்ணை மலையற் குதவி" என்புழிப் பாரி தன் பெண் எனவும், அடைக்கலப்பெண் எனவுங் கொள்க. அடைக்கலப் பெண் ணென்றது, பார்ப்பாரிடை இப் பெண்டிரடைக்கலம் வைக் கப்பட்டது குறித்ததாம். மலையன் வயதில் மிக முதிர்ந்தவ னாதல் அவனைப்பற்றிய பாடல்களாற் றெரிதலால் அவன் குடியினுத்கியதாகக் கொள்ளப்பட்டது. 46-ஆம் புறப் பாட்டுக்கொளுவில் "மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக்

கோவூர் கிழார் பாடி உய்யக்கொண்டது'' என வருதலான் இவன் மகப்பெற்று முதிர்தல் உணர்க. இக் கல்வெட்டில் "மலையற்குதவி" என்றதனால் இம்மகளிர் பார்ப்பார்க்கு மணஞ்செய்யப்படாமை யுணரலாம். மற்று அவன் மகளிரைப் பார்ப்பார்ப்படுக்கக் கொண்டுபோவான் பறம்புவிடுத்த கபிலர் பாடியது (புறம்-113.) எனக் கொளுவிற் கூறியது, முடிந்த செய்தியை முன்வைத்துக் காட்டிச் சொற்றதென்று கொள்க. இப்பாட்டிலே, "மகளிர் நாறிருங்கூந்தற் கிழவரைப் படர்ந்தே-சேறும் வாழியோ பெரும்பெயர்ப்பறம்பே'' எனக் கூறுதலானும், விச்சிக்கோ, இருங்கோவேளென்பாரிடம் மகளிரைக்கொள்ள வேண்டுதலானும், "எவ்வி தொல்குடிப்படீஇயர்'' (புறம்-202) என்று கபிலரே கூறுதலானும் உண்மையுணர்க. 'கோவலன் புகாரினின்று மதுரைக்குச் சாதற்குப் புறப்பட்டவன்' என்றால் அவன் சாதல் கருதினனென்பதாகாது, முடிந்த செய்தியாலொருவன் கூறியதாகக் கொள்ளுதல்போல ஈண்டுங் கொள்க. இவ்வாறு இக்காலத்தும் வழங்குதல் உலகியலாகும். இவற்றால் மகண்மறுத்தல் என்று புறப்பாட்டுத் தொகுத்த பெரியோர் காட்டியதையே போற்றி மணமறுத்த திறம் இந்நூலுட்கூறலாயிற்று. இனிப் பாண்டியற்கு மணமறுத்ததாகக் கூறியது, பறம்புநாடு பாண்டிநாட்டதென்று தெரிதலானும், பறம்பிற், போரில் முனைந்து நின்றவன் அவனே என்பது ஔவையார் ஓலைப்பாட்டில்,

..........................."மதுரா புரிநாடன்
சேய்யத் தகாதேன்று தேம்பாதே—தையற்கு
வேண்டுவேன கோண்டு விடியல்பதி னேட்டாநா
ளீண்டு வருக வியைந்து''

எனக் கூறிய குறிப்பானும் எனக்கொள்க.

## 9. வஞ்சித்துக் கொன்ற திறம்.

தளர்ந்த மூவேந்தர் பின்னருங்கூடிப் பொருதனர் என்பது "அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்" என்னும் புறப்பாட்டில் (112) "வென்றெறி முரசின் வேந்தரெங் குன்றுங் கொண்டார்" எனப்பாரி மகளிர் பாடுதலானறிந் தது. இதனுரைக்கட் பழநல்லுரையாளர் "ஒருவனை மூவேந்தரு முற்றியிருந்தும் வஞ்சித்துக்கொன்றமையின், வென்றெறி முரசின் வேந்தர் என்றது, ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது" எனக் கூறுதலாற் பாரியை மூவேந்த ரும் வஞ்சித்துக்கொன்றது புலப்படும். கபிலர் "பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்றுச் சேறும்" (புறம்-113) எனவும் "ஒருங்கு வரல்விடாஅ தொழிகெனக் கூறி; யினையையாதலின்" எனவும் (புறம்-236) கூறுதற்கண் இவ் வஞ்சித்துக் கொன்ற வுண்மை பொதிந்திருப்பதை யுய்த்துணரலாம். வஞ்சித்துக்கொன்ற வகை "அறமே பூண்டு பாரியும் பரிசில ரிரப்பின், வாரேனென்னனவர் வரையன்னே" (புறம்-108.) (தன்மத்தைப்பரித்துப் பாரி யும் பரிசிலர் வேண்டுவராயின் அவ்வழிவாரேனென்னுனய் அவரெல்லையின்கண்ணே நிற்பன்) எனக்கபிலர், பாரி புக ழைப் புலப்படுத்துக் கூறிய சொல்லையே மூவேந்தர் கேட்டு அதனையே செய்யத் துணிந்தனரென்று வற்ற பெற்றியா னமைத்துக் கூறப்பட்ட தித்திறத்தென்க. மூவேந்தர் ஒடு கழற் கம்பலை கண்டு, கொடைக்கடம் பூண்ட கோடா நெஞ்சினனாகிய இத் தானவீரன்,* தனக்கியல்பாகவுள்ள கொடையானே இறந்தானென்று கூறலே சிறப்பாதலறிக. 337 - ஆம் புறம்பாட்டில் "கவிகை மண்ணாள் செல்வராயி னும் வாள்வலத் தொழியப் பாடிச் சென்றோர் வரன்றோறக மலர......ஈதலான விலங்கு தொடித்தடக்கைப் பாரி எனக் கபிலர் பாடுதலும் இக்கருத்துக்கியைக் கொள்ளுதல் தகும்; "வாள்வலத் தொழியப் பாடிச் சென் றோர் இவர் என்று கூறுதல் நினைக. வறிய இரவலராயின் அவரை "வாள்வலத் தொழிய" எனச் சொல்ல வேண்டுவ தில்லையென்க.

## 10. கையறவுரைத்த திறம்.

இதன்கண், பாரியின் அருமைத் துணைவியாகிய கற்புடையாட்டி நல்லாள், பாரியைப் பிரிந்திருந்தாள் என்பதற்கு நூல்களில் யாண்டும் மேற்கோள் காணப்படாமையானும், கபிலர் பாரிமகளிருடன் பாரி மனைவியையும் அழைத்துச் சென்றாரென்று கேட்கப்படாமையானும், பாரி மனைவி நல்லாள் என்னும் பெயர்க்கியையப் பாரியுடன் வான்புக்கனளென்று இத்திறத்திற் கூறப்பட்டது. "பாவையன்ன நல்லோள் கணவன்......எங்கோ......வாராச் சேட்புலம் புக்கனன்" (பதிற்-61) என்று செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னுஞ் சேரன் முன்னின்று கபிலர் கூறுவதும் இக்கருத்தை வலியுறுத்தும். ஈண்டு நல்லோள் கணவனாயிருந்தவன் ஆண்டும் நல்லோள் கணவனாகவே புக்கனன் என்பது கருத்தாகக் கொள்க. இதுவே செந்தமிழ்ப் புலவர் கருத்தென்பது சயங்கொண்டார் தம்பரணியில் "தரைமகளுந் தன்கொழுந னுடலந் தன்னைத் தாங்காமற் றன்னுடலாற் றாங்கி விண்ணாட், டரமகளிரவ்வுயிரைப் புணரா முன்ன மாவியொக்க விடுவாளைக்.................. காண்மின்காண்மின்" என்று பாடுதலானறியலாம். புறப்பாட்டிற் பாரிமகளிருங் கபிலரும் பறம்பு விடுக்கும்போது பாடியன கையறுநிலையாகப் புறப்பாட்டுத் தொகுத்தோர் வரைந்து காட்டுதலான் இக்கையறவு பெரும்பாலும் அவர் பாலேவைத்துப் பாடப்பட்டது. கபிலர் பாடிய கையறுநிலையிற் "சேறும்...நாழிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" என்று கூறுதலாற் படையெடுத்து வரும் வேந்தர் அவர்க்குக்கிழவராகாரென்பது கருதி அவரை மறைத்து இரவினே கொண்டு பறம்புவிடுத்துப் போதல் இத்திறத்தே குறிக்கப்பட்டது. "இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின் யாமெந்தையு மிலமே" என்றது, இவர் இரவிற் சென்றாரென்ற கருத்தை வலியுறுத்துதல் காண்க. இரவிற் சென்றதற்குத்தலைமையாய காரணம் பகைவேந்தர் தம்மைக் காணாமையேயாமென்று துணிக.

## 11. பார்ப்பார்ப்படுத்த திறம்.

இது பார்ப்பார்கண் அடைக்கலம் வைத்ததுபற்றிக் கூறியதாகும். படுத்தல் வைத்தலென்னும் பொருட்டு, "நங்கைதன்னை நீர்ப்படுத்தி" (வாழ்த்துக்காதை) எனச் சிலப்பதிகாரத்து வருவதுபோலக் கொள்க. பார்ப்பார்ப் படுத்தல்-பார்ப்பார்கண் அடைக்கலமாக வைத்தல் என்றவாறு. திருக்கோவலூர் வீரட்டேசுரர் கோயிற் கல்வெட்டிற் "பாரிதன்னடைக்கலப் பெண்ணை மலையற்குதவி" என்றதனால் இவர் பார்ப்பார்க்கு மணஞ் செய்யப்படாமையும், அடைக்கலமாக வைக்கப்பட்டதுந் தெளியலாம். இதுபற்றிய பிறவும் 8-ஆம் திற விளக்கத்துக் கூறப்பட்டிருத்தலா லுணரலாம்.

பார்ப்பார்ப்படுத்தற்கு முன்னிகழ்ந்தனவும் அதற்குப் பின்னிகழ்ந்ததுவும் இத்திறத்திலே சேரக் கூறப்பட்டனவாம். பறம்புவிடுத்தபோது மகளிருங் கபிலரும் கையற்றிரங்கியனவும், விச்சிக்கோ, இருங்கோவேள் என்னும் இருவர்பாற் சென்று கபிலர் கூறியனவும், முன்னிகழ்ந்தனவாம். கபிலர் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன்பாற் சென்று நாடும் பொன்னும் பெற்றது பின்னிகழ்ந்ததாம். பாரி பிரிவாற்றாது அவனுடனுறைவுவிரும்பித் தீப்புகவெண்ணிய கபிலர், இவ்வுலகில் உயிர்கொண்டிருப்பது தம்பொருட்டாகாது மகளிர்பொருட்டேயாதல் பெறப்படுதலான் அதற்கியையச் சேரன்பாற் பெற்ற பரிசிலும் மகளிர்க்கே ஆக்கப்பட்டது. இவர் தீப்பாய்தலான் அப் பரிசிலாற்றும்பயன் துய்யாதொழிதல் நினையலாம். சேலஞ் சேகரத்து நன்றுமலைப் பக்கத்துச் சிறுநாடும் இவர் இம்மகளிர்க்கெனச் சேரன்பாற்பெற்றதாகும். அப் பக்கத்துப் பறநாட்டு மங்கலம் என்ற பெயரின் ஒருருண்மை அறியப்படுவது; அது பறநாட்டு மகளிர்க்கு மங்கலத்திற்குக் கொடுத்த ஊரெனின் இவ்வரலாற்றிற்கேற்கும்.

இனி இத்திறத்துக் கூறப்பட்டுள்ள கழாத்தலையாரை வைத வரலாறு நூல்களில் வெளியாகக் கூறப்படாவிடினும் "களிறுமுகந்து" (368.) என்னும் புறப்பாட்டிற் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற் கிள்ளியோடு போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்து ஆரங்கழுத்தன்னதாக உயிர்போகாது கிடந்தானைக் கழாத்தலையார் பாடியதுபற்றியதென உய்த்துணரலாகும். சாந்தருணத்துக் கிடந்தவனை நோக்கிப் "பாடிவந்திதல்லாம்...நின் அரவுறழாரம் முகக்குவமெனவே" என இவர் கூறியதுகொண்டு சாகிற்பவன் துயரந் தெரியாது அவன்பால் ஆரமுகக்குவமென வந்தவரென்று இவரை வைதிருக்கலாம் என நினைக. உண்மையிஃதன்று. களிறும் பரியும் உயிரிழந்து தேர் தலைசாய்ந்தன ஆதலால் இவை இரப்போர் முகவையாகா; இங்ஙனமாயினமையால் இனி யாம் பாடிவந்தது நின்கழுத்திறாரம் முகக்குவமெனவே யாம் என அழுது அதுகொள்ளாது இவரிரங்கியவாறுகக் கருதல்வேண்டும். முன் "இரப்போரிரங்கு மின்னாவியன்களத்து" எனக் கூறுதலான் இவர் இரங்குவதே செய்தது அறியலாம். இங்ஙனங் கொள்ள அறியாது ஆரமுகப்பவராகக் கருதி இவரை வைதனன் என்று நினைக. கபிலர் தம்பாட்டிற் "புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை யிகழ்ந்ததன் பயனே" (புறம்-202) எனக் கூறுதலான் இப்புறப்பாட்டின் உண்மைக்கருத்துணரலாம். இனி இவர் ஆடாவிரதத்தான்றோராய் என்றுங்கழுவாத தலையையுடையராதல் பற்றி நீராடாமையும் புறந்தூய்மையை விட்டவரென்று வைதான் என்பதும் ஆமேனும் "புகழ்ந்த செய்யுட்கழாத்தலை" (புறம்-202) என்றற்கு, முன்னதே இயைதல் காண்க.

## 12. மகளிர்பால் ஔவை வரவுரைத்த திறம்.

பாரி கொடையை நன்கு துய்த்து, அவன் பேரறிவு முதலிய இனிய பண்புகளை ஔவையார் நன்கு பாராட்டு

பவரென்பது "புலங்கந்தாக விரவலர் செலினே, வரை புரை களிற்றொடு நன்கல னீயு, முரைசால் வண்புகழ்ப்பாரி" (அகம்-303) என அவர் பாடியதனால் அறியலாம். பாரியின் பெருக்கத்து அவன் அருமைக் குணங்களைத் துய்த்து மகிழ்ந்த ஔவையார், அப்பாரி வள்ளலுடைய செல்வ மகளிரின் சுருக்கத்து அவர்க்கிரங்கி, அவர்பாற் போந்து அவர் தம்மனத்து எல்லாம் நிறைத்தனர். இது தமிழ் நாவலர் சரிதையிற் கண்ட ஔவை பாடற் பகுதிகளானன்கறிந்தது. ஔவைக்கு நட்பினனாகிய அதிகமானுக்கும் கோவலூர் மலையமான் திருமுடிக்காரிக்கும் பகைமையுண்டென்பது "பிறரும் பாடினன் மற்கொல், முரண்மிகு கோவலூர் நூறிநின், னரணடு திகிரி யேந்திய தோளே" (புறம்-99) என அதிகமானை ஔவையார் பாடுதலானறிந்தது. இப்பகைமையை நினையாமல் ஔவையார் ஒழுகியது பாரி மகளிர்பால் அவர் வைத்த பேரன்பாலும், இயல்பாகிய பெருந்தன்மையாலும் என்று நினையலாம். இத்திறத்திற் பாரி மகளிர் மணத்திற்குப் பொருள்வேண்டியே கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதன்பாற் சென்று பரிசில் பெற்றனரென்று கூறப்பட்டது. பாரியின் பிரிவாற்றாது "உடனுறை வாக்குக வுயர்ந்த பாலே" (புறம்-236) என அவர் வேண்டுதற்கும், பதிற்றுப்பத்து ஏழாம்பத்து முதற் பாட்டில் இச்சேரன்முன்னே "எங்கோன்பாரி வாராச் சேட்புலம் புக்கனன், யான் இரக்கென வாரேன் எஞ்சிக் கூறேன்;" "பாரிபால் யான் கண்ட நல்லிசைமை நின் கட்டர வந்தேன்" எனக் கூறுதற்கும் பொருந்த நோக்கின், இவர் தம்பொருட்டுப் பரிசில் கொள்வதாகாது இம்மகளிர் பொருட்டே கொள்வதாதல் துணியலாம். இப்பாயுந் துணிபுடையவர் வாழ்நாளை வேண்டினர் என்பதும், அவ்வாழ்விற்கு வேண்டிய நாடும் பொன்னுங் கொண்டாரென்பதும் சிறிதும் பொருந்தாமையான் இவ்வாறு கூறப்பட்டது. பாரி மகளிர் வறுமை நிலை "கடகஞ் செறியாதோ கைக்கு" என ஔவையார் பாடுதலான் நன்குணரலாம். 'மகளிர் நீலச் சிற்றுடை யுடுத்திருந்தனர்' என்பதும்

வறுமையே குறிப்பதாகும். "என்னரை நீனிறச் சிதாஅர் களைந்து, வெளிய துடீஇயென் பசிகளைந் தோனே" (புறம்-385) என்வருதலானறிக. ஆடைக்கு நீலநிறமூட்டுத லுண்மை "நீலுண்டுகிலிகை" என்பதனுலுணர்க.

## 13. கபிலர் தீப்பாய்ந்த திறம்.

"பசைந்தாரிற் றீர்தலிற் றீப்புகுத னன்று." (நான்மணி. 13) என்பது விளம்பி நாகனார் விழுமிய வாக்கு. பெருமுடியரசர் இறந்தது பொறுது அவர்பொருட்டுத் தம்முயிர் நீத்த பெருவீரரும் இத்தமிழ்நாட்டுப் புகழுடம் பின் உள்ளாராவர். இதனைப் "பொருதுபுண் ணுணிய சேரலாத, னழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென, வின்னு வின்னுரை கேட்ட சான்ருேர், அரும்பெறலுலகத்தவ னொடு செலீஇயர், பெரும்பிறி தாகி யாங்கு" என்னும் அகப்பாட்டான் (அகம்-55) நன்கறியலாகும். இங்ஙனம் அரசிற்குச் சாவாரைச் சாவேறென்ப. இதனைச் "சாவேறெல்லாந் தனி விசும்பேற" என்ற சாசனத் தொடரானறியலாம். இவ்வாறு ஒரு வள்ளலின் பிரிவாற்ருதுயிர் நீத்த பெரும் புலமை யாளர் இத் தமிழ்நாட்டிற் பலராவர். இத் தென்னுட்டு நட்பு மனப்பாங்கு வளர்ந்த நாகரிகத்தைக் காட்டுதற்கு இஃதோர் தக்க சான்ருகும். கோப்பெருஞ் சோழர்க்காக உயிர்நீத்த பிசிராந்தையாரையும் பொத்தியாரையும் ஈண்டைக்கு நினைக்க. இவரெல்லாம் பெருமுடியரசர்க் குயிர்துறந்தாராகவும், கபிலர் என்னுஞ் சங்கப்புலவர் தலைவர், பாரியென்னும் ஒரு சிற்றரசர்க்குத் தீப்பாய்ந் துயிர் நீத்தாரென்பது, நட்புரிமை யொன்றே கருதியதாதல் நினையத்தகும். இவரியைபு "பெருந்தகு சிறப்பினட்பு" (புறம்-236) எனப்பாடப்படுதலானும், திருக்கோவலூர் நல்லோர் இவர் தீப்பாய்ந்த அருமையைப் பாராட்டி ஆங்குக் கன்னட் டிவரைப் போற்றியதனுனும் இவரரிய செயலின் மேம்பாடு உய்த்துணரலாகும். இதனை "மினல்புகும் வீடுபேறெண்ணிக், கனல்புகுங் கபிலக் கல்லது" என்ற திருக்கோவலூர் வீரட்டேசுரர் கோயிற்

கல்வெட்டுப் பகுதியான் அறியலாம். நட்பினன் பிரிந்த போதே நட்பும் பிரிந்ததென்று கருதி அவர் பிரிவே தாம் இளைப்பாறியிருத்தற்கு வாயிலென்று கொள்ளுஞ் சிறியாா போலாது அந் நட்பினன் புக்க மேலுலகிற் றாமும் புக விரைந்து, உருகியழியும் உள்ளமுடையார்க்கு உடல் வாழ்க்கை ஒரு பெரும் பொறையாயினும் அந் நட்பினன் குடியோம்புவதே பயனாகச் சிலபோது இவ்வுலகில் வதிந்து வேண்டுவனவெல்லாஞ் செய்துமுடித்துப் பின் இவர் விண் புக்கனரென்று கூறப்பட்டது.

## 14. மகளிர் திருமணத்திறம்.

இத்திருமணம், புறநானூற்றில் நப்பசலையார் காரியைப் பாடிய பாட்டிற் கோவலூர்க் காரியைக் கிளையுடன் பொலியக் கபிலர் பாடினார் என்று தெளியக் கூறுதலைத் துணையாகக் கொண்டும், தமிழ் நாவலர் சரிதையில் ஒளவை பாடல் வரிசையில் மூவேந்தர்க்கு விடுத்த ஓலைச் செய்யுட்களைக் கொண்டும் கூறிற்றாகும். நப்பசலையார் (புறம்-126.) கூறுமாறு.

"தேறலரு மரபினின் கிளையோடும் பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற வந்த ணாள
னிரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்" என்பதாம்.

பாரிக்குயிர்த்துணையாகிய கபிலர் காரியைக் கிளையோடும் பொலியவும், இசை நிற்கவும் பாடியது, இவ்வருமை மகளிரை அவன் குடியில் மணப்பித்தல் கருதியென்றே உய்த்துணரலாகும். திருக்கோவலூர்க் கல்வெட்டினும்,

"மொய்வைத் தியலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்

முரிவண் டடக்கைப் பாரித னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவி"

என்றிருத்தலும் இக்கருத்தை வலியுறுத்தும். கபிலன் செஞ்சொற் கவிதை யெல்லாம், பார்ப்பாரிடைத்தான் அடைக்கலம் வைத்த பெண்டிரை மலையன் குடிக்கு உதவற் பொருட்டே என்பது குறிப்பாகக்கொள்ள வைத்தல் காண்க. காரி மக்கள் இருவர்க்குக் குறையாரென்பது, "கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர் கிழார் பாடியுய்யக்கொண்டது" என்னும் 46-ஆம் புறப்பாட்டுக்கொளுவாலறிந்தது. பாரிமகாரும் அங்ஙனமாதல் பாரி மகளிர் எனவே புறப்பாட்டில் வருதலானும் தமிழ் நாவலர் சரிதையில் அங்கவை சங்கவை எனப்பெயரிட்டாளலானும், அறிந்தது. குறிஞ்சிப் பாட்டாற் களவு முறையே பாடித்தமிழறிவுறுத்தும் கபிலர், இம்மகளிரை விச்சிக்கோ, இருங்கோவேள் இருவரிடனுங் கொண்டு "இவரை யான் கொடுப்பக்கொண்மதி (புறம்-200) எனவும், "யான்தர இவரைக்கொண்மதி" (புறம்-201) எனவும் வேண்டுதலானும், அவர் திருவுள்ளத்திற்கியையக் கரணமொடு புணர்ந்த கற்பு முறையிலே இம் மணங் கூறப் பெற்றது. ஔவையார் "அங்கவையைக் கொள்ள வரசன் மனமியைந்தான்" என்றதுங் காண்க.

இங்ஙனம் தெய்வக் கபிலர் பாடிய தெய்வப்பாரிபுகழ் நிலமிசைக் கெடாது விளங்க வேண்டுமென்றொன்றே கருதி அவ்வள்ளல் வரலாற்றின் வாய்மைப் புகழை ஒருவாறு தொகுத்து என் சிறு சொல்லில் யாத்துப் பெருந் தெய்வ வடிவா யென்று முள்ள நற்றமிழன்னையின் திருவடிகளில் இட்டுவைத்தேன். யான் இந்நூல்பாடி நிறைவேற்றியபின்னர், இதனை வெளியிடற்கு ஓர் பெரு நல்லவை வாய்க்கப் பெறாது தாழ்த்தயாண்டுகள் பலவாகும். நல்லறிவாளர் அருமையாக வாய்த்த அமயங்களில் இந்நூலில் ஒவ்வோர் திறத்தைப் படித்துக்காட்டி அவர்களால் அன்பு செய்யப் பெற்றதுண்டு. என்னை வழி வழியாகக் காக்கும் வள்ளற்

சேது வேந்தர் திருமரபில் இப்போதுள்ள மாட்சிமை தங்கிய மன்னர் நாகநாத சேதுபதியாகிய ராஜா, ஷண்முக ராஜேச்வர சேதுபதி அவர்கள் முடிசூடுந் திருவிழாவில், என் இல்லத்துத், தமிழ்க்கடலாகிய மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி ஸ்ரீமான் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வதியநேர்ந்த சின்னாட்களில் என் வேண்டுகோட்கிணங்கி இந்நூல் முழுதையும் ஒருமுறை அவர்கள் நன்மாணாக்கர் வித்வான் செகந்நாதையரவர்களைக் கொண்டு படிக்கச் சொல்லிக் கேட்டருளினார்கள். அப்போது அவர்கள் எம் சேதுவேந்தரவர்கள் முன்னே சென்று இந்நூலைப் பாராட்டிப் பாடிய பாடல்கள்.

1. பாரி யளித்த மகளிர்தமைப்
   பரிந்தே யௌவைப் பெயர்ப்பெரியோர்
காரி யளித்த மைந்தருக்குக்
   கலியா ணஞ்செய் காதையெனும்
வேரி யளித்த விருந்துண்டேன்
   விறல்சேர் நாக நாதமன்னன்
வாரி யளித்த மணியனையான்
   மகுடாபி டேக வளர்தினத்தே.

2. தோன்றாற் புலவர் கருத்தெல்லாந்
   துலங்க நின்வா யிற்புலவன்
பன்னூல் பயின்ற ராகவமால்
   பாடும் பாரி காதையெனும்
இந்நூ னயத்தி லென்னுள்ள
   மீடு பட்டே கிடந்ததம்மா
நன்னூ னயந்தேர் தென்முகவை
   நாக நாத நரபதியே.

3. சீரை யளித்த ரகுநாத
   சேது பதிமா லமுதகவிக்
கூரை யளித்தா னொருகோவைக்
   குலகம் புகழும் ராகவனேன்

பேரை யளித்த கவிஞனுக்கேன்
பேற்றை யளிப்பா யோவறியேன்
நாரை யளித்த கோடைநாக
நாத சுகுண நரேந்திரனே

என்பனவாகும்.

இவர்கள் இங்ஙனம் பாராட்டியது வாடிய பயிர்க்குப் பெய்த மழைபோல நின் என்று இளைத்த நெஞ்சத்தைத் தளிர்க்கச் செய்தது. இவர்கள் இங்ஙனம் பாராட்டிய தன்றிச் சென்னைச் சருவ கலாசாலையார் இந்நூலின் ஒரு பகுதியாகிய மகண் மறுத்த திறத்தை 1933-ஆம் ஆண்டு பி. ஏ. வகுப்பிற்குப் பாடமாக வைத்தற்கு வேண்டியதுஞ் செய்துதவினார்கள். இவ்வாறு பெரியார் பாராட்டும் பாக்கியம் பெற்றும் இந்நூல் முறையாக அரங்கேறி முழுதும் வெளிவந் துலவற் குதவும் தக்காரும் நல்லவையும் பெறாமற் பின்னுங் காலங் கழிந்தது.

இங்ஙனம் உள்ளபோது இவ்வினிய தமிழ் நாட்டினைப் பலவகையானும் மேம்படுத்த, அது சிறந்து வாழ்வதிலே கண்ணுங் கருத்துமுடையராய், எத்துணையோ பல அறச் சாலைகளு மருத்துவ நிலயமும் நிறுவியும், திருக்கோயில் புதுப்பித்தும், தில்லையிற் பொன்வேய்ந்தும், புனல் பொழிந்தும், கல்லூரியிழைத்தும் புகழ் பெற்ற இளங் கோக்கள் பெருங்குடியிற் றமிழர் தவப்பேறெனத் தோன்றி இவ்வுலகு புகழத் தம் பெயராற் பல்கலைக் கழக நிறுவிய மாட்சிமை தங்கிய செட்டிநாட்டரசர் பெருந்தகை டாக்டர் ராஜாஸர் அண்ணமலை வள்ளலார், கொடையிலே இன்புறும் மஹாதானவீர ராதலான் இப்பாரி கொடைப் பாடலைப் பலரறிஞர்வாய்க் கேள்வியுற்று என்னையழைத்து இந் நூலிற் சில பாடல்களை ஆங்காங்குக் கேட்டு மன முவந்து, இப்பாரி வள்ளல் சரிதத்தைப் பாதுகாத்துப் பரவச் செய்வது நற்றமிழ்ப் பணியாக நினைந்து, அண்ணமலைப் பல்கலைக் கழக ஞான கூடத்துத் தம் பிறந்த நாள்

விழாவில் (14-2-1934) நல்லறிவாளர் பலரை அன்புகூர்ந் தழைத்து, அமர்த்திப் பண்டையோர் நெறிமுறையிற் பெருஞ் சிறப்புடன் இந்நூலை அரங்கேற்றுவித்துத் தம் அருமைச் செல்வப் புதல்வரும், சென்னை நகர பரிபாலனப் பேரவைத் தலைமைமேயரும், இப்பொழுது சென்னை மாகாண அரசியற் கல்வி மந்திரியுமாகி விளங்கும் ராஜ குமாரர் கனந் தங்கிய ஸ்ரீமாந் முத்தைய செட்டியாரவர் களைக் கொண்டு பெரும் பொற்பரிசிலும் வழங்குவித்தார் கள். இவ்வள்ளற் பெருந்தகையாரை நீடூழி வாழ்கென வாழ்த்தி யான், என்,

"சிந்தையிடை வைப்பதலாற் செய்யுங்கைம் மாறுதான்
எந்தவுல கத்து மிலை."

இவ்வரங்கேற்றக் காலத்து அப் பெரு நல்லவையில் அமர்ந் தவரும் பிறருமாகிய புலவர் பெருமக்கள் அன்புகூர்ந்து செட்டிநாட்டரசரவர்களையும் இந் நூலையுஞ் சிறப்பித்துப் பாடி யுதவிய பாயிரச் செய்யுட்கள் நூற்றொடக்கத்துக்கு முற்பகுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புலவர் பெருமக் கட்கியான் எஞ்ஞான்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடை யேன்.

செட்டிநாட்டு அரசர் பெருந்தகைவள்ளலார் இத் தென்னாட்டின் வளர்ச்சி கருதி இருபெருந் தெய்வமுங் கோயில்கொண்டருளிய தில்லைத் திருப்பதி மருங்கே தம் திருப்பெயரால் நகரமும், பல்கலைக் கழகமும் அமைத்த பெருங்கொடை உலகறிந்து புகழ்வதாகும். இவர்களைச் செயற்கரிய செய்த பெரியார் என்று கூறின் அது மிகை யாகாது. இவர்கள்,

படையானே யரசெய்தல் பழியென்று பழிப்பில்பெருங்
கோடையானே யரசெய்தல் குறித்ததுநின் மதிப்
பெருக்கே

விடையானை வழிபட்ட விழுத்தகைமுத் தையன் தவத்து
நடையானே சிறந்துயரண் ணுமலைநல் லரசேகேள்.

என்றபடி படைவலியானன்றிக் கொடைவலியா னரசராய புண்ணியசிலராவர்.

இப்பெரியார் செய்த அரிய பெரிய வித்யாதானத்தின் விளைவாகத், தில்லைத் திருப்பதி, முன்னையினுஞ் சிறந்து விசாலித்து, அறிவிலும் நாகரிகத்திலும் வளர்ந்து, பெரும் புலவர் பலரைக் காப்பதன்றி ஊழி ஊழிக்கும் இயலினும் இசையினும் பலவகைக் கலையினும் பல்வகை மொழியினும் எத்துணையோ புலவரை உண்டுபண்ணுவதாகவும் விளங்குதல் காணலாம்.

நிதிபெய்த தந்தையினும் நீள்புனல்பெய் தமையனினும்
மதிபெய்த நின்கோடையான் வளர்ந்ததுசிற் றம்பலமே
நதிபெய்த மதிவேணி நடராச னருள்பெருகத்
துதிபெய்து நீழேி துலங்குவையண் ணுமலையே.

என்று உலகம் வாழ்த்துவதல்லது இவர்கள் செய்த பெரு நல்லுதவிக்குக் கைம்மாறு காண்பது இயலாதாகும்.

இவ்வள்ளலார்க்கு என்னளவிற் செய்யுங் கைம் மாறு வேறொன்றுங் காணுமையால் தமிழ்நாட்டுப் பண்டை நல்லிசைப்புலவர் பலரும் பரந்தோங்கு சிறப்பிற்பாடிய தெய்வப் பாரியின் கொடைச் சரிதத்தைத் தொடர்பெற வைத்து யான் இயற்றிய இந்நூலைக் கொடையொப்புமை கருதி மனமுவந்து உரிமையாக்கினேன். இவர்கள் அரும் பெருங் கொடையாற் கைப்பற்றிய புகழ்மாமகளுக்கு இப் பாரிகாதை ஓர் திலகமாக விளங்குவதாகுக.

இவ்வரசர் பெருந்தகையார் எல்லா நலமு நிறைந்து நெடிதூழி யின்புற்று வாழ இறைவன் திருவருளை வேண்டு கின்றேன்.

யான் இந்நூலை இப் பெருந்தகையார்க்கு உரிமை யாக்கி மொழிந்த பாடல்கள் இம்முகவுரையை அடுத்து வைக்கப்பெற்றுள்ளன.

இப்பாரிகாதையை யானெழுதிய பொருட்குறிப் புடன், பல்கலைக்கழகப் பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டு உதவிய, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து அதிகாரி வர்க் கத்தாரனைவர்க்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத் துங் கடப்பாடுடையேன்.

இந்நூல் அச்சிடும்போது என்னுடனிருந்து உதவிய, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சிப் பகுதிச் சீனியர்ப் பண்டிதர் இ. எஸ். வரதராஜையர், பி.ஏ., அவர்கட்கும், ஷை பண்டிதர், பண்டித, லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கட்கும், ஷை ஆராய்ச்சிப் பகுதி மாணவர், வித்வான் இ. எஸ். தியாகராஜ தேசிக ரவர்கட்கும் என் நன்றி என்றும் உரியதாகும். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் வாழ்க.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்.

ஸ்ரீ:

கடவுள் துணை.

# பாரிகாதை

## உரிமையுரைப் பாடல்கள்

1. கார்பெற்ற செங்கைக் கோடைப்பாரி வேள்வண்
   காதைத் தமிழ்ப்பாட லீதைத்தே னுடு
   சீர்பெற்று நீடப்பல் கல்விக்கும் வைப்பாய்த்
   திருவேட்க ளன்னூற் களன்செய்தி வன்றன்
   பார்பெற்ற செம்மைத் தவப்பே றெனத்தேர்
   பாவாணர் நெஞ்சான் வழுத்தக் குலக்கோப்
   பேர்பெற்ற அண்ணா மலைச்செல்வ வள்ளல்
   பெரிதூழி பலவாழ வுரிதே செய்தேனே.

2. கானாடு வண்செட்டி நாடாதல் கண்டாள்
   கற்றார் களன்வேட் களத்தாதல் கண்டாள்
   மானாடு வெண்டேர்க் கழிப்பாலை யண்ணா
   மலைப்போன் னகர்க்கல்வி வைப்பாதல் கண்டாள்
   தேனாடு சிற்றம் பலம்பண்டு மிக்குச்
   சீர்மேவு ஞானஞ் செழித்தாடல் கண்டாள்
   தானாடி வந்தாள் புகழ்ச்செல்வி யண்ணா
   மலைக்கோண்டல் கையைத் தகப்பற்றி னாளே.

3. உண்ணாறிய வன்பின் னுயராளுடை நம்பி
   ஓதப்பெறு பாரி காதைத்தமிழ் நூலைத்
   தண்ணார்முகி லன்ன அண்ணாமலை மன்னன்
   தானப்பெரு வீரற் கியானற்புட னிட்டேன்
   கண்ணாகிய கல்விக் கெண்ணாலள வேறுங்
   கனகம்பொழி தந்தோண் கழகஞ்சேயல் கண்டு
   தேண்ணாவல் வளாகத் தன்னான்கர மேய்தித்
   திகழும்புகழ் மகணாற் றிலகம்மிது வென்றே.

4. புத்திநட மாடுமுயர் சிற்சபையி தென்னும்
பொற்புற பெயர்ப்பொருளை யிப்புவி விளக்கி
எத்திறமு நல்லவறி வெய்தியொரு தென்னா
டின்புற நினைந்தளவி லொண்பொருள் பொழிந்து
பத்திமையி னுலுயர் கலைக்கழகம் வைத்துப்
பார்முழுது மேதனது பேர்கெழும நீடும்
இத்திருவண் ணமலைவள் ளற்குரிசில் பாரி
யின்கதை மகிழ்ந்ததுதன் முன்சரிதை யென்றே.

5. பதிக்கழ களிப்பது கலைப்புலவர் பல்கும்
மதிக்கழக மென்றுநலண் ணமலை மதித்து
விதித்தொளிர் சிதம்பரவண் ணமலை நகர்க்கட்
டுதிக்குமவை யேறியது பாரிகொடை சூழ்ந்தே.

6. சீரா கவகவி சேகரன் பாரி செழுங்கதைநூல்
ஆரா வமுதையண் ணமலைப் பல்கலை யாலயத்திற்
பேரா சிரியர் விருந்துண்ண வூட்டிய பெற்றியுவந்
தோரா யிரம்பொன் பொழிந்ததண் ணமலை யோண்
முகிலே.

ஸ்ரீ:

# பாரிகாதை

## சிறப்புப்பாயிரம்.

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர். ஸ்ரீமாந்

**உ. வே. சாமிநாதையர் அவர்கள்**

பாடியன.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

1. திருமலி பறம்பிற் பாரியாம் வள்ளல்
சீரெலாம் விரித்தொரு காதை
உருமலி சங்க நூல்பல உணர்ந்தே
உரைத்தனன் சேதுகா வலர்தம்
குருமலி யவையப் புலவனா விளங்கிக்
குலவுசீ ரிராகவப் பனவன்
மருமலி தமிழி னயமெலா மொருங்கே
மலிந்திடக் கவிஞரின் புறவே.

2. புலவர்கள் பலர்மு னதையரங் கேற்றல்
புரிவித்துப் பொற்கிழி யளித்தான்
நிலவுறு செட்டி நாட்டினுக் கரசன்
நிறைதிரு மதிகுண முடையோன்
கலவுறு கலைக்குக் கோயிலென் றுரைபல்
கலைக்கழ கத்தினை நிறுவி
உலகுள தனையுந் தன்புகழ் நாட்டி
யுயரண்ணா மலைப்பெயர் மணியே.

சென்னை யூனிவர்ஸிடி, தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்
தலைமைப் பண்டிதர், இராமநாதபுரம்
ஸ்ரீமாந் மு. இராகவையங்கார் அவர்கள் பாடியன.

1. பூம்புகார் வணிகர்குல மணிகளெனத்
தமிழ்ப்பாண்டி பொலிவுற் றோருள்
தீம்புகால் சித்ததிருத் தில்லையினிற்
பல்லறமுந் திருத்துஞ் செல்வர்
தோம்புகாப் பெருங்குடியுட் டோற்றியவிந்
திரதிருவன் றொன்னீர் வைப்பை
ஓம்புகா ரெனவளிப்போ னொருவனுளன்
அவனையெவ ருணரா தாரே.

2. புறநாட்ட விளக்கன்றிப் புலநாட்டும்
விளக்கேயிப் புவியோர்க் குள்ள
மறநாட்டு மிருண்மாய்க்க வல்லதெனச்
சகலகலா மன்ற மென்னுந்
திறநாட்டும் ஞானமணித் தீபவொளி
தில்லைமுன்றிற் றிகழ வேற்றி
யறநாட்டிப் புகழ்நாட்டு மண்ணலண்ணா
மலைக்குரிசில் யாவ ரம்மா.

3. துதிபெருக்குஞ் சொல்லானே சொல்லியமை
வதுகொல்லோ துளக்கி லாத
நிதிபெருக்கித் தோற்றமொடு நிலைபெருக்கி
நெறிபெருக்கி நீடு கங்கா
நதிபெருக்கு மானசம்போல் நாட்டியபல்
கலைமன்றால் ஞான வெள்ளம்
மதிபெருக்கி வளஞ்சுரக்கும் வண்மையண்ணா
மலையரசின் மாட்சி மாதோ.

4. கொல்லைத்தே னசும்பகலாக் கொடைக்குன்ற
மாம்பறம்பின் குணபா லுள்ள
எல்லைக்கே தரநிலவு மிளங்கோநாட்
டிருங்கோமான் யாரும் ஓதத்

தில்லைக்கே சீர்நிறுத்த செம்மலன்னு
மலைகானிற் றியங்கி வாடும்
முல்லைக்கே தேர்நிறுத்த மூரிவண் கைப்
பாரிபுகழ் முழுது மோர்ந்தே.

5. அறந்திகழுங் கொடையினிற்கன் னனையுமறந்
தரனடியா ரணிந்த வள்ளல்
மறந்திகழப் பெருவேளின் மாப்புகழைக்
காப்பியமா வகுத்தே யீகைத்
திறந்திகழுஞ் சேதுபதி திருவாயிற்
பெரும்புலவன் செந்நா வல்லோன்
சிறந்தகவி சேகரனஞ் சிராகவன்
செய்த திறமுங் கேட்டே.

6. அப்பாரி பாட்டமுதி லமைந்தசுவை
அருமையறிந் ததனைப் போற்றி
இப்பாரிற் கொண்டாடற் கியானுரியே
னெனமுன்வந் திங்கு நாமுந்
தப்பாதச் சுவையருந்தத் தன்பெருநாள்
அரங்கேற்றஞ் சமைத்தா னிந்நா
ளொப்பாரில் நல்லறிஞர்க் குபகாரி
யிவனன்றி யொருவ ருண்டோ.

7. கலையிட்ட பெரும்புலமைக் கபிலனுக்கா
ருயிர்த்துணையாய்க் கற்றோர் நெஞ்சில்
நிலையிட்ட புகழ்ப்பாரி நெடும்பாடற்
பொருள்விரித்து நிறைந்த கல்வி
தலையிட்டோர் கபிலாவ தாரமென
ராகவன்றான் சாற்று நூலை
மலையிட்ட தீபமென வள்ளலன்று
மலைக்கணிந்தான் வயங்க மன்னே.

8. மூவேந்தர் போய்த்தமிழின் முன்னிலைமா
றியவின்று முதிர்ந்த கேள்விப்
பாவேந்த ருளரவரைப் பாலிப்போர்
தாமுமுள ரென்னும் பான்மை

பாவேந்தர் பின்னவருண் மன்னவர்முன்
னோனண்ணா மலைமுன் பாரி
நாவேந்து கவியெடுத்து ராகவசிங்
கம்முழங்கி நாட்டிற் றம்மா.

9. வள்ளலார் புகழமுதை வடித்தபா
வலரவரால் வரிசை பெற்றே
எள்ளலா வாழ்வுற்றா ரென்பதிறும்
பூதேயோ வின்று ளோரும்
விள்ளலா முறையவர்சீர் விளம்பலுறின்
இசைவரிசை வேண்டி யாங்குக்
கொள்ளலா மென்பதையிப் பாரிபாட்
டரங்கேற்றங் குறித்த தன்றே.

10. பூதவுடம் பேயன்றிப் புகழுடம்பைப்
பாடுநர்க்கும் பொய்யா வள்ளல்
தீதகன்ற வேள்பாரி திருப்பாடல்
அமைந்ததொரு திறமென் னென்பேம்
காதளவி நிறைந்துமனங் கரைவித்துக்
கண்ணீர் காலச் செய்து
கோதகல என்புகுழைத் துள்ளமுந்தன்
வசங்கொள்ளை கொள்வ தாமால்.

11. திருந்துகூத் துகந்தபிரான் தில்லையிற்பல்
கலைமன்றந் திகழ வண்மை
பொருந்துகோப் பாரிபுகழ் போற்றியவெண்
பாவினரங் கேற்ற நன்னாள்
இருந்துகேட் டுளமுவந்த விளவரசோ
டிதனுரிமை யேற்றெம் போல்வார்
விருந்துகூட் டுணவைத்த வேந்தனண்ணா
மலையூழி மிகுக வாழ்வே.

சுபம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர்

ஸ்ரீ. உ. வே. திரு நாராயண ஐயங்கார்

அவர்கள் பாடியன.

பாரிமீ தெிருந்து கேட்கும் பாக்கியம் பெற்று னல்லன்
ஆரியன் கபிலன் றானு மவன்கதை யுரைத்தா னல்லன்
சீரியை பாரி பாட்டி ராகவ கவிஞன் செப்ப
மாரியை யனையன் அண்ணா மலைபரி சளித்தான்
மன்னோ.

இப்பா ருலகி லினிப்பாரி யைக்கொடையா
லொப்பா ரிலையென் றுரைப்பாரார்—எப்பாரும்
போற்றும் பெரிய புகழ்புனையண் ணாமலையின்
தோற்றந் தெரியத் துணிந்து.

---

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்

ஸ்ரீமாந் பண்டிதமணி.

மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பாடியன.

1. தன்னையும் வழங்கும் வண்மையிற் சிறந்த
தகவுடைப் பாரிவேள் காதை
நன்னரி னியைத்துத் தொடர்நிலைப் படுத்து
நாற்பொருட் பயனுமாங் காங்குத்
துன்னிய வியற்றி நுண்பொருட் குறிப்புஞ்
சுவைபெறப் புலப்படுத் தினிதா
விந்நிலப் புலவர்க் கியற்றமி ழமிழ்த
மீந்தனன் யாவன்மற் றென்னின்.

2. துதிபெறு தமிழில் வடமொழிப் பரப்பிற்
றோய்ந்துநுண் பொருள்பல வாய்ந்து
விதிமுறை யவையோர் வியக்குமா றவலும்
விறன்மிகு நாவளம் படைத்தோன்

பொதிபொருட் சுவையின் வீறுகொள் பாடல்
பொருளுரை யாய்வுரை பலவும்
மதிவலி யியற்றும் பெருமைசால் புலமை
வாய்ந்தவன் இராகவ மாலே.

3. திருமலி சேது வேந்தர்த மவையிற்
றிகழ்தரு மணியெனப் புகல்கோ
மருமலி தெரியன் மன்னவன் அண்ணா
மலைவளர் பல்கலைக் கழகத்
துருவளர் விளக்கென் றேதுகோ லென்ற
துள்ளுறை யின்பென விரைக்கோ
கருதுவார்க் கினிய இராகவப் பெயரிற்
கமழ்கவி சேகரன் றனையே.

4. இப்பெருங் கதையின் மாண்புணர்ந் தேற்க
வியைந்தவன் பாரியே யனைய
வொப்பரும் புகழான் செட்டிநாட்டரசேன்
றோங்கும்அண் ணாமலை வள்ளல்
அப்பெருந் தகையின் பெருமிதங் குறித்தே
யாக்கின னுரிமையா வவற்கே
மெய்ப்பெரும் புலவோர் விளங்குபே ரரங்கின்
விம்மித மிகவெடுத் துரைத்தே.

5. சொற்சில வாக விசைநலந் தழுவிச்
சுவையொடு கருதிய பொருளைக்
கற்பவர் தெளிய வுணர்த்திநுண் பொருளுங்
காண்வரக் குறிப்பினில் விளக்கும்
பொற்பமை முதற்பா வென்னுநித் திலத்தாற்
புனைமணி மாலையா மீது
கற்புறு தமிழ்த்தாய் மார்பினுக் கணியாய்க்
கவின்கொள நீடுவா ழியவே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்
ஸ்ரீமாந். பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
அவர்கள் பாடியவை.

1. வண்மைக்கு மீவரம்பா மன்னுபுகழ் வேள்பாரி
யுண்மை வரலா றுலகுவப்ப—வொண்மையுறு
பைந்தமிழின் வெண்பாவாற் பாடினான் செங்கமலை
மைந்தனென வந்தபுல வன்.

2. வாடாத தாரினரும் வந்தபர வுஞ்சேது
நாடாளும் வேந்து நனியுவக்கும்—பீடார்
அவைப்புலவ னென்னை னகம்புறமா வாரிச்
சுவைத்தமிழை யுண்டுகளித் தோன்.

3. தேன்மழை யென்னத் தெவிட்டாத சொற்பொழி
வான்
ஆன்மழை யோப்பிய வண்ணருள்—தான்மலரு
நெஞ்சி னிராகவமா னீடுமக் காதையிணை
விஞ்சை முறைவிளங்க வே.

4. உண்மையறி வூக்க முறுதி கலைவளர்க்கும்
வண்மையிறை யன்பு வழுவாத—திண்மையுடன்
எல்லாம் பொருந்துமெழி லேந்தலண் ணாமலைப்பேர்
மல்லார்திண் டோளுடைய மன்.

5. தன்பெயரி னேங்குந் தமிழ்ப்பல் கலைக்கழகத்
தின்புலவ ரெல்லா மியைந்ததிரு—மன்பே
ரவையரங் கேற்றுவித் தன்புடனே செம்பொற்
குவையளித்தான் வாழியவக் கோ.

வெள்ளக்கால் ஸ்ரீமாந். ராவ் சாகிப்
வே. ப. சுப்பிரமணிய முதலியார் G. B. V. C.
அவர்கள் பாடியன.

1. கதிர்சிகரண் ணுமலைப்பல் கலைக்கழகத் தாபகமன்
களிக்க வன்னற்
கிதுதகுதி யாமுரிமை யெனப்பாரி பாட்டையுவந்
தினிதீந் தானல்
அதிமதிநுட் பத்திறனெடு மருப்பெரும்பாஎ
டித்தியமு மான்றோர் வேட்டுத்
துதிபுரியு மினியகவித் துவமுஞ்சே ரிராகவப்பேர்த்
தோன்றல் மாதோ.

2. அந்நா ளரசர் தமுட்பாரி
யான்ற புலவர் தமுட்கபிலன்
முன்னு வுற்று ரிந்நாளம்
முறையே மன்னர் தமுண்முதலாம்
மன்னும் அண்ணா மலைவள்ளல்
வயங்கா நிற்ப ராகவன்றான்
செந்நாப் புலவர் சிகாமணியாய்த்
திகழ்கின் றனிச் செகமீதே.

---

அண்ணமலைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமாந் சர்க்கரை இராமசுவாமிப் புலவர்
அவர்கள் பாடியது.

பாரியின்மேற் கபிலர்செய்த பாடலைப்போற்
சிறந்ததெனப் பாரி காதை
மாரிநிகர் ஸர்அண்ணு மலையரசர்க் குரித்தாகும்
வண்ணஞ் செய்தான்
வாரியுண்ட குறுமுனிநேர் வான்சேது சமஸ்தான
வானர்க் குள்ளு
தாரிகவி சேகரன்முத் தமிழ்வைப் பிராகவனந்
தணர்கோ மானே.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்து, அமைச்சர் ஸ்ரீமாந்.

நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் M.R. A.S.

பாடியவை.

1. அன்னை தமிழணங்கா ராரமுதோ வாய்ப்புலவர்
சென்னி மிலைச்சுஞ் செழுமணியோ—நன்கபில
ணண்புற்ற வேள்செய்தி நாடறியச் சாற்றுமெழிற்
பண்புற்ற பாரிவெண் பா.

2. சங்கக் கடலெழலாற் சாரறிஞர் கைதொழலா
லெங்கு மொளிகொண் டிருடெறலாற்—செங்கதிர்நே
ரிப்பாரி வெண்பா வியற்றுதிரு ராகவனுர்க்
கொப்பா ரிலாமை யுணர்.

3. சேர ரிளங்கோமான் சேக்கிழா ரென்றிவர்நூல்
வீற விருக்கும் வியனணைமே—லேறியுறப்
பிந்துவதோ வெங்கள் பெரியா ரிராகவனுர்
தந்தவேள் பாரி தமிழ்.

4. சொற்றவனுஞ் சொற்பொருளுஞ் சோர்விலா வப்பொருடான்
பற்ற விருந்த பலதிறனு—முற்றுதமி
ழென்றுரைக்க வேண்டினர்க் கேதமிலிம் மூன்றுமலா
லொன்றுரைக்க வுண்டோர் வுணர்.

5. ஊர்பெற்ற சான்றோ ருயிர்ப்பிக்க லாப்பாரி
பேர்பெற்று நின்று பிழைத்தனனாற்—கார்பெற்ற
வண்கைக் கொடைக்குரியார் வாய்ந்ததமிழ் ராகவனே
வொண்புலவ ராதியரோ வோது.

6. காலமிட மென்னக் கருதுபகுப் பத்தனையுஞ்
சால வணித்தாக்கித் தந்ததே—ஞாலமகிழ்
தண்பறம்பிற் கோமான் றமிழ்த்தெய்வப்பாரியின்
பண்பறைந்த பாடற் பயன். [மெய்ப்

7. வானார் பறம்பின் வருதென்றன் மெய்வருடக்
கானார் பலவின் கனியருந்தித்—தேனார்ந்த
முல்லை முகைமோந்து மொய்ப்பாரிகண் டிவ்வேள்சீர்ச்
சொல்லெலஞ் செவிகேட் டது.

8. ஆரூரன் சொல்லி லருஞ்சங்க நூனவெண்
வேரூன்றி நின்றபெரு வேள்புகழ்தான்—பாரூர்ந்து
சென்ற வறிவாஞ் செழுநீர் பெயமலர்ந்து
நன்று கமழ்ந்ததிந் நாள்.

9. பல்லார் பகுத்துணவும் பண்புசுவை யிற்குன்று
தெல்லா நலமு மினிதளிக்க—வல்லதிது
முற்றும் பயின்று முதிர்சங்க நூற்பொருள்கள்
கற்றுப் பயந்த கனி.

10. செங்கை மகளிர் சிறுகொடையோ சேர்ந்தவர்தா
மங்கு நடந்த வருநடையோ—புங்கவனார்
செந்தீப் புனல்படிந்த செய்தியோ தேர்வார்கள்
தந்தா முளமுருக்குந் தற்பு.

11. எந்நெறிய ராயினு மெய்தியது வெற்றியெனின்
நன்னெறிய ராய்ப்புலவர் நாத்திகழ்வ—ரிந்நெறியி
லீடுபடா ரெங்க ளியற்புலவ ரென்பதனைக்
கோடுபடா விந்நூலாற் கொள்.

12. அண்ணா மலையரைய ணார்ந்த புகழ்பெற்றான்
பண்ணார் தமிழரசி பாப்பெற்றா—னெண்ணார்ந்த
வின்பநிலை பெற்றா ரிராகவனா ரேர்கொளிந்நாட்
டன்புநிலை பெற்றவத னால்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் ஸ்ரீரங்கம்

ந. பலராமையர் அவர்கள் பாடியன.

1. சீரார் புகழேந்தி செப்பியவெண் பாவின்மிகப்
பாரோர் மகிழப் பரித்திசைத்தான்—காரேய்கைப்
பாரிவர லாறு பகர்முகவை ராகவனல்
லேரிவருஞ் சொல்லா னெடுத்து.

2. கொடைமட மப்படாக் குரிசிலண் ணாமலை குயிற்றுந்
தடைமட மப்படாச் சான்றவ ரவைகளி ததும்பப்
படைமட மப்படாப் பாரிவெண் பாப்பகர்ந் தான்சொன்
னடைமட மப்படா நாவின னிராகவ நம்பி

---

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பண்டிதராயிருந்த

திருவாவடுதுறைப் பொன்னோதுவாரவர்கள்

பாடியன.

1. பாரி புகழ்ச்சரிதம் பாவலர்கள் பார்த்துணரப்
பாரிவெண் பாநூற் பகர்ந்தனனாற்—பாரிதனின்
மேவறிவோர் கொண்டாடும் வேதியனி ராகவனா
னாவலரே றுவா னயந்து.

2. அண்ணா மலைப்பல் கலைக்கழகத் தான்றோர்கள்
பண்ணார்வெள் ளோசைசேர் பான்மையும்—எண்ணருஞ்
சொற்பொருளின் மாட்சிமையுந் தோய்பாரி நூலோர்க்கின்
றற்புதமுற் றுட்களித்தா ராய்ந்து.

---

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமாந்.

இ. எஸ். வரதராஜய்யர், B. A., அவர்கள் பாடியன.

1. காசிபன் றாய கவிசே கரன்முகவை
வாசி யிராகவன்வேள் வண்பாரி—மாசரிதஞ்
சொன்னனன் ணாமலைப்பேர்த் தோன்றலதை யேற்
[றுயர்ந்தான்
பொன்னா ணயங்கள் பொழிந்து.

2. புலத்துற்றுச் செய்ய பொருடங் தகன்ற
நிலத்தணியாய் நன்னர் நிகழ்ந்து—மெலத்தவழும்
பொன்னிநதி யொக்கும் புலமா நிராகவனார்
பன்னுதமிழ்ப் பாரிவேள் பாட்டு.

3. நீதி யறங்க ணிலவுமணிப் பேழையோ
கோதில் கவிநயத்தின் கொள்கலமோ—ஓதுகலை
மாதி னரங்கோ மதிமா னிராகவன்சொல்
தீதில்வேள் பாரி திறம்.

4. கற்பாரு முல்லைக்குக் கடவுதே ரீத்துயர்ந்த
கைவண் பாரி
பொற்பாரும் புகழ்ச்சரிதை யிராகவப்பேர்ப் பூசுரனார்
புகன்றார் தூய
வற்பாரு முளமகிழ வருநிதிய மளித்தேற்று னறிஞ
ரெல்லாந்
தற்பாட னின்றொளிருந் தனபதியண் ணாமலைவண்
டமிழ்க்கோ மானே.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமாந்
பண்டித. லே. ப. கரு. இராமநாதன் செட்டியார்
அவர்கள் பாடியன

1. சீராரு முகவைநகர் சிறப்பவவ
தரித்தசெம்மல் சேது வேந்தர்
பேராரு மவைப்புலவன் வண்டமிழின்
பெருமையெலாம் பெருக வாய்ந்தோன்
ஏராரு மிராகவனல் லிசைப்புலவர்
திலகனுல கேத்து மேந்தல்
பாராரு மாங்கிலமும் வடகலையும்
பயின்றவன்மால் பதத்தன் பார்ந்தோன்.

2. தொக்கசங்க நூல்களொடு பிறநூலுந்
துரிசறவே துருவி யாய்ந்து
மிக்ககொடைப் புகழ்ப்பாரி காதையெனுஞ்
சுவைததும்பி மிளிரு நூலைத்
தக்கமுதற் பாவிலமைத் தரும்பொருளின்
குறிப்புரையுஞ் சமைத்துத் தந்தே
இக்கடல்சூழ் புவிப்புலவ ரெல்லோர்க்கு
மமுதமளித் திசைபெற் றனே.

3. இன்னகொடைப் பெருநூலை யியலிசைதேர்ந்
தார்க்களிக்கும் வள்ள லெங்கள்
மன்னனண்ணா மலைச்செல்வற் குரித்தாக்கி
னைவனு மகிழ்கூர்ந் தேற்றே
நன்னயமோ டிரும்பெரிய பொற்பரிசில்
நல்கினனிவ் விருநல் லோர்க்கு
மெந்நலமு மிகவோங்கி யினிதூழி
யூழியெலா மியைக வாழ்வே.

பாரிகாதை

# மேற்கோள் நூற்குறிப்பு

## அகராதி.

---

அகத்—அகத்திணையியல்
அகம், அகப்பாட்டு—அகநானூறு
அசதிக்—அசதிக்கோவை
அமாத்தியர்—அமாத்தியரொடுங்கியது
ஆசாரக்—ஆசாரக்கோவை
ஆசிரிய—ஆசிரியமாலை
ஆபுத்திரன்—ஆபுத்திரன்திற மறிவித்த காதை
ஆரணிய—ஆரணிய காண்டம்
ஆற்று—ஆற்றுப்படலம்
இசைநுணுக்கம்—இசைநுணுக்கம்
இராமநாட—இராமநாடகம்
இலாவாண—இலாவாணகாண்டம்
இளம்—இளம்பூரணர் உரை
இறையனர்—இறையனாரகப்பொருள்
இன்னா—இன்னா நாற்பது
உயிர்மயங்—உயிர்மயங்கியல்
உரி—உரியியல்
உவம—உவமவியல்
எச்ச—எச்சவியல்
எழுத்—எழுத்ததிகாரம்
ஐங்குறு—ஐங்குறுநூறு
ஐந்திணை—ஐந்திணையைம்பது
ஔவைபாடல்—ஔவைபாடல்
கந்தபு—கந்தபுராணம்
கம்பரா—கம்பராமாயணம்
கல்லாடம்—கல்லாடம்
கலி—கலித்தொகை
கலிங்—கலிங்கத்துப்பரணி
களவியல்—களவியல்
கற்பியல்—கற்பியல்
குகப்—குகப்படலம்
குறள்—திருக்குறள்
குறிஞ்சி—குறிஞ்சிக்கலி
குறுந்—குறுந்தொகை
சடாயுகாண்—சடாயுகாண்படலம்
சமயதிவாகர விருத்தி
சரசுவதி—சரசுவதியந்தாதி
சாகுந்தலம்—சாகுந்தலம்
சாங்கியத்தாய்—சாங்கியத்தாயுரை
சிந், சிந்தா—சிந்தாமணி
சிலப்—சிலப்பதிகாரம்
சிறியதிருமடல்—சிறியதிருமடல்
சிறுபஞ்ச—சிறுபஞ்சமூலம்
சிறுபாண்—சிறுபாணாற்றுப்படை
செய்—செய்யுளியல்
சே—சேனாவரையம்
சொல்—சொல்லதிகாரம்
தக்கயாக—தக்கயாகப்பரணி
தண்டி—தண்டியலங்காரம்
தனிப்பா—தனிப்பாடற்றிரட்டு
தாடகை வதை—தாடகைவதைப்படலம்
தான—தானப்படலம்
திணை—ஐம்பது—திணைமாலை நூற்றைம்பது
திரிகடு—திரிகடுகம்
திருக்கோவை—திருக்கோவையார்
திருச்சந்த—திருச்சந்தவிருத்தம்
திருத்-திருவந்—திருத்தொண்டர் திருவந்தாதி
திருநூற்—திருநூற்றந்தாதி
திருநெடுந்—திருநெடுந்தாண்டகம்
திருப்பு—திருப்புகழ்

திருமந்திரம்—திருமந்திரம்
திருவடிசூட்டு—திருவடிசூட்டு
[ட்டலம்
திருவாச—திருவாசகம்
திருவாய்—திருவாய்மொழி
திவ்ய—திவ்யப்ரபந்தம்
திவாகரம்—திவாகரம்
தேவா—தேவாரம்
தேவிக்கு—தேவிக்குவிலாவித்தது
தொகை—தொகைமரபு
தொல்—தொல்காப்பியம்
நச்—நச்சிஞர்க்கினியர்
நவநீத—நவநீதப்பாட்டியல்
நளவெண்—நளவெண்பா
நற்—நற்றிணை
நாச்சியார்—நாச்சியார் திருமொழி
நாட்டு—நாட்டுப்படலம்
நாலடி—நாலடியார்
நான்மணி—நான்மணிக்கடிகை
நீதிநெறி—நீதிநெறிவிளக்கம்
நீர்ப்படைக்காதை
நீலகேசி—நீலகேசித்தெருட்டு
நெடுநல்—நெடுநல்வாடை
பக்—பக்கம்
பட்டினப்—பட்டினப்பாலை
பதிற், பதிற்று—பதிற்றுப்பத்து
பதுமாபதி—பதுமாபதிவதுவை
பரிபாடல்—பரிபாடல்
பழ—பழமொழி
பாடாண்—பாடாண்படலம்
பாண்டிக்—பாண்டிக்கோவை
பாண்டிமண்டல—பாண்டிமண்டல
[சதகம்
பாலைக்—பாலைக்கலி

புலியெழுபது—புலியெழுபது
பு. வெ. மா—புறப்பொருள்
[வெண்பாமாலை
புறத்திரட்டு
புறம், புறப்பாட்டு—புறநானூறு
பெரியதிருமொழி—பெரிய திரு
[மொழி
பெருங்—பெருங்கதை
பெரும்பாண்—பெரும்பாணாற்றுப்
[படை
பேரா—பேராசிரியர் உரை
பொருநரா, பொருநாறு—பொரு
[நராற்றுப்படை
பொருள்—பொருளதிகாரம்
மகத—மகதகாண்டம்
மணி—மணிமேகலை
மதுரைக்—மதுரைக்காஞ்சி
மந்திர—மந்திரப்படலம்
மர—மரபியல்
மலைபடு—மலைபடுகடாம்
மனையறம்—மனையறம்படுத்தகாதை
முத்தி—முத்தியிலம்பகம்
முருகாறு—திருமுருகாற்றுப்படை
மெய், மெய்ப்பாட்—மெய்ப்பாட்டியல்
மேருமந்தர—மேருமந்தர புராணம்
யாப்—வி—யாப்பருங்கலவிருத்தி
வஞ்சினம்—வஞ்சினமுரைத்த
வாகை—வாகைப்படலம் [காதை
விம, விமலை—விமலையாரிலம்பகம்
வீரசோழியம்—வீரசோழியம்
வெண்பா—புறப்பொருள் வெண்பா
[மாலை
ஸ்ரீகீதை, கீதைப்பாட்டு—பகவற்
கீதை

# பாரிகாதை

## செய்யுள் முதற்குறிப்பகராதி

எண்—செய்யுளெண்.


| | | |
|---|---|---|
| அஃகாவருளி | ... | 57 |
| அகடூர் பசிப்பகை | ... | 232 |
| அகத்தான் வேள் | ... | 228 |
| அகத்திற் றெருள் | ... | 108 |
| அங்கவையா | ... | 748 |
| அசும்பின் வய | ... | 241 |
| அட்டிலடுப்பி | ... | 340 |
| அடகன்றியாது | ... | 598 |
| அடிபற்றலன்றி | ... | 385 |
| அடிவேராய்ப் | ... | 44 |
| அடைமதிற்பட் | ... | 380 |
| அண்ணறயரதஞ | ... | 209 |
| அத்தாவோ | ... | 474 |
| அதிகன் வழியெழினிக் | ... | 701 |
| அதிய னளித்த | ... | 602 |
| அதுபேறடையா | ... | 494 |
| அந்தணராசி | ... | 722 |
| அந்தணரையேத்தி | ... | 716 |
| அந்தண னேற்பே | ... | 550 |
| அந்தணீர் சான்றீ | ... | 653 |
| அம்மி மிதிப்பித் | ... | 721 |
| அம்மென்மகளிர் | ... | 636 |
| அமிழ்துடைய | ... | 181 |
| அரசர்க்கு மற்றை | ... | 195 |
| அரசர் மகளிர்க் | ... | 631 |
| அரசல்லது | ... | 200 |

| | | |
|---|---|---|
| அரசினசை | ... | 212 |
| அரியிருந்தவிறணை | ... | 132 |
| அருட்டேன் | ... | 127 |
| அருத்துன்னரசை | ... | 135 |
| அருவியொரு | ... | 533 |
| அருளின்மிகை | ... | 122 |
| அருளு மறமு | ... | 470 |
| அருளொன்று | ... | 331 |
| அவ்வியமென்னு | ... | 375 |
| அவ்வில்லறம் | ... | 208 |
| அவனுமுடிவேந்தற் | ... | 560 |
| அழிபொண்ணை | ... | 114 |
| அழுக்காறு | ... | 359 |
| அழுதலயர்த | ... | 444 |
| அளந்துபல்கோடி | ... | 561 |
| அற்பகலாக்கு | ... | 14 |
| அற்றைமுதலா | ... | 162 |
| அறங்கெடுக்கு | ... | 360 |
| அறத்துக்கு | ... | 490 |
| அறம்பகர | ... | 269 |
| அறம்பழித்து | ... | 515 |
| அறலினேரைம்பா | ... | 96 |
| அறனன்றிவேறொன் | ... | 325 |
| அறிவறிந்த | ... | 493 |
| அறிவார்தெரிவையர் | ... | 182 |
| அறிவுபாழ் | ... | 172 |
| அறிவோர்முற் | ... | 190 |
| அன்பருத்தி | ... | 661 |
| அன்பித்தா | ... | 458 |
| அன்பென்னும் | ... | 744 |
| அன்போடறுசுவைய | ... | 277 |
| அன்னான்வழிவந் | ... | 555 |

| | | |
|---|---|---|
| ஆடினார்பெண்ணை | ... | 669 |
| ஆண்டுள்ள | ... | 532 |
| ஆத்தவறிவி | ... | 115 |
| ஆதலடக்கி | ... | 235 |
| ஆயன்பதியி | ... | 734 |
| ஆயும்புலவோர்க்கு | ... | 616 |
| ஆயும்விறல்வே | ... | 389 |
| ஆர்த்தகொழுநற் | ... | 480 |
| ஆராய்ந்த கேள்வி | ... | 119 |
| ஆரியமன்ன | ... | 111 |
| ஆளவெணக்கே | ... | 130 |
| ஆளுடையநம்பி | ... | 753 |
| ஆற்றலுடையார்க் | ... | 128 |
| இகலுமரச | ... | 187 |
| இசைசெய்த | ... | 664 |
| இடையூறிலாம | ... | 691 |
| இத்தருணம் | ... | 352 |
| இதனிடையி | ... | 709 |
| இந்நிலையிற் | ... | 637 |
| இம்மைப்பிறப்பின் | ... | 425 |
| இமிழ்வாரிதி | ... | 173 |
| இரந்தாருயிர் | ... | 143 |
| இரப்பார் பலராகி | ... | 12 |
| இரப்பேனென | ... | 574 |
| இருசுடரோ நீரோ | ... | 617 |
| இருடருபா | ... | 38 |
| இருவருயிரொன் | ... | 56 |
| இருவருளத்து | ... | 205 |
| இல்லையெனும | ... | 422 |
| இல்லோன்பெருஞ் | ... | 305 |
| இலகுவேள்பாரி | ... | 655 |
| இவ்வண்ணம் | ... | 391 |

| | | |
|---|---|---|
| இவ்வளவு கண்ணிஞ | ... | 248 |
| இவ்வளவுகண்ணிஞளென் | ... | 249 |
| இவர்தந்தைதோழ | ... | 559 |
| இவர்பாரிபெற்ற | ... | 547 |
| இளைத்தகுடியெடுக்க | ... | 678 |
| இளைத்தகுடியை | ... | 634 |
| இற்றைக்கேயாக | ... | 418 |
| இறந்ததற்கேங்கி | ... | 606 |
| இன்பாற்கரஞ | ... | 10 |
| இன்பேசிறைந்த | ... | 287 |
| இன்முகங்காணுமோ | ... | 542 |
| இன்றண்பறம் பாட்சிக் | ... | 141 |
| இன்னசொலக் | ... | 630 |
| இன்னலறிந்தா | ... | 85 |
| இன்னவண | ... | 714 |
| இன்னவுரைக | ... | 238 |
| இன்ஞவிவை | ... | 110 |
| இன்ஞனிருப்பே | ... | 370 |
| ஈகைநிரம்ப | ... | 145 |
| ஈடிலவதானி | ... | 9 |
| ஈதலறந் | ... | 732 |
| ஈது தெரிந்த | ... | 423 |
| ஈது நிகழ் | ... | 347 |
| ஈது புரியா | ... | 339 |
| ஈதெல்லாந் | ... | 210 |
| ஈதோ புலவ | ... | 273 |
| ஈதோ வருளிற் | ... | 272 |
| ஈவாரைக் | ... | 29 |
| உடல் புல்லு | ... | 126 |
| உடுத்த துகிலு | ... | 588 |
| உடுவே மதியி | ... | 372 |
| உண்டிப் பொருட்டாக | ... | 329 |

| | | |
|---|---|---|
| உண்ணாவயிற்றோ | . | 593 |
| உண்ணுவார்க் | ... | 40 |
| உம்மினிய | ... | 500 |
| உயர்ந்தபா | ... | 658 |
| உயிர்த்துணை | ... | 148 |
| உருகிப்பராய | ... | 89 |
| உலகத்துயர்ந்தோ | ... | 262 |
| உலகுதுயிலெடுப்ப | ... | 438 |
| உலையாக்கபிலணொடு | ... | 293 |
| உள்ளம் வலித்தா | ... | 468 |
| உள்ளம் வியந்த | ... | 728 |
| உள்ளமிருள்பட் | ... | 171 |
| உள்ளிருத்தி | ... | 239 |
| உற்றார்செவிக்கண் | ... | 175 |
| உற்றாரிருவ | ... | 206 |
| உற்றாரொருகோடி | ... | 704 |
| உன்னைப்பிரிந்து | ... | 659 |
| ஊதுலை போல | ... | 592 |
| ஊரின் விழா | ... | 632 |
| ஊருணியுங் | ... | 45 |
| ஊரெல்லாங் | ... | 322 |
| ஊன் பருகு | ... | 160 |
| எங்குப்புகுந்தாலு | ... | 461 |
| எண்ணாண் மதி | ... | 537 |
| எதிர் கொடிறற் | ... | 124 |
| எம்மைப்பிரிய | ... | 476 |
| எல்லாந்தெரிந் | ... | 609 |
| எல்லா நலனுமியை | ... | 185 |
| எல்லா நலனுமினிது | ... | 170 |
| எல்லார்க்குமேலா | ... | 498 |
| எல்லா முயர்ந்தன | ... | 565 |
| எவ்வி குடியி | ... | 562 |

| | | |
|---|---|---|
| எவ்வெவ்வுலகத்தில் | ... | 745 |
| எழுத்துமொழி | ... | 2 |
| எற் கொண்டு | ... | 426 |
| என்பு குளிர | ... | 599 |
| என்புவியோ | ... | 364 |
| என்மக்கடம்மோ | ... | 197 |
| என் மக்கள் வாழ்விற் | ... | 629 |
| என் வாய்ப்பிறந்த | ... | 456 |
| என்ற கவிகேட் | ... | 596 |
| என்ற பொழுதத் | ... | 711 |
| என்ற பொழுதி | ... | 694 |
| என்ற வரைப் | ... | 618 |
| என்ற வளவி | ... | 726 |
| என்றிசைக்கக் | ... | 735 |
| என்று கபில | ... | 154 |
| என்று கபிலற் | ... | 615 |
| என்று கபிலனியம்ப | ... | 146 |
| என்று செவிக் | ... | 274 |
| என்று சொல்க் | ... | 553 |
| என்று தழலே | ... | 665 |
| என்று தனதுள்ளத் | ... | 601 |
| என்று தனைநொந்தியற்றும் | ... | 455 |
| என்று தனைநொந்திரங்கிக் | ... | 473 |
| என்று நினக்கீத் | ... | 139 |
| என்று பலவா | ... | 575 |
| என்று பறம்பை | ... | 529 |
| என்றும் பயின்ற | ... | 522 |
| என்று மகளி | ... | 747 |
| என்று மலேய | ... | 622 |
| என்று மொழி | ... | 729 |
| என்றுரைத்துத் | ... | 652 |
| என்றுள்ளிச் | ... | 291 |
| என்றே பலவா | ... | 219 |

| | | |
|---|---|---|
| என்றௌவை | ... | 689 |
| என்ன குறையு | ... | 459 |
| என்னப் பலவா | ... | 97 |
| என்ன வலித்தா | ... | 640 |
| என்ன வெழுதுவித்தா | ... | 699 |
| என்னானியல்வதனை | ... | 417 |
| என்னிற் பதினா | ... | 646 |
| என்னினிய | ... | 7 |
| என்னு நினைக்கித் | ... | 139 |
| என்னைத் தனிநீத் | ... | 457 |
| என்னைத் தனின்வே | ... | 656 |
| என்னைப் பிரிய | ... | 301 |
| என்னைப் புரக்கு | ... | 237 |
| என்னை புரிந்தனை | ... | 319 |
| என்னை மறக்கு | ... | 299 |
| என்னொழிய | ... | 420 |
| எனச் செல்வக் | ... | 580 |
| என மாக்கபில | ... | 551 |
| என மூன்றுமௌவை | ... | 257 |
| எனவந்தணா | ... | 569 |
| எனவோது | ... | 733 |
| எது தெரியே | ... | 447 |
| ஏரார்தாய் | ... | 750 |
| ஏரார்முழாப் | ... | 573 |
| ஏவற் பெண் | ... | 343 |
| ஏவினானல்லா | ... | 453 |
| ஏற்றார்க்களித்தே | ... | 421 |
| ஏற்றார் கருத்திற் | ... | 47 |
| ஏறும் புலவ | ... | 34 |
| ஐந்துகுலனா | ... | 671 |
| ஐய மிடுமி | ... | 250 |
| ஐயோ வென் | ... | 454 |

| | | |
|---|---|---|
| ஒத்த வுயிர்மீ | ... | 508 |
| ஒத்துக்கலந்த | ... | 463 |
| ஒருகாலுணவு | ... | 323 |
| ஒருகை | ... | 693 |
| ஒரு மாய வண்ண | ... | 576 |
| ஒல்லை வருகென் றுரைத்த | ... | 289 |
| ஒல்லை வருகென் றுரைத்தாற்கு | ... | 303 |
| ஒற்கத்துயிர்த் | ... | 354 |
| ஒன்றாகக் | ... | 743 |
| ஒன்றுபுரிந் | ... | 739 |
| ஓங்கலாற்காத | ... | 25 |
| ஔவைக்ககம் | ... | 651 |
| ஔவை தனி | ... | 311 |
| ஔவை நனி | ... | 604 |
| ஔவைப்பெருந் | ... | 17 |
| ஔவை படைத்த | ... | 730 |
| ஔவை யகல | ... | 356 |
| ஔவையெதிர் | ... | 282 |
| கடுவன் பலவின் | ... | 545 |
| கண்கொண் | ... | 224 |
| கண்டாலுடல் | ... | 41 |
| கண்ணுக | ... | 478 |
| கரந்து படுத்த | ... | 510 |
| கரப்பே | ... | 6 |
| கருணையாலிந்தக் | ... | 725 |
| கல்லானஞ்சேனை | ... | 408 |
| கல்விடியை | ... | 402 |
| கல்லுக்குத் | ... | 411 |
| கல்வித் தனித் | ... | 167 |
| கல்வித்திறனுங் | ... | 286 |
| கல்விநலங் | ... | 201 |
| கல்விப் பைங்கூழ்க்குக் | ... | 94 |

| | | |
|---|---|---|
| கல்விமணங் | ... | 294 |
| கல்வியொடு | ... | 161 |
| கலந்தபெருங் | ... | 424 |
| கலியின் | ... | 327 |
| கலைமான் | ... | 65 |
| கவிகாத்த | ... | 147 |
| களியாமயிலாலக் | ... | 50 |
| களிற்று முகத்துக் | ... | 692 |
| களிறில்லாப் | ... | 543 |
| கற்பினடையாள் | ... | 74 |
| கற்ற திருமகளிர் | ... | 742 |
| கற்ற பயனுக் | ... | 253 |
| கற்ற புலவர் | ... | 191 |
| கற்றமுதுக் | ... | 738 |
| கற்றூர்க்கு வாயிற் | ... | 525 |
| கற்றூர் தலைவன் | ... | 164 |
| கற்றுரைப் பெற்ற | ... | 292 |
| கறங்கு யிசைப் | ... | 264 |
| கறையொன் | ... | 183 |
| கன்றிற் பிரியாக் | ... | 156 |
| கன்றினரோடு | ... | 539 |
| கன்னனெனச் | ... | 159 |
| கன்னியருக் | ... | 563 |
| காட்டின்வளர் | ... | 66 |
| காடுகமழுங் | ... | 70 |
| காண்டலே | ... | 304 |
| காதறதும்பக் | ... | 544 |
| காய்ந்த வுலையிற் | ... | 345 |
| காரி மகாரோடு | ... | 723 |
| காரி யுவர் | ... | 737 |
| காரி வழிமுறை | ... | 645 |
| காரீத்த | ... | 91 |

| | | |
|---|---|---|
| காரைப் பிணித்துக் | ... | 225 |
| காலமலாமலுங் | ... | 535 |
| காலான் வருத்தனைய | ... | 67 |
| காவார் கொடைப் | ... | 317 |
| காழ்க்குத்தி | ... | 51 |
| காற்குமிருசுடர்க்குங் | ... | 641 |
| கானநெறியிற் | ... | 318 |
| கிழவன் கிழத்தி | ... | 213 |
| குடியுயர்பான் | ... | 271 |
| குடிவருத்த | ... | 86 |
| குரிசின்மகப் | ... | 236 |
| குரீஇச்சென் | ... | 84 |
| குலங் கருதார் | ... | 564 |
| குலத்தாற் | ... | 614 |
| குளிர் சாந்து | ... | 5 |
| கூற்றினுயிர் | ... | 413 |
| கேட்ட வணிகன் | ... | 342 |
| கேடில் விழுச் | ... | 53 |
| கேள்பாரில் | ... | 133 |
| கைதிறந்துமூடிக் | ... | 247 |
| கைப்பிடித்த | ... | 196 |
| கையோ வயிறோ | ... | 404 |
| கைவீழ்ந்து | ... | 125 |
| கொங்கினடந்து | ... | 242 |
| கொடிகாலெறியக் | .. | 69 |
| கொடிமுல்லைப் | .. | 78 |
| கொடியேந்தத் | ... | 88 |
| கொடுத்து வளர்ந்த | ... | 688 |
| கொடைநல்க | ... | 308 |
| கொடை நிரைத்த | ... | 383 |
| கொடை பயின்றே | ... | 528 |
| கொடை பெற்ற | ... | 589 |
| கொடையறமே | ... | 285 |

| | | |
|---|---|---|
| கொம்பர் பல | ... | 79 |
| கொல்லைப்புறத்துக | ... | 597 |
| கொற்றத்தாற் | ... | 376 |
| கோடி மதியா தார் | ... | 259 |
| கோடை யரிய | ... | 20 |
| கோமாற | ... | 266 |
| கோமுற்றந் | ... | 155 |
| கோனுமுடியுங் | ... | 367 |
| கோவலளவோ | ... | 674 |
| கோவலாள் காரி | ... | 567 |
| கோவிற்குச் | ... | 194 |
| கோவேந்த | ... | 275 |
| கோழிரண் | ... | 531 |
| சங்கப் புலவர் | ... | 368 |
| சங்கவையா | ... | 749 |
| சாத வெளிதே | ... | 467 |
| சாதுவன் | ... | 414 |
| சாய்ப்புண்ட | ... | 405 |
| சார்பு பெறுது | ... | 77 |
| சால்புடையரர் | ... | 19 |
| சாவாமற் | ... | 334 |
| சில்காத துரஞ் | ... | 244 |
| சில் லோசனே | ... | 268 |
| சிறிதாழியங்கித் | ... | 312 |
| சிறிதுந் தவிரத் | ... | 587 |
| சின்னத்துணி | ... | 594 |
| சின்னுளி | ... | 353 |
| சின்னீர் பருகற்குச் | ... | 133 |
| சீரானளந்தழியாச் | ... | 24 |
| சீரிய கூரிய | ... | 357 |
| சுனைநன்குவளை | ... | 113 |
| சுனையுண்டு | ... | 393 |
| சூழ்ந்த கபிலன் | ... | 586 |

| | | |
|---|---|---|
| செந்நாப்புலவர் | ... | 112 |
| செப்பிட்டபூவிற் | ... | 489 |
| செய்யாத பாடாச் | ... | 450 |
| செய்வன செய்தேன் | ... | 644 |
| செல்வக்கடுங்கோத் | ... | 584 |
| செல்வத்துட் | ... | 752 |
| செவ்விய சீர் | ... | 361 |
| செழியாத்தழைகான் | ... | 61 |
| சென்றுழுதுண்பதற்குச் | ... | 255 |
| சென்னியொடும் | ... | 548 |
| சேதுபதியுந் | ... | 751 |
| சேரலர் கோன் | ... | 696 |
| சோலை நெறி | ... | 151 |
| சோழவளநாடன் | ... | 718 |
| சோறு சமைத்துத் | ... | 346 |
| தண்டாமலீவது | ... | 254 |
| தண்ணம் பறம்பே | ... | 540 |
| தண்பறம்பினோர்சார் | ... | 59 |
| தண்பறம்பு நாட்டுத் | ... | 394 |
| தந்தாமுடையகத்துச் | ... | 100 |
| தந்தைவினைத்த | ... | 174 |
| தந்தையருமையெனைத் | ... | 534 |
| தந்தையாய்த் | ... | 746 |
| தந்தையிடைக் | ... | 168 |
| தமஞ்சூழிரும்புடைத் | ... | 49 |
| தமிழுண்டோ | ... | 460 |
| தருணமதியனைய | ... | 284 |
| தரை பெற்ற | .. | 1 |
| தலையாய | ... | 516 |
| தலையானே | ... | 76 |
| தள்ளாத | ... | 313 |
| தள்ளா விளையுட்டாய்த் | ... | 18 |
| தளர்ந்த பெருங் குடிக்குத் | ... | 627 |

| | | |
|---|---|---|
| தளர்ந்தேயுயிர் கொண்டு | ... | 407 |
| தன் குரவர் | ... | 8 |
| தன்படிகால் | ... | 429 |
| தன்பாலன்பாய | ... | 198 |
| தன்னடைந்த | ... | 351 |
| தன்னது துன்பத் | ... | 469 |
| தன்னிரந்தார் | ... | 53 |
| தன்னே ரிலாச்செங் | ... | 189 |
| தன்னை யதிகனுத் | ... | 223 |
| தனக்காவளர்த்தமாஅத் | ... | 554 |
| தாய்கைப் | ... | 144 |
| தாயத்தார் | ... | 708 |
| தாலிகொடுத்துத் | ... | 355 |
| தாழ்த்துவன | ... | 358 |
| தான்செய் | ... | 702 |
| தானந்தணன் | ... | 670 |
| தானன்று | ... | 577 |
| தானுள்ளுழி | ... | 3 |
| திங்கட்குலத்திற் | ... | 188 |
| திடவுள்ளுணர்விற் | ... | 207 |
| திருவார்கலைபாற் | ... | 624 |
| திருவுற்ற தென்னன் | ... | 251 |
| திறையளக்குஞ் | ... | 363 |
| தீத்துரீஇச் | ... | 464 |
| தீந்தண்டமிழ் | ... | 265 |
| தீயகனவு | ... | 442 |
| தீயவிலங்கின் | ... | 410 |
| தீயிற் புகுதல் | ... | 466 |
| துக்கந்தரும்பலாற் | ... | 605 |
| துய்க்கும்பண் | .. | 214 |
| தூசிற்பொதிந்த | .. | 121 |
| தூதர் பறநாடு | ... | 179 |
| தூய கபிலன் | ... | 650 |

| | | |
|---|---|---|
| தாயநறுந்தடத்தைத் | ... | 378 |
| தாயாருளத்திற் | ... | 281 |
| தெய்வ மணவோலை | ... | 727 |
| தெய்வ மணமென்று | ... | 731 |
| தெருளுருக்கொண் | ... | 118 |
| தெவ்வராற் | ... | 83 |
| தெளிந்தகிளிக் | ... | 390 |
| தென்றிசையின் | ... | 536 |
| தென்னர் தமிழ் | ... | 31 |
| தென்னன் பகைத்த | ... | 229 |
| தென்னன் மணம் | ... | 603 |
| தேடிக் கிடையாத் | ... | 635 |
| தேடும் பொருட்குச் | ... | 579 |
| தேந்தண்டுளி | ... | 60 |
| தேர் பெற்ற | ... | 92 |
| தேர் பெற்று | ... | 23 |
| தேரூர்ந்திழை | ... | 104 |
| தேவர் கணத்துச் | ... | 435 |
| தேவி செயலுந் | ... | 349 |
| தொக்க வுயி | ... | 184 |
| தொடரிணையி | ... | 203 |
| தொழிற்குச் | ... | 348 |
| தொழுதகைய | ... | 11 |
| தோலாத | ... | 246 |
| நட்டகபிலன் | ... | 163 |
| நட்டதகைமையோ | ... | 666 |
| நடை பயிறன் | ... | 21 |
| நல்ல தமிழ் வழக்க | ... | 243 |
| நல்ல பறம்பு | ... | 276 |
| நல்லோனிருந்துழி | ... | 682 |
| நலங்கேடிரண்டுங் | ... | 71 |
| நன்று மலைநாடு | ... | 582 |
| நன்று மலைசூழ்ந்த | ... | 687 |

| | | |
|---|---|---|
| நன்றாற்றா | ... | 306 |
| நாட்டுத்தலைமை | ... | 369 |
| நாடுதரு | ... | 388 |
| நாடுவறங் | ... | 328 |
| நாளைப்பதினெட்டா | ... | 690 |
| நான்மாடக்கூட | ... | 245 |
| நிலத்துயர்பு | ... | 32 |
| நிலவு வரல் | ... | 280 |
| நிழல்போ லெழான் | ... | 527 |
| நின்பாலெஞ் | ... | 149 |
| நின்பாற்புக | ... | 152 |
| நின்பாற் புகுந்த | ... | 298 |
| நின்மக்கட் | ... | 685 |
| நின்மகன் | ... | 684 |
| நின்றானை | ... | 695 |
| நின்னற்குண | ... | 302 |
| நின்னுசையோ | ... | 279 |
| நின்னுயிரா | ... | 137 |
| நின்னைப்பிரியு | ... | 300 |
| நீடிவளைந்து | ... | 397 |
| நீர்மாயி | ... | 499 |
| நீரிவ்வுலகத்ததை | ... | 477 |
| நீழலிலா | ... | 538 |
| நீள நடந்து | ... | 87 |
| நுவலரு | ... | 13 |
| நெஞ்சவல | ... | 261 |
| நெஞ்சிற்றுப் | ... | 430 |
| நெய்யிடுவார் | ... | 648 |
| நெருநனிவ | ... | 278 |
| நேரே பரிசிலர் | ... | 452 |
| பகை விளைத்தேன் | ... | 481 |
| பசி நோய் | ... | 330 |
| படர் கொம் | ... | 68 |

| | | |
|---|---|---|
| படைக்கரியன் | … | 412 |
| படைக்கூறு | … | 432 |
| படைக்கொருவ | … | 365 |
| படைகொன்ற | … | 492 |
| படைமுரசுக் | … | 33 |
| படையானலாது | … | 129 |
| படையேற | … | 386 |
| பண்டாமறிவருளிற் | … | 736 |
| பரணரொடு | … | 107 |
| பருவத்தெழுந்த | … | 99 |
| பல்குகவென்று | … | 495 |
| பல்போது | … | 295 |
| பல்லார்விழை | … | 479 |
| பல்லாரறியாமற் | … | 509 |
| பல்லாருளமருளப் | … | 123 |
| பல்லாறு | … | 307 |
| பல்லிசையாழ்ப் | … | 98 |
| பல்லோருளராய | … | 234 |
| பலாஅம் பழுத்த | … | 571 |
| பழியானுறுகேன் | … | 142 |
| பழுமரங்கடேர்ந்து | … | 134 |
| பறம்படுத்த | … | 518 |
| பறம்பிற்சுனை | … | 326 |
| பறம்பிற்படை | … | 519 |
| பறம்பின் றிருக் | … | 590 |
| பறம்பு கவர்ந்தும் | … | 514 |
| பறம்பையடைத்த | … | 401 |
| பன்னாள் செல | … | 296 |
| பாட்டரையற் | … | 109 |
| பாட்டு முறையும் | … | 153 |
| பாடாததேனும் | … | 546 |
| பாடாத முல்லைப் | … | 95 |
| பாடிய பெண்ணையும் | … | 713 |

| | | |
|---|---|---|
| பாடினார் பாடல் | ... | 105 |
| பாண்டிமாதேவி | ... | 192 |
| பாண்டியர்தங் | ... | 180 |
| பார்த்தவள | ... | 270 |
| பாராண்முடி | ... | 541 |
| பாராளுமூவிர் | ... | 396 |
| பாரிக்கினியை | ... | 523 |
| பாரிக்குத் தென்னர் | ... | 374 |
| பாரிக்குத் தோட்டுணையாம் | ... | 445 |
| பாரிக்குமூவர் | ... | 406 |
| பாரி களப்பட்டா | ... | 433 |
| பாரி கொடைகண்டு | ... | 324 |
| பாரி கொடையைப் | ... | 82 |
| பாரி பகுத்தீத்த | ... | 649 |
| பாரி பழித்த | ... | 595 |
| பாரி பிரிவின் | ... | 686 |
| பாரி புகழோடு | ... | 165 |
| பாரி மகளிர்க்குப் | ... | 677 |
| பாரி மகளிர்பட | ... | 643 |
| பாரி மகளிர்பாற் | ... | 222 |
| பாரி மகளிரெனப் | ... | 169 |
| பாரி மகளிரைப் | ... | 583 |
| பாரி மகளிரைப் போய்ப் | ... | 740 |
| பாரி மகளிரையப் | ... | 570 |
| பாரி மகளிரொடு | ... | 715 |
| பாரி மொழிந்த | ... | 288 |
| பாரி யருட்கடல் | ... | 120 |
| பாரியாலௌவை | ... | 321 |
| பாரியானெங் | ... | 336 |
| பாரியிலாத பறம்பின் | ... | 333 |
| பாரி யிலாதபறம்போ | ... | 440 |
| பாரியிலாதுதனிப் | ... | 639 |
| பாரியிலாது படர்ந்தாலும் | ... | 703 |

| | | |
|---|---|---|
| பாரியுந்தாயு | ... | 610 |
| பாரியுள்வரைக்கும் | ... | 371 |
| பாரியுளனேற் | ... | 724 |
| பாரியைக்கண்டு | ... | 101 |
| பாரியைக் கொன்றபடு | ... | 449 |
| பாரியைக் கொன்றபழி | ... | 451 |
| பாரியைக் கொன்றபழிபாதகர் | ... | 504 |
| பாரியை நோக்கிப் | ... | 263 |
| பாரி வளர்த்த | ... | 611 |
| பாரி விசும்பிற் | ... | 448 |
| பாரிவேட்காணப் | ... | 240 |
| பாரிவேள்புக்க | ... | 487 |
| பாரினறிஞர் | ... | 166 |
| பாவலர்க்கு | ... | 230 |
| பாழிற் பொருவீர் | ... | 395 |
| பிறந்த நா | ... | 620 |
| பிறந்தாரிறக்கின்ற | ... | 491 |
| பிறநாட்டுப் | ... | 15 |
| புகழ்செய்தறங் | ... | 497 |
| புகழ்தறுகண் | ... | 366 |
| புகார்மன்னன் | ... | 698 |
| புட்டடப்ப | ... | 621 |
| புதுமடவா | ... | 193 |
| புல்லுணவா | ... | 4 |
| புலத்தானும் | ... | 37 |
| புலர்ந்த செழுஞ் | ... | 572 |
| புலவர்க்கிறைவன் | ... | 16 |
| புலவர் புரியும் | ... | 36 |
| புலனழுக்கற்ற | ... | 446 |
| புலனுழுதுண்மார் | ... | 613 |
| பூக்கோளறைந்த | ... | 399 |
| பூங்கமல | ... | 297 |
| பூசைக்கெளிவந்த | ... | 316 |

| | | |
|---|---|---|
| பூதம்பணி | ... | 712 |
| பூவலர்தேர் | ... | 217 |
| பூவுந்தழையும் | ... | 72 |
| பூவையளித்த | ... | 341 |
| பெட்டாங்களிக்கும் | ... | 530 |
| பெண்டேட | ... | 683 |
| பெண்ணென னுா | ... | 496 |
| பெண்ணொரு | .. | 638 |
| பெண்புறத்தார் | ... | 705 |
| பெருங்கபிலன்செய்கை | ... | 462 |
| பெருங்கபிலன் பீடும் | ... | 673 |
| பெருந்தமிழர்க் | ... | 150 |
| பெருமிதமோ | ... | 619 |
| பெற்றகுலவேள் | ... | 501 |
| பெற்றதன் | ... | 48 |
| பெற்றதாய் | ... | 202 |
| பெற்றதுகொண்டு | ... | 199 |
| பெற்றவுடலைப் | ... | 507 |
| பெற்றார் தலையரியப் | ... | 482 |
| பெற்றாரிலாத | ... | 475 |
| பெற்றாரிழந்த | ... | 465 |
| பெற்றோன் மகிழ் | ... | 131 |
| பேரரசரெம்மை | ... | 483 |
| பேருக்குநல்லார் | ... | 55 |
| பொய் பெய்திலாத | ... | 398 |
| பொய்யா நக்கீரன் | ... | 675 |
| பொருக்கென் | ... | 117 |
| பொருடன்ன | ... | 46 |
| பொருளொன்று | ... | 314 |
| பொற்பிற்கணி | ... | 54 |
| பொன்னஞ்சுடராய்ப் | ... | 443 |
| பொன்னந்துகிலிற் | ... | 633 |
| பொன்னில்லாச் | ... | 505 |
| பொன்னிற்சிறந்தது | ... | 578 |
| பொன்னுமணியும் | ... | 320 |

| | | |
|---|---|---|
| பொன்னைப்புவியைப் | ... | 415 |
| போக்குவரத்துப் | ... | 387 |
| போர்பாடுவொரும் | ... | 102 |
| போர்வீர | ... | 30 |
| போரிற் புகுந்து | ... | 409 |
| போற்றிநந்தந்தை | ... | 471 |
| மக்கள் வழங்கா | ... | 315 |
| மக்களுடம்பின் | ... | 75 |
| மகளிர் மணஞ் | ... | 211 |
| மகளீதல் . | ... | 373 |
| மட்டுக்கடங்கா | ... | 157 |
| மண்டேய | ... | 231 |
| மண்மகிழுந் | ... | 362 |
| மணம்பேசி | ... | 226 |
| மணமறுத்தல் | ... | 221 |
| மணவாளப் | ... | 741 |
| மணாளனுட | ... | 672 |
| மணிகிளரும் | ... | 585 |
| மணியில்கிழியை | ... | 512 |
| மதவாரணத்து | ... | 707 |
| மதுப்பெய் | ... | 267 |
| மந்திகவடழிய | ... | 63 |
| மருந்து மரத்தை | ... | 431 |
| மல்லன் மறையோர் | ... | 608 |
| மலைப்பட்டதார | ... | 526 |
| மழைபோல்வழங்கு | ... | 338 |
| மறம்புகன்ற | ... | 392 |
| மறுத்ததிறற் | ... | 503 |
| மறுத்தேனென | .. | 218 |
| மறையந்தணர் | .. | 566 |
| மறையோன்விதி | .. | 717 |
| மன்னரழுக் | ... | 626 |
| மனையகத்துப் | ... | 506 |
| மனையாளிருக்க | ... | 204 |
| மனைவியுடையான் | ... | 220 |

| | | |
|---|---|---|
| மனைவிற்க நீட்டிய | ... | 350 |
| மாப்புலவன் | ... | 676 |
| மாரிநினக்கீத்த | ... | 524 |
| மாரி மறந்து | ... | 332 |
| மாரியைக்கொல்ல | ... | 382 |
| மாரியொன் | ... | 43 |
| மாவிற்குயில்கூ | ... | 22 |
| மாவூர்வளவன் | ... | 612 |
| மாற்றூர்பொரு | ... | 441 |
| மானவிசும்பின் | ... | 81 |
| மிக்க கபிலனொடு | ... | 283 |
| மிக்கவலிகெழு | ... | 216 |
| மிகநலம்பெற்ற | ... | 488 |
| முடிமன்னர்வேட்க | ... | 549 |
| முடிவேந்தராய் | ... | 427 |
| முத்தங்கொழிக்கு | ... | 227 |
| முத்திவரும் | ... | 710 |
| முந்தைமதியின் | ... | 521 |
| முந்நூறூர் | ... | 116 |
| முல்லைபடர | ... | 80 |
| மூவர்க்கு | ... | 680 |
| மூவர்பகைக்கு | ... | 552 |
| மூவராணுகாத | ... | 416 |
| மூவுலகுந்தாய் | ... | 679 |
| மூவேந்தர்பொய்ம் | ... | 434 |
| மூவேந்தர் வெம்பகை | ... | 379 |
| மூன்று நிகள | ... | 252 |
| மேகவிதானக்கீழ் | ... | 26 |
| மேவுமறந் | ... | 186 |
| மையற்களிற்றடி | ... | 681 |
| மைவந்த | ... | 344 |
| மொழிநொந்தான் | ... | 485 |
| யாமும் வருகின்றே | ... | 484 |
| யாரிவரென்னி | ... | 558 |
| யாருமிரப்பி | ... | 472 |

| | | |
|---|---|---|
| யாரே னும் | ... | 663 |
| யான் றந்த | ... | 73 |
| யானந்தணன் | ... | 654 |
| யானையுருட்டி | ... | 403 |
| வஞ்சத்தை | ... | 513 |
| வடபான்முனி | ... | 557 |
| வண்பாரியென்னை | ... | 657 |
| வண்பாரியே | ... | 668 |
| வணங்குமியவுள் | ... | 309 |
| வதுவைநாள் | ... | 706 |
| வந்த விருந்தூட்டா | ... | 335 |
| வழக்குடையார் | ... | 256 |
| வழியெஞ்சி | ... | 517 |
| வள்ளிக்கிழங்கு | ... | 28 |
| வளர்த்தநில | ... | 64 |
| வளர்நெட்டிலை | ... | 106 |
| வளியானலையும் | ... | 93 |
| வற்கடந்தான் | ... | 337 |
| வழிதியான் | ... | 556 |
| வருந்தலையிற் | ... | 103 |
| வறுமை யொருத்தாது | ... | 642 |
| வாடாதவத்தாணி | ... | 136 |
| வாடுபயிர்க்கு | ... | 502 |
| வான்புக்கு | ... | 660 |
| வானமுழக்கின் | ... | 52 |
| வானுளார்க் | ... | 662 |
| வானேற | ... | 400 |
| விடியற்படை | ... | 511 |
| விடைகொள் | ... | 581 |
| விண்ணுமிடித்தது | ... | 428 |
| வில்லொன்று | ... | 439 |
| விலங்குங் | ... | 62 |
| விலைசெய்வை | ... | 419 |
| விழுக்கபில | ... | 42 |
| வினையறிந்தோ | ... | 176 |

| | | |
|---|---|---|
| வெய்தாய் | ... | 600 |
| வெய்யபறம்பின் | ... | 384 |
| வெயிலுலாய்த் | ... | 377 |
| வெல்பொறியார் | ... | 27 |
| வெள்வேலறவேள் | ... | 310 |
| வென்றூண்மறந் | ... | 381 |
| வென்றொடு | ... | 568 |
| வென்றியதியன் | ... | 290 |
| வேட்டுழி | ... | 215 |
| வேண்டாமை | ... | 140 |
| வேதியருய்த்த | ... | 720 |
| வேந்தர்கொடு | ... | 437 |
| வேந்தர் நெடும் | ... | 623 |
| வேந்தர்பகைக் | ... | 607 |
| வேந்தர் வியக்கும் | ... | [illegible]25 |
| வேந்தரழுக்காற்று | ... | [illegible]91 |
| வேந்தனகத்தே | ... | 178 |
| வேள்பாரிசெய்யும் | ... | 700 |
| வேள்பாற்படர | ... | 233 |
| வேள்பெற்ற மக்கள் | ... | 520 |
| வேள் வேந்தன் | ... | 628 |
| வேளிர் குடிக்கு | ... | 177 |
| வேளிர்குலக் | ... | 158 |
| வேளிர் குலத்து | ... | 667 |
| வையகமெல்லாம் | ... | 258 |
| வையங்கொடிக் | ... | 90 |
| வையத்திருள் | ... | 436 |
| வையமண | ... | 647 |
| வையமிழவடுப்ப | ... | 486 |
| வையைக்கோ | ... | 260 |
| வையைக்கோன் | ... | 719 |
| வையைத்துறைவன் | ... | 697 |

ஸ்ரீ

# பாரி காதை.

---

## 1. பாயிரத் திறம்.

### கடவுள் வாழ்த்து.

1. தரைபெற்ற பல்லுயிருந் தாங்கப் பகலோன்
கரவற் றிருள்சீத்துக் காட்டப்—பரவுதல்போல்
எல்லாம் புரக்கு மிறைவன் றிருவருட்கே
சொல்வே னெனைப்புரக்கச் சூழ்ந்து.

(இதன் பொருள்.)—தரைமகள் தான் பெற்ற பல்லுயிர்களையும் தாங்கவும், பகலைச்செய்பவனாகிய ஞாயிறு உலோவாது இருளைத் துடைத்துப் பல்பொருளையும் காட்டவும் ஒருவன் பரவ வேண்டுதல் போல, எல்லாவற்றையும் காப்பாற்றும் இறைவன் திருவருளுக்கே என்னைக் காப்பாற்றும் பொருட்டு ஒன்று சொல்லுதல் செய்வேன். எ-று.

தரை—நிலமகள்; பல்லுயிர்—உயர்திணை அஃறிணையாய பல்லுயிர்; தாங்க—ஏந்த; தரா—தரிப்பவள் என்னும் பொருட்டு; அவளைப்பல்லுயிரும் தாங்கப் பரவுதல் மிகை எ-று. பகலைச்செய்பவனை இருள் சீத்துப் பொருள்களைக் காட்டப் பரவுதலும் மிகையாதல் காண்க. அவ்வாறே எல்லாம் புரத்தலையே இயல்பாகவுள்ள இறைவன் திருவருட்கே என்னைச்சூழ்ந்து புரக்க ஒன்று சொல்லுதல் மிகையென்று கருதியதாம். பகலோன்றோற்றமே இருள்சீத்துக் காட்டலான் உலோவுதலே அவன்கண் இல்லாமை தெளியலாம். இருள் சீத்த அளவே பொருள்கள் காணப்படுதலாற் காட்டப் பரவுதல் வேண்டா எ-று. எல்லாம் என்றது அத்தரைமகள், பகலோன் முதலாக உலகும் வீடு மெனப்படும் எல்லாவற்றையு மென்க. எல்லாம் புரக்கும் இறை

---

* திறம்—கூறுபாடு; "முத்திறம்" மணிமேகலை.

வன் என்றது எல்லாவற்றையும் புரப்பதே இறைமைக்குரியது எனத் தெளிவித்தவாறும். நிக்கிரகமும் அனுக்கிரகமே யாதலான் இத னுண்மை யுணர்க. படைப்பதும் புரப்பதை முன்னிட்டுக் கொள்ளு தல் தேர்க. புரப்பதின்றேற் படைத்தல் வீணாதல் தெள்ளிது. இறைவன் எப்பொருளினும் தங்குவோன் என்ப: இறுத்தல்—தங்கு தல்; எப்பொருளினும் தங்குதலும் அவ்வப்பொருளைப் புரத்தற்கே என்ப. அன்னவனைத் தன்னைச்சூழ்ந்து புரக்கச்சொல்லுதல் பொருந் தாமை காண்க. அங்ஙனம் புரப்பது இறைவன் தனக்கொரு பயன் கருதி யன்று, திருவருளான் என்று தேற்றியவாறும். இறைவன் திருவருள்—இறைவன் செல்வமாகிய அருள்; இறைவற்கேயுரிய திரு மகள் வடிவாகிய அருள் எனினு மமையும். ஒருவன்வேண்டிச் சொல்லுதலில்லாமலே எல்லாம் புரக்கும் இறைவன் திருவருளுக்கே என்னைப் புரக்கச் சொல்வேன் என்க. எல்லாம் என்றவற்றுள் யானடங்காமை யுண்டோ? அவனருளுக்கே சொல்லுதலும் வேண்டு மோ? எனக்குறிப்பா னுணர்த்தியவாறும். ஏகாரம் தேற்றம்.

சூழ்தல்—நினைதல். தரைபெற்ற என்றதனாற் படைப்பும், பக லோன் இருள் சீத்து என்றதனால் அழிப்பும் கூறி, அவை புரிவா ரையும் புரப்பவன் இறைவனெனற்கு எல்லாம் புரக்குமெனப்பட தெனவறிக: "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட் கிறை யென்று வைக்கப் படும்" (குறள். 388) என்புழி மன்னவன் காப் பாற்றுதலான் இறையென்று திருவள்ளுவர் கொள்ளவைத்தல் காண்க. "ஞாயிறனையை நின்பகைவர்க்கு" (புறம். 59) எனவருத லான் ஞாயிற்றுக்கு அழித்தல் கூறிற்று. (1)

நாமகள்

2. எழுத்து மொழிநன்மெய் யின்பொருணெஞ் சின்பங்
கொழித்த வியலிசைகள் கொங்கை—விழுப்பான்
மதிநுட்ப மெம்மொய் வளர்த்தபெரு மக்க
ளதிநுட்ப நூல்கண் டவர்.

(இ-ள்.)—எழுத்து மொழி நன் மெய்—எழுத்து அவயவமும், மொழி அவயவியுமாகக் கொள்க; நன்மெய் என்றது ஞானவடிவு என்பது பற்றி. இன்பொருள் நெஞ்சு—அம்மொழியின் இனியபொ ருள் இவள் இதயம் எ-. இதயஞ் சொல்லால்வெளிப்படுதலின் சொற்கு அதுபொருளாயிற்று. இன்பம் கொழித்தல் இயலிசைகட்கும் கொங்கைக்கும் கொள்க. "சென்று செவியளக்குஞ் செம்மைவாய்ச் சிந்தையுள்ளே, நின்றளவி லின்ப நிறைப்பவற்று ளொன்று" என்ப

(தண்டி, 49, [உரை). தாய்முலை குழந்தைகட்கு இன்பங்கொழித்தல் கண்டுகொள்க. "தாய்முலை தழுவிய குழவிபோலவும்," (பட்டினப்பாலை) எனவருதலா னறியலாம். இயலும் இசையுமே இருகுயமாக நாமகள் உடையள் என்பது வடநூல்வழக்கு. தாய்முலை என்பதறியப் பால் கூறிற்று. விழுப்பால் என்றது ஞானப்பாலாதல் பற்றி. மதிநுட்பம்—நுட்பமதி; பின்மொழி நிலையல் என்பர் பரிமேலழகர் மதிநுட்பம் தெய்வம் தரவேண்டுமென்பது அவருரைநோக்கித்தெளிக. (குறள் 636). எம்மோய்—எம் அன்னை; மதிநுட்பமாகிய விழுப்பால் ஊட்டி வளர்த்த என்க. பெருமக்கள்—பெருமை மாந்தர்; பெருமை—செயற்கரிய செய்தற்றன்மை; இது மதி நுட்பமுடையார்க்கே யாவதறிந்திலிரு. அதிநுட்பநூல்—மிக்க பொருள் நுணுக்கங்களை யுடைய நூல்கள். கண்டவர் என்றது, நூல்செய்தாருடன் முன்னை நூல் உரை கண்டாரும் அடங்கவேண்டி. கலைமகள் பெருமக்கட்குப் பாலமுதளித்தல், "தண்டாரளமுலை வரைப்பா லமுதுதந் திங்கெனை வாழ்வித்த மாதிலே," எனக் கூத்தன் கவிச்சக்ரவர்த்தி பாடியதுகொண்டுதேறலாம். உலகிற்றாயர் பால்போலப் பூதவுடலளவன்றி எம்மோய் விழுப்பால் புகழுடம்புவளரக் காட்சியைப் பெருக்குதல் உணர்க. நூல் கண்டவர்பாற் புகழும் ஞானமு முண்மையறிக. நூல்கண்டவராதலாற் பெருமக்களாயின ரென்பாரை நோக்கி எம்மோய்வளர்த்த பெருமக்களாதலான் அதிநுட்ப நூல்கண்டவர் ஆயினர் என்று உணர்த்தியவாறும். நூல் எனப்படுவன சிலவேயாம்: அவற்றுள் நுட்பநூல் மிகச் சில, அவற்றுள் அதிநுட்பநூல் தவமிகச் சில என்று முத்திறப்படுத்து முதலிடைகடை தெரியவைத்தது காண்க. எம்மோய்மெய் மொழி, நெஞ்சு இன்பொருள், கொங்கை இவ்விசைகள், விழுப்பால் மதிநுட்பம், வளர்த்த பெருமக்கள் நூல் கண்டவர் எ-று. எம்மோய் என்றது இந்நூல் செய்வாரனும் மகவாகக் கருதியது குறித்தது. (மோய்—தாய். (2)

3. தானுள ளுழியெலலாந் தன்மாமி யெய்தப்பெய்
வானுள்ள தேன்ன வளர்பாரி—தேனுள்ள
காதைக் கவிநடைக்குக் காசில் வழிகாட்டு
மேதைக் கலையாட்டி மின்

(இ-ள்.)—தான் உள்ளுழி யெல்லாம்—கலையாட்டி தானுள்ள எல்லா விடத்தும். எல்லாம் என்றது மேற்பிறந்தார் கீழ்ப்பிறந்தா ரென்றது. கல்வியுள்ள எல்லாவிடத்தும்: திருமகள்புகப் பெய்யும் வான் இவ்வுலகிலுள்ள தென்று சொல்ல வளர்ந்த பாரி. இஃது இல்பொருளுவமை. (கலையாட்டம்) தன்மாமி—திருமகள். திருமகள் உள்

ளுழித் தான் புகாது தானுள்ளுழித் திருமகளாகிய மாமி புகும் வண்ணம் பெய்த உதவிகருதிக் கலையாட்டியாகிய மின் இப்பாரி காதையைச் சொல்லுஞ் செய்யுணடைக்கு இவ்விருள்ஞாலத்து நெறி காட்டும் என்க. பாரி தேனுள்ள காதை—வேள்பாரியின் தேன்போல் இனிமையையுடைய மெய்ச்சரிதை; 'சரிதம்.................தேனூற' (சிந். பதிகம். 1) என்றார் திருத்தக்கதேவரும். கவிநடை—செய்யுள் நடை; "பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர் பணித்த பத்தி, நாவரும் கிளவிச் செவ்விநடை" (இராமா, நாட. 64) என்றார் கம்பநாடர். காசில்வழி-குற்றமில்லாத நெறி: கவிநடைக்குக் காசு ஈரைங்குற்றம். தேனுள்ள காதையாதலிற் கவி நடையில் வைப் பலென்பது குறித்தவாறு. மேதைக்கலையாட்டி—ஞானக்கலைமகள். மின். என்றது அவள் கிலவெழு மேனியை நோக்கி; "கிலவெழு மேனி மின்னே" (சரசுவதியந்தாதி. 6.) என்ப. வளர் பாரி—வினைத்தொகை. மின், பாரிகாதைக்கவிநடைக்கு வழிகாட்டு மென்று இயைபு கூறியவாறும். மின் இருள்கீறி வானும்புவியும் காட்ட வல்லதாதலின் உருவகிக்கப்பட்டது. கலையாட்டியுள்ளுழிப்பாரி யீத்ததைப் புறப்பாட்டில், "சேயிழை பெறுகுவை............. பாரி வேள்பாற் பாடினை செலினே" (105), "ஆடினிர் பாடினிர் செலினே, நாடுங் குன்று மொருங்கீ யும்மே," (109), "கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே" (111) என வருதலானறிக. மாமி—கணவன் தாய்: "அம்மாமி" (சிலப். 26) (3)

வான் வாழ்த்து.

4. புல்லுணவா ஞன்பால் பொழிய வருளாள்வார்
நெல்லுணவா னின்முன நீர்பொழிய—நல்லுணர்வார்
பாரி பொழிந்த பயனூர் பெருங்கோடையின்
மாரி பொழிக மழை.

(இ-ள்.)—ஆன்கள் புல்லுணவின் மிகுதியாற் பால் பொழியவும், அருளாள்வார் நெல்லுணவின் மிகுதியால் இனிய தானநீரைப் பொழியவும் பாரி பொழிந்த பயனூர் பெருங்கொடைபோல மாரி மழை பொழிக எ-று. பறநாட்டினுள், ஆமா நெடுநிரை நன்புல்லார் தலும் கோல்செம்மையிற் சான்றோர் பல்குதலும் பெயல் பிழையாது பெய்தலும் "ஆமா நெடுநிரை நன்புல் லாரக், கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப், பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே" (புறம். 117) எனக் கபிலர்பாடுதலா னறியலாம்.

ஆன் பால்பொழிதற்கு வேண்டிய புல்லுணவும், அருளாள்வார் இனிய கொடைநீர் பொழிதற்கு வேண்டிய நெல்லுணவும், மழையை

இன்றியமையாதன வென்று குறித்தவாறு. பால் பொழிதலாற் வேள்வியும், தாணீர் பொழிதலாற் கொடையும் கருதப்பட்டன வேள்வி கொடை தவம் எனப்பட்ட கன்மங்கள் மூன்றில் முன்னை இரண்டும் ஈண்டுக் கூறி மேல்வரும் பாட்டிற் றவம் கூறுதல் காண்க தான நீர் பொழிதல், "கைபெய்தநீர் கடற்பரப்ப" (புறம். 362) என வருதலான் உணர்க. அருளாளவார் என்றது அவர் தானநீர் பொழ தற்கு அருள் ஆளுதலே காரணம் என்பது பற்றி. நல்லுணர்வு ஆ பாரி—உடம்பும் செல்வமும் நிலையா என்றும், புகழும் புண்ணியமுமே நிலைப்பன என்றும் தெளிதற்குரிய நல்ல தோர்ச்சி நிறைந்த பாரி கொடைக்கு இவ்வுணர்ச்சி இன்றியமையா தென்பது, "மருடீர்ந்து மயக்கொரீஇ...........ஆமிருந்த வடைநல்கிச், சோறு கொடுத்து' (புறம். 362) எனச் சான்றோர் கூறியதுகொண்டு தெரிக. பயனு பெருங்கொடையின் மாரி மழைபொழிக என்றது, மாரி கெடுப்பதுப் செய்யுமாதலின், அது புரியாது எடுப்பதே செய்யவேண்டி. "தெய்வ மழை" (திருக்கோவைக் கொளு) என்பவாதலாற் றெய்வத்தை யடுத்து வாழ்த்தலாயிற்று. மாரி மழை பொழிக என்றது அஃது இடியேற பொழிதலை விலக்கியது. கம்பநாடர், தாடகை யென்னும் கொடிய அரக்கியை "இடிக்கு மழை யன்னவள்" (தாடகைவதைப்படலம். 51) என்றதனுல் இதன் உண்மை யுணர்க. பாரி பெருங்கொடையை மாரிக்கு உவமை யாக்கியது, ஈண்டுலகம் புரத்தற் றன்மையால், இதனுல்,இம்மைப்பயன் கூறியது. (4)

நீத்தார் பெருமை.

5\. குளிர்சாந்து பூசிற் கொலைவாளிற் சீக்கிற்
களிகூர்தன் மாழ்குதல் காணு—தளிகூர்ந்
துறவிகட் கேல்லா முறுதியே தேற்றுந்
துறவிகட் கேயான் றேமும்பு.

(இ-ள்.)—குளிர்சாந்து—வினைத்தொகை. 'குளிர் சந்தம்' என்றார் கம்பநாடரும். பூசிற் களிகூர்தலும், சீக்கின் மாழ்குதலும், காணுதென்க. இதனுற் றுறவிகள் உலகின் ஒட்டாமையே யன்றி உடம்பின் ஒட்டாமை வதிதலும் காட்டியவாறு. சீத்தல்—தசை தசை யாகச் சீவுதல். கொலைவாள்—கொல்லற்கே சமைத்த வாள்.

"கற்படை போழினுங் கதுவாய் போகா
தெற்புடம் பறக்கு மியற்கைத் தாகிக்
கொற்புனைந் தியற்றிய கொலையமை கூர்வாள்"
என்றார் பெருங்கதையினும் (46, 87-9;)

கதிர் கொய்தல் முதலிய வினைக்கமைந்த வாள்களின் இது வேறு. காணாது—தாங் காணாமையே யன்றிப் பிறரும் காண்டற் கில்லாது: உறவிகட்கெல்லாம் அளிகூர்ந்து உறுதியே தேற்றுந் துறவிகட்கே என்க. உறவிகள்—உயிர்த் தொகைகள். எல்லாம் என்றது கொலை வாளிற்சித்தாரும் அடங்க. இதனுள் உற்றநோய் நோன்றலும், உயிர்க் குறுகண் செய்யாமையும் அடங்குதல் கண்டுகொள்க. ஏகாரம் துறவிய ரல்லாதார்க்குத் தொழும்பாதலை விலக்கியது. தொழும்பு—அடிமை. இவ்வாறொழுகி உறுதி தேற்றும் துறவியரைக் கூறியது, உலகு மறுமை யுணர்ந்து உய்தற்கு இன்றியமையாமைபற்றி. (5)

கொடையறன் வலியுறுத்தல்.

6. கரப்பே யறியார் கடற்புடவி யின்மெய்
யிருப்பே பிறர்க்கா வியைந்தார்—இரப்பார்க்கு
வண்மையா லின்னுயிரு மாற்றாப் பெருந்தகையார்
உண்மையா லுண்டிவ் வுலகு.

(இ-ள்.)—இது மேற்காட்டிய வேள்வி, கொடை, தவம் என்னும் மக்கட்கின்றியமையாக் கன்மங்கள் மூன்றினும்வைத்து நடுவின்ற கொடையறனையே இப்பாரி காதை வலியுறுத்துவது என்று குறித்தது. வேள்வி—தெய்வ வழிபாடு. இம்மூன்றும் ஒன்றை யொன்று இன்றி யமையாமை உய்த்துணர்ந்து கொள்க. கரப்பே அறியார்—கரத்தலை நெஞ்சினறியார்; "கரத்தல் கனவினும் தேற்றாதார்" (1054) என்றார் திருவள்ளுவனாரும். கடற்புடவி-கடல் சூழ்தலுடைய நிலம்; மெய் இருப்பே—தம் உடம்பொடு நிலைவதே; பிறர்க்கா—பிறர்க்கு உதவற்காக; இயைந்தார்—உடன்பட்டார். உதவற்கில்லையேன் மெய் துறப்பர் என்பது குறித்தது: "இன்மை யுரைத்தாற் கதுநிறைக்கலாற் றாக்காற் றன்மெய் துறப்பான்" (குறிஞ்சி. 7) எனக் கலியுள்ளும் கூறினர். இரப்பார்க்கு இன்னுயிரும் வண்மையான் மாற்றாப் பெருந் தகையார்-இரப்பவர்க்குத் தம் இன்னுயிரையும் இயல்பாய வள்ளன்மை யால் இல்லையென்று மறாது வழங்கும் பெருந்தக்கார்: உண்மையாச் இவ்வுலகு உண்டு என்க. இக் காதைத் தலைவனாகிய வேள்பா கண்ணே கரத்த லறியாமையும், அவன் பிறர்க்கா மெய்புடன் ..தலும், இரப்பார்க்கு உயிரும் மாற்றாது வழங்கியதும் இந் நூலுட் .. கொள்க. இப் பெருந்தகையோர் உளகாறும் உலகுண்டாய் ரில்லாதபோது இல்லையாதலைப் பாரி யுள்ளபோது பற நாடு, "வரு- தாயாணர்த்து" இனி, "நந்துங் கொல்லோ" (புறம். 120)எனக்கபிலர்

பாடுதல் கொண்டு உய்த்துணர்க. இங்ஙனம் நூற்கருத்திற்கியைய வைத்துப் பொதுவாக உலகிற்கு அறங் கூறுவது கவிகுசனம் என்பர் வடநூலார். (6)

பயந்தவாப பழிச்சல்

7. என்னினிய தந்தை யிராமா னுசனேரேன்
முன்னினிய வன்னைபது மாசனியா—ரேன்னவிவர்
தேன்செய்யு நற்பேர் தெரிய வுரைப்பதலால்
யான்செய்யுங் கைம்மா றிலை.

பயந்தவர்ப பழிச்சல்—பெற்றோரை யேத்தல்.

(இ-ள்.)—என் இனிய தந்தை—நினைத்தவளவே இனிமை செய்கின்ற என் தந்தை; மன்னினிய அன்னை—அவ்வாறே மிகவும் இனிமை செய்யும் தாய்; என்றது தந்தையார் இளமையிலே இறக்க, நற்றாயே எல்லாப்படியானுங் காத்தோம்பி இந்நூலாசிரியனைக் கற்றோர்குழுவிற் புகுவித்த அளவிலாப் பேரன்புகருதி யென்க. தேன்செய்யு நற்பேர்—சொல்லுந்தோறும் தேனின்சுவையை நாவிற்செய்யும் நல்ல திருப்பெயர்கள். தெரிய—உலகு தெரியும் வண்ணம். உரைப்பதல்லால்—பல்காலும் சொல்வதன்றி; எற்பயந்தார்க்கு யான் ஏற்றபெற்றியாற் செய்யும் கைம்மாறு வேறில்லை என்று இரங்கியவாறும். (7)

குலகுரவர் இளையவில்லியாரைப் பாடியது.

8 தன்குரவர் மேய்யைத் தணந்தா ரேனக்கனவா
னன்குணர்ந்து தன்மேய் நழுவியவன் —மன்பதை
ஏத்துங் குமாண்டே ரிளையவில்லி யாசிரியன் [யோர்
சாத்துங் கழலேன் றலை.

(இ-ள்.)—தன்குரவர்—தன் குருவாகிய இராமாநுச யதிவரர். இராமாநுசர் உடல் நீத்து வீடுபுக்கதைக் கனவிற்கண்டு இளையவில்லியார்க்கு உடம்பு நழுவிய செய்தி நயினாராச்சான்பிள்ளையாசிரியர் செய்த சரமோபாய நிட்டை என்னு நூலிற் கண்டது. ஆத்மஹத்தி ஆகாமைக்குத் தன்மெய் நழுவியவன் என்றது. இளையவில்லி 'பால தந்வா' என்பதன் மொழிபெயர்ப்பு. குமாண்டேர்—தொண்டை நாட்டதோரூர். இளையவில்லி, இராமாநுசனார்க்குச் சிறியதாயார் திருக்குமாரர் என்பதும் எழுபானான்கு ஆசிரியருள் ஒருவரென்பதும் குருபரம்பரையிற் கண்டுகொள்க. ஆசிரியன், என் தலையிற் றன்கழல் சாத்தும் என்க. ஆசாரியன்றிருவடிகளே சரணம் என்பது பெரியோர் வழக்கு. (8)

தமிழாசிரியரைப் பாடியது.

9. ஈடி லவதானி யென்மா துலனினிய
சேட விசேடச் செழுமறையோன்—சீடனென
நண்ணினேன் பெற்றபய னாவலோர் கண்டுவக்கப்
பண்ணினேன் வேள்பாரி பாட்டு.

(இ-ள்.)—ஈடில் அவதானி—அவதானத்தில் ஒப்பற்றவன்; இந்தத் தமிழாசிரியன் மஹிஷமண்டலத்தை யாண்ட கிருஷ்ணராச உடையார் முன்னே கன்னடமொழியிற் சதாவதானஞ் செய்து காட்டி, அவ் வேந்தராற் பதினாயிரம் பொன்னும், நன்முத்துமாலையும், தண்டிகையும் பரிசுபெறுதற் சிறப்பான் இங்ஙனம் கூறப்பட்டது. என்மாதுலன்—என்னுடன் பிறந்தான். இனிய சேடனென்னும் நாம விசேடத்தை யுடைய செழுமையுடைய வேதியன். இனிய சேடனென்றது, அறிவோடு அமுதகுணமு முடைய சிறப்புப்பற்றி: நஞ்சுடைய சேடனை விலக்கியது. அவனுக்கு மருகனாதலே யன்றிச் சீடனென்று உலகு சொல்ல அவனை அடைந்தேன் எ-று. பெற்றபயன்—அவ்விதம் நண்ணுதலான் எய்திய பயன்களை; நாவலோர் கண்டுவக்க—நாவன்மை யுடைய புலவர்கள் கண்டு என்தமிழாசிரியனை உவக்கும் வண்ணம்: வேள்பாரி பாட்டுப்பண்ணினேன் என்க. நாவலோர் நன்றுந்தீதும் பகுத்துணர்ந்து சொல்லவல்ல நாவன்மையுடையவர் எ-று. ஈடிலவதானி என்பதனால் அறிவு மேம்பாடும், சேடவிசேடன் என்பதனாற் கல்விமேம்பாடும், செழுமறையோன் என்பதனால் வைதிக ஒழுக்கமேம்பாடும் கூறப்பட்டன. இவற்றால் ஆசிரியவிலக்கணம் முற்ற நிறைதல் காட்டியவாறு. மாதுலன் என்றது புண்ணியவயத்தாற் றேகசம்பந்த முடைமையுணர்த்தியதாம். ஆசிரியனை மாதுலன் என்றதனாற் றன்னை மருகனெனக் கொள்ளவைத்துச் சீடனென ஆயதையே வெளிப்படுத்துரைத்தவாற்றான், மருகனாதலினும் சீடனாதலே தலைசிறந்தது என்று கருதியது குறித்ததாம். பாரிபாட்டு ஆறுவது பிறிதின் கிழமை. (9)

செய்ந்நன்றி யறிதல்.

10. இன்பாற் கரனு ரிராசரா சேச்சுரச்சேய்
தென்னாக நாதவர சேதுபதி—மன்னரிவர்
வீறுமே வன்ன மிசையாதே லென்னாவே
கூறுமே பாரி கொடை.

(இ-ள்.)—இன் பாற்கரனார்—இனிய பாற்கரன் என்னும் பெயருடையார். இனிய பாற்கரனென்றது சுடுசுடர்ப்பரிதியை விலக்கற்கு. இவர், இவ்வாசிரியற்கு வருடாசனமும் தண்டிகை வரிசையும், கலைமகளுருவிற் பெரும் பொற்பதக்கமும், பொன்மணிக் கடகங்களும், பொற்றுகில்களும் பிறவும் பரிசளித்தவர். இவர் திருமகனாதலின் இராச ராசேச்சுரச்சேய் எனப்பட்டனன். "பாற்கரன் சேய் கன்னன்" என்பது மாபாரதம். இராசராசேச்சுரன் இவ்வாசிரியற்குக் கன்னனாக விளங்கினன் என்பது குறிப்பாற் கொள்ளவைத்தது. இவனீத்த கனகக் குழைகளும், பொற் கடகங்களும், பொற்றுகில்களும் மிகப் பலவாம். தென்னாகநாத வரசேதுபதி—எவ்வகையினும் அழகிய நாகநாதனென்னச் சேதுபதிகளிற் சிறந்தவன் எ-று. சேதுபதி என்பதை ஈற்றில் வைத்து முன் இருவர்க்கும் கொள்ளவைத்தவாறும். சேதுபதி—சீராமமூர்த்தி கட்டிய திருவணைத்தலைவர். வரசேதுபதி என்றது பல்வகைப் பரிசும் தந்து சிறப்பித்ததலேயன்றி, இந்நூல்செய்தானை இருணக் கடல் வீழாதேந்திய பெருவண்மையைக் கருதியது. மன்னருள் யார்க்குமிலாத பெருஞ் சிறப்புப்பெயராதல் குறித்துச் சேதுபதிமன்னனெனக் காட்டப்பட்டது. இதனான் மன்னர் என்றது கூறியது கூறல் ஆகாமை கண்டுகொள்க. இவர் வீறு மேவு அன்னம் மிசையாதேல்—இவர் அளித்த வேறொன்றற்கில்லா அழகினை உண்டுபண்ணும் பல்வகையுணவுகளையும் உண்ணாதாயின்: என் நாவே பாரிகொடை கூறுமோ என்க. வீறு—ஈண்டுக் கல்வி யழகு; இம்மூவர் பெருங்கொடையின் விளைவைத் துய்க்காத தனிநிலையில், என் நா மட்டுமே பாரிகொடை கூறும் வன்மையுடையதாகாது என்று இவர் பெருநன்றியை உலகறிய வைத்தவாறிது. இந்நூலைப் பாரிகொடை என்றது, பாரியின் கொடையறமே பல்லாற்றானும் கூறுதற் சிறப்பான். இம்மூவேந்தர்கொடை துய்த்து இவ்வொரு வேந்தன் கொடைகூறப்புக்கது கூறியதனால் இவ்வொரு பாரியின் கொடைச்சிறப்புக் குறிப்பாற் கொள்ளவைத்தவாறும்.

## நூல்வழி.

11. தொழுதகைய தெய்வத் துகடீர் புலவர்
பழுதகல வீண்டிப் பழைய—வழுதியர்நன்
பேரவைக்கே யாய்ந்த பெருநூ லிடைப்போதி
சேரவைப்பேன் வேள்பாரி சீர்.

(இ-ள்.)—தொழுதகைய தெய்வப்புலவர் என்க. தெய்வப்புலம்—தெய்வத் தன்மையுடைய அறிவு: திப்பிய ஞானம் என்ப. தொழுதகை—தொழுதற்குரியதகுதி; துகடீர் தெய்வப்புலவர் என்க. துகள்

திர்தல்—கல்வியறிவு ஒழுக்கங்களில் எவ்வகைக் குற்றமு மில்லாமற் றாயராதல்; இது தொழுதற்குரிய தகுதியாம்; "புலனழுக்கற்ற அந் தணாளன்" (புறம். 126.) என இவ்வேள்பாரியைப் பாடிய கபிலரைப் பாடுதலான் அறிக. பழுதகல ஈண்டி—எஃகுடையார் இகலிலராய்க் குழீஇய சிறப்பைக் குறித்தது. பழைய வழுதியர்—பழங்குடியிற் றோற்ற முடைய பாண்டியர். வழுதியர் நன்பேரவைக்கே—வழுதியர் பெருமைக் குக் காரணமான நல்லவையின்கண்ணே; ஆய்ந்த பெருநூல்—ஆராயப் பட்ட பிறர் செயற்கரிய நூல்கள். அவை பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பன. இவற்றினிடை வேள் பாரிசிராக முன்னோர் பொதிந்தவற்றை எடுத்து ஒருசேர வைப்பேன் என்க. ஈண்டுப் பொதிந்த சீர் என்பது, சீர் பொன்னைப்போலப் போற்றிப் பொதியப் படுதல் குறித்தது. "பொன்போற் பொதிந்து" (திருக்குறள். 155) என்றார் திருவள்ளுவனாரும். தெய்வமும் தெய்வத்தின் அருள் பெற்றாரும் செய்தன முதனூலாம் என்பது பேராசிரியர்க்கு உடன் பாடாதல் "வினையினீங்கி" என்னும் மரபியற் சூத்திரவுரை நோக்கித் தெளிக. இதனால் இது வழிநூல் என்ப தாயிற்று. சீர் சேரவைத்தல்—சீர்கள் தொடர்புசேர வைத்தலும் ஆம். அவிழ்தல் மலரை விளைப்பித்தல் போலப்பொதிதல் பொன்னை விளைப்பித்தது (பதிற்—50.) (11)

காரணம்.

12. இரப்பார் பலராகி யீவா ரிலராய்க்
கரப்பா ருளராய காட்சி—சுரப்போக்கப்
பொங்கர் விழைவித்தல் போற்பாரி வேள்கோடைமை
யெங்கண் விழைவித்த தீண்டு.

(இ-ள்.)—ஈண்டு இரப்பார் பலராகி என்றது இரவாதார் பல ராகப் பல்காது இரப்பவர்குழு மிகுதலைக் குறித்தது. நாட்டிலே இரவல ரில்லையாமாறு பண்டுபோல் ஈவார் இல்லாராகி; இங்ஙனம் ஈத்தவ ருண்டென்பது பதிற்றுப்பத்தில், "வாராராயினு மிரவலர் வேண்டி" (55) என்பதற்கு உரைகாரர் 'தன்னாட்டு இரவலரில்லை யாதலின் அவரைப் பெறவிரும்பி'' என உரைத்ததனான் அறியலாம். "செல்வரிப்போதில்லை நோக்கினோம்" (திருவாய்மொழி 3, 8, 6), "பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" (ஆளுடைய நம்பி திருப்பாட்டு 647–2) எனப் பெரியார் பணித்தன கொண்டு உய்த் துணர்க. கரப்பாருளராய காட்சி—உள்ளார் கரப்பாராய தோற்றம்; காட்சி—காணப்படுந்தன்மை; சுரப்போக்கு—பாலையிற் சேறல். அப் பொங்கர் விழைவித்தல்போல்—பண்டுத்தான் கேட்டறிந்ததோர் கற்ப

கப்பொழிலை விழைவூட்டுவது ஒப்ப: வேள்பாரி கொடைத்தன்மையை எம் கண் விழைவித்தது என்க. அப்பொங்கர்—அகரம் பண்டறிசுட்டு. நிழல் வேண்டாத தேவர்க்கு வெயிலே இலாத விண்ணில் உளதென்று நூல்களிற் கேட்டறிந்த அஃது இப்பாலையில் உளதாயிற் பெரிதும் பயன்படுவதென்று பாலையிற் செலவே விழைவிக்கும் என்க. அது போலக் கரப்பாருளராகிய காட்சி அக்காலத்துள்ளனாக நூல்களிற் கேட்டறிந்த வேள்பாரி இக்காலத்துளனாயின் மிகப் பயன்படுவன் என அவன்பால் விழைவைச்செய்தது எ—று. இதனாற் பாரி நிழலில் நீளிடைத் தனி மரம்போல் (புறம். 118) விளங்கிய சிறப்பும் உணர்த்தியதாகும். (12)

அவையடக்கம்.

13. நவலரு நண்மா ணுழைபுல மிக்க
தவலருந் தோல்கேள்வித் தக்சோர்—கவலருஞ்
செந்நாச் செறுவிற் செழித்தவேள் பாரிபுகழ்
என்னாத் தழைப்பி னேவன்.

அவையடக்கம் என்பது அவைக்கண்ணே தான் அடங்கு மாற்றான் அவையோர் தன்மேலெழாமல் அடக்குதல்; இதனை "அவையடக்கியல்" என்பதற்குப் பேராசிரியர் கூறிய உரை கண்டு தெளிக.

(இ-ள்.)—நவலரு நண்மாண்—தாம் நவறலன்றிப் பிறரான் நவலற்கு அரிய நட்பத்துடன் கூடிய மாண்புடைய; நுழை புல மிக்க-நூல்களிற் புகுதல் சிறந்த. தவலருந் தொல் கேள்வி-கெடலரிய பழைய கேள்வி; பிறராற் றளக்கரியதாகி வழிவழியாய் வந்த பழங் கேள்வி எ—று. 'கற்றல் கேட்டலுடையார் பெரியார் கையாற் றொழுதேத்த" என்பது ஆளுடைய பிள்ளையார் திருப்பாட்டு; கவலருஞ் செந்நா—நெஞ்சிற்றம்மைப்பற்றிக் கவலுதலில்லாத செவ்விய நா. "வயங்கு செந்நாவின் உவலைகூராக் கவலையில் நெஞ்சிற் கபிலன்" (பதிற்றுப்பத்து 85) என, இப்பாரியைப் பாடிய கபிலரைப் பாடுதல் காண்க. எல்லா மறிந்து சொல்ல வல்லதேனும் ஒருவன் செய்யாதனவற்றைக் கூறுதலறியாத சிறப்புப்பற்றிச் செந்நா எனப் பட்டது: "செய்யா கூறிக்கிளத்த லெய்யாதா கின்றெஞ் சிறுசெந் நாவே" (புறம். 118) என வருதல் காண்க. "பொய்யா நாவிற் கபிலன்" (புறம் 174.) என்ப. செந்நாவாகிய செறுவிலே செழித்து வளர்தலான் வேள்பாரி புகழ் உண்மைப் புகழ் என்பதாயிற்று. "பாரி பாரி யென்று பலவேத்தி, யொருவற் புகழ்வர் செந்நாப்புலவர்" (புறம். 107) என வருதலானறிக. நாவைச் செறு வென்றது நீரின்றி

யன்மையாத் தன்மைபற்றி. "நீர்பரந்த செறுவினென்மலிந்த மனை" என்பது புறம். (388). நாப்பொறி நீர்ப்பூதத்தாலாய தென்று தெளிக. செறுவிற் செழித்த நெல் வாய்வாயிலாக வயிற்றைநிரப்பி யின்பஞ் செய்தல்போல செந்நாச்செழித்த புகழ் செவிவாயிலாக நெஞ்ச நிரப்பி நினைதொறு மின்பஞ்செய்வது எ-று. என்நா—செந்நாவாகாது என்னது உறுப்பு மாத்திரையாகியநா எ—று. தக்கோர் கவலரு நா என்றதனால் என் நாக் கவலலுடையது என்றவாறும்; எவன்—யாது. தக்கோர் நாவிற் செழித்த புகழ் என் நாவிற் றழைக்கச் செய்யின் யாதாமோ எ—று. இக்கருத்தை, உவமை முகத்தால் விளக்குவது வரும்பாட்டு. (13)

14. அற்பக லாக்கு மணிபோற் றலத்தோங்கு
கற்பகக் காவைக் களர்வைத்தல்—பொற்பயான்
நன்செய்யுள் மன்கபிலன் நட்டபெரு வேள்கொடை
புன்செய்யுள் யாப்பல் புகன்று. [யேன்

(இ-ள்.)—அற்பகலாக்கும் அணி பொற்றலத்து—இரவைப் பகலாக்கும் பொன் அணிந்த உலகத்து. ஒங்கு கற்பகக் காவை—ஆண்டு இயல்பாக ஒங்கி வளர்தற்குரிய கற்பகச் சோலையை. களர் வைத்தல் பொற்ப-பொல்லா உவர்நிலத்துப் பதிய வைத்தலை ஒப்ப; மன் கபிலன் நன் செய்யுள் நட்ட—புலவர் தலைவனாகிய கபிலன் தன் நன் செய்யுள் நட்டுவளர்த்த: வேள்பாரி கொடையை. இனி என் புன் செய்யுள் யாப்பல் புகன்று—என்னுடைய புல்லிய செய்யுட்கண் வளர்க்க விரும்பி யாக்கப் புகுவல் (எ—று). யாத்தல் கட்டுதலாதலின் ஈண்டுப் பிணிப்பேன் என்று கருதியதாம். நன்செய், புன்செய் என்பன சாடு. மன் கபிலன் என்றதனால் யான் கடையேன் என்பது குறித்தது; நட்ட—நிலை பெறச்செய்த; நன்செய்யுள் விளைவு புன்செய்யுள் விளையாது என்பது தோற்ற வைத்தவாறு. அற்பகலாக்கு மணி பொற்றலம் என்பது கபிலன் செய்யுளாகவும், அதன்கண் ஒங்கு கற்பகக்கா வேள்பாரி யாகவுங் கொள்ளவைத்தது காண்க. அற்பகலாக்குதல்—இருணீக்கி அறிவொளி யாக்குதல் அது கபிலன் செய்யுட்குள்ளது என்பது குறிப்பு. (14)

பாயிரத்திறம் முற்றிற்று.

இத்திறத்துட் செய்யுள் 14.

## 2. வளம்பாடு திறம்.

### நாடு.

15. பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடியேன்—றறநாட்டுந்
தொன்மைப் பெருந்தமிழ்சொல் தூய புகழ்த்தரோ
நன்மைத் தலைவள்ள ணாடு.

(இ-ள்.)—பிறநாடு-பாரிபறநாடல்லாத மூவேந்தர்நாடுகள். அப்பிற நாட்டுப் பெண்டிர் முடிதீண்டுதலான் அம்முடியணிந்த நறுநீல நெய்தலும் கொட்டியும் பறநாட்டுப் பெண்டிரடியின்கண் மணஞ் செய்யும் என்க. "நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப், பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி, பறநாட்டுப் பெண்டி ரடி" இதுபழம்பாடல். இவர் நிறையாற் றம்மைத்தாம் காத்தொழுகற்கண்ணுள்ள அருமைப் பாட்டை உணரவல்லார் பிறபெண்டிரே யாதலான் அவர் சூடிய தலை மலர் இவரடிமலரில் வீழ வீழ்ந்துவணங்குவர் என்பது குறித்ததாம்; தங்கணவரையே தெய்வமாகத்தொழுதற்குரிய பிறநாட்டுப் பெண்டிர் இவர் கற்புமேம்பாடு நோக்கி இல்லுறை தெய்வமாக நினைந்து போற்று தல் கருதிற்று. நாடு வளம்பெறுதற்குக் காரணமாகிய மழையை உண்டு பண்ணுவன மாதவர் நோன்பும் மட்வார்கற்பும் அரசர்செங்கோலும் என்பர்; "செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ, கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோ, நலத்தகை நல்லாய் நன்னா டெல்லா, மலத்தற் காலை யாகிய தறியேன்" என மணிமேகலைக் கச்சிமா நகர்புக்க காதையுள் வருதலானறியலாம். இம்மூன்றனுட்கற்பையே ஈண்டு முதற்கணெடுத்துக்காட்டியது அவ்வரசரையும் மாதவரையும் உண்டு பண்ணுங் கற்புடையாட்டியர் சிறப்பு நோக்கி எனத்தெரிக: "அந்நலார், கற்பினின்றது காலமாரியே" (நாட்டு–59) என்றார் கம்பநாடரும்: அவர் கோசல நாட்டியாற்றணி கூறப்புக்கு, முதற்கண் "ஐம்பொறி வாளியும்...முலையவர் கண்ணெனும், பூசலம்பு நெறியின் புறஞ் செலாக், கோசலம்புனை யாற்றணி கூறுவாம்" (ஆற்று–1) எனப் பாடு தல் கண்டுகொள்க. "வறனோடின் வையத்து வான்றருங் கற்பினாள்' என்பது பாலைக்கலி. (16.) பறநாடு-பறம்புமலையைத் தலைமையாகக் கொண்ட நாடு. இம்மைக்கு மறுமைக்கும் உறுதியாக அறத்தையே கூறுவலான் அறநாட்டுந்தமிழ் எனவும் "என்றுமுளதென் றமிழ்' (கம்பர்) என்பதனாற் றொன்மைத்தமிழ் எனவும் செயற்கரிய

செய்தலாற் பெருந்தமிழ் எனவும் கொள்க. தமிழ் சொல் தூய புகழ்த்து-இத்தகைய தமிழ் சொற்ற தூயபுகழை உடையது; நன்மைத் தலைவள்ளல் நாடு-உலகிற்கு நன்மை செய்தலான் வள்ளற்றலைவன் ஆயினான் நாடு. தலைவள்ளல் நாடு, கற்பாற்றலைமையெய்திய தூய புகழுடைத்து. எ-று. மகளிர்தூய்மையாலாய புகழாதலிற் றூயபுகழ் எ-று. உலகைத் தூய்தாக்கவல்ல புகழெனினும் அமையும். பாரி தமிழ்த்தலைவள்ளலாதல் "முரசு கடிப்பிகுப்பவும்" (158) என்னும் புறப்பாட்டினும் "பாரி யோரி நள்ளி யெழினி, யாஅய் பேகன் பெருந் தோண் மலையனென், றெழுவரு ளொருவனு மல்லை" (தொல்-செய். 125; பேராசிரியர் நச்சினார்க்கினியருரை மேற்கோள்) எனவரும் பாடலினும் கண்டுகொள்க. சிறுபாணிற் பேகனை முற்கூறினாரா லெனின் ஆண்டு எழுவர் வள்ளல்களுட் பாரியினையே கோமான் என்றது கொண்டு அவர்க்கது கருத்தன்றென்க. இக்கருத்திற் கியையவே ஐயனாரிதனார் "முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்" என்னும் வெண்பாமாலையுட் பாரியைப் பேகனுக்கு முன்னர்வைத்துப் பாடுதலான் உண்மையுணர்க. இதனாற் பாரிதலைமையொப்ப அவன் பறநாடும் தலைமையெய்தல் காட்டியவாறு. "மங்கலமென்ப மனை மாட்சி" (திருக்குறள், 60.) என்பதனால் நாட்டிற்கு மங்கலமாதல் கருதி முன் வைக்கப்பட்டது. (1)

16. புலவர்க் கிறைவன் பொருவில் கபில
னிலவிப் பராவு நிறைநா—டுலகிற்குப்
பெற்றமிழ்தாப் பாடும் பெருங்கோற்றன் கற்பிசைசெய்
நற்றமிழோன் வாழ்பறம்பு நாடு.

(இ-ள்.)—நல்லிசைப் புலவர்க்கு இறைவனாகிய ஒப்பில்லாத கபிலன்; இவனே புலவர்க்கு முதல்வன் என்பது "தரணியிற் பொய்ம் மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர், பரணர்நக் கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர்" (திருத்தொண்டர்திருவந்தாதி, 49.) என நம்பி யாண்டார் நம்பி கூறுதலான் அறிக. கல்வியறிவொழுக்கங்களில் ஒப்பில்லாதவனாதலின், புலவர்க்கிறைவன் ஆயினன் என்பது குறித் தது. நிலவி—இருள்சீத்து விளங்கி. பராவுநிறைநாடு-பராவிய வேண்டு வனவெல்லா நிறைந்துள்ள நாடு: இருபாலாரும் தம் உள்ளத்தை நிறுத்தலையுடைய நாடு எனினும் அமையும். "நடுக்கடற் பிறந்தசங்கி னுள்ளிருந்த பாலினற், குடிப்பிறந்த மைந்தர்தங் குழைமுகம் பிறர் மனை, யிடைக்கண் வைத்த லில்லைகாத லார்கண்மீது மார்வமூர், கடைக்கணோக்கி லாதமாதர் கற்பையாவர் செப்புவார்" என (மேரு மந்தரம், 22) வாமனமுனிவர் கூறியது கொண்டுதெளிக. உலகர்க்குக்

கல்விக்கடல் பெற்ற அமிழ்தத்தை யொத்துப்பாடும் என்க. பெற்ற அமிழ்து மரீஇயிற்று. பெருங்கொற்றனைக் கற்பு இசைசெய் நற்றமிழோன் என்றது இவன் அகப்பாட்டில் (323) "ஐய செய்ய மதனில சிறியவின், னடிகிலனுறுத லஞ்சிப் பையத், தடவர லொதுக்கந் தகைகொள வியலிக், காணிய வம்மோ கற்புமேம் படவி" எனத் தலைவியைச் சிறப்பித்தல் நோக்கியெனக் கொள்க. முன்னைப்பாட்டிற்கியையவே இவன் தலைவியின் அடியைச் சிறப்பித்துக் கற்பைமேம்படவைத்துப்பாடுதல் உள்ளத்தகும். இவன்வாழ் பறம்புநாடு என்றது பறநாட்டுப்பெருங்கொற்ற னென்று பெயர் சிறத்தல் பற்றி. நற்றமிழ்-தீது நீக்கி நன்மையைத் தெரிவிக்கவல்ல தமிழ். இதனாற் புறத்தாரும் அகத்தாரும் போற்றி வாழ்தல் குறித்தது. கபிலன் புறநாட்டானும், பெருங்கொற்றன் அகநாட்டானும் ஆதலுணர்க. இஃது அறிவு நிறைந்த ஆண்மக்கட்குப் பாரி நாடு இனியதாதல் காட்டியது. (2)

17\. ஔவைப் பெருந்தகுவி யன்பாற் பறியுண்ட
செவ்வித் தமிழருமைச் சீர்நாடு—தவ்வாக்
குடிப்பாரி வேள்பரிசிற் கூத்தியரின் மஞ்ஞை
நடிப்பாரின் றண்பறம்பு நாடு.

(இ-ள்.)—ஔவைப் பெருந்தகுவி—ஔவையாகிய பெருந்தக்காள். அன்பால்-அவள் பெருந்தகைமையிலுள்ள அன்பினால்; பறியுண்டல்-மேலே விரித்துரைக்கப்படும். செவ்வித்தமிழ்—தன்னிளமைகெடாத கன்னித்தமிழ். பறியுண்டல் பயனாகப் பாரியின் தமிழருமையே புலப்படுதலால், தமிழருமைச்சிறப்புடைய நாடு எனப்பட்டது. இஃது எந்நாட்டும் நிகழாததொன்றாதலின் அருமைச்சீர் எனப்பட்டது. நாட்டிற்கும் நாடாள்வானுக்கும் உள்ள ஒற்றுமையாற் பாரி தமிழருமை அவன் நாட்டிற் கேற்றப்பட்டது. தவ்வாக்குடி—தளராத குடிமக்கள். பரிசிற் கூத்தியர்—பரிசில் பெறற்குரிய கூத்துவல்ல விறலியர். மஞ்ஞை நடிப்பு ஆர்—மயில்கள் நடித்தல் நிறைந்த; அகப்பாட்டில் (82) "ஆடுமயில் விறலியிற் றோன்று நாடன்" என்ப. மலை நாடாதற் கேற்ப மயில் கூறப்பட்டது. "கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில் (அகம். 82) என்ப. இன் தண்பறம்பு—இனிய தட்பமுடைய பறம்புமலை. தட்பமுடையன எல்லாம் இனியன ஆதலின்மையால் இன்றண் எனப்பட்டது. "திங்கி குளிர்ந்துங் கொலும்" என்ப. இஃது அறிவுடைய பெண்மக்கட்கு அந்நாடு இனியதாதல் காட்டிற்று. குடிப்பாரி என்றது கூத்தியர் கூத்தினைத் தான் றனியேகாணாது தன் குடியுடன் காண்டலைக்குறித்தது. பாரியைக் கண்டு கூத்தியர் ஆடல்போல மாரியைக் கண்டு மஞ்ஞை நடித்தல் கருதிற்று. (3)

18. தள்ளா விளையுட்டாய்த் தக்கார் குழுவிற்றாய்க்
கோள்வார் கோளக்குறையாக் கூழிற்றாய்—நள்ளார்க்கு
வாடா முதுகுடியான் மானமறம் வீறுமே
நாடா வளப்பறம்பு நாடு.

(இ-ள்.)—தள்ளா விளையுட்டாய்—விளைவிற்கு உதவாதென்று தள்ளப்படாத விளைபுலன்களையுடையதாகி; விளைவிப்பாரைப் புறநாட்டுட் புகத்தள்ளாத விளைபுலம் உடைத்தாய் எனினும் அமையும். தக்கார் குழுவிற்றாய்—விளைவைப் பகுத்தீத்துண்ணும் அறவோர்குழுக்கள் மிக்கதாகி; தக்கார் ஒருவர் இருவர் அல்லர் மிகப்பலர் என்பதும், அவர் சேர இயைந்து வாழ்வர் என்பதுந் தோன்றக் குழுக்கூறப்பட்டது. "சான்றோர் பல்கி" (புறம். 117) எனக் கபிலர் பாடுதல் காண்க. அங்ஙனம் பகுத்தீத்தலாற் 'கொள்வார்கொளக் குறையாக் கூழிற்றாய்' எனப்பட்டது. கூழ்—செல்வம்; குறைந்தது விளைவால் நிரப்பப் படுதலாற் குறையாமை கூறிற்று. பிறர் கொண்டதன் பின்னர் விளைவு புண்ணியத்தின்பயனாய் ஒன்று நூறாயிரமாதலிற் குறையாத கூழினதாதல் உணர்க. இப் பெருஞ்செல்வமே பிறர் படையெடுத்துக் கவர்தற்குக் காரணமாதலின் அதனால் இடர்ப்படாமை கூறுகின்றது மேல். நள்ளார்க்கு—பகைஞர்க்கு. வாடா—தளராத. தன்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் இயல்பாகவே வந்தடையும் எல்லா வளங்களையுமுடைய பறம்பு நாடு வீறுமே என்க. ஏகாரம் தேற்றம். வீறுதல்—மிக்குப் பொலிதல்; 'வீறு முண்டி மிசைந்திட' என்றார் கச்சியப்பரும் (கந்தபு. தானப். 20). முதுகுடி-பழங்குடி; இது வேளாண்குடி யென்பதும், இக்குடி மறமும் மானமும் மிக்க தென்பதும், "நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பா டஞ்சிய மகட்பாலானும்" (தொல். புறத். 24) என்னும் சூத்திரத்தானும் அதற்கு உரையாசிரியர் கூறிய உரையானும் உணர்க. "அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா, மான முடைய தரசு" (திருக்குறள், 384) ஆதலின், மறனிழுக்கா மானமுடைய அரசனாகிய வேளுக்கியைந்த வேளிர்குடிக்கும் அவ்விருதன்மையும் கூறப்பட்டன. இக்குடியின் கருத்தே தன் கருத்தாய் வேள்பாரி, வேந்தற்கு மகண்மறுத்து மறமும் மானமும் போற்றியது 'மகள் மறுத்த திறத்திற்' காண்க. நாட்டிற்கு விளைவும், தக்காரும், கொடையும், காவல்வலியும் இன்றியமையாமை குறித்தது. முதுகுடி—மலைவாழ்நர் பழங்குடி எனினுமமையும்; இதனை மூதிற்குடி என்ப. கடலூழிக்குப்பின் முதற்றோன்றிய குடியாதலின் முதுகுடி எனப்பட்டது; "வையகம் போர்த்த வயங்கொலிநீர், கையகலக், கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு, முற்றோன்றி மூத்த குடி" என்பது வெண்பாமாலை (2, 14.)

19. சால்புடையார் பல்குதலாற் றாங்கரசாற் றம்முள்ளம்
போலிளைய ரேவல் புரிதலா—னூலான்
வரைமனைநன் மக்கள் வளர்தலான் யார்க்கு
நரையிலது தண்பறம்பு நாட்டு.

(இ-ள்.)—இஃது அறத்தாற்றின் இன்பம் துய்த்தலான் இந் நாட்டார்க்கு முதிர்ந்த பருவத்தும் நரையெய்தவில்லாமை கூறுவது.

சால்புடையார் பல்குதல்—சான்றோர் பலர் என்பது குறித்தது, தாங்கு அரசால்—உலகு தாங்கிய வேந்தால்; இதனால், "வேந்தனும் அல்லவை செய்யான்." என்பது குறித்தது. சால்புடையார் தாங்கு அரசும் ஆம்; "சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான், றாங்காது மன்னோ பொறை" (990) என்னும் பொருட்பாற் குறட்கண் நிலம் பொறை தாங்கற்குச் சான்றவர் துணையாதல் கூறியவாற்றான் இதன் உண்மையுணர்க. சால்புடையார் நிலந்தாங்குபவராகவும் அவரைத்தாங்குவது அரசாகவும் கொள்ளினும் அமையும், "தூயரைக் காத்தற்கு அரசியல் வினைமேற் கொண்டார்" என்பது வான்மீகிமுனிவர் கருத்து. அவர், "சுசீநாம ரக்ஷிதாரச்ச;" (பாலகாண்டம்) எனக் கூறுவர் (சுசீநாO—மனமொழி மெய்கள் தூயரை எ—று.) தம் உள்ளம் போல் இளையர் ஏவல்புரிதலால்—பணிசெய்வார் செய்விப்பார்மனம் போல் ஏவிய பணியைச் செய்து முடித்தலால்; உள்ளம்போல் ஏவல் புரிதல் கூறியதனால் உள்ளம் தம்மை ஏவல் செய்யாது தாம் ஏவிய வாறு அடங்கி ஒழுகல் உடன்கூறியதாயிற்று. பணியாளரை இளையர் என்றது தமிழ்க்கே சிறந்த வழக்கு; இதனால், "யான் கண்டனைய ரென் னிளையரும்" என்பது கூறிற்று. இளையவர்—வேலைக்காரர் இந் நாட்டார் தம்மினும் முதியரைத் தமக்குப் பணியாளராகத் தெளியாமை உணரத்தக்கது. நூலான் வரைமனை நன்மக்கள் வளர்தலால்—வதுவையில் வரைந்துகொண்ட மனையாட்டியும் அவள் மாண்பினால் உண்டாகிய நன்மக்களும் நூலறிவான் வளர்தலால் எ—று; இதனான், "மாண்டவென்மனைவியொடு மக்களு நிரம்பினர்" என்பதுகூறிற்று. யார்க்கும்—இல்லறத்து யாண்டுபல கழிந்தார்க்கும். இல்லறத்தாராதல் மனைமக்கள் உடைமையால் உணரலாம். தண்பறம்பு—நரையின்மைக்கு இத்துணை ஏதுக்களுடன், தட்பமும் உண்டு என்று காட்டியதாம். தட்பம் பயன் தருவது இத்துணையும் உள்வழி என்று உய்த்துணர்ந்து கொள்க. நாட்டு—நாட்டின்கண். இஃது "யாண்டு பலவாக நரையில வாகுதல்" (புறம். 191) என்னும் பாட்டின் கருத்தைத் தழீஇக்கூறியது. "எதிர்நிற்கும் பெண்ணுமியல்பி னொழும்புஞ், செயிர்நிற்குஞ்

சுற்றமு மாகி, மயிர் நரைப்ப, முந்தைப் பழவினையாய்த் தின்னு மிவை மூன்று, நொந்தார் செயக்கிடந்த தில்'' என நல்லாதனார் (திரிகடுகம், 67) கூறுதலானும் இக்கருத்துணரப்படும். (5)

20. கோடை யரிய குளிர்மென் கமழ்காலா
னோடை நறுநீ ரொடுவாய்மை—நீடறனால்
வாழ்நா டளிரீன் வளனறு யாணர்த்தே
நாணாளும் வேள்பாரி நாடு.

(இ-ள்.)—இஃது ஆயுள்நீட்சி கூறுவது. கோடை யரிய—வெயில் வெட்பம் இல்லையான. குளிர்ந்த மணங் கமழ்கின்ற மெல்லிய காற்றினால். ஓடைகளில் வரு நல்ல புனலொடு; ''நீரின் றமையா துலகு,'' (குறள், 20) என்பதுபற்றி ஒடு உயர்பின்வழித்தாயிற்று (தொல்-சொல், 91). வாய்மை நீடு அறனால்—வாய்மை நீடிய அறத்தால். வாழ்நாள் தளிரீன்—ஆயுள் தளிரீனும்; வளன் என்க. வளனறு யாணர்த்து—வளமறாத புதுவருவாயை யுடையது. வாழ்நாள் தளிரீனுதற்குக் குளிர் மென்கமழ் காலும், நறுநீரும், அவைபோல வாய்மையும், அறனும் இன்றியமையா என்று காட்டியவாறு. ''அறத்தையும் வாய்மையையும் நன்செய்தினராதலின் எல்லா மக்களும் நீண்ட ஆயுள் பெற்று வாழ்வார்,'' (பாலகாண்டம்) என்று வான்மீகி முனிவரும் கூறினர். புறத்துக் காற்றும் நீரும் அகத்து வாய்மையும் அறனும் நீடு வாழ்தற்கு ஏது எ—று. காற்றிற்குக் குளிர்ச்சியும், கமழ்தலும், மென்மையும் கூறியது மலைநாடாகிய உயர் நிலத்து வீசுதலானும் அங்குள்ள மலர்த்தாதுக்களை அளைந்து வருதலானும் செறிந்த சோலைகளினிடையே மெல்லத் தவழ்தலானும் என்றுணர்க. ஓடை நறுநீர்—தங்கிய நீரின் வேறு எ—று. மலைத்தேனொடு கலத்தலான் நறுநீர் என்க. நாணாளும்—நாள்தோறும் தளிரீன்வளன் என்க. நாண் ஆளும் வேள் எனினும் அமையும்; ''நாணாள்பவர்'' (திருக்குறள். 1017) என்ப. நாண்-பழி பாவத்திற்கு நாணுதல். நிலவளனும் ஆயுளுக்குக் காரணமாமென்பது, ''நிணையின் னணிதர்கி யெங்குந், தாஞ்சால வாழ்நாள் தளிரீனுந் தகைமைத்து;'' என நீலகேசியின் வருதலானுணர்க. (தருமவுரைச் சருக்கம். 1) (6)

21. நடைபயிறன் முன்னரே நன்மக்க ளெல்லாங்
கோடைபயின்ற செல்வக் குடிக—டோடைபயின்ற
வில்லகத்த திண்கை விரலிற் செறிந்தவே
நல்லகத்த வேள்பறம்பு நாட்டு.

(இ-ள்.)—இது குடிகளின் ஒற்றுமை கூறுவது. நடை பயிறல் முன்னரே—கால் நடத்தலைப்பயிலுதற்கு முன்னரே; நன்மக்களெல்லாம்—எல்லா நன்மக்களும்: பெண்பாலும் அடங்கக் கூறப்பட்டது. கை கொடை பயின்ற செல்வக்குடிகள் எ—று. நடைக்கும் கொடைக்கும் ஏற்ற உறுப்புக்கள் வருவிக்கப்பட்டன. இதனால் நன்மக்களாதல் காட்டியவாறு. கொடைக்கேற்பச் செல்வம் கூறப்பட்டது. குடிகள் உள்ளங் கலந்துறைதல் நாட்டின் வளர்த்திக்குத் தலையாக வேண்டுவதாதலின் வில்லகத்த திண்கைவிரல்போல இயைந்தொன்றின எனக் கூறலாயிற்று. தொடைபயின்ற வில்—அம்பைத் தொடுத்தலைப் பயின்ற வில்; விற்பிடித்தற்கேற்பத் திண்கை எனப்பட்டது; பிரிந்த விரல்கள் விற்பிடித்து ஒருகுறியைத் தெய்யும்போது ஒன்றாய் இயைதல்போலத் தனித்தனியாயுள்ள குடிமக்கள் நாடு வளர்த்தலாகிய ஒரு குறியைக் குறித்துழிப் பிரியாது செறிவர் என்பது கருத்து; இங்ஙனம் செறிதற்குக் காரணம் நல்லகம் என்று தெரிய 'நல்லகத்த நாட்டு' எனப்பட்டது. நல்லகம்—நன்மனம்; "மனநல மன்னுயிர்க் காக்கம்" எனத் திருவள்ளுவனாரும் (457) கூறினார். நல்லகத்த வேள் என்று எல்லாவற்றிற்கும் வேள் நல்லகம் ஏது எனினுமமையும். 'வில்லக விரல்' என்னும் உவமை நல்லிசைப் புலவர் கண்டது. இவ்வுவமை கண்டார் "வில்லக விரலினார்" எனப் பெயர் சிறப்பர். இதனையே, "வீட்டகந் தோறும் வில்லக விரல்போற் பொருந்தி" (சிந்தாமணி 2110) எனத் திருத்தக்க தேவர் எடுத்தாண்டார். அவர் வீட்டிற்கு எடுத்தது ஈண்டு நாட்டிற்கு எடுத்தாளப்பட்டது. (7)

22. மாவிற் குயில்கூ மருதிற் கிளிமிழற்றும்
பூவின் ஞிமிறு புகன்றிசைக்குங்—காவிற்
களிமஞ்ஞை யாலுங் கனிமந்தி பெய்யு
நளிமங்குல் சூழ்பறம்பு நாட்டு.

இது மக்களேயன்றி அந்நாட்டுப்புள்ளும் விலங்கும் இனிதுவாழ்தல் கூறுகின்றது.

(இ-ள்.)—குயில்கள் மாவிற் கூவும் என்க. "மா அத்துக்குயில்" (நற்றிணை 243) என்ப. வெயில்படுபாங்கர் மாமரங்கள் உண்டாதலான் அவற்றிலே குயில்கள கூவும். "வேனிற் குன்றம்" என்பது மதுரைக் காஞ்சி; மா-பாலைநிலத்தது. நீர்படுபாங்கர் மருதுகள் வளர்தலான் அவற்றிற் கிளிகள் மிழற்றும்; மருது மருத நிலத்தது. காடுவளர் பாங்கர் மலர்கள் மிகுதலான் வண்டுகள் விரும்பி யிசைக்கும். எ-று. காவிற் களிமஞ்ஞை யாலும்—சோலைகளிற்களித்த மயில்கள் ஆடும்; சோலையும் மயி

லும் குறிஞ்சியன. நெய்தல் இப்பறநாட்டிற் கணித்தாகாமையிற் கூறிய தில்லை; இவ்வாறு பன்னிலப்பயனும் ஒருசேரத்துய்க்கு மியல்பிற்று என்றதாம்; கனிமந்திபெய்யும்—மந்திகனிகளைப் பொழியும். இப்பல இன்னிசையுடன் ஆடலைத்தெரிந்து அவற்றிற்குப் பரிசிலாகக் கனி களை யுதிர்க்குமென்க. மாவிற்குயிலும் மருதிற்கிளியும் வதிதல் இயல்பு. "மாஞ்சோலை பொங்கி மருதங்கிளிப் பிள்ளைகள்வாய்த் தீஞ்சா ரொழுக்கி" என நீலகேசித்தெருட்டில் வருதல் காண்க. குயில் மன்மதகாகளமாதலிற் கூவியழைத்தல் கூறப்பட்டது. கிளிகள் அழைக்கப்பெற்றவற்றிற்கு இன்னுரை வழங்கும். எ-று. வண்டுகள் இசைக்க மயில்கள் ஆடும் என்றதனாற் பாடலுடன் ஆடல் கூறியவாறு. 'பெய்யும்' என்பது மிகுதியாக வழங்குதல் குறித்தது. "மயிலகவு மலிபொங்கர் மந்தியாட" (மதுரைக்காஞ்சி) என மாங்குடி மருதனார் கூறுதலை ஈண்டைக்கு நினைக்க. "கோடுவாழ் குரங்கு" (தொல். மரபியல் 3) ஆதலிற் கனியுதிர்த்தல் கூறப்பட்டது. நளிமங்குல்—பெரு மையை யுடைய முகில்; மயில் ஆடுதற்கு ஏதுக் காட்டியது. மாவும் மருதும், பூவும், மயில், குயில் குரங்கு இவைவாழ் காவும், செழித்துப் பயன்படுதல் முகிலானென்பது உணரத்தகும். இனிக்குயில் கூவல் முழவமாகச் சொல்லுவராதலின் மயிலாடற்குக் குயில் முழவொலிக்கு மெனினும் அமையும். "குயின்முழவமாத் தூவிமஞ்ஞை நன்மணம் புகுத்தும்" (சிந், 65.) எனவருதலானறிக. ஈண்டு நச்சினார்க்கினி யர் குயின் முழவாகக்கொண்டு மயில் ஆடுதல் கூறுதல் காண்க. மந்தி—குரங்கின்கூட்டம். அகப்பாட்டில் "மலைப்பூஞ் சாரல் வண்டி யாழாக, வின்பல் லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து, மந்தி நல்லவை மருள்வன நோக்கக், கழைவள ரடுக்கத் தியலியாடு மயில், நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்" (82) எனவந்தது காண்க. மந்தி குரங்கின்பெண் பால். "மந்தி நல்லவை"என்புழிப்போலச் சிறுபான்மை பொதுவாகவும் வரும். ஆளுடையடிகள், "கோழிலை வாழைக்கொழுங்கனி" என் னும் அகப்பாட்டைக்கொண்டு உரைத்த திருக்கோவையுள், "எய்யா தயின்றிளமந்திகள் சோரும்" என, "அறியா துண்ட கடுவ னயலது, கறிவளர் சாந்த மேறல் செல்லாது...... மகிழ்ந்துகண்படுக்கும்," என் பதற்கியையக் கூறியது பற்றி இதனுண்மையுணர்க. (8)

பறம்பு மலை.

23. தேர்பெற்று முல்லை திசைகமழப் பூக்குமொழுக்
கூர்பெற் றுளம்பூப்ப ரோள்ளவையோர்—கார்பெற்ற
கற்புடைய நல்லார் கலைபெற் றெழில்பூப்பர்
நற்புடைய தண்பறம்பு நாட்டு.

(இ-ள்.)—முல்லை தான் படர்தற்குத் தேரைப்பெறுதலாற்றிசை யெல்லா மணங்கமழ மலரும். ஒட்டமுடைய அவையின்கண் உள்ள அறிவிற் பெரியோர், ஊரார் ஒழுக்கத்தினைப் பெறுதலால் உள்ளம் மலருவர். மழையை யுண்டாக்கிய கற்பினையுடைய நன்மகளிர் கலை யறிவுபெறுதலான் அழகுமலருவர் என்க. நற்பு—நன்மை. முல்லை கற்பிற்கு அடையாளமாதலின், அதன்பெருமை தெரிந்து வருந்தாது தேரீயப் பெறுதலால் அப்பெற்றமகிழ்ச்சி தோன்றத் திசை கமழப்பூக்கும். எ-று. அவையோர் என்றதனால் 'அவையமுல்லை'யாகிய 'நவை நீங்க நடுவுகூறு, மவைமாந்த ரியல்புரைத்தன்றாம்', (புறப்பொருள் வெண்பாமாலை, 19.) "எல்லாம் அறிவிற் பிறந்துவிடும்" என்று கண்ட நல்லறிவினை ஊரார் பெற்றொழுகுதலையே தம் அறிவிற்குப் பயனாகக்கருதிய நல்லவையராதல் குறித்து உளம் பூப்பர் எனப்பட்டது. கார்பெற்ற கற்பு—"கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 55) என்பதனால் அறிக. காரால் வளர்கின்றமுல்லையினும் காரை யுதவும் கற்புமுல்லை சிறந்தது என்றுகாட்டியதாம். கற்புடைமையால் நல்லார் எனப் பெயர்சிறத்தற்குரியார் எ-று. கலைபெற்று—கலையறிவு பெறுதலான்; எழில்பூப்பர்—முன்னையினும் அழகுமலருவர் என்க. இதனால் அணி பூண்டு எழில் பூத்தாராக வினையாமை குறித்தது. தேர் முல்லைக்கு ஊன்றுகோல் ஆதல் கூறியதனால் ஊரார்க்கு அவையோரும், கற்புடைய நல்லார்க்குக் கணவரும் ஊன்றுகோலாதல் குறித்துக் கொள்க. நாடு நல்லவை யுடைத்தாதல் வேண்டுமென்பது, "எட்டுவகை நுதலிய அவையத்தானும்" என்னும் தொல்காப்பியத்தானறிக. நற்புடைய நாடு என்றது, "தண்பறம்பு நன்னாடு" (புறம். 110) என்பதை நினைத்து.
(9)

24. சீரா ளளந்தறியாச் செம்மற் பழம்பதிகள்
பேரா ளளந்தறிந்த பெற்றியா—லோருரே
மூவுலகுந் தாங்குறூஉ மூந்நூ றுடைத்தென்ப
நாவலந்தீ விற்பறம்பு நாடு.

(இ-ள்.)—சிறப்பியல்புகளால் இத்துணையென்று அளந்தறிய வியலாத தலைமையை யுடைய தொல்லூர்கள் பெயரினால் இத்துணையென்று எண்ணியறிந்த தன்மையால் மூந்நூறுடையதென்று சொல்வர் என்க. ஒருரே மூன்றுலகினையும் தாங்குறூஉம் என்றது மிக்க வருவாயையுடையது என்பது குறித்தது. ஈண்டு மூவுலகு—மூவேந்தர் நாடுகள். நாவலை அடையாளமரமாகக்கொண்டு பெயர்சிறந்த தீவத்துப் பறம்புமலையைத் தலைமையாகக் கொண்ட நாடு என்க. 'என்ப'

என்றது முன்னோர் "முந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு" (புறம். 110.) எனக்கூறியது குறித்தது. ஏகாரம் பிரிநிலை. உலகில் நாவலந் தீவு உயர்ந்ததென்றும் அதன்கட் டமிழ்வேந்தர் நாடுகள் சிறந்தன வென்றும், அவற்றுட் பறம்புநன்னாடு தலைசிறந்ததென்றும் தெரியக் கூறியவாறும். (10)

25. ஓங்கலாற் காத மொளிரு முயர்கோடைமை
வீங்கலான் யாண்டு மிளிருமே—பாங்கி
னறநாட்டும் வைவே லருட்பாரி மல்லற்
பறநாட்டு வெற்புப் பறம்பு.

(இ-ள்.)—தன்வடிவிளைக்கத்தாற் பறம்புமலை ஒருகாத அளவிற்கு விளங்கும். அதன்கண் நிகழும் உயர்ந்தகொடைத்தன்மை பெருகலால் உலகிலெங்கணும விளங்கும். இஃது, "ஈண்டு நின்றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை, சென்று நின்றோர்க்குந் தோன்றும்" (புறம். 114) என்பதன் கருத்தைத் தழீஇ யுரைத்தது. இப்புறப் பாட்டிற் சிறுவரை என்பதனைச் சென்று நின்றோர்க்கும் என்பதனோடியைக்காது ஈண்டுச் சிறுவரை நின்றோர்க்கும் தோன்றும் என்பதனோடியைத்து ஈண்டுச்சிறிதெல்லைக்கண் நின்றார்க்கும் தோன்றும், புகழால் யாண்டுச்சென்று நின்றார்க்குந்தோன்றும் என்றுபொருள் கூறிக்கொள்க. இங்ஙனம் கொள்ளாக்கால் "தோன்று மன்ற" என்றது நின்றுபயனின்றாம்; கண்ணிற்குத்தோன்ற இயலாத நெடுஞ் சேய்மைக்கண்ணும் இது புகழாற்றோன்றலையே மன்ற என்பதனாற்றேற்றஞ் செய்தல் காண்க. இனித் தேர்வீசிருக்கை நெடியோன் குன்று சிறுவரை (சிறுமலை) யாகி ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும், தேர் வீசும் புகழால் சென்று நின்றோர்க்கும் தோன்றும் மன்ற என்றுகொள்ளினும் அமையும். பாங்கின் அறம் நாட்டும் வைவேல்—நல்லறத்தை நிலைபெறுவிக்கும் கூரிய வேல்; "கூர்வேற்பாரி" எனவும். (116) "கூர் வேற் குவைஇய மொய்ம்பிற் றேர்வண்பாரி" எனவும் (புறம் 118) கூறுப. வேல்வினை கொலையேயன்றென்று அறநாட்டும் என்பதனால் தெளிவித்தவாறு. பாங்கு—நன்மை. "அறத்தின் மண்டிய மறப் போர்" என்றார் புறத்தினும் (62.) "அறமுயலாழி" "அறவினை யாழிப்படையந்தணனை" எனப் பெரியாரும் பணிப்பர். அருட்பாரி—அறஞ்செய்தற்கு ஏதுவாகிய அருளுடையன் எ-று. "அறமும் அருளு டையான் கண்ணதே யாகும்" என வருதலானுணர்க. மல்லல்—பொருள்வளம். ஈதற்குச்செய்யவேண்டிய பொருள்வளமெல்லாம் நிறைந்தது குறித்தது. இந்நாட்டுவளத்திற்குப் பறம்புவெற்பு ஏது

என்றற்குப் பறநாட்டுவெற்பு எனப்பட்டது. 'வெற்புப்பறம்பு' என்பதனைப் பறம்புவெற்பு என மாற்றுக. (11)

26. மேக விதானக்கீழ் வீங்குபொழிற் போர்வைவேய்ந்
தோகை யருவி யொலியலணிந்—தீகைக்குப்
பொன்மணிவாய்ந் தூர்சூழப் பூவேந்தன் போன்றிருக்
பன்முதல்வேள் பாரி பறம்பு. [கும்

(இ-ள்.)—மேகவிதானக்கீழ்-மேகமாகிய மேல்லாட்பின் கீழே. வீங்குபொழிற் போர்வை வேய்ந்து—பெருகிய சோலையாகிய போர்வையினை மேலே போர்த்துக்கொண்டு; மலை முழுதும் போர்த்தலால் வீங்குபொழில் எனப்பட்டது. ஓகையருவி ஒலியல்—நாட்டுக்கு உவகையைச் செய்யும் அருவியாகிய தலைமாலை. உச்சியினின்று தாழவருதல் குறித்தது. பொன்னும் மணியும் தன்னடைந்தார்க் களித்தற்குக் கொண்டு என்க. "மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பாரம்" (கம்பர்: அயோத் திருவடிசூட் 62.) என்பதனால் ஈதல் வேந்தர்க்குச் சிறந்த செயலாதல் காண்க. ஊர்சூழ—ஈவாரை ஊர்கள் சுற்றுதல் குறித்தது. பூவேந்தன் போன்று—பூமியிலுள்ள வேந்தன் ஒப்ப,விண் இந்திரன் வேறு என்பது காட்டியது. வேந்தன்—இந்திரன். "வேந்தன் மேய தீம்புன லுலகம்," (தொல்-அகத்) "வேந்தனும் வேந்து கெடும்" (குறள். 899). இருக்கும்—உளதாகும். பல்வகையினுந் தலைமையுடைய பாரி பறம்புமலை. மலையின்புறத்து மேகமும் சோலையும் அருவியும் உளவாதல் கூறி அதனகத்தே பொன்னும் மணியும் உடைமை உரைத்ததாம். விதானமும், போர்வையும், கண்ணியும், ஈகையும், ஊரார் சூழ விருத்தலும் உலகாள்வார்க்குரியன: யார் முன்னும் வாங்கப்படாத தலைமையால் அரசர்க்குப் போர்வை சிறந்தது என்க. "போர்வைக்கோ" (புறம். 80) என வழக்குண்மை காண்க. (12)

27. வெல்பொறியார் வல்லெயிலான் வீயா விழுச்சுனையாற்
கொல்களிறூர் கானுற் கொடிப்படையாற்—பல்வரை
மூவேந்தர்க் கேயு முனைதற் கரியதேழிற் [யான்
பாவேந்தர்க் கேயும் பறம்பு.

(இ-ள்.)—பகைவரை வெல்லும் எந்திரப் பொறிகளமைத்த வலிய அரணல்; அடைமதிற்பட்டாலும் உள்ளிருப்பார் வீயாமைக்குக் காரணமாகிய வற்றாத நறு நீர்ச்சுனையால். விழுப்பம்—வற்றாமையும் நறுநீருடைமையும். கொல்களிறு நிறைந்த காடு பகைஞர் புகற்கரியது

குறித்தது. அரிதிற் புக்காலும் தம் அரசன்கொடியை விடாத படைஞரால் என்க. பல்வரையால்—பல பக்கமலைகளால்; மக்களமைந்த எயிலரணன்றி இயல்பாக அமைந்த மலையரணும் உண்டென்பது குறித்தது. "மணிநீரு மண்ணு மலையு மணிநிழற், காடு முடைய தரண்" (குறள் 742.) மணிநீர் என்பதற்கு விழுச்சுனையும், மண் என்பதற்கு வல்லெயிலும், மலை யென்பதற்குப் பல்வரையும், அணி நிழற்காடு என்பதற்குக் கொல்களிறூர்காணும் கூறியவாறு. மூவேந்தர்க்கேயும்-ஒருங்கு கூடிய மூன்றரசர்க்கே யாயினும்; முனைதற்கரிது—போர்செயற் கரியது என்றது, "பேரிசை யுருமொடு மாரி முற்றிய, பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி, பலவுறு குன்றம் போலப், பெருங்கவி னெய்திய வருங் காப்பினளே" (நற்றிணை. 253) என்பது குறித்தது. எழிற் பறம்பு என்க. பாவேந்தர்க்கு ஏயும் பறம்பு—பாடற்றலைவர்க்கு எளிது பொருந்தும் பறம்பு. ஏய்தல்—அடைதல், "ஏயிற்று.........அகிலின் புகை." (சிந்: முத்தி 406.) எனவரும். பகைஞர்க் கருமையும் புகழ்வார்க் கெளிமையும் உடையது எ—று. (13)

28. வள்ளிக் கிழங்கு மதுவும் பலச்சுளையும்
வெள்ளிக் கிலங்கும் வேதிர்நேல்லுங்—கோள்ளேயேன
வேரோ ருழாதன யாண்டும் விளையுமே
பாரோர் தோகுவேள் பறம்பு.

(இ-ள்.)—வள்ளிக் கொடியின் கிழங்கு; மது—தேன்; பலச்சுளை—பலாவின் சுளை; "சுளைகனியிவை யினியன பலவாழை" என்பது நீலகேசி. வெள்ளியினும் மிக்கு விளங்கும் மூங்கில் நெல். மூங்கிலின் வெண்ணெல் என்று கொள்க. கொள்ளை—திரள். ஏரோர் உழாதன—ஏர் உடையார் தம் ஏர் கொண்டு உழுது விளையாதன. இந்நான்கும் யாண்டும் விளையும்—எங்கும் விளையும்; இச்சிறப்பான் உலகினுள்ளார் துய்த்தற்குக் குழாங் கொள்ளும் பறம்பு என்க. பறம்பின்கண் உழாதன விளையுமென்க. நான்கு பொருள்கள் கூறியது நால்வகையுணவும் அடங்கல் வேண்டி; "நால்வகையமுதம்" (சிந்தாமணி-1937.) என்ப. வெதிர் நெல்—உண்பது; வள்ளிக்கிழங்கு—தின்பது; பலாச்சுளை—இனிய சேற்றால் நக்குவதேயாம். "சேறு நாற்றமும் வேறுபடக் கவினிய பலவின் சுளை" என்பது மதுரைக்காஞ்சி. "பலவினளிந்து வீழ் சுளை" என்பது சிந்தாமணி (2109). மது-பருகுவது. "விருந்தோம்பி மிச்சில் மிசைவான்புலம்" (குறள். 85) ஆதலின் உழாது வித்தாது விளைதல் காட்டியவாறு. இஃது 'உழவ ருழாதன நான்கு பயனுடைத்தே' என்னும் புறப்பாட்டைத் (109) தழீஇ யுரைத்தது. (14)

29. ஈவாரைக் கொண்டா டியல்பீ தெனவுலகி
னாவாரைச் செம்மை யறிவிக்கு—மோவாப்
பொழியுநீ ரந்தண் புயறலையாற் றூங்கிப்
பழியில்சீ ரந்தண் பறம்பு.

(இ-ள்.)—பிறர்க்கு ஒன்று ஈபவரைப் பாராட்டும் இயல்பு இப்படியென்று; உலகின் ஆவாரைச் செம்மை யறிவிக்கும்—உலகின்கண் உளர்வாரைத் தன் செம்மையால் அறிவிக்கும். ஓவா—ஒழியாது; நீர் பொழியும் அழகிய தட்பமுடைய மேகத்தைத் தன்றலையாலேந்தி அறிவிக்கும் என்க. கொடையுடைய புயலைத் தலையாற்றூங்கி யீபவரைக் கொண்டாடும் இயல்பு இப்படி யென்று உலகின் ஆவாரை யறிவிக்கும் என்க. ஈபவரைத் தலையாற்றூங்கல் வேண்டுமென்று குறித்ததாம். பழியில் சீர்—பழிமலையாத ஆக்கச் சிறப்பு. அந்தண் புயல்—செந்தண்மையையுடைய புயல் எனினும் அமையும். செந்தண்மை—அருட்டன்மை. (15)

30. போர்வீர மேத்தும் பொருநர் கிணைக்கெதிரே
கார்வான நின்றதிருங் கவ்வையைத்—தேர்வார்க்குஞ்
சேண்பாரி யீத்த விபமுழக்கம் வெல்லுமே
பாண்பாரிற் பாடும் பறம்பு.

(இ-ள்.)—பொருநர்—கிணைப்பறை கொட்டுபவர்; கிணை—தடாரி; இது கோல்கொண்டடிப்பது; "நுண்கோற் சிறுகிணை" என்பது புறம். இவர்க்குப் போர்வீரம் ஏத்தலுண்டென்பது "கிடைக்கா ழன்ன தெண்கண் மாக்கிணை, கண்ணகத் தியாத்த நுண்ணரிச் சிறுகோல், எறிதொறு நுடங்கியாங்கு நின்பகைஞர், கேட்டொறு நடுங்க வேத்தி வென், வென்ற தேர்பிறர் வேத்தவை யானே." (புறம். 382) எனச் சான்றோர் பாடுதலானறிக. கிணைக்கெதிரே—கிணைமுழக்கி னெதிரே; வானம்.அதிர்தலாலுண்டாகும் ஒலியை. தேர்வார்க்கு—கலை தேர்வார்க்கு என்க. ஏண்பாரி—வலிமையையுடைய பாரி; இபமுழக்கம்—யானை செய்யும் முழங்கொலி; வெல்லுதல், தேராத் தரம் போதாதார்க்கும் வானம் வழங்குதலான் என்க. பாண்—பாண்சாதி; பார் பரந்துள்ளதேனும் அதன்கட் பாடப்படுவது பறம்பு என்பது குறித்தவாறு. பொருநர்கிணையொலியும், வானொலியும், ஈத்த யானைகளினொலியும், பாண்பாட்டொலியுமே பறம்பினுண்டு என்று காட்டியவாறு. பொருநரும் பாணரும் களிறு பெறுதல் பண்டைக் கொடைநிலை

பின் ஈகை குறித்துணர்த்தும். வதிவார் வலத்துயர்பு என்க. வலம்—வெற்றி வெவ்வழி முதலியன. போர்சூழ்ந்த—சூழ்ந்து பொருத. புறக்கொடை—புறங்கொடுத்தல். பாரிற் புகழானிறைந்த பாரி என்க. சோலையும், ஈகையும், புறக்கொடையும் வழியளவையாக நிலனும், குலனும், வலனும் உயர்தல் தெளியக் கூறியவாறு. நிலமும் குலமுங் காத்தற்கு வலம் வேண்டுதலின் அதனுயர்பு தோன்ற ஈற்றில் வைக்கப்பட்டது (18)

33. படைமுரசுக் கோடும் பகைஞர் குழாம்வெல்
கொடைமுரசுக் கெய்துங் குழுவை—யிடையெதிர்ந்து
சென்னெறிகா ணுது திசைக்கு மியல்பிற்றே
பன்னறியா மல்லற் பறம்பு.

(இ-ள்.)—படை முரசு—படை திரட்ட ஒலிக்கு முரசு. இஃது அரவெறிபுருமி னொலித்தலால் அஞ்சிப் பகைஞர் ஓடுதல் குறித்தது. வெல் கொடைமுரசு—வென்ற பின்னர்ப் பல்பொருள்களையும் கொடுத்தற்கு ஒலிக்கு முரசு; சென்னெறி—மேலுங் கீழுஞ் செல்லுதற்குரிய வழி; திசைக்கு மியல்பிற்று—மயங்குந் தன்மைத்து; பன்னறியாமல்லல்-அளந்து பன்ன அறியாத வளம். பறம்பு இயல்பிற்று என்க. (19)

34. ஏறும் புலவ ரிழியும் பரிசிலரை
வீறும் விறற்பாரி வேளென்று—தேறுபுகழ்
மாண்கவியாற் பாடு மயக்க முடைத்தரோ
பாண்களியாப் பாடும் பறம்பு.

(இ-ள்.)—ஏறும் புலவர்—பரிசிற்கு மலையில் ஏறும் புலவர்; இழியும் பரிசிலர்—பரிசில்பெற்று இறங்குவார்; வீறும் விறல்—விறல் வீறும்; பரிசில் பெற்றபின்னர் உண்டாகிய செல்வப்பெருக்கானும், தோற்றப் பொலிவானும் பாரிவேள் என்று கருதி; தேறுபுகழ்—அப்பாரியைப் பற்றித் தாம் கேட்டுத்தெளிந்த புகழ்களை. மாண்கவியால்—சொல்லும் பொருளும் மாட்சிமைப்பட்ட கவிதைகளால். பாடுமயக்கம்—பாடுதற்குக் காரணமான மருட்கை. பாண் களியாப் பாடும்—பாண்சாதி களித்துப் பாடும்; பறம்பு மயக்கமுடைத்து என்றது—பறம்பு இம்மருட்கைக்குக் காரணமாதலையுடைத்து எ-று. இழியும் பரிசிலர் சாடு. இழியும் பரிசிலரை வீறும் விறல்வேள் என நினைப்பது மருட்கை. (20)

35. காணு ரேருபுறமே கல்லலைக்க வாக்கியதீங்
தேணு ரேருபுறமே சென்றேழுகும்—வானுய

கண்டகோடைப் பாரி கருதார் புறங்கண்டு
பண்டுபுகழ் போர்த்த பறம்பு.

(இ-ள்.)—கான்யாறு கல்லலைக்க ஒருபுறமே சென்றொழுகும்: பிறர் பருக வாக்கிய தீவிய தேன்யாறு ஒரு புறமே கல்லலைக்கச்சென் றொழுகும். வான்வழி கண்ட கொடையறத்தையுடைய பாரி. கருதார்—பகைஞர். புறங்கண்டு—முதுகு கண்டு. பாரிபுறங்கண்டு பண்டு புகழ்போர்த்தற்குக்காரணமான பறம்பின்கண் ஒழுகும் என்க. இஃது "ஒருசா ரருவி யார்ப்ப வொருசார் ...வாக்கிய வுக்க தேக்கட் டேறல், கல்லலைத்தொழுகும்" (புறம்-115) என்பதனைத் தழீஇ வந்தது. (21)

36. புலவர் புரியும் பொருள்வாத மன்றி
நிலவர் பொருள்வாத நேரா—துலகிலுயா
முன்னூழி போல முறையாற் பொலியும்வெல்
பன்னூழில் வீரன் பறம்பு.

(இ-ள்.)—புலவர் புரியும் பொருள் வாதம்—அறிஞர் விரும்பும் சொற்பொருள் வாதம். நிலவர் பொருள் வாதம்—நிலவுடையார் பாற் பொருள்பற்றிய வழக்கு; முன் ஊழி—கிருதயுகம். முறை-நீதி. வெல் பல் நூழில் வீரன்—வெல்லுதல்காரணமாகக் குவித்த பல் பிணக்குவைகளையுடைய மறவோன்; இவ்வாதங்களில் நடுநிலையி னின்று முடிபுசெய்தலான் முறையாற் பொலியும் என்றது. நிலவர் பொருள்வாதநேராமைக்குப் பாரியின் நயமற்றும் காரணம் என்று தொனிக்கக் கூறியது. புலவர் புரியும் பொருள்வாதம் என்றது, நிலவர் பொருள்வாதம் அறிஞர் விரும்பாமை குறித்தது. (22)

37 புலத்தானும் பொன்னானும் பொங்கொளியி னானும்
வலத்தானுந் துன்பறியா மன்னு—நலத்தானும்
பொன்னாட்டி னோர்பால் புவிபயப்ப வந்தொக்கும்
பன்னாட்டா ரேத்தும் பறம்பு.

(இ-ள்.)—புலம்—அறிவு: சிறப்புப்பற்றி முற்கூறிற்று; தேவ லோகத்தின் ஓர்கூறு: புவி பயப்ப—புவி பயன் அடைய: வந்தது ஒக்கும்-வந்ததுபோலும்; இன்பமே துய்க்கும் தேவருலகினும் அறஞ் செய்யும் புவி பயன்படுதல் கருதிப் புலம், பொன், ஒளி, வலம், நலம் இவற்றைக்கொண்டு வானுலகி னொருகூறு இப்பாரில் வந்ததுபோலும் பறம்பு வானொரு கூறு வந்தொக்கும் என்க. "வான்க ணற்றவன் மலையே" (புறம். 109) என்ப. ஈண்டு "அகலநீளவுயரத்தால் வானி

டத்தை யொக்கும் அவனது மலை' என்றார் உரைகாரர். அங்ஙனம் அன்று இங்ஙனமென்று இதனால் விளங்க வுரைத்ததாம். (23)

பறம்பிற் சுனை.

38. இருடருமா ஞாலத் திடர்கெடுமா றெண்ணி
யருடருவேள் கற்பகமே யாத—றேருடரலா
ளூர்விண் ணமிழ்தமீ ணுங்கமர்ந்த தன்னதே
சூர்வண் பறம்பிற் சுனை.

(இ-ள்.)—இது "மீன்க ணற்றதன் சுனையே" (புறம். 109.) என்றதைத் தழீஇ வந்தது. இருள் தருமா ஞாலம்—இரவில்லாத வானுலகின் இதுவேறு என்பது குறித்தது. மேல் வானின் ஒருகூறு வந்தது போலும் என்றதற்கியைய இஞ்ஞாலத் திடர்கெடும்வண்ணம் நினைந்து ஆங்கு நின்ற கற்பகமே அருள்தரு வேளாதல் கூறிற்று. இருளில்லாதநும் இடரில்லாததுமாகிய வானிற் பயன்படாமைகருதிப் பயன்படக் கற்பகம் வேளாகி இங்கு வந்தது குறித்தது. இங்ஙனம் வேள் கற்பகமாதலைத் தெளிதலால் ஆண்டுத் தேவருண்ணும் மதியாகிய அமிழ்த மீனும்: ஆங்கு-அப்பறம்பு மலையில்; அமர்ந்தது அன்னது-விரும்பி யுறைந்தது போன்றது சுனை என்க. சூர்வண் சுனை-சூரரமகளிர் சூழ்ந்த வளமுடைய சுனை. சுனையின் திப்பியம் சூரரமகளிர் சூழ்தலானும் உணரவைத்தவாறு; மதியமிழ்தம் சுரமகளிர்க் குணவாதல் "மதியுண் சுரமகள்" (10) எனப் பரிபாடலில் வருதலானறிக. கோள்களையும் மீனெனல் "நாண்மீன் விராய கோண்மீன்" (பட்டினப்பாலை, 68.) என்பதனானறிக. மதி நீர்நிலைக்கு உவமையாதல் "மதியுமீனும் பொய்கைக்குங்கரைக்கும் உவமிக்கும் பொருள்" என நச்சினார்க்கினியர் பட்டினப்பாலையுட் (34) கூறுதலானறிக. (24)

39. சீர்பரவும் பாவே செவியிற் கமிழ்தூற்றிற்
பேர்பரவு நாவினித்தல் பேசலேவன்—பார்பரவு
நீராற் சுவையை நிகழ்த்த லரிதரோ
தூராப் பறம்பிற் சுனை.

(இ-ள்.)—சுனையின் சிறப்பினை எடுத்துப் பரவும் முன்னையோர் செய்யுளே, கேட்பார்செவியிற்கு அமிழ்தத்தை ஒழுக்குமாயின் அச்சுனையின் பேரைப் பரவும் நா இனிதுச்சுவைப்பதுபற்றி ஒருவர் பேசுதல் என் எ—று. செய்யுள் அமிழ்தூற்றுவது சுனையின் சிறப்புடைமையால் என்று காட்டியது. முன்னையோர்செய்யுட்கள் பலவற்றுள் இதன்

சீர்பரவும் செய்யுள் சொல்லானும் அமிழ்தூற்றும் என்பது கருத்து. செய்யுள் என்பது புலவன் தன்னுவிலே பல்காற்சுவைத்துக் கண்டு பின் கேட்போர்செவி சுவைக்க இசைப்பதாதலின் நாவினித்தல் பேசலெவன் எனப்பட்டது. இங்ஙனம் அளவையான் உய்த்துணர வைப்பதல்லது பருகுநீராலே அளந்து சுவையைக் கூறுதல் அரிது எ-று. பறம்பிற்றூராச்சுனை என்றது தூய்மையும் வற்றாமையும் குறித்தது; பார் பரவு நீர்—இன்றியமைமயாதென்று உலகோர் பரவு நீர்; 'நீரின் றமையா துலகு' (குறள். 20) என்ப. (25)

40. உண்ணுவார்க் கூறு முயர்நறுநீர் மீப்போங்கி
மண்ணுவார்க் காங்கண் வழிந்தோடித்—தண்ணிதா
மேலைக் கதிர்தெறூஉம் வெய்ய கடும்பகலும்
சோலைப் பறம்பிற் சுனை.

(இ-ள்.)—உண்ணுவார்—பருகுவார். நீர்த்தடம் ஊருணி என வழங்கப்படும். பருகுவார்க்குப் புதிதாக ஊறும் உயர்ந்த இனிய நீர். "நோய்க்கு நிலையிடம் நீர்" என்று மருத்து நூலிற் கூறியபடியில்லாது நோயின்மையும் நோய்நீக்கமும் உடல்வலியும் என்னு மிவைதரவல்ல உயர்த்தியுடன் நாவிற்கு இனியதாதலைக் குறித்தது. உண்பார் பொருட்டு ஊறுநீர் குளிப்பார்பொருட்டு மீப்பொங்கி வழிந்தோடித் தண்ணிதாம் என்க. பருகுவார் ஊறுநீர் பருகலும், குளிப்பார் வழிந்தோடு நீரிற் குளித்தலும் கூறியதனுற் றூய நீரையே பருகற்கும் குளித்தற்கும் கொள்ளல் குறித்தது. மேலைக் கதிர்தெறூஉம் வெய்ய கடும்பகலும்—உச்சியிலுள்ள ஞாயிறு சுடும் கொடிய கடிய பகற்கண்ணும்: தண்ணிதாம் என்க. சோலைப்பறம்பு என்றது, "நீரும் நிழல தினிதே" (திருக்குறள், 1309) என்பது கருதிற்று. "பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்" (குறுந்தொகை, 196) என்பதனுல் இதன் தட்பமும் தெளிவும் நன்கறியலாம். (26)

41. கண்டா லுடல்குளிருங் கைதோட்டா லுள்குளிரு
முண்டா னெடிது முளங்குளிருந்—தண்டாப்
பளிங்காற் புனல்வகுத்த பண்பிற்றே பாரி
துளங்காப் பறம்பிற் சுனை.

(இ-ள்.)—காண்பன கண்களேயாகவும், அவை கண்ட மாத்திரையே அக்கண்களையுடைய மெய்ம்முழுதும் குளிரும்; கைதொட்

டால் உள் குளிரும்—தொடுவன புறத்திலுள்ள கைகளே யாகவும் அக் கைகளையுடைய உடலகத்துள்ளன குளிரும்; கண்ணுற் கண்டு கையாலள்ளி வாயாற் பருகின் வயிறு குளிர்தலே யன்றி நெடும்போழ் திற்கும் உள்ளங் குளிரும்; தண்டாப்புனல் பளிங்கான் வகுத்த பண்பிற்று—பருகி யமையாத நீரைப் பளிங்காற் பாகுபடுத்தன்ன தன்மையது; "பளிங்கு வகுத்தன்ன தீநீர்" (புறம். 150) எனவும் "பளிங்கு சொரிவன்ன பாய்சுனை" (குறிஞ்சிப்பாட்டு, 57) எனவும் வருதல் காண்க. துளங்காப்பறம்பு—போரானும் வற்கடத்தானுஞ் சலியாத பறம்பு; சுனை பண்பிற்று என்க. இதனுற் றட்பமுந் தெளி வும் கூறப்பட்டன. நெடிது—நெடு நாளுமாம். இதனல் இந்நீர் பருகி ஞர் ஆயுள் நீடல் குறித்தது. (27)

42. விழுக்கபில னவ்வை மிளைக்கந்தன் கீர
னிழுக்கரிய வாய்மை யெனையோர்—வழுத்துபற
நாடும் பறம்பு நறுஞ்சுனையும் புல்லியேன்
பாடுந் துணிவோ பழுது.

(இ-ள்.)—விழுக்கபிலன்—புலவருள் விழுப்பமுள்ள கபிலன்; விழுப்பத்தை மற்றை மூவர்க்குமேற்றினு மமையும்; மிளைக்கந்தன்—காவற்காட்டுக் கந்தன்; கீரன்—நக்கீரன்; இவரும், இழுக்குதலில்லாத வாய்மையினையுடைய எத்துணையோ புலவரும் கண்டு வழுத்து பறநா டும், பறம்பும், நறுஞ்சுனையும் என்க. அறிவானும் வாய்மையானும் காலத்தானும் இறப்பப் பிற்பட்ட புன்மையேன் காணது பாடும் துணிவோ பழுதாம் எ-று. வாய்மை எனையோர் என்றதனுல் அவர் கண்டவாறே கூறினர் என்பது. கபிலன் பறநாடும் பறம்பும் பாடியன புறப்பாட்டிற் காண்க. ஔவையுங் கீரனும் பாடியன அகப்பாட்டிற் காண்க. மிளைக்கந்தன் சுனைபாடியது குறுந்தொகையிற் காண்க. எனை யோர் என்றது பெருஞ் சித்திரனுர், சிறுபாண் பாடிய நல்லூர்நத்தத்த ஞர் முதலியோரும் அடங்கல் வேண்டி; அவற்றின் வளத்திற் கேற்பப் பாடவியலாம லோய்தல் குறித்தது; "புலவர் பாடி யாணுப் பண்பிற்...பெருவிற லுடே" (புறம். 121) எனக் கபிலர் பாடுதலா னுண்மை யுணர்க. (28)

வேள்பாரி மேதகைமை.

43. மாரியோன் றண்மை மதிக்கோளி இ மற்றிவன்போர்
பாரியென் றிண்டைப் பகர்ந்தனராற்—சீருலகத்
தோன்றர்க் கிடித்து முறவோர்க் களிபெய்தும்
அன்ன னிலந்தாங்கு மாய்ந்து.

(இ-ள்.)—பகர்ந்தனர், பெயரிடற்குரிய பெற்றோரும் குரவரும் ஆகிச் சிறந்தார் என்க; புலவர் எனினு மமையும். பொருள் வேற்றுமை தெரியவே பெயர்வேற்றுமை யிடுவது என்க. ஈண்டு மாரியோடு பொருட்டன்மையில் ஒற்றுமை அடையாளங்களைக் கண்டும் பாரி யென்று மெய்ம்மாற்றம் செய்து இட்டது, வானத்துமாரியின் இந்நிலத்து மாரியாகிய வேளைப் பிரித்தறிதற்கு எ-று. ஈண்டை என்பது ஆண்டை மாரி என்பது குறித்தது. இனிப் பாரி மாரியாதலும் அதனிற் சிறந்து வேறாதலும் காட்டப்படும். இடித்தும் பெய்தும் நிலந்தாங்கியும் மாரி யாகியும், இடித்தல் பெய்தல் இவற்றை ஆராயாது யாண்டுஞ்செய்யாது தீது செய்தார்க்கும் நன்று செய்தார்க்கும் முறையே ஆய்ந்து தகச் செய்து நிலந்தாங்கலால் அம்மாரியிற் சிறந்து வேறாகியும் இவன் விளங் குதல்தேற்றியவாறு. இடித்தலால் அரசர்க்குச் சிறந்த தெறலும், பெய்தலால் அளியும் கூறியவாறு. நன்றுந்தீதும் ஆய்ந்தறிதல் வேந் தன் றொழில் ஆதலின் ஆய்ந்து என வேண்டிற்று. "எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும், வல்லறிதல் வேந்தன் றொழில்" (குறள் 582) என்பது நோக்கித் தெளிக. நிக்கிரகமும் அனுக்கிரகமும் இறைவன் செயலாதலின் அவன் அமிசமாகிய அரசன் அவற்றைப் பிழையாது அறிந்து தகச்செய்தல் உலகிற்கு இன்றியமையாதென்பது கருதி இங்ஙனங் கூறிற்று. சீருலகத்தொன்னார்—சீரிய உலகத்திற்குச் சேர்க்காத பகைஞர்; இவரை உலோகவிரோதிகள் என்ப. சீருலகத்துற வோர்—சீர்த்த உலகிற்கு உறவினராகிய பெரியோர். இவரை உலோக பெந்துக்கள் என்ப. இதனால் உலோகவிரோதிகளைத் தனக்குப் பகை ஞர் எனவும், உலோகபெந்துக்களைத் தனக்கு உறவினர் எனவும் இவ் வேள் கருதியது காட்டப்பட்டது. (29)

44. அடிவேராய்ப் பல்கு மருங்குடிக்கே டாக்கம்
வடிவார் முகத்தறிய மன்னு—மிடியாருங்
கேளிர் நிகர்த்துச் கெழுமத் தருவண்கை
வேளிர் குலக்கொழுந்தாம் வேந்து.

(இ-ள்.)—அரசிற்கு அடிவேராகிப் பலபடியிற் கிளைத்த அரிய குடி என்க. அரசையுந் தாங்கலாகிய பெருஞ் செயலால் அருங்குடி எனப்பட்டது. வேரின் தளர்ச்சியும் வளர்ச்சியும் மரத்தின் கொழுந் திற் காணநின்றாற்போலக் குடியின் கேடும் ஆக்கமும் இவன் அழகு நிறைந்த திருமுகத்தே காண நிலைபெறுவன் எ-று. குடியும் அரசும் வேறாகாது ஒரு மரமேயாமென்றும் குடி மரந்தாங்கும் வேரேயாமென் றும் அதன் தளர்ச்சி வளர்ச்சிதாம் அரசின் தளர்ச்சி வளர்ச்சியென்

றம் விளக்கியவாறு. மன்னும்—இவ்வாறு குடியோடு ஒற்றுமைபட்டறிய திறலான் நிலைபெறுவான் எ-று. மிடியாரும்—வறுமையாளரும். உம்மை இழிவு குறித்தது. இளைஞரை ஒத்துப் பொருந்தத்தருகின்ற வள்ளன்மையுடைய கை. தருவண்கை என்றது—வறியரையும் தன்னை ஒத்தவராக மதித்தல் குறித்தது. குடிவேர் என்றதற்கேற்ப அரசனாகிய பாரியைக் கொழுந்தென்று உருவகப்படுத்தியது காண்க. இராச்சியமாகிய மரம் குடியை வேராகவும் அரசனைக் கொழுந்தாகவும் கொண்டுள்ளது காட்டியவாறு. வேளிர் வரலாறு "வடபான் முனிவன் றடவினுட் டோன்றி, யுவரா வீகைத் துவரை யாண்டு, நாற்பத்தொன் பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே," (புறம். 201) என வருதற்கட் கண்டு கொள்க. குலக் கொழுந்து ஆகிய வேந்து மன்னும் என்க. (30)

45. ஊருணியுங் காரு முயர்தருவு நன்மருந்துங்
காருணிய மிக்குதவுங் கற்றாவுந்—தாரணியு
மேன்றிவைநேர் காண வெழிற்குணமே லாந்திரண்டு
சேன்றிவன்பா னின்றபயன் றோர்ந்து.

(இ-ள்.)—அள்ளியுண்ண ஊரார்க்கு எளியனாதலான் ஊருணி. வரையாது வழங்கலானும் இரவாது தருதலானும் கார். உயர்தரு—கற்பகம்: இரந்தார்க்கு இரந்த பொருளை நல்கலான். நன்மருந்து—தன்னுடல்முழுதும் பிணிதீர நன்மருந்தாகிய பூடு; 'மருந்தாகித் தப்பா' மரமும் (குறள்-217) ஆம். பாரி தன்னையேயீதல் பிற்கண்டு கொள்க. மிக்குதவும் காருணியக் கற்றா என்க. தனக்குப் புல்லிட்டார்க்கு அவ்வுதவியினும் மிகுத்துப் பாலை உதவும் கருணைச் செய்கையுடைய கன்றுடைய பசு எ-று. அடி யகழ்ந்தாரையுந் தாங்கலாற் றாரணி. நன்மருந்து என்றது ஆகுபெயர். "கன்மருங்கெழுந் தென்றுமோர் துளி வரக் காணு, நன்மருந்து போல்" என்றார் கம்ப நாடரும். (சுந்தர காட்சி. 3) "தீருமருந் தொன்றுளதேற் சென்றறிந்தோ ரம்மருந்தின் வேரும் பறிப்பர் விடலறியார்"* என்னும் பழம்பாட்டடிகளானுணர்க. "மரஞ்சாஅ மருந்துங் கொள்ளார்" (நற்றிணை. 226). எழிற்குணம்—குணங்கள் கண்டார் விரும்புதற்குக் காரணமாதல் குறித்தது. ஒவ்வொன்றினுள்ள நற்குணம் எல்லாம் சேரத் திரண்டுசென்று இவன்

* இது, பாண்டியர் கூடலையடுத்த கள்ளியம் பெரும்பதியிற் பண்டு வதிந்த தாழி என்னுந் தமிழ் வள்ளலைப் பாடிய பாவின் பகுதியாகும். இவனைப்பற்றிய இனிய அகவல் புறத்திரட்டிற் றொகுக்கப்பட்ட ஆசிரியமாலையினும் உண்டு.

கண்ணேநிலைக்கொண்டன, உலகிற்குப்பயன் இன்னதென்று தெளிந்து என்க. அஃறிணையா யவற்றினுள்ள இவ் வெழிற்குணமெல்லாம் உயர்திணையிற் சேரப்புக்குப் பயன்படுதல்கருதி இக்வேள்பாரி வடிவில் நிலைத்தன என்பது கருத்தாகக் கொள்க. காருணியக் கற்றா என்றது, "சிறந்த தன் றீம்பா லறந்தரு நெஞ்சொ டருள்சுரந் தூட்டு, மிதனொடு வந்த செற்ற மென்னை" (மணிமேகலை. 13, 53-5) என்பது கருதி வந்தது. ஊருணி பேரறிவாளன்றிருவிற்கு உவமையாதலான் (திருக்குறள், 215) ஐச்வரியமும், கார் கெடுப்பதும் எடுப்பதுஞ் செய்யவல்ல தன்மையால் வீரியமும், கற்பகம் இரந்தது தெரிந்து உதவலான் ஞானமும் நன்மருந்து தன்னையே நல்கலான் வைராக்கியமும், கற்றா மங்கலமாகிய தூய பொருள் ஐந்துந்தரலால் திருவும், தாரணி அகழ்வாரைத் தாங்கும் பொறையுடைமையாற் புகழும் என்னும் ஆறினையுங் குறித்து வந்தன. இவை இறைவற்கே சிறந்தன. அவனமிசமாகிய நல்லரசர் பாலும் இவை உண்டு என்று கருதியவாறு; பாரி இங்ஙனம் ஆதல் "தடங்கடன் மண்ணிற் றருமருள் விரும்பிய, சின்மென் கிளவித் தெய்வப்பாரியும்" என யாப்பருங்கலவிருத்தி மேற்கோட்கண் (95) வருதலான் அறிக. (31)

46. பொருடன்ன தென்றும் பொழிவான்றா னென்று
மிருடந்த மீக்கோணெஞ் சேண்ணா—னருடந்
திரந்தாரை யேத்திப்பின் னீயுந் தோறுந்தான்
புரந்தா னிலாதயலான் போன்று

(இ-ள்.)—ஐச்வரியம் ஈச்சுரனது என்றெண்ணாது அதனைத் தன்னது என நினையான்; இதனால் மமகாரம் இலன் எ-று. இரந்தார்க்குப் பொருள் பெய்பவன் தானென்று நினையான்; இதனால் அகங்காரமிலன் எ-று. இருள் தந்த மீக்கோள்-அஞ்ஞானந் தந்த பெருமிதம்; இவை மனத்திலெண்ணான் எ-று. இரந்தாரைக் கண்டவளவே முதற்கண் அருளைத்தந்து, தன்னைமதித்துத் தன்பா லெய்தியதற்குப் பல்படியாகப் புகழ்ந்து அவர்க்குப் பல்கால்நல்கும்போதும் தான் அவரைக் காத்தவனாகவில்லாது தானோர் ஏதிலன்போல நின்று, மீக்கோள் நெஞ்செண்ணான் என்க. "மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பாரம்" (கம்பர்) தான் சுமப்பதாக நினைப்பதல்லது இருள் தந்த பெருமிதம் எண்ணான் என்று கொள்க. பதிற்றுப்பத்து ஏழாம்பத்தின் முதற்கண், கபிலர் பாரியை, "ஈத்தொறுமகிழான்" என்றதனையும் அதற்குப் பழைய வுரைகாரர் "ஈயுந்தோறெல்லாம் தான் அயலா யிருத்தலல்லது ஈயாநின்றேமென்று ஒரு மகிழ்ச்சியுடையனல்லன்" என்றதனை

யும் கண்டுணர்க. பொழியான் தான் என்றும் என்புழிப் பொழிகின்ற மேகம் தானென்று பெருமிதமுடையான் கினைப்பன் எனவும் இவன் அங்ஙனம் எண்ணுன் எனவும் குறிக்கொள்ள கிற்றல் காண்க. மீக்கோள்-தன்னையே மேலாகக் கொள்ளுதல்.

செல்வமுள னல்லகுல சென்ம முளனுவல்
சிவனுபவ னென்றனொடு வேறெவ னுளானே
நல்குறுவல் வேட்பல்களி கூர்வலென வேய்ந்
ஞானமிகை யாலதிக மோகமுள ராவர். (கீதைப்பாடல் 16-15)

என்று ஸ்ரீகீதையில் இம்மீக்கோள் பழிக்கப்பட்டது காண்க. ஈயுந்தொறும் என்றது ஒருவற்குப் பல்கால் நல்கல் குறித்தது. (32)

47. எற்றூர் கருத்திற் கெழுபான் மடங்குமிகப்
போற்ரு தளித்துப் புறந்தந்து—மாற்றவிவர்க்
கேன்னீத்தே னென்றே யிரங்கு மிதுவல்லான்
மன்னீத்தே னென்றறியான் மன்.

(இ-ள்.)—ஏற்றூர்-இரந்தார்; "இலம்படு புலவ ரேற்றகைக் கிறைப" (மலைபடுகடாம்) எனவரும். கருத்திற்கு-கருதிய அளவிற்கு. எழுபான் மடங்கு என்புழி எழுபஃது உபலக்கணம். போற்ருது - தனக்கு நாளைக்கு வேண்டுமென்று போற்றிக்கொள்ளாமல்: தான் வாழ்தற்கேதுவாகிய பொருள்போற்றுதலைச் செய்யாது என்க. பொருள் போற்றித் தன்னைப்போற்றி வாழ்' என்னுங் கருத்தாற் "பொருடனைப் போற்றிவாழ்" என்ற அறவுரையானுணர்க. புறந்தந்தும் என்றது பொருளளித்தலே யன்றிப் பிறரால் தீங்குவாராது காத்தலைச் செய்தும் எ-று. ஆற்ற-மிக; "அமிழ்தினு மாற்றவினிதே" (குறள்) என்புழிப்போல. இதுவல்லால்-இச்சினையல்லால். மன் ஈத்தேன்-அதிகம் வழங்கினேன். மன்பின்னது அரசன். அதிகம் ஈத்தும் பொருளிழவாக எண்ணிவருந்தாமையே யன்றி இவர்க்குக் குறைபடத் தந்தேனென்று இரங்குதலுஞ் செய்வன் எ-று. இஃது "ஈத்த திரங்கான்" (பதிற்றுப்பத்து எ-க) எனக் கபிலர் கூறியதை விளக்கி யுரைத்தது. ஈத்தது- ஈந்த பொருள்; ஈந்தபொருட் கிரங்கான் என்றதனுல் இவன் ஈயாது வைத்துள்ளபொருட்கு இரங்குதல் அருத்தாபத்தியாற் குறித்ததாம். (33)

48. பெற்றதன் பின்னும் பேர்திரந்தா னல்கியவர்
மற்றவராய் மாறல் வழக்கேயாற்—கற்றவர்க்கா

தூவே ளிரக்குந் தோறுமிக் கருமுனிநல்
லாவே யெனச்சுரப்ப னுய்ந்து.

(இ-ள்.)—பெரிது பெற்றதன் பின்னும் இரந்தால் புலவர்க்குப பெரிதுபெற முன்னே நல்கியவர் அவர்க்கு நல்காராய் உலோவுதல் உலக வழக்கேயாம். கலைவல்லவர்க்குத் தனியே உரியனாகிய தூய வேள்பாரி பல்கால் ஏற்குந்தொறும் காமதேனுப்போல மிக்குச் சுரப் பன் எ-று. பல்காற் கறப்பினுஞ் சுரத்தல் அருமுனி நல்லாவிற்கு இயல்பு. "அருமுனிபா" (திருவள்ளுவமாலை) என்பது நல்லிசைப் புலவர் வழக்கு. அருமுனி-மனன சீலத்தா லரியனசெய்ய வல்லவன். "ஜபிப்பவர்க்குட் சிறந்தோன் வசிட்டன்" என்பது வான்மீகர்கருத்து. நல்ஆ என்றது, அயன் வளர்த்த நந்தினி என்னும் பசுவிற்குந் தாயா தற் சிறப்பு நோக்கி. தூவேள் என்றது நல்லாவொடு உவமித்தற்குரிய தூய்மையுடையன் என்பதுபற்றி; "ஆனின்மேய வைந்துநீ யவற்று ணின்ற தூய்மை நீ" எனத் திருமழிசைப்பிரான் பணித்தலாற் பசுத் தூய பொருளுடைமை யறியலாம். ஆய்ந்து-புகழ் நிலைத்தலும் பொரு ணிலைபாமையும் ஆராய்ந்து; "நில்லா வுலகத்து நிலைமை தூக்கிப் ...பரிசி றரீஇ விடுக்கும்" (பெரும்பாண்) என்டதை ஈண்டுநோக்குக. இது கபிலர் "ஈத்தொறு மாவள்ளியன் (7-1) எனப் பதிற்றுப்பத் திட் கூறியதை விளக்கியது; ஈண்டு ஈயுந்தோறு முன்னதற்கதி கமான பெருவண்மையையுடையன் என்று கூறியது காண்க. (34)

49\. தமஞ்சூ ழிறும்புடைத் தண்பறம்பு முற்றுங்
கமஞ்சூன் முகிற்றொக்க காட்சி-நமன்சூழும்
விற்பிரியாச் செங்கைவேள் மேன்பாரி வண்கொடை
போற்பறிவான் புக்கதுவே போன்ம். [நன்

(இ-ள்.)—தமம் சூழ் இறும்பு-இருள்சூழ்ந்த குறுங்காடு; "இறும்பு பட்டிருளிய...சிலம்பின்" எனவரும். கமம் சூல் முகில்-நிறைந்த கருக் கொண்ட மேகம். தொக்க காட்சி-திரண்ட தோற்றம். கூற்றம் சுற்றும் வில்பிரியாத கை எனவும் பல்காற் கொடுத்தலாற் சிவந்த கை எனவுங் கொள்க. வண்கொடையின் நன்பொற்பு-வளமிக்க கொடையின் நல்ல அழகு. இது மேகம்போற் கெடுக்காது எடுத்தலான் உளதாவது; இடி யும் வில்லும் உடைமையால் மறமும், கொடையால் அறமும் ஒப்பன வாகவும், பாரியைத் தன்னினும் புலவர் மிக்குப் பாராட்டுதல் என் என்று மேனின்று அவன் கொடையின் நன்பொற்பினைக் காணப் புக்கதுபோலும் எ-று. நமன் சூழும் வில்லுடைமையோடு மென்மையு

முடையன் என்பது தோன்ற மென்பாரி எனப்பட்டது; "நீரினு மினிய சாயற்பாரி" (புறம்-105) எனக் கபிலர் பாடுதல் காண்க. "சின்மென் கிளவித் தெய்வப்பாரி" என வருதலானும் இவன் மென்மை யறியலாம் (யாப்பருங்கல விருத்தி, 95, உதாரமேற் கோள்). (35)

50. களியா மயிலாலக் காண்குயில்வாய் கூம்ப
விளியாத கூத்தின் மிளிர்வான்—றெளியாதே
பாணர்க்குங் கூத்தர்க்கும் பாங்கொத்த பாரிவேள்
யாணர்க் கொடையி னியல்பு.

(இ-ள்.)—தன்னைக்கண்ட மயில்கள் களித்து ஆடவும், கண்ட குயில்கள் களிப்பின்றி வாய்திறவாது ஒடுங்கவும் காரணமாகி, இசையொடு சேராத ஆடலின் மிளிர்கின்ற முகில் தெளியாதே என்க. ஆலக் கூம்ப மிளிர் வான். பாணர்—இசைவல்லவர். கூத்தர்-ஆடல் வல்லவர்; இவ்விருவர்க்கும் பாங்கொத்த-நலன் செய்தலிலொத்த. யாணர்க் கொடை-அழகிய ஈகை. வான், இசைக்குங்கூத்திற்கும்ஒத்த பாரி கொடையினியல்பு தெளியாது எ-று. குயில்கள் முகிலைக்கண்டு வாய் கூம்பல் "கூய வாய்க்குரல் குறைந்தபோற் குறைந்தன குயில்கள்" எனக் கார்காலவரவிற் கம்பநாடர் பாடுதலானறிக. "விளியாதான் கூத்தாட்டுக் காண்டல்...ஊமரெல்லா நோவ துடைத்து" என்பது திரிகடுகம். விளித்தல்-இசைத்தல். மிளிர்தல்-மின் விட்டு விளங்குதல்: இது விளியாத கூத்தினைக் கண்டு மேகம் மகிழ்ந்து முறுவலித்தலைக் குறிப்பானுணர்த்திற்று. (36)

51. காழ்க்குத்தி னில்லாக் கடாஅக் களிற்றொருத்தல்
யாழ்க்குத் தணிந்த வியல்போக்கும்—போழ்க்குத்தும்
வேற்றானை வேந்தர் விறற்கடங்கா வேளிசையா
லேற்றார்க் கெளிவந்த வஃது.

(இ-ள்.)—வயிரக்கோலின் குத்தின்கண் நெறியில்லாத மதக்களிறாகிய ஒருத்தல் என்க. ஒருத்தல்-யானையிற்றலைமையாயது; இதனை யூதபதி என்பர் வடநூலார். இது யாழ்வாசினைக்கு அடங்கிய தன்மையை ஒக்கும் எ-று. "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல், யாழ்வரைத் தங்கியாங்கு" என்பது கலி (பாலை-க). போழ்க்குத்தும் வேற்றானை-பகைவர் மார்பைப் பிளந்து குத்தும் வேற்படை; போழ்க் குத்தும் என்பது 'வரிப்புனைபந்து' (முருகாறு) என்புழிப்போலக் கொள்க; போழக்குத்தும் என்பது மரீஇயிற்றெனினு மமையும். இசையா லேற்றார்க்கு - இசைசெய்தலுட னிரந்தவர்க்கு. 'எளிவந்

இஃது எளியனாகிய இந்நிலை; இஃது இயல்பொக்கும் என்க. இஃது தென்றது முற்பாட்டிற் பாணர்க்குங் கூத்தர்க்கும் பாங்கொத்துக் கொடைக் கெளியனாகிய நிலையினைச் சுட்டியது. வேந்தர்விறற் கடங் காமை கூறியது, இவன் 'பெருவிறல்' (பதிற்றுப்பத்து. 7-1) என்பது பற்றி. இது "வேந்தர்க்கின்னாகிய வினியோன்" (புறம். 115) என்று கபிலர் பாடியதைத் தழீஇவந்தது. (37)

52. வான முழக்கின் மயில்கண் மகிழ்ந்தாலு
மேனை யரவ மிரிந்தோடுந்—தானை
முரசொலியின் வேள்பாரி மொய்பகைகேட் டோடும்
பரிசிலருள் ளின்புறுவர் பார்த்து.

(இ-ள்.)—வானமுழக்கின்-மேகத்தின் முழங்கொலியின்: மயில்கள் களித்தாடும். ஏனையரவம்-அம்மயிலுக்குப் பகையாகிய அரவம்; "மஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கு" என்பது திருக்கோவை. தானைமுரசு-படைமுரசு. பரிசிலர் முரசொலியைக் கேட்டவுடன் பகையோடுதலையும் பார்த்துத் தம் உள்ளே யின்புறுவர். வள்ளியோனாகிய பாரிக்குப் பகைஞர் பரிசிலர்க்கும் பகைஞராதல் உய்த்துணர்க. இஃது எடுத்துக் காட்டுவமை. வேள்பாரி-இடைநிலை விளக்கு; பாரி தானைமுரசு, பாரிமொய்பகை என இயைதல் காண்க. பாரிதானை முரசு என்பது ஆறுவது பின் முன்னாகத் தொக்கது; "தேம்பற்றுடியிடை மான்மட நோக்கி (திருக் கோவை) என்பது 'மான்மட நோக்கி தேம்பற்றுடியிடை' எனக் கொள்ள வருதலான் அறிக. பரிசிலர் மயில்களாகவும், பகை அரவம் ஆகவுங் கொள்க. (38)

53. தன்னிரந்தார் நீள்சீர் தனக்கீத் தவரென்று
கன்னிரந்தார் தோளான் கருதியதா—லன்னவர்தாம்
துன்னாது கொன்னே தொலைபகலொன் றுண்டாயின்
இன்னாநோய் கூரு மிளைத்து.

(இ-ள்.)—தன்னை ஒன்று இரந்தவர் நீள நிலைத்தற்குரிய புகழைத் தனக்களித்தவரென்று கருதியதனால் எ-று. நீள்சீர் என்றதனால் இரந்தவர் கொள்வது நீளநிலைப்பதில்லாத பொருள் என்பது குறித்தது; "காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப், பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை, யாகாப் பொருளை யவரளித் தாண்புகழா, மேகாப் பொருளளித்தேம் யாம்" என்பது சயங்கொண்டார் பாட்டு.

விரந்து கல் ஆர் தோளான்—விரல்பட்டுக் கல்ஆர்ந்த தோள்களை யுடையான். விரத்தல்--இருதோளும் தம்முளொத்தல். கொடையாளுதற் கேற்றவாறுபோலப் படையாளுதற் கேற்றபடியும் குறித்தது. அன்னவர்—அவ் விரவலர். துன்னுமையால் வாளாகழியும் நாளொன்று உள்ளதாயின். கொடையில்லா தொழியுநாள் இரவலர் துன்னுமையாலாவதன்றி வேறில்லையென்று கொள்ள வைத்தவாறு. கொன்னே தொலைபகல் என்றது வீணுள் என்பது கருதிற்று. பகலொன்று என்பது ஒன்றுக்கு நோய்கூர்பவன் பலவாயிற் பிழையான் என்பது குறித்தது. இளைத்து இன்னு நோய் கூரும்—நெஞ்சிளைத்து இன்னு நோய் மிகுவன் எ-று. உள்ளமும் உடலும் வருந்தல் கூறிற்று. "இல்லார்க் கொன்றீயா தொழிந்தகன்ற காலை...நோயே யுரனுடை யார்க்கு" (திரிகடுகம் 44) எனப் பிறர் கூறியதனுலுணர்க. சுன்னிரந்தார் தோளாருயினும் கொடை விகழாமைதோறும் இளைத்து நோய்கூர்வன் எ-று. "பாடிச் சென்ருஅர் வரறே நகமலர...ஈதலானு விலங்கு தொடித் தடக்கைப் பாரி" (புறம். 337) என்புழிப் புலவரிரவலர் வரல்தோறும் அகமலர ஈதலமைபாத பாரி என்றதனுல் இத்துண்மை நன்கறியலாம். வரல்தோறு அகமலர்தல் வாராமைதோறும் அகமிளைத்தலைக் குறித்து நிற்றல் காண்க. உண்டாயின் என்றது உண்டாதலருமை யென்பது காட்டிற்று.　(39)

பாரி வாழ்க்கைத்துணை.

54.　பொற்பிற் கணியாய்ப் புகழ்மணஞ்செய் பூங்கொடியாய்க்
கற்பிற் கரசாய்க் சமைக்கிடனு—யற்புக்கு
மன்பிரிவான் வாழா மகன்றில்போன் றின்னமிழ்தாங்
துன்பிரிவான் வாழ்க்கைத் துணை.

(இ-ள்.)—அழகு அணியப்பட்டதாயது இவ் வாழ்க்கைத்துணையின் தூயமெய்யினை எய்திய பின்னுதலின் பொற்பிற்கு அணி எனப்பட்டது. புகழாகிய மணத்தை உலகிலுண்டு பண்ணும் பூவுடைய கொடி; ஈண்டுப் பூக்கள் இவள் நற்குணங்கள் என்க. பாரிக்குப் பீடுநடைதர வல்லளாதலானும் அவனையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்தலானும் புகழ்மணஞ்செய் பூங்கொடியாயினள். அறமும் மறமும் உடைய தன்மைபாற் கற்பிற்கு அரசாயினள். அரசொப்ப அளியும் தெறலும் கற்பிற்கும் உண்டாதல் தெளிக. பொறுமைக்கு உறைபுளாய் எ-று. இடன்-நிலனெனினுமமையும். அற்புக்கு மகன்றில்போன்று. தன்றலைவன் பிரிவினல் உயிர்வாழாத மகன்றிற்பெடை ஒத்த், "மகன்றி லன்ன வுடன்புணர் கொள்கை" (ஐங்குறு), "துணைபிரிமகன்றிலொத்தாள்"

(சிந்.) என்பன காண்க. துன்பு இரிவான் வாழ்க்கைத்துணை இன் அமிழ்தாம்- துன்பம் தன்கண் எய்தாது இரிதற்குக் காரணமானவன் இல்வாழ்க்கைக்குத் துணையாயுள்ளவள் அவற்கு இனிய அமிழ்தமாகும் எ-று. "கற்புடைய பெண்ணமிழ்து" என்பது சிறுபஞ்சமூலம். துணை, அணியாய்க் கொடியாய் அரசாய் இடனாய் மகன்றில் போன்று இன்னமிழ்தாம் என்க. இவள் பொற்பும் புகழ்ச்செயலும் கபிலர் பதிற்றுப்பத்துள் "ஒவத்தன்ன...நல்லோள் கணவன்" (ஏழாம்பத்-1) என இவளை யிட்டுப் பாரியைச் சிறப்பித்தவாற்றா னறியலாம். ஆண்டு அவர் "வினைபுனை நல்லிற்பாவை யன்ன நல்லோள்" (ஷை) எனக் கூறுதலான் இவள் கற்புமேம்பா டுணரப்படும். நல்லிற்பாவை-இல்லின்கண் வைத்து வழிபடுதற்குரிய நல்ல தெய்வப்படிமை என்றவாறும்; பாவை படிமையாதல் "அணங்காகுந், தான்செய்த பாவை தனக்கு" (பழமொழி) என வருதலானறிக. வறுமைக் காலத்தும் இல்வாழ்க்கைப் பாரத்தைத் தாங்கியுய்த்தவாற் கமை யறிக; இது 'பொன்றுந்து புகாநல்கிய திறத்தால்" உணர்க. அத்திறத்தானே பாரிகருத்திற்கு இனியளா யொழுகியதுந் தெரிக. பிரிவின் வாழாது அவனுடன் விண்சேறலான் இவள் மகன்றில்போன்ற அற்பு அறியலாம். துன்பிரிவான் என்றது "இல்லதெ னில்லவண் மாண்பானல்" (குறள்) என்பது கருதிற்று. வாழ்க்கைத்துணை—பெருவாழ்வினுஞ் சிறுவாழ்வினும் கணவற்கொத்த துணையா யொழுகுபவள். பொற்பிற்கணியாய் என்றதனால் திருவும், புகழ்க்கொடி என்றதனாற் புகழும், கற்பிற்கரசு என்றதனால் வீரியமும், கமைக்கிடன் என்றதனால் ஞானமும், பிரியின் வாழாமகன்றில் போன்று என்றதனால் வைராக்கியமும் இன் அமிழ்து என்றதனால் இன்பந்துய்த்தற்குரிய ஐச்வரியமும் என்னும் ஆறும் பாரிக்குக்கூறியாங்கு அவற்கொத்த வாழ்க்கைத்துணைக்கும் கூறியவாறு நோக்கிக் கொள்க. (40)

55. பேருக்கு நல்லார் பிறராவர் மற்றிவளோ
யாருக்கு நல்லா ளெனவிசைப்ப—வோர்வா
ரருளுள் வழிச்சே றறமென்னப் பாரி
பொருளுண் டெனவினிக்கும் போன்.

(இ-ள்.)—பிறர்–கணவருக்கும் உலகோருக்கும் அறத்தாற்றில் நன்மை செய்பவரல்லாத பிறமகளிரும்; பேருக்குமட்டும் நல்லார் ஆவர். இவளோ—ஒ, வியப்பு. யாருக்கும்–பாரிக்கும் உலகோர்க்கும். நன்மையள் எனக் கபிலர் புகழ்ந்துரைப்பர். அவர் "நல்லோள் கணவன்" (பதிற்-7-1.) என்றதுகொண்டு அதுவே காரணக்குறி பென்று காட்டியவாறு. பெண்டிர்க்கெல்லாம் நல்லார் என்பது பெயராதல்" நல்ல

வர் நாணுப் பிற" (குறள்) என்பதனானறிக. ஓர்வார்—நன்றுந் தீதும் பகுத்துணர வல்லார். அருளுள்ள இடத்துச்சேர்ந்த அறம் இவளென்னவும், பாரி எந்நிலையினுந் தனக்குச் சிறந்த பொருளுண்டென்னவும் பொன்போன்றவள் இனிக்கும் என்க. அறக்கிழத்தியாதற் சிறப்பினை அறமே யிவளென்று ஓர்வார்கூற்றில் வைத்துக் காட்டியபடி. ஒருவன் எய்தும் சிறந்த பொருள்களுள் நல்லாளாகிய இல்லாளின் மேம்பட்டது எதுவும் இல்லாமையைப் பாரிகூற்றில் வைத்துக்காட்டியவாறுணர்க. பொன் இனிக்கும் என்றது பொன்னாதலுடன் அதன்கணில்லாத இனித்தலையும் இவள் செய்வள் எ-று. இதனால் இவள் அறம்பொருள் இன்ப மூன்றும் ஆதல் காட்டியவாறும். இவளை அறமென்றதற்கேற்பப் பாரியை அருளாக வைத்தது நோக்கிக்கொள்க. ஓர்வார் என்பதனை இடைநிலை விளக்காகக் கொள்ளினும் அமையும்; ஓர்வார் இசைப்ப எனவும் ஓர்வார் அறமென்ன எனவும் கொள்க. மாண்புடைய இல்லவள் பொருளாதல் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மையுண் டாகப் பெறின்" (குறள்) என்பதனானும் அதற்குப் பரிமேலழகருரைத்ததனானும் உணர்க. இவ்விரண்டானும் யாருக்கும் நல்லாளாதல் காட்டியபடி. (41)

56. இருவ ருயிரொன் றெனவியைபே ரன்பே
மருவி யுருவெடுத்த மாண்பார்—நிரம்பினா
ராய்வறிவார் நன்மகளி ரங்கவையுஞ் சங்கவையுந்
தேய்வறியா வீர்ங்கதிரிற் சீர்த்து.

(இ-ள்.)—உடலான் இருவராயினார்க்கும் ஒருயிர் என்று சொல்லும் வண்ணம் இயைந்த பெரிய அவ்விருவருடைய அன்பே தம்முட்டழுவி வடிவெடுத்த மாட்சிமையினர் எ-று. "உயிரொன்றாகிய செயிர் தீர்காதல்" என்றார் பெருங்கதையினும் (உழைச்சன் விலாவணை, 77.) பாரி நல்லாள்பால் வைத்த அன்பும் நல்லாள் பாரிபால் வைத்த அன்பும் இருமகளிராக உருவெடுத்தல் குறித்தது: அன்பின் விளைவே மக்கள் என்று கூறியவாறு. மாண்பு ஈண்டு மனமொழிமெய்களின் தூய்மை. ஆய்வு அறிவார்—அறிவறிவார்; அறிவறிதற்கேற்ப நன்மையையுடையராயினரென்றற்கு நன்மகளிர் எனப்பட்டது. நன்மகளிராகிய அங்கவையுஞ் சங்கவையும் நிரம்பினார் என்க. நிரம்புதல்—கல்வியறிவொழுக்கங்களான் நிறைதல். தேய்தலறியாத குளிர்ந்த கதிராகிய மதியினுஞ் சிறந்து நிரம்பினார். மதியிற் கலைநிரம்பினார் என்பதூஉம் அமையும்; "திங்களன்ன கல்வியும்" (ஆத்திரையன் பேராசிரியன் பொதுப்பாயிரம்) என்ப. மகளிர்க்கு மதியை உவமித்தல் தமிழ் வழக்காதலும் உணர்க

"முதிர்கடன் ஞால முழுவதும் விளக்குங், கதிரொருங் கிருந்த காட்சி போல" எனச் சிலப்பதிகாரத்துக் கோவலனையுங் கண்ணகியையும் ஞாயிறும் திங்களுமாக இளங்கோவடிகள் கூறினர். கணிமேதாவியாரும் திணைமாலை நூற்றைம்பதில் "வெஞ்சுட ரன்னனை யான்கண்டேன் கண்டாளாந், தண்சுட ரன்னளைத் தான்" எனத் தலைவனையுந் தலைவியையும் வெஞ்சுடரும் தண்சுடருமாகக் கூறினர்; இவை கொண்டுணர்க. தேப்வறியா ஈர்ங்கதிர்—இல்பொருளுவமை. சீர்த்தல்-மறுவற்று விளங்குதல்; "ஆய்தொடி யரிவையர் தந்தை" (புறம்-117.) எனப் பாரியை இவர் தந்தையெனச் சிறப்பித்த நயத்தாலுண்மையுணர்க. இனிக் "கொடிநிலை கந்தழி வள்ளி" (தொல் புறத் 33.) என்பதனுரையில் நச்சினார்க்கினியர் வள்ளி—தண்கதிர் மண்டிலம் எனக் கொண்டு "பெண்பாற்றெய்வமும் 'வள்ளி' என்னுங் கடவுள் வாழ்த்தி னுட்படுவனவாயின......திங்கள் நீரின்றண்மையும் பெண்டன்மையும்உடைமையான் என்பது" எனக் கூறியதனுனும் "சந்திரனே தாயாக.........கதிரோன்றந்தையா" என்னுஞ் சினேந்திரமாலைத் தொடரானுந் திங்களின் பெண்மை யுணர்க. (42)

57. அஃகா வருளி னறப்பயன் வாய்த்தாங்கு
வெஃகா வெகுளா விழுக்குணனார்ந்—தேஃகாய
மாண்ட வறிவோர் மனைவி மகளிருட
னீண்ட புகழ்விளைத்தா னின்று.

(இ-ள்.)—அஃகா அருள்—எந்நிலையினுங் குறையாத கருணை. இதனை லறமென்னும் பயன் கிடைத்தாற்போல. வெஃகா வெகுளா விழுக்குணன் ஆர்ந்து—தன்னலங் கருதி ஒன்றை விரும்புதலும் தன்னிடர் கருதி ஒன்றை முனிதலும் இல்லாத சிறப்புடைப் பண்பு நிறைந்து. விழுக்குணன் என்றது வேண்டுதல்வேண்டாமையிலாமை தெய்வ குணமாதல்பற்றி. நின்று—நிலைபெற்று. அறிவு ஒர் மனைவி மகளிர்—அறிவறிந்த மனைவியும் மகளிரும்; அறிவோருடன் எனினுமமையும். நீண்டபுகழ்—உலகஞ் சிறிதென்னத் தான் பெரிதாக நீண்ட இசை: இதனையே "மண்டேய்த்த புகழ்" (சிலப்-மங்கல) என இளங்கோவடிகள் வழங்குவர். நிலவெல்லை சிறிதாக நீண்டபுகழ் என்னுங் கருத்தால் வள்ளுவனாரும் "நிலவரை நீள்புகழ்" (குறள். 234) எனக் கூறுதல் காண்க; மண்ணளவினும் நீண்டபுகழ் என்று இதற்குப் பொருள் கொண்டு "புகழ்வளரப் பூமிசிறுகலான் மண் இடத்திற் சிறிது என்றார் வள்ளுவனாரும்" (சிலப்-மங்கல) என அடியார்க்கு நல்லார் விளக்குதல் காண்க. மகளிரொடு என்புழி ஒடு அவருடர்பு குறித்தது;

இக்காதை அவர் கண்ணுலங்கூறி னிறைவேறுதல் காண்க. எஃகாய பாண்ட அறிவு—நுண்ணிதாகிய மாட்சிமைப்பட்ட அறிவு. "நுண்மா ணுழைபுலம்" (குறள்) என்ப. அறப்பயன் வாய்த்தாங்குப் புகழ்விளைத் தான். இல்லறத்திற்குப் பயன் புகழ் என்பதுணர்க. ஈண்டுப் புகழுள்ள வரைத்தான் ஆண்டுத் துறக்கத்து வாழ்வுண்டு என்ப. (43)

58. கேடில் விழுச்செல்வர் கேளிர்போற் சூழ்ந்தொளிர
வீடில் பெருமகிழ்க்கண் வீற்றிருந்தா—னீடிசைவேள்
சீரெல்லாம் பாடத் திறனிலேன் சொல்வலவன்
றேர்முல்லைக் கீத்த திறம்.

(இ-ள்.)—கேடில் விழுச்செல்வர்—கெடுதலில்லாத சிறந்த செல்வமாகிய கல்வியையுடையவர்; "கேடில் விழுச்செல்வங் கல்வி" (குறள், 400.) என்ப. கேளிர்போற் சூழ்ந்து ஒளிர—கிளைஞர்போல ஆராயப் பட்டு விளங்க. சூழ்தல்—ஆராய்தல். "சூழ்வார் கண்ணாக" (குறள், 445.) என்ப. கேளிர்போல் என்றதனால் அவர் சூழ்ந்தொளிர்தல் கூற வேண்டாதாயிற்று: இதனாற் சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகலும் உடன்கூறியவாறு. வீடுதலில்லாத பெரிய மகிழ்ச்சியின்கண் வீறுட னிருந்தான் என்க. இவ்வித வாழ்க்கையில் இடையீடில்லாத பெரு மகிழ்ச்சி யுண்டேனும் அதனை அடக்கி ஆதனமிட்டிருந்தான் எ-று. பொருளின்பங்களால் உண்டாம் களிப்பினை அடக்குதலை ஆநுத் தர்ஷம் என்பர் வடநூலார்: வீறு—அம்மகிழ்ச்சியையும் அடக்கவல்ல வீரியம்: வேள் நீடிசைச் சீரெல்லாம் பாட வலியிலேன் எ-று. பாடவிய லாமைக்கு நீடிசைச் சீர்கள் தவப்பலவாதல் ஏது என்பது காட்டியது. ஒன்றிரண்டு கூறப்புக்கு முதற்கட் டேர்முல்லைக்கு ஈத்த திறஞ் சொல் வல் எ-று. இரவாமலே ஓரறிவுயிரின் றடர்கண்டு தானே தேர்தந்து நாங்குதலாற் றலைமையில் வைக்கப்பட்டது: கபிலரும் பிறரும் பல்விட த்தும் இதனையே சிறப்பித்து முதற்கட் பாடுதல் காண்க. இசை தன் பெருமையாற் பாடுவார்க்கு அச்சம் விளைப்பது "நன்னலம்......பாடா திருந்தார் பரிவஞ்சும் படியது" என நீலகேசியுள் வருதலானும் அதற்கு வாமனமுனிவர் "புகழாவிருந்தார் முற்றப்புகழ்கில்லே மென்றஞ்சுவது" எனவுரைத்ததனானும் உணரலாம். (44)

வளம்பாடுதிறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள் 44.

---

## 3. தேர்முல்லைக்கீத்த திறம்.

59. தண்பறம்பி னோர்சார் தழைகான் வளங்காண [பூண்
விண்புரந்த நன்கோடைவேள் வெஃகினான்—பண்பரி
டேரிவர்ந்து சென்றான் செழுங்கார்ப் பொழுதந்தித்
தாரிவர்ந்த தோளான் றனி.

(இ-ள்.)—சிறுபொழுதின் முழுதுங் காண்டற்கரிதாதலின் ஓர் சார் எனப் பட்டது. கான்தழை வளம் என்க. காணவெஃகினான்—பார்க்க விரும்பினான்; "செல்லான் கிழவனிருப்பி னிலம்புலந், தில்லாளி னூடிவிடும்" (குறள்) என்றதனால் இவ்விருப்பம் வேந்தர்க்கு வேண்டப்படுதல் காண்க. காடு காணவெஃகுதல் கூறியதனான் நாடு காண் விருப்பம் கூறாமலே உளது பெறப்படும். கார்ப்பொழுதந்தி—கார்ப் பருவத்து அந்திப்பொழுதில். கார்பெய்ததனாற் கானம் தழைத்தவளங் காண வேட்டான் என்பது குறிப்பு. காடுறையுலகத்திற் கேற்பக் கார்ப் பருவமும் அந்தியும் வந்தன. "காரு மாலையுமுல்லை" என்பது தொல் காப்பியம் (அகத்-6.) முல்லை கொடிவிட்டரும்பீனும் பருவமும் அஃ தாதலுணர்க; "கொண்டல் வளர்ப்பக் கொடிவிடு கவினி" என்பது மதுரைக்காஞ்சி. தேர் ஊர்தற்குத் தக்கது இறங்குவெயின் மாலைப் பொழுதாதலும் உணர்க. விண்புரந்த நன்கொடைவேள்—மேகத்தைப் புரத்தற்குக் காரணமான நன்மை பயக்குங் கொடையறத்தையுடைய வேள்பாரி. "மழைவளந்தரூஉ மாவண்டித்தன்" (அகம்-6.) எனக் கூறு தல் காண்க. பண்பரி பூண்டேர்—அலங்கரிக்கப்பட்ட புரவிபூண்டதேர். தேர் ஈர்த்தற்கண் அதற்குள்ள விருப்பந்தோன்ற நின்றது; பரி பூட்டு தேர் என்னாமை காண்க. தாரிவர்ந்த தோளான் என்பது அவன் என் னுஞ்சுட்டுப் பெயர்மாத்திரையாய் நின்றது; "சீவக சாமி யென்பான்" என்றதன்பின் "வானேற நீண்ட புகழான்" எனச் சிந்தாமணியுள் வந்தது போலக்கொள்க. தாரிவர்ந்த தோளான் என்றது அக்கானந்தழை வளத்தாற்றந்த மலர்களைத் தொகுத்த தோண்மாலையுடையனாதலான் இவ்வித எழிலும் மணமும் உடைய செவ்விமலர் பூத்த காட்டினைக் காணவேட்டான் என்றியைபு படவந்தது; "கான்பயந்த கண்ணிக்கடு மான்றிரையனை" (பெரும்பாண். வெண்பா) என வருதல் காண்க. குதிரைக்குச் செலவு பயிற்றவும் தான் கான்றழை வளங்காணவுஞ் சென்றான் என்பது குறிப்பு. தாரிவர்ந்த் தோளிற்பாரிவர்ந்துள்ளதாத லின் அத்தார் தந்த பாரினைக்காண விரும்பிச் சென்றானென்றலும் ஒன்று; இவ்வாறு கொள்ளவைப்பதனை நோக்கு என்பர் தொல்காப்பிய னார் (செய்-104.) தண்பறம்பு—கார்ப்பருவத்திற்கேற்ற குளிர்ந்தி

குறித்தது. விண்புரந்த நன்கொடை—அக்காரினை ஈண்டுத்தருதற்கு ஏதுக் குறித்தது. சான்தழைத்தலும், தாரும் காரின்பயனுதல் குறித்தன. உலகு காத்தலாற்கார் தோளிற்கு ஒப்பாதலும் நோக்கிக்கொள்க. தனி என்றது பாகனும் பரிகரமுமின்றித் தான்மட்டுஞ் சென்றான் என்பது குறித்தது. காட்டி னியற்கையழகைத் துய்த்தற்கண் இத்தனி நிலையே சிறந்ததாதல் உய்த்துணர்க. மேல் நிகழும் கொடைக்கும் இத்தனிமையே சிறந்ததாதல் தேர்ந்துகொள்க. வேந்தர் தேரிற்றனிச் சேறலுண்டு எனபது "தாதுண்பறவை பேதுறலஞ்சிமணிநா வார்த்த மாண்வினைத்தேரன்" (அகம் 4.) என்பதுபோல வருமிடங்களிற் காண்க. தண்பறம்பினோர் சார் தழைகான் என்றது "குன்றங்கவைஇய வங்காட் டாரிடை" (அகம்-14,) என்பது கருதி வந்தது. காருக்கு முல்லை அரும்பீன்றலர்தல் "முல்லை வைந்நுனை தோன்ற......கார் செய்தன்றே கவின்பெறுகானம்" (அகம் 4) "ஆலித்தண்மழை தலைஇய வாலிய மலர்ந்த முல்லையுமுடைத்தே" (ஐங்குறுநூறு) என்பன வற்றாலறிக. காடுகாண்டல் வேட்கை நன்மக்கட்குண்டாதல் "நன்னல மெய்தினைபுறவே நின்னைக்காணிய வருதும் யாமே" என ஐங்குறு நூற்றுள் வருதலானறிக. முல்லை யரும்பவிழுஞ் சிறுபொழுதாதலின் அந்தி கூறப்பட்டது; "முல்லை, யரும்புவா யவிழும் பெரும்புன் மாலை" என்பது நற்றிணை (369.) (1)

60. தேந்தண் டுளிசிதறித் தென்ற லடிவருட
மாந்து மணமெதிர வண்டிசைக்கக்—கூந்தன்
மயிலாடக் கிள்ளை மகிழ்மிழற்றப் புக்கா
னயிலாடல் வேள்கா னகத்து.

(இ:ள்.)—தேந்தண்துளி சிதறுதலால் இவன் இதழினும் படுதல் குறித்தது; இதனால் வாய்க்குச் சுவை செய்தலும், தென்றல் அடி வருடலால் உடம்பிற்கு ஊற்றின்பமும், மணமெதிர்தலான் மூக்கிற்கு நாற்றமும், வண்டு இசைத்தலாற் செவிக்கு இன்னொலியும், மயிலாடலாற் கட்கினிய காட்சியும் கிள்ளை மகிழ்மிழற்றலான் மனத்திற்கினிமையும் கருதியனவாம். மக்கள் ஆறறிவுயிராதலின் அவ்வாறனுக்கு மின்பஞ்செய்தல் கூறிற்று. தென்றல் அடிவருட என்றதனால் வடக்கணின்று தெற்கட்புக்கான் என்பது குறிப்பு. கூந்தல்—தோகை "கூந்தன்மயிலன்னாய்" ஏலாதி. "இணிநெடுங்குன்றந் தேன்சொரியும்மே" (புறம்) என்பதனாற் றேன் சிதறுதல் பறம்பிலுண்மை அறிக. ஆடல் அயில்வேள்—வென்றி வேல்வேள். தன்னைக்காக்கும் வென்றிவேல் வேள் எய்தலறிந்து காடு இங்ஙனம் வழிபாடு செய்ததாக கூறின்றதாம்

வேல் பகைவெல்லற்கன்றி மரங்கொல்லற் கில்லாமை குறித்தது. "மாசொன்ற வெண்வேலான்" (கலி 27.) என்பதனால் வேலானுமரந் தடிதலுணர்க. மாந்துமணம்—வாரியுண்டற்குரிய நறுநாற்றம் வாயின் விளைபாற் கூறியது இம்மணத்தின் இனிமைக்கு நுகர்பொறி போதாது என்று காட்டியது. இசைக்க—பண்செய்ய. கிள்ளை நல்வரவு கூறுதல் போலத் தம் மகிழ்ச்சியை மிழற்று கிற்க என்க. தேந்தண்ணளியும், தென்றலும், மணமும் அஃறிணையுள் உயிரில்லன; வண்டும், மயிலும் கிள்ளையும் அத்திணையுள் உயிருள்ள புட்குலம்; இவை சேரவைக்கப் பட்டன காண்க. தளியும் மணமும் உய்த்தலாற் றென்றல் அவற்றிற் கிடையே வந்தது. மணம் எதிர—மணம் எதிர்கொள்ள; "குருகுவந் தெதிர்கொள" என்றார் சிந்தாமணியினும் (2104.) (2)

61. செழியாத் தழைகான் றிருவிருந்து செய்ய
விழைவாற் பருகி வியந்தான்—கழியாத
காதல் விளைக்கக் கடவுள் படைத்தளிக்குந்
தீதில் வனப்பின் றிறன்.

(இ-ள்.)—கான் செறிந்தத் தழைத்து என்க. திருவிருந்து—கண்டார் கண்வாங்க மாட்டாது விரும்பப்படுந் தன்மையையுடைய விருந்து: விருந்து—புத்துணவு. "திருந்துவேலண்ணற்கு விருந்திறை சான்மென" (மலைபடுகடாம்) என்புழிக்காண்க. விழைவான்—விருப்பத்துடன். பருகி விழைவொடு வியந்தான்; பருகினோர் பருகுவித்தாரை வியந்து பாராட்டல் உலகியல் என்க: ஔவை "பொய்யே, யடகென்று சொல்லி யமுதத்தை யிட்டீர்" என வியந்து கொண்டாடுதல் காண்க. கண்டார்க்கு நீங்காத காதல் மேன்மேல் விளையா நிற்கத் தெய்வம் உண்டாக்கிக் காக்குங் குற்றமற்ற பல்வகை யழகின் கூறுபாடுகளை வியந்தான் என்க. தெய்வம் படைத்தளித்தலாற் காடு மக்கள் படைத்தளிக்கு நாட்டினுஞ் சிறந்து தீதில் வனப்புடையது என்று கருதிவியந்தான் என்பது கருத்து. இருமனப்பெண்டிர் வனப்புப்போற் றீதில்லாதது எனினுமமையும். தீதில் வனப்பிற்கு ஏற்பக் கழியாத காதல் விளைத்தல் கூறிற்று. (3)

62. விலங்குங் குடிஞையு மேவிப் பயன்றுய்த்
திலங்கும் பயமரங்கண் டிஃதோ—நலங்கனிந்த
வள்ளற் பெருஞ்செல்வர் மாண்பிற் றேனவுவந்தான்
விள்ளற் கரும்புகழ்வேள் வேந்து.

(இ-ள்.)—நாற்கால் மிருகங்களும் இருகாற் பறவைகளும் கீழும் மேலும் மேவி, பயமரம் தன் கனிகளைத் தானுண்ணாது பிறருய்க்க நின்று விளங்குதல் கண்டு, அன்பு கனிந்த வள்ளற் பெருஞ்செல்வர் மாண்பினைறு என்றான். நலம்—அன்பு. "நன்னலம் மலர்ந்தேவைத்த நங்கையே" (பதுமை) என்பது சிந்தாமணி. கீழவும் உணவும் அடைந்த வுயிர்கட்குதவும் பயமரம் போல அவ்விரு வள்ளன்மைக்கும் பெருஞ்செல்வந் தொகுத்தவர் மாண்பு எ-று. கொய்யத்தழையும் மரம் போல வள்ளன்மை செய்யத் தழைத்துப் பெரிதாஞ் செல்வமுடையார் எனினுமமையும். மாண்பு—தமக்கென வாழாத மேம்பாடு. விலங்குங் குடிஞையும் இடர் செய்யினும் அவற்றிற்கு நிழலுங்கனியும் தருமாண்பு எனினுமமையும்; இம்மாண்பே "பயமரம்போற், பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே, நல்லாண் மகற்குக் கடன்" (நாலடி) எனப் பாராட்டப் படுதல் காண்க. ஓ—வியப்பு. விள்ளற்கு அரும்புகழ் வேள்—புகழ் தன்னைவிட்டு வேறு படுதலில்லாத வேள்" "விள்வார்—வேறுபடுவார்" (புறப்-வெ.) என்றான் மாகறலூர்கிழான் சாமுண்டி தேவநாயகன். உவந்தான்—அம்மாண்பு தனக்குளதாகுக என விரும்பினான் எ-று. குடிஞை—பேராந்தை என்ப; "குடிஞை யிரட்டு நெடுமலை" என்பது மலைபடுகடாம்; இதனான் மலைப்புள்ளாதலுணர்க. (4)

63. மந்தி கவடறிய மாட்டாத் தருவலந்து
கோந்தின் னலர்மேன் கோடியிவர்த—லந்திற்
றெரிந்தான்மேல் லோரைத் திறலோர்மெய் யானும்
பரிந்தேந்து வாரேன்றான் பார்த்து.

(இ-ள்.)—மந்திபைக் கூறியது மரமேறுதற்றொழில் வன்மையால்; "மந்திபுமறியா மரம்" என்பது நற்றிணை, முருகாறு. கவடு—பராரையினின்று கவர்த்தெழுந்த பெருங்கோடுகள்; உயர்ந்த பெருமரம் எ-று. வலந்து—சுற்றி. கொந்து இன் அலர் மென்கொடி—மணத்தாலினிய மலர்களையுடைய மெல்லியகொடி. மென்கொடி என்றது மரம் வலிதென்று குறித்தது. மந்தி யேறுமாட்டாத அதன் கோடுகளிலெல்லாம் மென் கொடி யிவர்தலை அவ்வழிப்பார்த்துத் தெரிந்தான்—கண்ணாற் கண்டு மனத்தின்கண் வலியோர் மெலிந்தோரைத் தாங்குமாறு தெரிந்தனனாகி ஏந்துவார் என்றான்; எனத் தன்னுட் கூறினான் என்க. மேல்லோர்—மென்மையராகிய எளியோர். வலியோர் பிறவகையானன்றி எளியரை உடம்பானும் பரிந்தேந்துவாரென்றான் என்க. பற்றுக் கோடில்லாத முல்லைக்கொடியை இவன் தேர்தந்து தாங்கற்கு இவ்வுணர்வு ஊக்கியதுமாகும். பார்த்தல் மெய்யின் வினையும், என்றான்

என்பது வாயின் வினையும், தெரிதல் உள்ளத்தின் வினையும் ஆதலான் மெய் வாய் உள்ளம் என்ற மூன்று கரணமும் அவ்வுதவியில் ஒருப்படு தல் கருதிற்று. தருவலந்து இவருங்கொடிகள் தருவை ஒட்டுதலான் அதன் சாரத்தைத் துய்த்து வலிபெறுதல் தாவரநூல் வல்லார்வாய்க் கேட்டுணர்க. மந்திக்குமாட்டாது மென்கொடிக்கு இவர்தற் கெளிய தாகிய மரம்போல்வன் இவனே என்றும் இவன் வேந்தரை யிறந்தும் இரவலர்க் கீபவன் என்றும் இவனைச் சான்றோர்பாடுதலுங் காண்க. கபிலர் புறப்பாடில் (119) "கிழவினிளிடைத் தனிமரம்போலப், பணை கெழுவேந்தரை யிறந்து, மிரவலர்க்கீயும் வள்ளியோன்" எனக்கூறுத லான் உண்மையுணர்க. (5)

64\. வளர்த்த நிலமகட்கு மன்னு குடையாய்த்
தளிர்த்து நிழல்செய்யுந் தாரு—வளைத்த
விருட்கும் வெயிற்கு மிடைநிற்றல் கண்டு
போரற்கேண்ணார் சீர்த்தேன்றான் புக்கு.

(இ-ள்.)—தாருத்தன்னை வளர்த்த பூமிதேவிக்கு நிலைபெற்ற குடையாய்த் தளிர்த்து நிழல் செய்தல் அவள் செய்த நன்றிக்கே கைம்மாறாக என்பது கருத்து. தாருக்கீழும் மேலும் வளைத்துக் கொண்ட இருட்கும் வெயிற்கும் நடுநிற்றலைப்புக்குப்பார்த்து, யாரும் போர் புரிதலை வேண்டாத நல்லோர் சீர்மையை உடைத்தென்று தன் னுட் கூறினன் என்க. இருளும் வெயிலும் ஒன்றையொன்று அடர்க் காது இடைநின்று கீழும்மேலுந் தாங்கவல்லதன்மையால் இருபெரும் பகைஞரிடை நின்று அவர் பொராது தாங்கவல்லார் சீர்த்தென்றான் எ-று. "தேர்மீக்கடவு மிருபெருவேந்தர், வினையிடை நின்ற சான் றோர் போல" எனக் கபிலர் குறிஞ்சிப்பாட்டிற் கூறுதல் காண்க. மன்னுகுடை—சுருக்கிய குடையை விலக்குவது காண்க. மரங்கள் இருள்படத் தழைத்தலும் வெயில் நுழைதற்காகாமையும் "இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து" (முருகாறு) எனவும் "வெயினுழை பறியா... பொதும்பர்" (பெரும்பாண்) எனவும் வருதலானுணர்க. வெயில் நுழைபு அறியா என்புழி நச்சினார்க்கினியர் "ஞாயிற்றின் கதிர் தோன்றிய காலத்தும், படுகின்ற காலத்தும் உட்படச் சிறிதுஞ் செல்லுதலறியாத" என்று உரை கூறியதனால் ஞாயிறு படுகின்ற காலத்து மாலை வெயில் ஈண்டுக்குறித்தது. நிலமகள் வளர்த்தல் "காருக் கும்முயர்வாகிய வளர்த்தியுங் கனியால், யாருக் கும்விழைவூட் டிய வினிமையுமிருளி, யூருக் குங்கிழல் செய்கிற்கு முதவியு மரத்தின், வேருக்கிம்மசளூட்டிய வளமையின் மேன்மை" எனப் புலியெழுபதின் வருதலான் அறிக. (6)

65. கலைமான் கவைமருப்பிற் கண்டேயந் தீர
வுலையாப் புலிப்போத் துரிஞு—நிலைபார்த்
தறம்பிழையா வாறேர்ந் தகமகிழ்ந்தா னென்று
மறம்பிழையா வாளுழவர் மன்.

(இ-ள்.)—கவைமருப்பு—கவர்த்த கொம்பு. மருப்பிற் பலகவை படுதல் கலைக்கியல்பு. ஐங்குறு நூற்றிற் "கவைக்கோட்டு முதுகலை" எனவரும். கண்டேயம்—தினவு. பிறவிலங்குகட்கு உலைதலில்லாத புலி யில் ஆண். உரினுதல்—தேய்த்தல். நிலைபார்த்து—நிலைமையைக் கண்டு. அறம்பிழையாவாறு—தருமந்தப்பாதபடி. என்றும் மறம் பிழையா—உயிர் போம்போதும் வீரத்திற்றப்பாத. வாள் உழவர்மன்—வாளையே ஏராக வுடைய வீரர்க்கு வேந்து. காடுவாழ் விலங்குகளும் இகலாது வதிதல் கண்டு அறம்பிழையா வாற்றைத் தெரிந்து மனமகிழ்ந்தான் எ-று. புலி கண்டு மான் ஓடாது நிற்றலானும் புலி மானுற் றினவுதீர்தற் பயன் கொள்ளுதலானும் அவை நட்பின் வதிதல் குறித்தது; "ஆடு துறையி லடுபுலியும் புல்வாயுங், கூடநீ ரூட்டிய சொற்றவனும்" என்பது விக் கிரம சோழ தேவருலா. மறம்பிழையா என்றது புலி கண்டு மனம் வேறுபடாமை கருதிற்று. (7)

66. காட்டின் வளந்தழைத்தல் காணூஉக் களித்துத்தன்
னாட்டி னறந்தழைத்த னன்குணர்ந்து-வேட்டோருசார்
மீடல் கருதி விரையச் சேலவிடுத்தா
னூடற் பரித்தேரை யாய்ந்து.

(இ-ள்.)—தன் காட்டின் வளந்தழைத்தலைக் கண்டு தன் நாட் டின்கண் அறந்தழைத்திருத்தலை நன்கு தெரிந்துகொண்டு மற்றொரு பாலை காண்டல் விரும்பி அந்நெறியே மீளுதலையும் எண்ணித் தேரை விடுத்தான் எ-று. வெற்றித்தேர்ப் பரியை ஆய்ந்து விரையச் செல விடுத்தான் என்க. "பிறர் குன்றுகெழு நாடே" (புறம்) என்புழி 'நாடு கெழுகுன்றே' என ஆதல்போலப் பரித்தேர் என்புழித் தேர்ப்பரி எனக்கொள்க. செலவிடுப்பது பரியே யாதலுணர்க. மாலை கழிகின்ற தாதலின் அவனும் மிசையும் ஆராய்ந்து விடுத்தான் எ-று. வழியிற் கொடிமுல்லையைத் தெரிந்து உதவற்கும் இவன் ஆய்ந்து செலவிடுத் தல் ஏதுவாதல் உய்த்துணர்க. தன் வெற்றிக்குக் காரணமாகிய தேரை அதனையும் வழங்குதல் குறித்து ஆடற்றேர் எனப்பட்டது. வளந் தழைத்தற்கு அறந்தழைத்தல் காரணமாதல் "தற்பாடு பறவை பசிப் பப் பசையற, நீர்சூற் கொள்ளாது மாறிக் கால்பொரச், சீரை வெண்ட

லைச் சிறுபுன் சொன்மூ, மழைகாலூன்ற வளவயல் விளையா, வாய்மையுஞ் சேட்சென்று கரக்குந் தீதுதரப், பிறவு மெல்லா நெறிமாறு படுமே கடுஞ்சினங் கவைஇய காட்சிக், கொடுங்கோல்வேந்தன் காக்குநாட்டே'' (புறத்திரட்டு) என்னும் ஆசிரிய மாலை யடிகளாலுணர்க. (8)

67. காலான் வகுத்தனைய காலாற் கலிப்புரவி
மேல்வானிற் செல்லா விரைதலான்—ஞால
மேதிராப்பின் னோடிற் றெனக்காண வோடிற்
றதிராப் பெருந்தே ரவண்.

(இ-ள்.)—காற்றினுன்சாக வகுக்கப்பட்டாலொத்த கால்களுடன். கலிப்புரவி—செருக்குதலையுடைய குதிரை: ''கால்திரண்டனையகால'' என்றார் கம்பநாடர். மேலே வானத்திற் போகா அளவையின் விரைந்து செல்லுதலால், பூமி தேரினுக்கெதிர்ந்து அதற்கு எதிர்நிற்க மாட்டாது பின்னோடியதென்று கண்ணிற்குத் தோன்றத் தேரோடிற்று எ-று. பூமி தேராகிய புராணம் உண்டு. அவலும் மிசையும் ஒடியும் அதிர்தலில்லாமை தேரிற்குச் சிறப்பு. அதிர்தலில்லாமையையே தேரிற்கு வேண்டுவர் காளிதாசர் (ரகுவம்சம், சாகுந்தலம்) அவண்—அவன் மீண்ட காட்டு வழியில். (9)

68. படர்கோம் பிலாமையோர் பைங்கோடி முல்லை
படர்கூர்ந்து காலாற் பரிந்து—படர்நெறிக்க
ணல்லா ளிலாத குடியி னடுங்கிற்றே
வல்லாளன் றேர்முன் வளைந்து.

(இ-ள்.)—படர்தற்குப் பற்றுக்கோடு இல்லாது: ஒரு பசிய முல்லைக்கொடி: கொடிமுல்லை ஓர் சாதியுமாம். ''கார்செய் புறவிற் கவினிக் கொடிமுல்லை, கூறெயி றீன'' என்பது கைந்நிலை. படர்கூர்ந்து—துன்ப மிக்கு. காலாற் பரிந்து—காற்றினால் இடம்பெயர்ந்து. படர்நெறிக்கண்—செல்வழியில்; ''நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய'' என்றார் சிறுபாணாற்றினும். நல்ல ஆண்மகனாற் றாங்குதலில்லாத குடிபோல நடுங்கிற்று என்க; ''இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று, நல்லா ளிலாத குடி'' (குறள்) என்பது காண்க. தன் துயர் தீர்த்துத் தாங்கும் வலிய ஆண்மையையுடையவன் தேர்முன் வளைந்து நடுங்கிற்று; ''தாங்கும் வல்லாளன்'' என்பது புறம் (327) தேர்முன் வளைந்து என்றது ''கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின், றிரப்புமோ ரேஎ ருடைத்து'' (குறள்) என்பதுபற்றி. தேர்முன்னர் வளைந்தவளவே போதும் வேறுவாயால் இரத்தல்வேண்டு

வதில்லையென்று தோற்றுவித்தவாறு. இக்குறளிற் பரிமேலழகர் "கடனறிவார் முன் னின்று" என்பதற்கு "அவ்வறிவுடையார்க்கு முன் னிற்றன் மாத்திரமே யமைதலின்" என உரைத்ததனையும் ஈண்டைக் கேற்ப நோக்கிக்கொள்க. தேர்முன் வளைந்தது நோக்கித் தேர் தருவா னாயினன் என்னும் இயைபுங் காண்க: நச்சினார்க்கினியர் சிறுபாணாற் றில் "முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய" என்பதற்கு "முல்லைக்கொடி தடுத்தற்கு அறு வேண்டிற்றாகக் கருதிப் பெரியதேரைக் கொடுத்த" என உரையிட்டதனையு நோக்கிக்கொள்க. வளைந்து என்று தன் மெய்ம்முழுதும் வளையவின்று; என்றது வணங்கல் குறித்தது; வளைதல் வணக்கமாதல் "வில்வணக்கம்" (குறள்) என்புழிக் காண்க. (10)

69. கோடிகா லேறியக் குழைந்து நடுங்கிப்
படிமேல் வணங்கும் படிகண்—டடிபேரா
வாமான் பரிவார் வலித்து நிறீஇயினன்
கோமா னருளீர்ப்பக் கூர்ந்து.

(இ-ள்.)—கொடி காற்றெறியக் குழைந்து நடுங்கி வணங்கும்படி கண்டு என்க. வணங்குதல்—வளைதல். அது துயர்தீர்த்தற்கு வணங்கு தல் என்பது பாரியின் உட்கோள். வணங்கும் படிகண்டு—வணங்குந் தன்மையை நேரிற் பார்த்து. வாமான்பரி அடி பேராது வார்வலித்து நிறீஇயினன் என்க. கோமான் "பறம்பிற்கோமான்பாரி" என்பது சிறுபாண். தன்னை அருளானது மிக்கு ஈர்த்தலான் அக்கொடி வாவும் பரிமாவின் காலிற்பட்டுச் சிதையாதபடி வார்வலித்து நிறுத்தினன் எ-று. வாவும் புரவியை அடிபேராது நிறுத்தற்கு மெய்வலி போதா தென்று அருண் மிக்கீர்த்தல் உடன் கூறிற்று. இனி அருள் அக்கொடி யைத் தாங்கற்குத் தன்னை முன் மிக்கு ஈர்க்கா நிற்கும்போதிலே அது சிதையாமைப் பொருட்டு வார்வலித்து நிறீஇயினன் எனினுமமையும். பரியின் தூக்கிய முன்கால்கள் கொடியிற் படாது அருளாற் பிற்பட ஈர்த்தனன் என்பது கருத்து. (11)

70. காடு கமழுங் கடிமுல்லைப் பைங்கோடிவெம்
பாடு தெரிந்து பருவந்தா—னீடுதுய
ரோவத்துக் கண்டாலு முள்ளுருகும் வள்ளலுயி
ராவத்துக் கேன்படா னாங்கு.

(இ-ள்.)—காடு கமழ்தற்குக் காரணமான மணத்திற் சூடும்முல்லை. வெம்பாடு—வெய்யபடர். பருவந்தான்—துன்புற்றான். துயர் ஓவத்துச்கண்

டாலும்—சித்திரத்துத் துயர் நிலைமை காணினும். நீடு உள்ளுருகும் வள்ளல்—அதைத் தன் வள்ளன்மையாற் பரிகரிக்க இயலாமையால் நெடிது தன்னுள்ளே உருகா நிற்பவன். உயிர் ஆவத்திற்கு—உயிருள் பொருளின் இடர்க்கு. என்படான்—யாது பாடுபடான் எ-று. ஆங்கு—அது துயர்கின்றதனைத் தான் காண்கின்ற அந்நிலையில். ஓவம்—சித்திரம்; "ஓவத் தன்ன வினைபுனை நல்லில்" (பதிற் 7.) என்ப. (12)

71. நலங்கே டிரண்டுந்தா னண்ணியாங் கியாண்டும்
புலங்கோ ளுறும்பல் புகழ்வேள்—கலங்கிக்
கோடியீது தாங்கிக் குறைதீரே னென்னிற்
படிதாங்க லேன்னேன்ற்ன் பார்த்து.

(இ-ள்.)—யாண்டும்—எவ்வுயிரிடத்தும்; உண்டாம் இன்பமுந் துன்பமுந் தான் எய்தினாற்போல உணர்வுகொள்ளலுறும் வேள் என்க. பிறரின்பம் பெருக்கித் துன்பம் பரிகரித்த பல உதவியாற் பெற்ற பல் புகழ்வேள். பார்த்து—அக்கொடி துயர்தலைக் கண்டு. இச்சிறு கொடியைத் தாங்கிக் குறைதீர்க்க இயலேனென் றிகழப்படின். படிதாங்கல் என்—புறநாடு தாங்கி யாளுதல் என்னுவது. (13)

72. பூவுந் தழையும் புனைமுறியும் வேருமுதல்
யாவும் பயன்கோள்வீ ரெங்குலனி—னீவிர்
புரியுங்கைம் மாறறியீர் புந்தியிலேந் துன்பிற்
பரியீரேன் றுமையிதன் பண்பு.

(இ-ள்.)—எங்குலனில்—எங்குலமாகிய செடிகொடிமரங்களின்கண் எ-று. பூச் சூடவும், தழை உடுக்கவும், முறியாகிய தளிர் புனையவும், வேர் சூடவும், மருந்தாக உட்கொள்ளவும் கொள்வீர். வேர்முதல் என்றதனாற் ரேடு, காய், கனி, சாறுபிறவுங் கொள்ளுதல் குறித்தது: இவை முழுதும் பிணிதீர் மருந்துமாம். நீவிர் எமக்குப் புரியுங்கைம் மாறு புந்தியில் அறிதலுஞ் செய்யீர். அங்ஙனம் அறியாமை மட்டுமன்று எம் துன்பத்தின்கண் நும் புந்தியிற் பரிதலுஞ் செய்யீர் என நம் முன் இஃதுரையாமலிருப்பது வாயில்லாமையா னன்று இதன் உயர்ந்த பண்புடைமையால் எ-று. "நயமில செய்வார்க்கும் பண்பாற்று ராதல் கடை" (குறள்-998.) என்பதனால் நயமிலசெய்பு நமக்கும் இது பண்புடையதாகி யொழுகலான் உரையா திருப்பது என்பது கருத்து. (14)

73. யான்றந்த பூவா லேழிற்சென்னி நாறவீர்
யான்கோ ளிடர்தீர வேண்ணிலீ—ரூன்றந்த

மெய்யானேன் ஞேவென்று மேல்லரும்பாற் புன்முறு
செய்யாதோ விச்சோடிதான் றிர்ந்து. [வல்

(இ-ள்.)—என்னுற் றரப்பட்ட மலர்களைப்புனைந்து நும்மயிர்த்தலை எழிலுடன் மணத்தல் செய்வீர். சென்னி—சென்னிமயிர்: ஆகுபெயர். அதற்கு எழிலும் மணத்தலும் இயல்பல்ல எ-று. நுந்தலைகமழச் செய்யும் யான் கொண்ட துன்பந்தீர வேண்டுமென்று எண்ணுதலும் இல்லையாயினீர். நுமக்குத் தெய்வந்தந்த ஊன்மெய்யால் யாதுபயனே என்று உரையாதொழியினும் இக்கொடி யாம் இதற்கு ஒன்றுஞ்செய்யாது நீங்கிய அளவில் மெல்லிய அரும்புகளாகிய பற்களால் நம்புன்மைக்குத் தக்க பரிகாச முறுவலைச் செய்யமாட்டாதோ என்க. முறுவற்கேற்ப அரும்புகள் பற்களாயின. "எள்ளலிளமை பேதைமை மடனென்றுள்ளப்பட்ட நகைநான் கென்ப" (தொல்-மெய் 4.) என்பதனுல் எள்ளல் பற்றி நகைக்குறிப்புக் கூறிற்று; "பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்" (தொல்-கள 20.) எனத் தொல்காப்பியனுர் கூறுதலானும் பழிமுறுவல் உண்டென்று துணியலாகும். எம் மெய்யாலெல்லாம் நும்மெய்க்குக் கொள்வீர் எம்மால் உதவிகொண்ட நும்மெய்யால் எம்மெய்க்கு என்னுவதோ என்று கருதுவதாகக் கூறினுமமையும். (15)

74\. கற்பி னடையாள் கடிமுல்லை யில்லந்தோ
றற்பின் வளர்ப்ப ரணங்கனையார்—பொற்பாற்
புவிமான் வளர்த்ததிது போலுமாற் றுன்பிற்
றவியாது தாங்க றலை.

(இ-ள்.)—கடிமுல்லை கற்பின் அடையாள்—மணமுல்லை கற்பினுக்கு அடையாளம். "அடையாள் அருண்மொழி யறியக்கூறி" என்பது பெருங்கதை. தெய்வத்தை யொத்த கற்புடைப் பெண்டிர் மனைதொறும் அன்பினுல்வைத்து வளர்த்தல் செய்வர். பொலிவினுல் இது பூமிதேவி வளர்த்ததுபோலும் எ-று. இல்லந்தொறும் அணங்கனையார் வைத்து வளர்த்த முல்லைக்கும் இவ்வனத்திற் பூமிதேவி வளர்த்த முல்லைக்கும் பொற்பினுலுள்ள வேற்றுமையினை எண்ணி இம்முல்லையை வியந்து கூறியது இஃதென்க. இபல்பின் வனத்திலாகிய முல்லைக்கும் மனையின் மக்கள் செயற்கையினுகிய முல்லைக்கும் பொற்பு வேற்றுமை உய்த்துணர்ந்து கொள்க. இவ்வாறே அணங்கனை யார்க்கும் எவர்க்கும் எவைக்குந் தாயாகிய பூமிதேவிக்கும் உள்ள வேற்றுமை நோக்கிக் கொள்க. இது துன்பிற்றவியாது தாங்கல் தலை இத்

தகைய இஃது இடரான் வெதும்பாது தாங்குதல் தலையாய கடப்பாடு எ-று. "வளர்பைங் கொடிப்பண் புய்யானம் வைக்குங் கொடிக்கெய்தில் சேய்ந்தே" (சாகுந்தலப் பாடல் அங்கம் 1.) எனக்காளிதாசனுங் கருதினன். (16)

75. மக்க ளுடம்பின் வதியுயிர்க்குஞ் சார்புபெறு
துக்க கொடியி னுயிர்க்குமிட—ரொக்கும்
பொறிகுறைந்து முல்லை புலங்குறைந்த தில்லென்
றறிவறிந்தான் வேளிர்வே ளாய்ந்து.

(இ-ள்.)—உடம்பின் வதியும் மக்களுயிர்க்கும் பற்றுக்கோடு பெறாது சிதைந்துள்ள கொடியினுயிர்க்கும் துன்பம் ஒக்கும். முல்லைக் கொடி பொறிகள் குறைந்து ஓரறிவுயிராகியும் அறிவு குறைந்ததில்லை யென்று தன்னுள் ஆராய்ந்துகொண்டு அம்முல்லையின் துயர்கின்ற அறிவை அறிந்தான் எ-று. வேளிருள் வைத்துத் தனியே சிறப்பித்து வேள்பாரி எனப்பட்டோன் என்க; வேளிர்—குறுநில மன்னர் என்பர் நச்சினார்க்கினியர் "இருபெரு வேந்தரொடு வேளிர் சாய" (மதுரைக் காஞ்சி 55.) என்பதனுரையிற் கண்டுகொள்க. (17)

76. தலையானே தாங்கத் தகுநறுவ் முல்லை
யலையாமற் றுங்க வவனே—நிலையாக
மற்றேன்று காணமல் வல்விரைவிற் றேரோடுதா
னுற்றதுநன் றேன்று னுவந்து.

(இ-ள்.)—தலைகொண்டு ஏந்தத்தக்க மணமலர்முல்லை அலைந்து வருந்தாமல் ஏந்த. பலருந்தலையானேந்தல் "இளையோர் சூடார்வளை யோர் கொய்யார்,...பாணன் சூடான் பாடினியணியாள், ......வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை, முல்லையும் பூத்தியோவொல்லையூர்நாட்டே" (புறம் 242.) என வருதலான் அறிக. நிலையாக—நிலைப்பதாக; மற் றொன்றுங் கண்ணிற்கு அவ்விடத்து இல்லாமைபற்றித் தோன்றாதாக. தேரொடு வல்விரைவின் அவனே உற்றது நன்று என்று உவந்தான் என்க. விரையச்செலவிடுத்தான் என மேலே கூறியது கொண்டு விரை வின் உற்றது உணரலாம். நன்று—முல்லைக்கு நன்றாவது எனினுமமை யும். தேரொடு என்றது அஃறுபகாரப்படும் உயர்பு குறித்தது. (18)

77. சார்பு பெறுது தளர்ந்தோர் நடுக்கமிதேன்
றோர்பு மணித்தே ருவண்விடுத்துப்—பாரடைந்தா

ஞோர்பொறி யுற்ற வுயிர்மாட்டு மின்னருளா
ளூரளு ருற்ற வரசு.

(இ-ள்.)—பற்றுக்கோடு பெறுமற்றளர்ந்தோர் நடுக்குதல் இவ்வா றென்று ஓர்ந்து மணிகளையுடைய தேரினைக் கொடிவருந்திய இடத் தில் விடுத்து. "கறங்குமணி நெடுந்தேர்" என்பது புறப்பாட்டு (200) பார் அடைந்தான்—பூமியை எய்தினன். ஓர் பொறியுற்ற வுயிர்—ஏகேந் திரிய ஜீவன். இன்அருள்—பிறவுயிர்க்கு இனிமையே செய்தற்குரிய உள்ள நெகிழ்ச்சி. ஆரளு—அரிய துன்பம். தேரைவிடுத்த நிலையிற் பாரை யடைந்தவனாயினன் என்பது சாடு. தேரைவிடுக்காத நிலையில் அரசு பாரை அடையாதவனாவன் என்பதுங் குறித்ததாம். (19)

78. கொடிமுல்லைப் பாங்கர்க் குறுகியஃ துற்ற
மிடியோல்லைத் தீர்க்க விழைந்து—படிவெல்லுந்
திண்புயத்தாற் றங்கிமெலத் தேர்மேற் சேலவிடுத்தான்
பண்பரிமாப் பூட்டுப் பறித்து.

(இ-ள்.)—மிடி—பற்றுக்கோடில்லாத வறுமை. ஒல்லைத்தீர்க்க விரும்பித் தேர்மேற் செலவிடுத்தான் எ-று. அதன் வறுமை காணின் அதனை ஒல்லைத்தீர்ப்பதே வேண்டுவதாகும். ஒல்லைத்தீர்த்தற்குப் பற்றுக்கோடு தன்கண் உள்ளதேயாகவும் வேறொன்று தேடிச்சேறல் இயையாதாம். மெல்லத் தாங்கி விடுத்தான் என்க. படிவெல்லுந் திண் புயனாதலின் அவ்வலியெல்லாம் அடக்கிக் கொடிக்கேற்க உறுத்தாது மெல்ல ஏந்திவிடுத்தனன் எ-று. அப்பெரியது செய்யும் புயனால் இச் சிறியதும் அருளாற் செய்தான் என்பது குறிப்பு. தேர்மேற் செல— தேரின்மீது படர. பறித்து என்றது ஒல்லைத்தீர்க்க விழைந்ததற்சேற் பப் பரிமாப்பூட்டை விடுவித்த விரைவு தோன்ற நின்றது. முல்லை படர்தற்குத் தேர்தாங்கி நிலை நிற்றல் இன்றியமையாமையான் ஈர்க்குங் குதிரையைப் பூட்டுப்பறித்து விடுவித்தனன் என்க; "ஊருட னிரவலர்க் கருளித் தேருடன் முல்லைக்கீத்த" எனவரும் புறப்பாட்டிற் (201) பழைய வுரைகாரர் தேருடன் என்பதற்குத்"தேரை ஏறுதற்கு ஏற்கச் சமைத்த அணியோடும் புரவியோடுங்கூட முல்லைக்கு வழங்கிய" என்று உரை கூறினர். புரவியோடு கொடுத்தாற் றேர் நிலை நின்றபற்றுக் கோடாகாமையும் முல்லைக்கொடி சிதைந்து கெட்டொழிதலும் உணர்ந்துகொள்க. இரவலர்க்கு ஊருடனருளி எனவும் முல்லைக்குத் தேருடன் ஈத்து எனவும் வந்தவிடத்து இரவலர்க்கு ஊர்களை அவர் இரந்தவுடன் அருளி யென்றும் முல்லைக்கொடி யிரவலர்போல இரவா

தாகவும் அதன் வருத்தங் கண்டவுடன் தேரினை விரைந்து ஈத்து என்றும் பொருள் கூறிக்கொள்க. இரவலர்க்கு என்றதனால் இரவார் முல்லைக்கு எனப்பட்டது. மிடியொல்லைத் தீர்க்க விழைந்து எனபது தேர் உடனீத்து என்றதற்கு இயைந்து நிற்றல் காண்க. ஊர்களில் ஒன்றுந் தான் கொள்ளா தெனவும் தேரில் உள்ள அணி மணி பொன் இவற்றி லொருபொருளும் தான் கொள்ளாதெனவும் கருதினுமமையும். (20)

79. கோம்பர் பலசோள் சொழும்பந்தர் மானத்தன்
செம்பொன் மணித்தேர் திருத்தினன்—பம்புமலர்
பூத்த கொடிநடுக்கம் போக்கி மகிழ்பூத்தா
னேத்து கோடையுளப்பாங் கேன்

(இ-ள்.)—கொழும்பந்தர்-கொடிக்குக் கொழுமை தரவல்ல பந்தர். மான—ஒப்ப. தான் படர்தற்குத் திருத்திய தேரினை முல்லை படர்தற்குத்தகத் திருத்தினன். செம்பொன்னும் மணியும் கொள்ளாது எல்லாவற்றுடனும் கொடிபடரத் திருத்தினன் எ-று. பம்புமலர்—செறிந்த பூக்கள். கொடி நடுக்கம் போக்குதலைத் தன் பேருக நினைத்தலான் மகிழ்பூத்தான் எ-று. பூத்த கொடியாக அஃதிருந்தும் அதன்கண் ஒன்றுங் கொள்ளாது அதன் நடுக்கம் போக்குதலான் மகிழ்பூத்தான் என்க. "பொருந்தயணி கொள்வது விரும்பியுள ளேனும் பொத்திலுயர் நட்பினோர் தளிர்த்துணையும் வவ்வாள்" (அங்கம் 4.) எனச் சகுந்தலை யியல்பு காளிதாசர் குறித்தலானறிக. புலவரேத்துமிவன் கொடைவடிவாகிய திருவுளத்தின் நன்மையாதோ; அறிகிலேம் எ-று. மகிழ்பூத்தல்—சாடு. முல்லைமலர் பூத்தலினும் இவன் மகிழ்பூத்தல் மிக்கது என்பது செம்மலாயும் மணம் மாறுதமகிழ் என்பதனாற் குறிக்கொள்ள வைத்ததாம். ஈத்தபாரி உளப்பாங்கான் உணர்வதல்லது பிறருள்ளத்தான் இக் கொடையியல்பு உணரலாகாமையின் ஏத்துகொடையுளப்பாங்கு என் என்று வினவி மொழிந்ததென்க. (21)

80. முல்லை படர முழுத்தேரீத் துண்மகிழ்ந்து
கோல்லை படர்ந்தான் குரைகழலோ—னல்லிசைதான்
மூவுலக முற்று முழங்கிப் படராதோ
பாவலர்செந் நாவிற் படர்ந்து.

(இ-ள்.)—தேர் ஊர்ந்த நிலையினும் அதனை ஈத்தநிலையே இவற்கு மகிழ்தற்காதலின் ஈத்துண்மகிழ்ந்து எனப்பட்டது. மகிழ்ச்சியை அடக்கி

யுள்ளே கொள்ளுதலான் உண்மகிழ்ந்து என்றதாம். முழுத்தேர் ஈத்தல் மேலே விளக்கிற்று. கொல்லை படர்ந்தான்—புலங்களில் நடந்து சென்றான். தேரிற்கழல் ஒலியாது என்பது தோன்ற நடத்தற்கட்குரைகழல் கூறிற்று. கழல்—ஒருதாளில் அணியும் வீரவணி; 'கழலொன்று காலிற் காண' என்றார் கம்பநாடரும். நல்லிசை—இரந்த மாக்கட்குக்கொடுத்துப் பெற்ற புகழினும் இரவாத ஓரறிவுயிர்க்கு ஈத்த நல்லபுகழ். பாவலர் செம்மையையுடைய நாவினைப் பற்றுக்கோடாகக்கொண்டு படர்தல் காரணமாக முழுமூவுலகும் படராதோ எ-று. "அடுக்கிய மூவுலகுங் கேட்குமேசான்றோர், கொடுத்தா ரெனப்படுஞ் சொல்" என்பது நாலடி நானூறு. கொடி தான்பெற்ற பேற்றை மக்கள்போல் முழங்காதேனும் பாவலர் செந்நாவை வாயிலாகக்கொண்டு இவன் நல்லிசையாண்டும் முழங்கும் எ-று. தேரிற்படருங் கொடியினும் கொடிக்குத் தேரீத்த நல்லிசை சிறந்ததென்பது பாவலர் செந்நாவிற் படர்தலான் அறிய வைத்தவாறு. கொடிபடர்வது தேரளவேயாம்,இசைபடர்வது மூவுலகுமாம் எ-று. தேரிற்கும் பாவலர் நாவிற்கும் உள்ள வேற்றுமை வெளிப்படை. முல்லை மணக்காத சேய்மைக்கண்ணும் நல்லிசை மணத்தலுங் கொள்க. செந்நா—வாய்மையல்லது பேசவறியாத நேர்மைநா. (22)

81. மான விசும்பின் வலவனே வாததோர்
வான விமானம் வரவூர்வன்—கானச்
சிறுவீயின் முல்லைக்குத் தேரீத்துக் காலா
னுறுவீர னேகினா னூங்கு.

(இ-ள்.)—மானவிசும்பின்—தாழ்வில்லாத பெருமையை யுடைய துறக்கத்தினின்று. வலவன் ஏவாதது; ஊர்ந்தார் நினைந்தபடி செல்லுதலாற் பாகன் ஏவவேண்டாதது. வானவிமானம்—ஆகாயத்திற் செல்லும் தேவயானம். சித்திபெற்றார்க் கன்றிப் பிறர்க்கிடந்தரார்மையாலொப்பற்ற ஊர்தியாதலின் ஓர் விமானம் எனப்பட்டது. அயோத்தியின் மனைத்தெற்றிகள் சித்தர்க்கன்றி இடந்தராத விமானங்கள் போல உயர்ந்தோரான் விளங்குவன என்று வான்மீகமுனிவர் பால காண்டத்துக்கூறுதலானும் சித்த விமானத்தினியல்புணரப்படும். "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வான்வூர்தி யெய்துபவென் பதஞ் செய்வினை முடித்து" (புறம்-27.) என வருதலுங் காண்க. உறு வீரன்—மிக்கவீரன்; என்றது தானவீரனாதல் கருதி. பூவால் இனிய கான முல்லை என்க. காலான் ஏகினான்—நடக்கவேண்டாததாளுடையன் என்பது குறித்தது. ஊங்கு—உவ்விடத்து. நடக்கவேண்டாத முல்லைக்கு நடக்கவேண்டியவன் தேரீத்துக் காலான் ஏகினான் எ-று. இனி நடவாது பின் விமானம் வரவூர்வன் என்க. காட்டிற் றனிநிலை

யிற் பாரி சிகழ்த்திய இவ்வரிய கொடைச்செய்தி உலகிற்றெரிந்தவாறு கூறுவது மேல். (23)

82. பாரி கோடையைப் பகரவிரைந் தற்றுங்கு
மூரி விசைப்புரவி முன்னோட—வூரினுளா
ரோன்றுமே தேறார்சேர்ந் தோல்லேன் றிரைத்தெழுந்
துன்றுதேர் காணுத சூழ்ந்து. [தார்

(இ-ள்.)—பாரியின் கொடைத் தன்மையை விரைந்து ஊர்க்கட் பகர்தற்கு உற்றாற்போலப் பெருவிசைக் குதிரை பாரிவருதற்கு முன் ஓடிவர. ஊரினுளார்—ஊர்க்கண் அவ்வமயத்திருந்தவர். தேர்காணுது ஒரு செய்தியுந் தெளியாராய்ச் சூழ்ந்து திரண்டு ஒல்லெனப்பேரொலி செய்து எழுந்தார் எ-று. துன்றுதேர்—புரவியொடுதுன்றியதேர். காணு மல் என்க. (24)

83. தெவ்வராற் கோட்பட்டோ சீயம் புலிகரடி
வவ்வியோ வேங்களிறு மாறேற்றோ—வெவ்வாறோ
வேள்வாரா னீண்டென்று மெய்ந்நடுங்கி ஞர்பறம்பார்
கோள்வாரா வெல்லாங் குறித்து.

(இ-ள்.)—தெவ்வர்—பகைஞர். பறம்பார் கோட்பட்டோ அபகரிக்கப்பட்டோ. வவ்வியோ—கவர்ந்தோ. மாறேற்றோ—மாறாக எதிர்ந்தோ. இவையன்றி வேறெப்படியோ தமக்குப் பற்றுக்கோடு அவனன்றி யின்மையால் உடம்பு நடுங்கினர் எ-று. பறம்பார்—பறம்புமலை வாழ்நர். வாராக்கோளெல்லாம் குறித்து—வாராத ஏதமெல்லாம் வந்தனவாகத் தாமே குறிக்கொண்டு நடுங்கினர். கோள்வாராவெல்லாம் என்றது அவ்வேதமொன்றும் அங்கில்லாமை குறித்தது. ஈண்டு வாரான் எவ்வாறோ என்று என்க. இஃது அன்புபற்றி உண்டாகிய அச்சம். (25)

84. குரீஇச்சேன் றிரைதேர் குளிர்பறம்பு வேற்பார்
துரீஇக்கண்டார் தேரின் சுவடு—மரீஇக்கண்டார்
கோல்லையான் காணுக் குழக்கன் றனையார்தேர்
முல்லையார் பேற்ற முறை.

(இ-ள்.)—குரீஇ – குருவிகள்; புறஞ்சென்று இரைதேர்வன இவையே யென்க. கொழுமையுதும் பெரிதுமாகிய இரையே பறம்பின்

உண்மையால் எளிதுஞ் சிறிதுமாய்தைப் புறத்துச் சென்று தேர்தல் கூறிற்று; "பள்ளச்செறுவிற் கயலுகளப்பழனக் கழனி யுட்புகுந்து, புன்னைப்பிள்ளைக் கிரைதேரும் புள்ளம் பூதங்குடி" (பெரிய திருமொழி) என்னும் பெரியார் திருவாக்கிற்போலக் கொள்க; இதன்கட் கயல்கள் உகளா நிற்கவும் பிள்ளை வாயலகிற் கடங்காமையாற் கழனியினுள்ளே புகுந்து தாய்ப்புள் பிள்ளைப்புள்ளிற்கு இரைதேர்தல் கூறியது காண்க. "உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பி னிரைபறைக் குரீஇயினங்காலைப் போகி, முடங்குபுறச் செந்நெ றரீஇயரோராங், கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப், படர்கொண்மாலைப் படர்தந்தாங்கு (அகம் 303) என ஔவையார் பாடுதலான் இதனுண்மை யுணர்க. சென்றிரை தேர் குரீஇயினம் வருமாலைப் பொழுதாதலும் உணர்க. தரீஇ—தேடி. தேர்க்காற்சுவட்டைத் தழுவிச் சென்று முல்லையார் தேர் பெற்றமுறை கண்டார். தேர் பெற்ற தகுதிக்கேற்ப முல்லையை உயர்திணையாற் கூறிற்று. "முல்லைப் பிராட்டி" எனப் பெரியாரும் பணிப்பர், கண்டார் கருத்தாற் பன்மை இழிந்ததுபற்றி வந்ததும் ஆம் "எளியரென நலிந்த வீர்ங்குழலார்" (திணைமாலை நூற்றைம்பது) என்புழி வேய்ங்குழலினை உயர்திணைப் பன்மையாற் கூறியது கொண்டுணர்க. முறை என்பது கண்டார்கருத்தால் முறையன்று என்பது படநின்றது. காட்டிற் புக்குத் தேரைக்கண்டும் பாரியைக் காணமையால் மேய்புலம்புக்குந் தாய்ப்பசுவைக் காணாத இளங்கன்றை யொத்தவர் எ-று. தேர்ச்சுவடு பற்றிச் சென்றாராதலிற் பாரியைக் கண்டிலர் என்க. (26)

85. இன்ன லறிந்தா லிருந்தே ரிலபோழ்திற்
றன்னு நிறவுந் தயாவுருக்கோண்—மன்னன்
கோடைமடமீ தேன்று குறிக்கோண்டு வந்தார்
படைமடமி லாதபறம் பார்.

(இ-ள்.)—இருந்தே ரிலபோழ்தில் இன்னல் அறிந்தால், தன்னையும் படர்கொம்பாக நிறுவற்குக் காரணமான அருள் வடிவுகொண்ட வேந்தன்; இதனாற்பாரி தன்னையும் தன்னதையும் பிறரின்னல் தீர வழங்குவன் என்பது குறித்தது. இவ்வுண்மை மேலே சென்று தேறலாம். கொடைமடம் என்றது ஊரார் கருத்தால்; கொடை மிகுத்த உள்ளத்தால் தரமும் தமமும் தன் அளவும் தெரியமாட்டாத மடமை இஃது என்க. கொடைமடம் வசைபோன்று புகழ் எனப்படும் என்றார் பேராசிரியர் (தொல்-செய். 124) படைமடம்—நிகரல்லாதார் மேல் எழுதல்; "மறந்திறம்பல் வலிய மெனுமனம், புறந்திறம்ப லெளியவர்ப் பொங்குதல்" (கிட்கி) எனக் கம்பநாடர் கூறுதலானும் உணர்க. (27)

86. குடிவருத்த மென்னாகக் கொள்ளுமோ வென்றார்
கொடிவருத்தங் காண்கிலாக் கோவேள்—படியி
னடிவைத்த நன்சுவடாய் வார்கண்டா ரொன்னார்
முடிவைத்த தாளானை முன்.

(இ-ள்.)—ஒரு கொடியின் வருத்தத்தைக் காண வலியில்லாத வேள்குடியிற் கோமான். கில்—வலிசெய்தல்; "கிற்பன் கில்லேன் என்றிலன்" (சடகோபர்) என்பர் பெரியார். ஓரறிவுயிர் வருத்தங்காண வலியின்றி யுருகுபவன் ஆறறிவுயிர்களாகிய தன் குடிமக்களின் வருத்தத்தை எவ்வண்ணமாக மனங்கொள்ள வல்லனோ எ-று. வேள் படியின் அடிவைத்த நன்சுவடு என்க. சுவடு ஆய்வார் ஆதலாற் றாளானை முன்னே கண்டார் எ-று. கல்லும் முள்ளும் உள்ள காட்டில் நடத்தற் குரியனவல்ல என்பது. ஒன்னார் முடிவைத்த தாள் என்று உயர்பு குறித்தது. பாரி செல்வழி பற்றுதற்கும் அவனைக் காண்டற்குந் துணையாதலால் நன்சுவடு எ-று. (28)

87. நீள நடந்து நெடிதுநோ மென்றன்பு
மூள வடியின் முடியோற்றி—நாளித்த
தேரேத்திச் செவ்வேள் சிவணும் விறல்வேள்கைக்
காரேத்தி நின்றார் கசிந்து.

(இ-ள்.)—நீள நடத்தலான் நெடிது நோம் என்று கூறியவாறு. அன்புமூள முடிகளான் அடிகளை ஒற்றி; வேட்கு அன்புமூள என்னினு மமையும். அற்றைநாளிற் தேரீத்ததை ஏத்தி. செவ்வேள் என்னும் பெயரானும் கொடையானும் வீரத்தானும் முருகக்கடவுளை ஒக்கும் வேள் என்க. விறல்—கொடை வீரமும் படை வீரமும். கைக்கார் ஏத்தி—கையாகிய புயலை ஏத்தி; கசிந்து ஏத்தி நின்றார். (29)

88. கொடியேந்தத் தேர்நல்குங் கோப்பாரி யெங்கண்
முடியேந்தச் சேறன் முறையேன்—றடியேந்த
வன்னான் மறுக்க வவனோடு பின்சென்றா
ரின்னாது காணா தினிது.

(இ-ள்.)—தேரை நல்கிய நிலையில் எங்கள் கோவாகிய பாரி எங்கள் முடியேந்தாநிற்க, ஊர் செல்லுதல் அரசிற்குங் குடிக்கும் உற்ற முறைமை யென்று சொல்லிப், பாரியின் அடிகளை ஏந்தாநிற்க, அது கண்டு அவன் மறுத்தவளவில், இன்னாது காணாது இனிது அவனோடு

*பின் சென்றார் எ-று. நல்லோர்கள் போயவழி நாலடிப் போயினும், பொல்லாங்கு நீங்கிப் புகழாய்ப் புண்ணியமுமாகும்" (மேருமந்தரம்) என்பவாதலின் அவனோடு பின் சேறலி லின்னாத நீக்கமும் இனிதுங் கூறப்பட்டன.* (30)

89. உருகிப் பராயகுடி யுள்ளார்பே யன்பைப்
பருகிப் படருமிடர் பாற்றிப்—பெருகி
யிசையே திசைவிளக்க வெய்தினன் பாரி
பசைவா ரோடுந்தண் பறம்பு.

(இ-ள்.)—*பராவிய குடியினர் உருகிப்பெய்த அன்பினைப் பருகி இடர்போக்கி என்க. படரும் இடர்—படர்தலானுண்டாகிய இளைப்பு. இசையே பெருகித் திசையினை விளக்கா நிற்க என்றது மாலையும்போய் இருள் வந்தது குறித்தது. பசைவார்—உள்ளத்தால் ஒட்டுபேர். ஒடு—பசைந்த குடியின் உயர்பு குறித்தது. அன்பைப் பருகி என்றது நேரிற் புகழ்ந்த சொற்களை வேண்டாமை கருதிற்று. குடியின் அன்பினைப் பருகுதற்கண்ணே தான் அரசற்குக் காவற் சாகாடுய்த்தலான் உண்டாம் இளைப்பு ஆறுமென்று குறித்தவாறு உணர்க.* (31)

90. வையங் கோடிக்காக்கு மாண்பினை னீராழி
வையம் புகழ்க்காக்கும் வள்ளியோன்— செய்ய
வடிசூடி னார்க்கெல்லா மாரருளே சூட்டிக்
கோடிசூடு கோயிலுற்றான் கோ.

(இ-ள்.)—*வையம் முன்னது தேர், பின்னது உலகம். தேரைக் கொடிபடர்தற்கு ஆக்கும் மாட்சிமைபால் உலகைத் தன் புகழ் படர்தற்கு ஆக்கும் வண்மையாளன். செய்ய அடி—இயற்கையின் மேலும் நடத்தலாற் செய்வியவாகிய அடிகள். அன்பு பெய்தார்க்கு அருளே சூட்டி எ-று. கொடிசூடு கோயில்—தன் கொடியை உச்சியிற் கொண்ட ராஜகிருகம்.* (32)

91. காரீத்த வள்ளன்மைக் கைப்பாரி முல்லைக்குத்
தேரீத்த வந்நிலையிற் செய்யபுகழ்—பாரீத்த
மாக்கதையி தோண்மெய்ம் மதிக்கபில னட்புக்கோ
டுக்கதைமேற் பாடுதும்யாஞ் சூழ்ந்து.

(இ-ள்.)—*காரினை உலகிற் கீத்த கொடைக்கை. கொடையறத் தான் மழையுண்டாதல் குறித்தது. தேரீத்த அந்நிலையிற் புகழ் பாரீத்*

தல்—தேர்க் குதிரையின் செலவால் அறியப்படுதலை நோக்கிற்று. செய்ய புகழ்—செய்ய நெறியிலெய்திய புகழ்; புகழ் பாரித்தமாக்கதை—புகழைப் பாரினுக்குக் கொடுத்த பெருங்கதை. ஒட்பமும் மெய்ம்மையும் உடைய மதி. அறனறிந்து மூத்தவறிவுடையார் கேண்மையாதலிற் றூக்கதை எனப்பட்டது. சூழ்ந்து—ஆராய்ந்து. யாம் சூழ்ந்துபாடுதும் எ-று. (33)

தேர்முல்லைக்கீத்த திறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள் 33.

---

## 4. கபிலர் நட்டுக்கோட்டிறம்

92. தேர்பெற்ற போதே சிறுவீ நறுமுல்லை
பார்பெற்ற தென்பவேள் பாரிபுக—ழோர்புற்
றழுக்காறு பெற்று ரரசருரம் பெற்று
ரோழுக்கா றுடையபுல வோர்.

(இ-ள்.)—முல்லை தேர்பெற்ற போதே பாரிபுகழ் பார்பெற்ற தென்பர். அரசர் ஒர்புற்று அழுக்காறு பெற்றார்—அரசர் ஒர்தலுற்றுப் பொறாமை பெறுவாராயினர். தாம் உரிமையிற் பெற்றபார் தம் புகழ் பெறாது பாரிபுகழ் பெற்றது கண்டு அரசர் அழுக்காறு பெற்றார் எ-று. புலமைக்குத்தக ஒழுகலாற்றையுடையவர் ஒர்புற்று வலிபெறுவாராயினர். பாரிபுகழ் இடைநிலைத்தீபகம். ஒர்புற்று என்பதனை மூன்றிடத்துங் கூட்டுக. தாங்கற்ற கல்வியை வெறுத்துக்கூறிச் சில் செவித்தாய கேள்வி நொந்து வலியோய்ந்து கிடந்த புலமையாளர் உரம்பெற்றார் எ-று. உரம் பெற்றார் என்றதனை விதற்குமுன்னர் அவர் உழந்த தளர்நிலை யுணரப்படும். கற்ற கல்வியை வெறுத்துக் கூறுதல் "புலவு வாய்ப்பாண" எனவரும் பெரும்பாணாற்றுப்படைத் தொடர்க்கு நச்சினார்க்கினியர் கூறியதனான் அறியலாம். "சில்செவித் தாகிய கேள்வி நொந்து" என்பது புறம் (68). ஒழுக்காறுடைய என்றது அஃதன்றி வேறுடைமை யில்லாமை குறித்தது. (1)

93. வளியா னலையும் வணர்பூங் கொடிக்கு
மளியான் மணித்தே ரளித்தோன்—விளியா
மிடியா னலையும் விழுப்பாண் குடிக்கே
கடியான் றருமென்றார் கண்டு.

(இ-ள்.)—வளியான்—காற்றால். வணர்தல்—வளைதல். அலைதலை யும் வளைதலையும் கண்டு கொடிக்கும் அருளால் அளித்தோன் என்க. உம்மை இழிவு குறித்தது. விளியா மிடியான்—தொலையா வறுமை யால். அலையும்—தாங்குநர்ப் பெறாது சென்று திரிதரும். விழுப்பாண் குடிக்கு—விழுமிய பாடல்வல்ல குலத்திற்கு. கண்டு—இரண்டற்கும் உள்ள தரதமங்களைப் பார்த்து. கடியான் தரும்—தள்ளாளுகித் தருவான் என்றார் என்க. விளியா மிடியானலைதல் கூறியதனாற் கொடி காற்று வீசாதபோது அலையாதென்றும், கொடி யறியாது வளைதல் கூறியதனாற் பாண்குடி இவனை அறிந்து வணங்குதலுண்டென்றும், விழுப்பாண்குடி என்றதனாற் கொடி ஓரறிவுடையது பாடாதது தாழ்ந்ததென்றும் கொள்ள வைத்தவாறு காண்க. கொடிவாய் மலரும் பூவினும் இப்பாண் குடிவாய் மலரும் பாடல் சிறந்தது தோன்றப் பூங்கொடி, விழுப்பாண் குடி, எனக் கூறிற்றெனினுமமையும். ஸ்ரீ கீதையினும் "போதேமலர்ந் தன்ன சொல்லோதுவார்" (2-42.) என இக்கருத்தின் வருதல் காண்க. "சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னு, நல்லிருந் தீந்தாது நாறுதலான், மல்லிகையின், வண்டார் கமழ்தாமமன்றே மலை யாத, தண்டாரான் கூடற் றமிழ்" (மதுரைக் காஞ்சி, வெ.) என உவமை கூறினாரேனும் பூம்போதின் நிலையாமையும் புலவர் சொல் நிலைத்தலும் எளிதினுணரலாம். மணித்தேரளித்தோன் என்றது அவ்விழிந்ததற் கும் இப்பெருங்கொடை தந்தவன் இவ்விழுக்குடிக்கு எப்பெரியதனை யுந் தள்ளாளுய்த்தரும் என்பது குறித்தது. தருதல்வினையாற் பாரி இரவலரைத் தன்னை ஒத்தவராக மதித்து நல்கல் உணர்க. (2)

94. கல்விப்பைங் கூழ்க்குக் கமஞ்சூன் முகிலனையான்
செல்வக் குடிப்பாரிச் செம்மலென்பார்—முல்லைக்
கோடிக்குத்தே ரீத்த கோடைக்கையா னந்த
மிடிக்குப்பா ரீயுமென விண்டு.

(இ-ள்.)—கல்விப்பைங்கூழ்க்கு—கல்வியாகிய பசிய பயிர் வளர் தற்கு. நிறைவினையுடைய கருக்கொண்ட மேகத்தை ஒத்தவன். செல்வ மும் குலனுமுடைய பாரியாகிய தலைவன். இரண்டுஞ் சேர்தலருமை நோக்கிச் செல்வக்குடி எனப்பட்டது. இவ்விரண்டுங் கூடிய வழியுங் கொடை யருமையின் முகிலனையான் எனப்பட்டது. அக்கொடையும் கல்விவளர்த்தற்காதல் அருமை தோன்றக்கல்விப்பைங்கூழ் கூறியதாம். தேரிற்கும் பாரிற்கும் உள்ளவேற்றுமை யுணர்க. தேர் முதலியவற்றை வேண்டியவாறு அமைக்க ஏது ஆவது பார் என்பது தெள்ளிது. மிடிக் குப்பார் என்பது நோய்க்கு மருந்து என்பதுபோல நீக்கப்பொருட்டு. விண்டு—தரதமங்களைப் பகுத்துக்காட்டிச் சொல்வர் என்க. (3)

95. பாடாத முல்லைப் பசுங்கொடிக்குத் தேர்த்தோன்
கோடாத செங்கோற் கொடைப்பாரி—பாடுவார்க்
கென்னீயு மோவென் றியம்பினா ரின்புலவோர்
தன்னீயு மென்றார் தமர்.

(இ-ள்.)—பாடாத முல்லை—முல்லை பெறுதற்கு முன்னும் பாடுத லில்லை, பெற்றதன்பின்னும் நன்றி பாராட்டிப் பாடுதலில்லை என்பது கொள்க. அதன்கண் ஒன்று குறித்தெதிர் நோக்காது, அதன் தளர்வு தீர நல்கியதனாற் கோடாத செங்கோற் கொடையாயிற்று. செங்கோல் என்பதே அமைவதாகக் கோடாத செங்கோல் என்றது "வளையாத செங்கோல் வளைந்ததே" (சிலப்) என்பதுபோலப் பழிபாடப் பெறாமை குறித்தது. கொடியின்றளர்வு கண்டு தாங்காது செல்வனாயிற் கோடிய செங்கோலனாதல் உய்த்துணர்க. பெறுமுன்னும் பெற்றபின்னும் பாடு வார்க்கு; யாதுபொருள் நல்குவனோ என்று இனிய புலமையோர் சொற்றார். அவ்வினாவிற்கு விடையாக அவர் தமர் பாரி தன்னை நல்கு வன் என்றார் எ-று. பாரி பாடுவார்க்குத் தன்னையுமீதல் வஞ்சித்றக் கொன்றதிறத்திற் காண்க. தாமும் உலகமும் இன்புறுதற்குக் காரண மான புலமைபற்றி இன்புலவோர் எ-று. பாடாத முல்லை என்றது "பூத்தலையறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடா தாயி னும்" (புறம் 200) என்ற கபிலர் கருத்தைத் தழீஇ வந்தது. (4)

96. அறலினே ரைம்பா லரிவை கொடிபோல்
விறலிநீ செல்கென்று விண்டார்—நறையின்
வழையெலாம் பொன்னுதிர்க்கும் வண்பறம்பு நாட
னிழையெலா மீயு மென.

(இ-ள்.)—அறலின் ஏர்—கருமணலை யொத்த அழகினையுடைய. ஐந்து பகுதியாக முடித்தற்குரிய கூந்தல்; அரிவைப் பருவத்துப் பெண்ணே என்க. நீ கொடிபோல விறல்பட ஆடு மியல்பினையாத லிற் செல்க என்று கூறினார் எ-று. ஐம்பாலால் இயற்கை வனப்பும் அரிவையாற் றக்க பருவமும் விறலியாற் கலைவன்மையும் கொடிபோற லாற் பாரிபாற்கொடை பெறுதற்கு இயைபும் கருதியவாறும். நறையின் வழையெலாம் பொன்னுதிர்க்கும்-நறைக்கொடியின்மீது சுரபுன்னை மரங்களும் பிறவும் எல்லாம் பொற்றாதுக்களை உதிர்க்கும் என்க: 'புதல்நாகம் பொன்பயந்த' என்பது திணைமாலை நூற்றைம்பது. அவன் நாட்டு மரங்களும் இனிய கொடியிற் பொன்னுதிர்த்தல் கூறி அவன் கொடிக்கீபவன் ஆதலின் நீ கொடிபோல்வை யாதலின் இழையெலா

மீயுமெனச் செல்கென்றுவிண்டார் என்று கொள்க. வண்பறம்பு என்ப தனற் பறம்பின்வண்மை குறித்தது பறம்புநாடன் வண்மையைமிகுத் துக் காட்டற்கு. இழையெலாம்—தலைமுதற் கால்வரை எல்லா வுறுப்பும் புனைதற்குரிய அணிகள் முழுதையும், "விறலியர் சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய'' என்பது மலைபடுகடாம். (570) (5)

97. என்னப் பலவா றியம்பப் பரிசிலர்தாந்
துன்னற் கெழுந்தார் தொடர்திரளாய்—முன்னர்த்தன்
னேடுதேர் முல்லைக் குவந்துபெய் கார்வேட்டுப்
பாடுவான் புள்ளிற் பறம்பு.

(இ-ள்.)—என்று பலபடியாகப் பலர் சொல்லா நிற்கப், பரிசில் பெறற்குரியார் பறம்பு துன்னற்குத் தொடர் திரளாய் எழுந்தார். இப் பெருந்திரளையும் சேர ஊட்டுதற்கேற்பப் பாரியைக் கார் என்று கூறிற்று: முல்லைக்கு ஒரு நீர்பெய்யுங்காரின் வேறுதோன்ற ஒரு தேர் பெய்கார் என்றது காண்க. பாடுவான் புள்ளின்—காரைப்பாடும் வானம் பாடிப் புட்கள்போல: "தற்பாடு பறவை பசிப்ப'' (ஆசிரியமாலை) என வருதலான் அறிக. 'தற்பாடிய தளியுணவிற்புள்' என்பது பட்டினப் பாலை. இது வானம் வாழ்த்தி எனவும் பெயர்பெறும். "வானம் வாழ்த்தி பாடவும் அருளாது'' என்பது அகப்பாட்டு (67). பெய் வானைப் பாடு புள்ளினை உவமை கூறியதனற் பரிசிலர் பாடும் இயல்பினரென்பது தெரியலாம். (6)

98. பல்லிசையாழ்ப் பாணனேடு பாடினியுங் கோடியரு
மெல்லிசையா ளுடேழ் விறலியரு—நல்லிசைமெய்ப்
பாவலருந் தோக்கார் பழுமரந்தேர் புள்ளிற்போய்க்
காவலரும் வண்பறம்பின் கண்.

(இ-ள்.)—இசைபலவும் யாழிற் காட்டவல்ல பாணனேடு அவற் கேற்பப் பாடவல்ல பாடினி. கோடியர்—கூத்தர். அவர் கூத்திற் கொத்து இசையுடனுடும் விறலியர் என்க. "பாணன், பாடினி, கூத்தர், விறலியர்'' என்பது தொல்காப்பியம், கற்பியல் (52). வலிவு மெலிவு சமன் என்னும் தான நிலையினையுடைய இசைக் கூறுபாடுகளெல்லாம் நரப்படைவு கெடாமற் புணர்க்கவல்லன் யாழ்ப்பாணன் என்க. நல் லிசை மெய்ப்பாவலர்—நல்ல இசையினை மெய்ப்பொருள் நிறைந்த பாக்களில் யாத்துப் புணர்க்கவல்ல புலவர். "தமிழ்முழு தறிந்த தன்மையனுகி நாத்தொலைவில்லா நன்னூற்புலவனும்'' என இளங்

சோவடிகள் கூறுதல் கொண்டு தெரிக. பழுமரம்—பழுத்தமரம். காவல ரும் வண்பறம்பு என்றதனுற் புட்களும் ஆங்குப்போதல் கொள்க. புட் களுக்குங் கொடை நிகழ்தலான் வண்பறம்பு ஆதலுணர்க. காக்கள் மல ரும் வண்பறம்பு என்க. பாணன் பாடினியால் இசையும், கோடியர் விறலியரால் நாடகமும், பாவலரால் இயலுங் கூறி இம்முத்தமிழ்க்கலை ஞர்க்கும் பாரி யளித்தல் குறித்தது காண்க. (7)

99. பருவத் தேழுந்தபுயல் பார்த்தமயில் போல்வா
ரொருவற்ற வான்புள் ளுறழ்வார்—தெருவுற்ற
போதிற் பறம்பிற் புனைவிழாக் காட்டிற்றே
கோதற்ற கோவேள் கொடை.

(இ-ள்.)—பருவத்து— கார்ப்பருவத்து. எழுந்தபுயல்—பெய்தற்கு உயரவெழுந்த மேகம். மயில் போல்வார் என்றது ஆடல்வல்லவரை. ஒருவு அற்றவான்புள்—வானத்தை ஒருவுதல் அற்ற வானம்பாடி: என் றது பாடுவோரை. உறழ்வார்—ஒப்பார்; வானம்பாடிக்கு மாறுபடப் பாட வல்லார் எனினுமமையும். புனைவிழா—ஊரை அலங்கரிக்குந் திருவிழாச் சிறப்பு. காட்டிற்று—உண்டுபண்ணியது. கோவேள் கோதற்றகொடை காட்டிற்று என்று சொல்க. ஆடற்கும் பாடற்கும் காரணமாதலிற் பாரி கார்போறல் காண்க. (8)

100. தந்தா முடையகத்துச் சார்வுறுவார் போற்கலைஞர்
நந்தாத காப்பி னகர்நண்ணி—வந்தார்க்
களிக்க வுருக்கொண் டறமிருந்தா லன்னான்
களிக்கப் பராஅயினர் கண்டு.

(இ-ள்.)—தாம் தம்முடைய மனைக்கட் சார்தலுறுவார் போல; "நும்மில்போல நில்லாதுபுக்கு" என்பது மலைபடுகடாம். நந்தாதகாப்பின் நகர்—கெடாத காவலையுடைய கோயில். கலைஞராய்ப் புகுவார்க்குத் தடையின்மை குறித்தது. அறம் தன்கண் வந்தார்க்குஅளிக்க உருக் கொண்டிருந்தால் ஒத்தவன். களிக்கப் பராஅயினர்—இவர் வந்தவளவே கண்டு களியாநிற்க அதனைக்கண்டு தம் ஆதுரத்தாற் பராஅயினர் என்க. அன்னான் களிக்க என்றதனால் இன்முகங் கூறிற்று. (9)

101. பாரியைக் கண்டுவந்தார் பாணர் வறந்தபயிர்
மாரியைக் கண்டனையார் மற்றவரைப்-பாரி
தணந்து புணர்ந்த தமரின் விழைந்து
மணந்தன் புரைத்தான் மகிழ்.

(இ-ள்.)—கண்டு உவந்தார்-கண்டவளவே உவந்தவராயினர். நீர் வறந்த பயிர் மேகத்தைக்கண்ட அத்தன்மையர் ஆயினர்: பெய்யாத நிலையினும் கண்டவளவே உவத்தல் வறந்த பயிர் இயல்பு என்க. தணந்து புணர்ந்த தமரின் விழைந்து—நெடுங்காலம் பிரிந்து பின்னர்க் கூடிய கிளைஞரைப் போல விரும்பி. மணந்தன்புரைத்தான் மகிழ்—அன்பு மணந்து மகிழ் உரைத்தான் என்க. மகிழ் உரைத்தான் என்றதனல் இன்சொல் கூறிற்று. அன்பு மணந்து என்றதனல் அகனமர்தல் கூறிற்று. "அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந், தின்சொல னாகப் பெறின்" (திருக்குறள்) என்பது காண்க. பாரியை என்றதன் பின்னும் பாரி என்றது "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது" என்று மணிமேகலையுட் போலக்கொள்க. இன்முகத்திற் களிப்புத்தோற்றவும் உரைத்தலில் மகிழ் தோற்றவும் நின்றான் என்பது குறிப்பு. களிப்பினும் மகிழ்ச்சி சிறந்ததாதல் "உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங், கள்ளுக்கில் காமத்திற் குண்டு" (திருக்குறள்) என்புழிக் காண்க. தமரின் விழைந்து என்றது "கேளிர்போலக் கேள்கொளவேண்டி" (பொருநரா) என்பதனைத் தழீஇ வந்தது. (10)

102. போர்பாடு வாரும் புனைமுல்லை மீப்படர்ந்த
தேர்பாடு வாருந் திகழ்கோடைக்கைக்—கார்பாடிச்
சீர்பாடு வாருமாய்ச் சேண்கேட்க நின்றதளி
தார்பாடு பாரி தளி.

(இ-ள்.)—போர்பாடுதல்-மறப்புகழைப் பாடுதல். தேர்பாடுதல்—கொடைப்புகழ் பாடுதல். இவ்விரண்டையும் விளக்குங் கையாகிய மேகத்தைப் பாடி, சீர்பாடுவாருமாய்—மேற்கூறியவற்றின் வேறாகிய நீதிச் சிறப்பினைப் பாடுவாருமாகி; சீர்பாடுதல்—கையாகிய காராற்றுங்கப் படும் உலகபாரத்தைப் பாடுத லெனினுமமையும் "சீர்தூக்குங்கோல்" (குறள்) என்புழிச் சீர் பாரமாதலுணர்க. இவ்வாறு மறமும் கொடையும் பாரந்தாங்கலாகிய நீதியும் கைக்கார்க்கு உரியனவாதல் காட்டிற்று. அளி தார் பாடு—வண்டுகள் தாரைப்பாடுதற்குக் காரணமான; பாரிதளி—பாரிகோயில்; இப் பலபாடற் புகழ்ச்சியால் நெடுஞ் சேய்மைக்கண்ணும் ஒலிகேட்க நிலைபெற்றது எ-று. கேட்டல்—ஒலிகேட்டல் ஆதல் தெள்ளிது. தார்-மார்பினணிந்த மாலை; "வண்ண மார்பிற் றாரும்" என்பது புறப்பாட்டுக் காப்பு. கைபாடிச் சீர்பாடுதலால்—அக் கை தாங்கும் பாரம் சீர் என்பதாயிற்று. (11)

103. வறுந்தலையிற் பாணன் மலைந்தான் பொலம்பூ
வறுந்தலையிற் கந்தை யகற்றி—நறுந்தலைய

பொன்னுடை யுக்கம் பொலிந்தாள் விறலியற
மன்னனைப் போய்க்கண்ட வன்று.

(இ-ள்.)—பாணன் வறிய தலையிற் பொன்மலர் சூடினன்: விறலி அற்றுக் கிழிந்த தலைப்புக்களையுடைய கந்தைத் துணியை நீக்கி, நல்ல தொழில் செய்த தலைப்பினையுடைய பொன்னிழையாலாகிய ஆடையால மருங்குல் விளங்கினள்: அன்று என்பது பரிசில் நீட்டியாது கொடுத்தல் குறித்தது. "அன்றே விடுக்குமவன் பரிசில்" என்பது பெரும்பாணாற்றுப்படை. பாணன் பொற்பூ மலைதல் "அரிமயிர்த் திரண்முன்கை" என்னும் புறப்பாட்டிற் காண்க. தப்பாது நன்மை பயத்தலான் அறம் உவமையாயிற்று. போய்க்கண்ட அன்று என்றது; போதல் ஒருநாளும் காண்டல் வேறுநாளும் இல்லாமை குறித்தது. நுணுகிய மருங்குல் பொலிவு பெறுதல் கூறியதனாற் பிறவுறுப்புக்களின் பொலிவு கூறவேண்டாதாயிற்று. பொலம்—பொன். (12)

104. தேரூர்ந் திழைபுணர்ந்தார் சென்றூர் புலனறிந்தார்
சீரூர் பரிமாச் செலியினர்—காரூர்ந்தாங்
கேற்றும்ப லூர்ந்தா ரியற்புலவர் பொன்னோடன்பு
சாற்றுவேள் பாரி தர.

(இ-ள்.)—இழைபு உணர்ந்தார்—இசைப்பாட்டுணர்ந்தவர். "ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது, குறளடி முதலா வைந்தடி யொப்பித், தோங்கிய மொழியா னோங்கன மொழுகி, னிழைபி னிலக்கண மியைந்த தாகும்" (தொல். செய் 243) என்பதனால் இழைபு இசைப் பாட்டாதலுணர்க. புலன்—நாடகச் செய்யுள்: "சேரி மொழியாற் செவ்வி திற்கிளந், தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற், புல னென மொழிப் புலனுணர்ந் தோரே" (ஷை. ஷை. 242) என்பதனாற் புலன் நாடகச்செய்யுளாதலுணர்க. செந்துறைச் செய்யுளை இசைக் கும், வெண்டுறைச் செய்யுளைக் கூத்திற்கும் கொள்க. அதிர்தலில் லாது இன்னோசை யோடு விரைதலைத் தேரிற்கு வேண்டுவர் கவிசாரு பௌமர் (* ரகுவம்சம், 1-35) இதனாற் றேர்ப்பரிசில் இழைபுணர்ந் தார்க்கு இயைதல் காண்க. சீரூர் பரிமா—தாளவோசைக்குத்தக ஊர்தற் குரிய செலவினையுடைய புரவி: இது புலனறிந்தார்க்கு இயைதல் காண்க. கார் ஊர்ந்தாங்கு—மேகத்தை ஏறி நடாத்தினாற் போல; என் றது இந்திரன் ஒத்தல் குறித்தது. இயற்புலவர்—இயற்புலமையாளர்.

*"இன்னோசை கம்பீரமாயுள்ளதேரோசை யொன்றினில்" என்பது இரகு வம்ச மொழிபெயர்ப்பு.

ஏற்று ஆம்பல் ஊர்ந்தார்—ஏற்றத்திற்குரிய யானையை ஏறி நடாத்தினர். ஏற்று—ஏறுதல். "ஏற்ருருஞ் சென்னி" (பெரும்பாண்) என்புழிக் காண்க. ஆம்பல் பூ அன்மைக்கு ஏறுதல் கூறிற்று." "ஆம்பல்முகவரக் கன்" என்பது கல்லாடம். "முத்தமிழ்மும்மதமும் பொழியானை" என்பதனுல் யானை இப்புலவர்க்கு இயைந்தது: "பெருங்கவிதை மதகரி" என்பது வீரைக் † கவிராச பண்டிதன் வாக்கு. வேள்பாரி அன்புசாற்றிப் பொன்னுடன் தருதலாற் சென்ருர், செலியினர், ஊர்ந் தார். எ-று. இது பரிசில்விடை என்னுந் துறை கூறியது. ஐயனரித ஞர் இத்துறைக்குச் சொற்ற வெண்பாவிற்" படைநவின்ற பல்களிறும் பண்ணமைந்த தேரு, நடைநவின்ற பாய்மாவு நல்கி" என்பதனுல் இம் மூன்றுங் கூறுதல் காண்க: ஆண்டு உரைகாரர் "நடைநவின்றபாய்மா" என்பதற்குத் "தாளத்திற்கொத்த நடைபொருந்திய குதிரை" என உரைத்ததனையும் ஈண்டைக்கு ஏற்ப நோக்கிக்கொள்க. "வா அப்பாணி வயங்குதொழிற் கலிமாத், தாஅத்தாளிணை" என்பது அகம் (134) பொன்னெடுதர என்றது இவ்வூர்திகள் அவரவர் ஊர்வரையுஞ் செல்ல விடுதற்கன்றி அவ்வவர்க்கே உரிமையாகத் தருதல் குறித்தது. பொன்னெடு என்புழி, ஒடு இவ்வூர்திகளூர்தற்கேற்ற பெருக்கத்து வாழ்தற்குத்தகத் தந்த பொன்னின் உயர்பு குறித்தது. அன்புசாற்ரு— அன்புரைத்து: என்றது உள்ளத்தன்பினை வாய்மொழிகளாற் புலப் படச்செய்து. எ-று. இதனுல் இன்சொல்லும் நன்ருற்றலும் கூறுத லுணர்க. "இன்சொலா லீத்தளிக்க வல்லாற்கு" (387) என்ருர் திரு வள்ளுவனரும்: "புலவ ரேத்த வோங்குபுகழ் நிறீஇ, விரியுளை மாவுங் களிறுந் தேரும், வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசி" (பதிற். 20) என்பதனுல் இவை கொடைக்குச் சிறந்தனவாதல் காண்க. (13)

105. பாடினர் பாடல் பருகி வழங்கினர்போந்
தாடினர் கண்டீந்தா ராடினர்க்குச்—சூடினர்பாச்
சூட்டின ரிவ்வே சுடர்வேள் கோடையினிலம்
பாட்டினர் பெற்ற பயன்.

(இ-ள்.)—போந்து பாடினர் ஆடினர் சூட்டினரென்க. பருகி யென்றது பாடலினிமை குறித்து வந்தது. பருகி வழங்கினர் என்பது பருகற்குரிய சுவையுணர்வும் பெருஞ்செல்வமும் கொடையும் உடைமை குறித்தது. ஆடினர்க்கு ஆடல் கண்டு ஈந்தாரென்க. கண்டீந்தாரென்பது—அவ்வாடலின் தரங்காண வல்லராதலும் செல்வ முங் கொடையும் உடையராதலுங் குறித்தது. போந்து பாச் சூட்டி ஞர் பாச் சூடினர் என்க. சூடுதல்வினையாற் பாக்கள் மாலையாதலும்

† சௌந்தரியலகரிப்பாயிரம்.

தலையிற்றூங்கத் தக்கனவாதலுங் குறித்தவாறு. இலம்பாட்டினோர்—முன் வறுமையே யுடையராயினோர் வேள்கொடையாற் பெற்றபேறு இவ்வே என்க. இலம்பாடு—வறுமை. சுடர்வேள்—தானுள்ள காலத்தே எல்லாரினு மிக்கு ஒளி செய்கின்ற வேள்பாரி. பாரி கொடையால் இரவலரெல்லாம் கலைக்கு வழங்கும் வள்ளியராதல் கருதிற்று. குடினரெனத் தரமறிந்து தலையிற்கொள்ளுதல் குறித்தவாற்றால் அதற்கு ஈதல் வேறே கூறவேண்டாதாயிற்று. இவ்வே—இவையே. சுடர்வேள்; ஒளிவேள்; ஒளிக்குடிவேள் எனினுமமையும்; ஒளியர்வேளாளர் என்பது ''பல்லொளியர்'' என்னும் பட்டினப்பாலையுரையுள் நச்சினார்க்கினியர் ''ஒளியராவார் மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்'' எனக் கூறியதனான் அறிக. ஒளிநாடு தென்பாண்டிக்குக் கீழ்பாலுள்ளதென்ப (தொல். சொல், எச். 4 சே.) (14)

106. வளர்நெட் டிலையிருப்பை வட்டவான் பூவேன்
றுளநட் டினியதோ ரொண்பாட்—டிளஞ்சொற்கேள்
சின்னாளிற் பாடுந் திருவாத வூர்க்கபில
னந்நாளிற் போந்தா னவண்.

(இ-ள்.)—இளஞ்சொற்கேள் சின்னாள்—முற்றாத இளஞ்சொற் கேட்டற்குரிய சிறுபிராயம். இதனை மழலைப்பருவம் என்பர். ''ஒருகுதலைச் சின்மழலைக்கு'' என்பது திருக்கோவை. இவ்விளம் பருவத்து 'நெட்டிலை யிருப்பை' என்ற இனிய பாட்டைப் பாடும் கபிலன் என்றது, இவன் முதிர்ந்தநாளிற் பாடுஞ் செய்யுட்டிறத்தை அளந்துணர்தற்கு வாயில் காட்டியவாறு; ''நெட்டிலை யிருப்பை வட்ட வான்பூ வாடா தாயிற் பீடுடைப் பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலைப், பரதர் மனைதொறு முணங்குஞ், செந்தலை யிறவின் சிரேய்க் கும்மே'' (தமிழ் நாவலர் சரிதை). இப்பாடல் இருப்பை மரத்தடியில் இவன் பாடியதென்பர் பெரும்பற்றப்புலியூர் நம்பியார். திருவாதவூர்—பாண்டி நாட்டதோரூர்; பிற்காலத்து ஆளுடைய வடிகள் ஊராயிற்று. இனியதோ ரொண்பாட்டு உளம் நட்டுப்பாடுங் கபிலன் என்க. பொருளான் இனியதும் அணியாலொப்பற்றதும் சொல்லான் ஒட்பமுடையதுமாகிய பாடல் என்பது கருத்து. உளம்நட்டு—அறிஞருள்ளத்தே நடுதல் செய்து எ-று. உளம் விரும்பி யெனினும் அமையும். 'நெட்டிலை யிருப்பை' என்னும் பாட்டுப் பிறிதுமொழிதல் என்னும் அணியாற் பொருள் விளக்கியவாறும். இருப்பையின் வான்பூ மரத்தொடுகூடி வாடாத நிலையிற் பிடியின் கொம்பொக்கும் என்று பாராட்டப் படுதலும், வாடிய நிலையில் உணங்கும் இறவினின் செந்தலைச் சிர் ஒக்கும் என்று இரங்கப்படுதலும் கூறியமுகத்தால், நன்னிலையின் மக்கள்

பாராட்டப்படுதலும் தளர்நிலையில் இரங்கப்படுதலும் உலகவியல்பு என்று அறிவுறுத்தியவாறு. உணங்கும் இறவு என்றதனால் இரங்கற் குறிப்புணர்க. தன் புதுப்பூப் பாராட்டப் படுதலானும், தன் வாடிய பூ இரங்கப்படுதலானும் இருப்பை மரம் இன்பமும் துன்பமும் உறாது சலியாது நிற்றல்போலப் பெற்ற தாயாகிய நீ என் வளர்ச்சி தளர்ச்சி நினைந்து ஒன்றும் உறாதுநிற்க என்று கபிலன் தன்றாயை நோக்கிப் பிரியும்போது பிறிதுமொழிதலாற் கூறியதாகக் கொள்க. அந்நாளில்—பாரியைப் புலவர் முதலியோர் பாராட்டிய அக்காலத்தில். அவண்—அப்பறம்பிற் கோயிற்கண். (15)

107. பரண ரோடுவாதம் பண்ணி யுலகின்
முரணில் புகழ்விளங்கு முன்னோன்—றரணிக்
கோருபுலவன் வான்கபில னும்பர்கோ னொப்பாற்
கருகிலக மேயினா னங்கு.

(இ-ள்.)—பரணரொடு என்புழி ஒடுப் பரணரின் உயர்பு குறித்தது. முன்னோன்—அவரினு முற்பட நிறுவ நின்றவன் எ-று. "கபில பரணர்" என்பது நோக்கி யறிக. "கபிலபரணர் தங்களிலே வாது செய்தார்களென இயைபு தோற்றி நின்றமையால் இதரேதரத் தொகையாயிற்று" (தொகை. 6) என வீரசோழியவுரைகாரர் கூறியதுகொண்டு தெரிக. முரணில் புகழ் விளங்கு—இருபாற்படாத புகழான் விளங்கிய; "விளங்கு புகழ்க் கபிலன்" (புறம். 53) என வருதல் காண்க. தரணிக்கொரு புலவன் என்றது வாணிற்கு ஒரு புலவன் எனப்பட்ட வியாழனை விலக்குதற்கு. வான் கபிலன்—சிறந்த கபிலன்; தொல்கபிலனின் வேறு குறித்தது. தரணிக்கு ஒரு புலவனாதலாற் றரணியில் உம்பர்கோனொப்பானாகிய வேள்பாரிக்கு அருகிலே தன் ஒளி விளங்கப் பொருந்தினான் எ-று. ஆங்கு—அவ்வமயத்தில். புலவன் வியாழனுக்குப் பெயரென்பது "அறமுரைத் தானும் புலவன்" என்னும் பொய்யாமொழியார் வாக்கானுணர்க. இவன் உரைத்த அறநூல் பார்கற்பத்தியம் எனப் பெயர்பெறும். கபிலன் இன்னாநாற்பதென்னும் அறநூலோதுதலும் ஈண்டைக்கு நினைக்க. புலவரைத் தாங்கலான் விண்வேந்தன் ஒப்பவன் பாரி என்பதுங் கொள்க. (16)

108. அகத்திற் றெருள்விளக்க மங்கபிலன் செய்ய
முகத்திற் பொலிய முதல்வேண்—மிகத்தன்
விழிகவர நின்ற விழுமியோற் கின்பம்
பொழிகவர வென்றான் புகன்று.

(இ-ள்.)—அகத்திற்றெருள் விளக்கம்—மனத்தின்கணுள்ள அறிவாகிய விளக்கு. அங்கபிலன்—அழகிய கபிலன். செய்யமுகத்தில்—செவ்விய முகத்தின்கண். செய்யமுகம் கூறியது, கபிலன் என்னும் பெயர் நோக்கி; கபிலம்—செந்நிறம் ஆதலுணர்க. "நெஞ்சங் கடுத்தது காட்டு முகம்" (குறள். 706) என்பதனல் முகத்திற் பொலிய என்றதாம். முதல்வேள்—வேள்முதல். பொலிதலாற் றன்விழிகளை மிகக் கவர நின்ற விழுமியோன் என்க. இவன் நின்ற நிலையே விழி கவர்தல் குறிப்பு. வரவு இன்பம் பொழிக என்றன்- நும்வரவு இன்பம் பெய்வதாகுக என்று சுவாகத முரைத்தான் எ-று. புகன்று—விரும்பி. விழிகவர நின்ற என்றதனுற் பாரி கபிலனை விழியாற் கண்டவாறும் புகன்று என்றதனல் அவன் உள்ளத்தால் அவனை விரும்பியவாறும் வரவு இன்பம் பொழிக என்றதனல் வாயால் இன்சொற் சொற்றவாறும் கூறலாயிற்று. (17)

109. பாட்டரையற் கேற்ற பகல்செய் மணியிருக்கை
நாட்டரையன் வேண்ட நயந்தமர்ந்து—வேட்டினிது
கேளாருங் கேட்கக் கிளந்தான் விழுப்பொருள்கண்
மாளாப் பெரும்புலவர் மன்.

(இ-ள்.)—நினைந்தவாறு ஏவிப் பாட்டினைத் தன் சொற்படி நிறுவ வல்லனுதலின் உயர்ந்த புலவன் பாவேந்தன் எனப்படுவான். சொல்லுலகை ஏவுவான் எ-று. பொருளுலகை ஏவுவான் அரசன். அந்நகையானுக்குத்தக எ-று. இரவினும் பகலொளியைச் செய்யும் மணிகள் அழுத்திய ஆசனம். நாட்டரையன்—பாரி. பாடற்றலைமை ஒருவன் கண்ணே நீடு நிலைத்தலும் அங்ஙனம் நாட்டின்றலைமை ஒருவன் கண்ணே நிலையாமையும் ஈண்டைக்கு உணர்ந்துகொள்க. இவ்வறிவே நாட்டரையன் பாட்டரையனை வழிபடுதற்கு ஏது என்க. நயந்து—பாரியுபசாரத்தை விரும்பி. அழுக்காற்றுற் கேளாத பகைஞரும் வேட்டு இனிது கேட்கச் சிறந்த நூற்பொருள்களைச் சொற்றன். தாம் செய்த நூற்புகழால் எஞ்ஞான்றும் இறவாத பெரிய புலமையாளர்க்குத் தலைவன். எ-று. விழுப்பொருள் என்றது அரையர் பொருளினும் இவை சிறந்தன என்பது குறித்தது. கேட்பார் கேட்கக்கிளத்தலரிது, அதனினும் கேளார் கேட்கக் கிளத்தலரிது, அக்கேளார் வேட்டுக் கேட்கக் கிளத்தல் அதனினும் அரிது. அவர் வேட்டு இனிது கேட்கக் கிளத்தல் எல்லாவற்றினுமரிது என்பது தோன்றக் கூறியது காண்க. ஈண்டுக் கபிலன் இனியன கூறுது இன்ன இவையென்று கூறி இங்ஙனம் வேட்கச்செய்த விரகு குறிக்கொள்க. மாளாமை—புகழுடம்பான் என்

றும் நிலைத்தல் "உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன்" என அகப்பாட்டில் (78) நக்கீரர் பாடுதலான் அறியலாம்.

110. இன்னா விவையென் றியம்பி யினியனவும்
பன்னா துணரப் படுமேன்று—னன்னான்வாய்க்
கேளா தனவெல்லாங் கேட்டா மெனவுவந்தார்
வேளா ரவையோர் வியந்து.

(இ-ள்.)—கடிய வேண்டிய இன்னாதன இவையாம் என்று இயம்பிய பின்னர் இவ்வின்னாதன தள்ளிக், கொள்ளற்குரிய இனியன வும் இவையென்று வேறு சொல்லாது நெஞ்சான் உணரப்படுமென்று மொழிந்தான். வேளுடைய அரிய அவையின்கணுள்ள பெரியோர் அவன் வாயால் இதுகாறுங் கேளாத பொருள்களெல்லாம் கேட்கப் பெற்றாம் என்று வியந்து அவனை விரும்பினர் எ-று. கூறிய இன்னாதன கொண்டு கூறாத இனியன உணரவைத்தலாற் கேளாதன கேட்டா மென்று அவர் கூறியது வாய்மைத்தாதல் காண்க. சிறந்த புலவரே குழுமலால் ஆரவையாயிற்று. "நல்லது செய்தலாற்றீராயினு, மல்லது செய்த லோம்புமினதுதா, னெல்லாரு முவப்பதன்றியு, நல்லாற்றுப் படுக்கு நெறியுமாரதுவே" (புறம். 195) என்பதனால் நல்லது செய்தலி னும் அல்லது செய்தலைப் பரிகரித்து முதற்கண் இன்னா கூறினன் என்க. யார் முன்னும் எஞ்சிக் கூறா விறலோன் (பதிற்று. 7-1) ஆத லானும் "புலனழுக்கற்ற அந்தணாளன்" (புறம். 126) ஆதலானும் அரசவையில் அறமே கூறினன் என்க. இன்னா நாற்பது கபிலர் பாடிய நூல்; பதினெண் கீழ்க்கணக்கிற் கோக்கப்பட்டது. (19)

111. ஆரிய மன்ன னரும்பிரம தத்தற்கோண்
சூரிய னேன்னச் சுடர்கோளுவிச்—சீரிய
தேன்றமிழ்நல் லின்பந் தேருட்டினன் பாடினா
னின்றமிழ்தம் பேய்தாங் கிவை.

(இ-ள்.)—ஆரியமன்னன்-ஆரிய நாட்டு அரசன். ஆரிய நாடு-மேல் கடற்பக்கத்துத் தொண்டிக்கு வடக்கணுள்ள நாடு. அரும்பிர மதத்தன் என்றது தமிழின்பந் துய்த்தவனும் கபிலராற் றமிழ்ப்புலமை சிறந்தவனும் ஆகிய அருமை குறித்தது. இவன் தமிழறியக் கபிலர் குறிஞ்சிப்பாட்டைப்பாடினர்; ஆதலின் அந்நூலாற் றமிழ்தெருட்டலும் நல் இன்பந் தெருட்டலும் கண்டுகொள்க. தமிழ் நல்லின்பம்—தமிழ்க்கே சிறந்த நல் இன்பத்திறன்; அது காந்தருவம் என்பது; இத்தமிழின் பமே அந்நூல் கூறுதல் காண்க. பரிபாடலினும் "நான்மறை விரித்து நல்லிசை விளக்கும், வாய்மொழிப் புலவீர், சிறந்தது காதற் காமம்

காமத்துச், சிறந்தது விருப்போ ரொத்துமெய்யுறு புணர்ச்சி'' (9)என்று தொடங்கி ''இத்தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய்வந்திலார்'' (ஷை) என்று இக்காந்தருவத்தின் சிறப்பை வடமொழியாளர்க்குத் தெளிவித்தலுங் காண்க. சிறந்தது காதற்காமம் ஆதலின் நல்லின்பம் எனப்பட்டது. அது வடநாட்டிலரிதாய்த் தென்னாட்டே பயின்ற காதலாதலிற் றென்றமிழின்பம் ஆம். புணர்ச்சி யொழுக்கத்தாற் சிறந்து அறத்தொடுநிலையலாற் சீர்த்தலானும் செந்தமி ழியற்சொல் லான் யாக்கப்படுதலானும் சீரிய செந்தமிழ் இன்பம் எனப்பட்டது. திணையொழுக்கநூல் கல்லார் செந்தமிழ் சேராரே யாவர் ஆதலின் அதற்கியைய இன்பந் தெருட்டினன் என்க. ''ஐந்திணை யைம்பது மார் வத்தினோதாதார், செந்தமிழ் சேரா தவர்'' (ஐந்திணையைம்பது) என்றார் மாறன்பொறையனார். சூரியனினும் ஒட்பமுடையனென்று ஆரிய வரசனும் அவன் அவை யோருஞ் சொல்ல ஒளி கொளுத்தி அவன் அகவிருள் போக்கல் கூறிற்று. இருதலையும் ஒத்த அன்பொடு புணருங் கூட்டத்திற் பிறத்தலின் இன்பத்தின் நல்லது எனினுமாம். அறம் பொருள் இன்பம் எனப்பட்ட மூன்றனுள்ளும் அன்புபற்றி முற்கூறப் படுதலிற் சிறப்பும் உணர்க. ''இன்பமும் பொருளு மறனு'' என்றார் தொல்காப்பியனார் (களவியல்) இத்தகைச் சிறப்புடையோன் இப்போது ஒரமிழ்தம் இவ்வுலகிற்குப் பெய்தாற்போல இவை பாடினன். எ-று இன்று என்றது அந்நாளிற் றேவர்க்குப் பெய்ததின் வேறுபடுத்தற்கு.

112. செந்நாப் புலவர் திரள்பாரி பாரியென
வின்னே ளொருவன்சீ ரேத்தெடுக்கு—முன்னின்வேள்
பாரி யொருவனலன் பார்புரப்பான் மற்றிவன்போன்
மாரியுமீ துண்மை மறந்து.

(இ-ள்.)—செம்மையான நாவினையுடைய புலமையாளர் குழா முழுதும் பாரிபாரி யென்று, இவன் ஒருவன் சிறப்பினைப் புகழ்ச்சியால் உயர்த்திப்பேசும். நினைந்துணரின் உலகு புரத்தற்குப் பாரி ஒருவன் மட்டும் அல்லன் இவன்போல மேகமும் மேலே இருப்பது மறந்து எ-று. மறந்து ஏத்தெடுக்கும் என்க. மாரி மீதிருத்தல் கூறியதனாற் பாடப்பட்ட பாரியும் பாடும் புலவரும் எல்லாம் அதன் கீழிருத்தல் கருதியவாறு. செந்நாப்புலவரா யிருந்தும் இவர் திரள் உண்மை மறந்து ஏத்தெடுப்பது என்று வியப்புச் சுவைபடக் கூறியவாறு. ஒருவர் இருவர் மறந்தனரல்லர் இத்திரளே மறந்தது என்பது குறிப்பு. பலரும் பாடிய பல பாடல்களிலும் இவன் பெயரே பலமுறை வருதல் கருதிப்

பாரிபாரி என அடுக்கியது: பார்புரத்தலின் மேகமும் பாரிக்கு ஒப்பா மேனும், செந்நாப்புலவரைத் தனியே போற்றிப் புரத்தலில்லாமையாற் புலவர்திரள், மாரியை மறந்து பாரிபாரி என்று ஏத்தெடுக்கும். எ-று. இங்ஙனம் 'மாரியுமுண்மை மறந்து' என மாரியை வினைப்பூட்டியது, பாரியைப்போல் மாரிசெய்யும் பயனொப்புமை குறித்து என்க. இது பயனிலை புரிந்த வழக்கென்பது இளம்பூரணர்க்கும் பேராசிரியர்க்கும் உடன்பாடு (தொல்-உவமவியல்). மாரி முல்லைக்கு நீர் பெய்தலன்றித் தேர்நல்காமையான் மறந்ததெனலும் பொருந்தும். உலகு புரக்கும் மாரியையு மறப்பித்துச் செந்நாப்புலவர் திரள் தன்னையே ஏத்த நல்கும் வள்ளியோன் என்பது இதன் கருத்தாம். வறந்தபோதினும் பெய்த லாற் பாரி மாரியினுஞ் சிறத்தல் தேறலாம். இவ்வுயர்வு தோன்றவே இவன்போல் மாரியுமுண்மை என்பதனுற் பாரியுவமையும் மாரி உவமே யமும் ஆகக் கூறியவாறாயிற்று; "தடுமா றுவமந் தாஞ்சில வுளவே" (தொல்-உவம) என்ப. பார்புரப்பான்—உலகத்தைப் பாதுகாத்தற்கு எ-று. "மாரியுமுண்டீண்டுலகு புரப்பதுவே" (புறம்-107.) என்புழிப் பழைய உரைகாரர் உலகு புரப்பது என்றது உலகத்தைப் பாதுகாத் தற்கு என வுரைத்தமை நோக்குக. புரப்பது என்றால் மாரிக்கியைந்து பாரிக்கியையாமையும் புரப்பான் என்றால் பாரிக்கியைந்து மாரிக்கியை யாமையும் காண்க. இது செந்நாப்புலவர்க்கு நல்கல் கூறிற்று. (21)

113. சுனைநன் குவளை துளிதூங்கப் பெய்யா
தெனினும் பெயினு மிழைகள்—வனைவாய்
விறலி வரைவீழ்நீர் வெல்லினிய சாயற்
றிறல்வேள்பார் பாடிச் செலின்.

(இ-ள்.)—எப்போதுஞ் சுனை நீரிலிருத்தலாற் றன்னலங்கெடாத குவளைமலர்களி னிர்த்திவலைகள் தூங்கா நிற்க வானம் பெய்யாதெனி னும் பெய்யினும் இழைகளை வனையப் பெறுவை எ-று. பெய்யினும் பெய்யாதாயினும் வரைகளில் வீழ்கின்ற நீரையும் வெல்லற்குரிய இனிமையும் மென்மையு மென்னு மிவற்றுடன் அந்நீர்ப் பெருக்குப் போற் பிறர் தடுக்கரிய ஆற்றலும் உடைய வேள்பால் நீ பாடிச் செல்வை யாயின் இழைகளை வனைந்து கொள்வை. எ-று. மழை பெயினும் பெய்யாதெனினும் வரையில் நீர் வீழ்தல் போலவே பெயினும் பெய்யா தெனினும் பாடிச்செல்வையேல் இழைகள் கிடைக்கும் என்று கூறிய தாகக்கொள்க. மழை வேண்டாது குவளை சுனையையடுத்துச் சிறத்தல் போல நீயும் மழைவேண்டாது பாரியை யடுத்துச்சிறத்த லுடன்படுத லான் இழையாற் பொலிதலுஞ் செய்வை என்று குறித்ததாம்,

"பசந்தவுண்கண், குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத், தொல்கவின் பெற்றன" (ஐங்குறு நூறு 500.) எனவருதல் காண்க. இது "சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி" (புறம். 105.) என்னும் புறப் பாட்டைத் தழீஇ யுரைத்தது. பாடினர்க்கு வறந்த போதும், வளம் படும் போதும் பாரி நல்குதல் குறித்தது. "புலங்கந் தாக விரவலர் செலினே, வரைபுரை களிற்றொடு நன்கல னீயு, முரைசால் வண் புகழ்ப் பாரி" (அகம். 303.) எனவருதல் காண்க. இது கலைவல்ல வர்க்குச்செய்யும் வள்ளன்மை கூறியது. மலையாதலாற் பெய்யாதெனி னும் அருவியொழுக்கருமை கூறிற்று. "கருவிவானம் பெய்யா தாயினு மருவியார்க்கு மயந் திகழ் சிலம்பின்" என்பது நற்றிணை (365). (22)

114\. அழிபோண்ணு வன்பாரந் தடியிட்ட பூவி
னிழிபெண்ணு தீயு மியவு—னிழிவர்
மடவர் சிறுமொழிக்கு மன்னீதல் பாரி
கடவன் வறுமை கணித்து.

(இ-ள்.)—கடவுள் தன் அடியிட்ட பூவின் இழிந்த தன்மையை எண்ணாது இவ்வாறுடைய அழிதலொண்ணாத அன்பினை அருந்தி அருளும் அதுபோல; மடமையினர், மெல்லியராய் இழிபவர் இவ ருடைய சிறு சொற்கும் அச்சொல்லின் அளவிற்கு மிகுதியாக அவர் வறுமையை யளந்து நல்குதல் கடவன் எ-று. சிறுசொல்—பொருண் முற்றாச் சொல். அழிபொண்ணு அன்பு என்றது அன்பு உயிர்க்குண மாதல்பற்றி இவ்வுடலழியினும் தான் அழிதலொண்ணாதது எ-று. அன்பு ஆர்ந்து என்றது, தெய்வம் இவ்வாறுடைய பூ முதலியவற்றை உண்ணாது அவருள்ளத் தன்பினையே அருந்துதல் குறித்தது. தெய்வத் தின் திருவடிமலர்க் கேற்பது ஒரு பூ உலகிலில்லாமையால் உலகோ ரறிவால் உயர்ந்தவும் தாழ்ந்தவுமாகக் கருதியவற்றுள் இழிபு கினை யாது என்க. இஃது எடுத்துக்காட்டுவமை. இவ்வாறு தெய்வத்தோடு உவமித்தற்கேற்பத் "தெய்வப் பாரியும்" (ஆசிரியமாலை) என வருதல் காண்க. "மடவர் மெல்லியர் செலினும்" எனப்புறத்தில் (106) வரு தல்பற்றி இழிவர் மடவர் எனலாயிற்று. இது "நல்லவுந் தீயவும்" (106) என்னும் புறப்பாட்டைத் தழுவியுரைத்தது. இஃது அறி விலார்க்கும் வறுமைநோக்கி நல்கல் கூறப்பட்டது. (23)

115\. ஆத்த வறிவி னருங்கபில னின்னவிசைத்
தேத்த வவையோ ரிறும்பூதால்—யாத்தவுளக்
காதலாந் தின்பக் கடற்குளித்தார் பாரியுளத்
தீதல்யா தென்று னிவற்கு.

(இ-ள்.)—கேட்டாரைப் பிணித்த அறிவினற் கிடைக்கரிய கபிலன் இவற்றைப் பாடலானிசைத்துப் பரவ, அவையிலுள்ளார் வியப்பினற் பிணிப்புண்ட உள்ளத்தில் இவன்கண் அன்பு நிறைந்து, ஆநந்தக் கடலின் மூழ்குவரானர். அந்நிலையில் வேள்பாரி தன்னுள்ளே இவனுக்கு ஈதற்குத் தக்கது என் என்றான் எ-று. தான் படைத்தன எவையும் இவன் கவித்திறத்திற் கொவ்வாமையால் ஈதல் என் என்றான் எ-று. ஆத்த—பிணித்த; "ஆத்தவறிவனவர்" என்பது நாலடி நானூறு.

116. முந்நூறூர் சூழ்ந்த முழுநாடு நல்கியான்
பன்னூறு கேள்விப் பனவற்குப்—பின்னூறில்
தொண்டா யொழுகினுமோர் சொற்பரிசி லில்லென்று
கொண்டா னுளத்துக் குறித்து.

(இ-ள்.)—முழுநாடும்—நாடுமுழுதும். "முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு" என்பது புறம் (110). பல்நூறு கேள்விப்பனவற்கு—நூறுபல் கேள்வி மிக்க அந்தணனுக்கு எ-று; 'வெறுத்த கேள்வி...... கபிலன்' எனவரும் (புறம். 53). யான் பின் ஊறில் தொண்டாயொழுகினும்—யானும் இவன் பின்னின்று அறத்திற்கு ஊறுபடுதலில்லாத அடிமையாகி இயன்றாலும்; ஓர் சொற்பரிசில் இல்—ஒரு சொற்குப் பரிசிலாதல் இல்லை: என்று குறித்து உளத்து உட்கொண்டான் என்க. "அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடு" ஆதலின் ஊறில் தொண்டு எனப்பட்டது. நாடு நல்கலாற் றன்னதையும், தொண்டா யொழுகலாற் றன்னையும் இவனுக்கு வழங்கல் குறித்தது. இவன் சொல் நிலைத்தலும் தன்மெய்யுந் தன்னதும் நிலையாமையும் நோக்கி ஒவ்வாதென்று பரிசில் என் என்றான் என்க. சொல்நிலைத்தலும் பிற நிலையாமையும் இன்றுங் காண்க. கபிலன் பாடியனவே உள என்பது கருத்து. (25)

117. பொருக்கென் றெழுந்து புலவர் பெருமா
னிருக்கென் றரசுகட்டி லேற்றித்—திருக்கோள்பொற்
பைங்கோல நன்முடியும் பல்கலனும் வேத்துரிமைச்
செங்கோலு மீத்தான் சிறந்து.

(இ-ள்.)—பொருக்கென்று எழுந்து—ஞெரேரெனக் கடுகத் தன் ஆசனம் விட்டெழுந்து. புலவர் பெருமான்—வினி. இருக்க என்று என்பது மரீஇயிற்று. அரசுகட்டில்—ஏவத்தனை. திருக்கோலங்கொள் பைம்பொன் நன்முடி—சீதேவியின் வடிவினைப் பதித்த பசும்பொன்னாலாகிய நல்லமுடி: இது பதும வடிவிற்று. முடியின் ஐவகை வடிவிற்

பதுமம் ஒன்றுதல் காண்க. (முருகாற்றுப்படை. நச். உரை) நன்முடி— உலகிற்கு நன்மை செய்தற்குத் தரித்தமுடி. இது மூவேந்தரணியும் பெருமுடியின் வேறாகிய குறுமுடி யென்க; வேளிர்கட்குக் குறுமுடி உண்டு என்பது, "குறுமுடி குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடி யுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராம்" என நச்சினார்க் கினியர் "மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப" (தொல் அகத். 30) என் னுஞ் சூத்திர உரையுட் கூறுதலானும், காரியை மலயமான் திருமுடிக் காரி என வழங்குதலானும் உணர்க. பதுமத்திற் சிதேவி யிருப்பது போற் செய்யப்படுதலின் திருமுடி எனினும் அமையும். இனிப் "படை யுங் கொடியுங் குடையு முரசு, நடைநவில் புரவியுங் களிறுந் தேருந், தாரு முடியு நேர்வன பிறவுந், தெரிவுகொள் செங்கோ லரசர்க்குரிய" (தொல். மர. 71) என்புழிச் செங்கோல் அரசர்க்குரிய இவை யென்று கூறுவர். இப்பாரி செங்கோலுடைய அரசன் ஆதல் "கோஒல் செம்மை யிற் சான்றோர் பல்கி" (புறம். 117) எனக் கபிலர் பாடுதலானும் "பறம் பிற் கோமான் பாரி" எனச் சிறுபாண் வழங்குதலானும் அறியலாம். மூவேந்தர் பகைமைக்கு இவையுங் காரணமெனவுங் கொள்ளல் பொருந் தும். இங்ஙனம் இத் தலைவள்ளலைக் கூறுதல் பொருந்து மென்பது "வேந்துவினை யியற்கை வேந்தனி னொரீஇ, யேனோர் மருங்கினு மெய் திட னுடைத்தே" (தொல் அகத். 32) என்னுஞ் சூத்திரத்தானும் அதற்கு நச்சினார்க்கினியர் கூறிய வுரையானும் உணர்க. சிற்றரசர்க் குங் கோல் கூறுதல் "ஏரோர்க்கு நிழன்ற கோலினை" எனச் சிறு பாணாற்றுள் நல்லியக்கோடனைப் பாடுதலான் உணர்க. "பணிகெழு வேந்தரை யிறந்து மிரவலர்க் கீயும் வள்ளியோன்" (புறம். 119) ஆதலின் இவைகூறல் தக்கதே யென்க. "கூர்வேற் பாரி" (116) இதன்கட்படையும், "தேர்வண்பாரி" (புறம். 118)இதன்கட் கொடை யும் தேரும் "கோல் செம்மையின்" (புறம். 117) இதன்கட் செங்கோ லும் "பய்மணி யானைப்பறம்பிற் கோமான் நெடுமாப்பாரி"(புறம். 201) இதன்கண் யானையும் அரசும் பெருமையும் "பரந்தோங்கு சிறப்பிற் பாரி" (புறம் 200) இதன்கண் பரந்து மேம்பட்ட இசைமையும் "ஏந்து கோட்டி யானை வேந்தரோட்டிய கடும்பரிப் புரவிக் கைவண்பாரி" (அகம். 78) இதன்கட் புரவியும் "புலங்கந்தாக விரவலர் செலினே, வரைபுரை களிற்றொடு நன்கல னீயு, முரைசால் வண்புகழ்ப்பாரி" (அகம். 303) இதன்கட் களிறுங் கலனும் இவனுக்குக் கூறுதல் உணர்க. "செல்வக் கடுங்கோவாழியாதன்" என்னு முடியுடைப் பேர ரசன் முன்னே கபிலன் பாரியைப் "புன்காலுன்னத்துப் பகைவ னெங்கோ" (பதிற். 7–1) எனப் பாடுதலானறிக. "வேத்தரிமைச்

செங்கோல்—வேத்தியல் உரிமைக்குரிய செங்கோல். சிறந்து ஈத்தான்—அரசர் பிறர்க்குக் கொடுத்தற்குரியன வல்லவாகிய கோலும் முடியும் ஈதலாற் றனியே தான் கொடையிற் சிறப்புற்று ஈந்தனன் எ-று. இது "நாடுங்குன்று மொருங்கீயும்மே" (109) எனக் கபிலர் பாடியதைத் தழீஇயுரைத்தது: கபிலர்க்கு இவ்வாறு முன்னே நிகழ்ந்த அநுபவமே, இங்ஙனம் பாடுதற்குக் காரணமென்பது துணியத்தகும். "புகழு நர்க் கரசுமுழுது கொடுப்பினுமமரா நோக்கமொடு" (மலைபடுகடாம்) என்பதனாற் றமிழ்வள்ளியோரிடம் இப் பெருங்கொடை யறியலாகும்.

118. தெருளுருக்கொண் டாலன்ன செந்நாப் புலவற்
கருளுருக்கொண் டாலன்ன வண்ணன்—மருள
முரசாழி வெல்ல முழங்குதிரு முன்றி
லரசாழி யிட்டனன்சேன் றன்.

(இ-ள்.)—அறிவுவடிவு கொண்டாற் போன்ற செவ்விய நாவன்மையையுடைய புலமையாளனுக்கு அருள்வடிவு கொண்டாற் போன்ற தலைவன். மருள—கபிலனும் கண்டாரும்மருட்கை கொள்ள; இறுதியாக அரச மோதிரத்தையும் அவன் விரலில் இட்டுக் கோயிற் றிருமுன்றிலிற் சென்றான் எ-று. கொடைமுரசு கடலைவெல்ல முழங்கும் திருமுற்றம் என்க. திருமுன்றில் என்றது, ராஜஶ்ரீ கோயில்வாயில் நிலைதோறும் அமர்தலாற் போந்த பெயர்: "குன்றுகுயின் றன்ன வோங்கு நிலை வாயிற், றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற், றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து" என நெடுநல்வாடையுள் வருதலான் உணர்க. கொடைமுரசால் ஆழிவெல்லப்படுதல் பெருநீர்ப் பரப்பாயிருந்துந் தானே உதவலாகாமைபற்றி யென்க. அருட்செல்வம் பொருட்செல்வத்தைத் தனக்குரித்தாகக் கொள்ளாமையும், பூரியர் கண்ணும் உளதாகும் அதனைத் தெருட்செல்வர்பாலே புகப்பெய்யுஞ் சிறப்பும் ஈண்டுக் குறித்தல் காண்க. அருளுருக் கொண்டாலன்ன அண்ணல் என்றது அருண்மொழியனை இத் தந்தது குறித்தது. இவ்வாறு தந்நாட்டினையும் பெறுவானும் உலகும் மருளும்படி கொடுப்பது வள்ளியோரியல்பு என்பது, "புரவியொடு வையகமருள, ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த ......காரி" எனச் சிறுபாணாற்றில் வருதலானும் அதற்கு நச்சினார்க்கினியர் "குதிரையோடு தன்னாட்டினையும் அருளினையுடைய நன்றாகிய மொழியினையும் எனையோர் கேட்டு வியக்கும்படி இரவலர்க்குக் கொடுத்த காரி" என உரை கூறியதனாலும் உணர்க. "முந்நூறூரும் புலவர் கொண்டனர்" எனக் கூறுதலான் இவன் இங்ஙனம் நல்குதலுணரலாம். இதனாற் பாரி கொடைக் கேற்றபடியே இது கூறியதாதலுணர்க.

119\. ஆராய்ந்த கேள்வி யறவோற் கரசுரித்துப்
போராய்ந்து நேரார்ப் புறங்கண்டு—சீராய்ந்து
தொண்டா யியற்றுந் தொழும்பெற் குரித்தென்று
விண்டா னுழையர்க்கவ் வேள்.

(இ-ள்.)—கோயிற்றிருமுற்றம் புக்கவேள்; நன்கு தேர்ந்த கேள்வியினையுடைய அறநெறியறிந்தானுக்கு அரசு உரியது, அதன்கண் நேரார் இடையூறு புரியின் அவர்க்குப் போரைத் தெரிந்துசெய்து, அவரைப் புறங்கண்டு இவ்வாட்சியின் விளையுஞ் சிறப்பை நன்கு தெரிதலால் இவற்கு அடிமையாய்ச் செய்யும் பணி எனக்குரியது, என்று அமைச்சர்க்கு அவ்வேள் வகுத்துரைத்தான் எ-று. கபிலன் மனவலிக்கும் என் மெய்வலிக்கும் இஃது இஃது உரியதென்று வகுத்துரைத்தவாறு: இதனுன் நீவிரும் இதற்கியைய ஒழுகுக என அமைச்சர்க்கு உரைத்தவாறும். அறமும் அறிவுங்கூடிய நிலையே அரசாளுதற்குரித்தென்றும் மெய்வலி யொன்றால் ஆளுதல் தகாதென்றும் அம் மெய்வலி அறமும் அறிவுமுள்ள நிலைக்குத் துணையாய் நின்று பயன் படுமென்றும் அரசியலின் இம்மூன்றும் ஒன்றையொன்று இன்றியமையாதவிதம் இங்ஙனமென்றும் தேற்றியவாறும். ஆராய்ந்த கேள்வி—அவ்வறிவு ஒருபடியாகத் துணிதற்கு ஆராய்ச்சியும் கேள்வியும் வேண்டுமென்று குறித்தவாறு. ஆள்பவன் அறத்தின் வேறாகாமைக்கு அறவோன் என்றதாம்; "அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா, மான முடைய தரசு" (குறள்) என்ப; அறனிழுக்காமைக்கு அறமும், அல்லவை நீக்கற்கு அறிவும் மறனிழுக்காமைக்கு வலியும் வேண்டுமென்றும் இம்மூன்றானும் அரசு நிலையிற் றாழாமையே மானம் என்றும் ஓர்ந்துணர்க. (28)

120\. பாரி யருட்கடல்கோட் பட்டுக் கரைநீந்தா
ஞரப் பருகி யறிவிழந்து—சீரியோன்
வான்படிமை மான வயங்கினன் பின்னாய்ந்தான்
றேன்படியுஞ் சொல்வேள் செயல்.

(இ-ள்.)—சீரியோனாகிய கபிலன் பாரியின் அருளாகிய கடலாற் கொள்ளப்பட்டு அதன் கரையை நீந்திக்காண வியலாது, அதனை நிறையக் குடித்து மதியிழந்து சிறந்த தெய்வப் பிரதிமை யொப்ப முன்னே விளங்கினவன், தேன்போல் இனிய வணங்குஞ் சொல்லையுடைய வேள்செயலைப் பின்னே ஆய்ந்து கொண்டான் எ-று. தெய்வப்படிமை திருவடி பிடிப்பான் இட்ட வழக்கா யிருப்பதல்லது தனக்கென ஒன்று வேண்டுதல் வேண்டாமையின்றாயினாற் போலக் கபிலன் இருந்தான்

எ-று. தேன் சொல், படியுஞ்சொல் என்க; படிதல்-வணங்குதல். "படி யோர்த்தேய்த்த" என்பது மலேபடுகடாம்; பாரியிடையிடையே கூறிய ஈரநன்மொழிகளைக் குறித்தது. இவையும் கபிலன் தன்வயமிழத் தற்குக் காரணமாம். (29)

121. தூசிற் பொதிந்த சுடுநெருப்பைப் பின்னுணர்ந்து
வீசற் கெழுந்தான் விரைந்தாற்போன்—றாசற்றான்
வேண்டாமை முற்றுந்தன் மெய்ப்பாடு தோற்றமரு
ளேண்டாமை யீத்த துறந்து.

(இ-ள்.)—முன்னே அறியாது, உடுத்திய துகிலில் ஒளித்து வைத்த சுடுநெருப்பினைப் பின்னே தெளிந்து என்க. பின்னுணர்ந்து என்றதனால் முன்னே அறியாமை பெறப்பட்டது. சுடுநெருப்பு என்றது சுடாத நிலையில் உணரப்படாமை குறித்தது. வீசற்கு—உதறுதற்கு. ஆசற்றான்—தன்புலனில் அழுக்கற்றவனான்; தன் மெய்ப்பாடு தன் வேண்டாமை முழுதுந் தோற்றஞ் செய்துகாட்ட; மருள் தூண்டாமை— அஞ்ஞானத்தாற் றூண்டப்படாமல். ஈத்த துறந்து—ஈந்தவற்றை அங்கே தள்ளி. ஈத்த துறந்து ஆசற்றான் என்க. வேண்டாமை முற்றும்- வெறுப்பு முழுதும்: இவ்வெறுப்பினை "முனிதல்" என்னும் மெய்ப் பாடாகக் கொண்டார் தொல்காப்பியனார் (மெய்-12); நச்சினார்க்கினியர் ஈண்டு "முனிதலென்பது வெறுத்தல். அஃது அருளுஞ் சினமுமின்றி இடைநிகர்த்ததாதல்" எனக் கூறியது கொண்டுணர்க. மெய்ப்பாடு என்பது உள்ள நிகழ்ச்சி இஃதென்று புறத்தார்க்குப் புலனாமாறு மெய் யின்கண் உண்டாகும் இங்கிதம். தீத் தொட்டவன் தீயை வெறுத்தல் அவன் சொல்லாமலே அவன் மெய்யிற் குறிப்பானுணரப்படும். இதனை விறல், சத்துவம் என்ப. இப்பொருள்களையெல்லாம் கபிலன் தன்னைச் சுடுநெருப்பாக நினைந்து வெறுத்தல் குறித்தது. ஈத்ததுறத்தல் "ஏலா தான் பார்ப்பான்" (நான்மணி) என்றதற்கியைபக்கூறிற்று. வான்மீகரும் "அயோத்தியில் அந்தணர் மிகவும் ஐம்பொறிகளை வென்றவரும், கொடை ஓதலொழுக்க முடையவரும், பிறர்பா லொன்றுகொள்வதில் மனம் எழாதொழிங்கியவரும் ஆயினர்" (பாலகாண்டம்) எனக்கூறினர்.

122. அருளின் மிகையா லரசு பிழைத்து
மருள வெமக்கீத்தன் மாறேன்—றிருளில்
லகத்தோர்ந் தியாவு மரியணைமீ திட்டு
மிகத்தேர்ந்தான் மீண்டான் விரைந்து.

(இ-ள்.)—மிகையருளால்—மிகுதியாகிய அருளால். பிழைத்து- செய்வது தப்பி. மருள-யாரும் மனம்மருளும்படி. எமக்கு அரசு ஈத்தல்

மாறென்று—இரவலராகிய எமக்கு உலகோம்பும் அரசுச்செல்வத்தை யீதல் உலோக விரோதம் என்று. இருளில் அகத்து ஒர்ந்து—அஞ்ஞான மில்லாத மனத்திற்றெளிந்து: யாவும்—அவனீத்த பலவற்றையும்: அவை யிருத்தற்குரிய சிங்காதனத்துவைத்து விரைந்து மீண்டான். மிகத் தேர்ந்தான்—தேர்ச்சி மிக்கவன்; வையத்தினும் வானங்கிட்டிய தாகும் தெளிவு மிக்கவன் வையத்தைக் கொள்ளாமை குறித்து நின்றது. "ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின், வான நணிய துடைத்து" (குறள். 353) என்பதனானுணர்க. மற்றுக் "கபிலன்பெற்ற வூரினும் பலவே" (பதிற்று. 35) என்பராலெனின் "அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ருல், லற்குப வாங்கே செயல்" (குறள். 333) என்றபடி அற்குப செயற்கு ஆங்காங்குப் பெற்றனவாகும்: "வரவிடைப் பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தி" (பொருநாறு) என்ருர் பிறரும். இங்ஙனம் ஒருவன் நாடுமுழுவதுங் கொள்ளுதலன்றென்க. ஈகை யெல்லாம் அருளால் நிகழ்வன என்பது "நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே" (புறம். 92) என்பது முதலாகச் சான்ருேர் செய்யுளில் வருவன நோக்கிக் கண்டுகொள்க. இருளில் அகம் ஒருவற்கு மிகத்தேர்தற்குக் காரணமென்று கொள்க. (31)

123. பல்லா ருளமருளப் பாரி மகிழ்முன்றில்
வெல்லா வறிஞன் விரைவரலே—நல்வேள்கண்
டன்பிழைத்தே னன்றி யடியேன் றிருவடிகட்
கேன்பிழைத்தே னென்ரு னெதிர்ந்து.

(இ-ள்.)—பல்லார்—ஐம்பெருங்குழுவும் எண்பே ராயமுமாகிய பலரும்: உளமருள—மனம் மயங்கா நிற்கப் பாரிமட்டும் மகிழுந்திரு முற்றத்துப் பிறர் அறிவால் வெல்லப்படாத கபிலன் விரைந்துவருதலை வேள் குலத்து நல்லோன் கண்டு எதிர்ந்துபோய் அடியேன் திருவடிகட்கு அன்பு இழைத்தேனல்லது வேறியாது பிழை செய்தேன் என்ருன் எ-று. தன்ருேட் பாரம் தக்கவன்கண் வைக்கப்பட்டதனாலாகிய மகிழ்ச்சி பாரியதாதலிற் பாரிமகிழ் முன்றில் எனப்பட்டது. பாரியின் வீரத்தாலும் கொடைமேம்பாட்டாலும் தாம் ஒன்றுங் கூற வியலாமை யான் மருண்டு நிற்றலே பலர்க்கு முளதாயதென்க. வெல்லா அறிஞன் என்றது பரணருடன் வாதஞ்செய்து அவற்கும் முந்துறக் கபில பரணர் என உலகு வைத்தற்குரிய சிறப்புக்குறித்தது. அன்பிழைத்தேன் என்றது, சாவிற்சாதல் நோவின்நோதல் ஒண்பொருள்கொடுத்தல் முதலிய அன்பின் செயல்கள் பலவற்றுள் ஒண்பொருள் கொடுத்தல் பற்றி. அடியேன் எனவும் திருவடிகள் எனவுங் கூறியன, கபிலன் றலைவனுதலையுந் தான் அடிமையாதலையுங் குறித்தன. எதிர்ந்து—தான்

கை. அடிகள் முற்படச் சென்று; என்றது அவன் வெளிச் செல்லாது அரசிலே நிலைபெறுவித்தல் குறித்தது. (32)

124. எதிர்கோடிறற் பாரி யிணையார நீத்துங்
கதிர்கோடிரு மார்பைக் கபில—னெதிரேற்றுப்
புல்லக்கைந் நீட்டப் புகழ்தன்னு மீவான்போன்
றேல்லைக்கை வீழ்ந்தா னுவன்.

(இ-ள்.)—அரசில்லா நிலையினும் மனவலி குன்றாமையாற் றிறற் பாரி என்க. இம் மனவலி போன்றது தான் இவன் மெய்யொளி என்பது மேல். மார்பை, இணையாரம் நீத்தும் கதிர்கொள் திருமார்பு என்று கூறியதனால் இஃது அறிக. கபிலர்க் கிட்டதனால் ஆரமில்லை யாதல் தெரிக. இணையாரம்—ஒத்த இரட்டை மணியாரம்; கடவுளர் அரசர் ஒற்றைமாலை யணியார்; "இணையார மார்பன்" என்பது அப்பர் திருப் பாட்டு. "இணையார மார்பினணையா" என்றார் சம்பநாடரும். திரு மார்பு கூறியது, பூவைநிலை என்னுந் தொல்காப்பிய நெறிபற்றிய தாகும். பதிற்றுப்பத்தினும் சிலப்பதிகாரத்தினும் பாட்டுடைத் தலை வரைத் திருவெழுமிரகலத்தால் விசேடித்தல் காண்க. இத்தலைவள்ளலை அன்பாற்றழுவுதலன்றி வேறொன்றுந் தோன்றாமையாற் பாரியை எதிர்தந்து ஏற்றுக்கொண்டு புல்லுதற்கெனக் கைந்நீட்டா நிற்க எ-று. பெரியோர் அன்பின்றலைமையாற் செய்வது இஃதே யென்க. உயி ரொன்றுதல் குறித்துச்செய்வதாம்: சிராமமூர்த்தி தூதுமுற்றிச் சீதை யைக் கண்டு வந்த திருவடிக்குச் செய்ததும் இதுவேயாதல் தெளிக. உலகு புகழ்கின்ற தன்னையும் கபிலனுக்கு ஈபவன்போன்று விரைவில் அவன் கைக்கண்ணே வீழ்ந்தான் எ-று. எல்லாந்தந்த பின் எஞ்சிய தன்னையும் அவனுக்கீவான் போன்று என்பது கருத்து. புகழ்தன் னும் என்றது முழுது மீந்தாலும் புகழீயப்படாது இவனதேயாதல் கருதிற்று. கதிர்கொள் திரு என்றது, "உழுகின்ற கொழுமுகத்தி னுதிக்கின்ற கதிரொளி போல்......பெண்ணரசி தோன்றினள்" (கம்பர்) என்பதைத் தழீஇவந்தது எனினும் அமையும். (33)

125. கைவீழ்ந்து தன்னல்கல் காட்டும் விறல்வேளைப்
போய்வீழ்ந்த நேஞ்சிற் புலவர்கோன்—மெய்வீழ்ந்த
பூணூல் வடுப்படுப்பப் புல்லினு னேன்பார்தாங்
காணு ருயிர்புல்லு கை.

(இ-ள்.)—தன் நல்கல்—தன்னையீதலை. கைவீழ்ந்து காட்டும் வேள் என்க. கபிலன் நீட்டிய கைகளிற் றான்வீழ்தலாற் றன்னையே

யிர்தது காட்டிற்று. விறல்—பெருவிறல் என்பது இவற்குப் புலவரிட்ட பெயர். "பகைவ ரோடுகழற் கம்பலை கண்ட, செருவெஞ் சேஎய் பெரு விறனோடே" (புறம். 120) என வருதலான் அறிக. பொய்வீழ்ந்த நெஞ்சு—பொய் தன்கண் இல்லாது கழிந்த மனம்; "வீழ்நாள் படாமை" (குறள்) என்ப. புலவர்கோன்—பாரிதந்த நாட்டார் தலைமையினுஞ் சிறந்த புலவர் தலைமையை உடையன். மெய்வீழ்ந்த பூணூல்—மார்பிற் றூழவிட்ட தானே அணியாகிய முந்நூல். வடுப்படுப்ப—பாரி மார்பிற் சுவடு உண்டாக; அழுந்தத்தழுவுதல் குறித்தது. "ஆகம் வடுக்கொள முயக்கி" என்பது நற்றிணை. (229) "என் னகம் புரிவுண்ட நூல்வடு வாப்புல்லி" (வெண்பா-பாடாண்) என்ப. இவ்வாறு உடல் தழுவுவதே கூறுவார், அவ்விருவர் உயிரும் தழுவியதைத் தாங்காணார் என்க. "துறைவன் மெய்தோய் முயக்கம்" என்பது நற்றிணை (199). உயிர் கண்ணிற் காணாத பொருளாதலின் உடலளவே கண்டு கூறினார். எ-று, "உயிரொன்றாதல் செயிரறக்கூறி, யிருவரு மவ்வழித் தழீஇ யினர்" (விருத்தி வகுத்தது 84-85) எனப் பெருங்கதையினும் வந்தது காண்க. கபிலர் பாரியை நோக்கிக்கூறிய புறப்பாட்டில் (236) "கலந்த கேண்மைக் கொவ்வாய்" என்றது உயிர் கலந்த கேண்மை ஆதலல்லது உடல்கலந்த கேண்மையெனக் கூறற்காகாமை காண்க.

126. உடல்புல்லு வான்போ னுயிர்புல்லிக் கல்விக்
கடல்புல்லு வான்சீர்க் கபிலன்—றிடல்புல்லுங்
கல்லுங் கரையக் கழறினா னின்னுரைகள்
வெல்லுந் திறனாய்ந்து வேட்கு.

(இ-ள்.)—கண்டார்க்கு உடல் தழுவுவான் போன்று மெய்ம்மை யிற் பாரி யுயிரைத் தழுவி நின்று என்க. மேற்பாட்டினும் ஈண்டும் கபி லன் புல்லுதல் கூறியதன்றிப் பாரி கபிலனைப் புல்லினான் என்று கூறாமை "பெரியவர் புல்லுங்காற் றான்புல்லும் பேதையும்" (திரிகடு கம். 74) எனச் சான்றோர் நெறி பாதுகாத்தபடி யெனக்கொள்க. கல் விக் கடலைப் புல்லி முகக்கும் மேகத்தின் சீர்மையையுடைய கபிலன் என்றது கல்வி யென்னும் பெரிய பரந்த கடலிற் சாரமாகியவற்றைத் தழுவி எடுத்து உலகிற்குப் பொழிதலின் மேகத்தின் சீர்மையன் எ-று. திடல்புல்லுங் கல்லுங்கரைய—திடலிற்புல்லிக்கிடக்கும் கற்களும் உருக. அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்தார் என்ற வாற் கல் இன்னிசைக்கு உருகுதல் அறியலாம்; இன்பொருளொடு புணர்ந்த இன்மொழிக்கும் உருகுமென்க. உருகாதனவும் உருகுதல் கருதிற் றெனினுமமையும்; "கல்லுஞ்சொல் லாதோ கவி" என்பதும்

காண்க. வேட்குக் கழறினன் அவனை வெல்லுந்திறனுய்ந்து என்க. வெல்லல்—கேட்டவனைத் தன்வயமாக்குதல். வெல்லுந்திறன்ஆய்ந்து—தான் வீரனுகிய பாரியைச் சொல்லால்வெல்லுந்திறத்தை ஆராய்ந்து. ''திறனறிந்து சொல்லுக'' என்பது குறள். உயிர்புல்லல் கூறியது ''உயிர்கலந் தொன்றிய தொன்றுபடு நட்பிற், செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போல'' (அகம். 205) என்னுஞ் சான்றோர் கருத்தைத் தழீஇயிற்று. (35)

127. அருட்டேன் சுவைத்தா றறிவழிவீ தோர்வேன்
றெருட்டேன் குருசி றிசைசூழ்ந்—திருட்டாய்ப்
பகலில்ல தாகாதோ பாரேழை யாளிற்
றகவல்ல செய்தாய் தவிர்ந்து.

(இ-ள்.)—அருளாகிய கள்ளைச் சுவைகண்டவர் அறிவு அழிதல் இவ்விதமென்று தெரிவேன் ஆதலின், குருசில் நின்னைத் தெருட்டப் புகேன் எ-று. ''களித்தானைக்காரணங்காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று'' (குறள்) என்ப. ஏழையாகிய யான் ஆளப்புகின் இவ்வுலகு திசைகளெல்லாம் இருளாய்ச் சூழ்ந்து பகலென்பதும் இல்லதாய் விடாதோ; தகவு தவிர்ந்து அல்ல செய்தாய் எ-று. நின்கொடை பயன் படாததன்மேலும் உலகுக்குக் கேடு விளைக்கும் என்பது கருத்து. நல்லருந் தீயரும், அறிவரும் மடவரும், வறியரும் செல்வரும் முதலாகப் பல்வகையராகிய உலகை ஆளுதலிற் றன்னறிவு பயன்படா தென்னுங் கருத்தால், தன்னை ஏழையென்று கூறினனென்க. பாரியாளாத நாடு ஞாயிறில்லாத திசைபோல் இருள் மூடுமென்பது குறிப்பு. உலகியல் அறியாதார்க்கு ஞாலம் பகலுமிருள்படுதல் ''நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம், பகலும்பாற் பட்டன் றிருள்''(குறள்) என்பதற்குப் பரிமேலழகர் உரைத்தது நோக்கியறிக; ''இருளாய்க் கழியுமுலகமும்.........பொருளல்ல காதற் படுக்கும் விழைவும், இவை......... பேதைமை வாழு முயிர்க்கு'' (திரிகடுகம்—93) என்பதனுற் றனக்குப் பொருளல்லாதவற்றின் ஆசையி லாழ்த்தும் வேட்கையை உண்டு பண்ணுதல்பற்றித் தனக்கு இவ்வுலகம் இருளாய்க் கழியுமென்று கருதிக் கூறினன் எனினுமமையும். (36)

128. ஆற்ற லுடையார்க் கரசோல்லு மஃதின்றி
யேற்ற லுடையார்க் கியையாதாற்—போற்றியநீ
தானே யரசன் றரணி பொருதரோ
யானே யரச னெனின்.

(இ-ள்.)—"வல்லவன் புவிக்கரசன்" என்றபடி அரசு ஆற்ற லுடையார்க்குப் பொருந்துமஃதன்றி ஆற்றலற்று இரத்தலையுடையார்க்கு அது பொருந்தாது. இப்புவியைப் பாதுகாத்த நீ தானே பிறந்த உரிமையால் ஒருவனால் ஆக்கப்படாமலே அரசனாவாய். உன்னால் ஆக்கப்பட்ட யானே அரசனென்று சொல்லின் அதனைப் பூமிதேவி தாங்க மாட்டாள் எ-று. யான் தரணி தாங்கமாட்டாமை மட்டுமன்று. என்னைத் தரணி தாங்காது தள்ளும் எ-று. எனின் என்றது அரசனென்னப் படாமையேயுள்ளது குறித்தது:உன்னால் யான் அரசனென்று சொல்லப் பட்டாலும் அதற்கேற்ற ஆற்றலில்லாமையால் வழுவும் என்பது காட்டியதாம். 'அந்தணாளர்க் கரசுவரைவின்றே' (தொல். மரபியல்) என்பதனால் அந்தணர்க்கு அரசுரிமை புலனெறி வழக்காயினும் அஃது அகிச்சத்திர நாடாண்ட தநுர்வேத வித்தாகிய துரோணர்க்குத் தகுமல்லது என்போன்ற இயற்புலவனாகிய அந்தணனுக்கு ஆகாது என்பது. இது பொருள் என்பது, "நிலமக ளழுத காஞ்சியு, முண்டென் றுரைப்பரா னுணர்ந்திசி னோரே" என்னும் புறப்பாட்டா னறியலாம். (37)

129. படையா னலாது பழப்பில்பே ரன்பின்
கோடையா னேனையின்று கோல்லு—மடைவோர்
பேடிகை யீத்த பிறங்கோளிவா ளிற்பிறிதோ [ந்தாய்
கோடியேன் றீத்தசேங் கோல்.

(இ-ள்.)—படையாற் கோறல் பிறர் தேர்வார்,கொடையாற் கொல்லும் அடைவு நீ தேர்ந்தாய். பேடியின் கையிலீத்த ஒளிபிறங்கு வாளினும் வேறாகியதோ, நீ கொள்ளுதியென்று கொடுத்த செங்கோல் எ-று. இக்கொடை பெறுவானையும் அழித்தல் குறித்தது. பேடி தன்னைக் கோறற்குரிய படையைத் தன் பகைஞன்கையிற் றானே நல்கி விடுமென்று கொள்க. பிறங்கு ஒளிவாள்—பிடித்தவன் அறிந்து ஆள வல்லனல்லனாயிற் பிடித்த கையையே அறுக்குமியல்பின்வாள் என்பதாம். கொல்லும் அடைவு—கொல்லுமுறைமை. தனக்கு இப்பேராசை படையென்று கூறினுமெனினும் அமையும். "மாந்தர் செறிவழுங்கத் தோன்றும் விழைவும்.........நல்வினை நீக்கும் படை" என்பது திரிகடுகம். (95)
(38)

130. ஆள வேனக்கே யரசளித்தா யல்லையால்
வாளி னுதிவாய் வழங்கவோளிக்—கோளில்
பொறியானை யுய்த்தன்ன போல்லாங் கிழைத்தாய்
மழியானை வேந்தாமே மற்று.

(இ-ள்.)—அரசு ஆள எனக்கீந்தாயல்லை. வாளினுடைய முனை வாயில் நடத்தற்கு ஒளியாகிய புலனைக் கொள்ளுதலில்லாத பொறி குருடுபட்டவனை ஏவினால் ஒத்த கேட்டை எனக்குச் செய்தனை; மறியாடு யானையி லரசாகுமோ எ-று. அஜகஜாந்தரம் என்ற வழக்குக் காண்க. மறிக்கும் யானைவேந்திற்கு முள்ள வேற்றுமை எனக்கும் நினக்கும் உண்டு எ-று. இரண்டும் விலங்காதல் சுருதல்போல யானும் நீயும் மக்களாதல் கருதினை போலும். எ-று. பெறுவானை அழியாவிடினும் அவனுக்கியலாதாதலின் எப்போதும் இடரையே யுய்ப்பதாம் எ-று. "வாணடந் தன்ன வழக்கருங் கவலை" (அகம். 72) என்றார் சான்றோரும். ஒளிக்கொளில் பொறி—பார்வையில்லாத கட்பொறி; "கண்கள் கோளிழித்தாற் போல்" (திருக்கோவை) என்ப. (39)

131. பெற்றோன் மகிழ்கண்டு பேணு மகிழ்ச்சிகோடை
கற்றோன் மதிமுகத்திற் காண்பதிது—மற்று
யருளப்பட் டேன்றன் னனுரேல்லா முள்ளங்
தேருளப்பட் டாயல்லை தீர்ந்து.

(இ-ள்.)—கொடை பெற்றவன் மகிழ்தலைக் கண்டு தான் மகிழ் பேணுதல் கொடைத்தொழில் கற்றவன் மதிமுகத்திற் காண்பது; இது வேறாகி நின்னால் அருள் செய்யப்பட்ட என் துன்பமெல்லாம் நீ என்னைத்தீர்ந்து புறம் போயதனால் நெஞ்சமறியப் பட்டாயல்லை எ-று. தீர்ந்து என்பது பாரி ஈத்தவுடன் நீங்கித் திருமுற்றஞ் சேறல் குறித்தது. பாரி நன்றீத்ததாக எண்ணி முகத்தில் மகிழ்தோற்ற நிற்கின்ற நிலை கண்டு நீ மகிழ்தற்கு ஏதுவில்லை என்றதாம். மதிமுகம்—எல்லாரும் மதிக்குந் திருமுகமுமாம். (40)

132. அரியிருந்த வீறணைமீ தாளி யொழிய
நரியிருந்த பான்மைபோ னுயேன்—மரியிருந்தா
னின்புகழின் முன்ன நிலம்போர்க்கு நாணில்லா
வேன்பழியுங் கோல்லு மெனை.

(இ-ள்.)—அரியிருந்த வீறணை—சிங்கம் வீற்றிருந்த வீராசனம்; இதனை விசயாசனம் என்ப. அரசர் கோயிலில் ஆசனவகை மானசார நூலிற் காண்க. ஆளி—சிங்கக்குட்டி; "முலைமுகந் திறந்தவன்றே மூரித்தா ள்ளாளியானைத், தலைநிலம்புரள வெண்கோடுண்டதே போன்று" (சிந்தாமணி. 2554) என வருதலானறிக. நீயிருந்த அணையின் நின்மகவிருத்தல் தக்கது என்பது குறிப்பு. ஆளியென்பது

அத்தியாளி யெனினுமமையும். இதற்குச் சிங்கத்திற்கு ஒத்ததொன்று இருத்தல் தகும் என்பது கருத்தாகக் கொள்க. மதக்களிற்றைப்படும் வலியதொன்றுள்ள அணையில் வலியில்லாத யாடுகளைக் கொல்வ தொன்று என்பது கருதி நரி எனப்பட்டது: நரிபோன்ற வஞ்சமும் கொலையுமில்லனேனும் நாயின்றன்மையினும் மிக்கவனல்லேன் என் பது கருதி நாயேன் என்றான். எறிந்தவேல் மெய்யதா வால்குழைக்கு நாய்போல் நன்றிநினைவேனுதல் அன்றி என்னிலை அதற்குயர்ந்ததாகா தென்பது குறிப்பு. மருவியிருந்தா லென்பது மரீஇயிற்று. மருவி—உள்ளத்தாற் பொருந்தி; இருந்தால்—உடம்பாலிருப்பின்: இரண்டு மில்லை எ-று. நினக்குரிய புகழினுக்கு முற்பாடாக நிலமுற்றும் போர்த் துக்கொள்ளும் என்பழியும் என்னைக் கொல்லும் எ-று. நின்புகழ் நில முழுது மூடிக்கொள்வது எங்ஙனமோ அங்ஙனமே என்பழியு மூடிக் கொள்ளும்: நின்புகழ் நின் வாழ்க்கையை வளர்க்கும், என்பழி என் வாழ் நாட்கு இறுதி விளைக்கும் என்க. பேடிகைவாள் ஆகமேலே சொல்வது கூறினான். இதன்கண்ணே தன்பழியே கொல்லும் என்று விளக்கினான். "பழிமொழி தெய்வம், பறைபறைந்தாங்கோடிப்பரக்கு" (நீதிநெறி) என்பதனாற் புகழிற்கு முற்பட்டுப் பழி போர்த்தல் கூறிற்று. நாணில்லா என்பழி—நாணில்லாமையால் என்கட்புகுந்த பழி எ-று. "நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம், பேணலர் மேலா யவர்" (குறள் 1016) என்பதனால் நாண்வேலியை அழித்து ஞாலங் கொளலாற் பழிபுகுதல் ஒருதலையாதல் காண்க. இப்பழி புகுதற் குக் காரணமான நாணின்மை இவனைக் கோறல் "நலஞ்சுடுநாணின்மை நின்றக்கடை" (குறள் 1019) என்பதனாலறிக. ஈண்டுப் பரிமேலழகர் நலம் சாதியொருமைபாகலிற் பிறப்புக் கல்வி குணம் செயல் இனம் என்றிவற்றான் வந்தனவெல்லாம் கெடுக்கும் என்று கருதியது காண்க. இங்ஙனம் பழிநாணுவானையே "குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக், கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு" (குறள் 194) என்பத னாற் பாரி நட்புக் கொள்ளுதலும் உய்த்துணர்ந்து கொள்க. (41)

133. சின்னீர் பருகற்குச் செல்லுயிரை யுள்ளீர்த்து
நன்னீ ரருவி நனியாழ்த்து—மந்நீர்
பொருள்கொள்ளப் போந்த புதியேனை நின்பே
ரருள்வெள்ளஞ் செய்யு மது.

(இ-ள்.)—சில்நீர்—நீரிற் சிறிது. பருகித்தாகந் தணிதற்குச் சென்ற பிராணியைத் தன்னுள்ளே இழுத்துக்கொண்டு நல்ல நீரையுடைய அருவிகள் மிகவும் ஆழ்த்தி விடுவனவாகும். சில பொருளளவிற் கொள்ள வந்த எதிலனை நினக்கியல்பாகிய பெரிய அருள்வெள்ளஞ்

செய்யும் அச்செயலும் அத்தன்மையாம் எ-று. சின்னீர் என்றதனல் யாற்றை முழுதுங்கொள்ள வினையாதது குறித்தது. பேரருள் என்றதனல் அருவியும் பேராறு ஆதல் கொள்ளப்படும். புதியேன் என்றது வினக்கு ஒரியைபு முடையனல்லன் எ-று. யாற்றுக்கும் பருகற்குச் சென்ற உயிர்க்கும் ஒரியைபுமின்மை குறித்துக் கொள்க. தாகந்தீர்க்கு மளவில் நீர் கொள்ளத் தக்கதன்றி அதற்கு விஞ்சிய நீர் கொள்ள வியலாது அதன் கண்ணே மாயும் உயிர் போல்வேன் எ-று. பல்லுயிரும் பயன்றுய்க்கும் வின் பேரருள் ஆகிய குழவி பொருளென்னும் செல்வச் செவிலியால் வளர்க்கப்பட்டு உளதாக வேண்டுதலின் † அவ்வருளை வளர்க்கும் பொருளை நீங்கி அவ்வருளை வற்றவிடுவது பொருந்தாது என்பதும் கருதியதாகும். அது என்றது சிறிதுமுன்னே பாரி தனக்குச் செய்தது சுட்டியது. (42)

134. பழுமரங்க டேர்ந்து பயன்றுய்ப்ப தன்றிக்
கொழுமரங்க ளோம்புங் குறிக்கோள்—செழும்பறவைக்
குண்டாயி னுண்டேன் றுணர்க பரிசிலர்க்கு
மண்டாயி னோம்பும் வலி.

(இ-ள்.)—பழுமரங்கள்—வினைத்தொகை. பழுத்த மரங்களிவை என்று தெளிந்துபோய், அவற்றிற் பயன்களை உண்டலல்லது அக்கொழுமை மரங்களைத் தீது புகாது காக்கும் அறிவு, அம் மரங்களாற் செழுமையையுடைய புள்ளினங்கட்கு உண்டாயின் வள்ளியோர் தரும் பரிசில் பெற்று வாழுமிரவலர்க்கு மண்ணுலகத்தைத் தாயைப் போல வைத்துத் தீதுபுகாது காக்கும் வலி உள்ளதாம் என்று தெரிக எ-று. "பழந்தேர் வாழ்க்கைப் பறவை" என்னும் மதுரைக்காஞ்சியால் தேர்தலும் துய்த்துவாழ்தலும் பறவை செயலாதலறியலாம். மரங்காத்தல் மக்கள் செயலாகும். அவற்றுள்ளும் கொழுமையையுடைய காவன் மரங்களைக் காத்தலும் அரசர்க்கே சிறந்ததாதலுணர்க. மரங்கட்கு நீரிடுதல் எருவிடுதல் வேலிசெய்தல் முதலியன எல்லாம் மக்களே புரிதலும் பறவைகள் அவையொன்றும் செய்யவியலாது பயன்றுய்த்தலுங்காண்க. "போற்றலாற் றாயரொத்தும்" (சிந். விம. 7) என்பதனுற் றாயின் ஓம்பும் வலி யெனப்பட்டது. போற்றும் வன்மை தாய்க்கே சிறத்தலறிக. மரம் போற்றப்படுதற்கண் உள்ளமிருப்பினும் பறவைக்கு வலியில்லையாதல்போல மண்ணைத் தாயின் ஓம்புதற்கண் உள்ளமிருப்பினும் அதற்கேற்ற வலி பரிசிலர்க்குண்டாகாதென்று கருதிற்று.

† "அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா னுண்டு" என்பது திருக்குறள். (757)

நறிக்கோள்—உள்ளத்தில் ஒன்றைக்குறித்துக் கொள்ளுதற்குரிய துணிவு: இனிக் குறியென்பது "கொற்றங்கொள் குறிக் கொற்றவற்கு" (சிந். விமலை. 331) என்புழிப்போலக் கருத்தெனக் கொண்டு கருத்திற் கொள்வதாகிய தெளிவுணர்ச்சி எனினு மமையும். "பரிசின்மாக்கள்" எனப்பல்லிடத்தும் ஐயறிவுடையனவற்றோடொப்பக் கூறுதலும் ஈண்டைக்கு நினைக்க. தன் தாயைப் ஒருமகன் காப்பதுபோல் மண்ணைக் காக்கும் வலி எனினும் ஈண்டைச்கு இயைதல் காண்க. பறவைகளைக் காத்தலில் மரந் தாய்போறல் தெள்ளிது; அத்தாயாகிய மரத்தைக்காக்கும் வலி பறவைக்கில்லை எ-று. (43)

135. அருத்துன் னரசை யவாவிற் கறவை
செருத்த லடியறுத்த தீதே—யுருக்கோள்வ
ஞவேன் பறம்புரிமை யாவா நின்னைநீப்பிற்
சாவே னுலகு தணந்து.

(இ-ள்.)—அருத்து உன் அரசை—பிறர்க்கூட்டும் நின் அரசச் செல்வத்தை. அவாவின்—விரும்பின். கறவை செருத்தல்—கறக்கின்ற பசுவின் பால் மடியை: அடியோடறுத்த தீதே வடிவாகக் கொள்பவன் யானுவேன். அரசை விரும்பிய அளவே தீயன் ஆவேன் என்னின் அதைக்கொண்ட நிலையில் என்னுவேனோ எ-று. செய்யும் பாவத்தின் கொடுமை தோன்ற ஏற்றசொற் பெய்துள்ளது காண்க. எவ்வுயிர்க்கும் ஊறிழைத்தல் ஆகாது. அதனினும் கோசாதிக்கு இழைத்தலாகாது. அதனினும் கறவைக்கு இழைத்தலாகாது. கறவையின் உறுப்பெவற்றினும் பான்மடி உயர்தலுணர்க. "ஆன்முலையறுத்த யறனில்லோர்க்கும்' (புறம். 34) என்பதுபோலன்றிப் பான்மடியை அடியோடறுத்தல் அறக்கொடிது என்று குறித்தவாறு. பாரி கறவைபோறலும் அவன் அரசு பான்மடிபோறலுங் காண்க. தீதே உருக்கொள்வன்—தன் வடிவு தீதே கொண்டு செய்யப்படுவோன். இத்தகைய ஆசுரவியல்பினர் படைப்பிலே உண்டு என்பது ஸ்ரீ கீதையிற் கண்டது. பறம்புரிமை—பறம்பைத் தலைமையாகக் கொண்ட நின் உரிமைச் செல்வம், ஐயோ நின்னை விடநேரின் இப்பறம்புரிமை தணத்தலேயன்றி இவ்வுலகினையே தணந்து என்னுடலையுந் துறந்து இறப்பேன் எ-று. ஐயோ என்றான், நின்னை நீப்பதெனச் சொல்லவும் இயலாது. பாரி, யிவன்கூறியன பலவற்றிற்கும் ஒன்றும் கூறாமையால் இறுதியாக இங்ஙனம் சூளுறவு செய்தான் கபிலன் என்க. இனிய உணவாற் பிறரை அருத்தும் அரசும் பிறரைப் பாலால் அருத்தும் செருத்தலும் ஒத்தல் காண்க. தன்பாலைத் தானே யருந்தும் பசுக்களும் உண்டெனின் தம் அரசச் செல்வத்தைத் தாமே துய்த்துப் பெயர்மாத்திரையான் வேந்த ரெனப்

படுவோரும் உண்டெனக். பாரிவேந்தன் அக்கொடியனல்லாமை காட்டியவாறு. (44)

136\. வாடாத வத்தாணி மாடத் திரியணைமேற்
கோடாத கோலிற் குடைநிழற்ற—நாடாண்
முடிகவித்தே யோன்னார் முடியோரீஇப் போந்தார்க்
கடிகவித்தே யாள்க வரசு.

(இ-ள்.)—பொன்மாலைகளால் அணியப் பெறுதலான் வாடுதலில்லாத அரசிருக்கைக் குரிய கோயின்மாடத்திற் சிங்காசனத்தின்மீது வளையாத செங்கோலைப் போன்று, குடையும் நிழலைச் செய்யும்படி நாட்டை ஆளுதற்கு அடையாளமாகிய முடியைச் சூடி, முன்னே பகைத்தவராய் அப்பகைமையாற்றோற்று முடியை யிழந்து அநுகூலியராய் வந்த அரசர்க்கு, அம்முடியினுஞ் சிறந்த நின் அடியினைச் சூட்டி, அரசினை ஆள்வாயாக எ-று.

அத்தாணி மாடம் என்றது வாயின் மாடத்தின் வேறு என்று காட்டியது. கோல் நிழல் செய்தல் "ஏரோர்க்கு நிழன்ற கோலினை" எனச் சிறுபாணாற்றின் வருதலானறிக. கோலும் குடையும் முறை செய்தலும் காப்பாற்றுதலும் குறிப்பன. "முறைசெய்து காப்பாற்று மன்னவன்" (குறள்,) என்ப. குடையென்பது அரசற்கு அலங்காரமாகவும் உலகுக்கு அமுதளிப்பதாகவும் இருக்குமென்ப. "அலங்கார மெனவுலகிற் கமுதளிக்குந் தனிக்குடையாய்" (ஆரணியகாண்டம்) எனக் கம்பநாடர் கூறுதலா லுணர்க. இதன்கண் உலகிற்கு அமுதளிக்கும் என்பதனால் நினக்கு அலங்காரமெனக்கொள்ளக் கிடத்தல் காண்க. பகைஞர் தலையில் அடி கவிக்கும் ஆற்றலுடையானே நாடாள் முடிகவிக்கும் உரிமையன் என்று குறித்தவாறு. இதற்கும் பாரி வாய்திறவானுகப் பின்னும் கூறுவன் கபிலன். (45)

137\. நின்னுயிரா நோக்குநின் னீணிலநின் பாலதா
வென்னுயிர்தா னென்பால தேயாக—வின்னளியை
வான்போந் திரக்கும் வளர்கோடைக்கை வேள்பாரி
யான்போந் திரந்தே னென.

(இ-ள்.)—நின்னை உயிராகக் கருதும் நின்னுடைய நீண்ட நாடு நின்னிடத்ததாகவும், என் உயிர் என்னிடத்ததே யாகவும், யான் நின் முன்னர் வந்து இரந்தேனென்று சொன்ன அளவில் எ-று. "மன்ன னுயிர்த்தே மலர்தலையுலகம்" (புறம். 186) என்பதனுற் பாரியையே

உயிராக அவன் நாடு கருதுதல் கூறிற்று. நின்னொடு நின்பாலதாகா தொழியிற் சாவேன் என்று தான் முன்னுரைத்தா னாதலால் அங்ஙனம் நிகழாது என்னுயிர் என்னுடம்பின் கண்ணதேயாக இரந்தேன் எ-று. நின்னது நின்பாலதாகவும் என்னது என்பாலதாகவும் இரந்தேன் என்றானென்க. இன் அளி—இனிய தலையளி; அருளைப் பெரிய வானமும் வந்து இரக்கும் வேள். "கொடையளி செங்கோல் குடியோம்பனான்கும்" (குறள்.) என வேந்தர்க்குக் கூறுதல் காண்க. கையிற் கொடை வளர்வேள். செல்வக்கடுங்கோவாழியாத னென்னும் பெருமுடி வேந்தன் முன்னும் "இரக்கென வாரே னெஞ்சிக் கூறேன்" (பதிற். 7-6) என்று தன் வீறுதோன்றச் சொல்லற்குரிய கபிலன் இவ்வரிய சமயம்பற்றி "யான் போந்திரந்தேன்" என்று கூறிப் புலப்படுத்தினான் என்க. உலகளிக்கும் வானும் போந்திரக்கும் அருளுடைமை யாதலின் யான் போந்திரந்தேன் எ-று. யானுயிருடன் வாழ்தற்கு நீ அரசுடன்வாழ்த லின்றியமையாதென்று காட்டினான். வான் இடித்து முழங்குவதாதலின் இனிய தலையளியைப் பாரிபாலிரந்து கொள்வதாகக் காட்டியபடி. (46)

138. கேள்பாரில் யாருங் கிடையாத வள்ளன்மை
வேள்பாரி தன்னுள்ளே மிக்காய்ந்து—சூள்பார்க்கி
னீயே னெனமாற்ற வென்முனிவன் மாயுமெனத்
தூயோன் றுணிந்து சொலும்.

(இ-ள்.)—உலகில் யாரும் ஒப்பாதற்கில்லாத கொடைமையையுடைய வேள்பாரி தனக்குள்ளே நன்று ஆராய்ந்து, இவன் செய்யும் சபதத்தை நோக்கின் யான் இவனிரந்ததை ஈயேன் என மறுத்த அளவில் யான் மாய்வன், யான் மாய்தற்கு முன் இவன் மாய்வன் என்று துணிந்துகொண்டு, தூய நெஞ்சினனாய் இது சொல்வன். எ-று. சூள்—கபிலன் "அரசுரிமை யினைநீப்பிற் சாவேன்" என்று கூறிய சபதம். ஈய இயலாமையால் யான் மாய்வன்; கொடுத்தது வாங்கிய குற்றம் பற்றாது என்றுகாட்டத் தூயோன் என்றதாம். கபிலன் அரசுரிமை நீத்தற்கே உயிர் துறக்கும் வேள்பாரி அவன் உயிர்துறத்தற்குத் தான் உயிர்துறப்பன் என்பது கூறவேண்டாதது. (47)

139. என்னு நினக்கீத் திருப்பே னெதிர்மறுத்துப்
பின்னு மொழிதல் பெறுவலோ—நின்விழைவே
னீத்த விழைந்தே னிரும்பழியான் சூடினேன்
மூத்த முடிசூடு முன்.

(இ-ள்.)—என்னையும் நினக்கு அளித்து அவ்வீகையால் இருத்தலைப்பெற்ற யான் அங்ஙனம் ஈத்ததன்பின்னும் நின்னை எதிர்மறுத்து, மொழிதல் எனக்கு உளதாகப் பெறுவேனே. இம்முறையால் நின்னை விரும்புவேனாதலான் நினக்குக் கொடுத்தவற்றை விழைதல் செய்தவனானேன், இச்செயலால் தொன்றுதொட்டு வந்த முடியைச் சூடுதற்கு முன்னர்ப் பெரும் பழிமுடியைச் சூடிக்கொண்டேன் என்றான் என்க.

கபிலனுக்கு ஈத்தவற்றை அவன் வேண்டியவாறே கொள்ளலால் அது குற்றமென்று கருதி இரும்பழி சூடினேன் என்றான். சூடினேன் என்ற வினையால், அப்பழி தலைமைத் தாதல்குறித்தது. இதனைத் 'தத்தாபகார தோஷம்' என்ப வடநூலார் 'இரந்தோர் வேண்டிய, கொடுத்தவை தாவெனச் சொல்லினு மின்னாதே' (குறுந்தொகை. 349) என்பதனாற் கொடுத்தவை தாவெனச் சொல்லினும் இன்னாதேயாயிற் கொடுத்தது கொள்வது எத்துணை இன்னாதது என்பது உய்த்துணர்ந்து கொள்க. தாவெனச் சொல்லுதலும் பெறுதலும் கொடுத்தது விழைந்த பின்னராதலின் நெஞ்சவினையை முற்கூறினான். கொடுத்ததை நெஞ்சாற் றொடுதல் ஆகாதென்பது குறித்தது. மூத்தமுடி என்றதனால் தொன்று தொட்டு வந்ததுபற்றிப் பழையதாயிற்றென்றும் தன்னாலீட்டிய பழிமுடி புதிது என்றும் குறித்தல் காண்க. இன்னே என்றான் அவன் சிறிது தாழ்ப்பின் உயிர்துறப்பனே என்னும் அச்சாத்தல். (48)

140. வேண்டாமை யென்னும் விழுப்பே ரரசேய்ந்து
தூண்டாமை மன்னுஞ் சுடர்போல்க—மாண்டோய்நிற்
கீத்ததே வெஃகியா னேழையே னாய்க்கெடுக
வாத்ததேர் வல்ல வயர்ந்து.

(இ-ள்.)—ஆப்தனே, மாட்சிமைப் பட்டவனே, நீ வேண்டாமை எனப்படும் விழுமிய பெரிய அரசச் செல்வத்தினைப் பொருந்தித் தூண்டாமல் நிலைபெற்று விளங்குமணி விளக்கிற்கு ஒப்பாகுக. யான் தெளிவல்லாதனவற்றைச் செய்து நினக்குத் தந்ததையே திருமக் கவர்ந்து அறிவே யில்லாதவனாய்க் கெட்டொழிக என்றான். நீ சுடர்போல்க யான் கெடுக என்றது நீ உலகில் விளங்குதலே பெரிய பயனுறவேது என்றும் யான் கெடுதல் ஒரு பொருளன்று என்றும் கருதியதாம். ஆப்த என்றது இத்தகையோனையே ஆப்தனாகத் தானினைப்பது குறித்தது. மாண்டோய் என்றது ஆப்தனாதற்குரிய மாட்சிமைமுற்று நிறைதல் குறித்தது. வேண்டாமை யென்னும் விழுப்பேரரசு என்பது "வேண்டாமை யென்னும் விழுச்செல்வம்" (குறள்.) என்பதைத்

தழீஇ வந்தது. அரசு தன்செல்வமும், பேரரசு பெருமுடி வேந்தர் செல்வமும் ஆம். அவற்றினுஞ் சிறந்தது வேண்டாமை யென்பது தோன்ற விழுப் பேரரசு என்றான். * வள்ளிய மென்னுஞ் செருக்கினும் வேண்டாமை யென்னுஞ் செருக்கு வெற்றி பயத்தல் வள்ளுவர்க்குடன் பாடு "விறலீனும், வேண்டாமை யென்னுஞ் செருக்கு" என்ப (குறள். 180) தேர்தலல்லவற்றைச் செய்தல் ஏழைவினை என்பது தோன்ற ஏழையேன் என்றான். "அஃகி யகன்ற வறிவென்னாம் யார்மாட்டும், வெஃகி வெறிய செயின்" (குறள்) என்பதனால் இவ்வெஃகுதல் அறிவின்மையின் காரணமென்று கூறுதல் காண்க. யான் கெடுக என்றான் "அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப், பொல்லாத சூழக் கெடும்" (குறள்) என்ற துணிபு பற்றி; அரசு இவ்வுலகச் செல்வமெனவும் பேரரசு இந்திரச் செல்வம் எனவும் விழுப்பேரரசு வீட்டுச் செல்வமெனவும் கொள்ளினுமமையும். சுடர் தன்னையும் பிறபொருளையுங் காட்டவல்லது ஆதலின் ஏழைக்கு எதிராக வந்தது. ஈத்ததே வெஃகி என்றது வெஃகுதல் இழிவென்றும் அதனினும் ஈத்ததே வெஃகுதல் நனியிழிவென்றும் குறிக்கும். ஈத்ததே என்றான் ஈத்தது பிறிதாய் மாறியவழியும் கோடல் குற்றமாகவும் அதனையே வெஃகினேன் என்பது கருதி. (49)

141. இன்றண் பறம்பாட்சிக் கேண்பஃது கோடிமிக
வுன்ற னுயிருலகுக் கூற்றுத—னன்றுள்ளிச்
சேணுங் கவிக்குந் திறம்பாப் பழிமுடிபார்
காணும் படிப்பூண்பேன் காண்.

(இ-ள்.)—இனிய தண்பறம்பு நாடாளுதலினும் பன்மடங்கு மிக உன்னுயிர் இவ்வுலகிற்கு ஊன்று கோலாதலைப் பெரிது நினைந்து என் தலையின் அளவன்றி நெடுந்தூரம் சென்று மூடிக்கொள்ளுதற்குரியஎன்றும் மாறுபடாத பழியாலாகிய முடியினை இவ்வுலகு காணும் வண்ணம் சூடுவேன், அதனை நீயும் பார்ப்பாயாக என்றான் என்க.

இனிய தண்ணிய பறம்பு புறத்தே செய்யும் இன்பத்தினும் உன்னுயிரகத்தே செய்யும் இன்பம் தவப்பெரியது என்பது. உலகு படர்தற்கு உன்னுயிர் ஊன்று கோலாகும் எ-று. தன் தலையினல்லாது சேய்மையிலும் போர்த்தல் கருதி சேணுங்கவிக்கும் பழிமுடி யென்றான். கொடுத்துத் திறம்பியதனாலாய பழியாதலின் அஃது இனித் திறம்பாது நிற்கும் என்றான். உலகு காணும்படிப் பூண்பேன் என்றது

* "வள்ளியமென்னுஞ் செருக்கு" குறள். 598

தன்கண் நாணின்மை குறித்தது: அந்நிலையை நின்னுயிர் நிலைத்தற் பொருட்டு என்கட் காண்பாயாகுக எ-று. "நன்று பெரிதாகும்" (தொல். உரி) என்ப. என் உயிர் பறம்பினளவிற் பயன்படுமென்றும் உன் உயிர் உலகிற்குப் பயன்படும் என்றும் குறிப்பது காண்க. (50)

142. பழியா னுறுகேன் பழிப்பிலா நீயே
யொழியா துலகி னொளிரும்—வழிதா
னதுவாயி னென்றுற் கறைந்தான் கபிலன்
மதுவாயின் சொல்லான் மதித்து.

(இ-ள்.)—நீயே உலகினொழியாது பழிப்பிலா தொளிரும் வழி தான் யான் பழியுறுவது காரணமாக உண்டாயின், அப்பழியை மிக வடைவேன் என்றுரைத்த பாரிக்கு, ஆராய்ந்துகொண்டு மதுவின் றன்மை வாய்ந்த இனிய மொழிகளால் அறைந்தான் எ-று. பழியைத் தாமேற்றுக்கொண்டு பிறர் பழிதவிர்த்த பேராசரும் உலகில் உண்டு "பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்" ஒழுக்கத்தை நினைக்க. "பிறர்பழியுந் தம்பழியு நாணுவார்" (குறள்) என்புழிப் பிறர் பழியை முற்கூறிய நயத்தை உய்த்துணர்ந்து கொள்க. நாவளவி லினிக்காது உயர்ந்த மருந்தாகிய தொன்றைத் தேனில் மறைத்து அளிப்பாரைப் போலச் செவியளவில் இனிக்காது உயர்ந்த பொருளை இன்சொல்லில் வைத்தளித்தனன் என்பது குறிப்பு. (51)

143. இரந்தா ருயிர்காத் தியைதன் னுயிர்போற்
புரந்தா ருயிரனைத்தும் போற்றல்—பரந்த
பழியா யொழியிற் பழிப்பில் புகழ்தான்
மொழியா யிதுவென்று முன்.

(இ-ள்.)— இரந்தார் உயிர் காத்தல் ஈண்டுக்கபிலன் தன்னுயிர் காத்தலை கருதிற்று. இயைதன்னுயிர் போற்புரந்து ஆருயிரனைத்தும் போற்றல், பாரி அரசெய்திப் பாரளித்தலைக் குறித்தது. இவ் விரண்டுமே கபிலனால் வேண்டப்பட்டனவாம். இவை பரந்த பழியா யொழியுமேற் பழிப்பில்லாத புகழ்தான் இதுவென்று முற்படயானறிய மொழியாய் எ-று. இயை தன்னுயிர்—தன்னுடம்போடு இயைந்த உயிர். புரந்து போற்றல்—குடிகளைப் பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாமற் பேணுதல். கபிலன் உயிர்காத்தல் என்றான்; பாரி இணங்கானேல் அப்போதே உயிர்விட நினைத்தலான். பழிப்பில் புகழ் என்றது பகைவரும் பழிகாண்டற்கரிய புகழ். புகழையே பழியென மாறுபடக் கருதினை யென்பது குறிப்பு. (52)

144. தாய்கைப் பிரித்தறியாத் தாங்குங் குழவியைவெம்
பேய்கைப் பறித்தீத்த பெற்றிபோற்—றேய்கைக்கார்
தெங்குமிசை நீர்பெய் திருநா டயற்கீயின்
மங்குமிசை போங்கும் வசை.

(இ-ள்.)—தன் கையை விட்டு நீக்குதலறியாமற் றாய் தாங்கும் இளமகவை, அம்மகவையே யுண்ண வல்ல வெய்ய பேயின் கையிற் பிடுங்கிக்கொடுத்த தன்மைபோல், திருநாட்டை அத்திருக்கெடும்படி ஏதிலனுக்கு ஈந்தால் இசைமங்கும், வசை பொங்கும் என்றான் என்க. தோய்கைக்கார் தெங்குமிசை நீர்பெய் திருநாடு—வின்னாட்டிலே தோயும் ஒழுக்குடைய மேகம் தெங்க மரங்களின்மீது தன்னீரைப் பெய்யுந்திருமிக்க நாடு. இதனாற் கார்தான் பெய்த நீரைப் பருகற் கினிய தேநீராக்கித் தரவல்லன கண்டு பெய்தல் குறித்தது. கார் தக்குழிப பெய்தல் கருதுக என்று கொள்ள வைத்தவாறு. தெங்கு கூறியது நிலமயக்கமாம். அருமைபற்றித் தெங்கு வளர்த்தல் மலை வாழ்நர் இயல்பாம். பறம்பு சூழ்ந்த கீழ்நிலத்துத் தெங்குமாம்; முருகாற்றுப்படையுள் "தாழை, யிளநீர் விழுக்குலை யதிரத் தாக்கிக், கறிக் கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற, மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇ" என்பதனாற் பழமுதிர்சோலைமலையிற் றெங்கு கூறுதல் காண்க. பொருநராற்றுப்படையுள் "கோட்டெங்கின் குலவாழைக், கொழுங்காந்தண் மலர்நாகத்துத், துடிக்குடிஞைக் குடிப்பாக்கத் தியாழ்வண்டின் கொளைக்கேற்பக், கலவம்விரித்த மடமஞ்ஞை" என மலைப் பொருள்களுடன் தெங்கு வருதல் காண்க. பாக்கம் நெய்த னிலத்தூர்க்கே யன்றிப் பிறநிலத்தூர்க்கும் சிறுபான்மை வருமென்பது "குருந்தங் கண்ணிக் கோவலர், பெருந்தண்ணிலைய பாக்கமு முடைத்தே" (439) என்னும் ஐங்குறுநூற்றினானறிக. இசைமுன்னுள்ளது. வசை இப்போதுண்டாவது. ஏதிலனைப் பேயோடுவமித்தது பிறர்க்குதவாது தன் பசி தீர்ப்பதே பயனாகக் கொள்ளுதல் பற்றி. (53)

145. ஈகை நிரம்ப லிரந்தா னுளத்தினேன்
றேகை நிரம்ப வுறுதலாற்—றேகை
மழைகா ணுறவாலும் வண்குன்ற நாட
பிழைகாண் பழியென்ற பேச்சு.

(இ-ள்.)—இரந்தவன் தன் உள்ளத்தால் ஈந்த பொருளை ஏற்றுக் கொண்டு அங்ஙனம் உள்ளத்தாலுடன்பட்ட குறிப்பிற்குத் தகத் தன் உவகையை நிரம்பச் செய்தலான் ஈகை யென்பது நிரம்புதலடையு

மாதலான் ஈண்டு நீ பழியென்று கூறிய வார்த்தை பிழையென்று காண்பாயாக எ-று. இது கொடை நிரம்பியதில்லாமை காட்டியவாறு. தன் உடம்பில் முடியும் பிறவும் இட்டபோது தான் உள்ளத்தாலவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை யென்றும் அங்ஙனம் இட்டவற்றிற்குத் தான் மகிழாது வருந்துவதே உண்டென்றும் தெளிவித்துக் கொடை நிரம்பாமை காட்டினான் என்க. "ஈத்துவக்குமின்பம்" (குறள்) என்புழி ஈயப் பெற்றவன் உவத்தல் காரணமாக ஈந்தானுக்கு உண்டாகுமின்பம் கூறப்படுதலுங் காண்க. இதனாற் கொடை நிரம்பிற்றெனப் பாரி மகிழ்தற்கு ஏதுவின்மை தெளிவித்ததாம். "அருளப் பட்டேன்ற னனாரெல்லா முள்ளனந், தெருளப்பட் டாயல்லை தீர்ந்து" என மேலே கூறியதனானும் இவன் உவகை யெய்தாது வருந்துவது உணரலாம். "தோகை மழைகாணுறவாலும்" என்றது மயில்கள் மழையைக் கவர்ந்து கொள்ளாமல் அதைக் கண்டவளவே தம்முடல் குளிர்ந்து கூவி யாடுதல்போல யானும் நின்னைக்கவர்ந்து கொள்ளாமல் நின்னைக்கண்ட மாத்திரையே மகிழ்தல் செய்வேன் என்பது தோற்றி வந்தது. கொடாமையே யுள்ளதாதலாற் கொடுத்தது கொள்வதாகக் கூறும் பழி பிழை எ-று. (54)

146. என்று கபில னியம்ப வியைந்தான்றெவ்
வென்று களங்கொண்ட வேளிர்வே—ணன்று
பழியென்று பாரேன் பருணிதர்கோ னின்சொல்
வழிநின்று காப்பலென்றான் மண்.

(இ-ள்.)—பகைவரை வென்று அவர் போர்க்களத்தைத் தனதாக்கிக் கொண்ட வேளிருள் வைத்து வேளெனச் சிறந்த பாரி இவ்வாறு கபிலனியம்பிய வளவில் இணங்கினன்; என்றது நட்டார்க்குத் தோற்பதன்றிப் பகைவர்க்குத் தோலாதவன் என்று குறித்ததாம். "நட்டார்க்குத் தோற்றலை நாணாதான்" (கலி. 43) என்ப. மேலே கபிலன் மெல்லுந் திறனாய்ந்து யேட்கு எனக் கூறியதை நினைக்க. நன்றென்று பழியென்று பாரேன்—நல்லதென்றும் தீதென்றும் ஆராய மாட்டேன் என்றது தான் கொடுத்ததற்கு மாறாதலின் இவ்விரண்டும் பாரேன் என்றான் எ-று. பருணிதர் கோன்—என்றது என் போன்ற சிறியோர்க்குக் கோனாதல் ஒரு சிறப்பன்று நீ இயல்பாகவே பெரியோர்க்குத் தலைவனாகவுள்ளனை எ-று. அறிந்தடங்கிய பெரியோரைப் பருணிதர் என்ப. "பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர்" என்றார் கம்பநாடர். நின் சொல்வழி நின்று மண் காப்பல் என்றானாகி

இயைந்தானென்க. ஈண்டும் கபிலனைத் தனக்கு மேலே நிறுவல் குறிக்கொள்க. எவுவான் கபிலனும் இயற்றுவான்றானுட் ஆதல் குறித்தது: இங்ஙனம் நிகழ்வது இத்தமிழ் நாட்டு வள்ளன்மைச் சிறப்பு என்பது பெருஞ்சேர விரும்பொறை அரிசில் கிழார்க்குச் செய்த பெருஞ்சிறப்பு நோக்கித் தெளிக. (பதிற்று. 8. பதிகம்); இதனைப் "பாடிப் பெற்ற பரிசில், தானும் கோயிலாளும் புறம்போந்து நின்று கோயிலுள்ளவெல்லாம் கொண்மினென்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசுகட்டிற் கொடுப்ப அவர் யான் இரப்ப இதனை ஆள்கவென்று அமைச்சுப் பூண்டார்." எனப்பதிக உரைக்கண் வருதலினறிக. தெவ்வென்று என்றதனுற் கபிலன் நட்டவனுதலும் அவற்குப் பாரி அடங்கலும் கொள்க. "செற்றோரை வழி தபுத்தன னட்டோரை யுயர்பு கூறினன்" (புறம். 239) என வருதலானறிக. (55)

147. கவிகாத்த சீர்வேள் கபிலனுயிர் காக்கப்
புவிகாப்ப லென்று புகல்வான்—செவிகாத்த
கேள்வியா யென்னீங்காக் கேடி லுயிர்த்துணையா
யாள்வியா யென்ரு னரசு.

(இ-ள்.)—கவிகளாற் காத்துக் கொள்ளப்பட்ட புகழ்ச் சிறப்பினையுடைய வேள். கவிகளைக் காத்தசிர் எனினும் அமையும். யான் இங்குப் புவிகாத்தலை மேற்கொள்வது கபிலனுயிர்காத்தற் பொருட்டு என்று சொல்வானுகி; மன்னுயிர் காத்தலினும் கபிலனுயிர் காத்தலே தலையாயதுபற்றிக் கூறினன். மன்னுயிர் காத்தலே அவன் உயிர் காத்தற்குக் காரணமாதலுங் காண்க. செவிகாத்த கேள்வியாய்—பிறர் செவியாற் காத்து வைத்துள்ள கேள்வி வல்லவனே என்றது கபிலனை. உயிர்த்துணை—உடற்றுணையின் வேறுதலையும், கேடில் துணை அவ்வுயிர்க்கு உடம்புபோற் கெடாமையையும், நீங்காத்துணை மறுமையில் வானம்புகினும் நீங்காது உடனுறைதலையும் குறித்தல் காண்க. அரசு ஆள்வியா யென்றான்—அரசினை ஆளும் வண்ணம் ஏவிநிற்பை என்றான் என்க. ஆள்வியாய் என்றதனுல் இவன் நட்டோனை உயர்த்தல் காணலாம். (56)

148. உயிர்த்துணையாய்த் தன்னோ டுறைகென்று தன்மப்
பயிர்த்துணையாம் வேலிநேர் பாரி—பெயர்த்துரையா
நின்றான் கபில னெடுவேள் குணம்பிணிப்பப்
பின்றான் மொழியும் பிற.

(இ-ள்.)—அறமென்னும் பயிர் வளர்தற்குத் துணையா யமைந்த வேலியை யொத்த வேள்பாரி தன்னை யுயிர்த்துணையாகி யுறைக என்று திரும்பவும் சொல்லாநின்றான். நெடுவேளாகிய அவன் குணம் பிரியவொட்டாது பிணித்துக் கொள்ளலாற் கபிலன் அவன் மொழிக்குப் பிற்படாதவனாகிப் பிறமொழிவான். எ-று.

பின்றுதல்—பிற்படுதல். "பின்றியும் விடாது" (இலாவண—தேவிக்கு) எனப் பெருங்கதையுள் வருதல் கொண்டறிக. பிறஅசைச் சொல் எனினுமாம். பின் தான் மொழியும் எனவுங் கொள்ளக்கிடத்தல் காண்க. நெடுவேள் என்றது இவனை "நெடியோன்" (புறம். 114) எனக் கூறுதல் நோக்கி. வேலி பயிர்க்குக்காப்ப தாவதல்லது தான் பயிரால் வரும் பயனைக் கருதாதவாறு பாரியும் அறங்காப்பதல்லது அதனால் வரும் பயனைக்கருதாமை யுணர்த்தியது; கருதின் "அறவிலை வாணிகன்" (புறம்.134) என்றிகழப்படுவன் என்க. குணம் கயிற்றிற்கும் பெயராதலிற் குணம் பிணிப்ப என்றது சாடு. வேலியழியாமற் காத்தற்கும் ஓர் துணை வேண்டுவது குறித்துக் கொள்க. (57)

149. நின்பாலெஞ் ஞான்று நிழலிற் பிரியாமைக்
கேன்பா லவாவே யெனையாப்ப—தன்பாற்
பசைந்தோய்நிற் றீர்வலெனிற் பாய்ந்தழலின் மாய்தற்
கிசைந்தேனை யென்னீ யிரவு.

(இ-ள்.)—எக்காலமும் நின்பால் நிழல்போலப் பிரியாமைப் பொருட்டு என்கணுள்ள ஆசையே என்னை நின்னுடன் கட்டுவதாகும். அதன் மேலும் அன்பினால் நீ என்னை ஒட்டியவனாகின்றனை; நின்னைப் பிரிவேன் ஆயின் யான் அழலிற் பாய்ந்து மாய்தற்கு உள்ளம் இசைந்துளேன். அவ்வுறுதியுடைய என்னை நீ இரந்து கொள்ளுதல் யாது என்றான் என்க.

ஏறுவெயிலினும் இறங்கு வெயிலினும் உடலைவிட்டகலாத நிழலை உவமை கூறியது வாழ்வினுந் தாழ்வினுந் தான் பிரியாமை குறித்தது; இதற்கேற்ப எஞ்ஞான்றும் என்றது காண்க. தன்னை நிழல் என்றான் எல்லாஞ் செய்பவன் நீயே என்பது குறித்து. "நிழற்பாவை கண்ணாடியிற்பாவை . கையானிமிர்க்கும் முடக்கும் இவன் செய்வபோலத் தொழிற் பாலவாய்மற் றிவன் செய்வயாவுஞ் சுடர்ஞான வடிவான அவன்செய்வ வேயாம்" (தத்துவராயர்) என்னும் வழக்காலுணர்க.

அவாவிற்குப் பாசம் என்பதோர் பெயருமுண்டு. அதற்கியைய யாப்பது எனப்பட்டது. நம்முள் "நண்பென்னும் நாடாச் சிறப்பினை" (குறள் 74) த் தருதலாலிதற்கு மேற் பெறத்தக்க சிறப்பு வேறியாது என்று கருதிக் கூறினான். "பசைந்தாரைத் தீர்தலிற் றீப்புகுத னன்று" (நான்மணி) என்பது சான்றோர் வாக்காதலாற் றான் நட்டவாறு புலப்படுத்தி இது கூறினான் என்க. மேல் இவன் சொற்றபடி தீப்புகுதலுங் காண்க. இசைதல்-போலி; "விண்பெறினு மிசையார்" என்ப. (திருநூற்றந்தாதி). (58)

150. பெருந்தமிழர்க் கீயப் பிறந்தசீர்ப் பாரி
யருந்தமிழ்திற் றீங்கனிபெற் றஃதே—தருந்தருவிட்
டெட்டி பழுத்ததென வேகுவலோ நின்னிடர்க்கும்
ஒட்டி யுறைவ லொருங்கு.

(இ-ள்.)—தமிழாற் பெரியர்க்கு ஈதற்குப் பிறந்த சீர் என்றான் கொடையாகிய தெய்வ வியல்பு பிறவியிலே உளதாவதென்னும் முதனூற் கருத்தைக் கொண்டு; ஸ்ரீ கீதை 16-ஆம் அத்தியாயம் 6-ஆம் சுலோகத்திற் சீவர்களின் பிறப்பு தேவரியல்புற்றதும், ஆசுரரியல்புற்றதும் என இருவகைப் படுமென்று கூறித் தானத்தை (டை 1) த் தேவரியல்புற்ற வகைக்கண் வைத்தோதுதலான் இதனுண்மை யுணர்க. "கொடையும் பிறவிக்குணம்" என்று பிறரும் கூறுதல் காண்க. பெருந்தமிழ் அறிந்து அஃதுடையார்க்கு ஈதல் அருமை நோக்கிப் பிறந்த சீர் எனப்பட்டது. அமிழ்தின் அருந்து தீங்கனி—அமிழ்து போலச் சாவாமையும் இனிமையும் உடைய அருந்துதற் குரிய கனிதரும் மரத்தை விடுத்து எட்டிமரம் கட்கினிய பல கனிகள் பழுத்ததெனப் போவேனே, போகேன். நின் இன்பநிலைக்கேயன்றித் துன்ப நிலைக்கும் ஒருங்கே ஒட்டியுறைவேன் என்றான் என்க. இறவாத புகழ்க்குக் காரணமாதலானும் நட்டு வாழ்தலினுள்ள இனிமையாலும் பாரியை அமிர்தபலந்தருந் திப்பிய தருவாகக் கூறினான். துய்க்கப் படாமையானும் ஒருகால் துய்க்கும்போதுள்ள கைப்பானும் உலோபியராகிய செல்வரைப் பழுத்த எட்டிமரமாக்கினான். இடர்க்கும் என்றது அக்கனி தரவியலாத தளர்நிலையினும் அத்தருவைச் சூழ்தலைக் குறித்தது: இடரே நட்டாரை யளத்தற்குக் கோலாதலால் அது நட்புக்கு வேண்டப்பட்டது; "கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டி யளப்பதோர் கோல்" (குறள்—795) என்பது காண்க.

151. சோலைநெறி பெற்றார் சுரம்போகார் தொல்லியவுண்
மேலையருள் பெற்றார் வினைமூழ்கார்—பாலை நிக
ருறுகிடைத் தென்கொல் லகழ்வ ருவர்க்கூவல்
பேறுகிடைத் தென்யான் பெயர்வு.

(இ-ள்.)—சோலைநெறி—பொழினிழலும் நெறியுமுடைய நிலம், சுரம் என்றது அவ்விரண்டுமில்லாத பாலை. எ-று. தொல் இயவுள்—அநாதியாயுள்ள கடவுள். மேலையருள்—மேலுலகத்திற்குக் காரணமான திருவருள்: உலகத்தார் அருளின் வேறு என்றற்கு மேலையருள் என்றமொழியினும் அமையும். வினைமூழ்கார்—அருளைப் பெறுதற்குத் தடையாய உலகவினையில் ஆழ்ந்துபோகார்: பாலைநிகர் ஆறுகிடைத்து—பாலினை ஒத்த சுவைப்புனல் யாறு கிடைத்திருக்க உவர்க் கூவல் அகழ்வர் என்கொல்—உவர் நிலத்துப்புக்குக் கிணற்றினை என் பொருட்டு அகழ்வர்; இவைபோலப் பேறு கிடைத்திருக்க யான் பெயர்வு என் என்றான் என்க. பேற்றை விட்டு யான் பெயர்ந்து போதல் எதன்பொருட்டு; நின்னை விட்டுப் பிறர்பாற் புகுதல் சுரம் போதலும், வினை மூழ்கலும், உவர்க் கூவல் அகழ்தலும், பேறின்மையும் ஆமென்று விளக்கியவாறு. சுரம்போதல் போல இன்பமின்மையும், வினைமூழ்கல் போல வீடின்மையும், உவர்க் கூவல் அகழ்தல் போல அறமின்மையும், பேறின்மை போலப் பொருளின்மையும் கருதி நால்வகை உறுதிப் பொருளும் பிறர்பாற் பயவாமை காட்டிப் பாரிபால் இந்நான்கும் உண்டாமென்று குறிப்பாற் கொள்ள வைத்தவாறு. கூவல் உவர் நீர் பயப்பது அறமின்மையால் என்பதறிக. இவ்வாறு இம்மை மறுமைகட்கு உறுதியாயவற்றிற்றளராமல் ஒருவர்க்கொருவரைத் தாங்குந் திண்மையே நட்பினுக்கு அரசிருக்கையாதல் "நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி, யொல்லும்வா யூன்று நிலை" (குறள் 783) என்பதனானுணர்க; ஆண்டுப் பரிமேலழகர் மறுமையிம்மைகட்கு உறுதியா யவற்றிற்றளர்ந்துழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின் கிறுத்துதலையே நட்பிற்கு முடிந்த எல்லை என்று கருதுதல் அவருரை நோக்கித் தெளிக. (60)

152. நின்பாற் புகயா னினைந்தெழுந்த வந்நிலையே
யென்பாற் பசையற் றெழுந்ததுகாண்—துன்பா
யிழ்யு நிதியி னருளிழந்த மாக்கள்
விழியின் விழிக்கும் விதி.

(இ-ள்.)—யான் நின்னை நினைந்து நின்பாற்புக எழுந்த அவ் வமயத்தே என்பால் ஒட்டுதலற்று என் தீய ஊழ் புறப்பட்டு விட்டது, அதனை நீ கண்டுகொள்க என்றான். துன்பத்தில் உண்டாகி அழியும் இயல்பினதாகிய செல்வத்தினுற் செல்வத்துள் வைத்துச் சிறப்பித்துச் சொல்லப்படும் அருட்செல்வத்தை இழந்த விலங்கனையார் விழியின் கண் விழிக்கச்செய்யும் என்தீவிதி எழுந்தது காண் எ-று. துன்பு ஆய்-துன்பத்திலுண்டாய்; அழியுநிதியின் அழியாத மேலுலகத்திற்கு உறுதியாயதை இழந்தனர் மாக்கள் என்று குறித்தது; அருளுள்ள விலங்குகளும் உண்டாதலான் அயற்றை விலக்கற்கு அருளிழந்த மாக்கள் எனப்பட்டது. "சிறந்ததன் றீம்பா லறர்தரு நெஞ்சமோ டருள்சுரந் தூட்டு மிதனோடு" (மணிமேகலை—ஆபுத்) என வருதலான் அறிக. விழியின் விழித்தல்—அம்மாக்கள் குறிப்பறிதற்கு அவர் கண்ணிலே கண்ணை வைத்து நோக்கியிருத்தல். (61)

153\. பாட்டு முரையும் பயிலாப் பதடியர்பாழ்
ஒட்டைச் செவியி லுகும்வண்ண—மூட்டுதமிழ்க்
கேன்னோதல் செய்வே னிவட்போந் துணைப்பெற்றே
னின்னோவேன் வாழ்கயா நீடு.

(இ-ள்.)—பொருளறிய வாராவிடத்தும் சொல்லின்பமும் செய்யு ளின்பமும் இன்னோசையும் பயிறல் கூடுமாதலிற் பாட்டு வேறு கூறப் பட்டது. பாட்டும் உரையும் என இரண்டும் பயிறற்குற்ற அறிவென் னும் உள்ளீடின்மையால் மக்களிற்பதடியராயினர் எ-று. பாழ்ஞ் செவி, ஒட்டைச் செவி; செவிச் செல்வமாகிய கேள்வியே யில்லாமையாற் பாழ்ஞ் செவி எ-று. பரிசிலரால் இனியன சொல்லப்பெற்ற போதும் தரித்தற்கியலாமையால் ஒட்டைச் செவி எ-று. உகும் வண்ணம்—உக் கொழியுமாறு; ஊட்டிய தமிழின் பொருட்டு என்னை நோதல் செய் வேன். "பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா" என்ப.

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை பொருவற்கு" என்பது பழமொழி,

இவண் போதப்பெற்றேன், அதன் மேலும் நின்னைப் பெற்றவனாயி னேன். இதனால் நின்னை ஒவேன். இந்நீங்காமைக்கு யாமிருவேமும் நீடு வாழ்க என்றான் என்க. ஒவேன்—நீங்கேன். யாம் வாழ்க என்பது "தன்மை முன்னிலையாயிரீடத் தொடு, மன்னாதாகும் வியங்கோட் கிளவி" (தொல்-சொல்) என்புழி மன்னாது எனப் பெருவரவிற்றாகா

தேனக் கூறியதனாற் சிறவரவிற்றாகும் என்ற சேனாவரையர் உரைக்கிசைய வந்தது. இனி இச்சூத்திரம் தன்மையும் முன்னிலையும் சேரக் கூறாமிடத்து தன்னுடனே முன்னிலையை உளப்படுத்திய யாம் என்னும் தன்மைச் சொல் உளதுபற்றி அதனாற் கூறத்தக்க வியங்கோளை யான் வாழ்க நீவாழ்க என்றேனும் யானும் நீயும் வாழ்க என்றேனுங் கூறுதலைத் தடுப்பதென்று கொள்ளினுமமையும்; தன்மையினும் முன்னிலையினும் தனித்தனியே வியங்கோட் கிளவி வந்த இலக்கியங்கள் சான்றோர் செய்புளிலுள்ளன கொண்டு உண்மையுணர்க. ஊட்டு தமிழ் என்றான் அவரிபல்பாக உண்ணுமை குறித்து. அங்கனம் ஊட்டிய நிலையினும் உட்கொள்ளுதலின்றி உகுதல் கருதிவைத்தது காண்க. (62)

154. என்று கபில னினிதுதிரு வாயவிழ்க்க
மன்ற விறல்வேண் மகிழ்பூப்ப—நன்றதுகண்
டொன்றி யுவகைத்தே னூற வலர்ந்தவே
முன்றி னிறைந்தார் முகம்.

(இ-ள்.)—என்று கபிலன் தன்னுள்ளத்தினியதைக் கல்வித் திருவுடைய வாயினால் அவிழ்த்த வளவில் விறல்வேண் மன்ற மகிழ் பூப்ப, அதனை நன்று கண்டு எல்லோருங் கலந்து களிப்பாகிய தேன் மேன் மேலும் ஊற்றெடுக்க முற்றத்து நிறைந்த அமைச்சர்முதலியோர் முகங்கள் மலர்ந்து விளங்கின எ-று.

மன்ற—தேற்றமாக. மன்றங்கள் பாராட்டும் விறல் என இயைப்பினும் அமையும். திருவாய் மலர வேள் உள்ளமகிழ்பூப்ப நிறைந்தார் முகம் உவகைத் தேனூற அலர்ந்த என்க. ஒன்றி ஊற என்க. வாய் அவிழ்தல்—வாய் வினையாகவும், மகிழ்பூத்தல் உள்ள வினையாகவும், முகமலர்தல் மெய்வினையாகவும் கொள்க. இக்குழாத்திற்குப் பாரி மனமாகவும் கபிலன் மொழியாகவும் பிறநன்மக்கள் மெய்யாகவும் கருதிக் கொள்க. உவகைத் தேனூற என்பதனை அவிழ்க்க, பூப்ப, அலர்ந்த என்பவற்றோடு கூட்டி யுரைப்பினும் அமையும். (63)

155. கோமுற்றந் தோக்க குழாஅ மவணேதிர்ந்து
காமுற்றங் காந்து கழறிற்றே—தேமுற்ற
வேந்த னுயிர்த்துணையா மேதகவே சூடினனிவ்
வேந்தன் முடிசூட்டு கேன்று.

(இ-ள்.)—கோவுள்ள முற்றத்துக் குழீஇய மக்கட்டொகுதி அவ் வமயம் எதிர் வந்து விரும்பி வாய்திறந்து கூறிற்று. தேம் உற்ற வேந்தன்—தேயத்தை யடைந்த அரசன். உயிர்த்துணையாயுள்ள பெருஞ் சிறப்பை அவ்வரசனுற் சூடப் பெற்றவனுகிய கபிலன் இந்நாடேந்து தற்கமைந்த பாரியை முடிசூட்டுக என்று கூறிற்று என்க. அங்காந்து என்று வேண்டாது கூறியது காமுற்ற ஆதரம் தோன்ற நின்றது: எதிர்தலில்—மெய்யும், காமுறுதலின் மனமும், அங்காந்துகழறலில் மொழியும் என்னுந் திரிகரணமும் ஒருங்கிசைதல் கருதிக் கொள்க. தேம் உற்ற—இடையிற்றேயத்தை உறுத நிலையை ஞாபகப்படுத்துவது: உற்றதற்கேற்ப வேந்தன் எனப்பட்டது காண்க. தேயமுற்ற வேத் துரிமையினும் உயிர்த் துணையாதல் மேதகவு என்பது குறித்தது காண்க. ஆச்சிறப்புத் தோன்றச் சூட்டுக என்று கழறிற்று என்பது கருத்து. உயிர்த்துணை யாதலுடன் அந்தணனும் புலவனும் ஆதலும் நினைக்க. ஏந்தல் முடி சூட்டுக என்பது உலகு ஏந்துதற் குரியனைச் சூட்டுக என்று இயைபு படவந்தது. "அந்தணற்கு உபநய னம்புரிக" என்னும் வேதவிதியுட் போல ஏந்தன் முடிசூட்டுக என்ப தையுங் கொள்க. உபாயனம் புரிதற்கும் முடிசூட்டுதற்கும் அந்தணத் தன்மையும் அரசுத் தன்மையும் அதிகாரி விசேடணமென்றல் வட நூல் வழக்கு. (64)

156. கன்றிற் பிரியாக் கறவைநேர் வான்கபிலன்
முன்றிற் குழாத்து முழக்கேற்று—நன்றிக்
குடலேற்ற வேள்வேந்தை யுற்ற் ரோடுங்கோண்
டடலேற் றணையேற்றி னன்.

(இ-ள்.)—"தாய் தன்னையறியாத கன்றில்லைத் தன் கன்றை, யாயுமறியும்" என்று கம்பநாடர் கூறியபடி (ஆரணிய. விராதன் றுதி) ஒருவரையொருவர் அறிந்து அன்பு செய்தின்புறலாற் கன்றும் கறவை யும் பாரியும் கபிலனுமாதல் காண்க. முழக்கத்தை இணங்கி ஏற்றுக் கொண்டு நன்றிக்சென்று ஏற்ற உடலையுடைய வேளிர் அரசனை. நன்றி—அறம்: "புகழொடு நன்றி பயவாவினை" (குறள்) என்புழிக் காண்க.

"சாலமென நீடுவடி வானும்வெல்கை யானுந்
தடங்கொளுர னும்விடை யன்னபிய லானும்
தாலமுறை செய்யவல ராசகுல தன்மந்
தன்றெழில் வகிக்கமெய் தரித்ததென நின்றான்" (இரகு

வமிசப்பாடல்) எனக் காளிதாசரும் திலீபனைக் கருதுதல் காண்க.

தன்னினும் உற்ரார் உயர்வுநோக்கி ஒடுவந்தது. அடல் ஏற்றணை—வலியையுடைய சிங்காசனம். (65)

157. மடுக் கடங்கா மதியா னெழுப்பாகன்
கட்டுக்கடங்காக் களிறுநடாய்—நட்ட
வெளிலணைத்த வாறேய்க்கு மேதக்கோன் வேளை
மிளிரணைக்க ணேற்றுவித்த வீறு.

(இ-ள்.)—அளவிற்கு அடங்கா மதியொடு வலியுமுடைய யானைப் பாகன் கட்டுதற்கு அடங்காத களிற்றினை நடத்தி ஊன்றிய கட்டுத் தறியிற் சேர்த்த தன்மையை யொக்கும் மேதகவுடைய கபிலன் வேள்பாரியை விளங்கும் அரசு கட்டிலில் ஏறச்செய்த வெற்றி. எ-று. கபிலற்கு மதியொடு சொல்வலி கொள்க. பாரி களிறுபோலவும் கபிலன் அதனை நடத்தும் பாகன் போலவும் ஆதல் குறிக்கொள்க. கட்டுக்கடங்காக் களிறு என்றதனால் மதத்தான் மயங்கியதாதல் துணிக. பாரி கொடைமடத்தால் மயங்குதல் குறிக்கும். வெளில் யானைகட்டுந்தறி. அணைத்தல்—சேர்த்தல். "அணைத்த கூந்தல்" (முருகாறு) என்புழிப் போல: அணைமுதல் என்பது தறிக்குப் பெயராதலுணர்க. "அணைமுதற் பிணிக்கும்" என்பது பட்டினப்பாலை. வீறு என்றது முன் "வெல்லுந் திறனறிந்து வேட்கு" என அறைந்த படித்தன் சொல்வழிப் படுத்திய வெற்றியை. சொல்வலி பாகனுக்கும் வேண்டும். மிளிர் அணையென்றது பாரி ஏறுதலான் எய்திய பொலிவுடைமை குறித்தது. (66)

158. வேளிர் குலக்கொழுந்தை வெம்மடங்கல் வீறணைமீ
தாளி யெனப்புகல வாங்கிரீஇ—நீளணிகண்
முன்பணிந்த வாறே முறையிற் புனைவித்தா
னின்பணிந்த வாள்புலவ ரேறு.

(இ-ள்.)—வேளிர் குலமாகிய வேரிற்குக்கொழுந்து போன்ற பாரியை வெய்ய சிங்கஞ்சுமந்த விசடாசனத்தின்மேற் கண்டார் இவன் மக்கள் வடிவினுள்ளதோர் ஆளி யென்று சொல்லும்படி அக்கோயிலில் இருத்தி நெடுநாட்டொட்டு வழிவழியாய் வருகின்ற அணிகளைத் தனக்கு ஈதற்கு முன்னே அணிந்திருந்தபடியே புலவரில் ஏறுபோல்பவனாகிய கபிலன் அரசர்க்குரிய முறைமைப்படி அணிவித்தான். எ-று. உலகத்தை இன்பத்தால் அலங்கரிக்கும் சிறந்த புலமைப்புருள்ளே தலைவன் என்க. "உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்"

(குறள்) என்பதனாற் சிறந்த புலமை உலகு இன்புறுதற்காதலின் இவ் வாறு கூறப்பட்டது. அணைதாங்குவது சித்திர வுருவின் மடங்கலாத லான் அதன்மேல் உயிருள்ள ஆளி பாரியாதல் அறிக. சித்திர மடங்கலை அதன்றோற்றங் குறித்து வெம்மடங்கலென்றது அதன் மீதுள்ள ஆளியின் மென்மைத் தோற்றத்தை நினைத்து; "நீரினு மினிய சாயற்பாரி" என்பது புறம் (105). 'ஈதலானு விலங்குதொடித் தடக்கைப் பாரி" புறம் (33) எனக்கபிலர் அணி கூறுதல் காண்க. உற்றுழியுதவற்கு இலங்குதொடி தடக்கையிலுண்மை கூறியதனால் இவ்வணியும் பிறர்க்கிதற்குத் தான் சுமப்பன் என்றலும் பொருந்தும்.

159. கன்ன னெனச்செங் கதிரோன்போந் துச்சிமோந்
தன்ன மணிமுடியன் பானணிந்து—முன்ன
மிருந்தவா நோக்கி யினிதுவந்தான் வான்கண்
மருந்தவாஞ் சொல்லோன் மனத்து.

(இ-ள்.)—கொடையானன்றிப பிறப்பானுங் கன்னன் என்று இவனை உலகு சொல்ல; செங்கதிரோன்—சூரியன் உலகில் வந்து தன் மகனை உச்சிமோந்தாற் போன்ற மணிமுடியைத் தன் அன்பைச் சூட்டு தலோடு சூட்டி; முன்னம் இருந்தவா நோக்கி—தனக்கிதற்கு முன் இருந்தபடி கண்டு. வான்கண் மருந்து—வானம் தனக்குச் சிறப்பாகக் கருதும் அமிழ்தம்; அவாவும் சொல் என்றது நாவினால் மட்டும் இன் புறுதற்குரிய அமிழ்தம் நாவானும் செவியானும் சொல்லியும் கேட்டும் இன்புறுதற் சிறப்பை இவன் சொல்லிடத்து அவாவுதல் குறித்தது. நா ஞானேந்திரியமும் கருமேந்திரியமு மாதலுணர்க. "கோளில் பொறியிற் குணமிலவே" (குறள்) என்புழிப் பரிமேலழகர் "வாழ்த் தாத நாக்களுமுடனெண்ணப் பட்டன" என வுரைத்ததுகொண்டு தெளிக. "நாவினுளமிர்தங் கேட்டு" (சிந். 504) என வருதலானும் செவியாற் கேட்டற்குரிய அமிழ்தம் நாவிடத்ததென்பது தேறப்படும். மனத்து இனிது உவந்தான் என்றது முன் தான் பெற்றதற்கு உவக் காது வருந்தியது குறித்தது. சொல்லாற் பாரியை உறுதிதேற்றி வயப்படுத்தலின் மருந்தவாஞ் சொல்லோன் எனலாயிற்று. கன்னன்—செங்கதிரோன் மகனாதல் பாரதத்திற் கண்டது. (68)

160. ஊன்பருகு வேல்வே ளுயர்புலவ னின்முகங்கண்
டியான்பருகல் வேட்டே னிதுபுனைந்தேன்—றேன்பரு [குங்
கஞ்சத்தார் மார்பிற் கபிலனே யானென்று
நெஞ்சத்தாற் சோற்று னிமிர்ந்து.

(இ-ள்.)—உயர்புலவன்—புலமையானுயர்ந்தவன். யான் இவன் இன்முகம் என்கண் பருகல் வேட்டேன் என்றது அவ்வேட்கையாற் றன் முன் முழுதும் ஈந்தேன், அங்ஙனம் ஈந்த நிலையில் இவன் துயர் முகமே என்கண் பருகின, பின்னரும் அவ்வேட்கையே மீதூர்தலா லிம்முடி புனைந்தேன், முடியை அவாவினேனல்லேன் என்பது குறித் தது. எல்லாப்பொருளுங் கொடுத்துப் பரிசிலன் இன்முகங்காணும் வேட்கை வள்ளற்குண்டாமென்பது "இன்னாதிரக்கப்படுதல் (குறள் 224) என்னுங்குறளானும் அதற்குப் பரிமேலழகர் கூறிய வுரையா னும் உணர்ந்து கொள்க. அந்தணன் ஆதற்கேற்பக் கஞ்சத்தார் கூறிற்று. கபிலனே யான் என்றது என்னைக் கபிலனாக நினைத்தலல் லது கபிலனின் வேறாக என்னை நினையற்க என்று தெளிவித்ததாம். என்னைப் பாரி யென்று நினையற்க யான் கபிலனே யென நினைக என் கூறினுமெனினும் அமையும். இங்ஙனம் கலந்தார் தம்முட் டெ யர் மாறுதல் "பேதைச் சோழனென்னுஞ் சிறந்த காதற்கிழமையு முடையன்" (புறம். 216) எனப் பிசிராந்தையாரைக் கோப்பெருஞ் சோழன் கூறுதலானறிக. பிரமத்தின் வேறாய்த் தனியே தனக்கு நிலையில்லாமையாற்—"ப்ரஹ்மை வாஹம்" என்னும் வட நூல் வழக்குப் போலக் கபிலனே யான் என்பதையும் ஒற்றுமைபற்றிக் கொள்க. "நானே பிரமம்" என்னுமைபோல "நானே கபிலன்" என்னுமையும் ஈண்டு நினைக்க. "நன்றுபுரி நாட்டத்து நானவனாத, லறியத் தேற்று வோ ரயல்வே றில்லென (பதுமாபதி வதுவை 15-16) எனப்பெருங் கதையினும் வருதல் காண்க. இது "கலந்த கேண்மை" (புறம். 236) யைப் புலப்படுத்தியது. நெஞ்சத்தாற் சொற்றுனிமிர்ந்து என்புழி திரிகரணமும் ஒருங்கியைதல் கண்டுகொள்க. கபிலனைப் பெற்றதனால் உண்டாகிய வீறுதோன்றத் தலை நிமிர்ந்து வீற்றிருந்து நெஞ்சத்தாற் சொற்றான் எ-று. ஊன் பருகுவேல்வேள்—என்றது அரசர்க்குச் சிறந்த மறத்தால் விசேடித்ததாம். (69)

161. கல்வியோடு செல்வமுந்தாங் காணக் கிடைத்தாராய்ப்
பல்லுழையர் வேளிர் பரந்தசூழாத்—தெல்லாரும்
வாழி கபிலனோடு வாழி விறல்வேளேன்
றூழி கிளரவார்த் தார்.

(இ-ள்.)—தாம்காண—தாம் உண்டு பண்ணற்கு: கல்வியொடு செல்வமுங் கிடைக்கப் பெற்றவராகி: பல் உழையர் என்றது பக்க மிருக்கும் பலரையும். அவர் ஐம்பெருங் குழுவும் எண்பேராயமு மாகியவர். வேளிர்—குலக்கோளிர். பரந்தசூழாம்—இவுர்ந்நீக் கோயிற்

க்னிரம்பிய மக்கட்டொகுதி. எல்லாரும் என்றது இதன்கண் வேறு பட்டமனமில்லாமை குறித்தது. ஒடுக்கள் ஈரிடத்தும் உயர்பு குறித் தன. ஆழி கிளர வார்த்தார்—ஆர்கலியினும் மேலாக முழங்கினர். ஓரிடத்தே இரண்டுஞ் செய்தற்கருமையிற் கல்வியொடு செல்வமுங் கிடைத்தாராய் எனப்பட்டது; பாரியுயர்த்திடதையே உடன்பட்டு வாழி கபிலன் என முற்கூறினர் என்க. (70)

162. அற்றை முதலா வரசின் பரிசனத்தார்
பிற்றை நிலைமுனியார் பேணலுறக்—கோற்றமிகும்
விற்பாரி வேள்பால் விழுக்கபில னட்டமர்ந்தான்
பொற்பா ருடற்குயிரே போன்று.

(இ-ள்.)—அரசின் பரிசனத்தார்—அரசியற்குரிய அதிகார பரிசன மாயமைந்தார் அன்றுமுதல் இவனுக்குப் பின்னின்று பணிசெய்தலை வெறுக்காதவராகிப் பேணுதலை மிகவுஞ்செய்ய வேள்பாற் பொற்பார் உடற்கு உயிரே போன்று நட்டுத் தங்கினன். எ-று. கொற்றவேள் என்றது அங்ஙனம் பேணுதாரை ஒறுத்தற்குரிய வீறு குறித்தது. உயிராதற்கேற்ப விழுக்கபிலன் எனப்பட்டது. உடலையும் உயிரையும் சேரப் பேணுதல் இன்றியமையாமை காண்க. பொற்பார் உடல்— அரசிலக்கண நிறைந்த திரு மெய்யை நினைத்துக் கூறியது. உடல் உயிர் என்றது ஒருவரை யொருவரின்றியமையாமை குறித்தது. (71)

163. நட்ட கபிலன்வாய் நன்மொழியே தன்மொழியா
யட்ட பகைவே ளரசியற்றி—மெட்டுத்
திசையுங் கவிக்குஞ் செழுந்தமிழ்மூ வேந்த
ரிசையுந் தனதா வினிது.

(இ-ள்.)—தன்னை நட்ட கபிலன் வாயின் நல்ல மொழியே தன் வாய் மொழியாக; வாய் என்று வேண்டாது கூறியது நன்மை யல்லது பயிலாதது என்றற்கு. "தீய வழுக்கியும் வாயாற் சொலல்" (குறள்) என்புழிப் போலக் கொள்க. "வாய்மொழிக் கபிலன்" (அகம் 78) என்றது கொண்டு நல்வாய் மொழி எனினும் அமையும். தான் நட்ட கபிலன் எனினும் அமையும். பகையட்ட வேள்...மொழியாய் அரசியற் றும் என்றது எல்லாம் "இறைவ ரேவலா னியைவ காண்டியால்" (அயோத்தி) என்று கம்பநாடர் கூறியபடி அரசியல் அரசன் ஏவுதற் கண்ணே நிலை பெறுதல் குறித்தது. மூவேந்தர் ஒரோருவரும் திசை யெட்டும் போர்க்குப்படி வளர்த்த புகழும் ஒருசேரத் தன்னதாக

என்க, "அறிவுடையோனாறரசு" இனிது செல்லுதலான் மூவேந்தரிசையுந் தனதாயிற்றென்க. கபிலனே தானுதற்கேற்ப அவன் மொழியே தன் மொழியாயிற்று: எட்டுத்திசையையுங் கவிக்கும் இசை என்க. "இசையாற்றிசைபோயதுண்டே" (சிந்தா) என்பர். "டணை செழு வேந்தரை யிறந்து மிரவலர்க்கீயும் வள்ளியோன்" (புறம். 119) ஆதலான் அம்மூவர் இசை பாரியதாதல் கூறிற்று. (72)

164. கற்றுர் தலைவன் கபிலன்வண் பாரியுட
னுற்றுய்ந்து நட்ட திற மோதினேம்—பெற்றுரை
மாறற்குப் பாரி மணமறுத்த காதையினிக்
கூறற் கெழுந்தேங் கொள.

(இ-ள்.)—கற்றுர் தலைவன்—கற்று நிறைந்த தலைமையையுடையவன். வண்பாரியுடன் நட்டதிறம் உற்றுய்ந்து ஓதினேம் என்க. கபிலன் கல்வித் தலைமைக்கும் பாரியின் வண்மைத் தலைமைக்கும் பொருந்த வைத்து ஆராய்ந்து கூறினேம் எ-று. பெற்றுரை—பெறப்பட்ட மகளிரை. பாரிமாறற்கு மணமறுத்த காதை—அவன் பாண்டியற்கு வதுவை இயையாது மறுத்த மெய்ச்சரிதம் கொளக் கூறற்கு இனி எழுந்தேம்—உலகு கொள்ளும் வண்ணம் கூறுதற்கு இனித் தொடங்கினேம். எ-று.

"அளிதோ தானே பாரியது பறம்பே" (109) என்னும் புறப்பாட்டிற்குத் துறை கூறிய வழி "மகண் மறுத்தல்" என வருதலாற் பாரிக்கும் மூவேந்தர்க்கும் உண்டாய போர் "மகண்மறுத்தல் காரணமாக நிகழ்ந்ததென்று துணியலாம். வேந்தரை யிறந்தும் பரிசிலர்க்கீதலானும், புறம் (119) "அண்ணல் யானை வேந்தர்க் கின்னுன்" (புறம். 115) ஆதலானும் மூவேந்தரும் இப்போரிலொருங்கிசைதல் அழுக்காறுபற்றி நிகழ்ந்தது என்னின் அதுவும் மகண்மறுத்தலொடு ஏதுவாகுமென்க. பாரி மூவேந்தர்க்கும் இன்னுன் ஆதற்கு வேந்தரையிறந்தீதலாலுண்டாகிய அவர் அழுக்காறே காரணமாதலல்லது வேறில்லாமை உய்த்துணர்க. இம்மூவேந்தருட் பாண்டியற்கு மணமறுத்தல் கூறியது "வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டிய மண்டலமே" என்னும் பாண்டி மண்டல சதகத்தால் நாட்டுத்தலைமை பாண்டியனதாதல்பற்றி என்றுணர்க. மூவரும் மணம் விரும்பின் அவர் தம்முட் பகைமை கொள்வரல்லது ஒருங்கியையார் என்று நினைக்கத்தகும். பாரி பறம்பிற்குக் கூறியவளனெல்லாம் நிரம்பியதோர்மலை சோணுட்டிலில்லாமையாற் பாரிநாடு சோணுட்டதாகாது. பாரி யிறந்த பின்னர் இம்மூவருட் சேரன் வழியினனுகிய செல்வக் கடுங்கோ வாழியாத

னிடம் சென்று பாரியின் சிறந்த பண்புகளைக் கபிலர் எடுத்தோதிப் பரிசில் பெற்றதனாற் சேரன் இட்போர்க்கு முற்பட்டு முனைந்தவனு காமை உய்த்துணரலாம். கொல்லிமலைக்குக் கீழ்பாலுள்ள பச்சை மலைப்புறத்துத் தென்பறநாடு என்ற ஓர் நிலப்பகுதி யுண்மை தெரி கின்றும். பாரியூர் பழைய பாரியூர்க்கரை எனப் பெயரிய ஊர்களும் கோசன்புத்தூர்ப் பற்றிலுண்டு: இவை யெல்லாம் வெல்லப்பட்ட பாரி யுறவினர் தந்நாடுவிட்டுப் போந்து தமக்கினிய பெயர்களையிட்டு வதிந்த தனர் என்பது குறிக்கும். மகதைநாடு மச்சநாடு என இத்தென்னாட் டுப் போந்து பெயரிட்டு வதிந்த அரசரும் உண்டு. இவைபோலக் கொள்க: "எவ்வி தொல்குடிப்படீஇயர் மற்றிவர், கைவண்பாரி மகளி ரென்றவென் றேற்றாப்புன் சொல்" புறம் (202) எனக் கபிலர் பாடுத லாற் பாரி மகளிர் எவ்விகுடியின் மணத்தற்குரியர் என்பது புலப்படு வது: இது பழைமையாகிய பெண்கொள்ளல் பெண் கொடுத்தல் என்னுந் தொடர்பு எவ்விகுடிக்கும் பாரிகுடிக்கு முண்மை புலப்படுக் கும். இவ்வேளெவ்வி நாடு பாண்டியனால் வென்று தன்னாட்டொடு சேர்க்கப்பட்டதென்பது "எவ்வி மிழலையொடு.........முத்தூறுதந்த கொற்றநீள்கொடைக்கொடித்தேர்ச் செழிய" புறம்-(24) எனமாங்குடி கிழார் பாடுதலான் அறியப்படுதலான் பாரியிருந்த பழைய பறநாடு பாண்டி நாட்டோடு சேர்ந்த எவ்விமிழலை நாட்டிற்கு நெடுஞ் சேய்த் தாகாமையும் உணரலாம். இவற்றிற் கேற்பவே பாண்டிநாட்டுக் கொடுங் குன்றத்துக் (பிரான்மலைக்) கல்வெட்டில் "இந்நாட்டு அறுநூற்றுவ னேரிப்பற்றிற் பாரீச்வரமும்" என்று பொறிக்கப்பட்டிருத்தல் காண லாம். பாரீச்வரர் என்பது கொடுங்குன்றக் கடவுள் திருப்பெயர். பாரீச் வரம்—பாரி வழிபட்ட ஈசுவரனையுடைய கோயில்; இவற்றான் மாறற்கு மணமறுத்தலே இயைபுடைத்தாமென உணர்க. (73)

4. கபிலர் நட்புக்கோட்டிறம் முற்றிற்று

இத்திறத்திற் செய்யுள் 73.

---

## 5. பாண்டியற்கு மணமறுத்த திறம்.

165. பாரி புகழோடு பாரி மகளிருடைச்
சீரியல்பு மேங்குஞ் சிறந்ததாற்—கூர்நுண்
கலையா னினைவிற் கரிசில் லுணர்வாற்
றலையா மொழுக்காற் றக.

இ-ள்.—பாரிபுகழ்—நிழலில் நீளிடைத் தனிமரம்போல நின்று உலகு செழு வேந்தரை இறந்தும் இரவலர்க்கு ஈயும் வண்மைப் புகழ் (புறம் 118); பாரிமகளிர்—அங்கவை, சங்கவை என்பார். சீரியல்பு—சீத்தை பெண்மை: "பெண்ணெனப் படுவகேண்மோ, பீடில பிறப்பு நோக்கா, உண்ணிறையுடைய வல்ல ஓராயிர மனத்தவாகும்" (சிந்தா 1597) என்புழிப்போலப் பழிக்கப்படும் இயல்பை விலக்கற்குச் சீரியல்பு எனக் கூறப்பட்டது. எங்கும்-பேரரசர் நாடெங்கும்; தகச் சிறந்தது—இவர் குடிப்பிறப்பிற்குத் தகமேம்பட்டது; பாரிபுகழின் உயர்பு குறித்து ஒடு வந்தது; சீரியல்பு என்றது இம்மகளிர் பிறந்தகச் சிறப்பு உணர்த்தியது; இவை நற்குடியில் நல்ல மகளிரே மணக்கத் தக்கவர் என்பது குறித்து வந்தன. கூர்நுண்கலை—கூரிய நுணித்த பொருள்களையுடைய பலநூல்கள். "நுண்ணிய நூல்பல" (குறள். 373) என்ப. வினைவிற்கரிசு இல்உணர்வு—வினைத்தற்கட் குற்றமற்ற அறிவு; மெய்ப்பொருள் காணும் அறிவு. தலையாம் ஒழுக்கு—நூலினும் அறிவினும் உலகு தலைமையாக்கொள்ளும் ஒழுக்கம்; உயிரினும் ஓம்பப் படுவதாதலிற் றலையாயிற்று." "செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பு, மறிவு மருமையும் பெண்பாலான" (தொல். பொரு. சூ. 15) எனத் தொல்காப்பியனார் கூறிய ஆறும் சீரியல்புகள் எனக்கொள்க. ஈண்டுக்கூறிய அறிவு இயற்கையறிவெனவும், கரிசில் லுணர்வு—கற்றல் கேட்டலால் வந்த உணர்வெனவுங் கொள்க. (1)

166. பாரி னறிஞர்வாய்ப் பாரி மகளிரிருஞ்
சீரினிது கேட்டுமயல் செய்தனனாற்—போரி
னிணமாலை சூடு நெடுவேற் செழியன்
மணமாலை சூட மனத்து.

(இ-ள்.)—பாரின் அறிஞர்—உலகில் அறிஞரென்று சிறந்தவர். இருஞ்சீர்—பேரரசர் மகளிர்பாலும் எய்தற்கரிய பெரிய சிறப்பு; இருஞ்சீரை அறிஞர் வாய்க்கேட்டல் மயல் செய்தற்குக் காரணம். இனிது கேட்டல்—கேட்கும்போதே மனம் சுவைத்துக் கொள்ளுதல். மயல் செய்தனன்—விரும்பினன். கேட்டுமயல் செய்தனன் என்றதனால் அம் மகளிர் விழையாமையும் இவன் ஒரு தலையா விழைந்ததுங் குறித்தன காட்சியின்றியுங் கேட்டு விழைதலுண்டென்பது "கேட்ட மங்கையை மறந்திலாதான்" எனக் கம்பநாடர் கூறுதலானறிக. மனத்து மயல் செய்த அளவன்றிப் பயன் எய்தாமையானும் போரே நிகழ்த்தலானும் போரினிணமாலை சூடுமென விசேடிக்கப்பட்டது. நெடுவேல் என்றது இப்பாண்டியர் வழியிற் சிறந்த கடலெறிந்த வடிவேலைக் குறித்தது. வேற்செழியன் இவன் பெயரெனினுமமையும். "கொற்கையிலிருந்த

வெற்றிவேற் செழியன்'' என்பது சிலப்பதிகாரம். (நீர்ப்படை) வெற்றி வேலாதலின் நெடுவேல் எனப்பட்டது. இவனை இளஞ்செழிய னென்ப. (2)

167. கல்வித் தனித்தேய்வங் காமுறூஉ நல்லறிவுஞ்
செல்வித் திருவிழையுஞ் சீரேழிலும்—பல்விழுப்பத்
தற்ருர் மதிக்குமவ் வோண்மகளிர் மாண்புமவன்
கற்ரு ரிடைக்கேட்டான் கண்டு.

(இ-ள்.)—கல்வித் தனித்தெய்வம்—கலைமகள். தனித்தெய்வம் என்றது எல்லாத் தெய்வங்களையுந் தன்கலையால் விளக்கஞ் செய்தலால் என அறிக. அறிவே பயனுகக்கொள்ளுதலால் இத்தெய்வங் காமுறுவதாயிற்று. அவள் தந்த நிலைத்த நல்லறிவை நிலையாப் பொருட்கு விற்காமை குறித்தது. உலகிற்குந் தமக்கும் நல்லனவே தெளிதலான் நல்லறிவு எனப்பட்டது. செல்வித்திரு—திருவாகிய செல்வி எ-று. கல்வியழகொடு கூடிய எழிலாதலாற் சீரெழில் எனப் பட்டது. பல் விழுப்பத்து—பல்வகை உயர்வால்; உற்ருர் மதிக்கும் மாண்பு—உறவினர் மேன்மை பாராட்டு மாண்புகள்; உற்ருர் மதிக்கும் என்றது நெருங்கிப் பயிறலால் உயர்வு தாழ்வு காண்டற்குரியார் அவர் என்பதுபற்றி. கற்ருரிடைக் கண்டு கேட்டான் எ-று. கற்ருரைக் கண்டு அவரிடைக் கேட்டான் என்க. கற்ருரைக் கூறியது அவரே பாரிபாற் பரிசில் பெறப் புக்கவராதல் கருதி. வாய்மை அறியவுங் கற்ருரே தக்காராதல் உணர்க. கலைத்தெய்வங் காமுறுதல் கூறிய வாற்ருன் உலகு காமுறுதல் கூறவேண்டாதாயிற்று. ஒண்மகளிர் என்புழி ஒட்பம் மனைக்கு விளக்காகும் ஒளி. மாண்பு—மனைத்தக்க மாண்பு. (3)

168. தந்தையிடைக் கற்ருர் தகைமா ணறங்கபிலன்
சிந்தையிடைத் தேற்றத் தெளிந்தார்நூல்—விந்தைநிக
ரின்ரு யிடைச்சிறந்தா ரில்வாழ்க்கை யேன்றவர்சீர்
நன்ருச் சோலக்கேட்டா னுள்.

(இ-ள்.)—தகைமாணறம்—தகைமையால் மாட்சிமைப்பட்ட அறம்; அறம் இருமையும் பயக்குந்தகையது; பாரி எந்நிலையினும் அறம் பூண்ட வன் ஆதல் 'குறத்தி மாட்டிய' என்னும் புறப்பாட்டிற் (புறம் 108) கண்டுகொள்க. கபிலன் சிந்தையிடைவைத்துத் தெளிவிக்கத் தெளிந் தார் என்க. "மார்பிடை முந்நூல் வனையா முன்னர், நாவிடை நன்னூ

னன்கன நவிற்றி (மணி-13 : 234) என்பது போன்றதல்லாமை குறித்துச் சிந்தையிடைத் தேற்றல் கூறப்பட்டது. விந்தை-வெற்றித்திரு. இன்றாய்-இனியநற்றாய்; அறம் உள்ள விடத்தே இவ்வெற்றித்திரு நிலைபெறுதல் குறித்தது; இன்றாய் என்றது செவிலி முதலியோரினுந் தாய்த் தன்மையின் இனிமை குறித்தது. இல்வாழ்க்கை ஈண்டு வாழ்வினுந் தாழ்வினும் விருந்து புறந்தருதல், பெற்றாற் பெறுதல் (குறள் 58) அறக்கற்பும் மறக்கற்பும் உடையராதல் என்பவற்றைக் குறித்து நின்றது. இது "நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்" (தொல். கற்பு. 5) என்பதனாற்றலைவியர் க்கல்லாமற் றாகம்பட ஒழுகும் தொன்னலமாகலின் அவ்வியற்கை யறிவினுஞ் சிறந்து மேம்படுதல் குறித்துச் சிறந்தாரென்றதாம். கற்பித்தற்குரிய குரவராதல்பற்றி இம்மூவர் கூறப்பட்டனர். "அரச னுவாத்தியாயன் றாய்தந்தை தம் முனிகரில் குரவர்" என்னும் ஆசாரக்கோவையில் ஐங்குரவர் கூறப்பட்டாரால் எனின், இம்மகளிர்க்கு அரசன் பாரியே ஆதலானும் தம்முன் இல்லாமையானும் இங்ஙனம் கூறிற்றென்க.

"முந்தை யெழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையுந் தாயும் வழிபட்டு—வந்த
வொழுக்கம் பெருநெறி சேர்தலிம்மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு" (திரிகடுகம்-56)

என்புழி ஆசானை வழிபட்டு எழுத்தின் வரவுணர்தலும் தந்தையையுந் தாயையும் வழிபட்டு ஒழுக்கம் பெருநெறி சேர்தலும் நல்லாதனார் கூறுதலானும் இதனுண்மை யுணர்க. "ஈன்றாளின் என்ன கடவுளுமில்" (நான்மணி 55) என்பதனாற்றாயினின்று நெறிசிறத்தல் கூறிற்றென்க. சீர்—அறச்சீரும், நூற்சீரும், இல்வாழ்க்கைச் சீருமாம். நாள்—நாளும்: உம்மை செய்யுள் விகாரத்தாற்றொக்கது. நன்று—பெரிதாக; "நன்று பெரிதாகும்" என்பது தொல்காப்பியம். (4)

169. பாரி மகளிரேனப் பாரித்துச் சேரலரி
னேரியரிற் சீர்த்த நெடுமாறன்—காரியந்தே
ரோள்ளமைச்சர்க் கூவி யுரைப்பான் புகுந்தான்ற
னுள்ளமைத்த யாவு மொருங்கு.

(இ-ள்.)—ஒருங்கு பாரித்துரைப்பான் புகுந்தான் என்க. பாரித்துரைத்தல்—பரக்கவைத்துப் பேசுதல். "பயனில பாரித்துரைக்குமுரை (குறள் 193) என்ப. நேரியர்—நேரிமலையை யுடைய சோழர். சேரலர், நேரியர் இருவரினும் மாறன் சீர்த்தல் கூறியது அவரையுந்

தன் வழி எவுந் தலைமை குறித்துக்கொண்டதாம். இதற்கேற்பவே மாறற்கு நெடுமை கூறப்பட்டது. காரியந்தே ரொள்ளமைச்சர்—தன் அரசியல் தேர்ந்த ஒட்பமுடைய மந்திரியர். உள்ளமைத்த யாவுமொருங்கு என்றது—முன் உள்ள பெருந்தேவி பக்கல் வெறுப்பும், கேட்ட பாரிமகளிர் பால் விருப்பும் ஆகிய பலவற்றையுஞ் சேரச் சொல்லப் புகுதல் குறித்தது. (5)

170. எல்லா நலனு மினிது நிறைந்தகுல
நல்லாரை வேட்க நயந்தேனென்—னில்லாள்
குலப்பெரிய ளேனுங் குறையாத கல்வி
நலப்பெரிய ளாகா ணக.

(இ-ள்.)—எல்லா நலனும்—நலன் முழுதும்; மெய்ந்நலன், குணநலன் அறிவு நலன் முதலியன. இனிது நிறைந்த—எவர்க்கு மினிது பயப்பனவாக நிரம்பிய. குலநல்லார்—குலத்தானும் நல்ல மகளிர். வேட்க நயந்தேன்—வதுவை புரிய விரும்பினேன். என் இல்லாள்—என் கோயிற் பெருந்தேவி. குலப்பெரியள்—குலத்தாற் பெருமை பெற்றவள். கல்வி நலப் பெரியள்—கல்வி நலத்தாற் பெருமை பெற்றவள். குறையாத கல்வி என்றது செல்வம்போற் கல்வி கொடுக்கக் குறைதலில்லாமை குறித்தது. நக ஆகாள்—இகழும் வண்ணம் ஆகாதவளாயினள் எ-று. கல்வி நலப் பெரியளாகாமை நகுதற்கு ஆவது என்று குறித்தது: "மேற் பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங் கற்றா ரனைத்திலர் பாடு." (குறள் 409) என்பதனாற் குலப்பெருமை உடம்போ டொழிவதென்றும் கல்விநலப் பெருமை உயிரொடு தொடர்வதென்றும் கருதுதல் காண்க. "விழுத்திணைத் தோன்றாதவனு மெழுத்தினை, யொன்று முணராத வேழையும்" (திரிகடுகம்-92) என்பதனால் உயர்குடிப்பிறப்பும் கல்வியோடு வேண்டப்படுதலிற் குலப்பெருமை உடன்பட்டனன். குலநலன் என்னாது கல்வி நலங் கூறியது இவற்றுள்ளே தாழ்வும் உயர்வும் தோன்றற்கு. நக ஆகாள் என்னையும் உலகம் நகுமாறு ஆகாள் எனினுமமையும்; "குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்" என்பது நான்மணி. (6)

171. உள்ள மிருள்பட் டுடல மொளிகிளர்பெண்
ணெள்ளும் படிய ளிவண்விழையேன்—கோள்குடியிற்
கல்லாது மூத்தாரைக் கைவிட்டுக் கற்றிளைய
நல்லாரைப் பாராட்டு நாடு.

(இ-ள்.)—கல்வி அறிவின்மையால் மணத்திலிருளுண்டாகி. உடலம் ஒளிகிளர் பெண்—வனப்பால் உடம்பில் ஒளி விளங்கும் பெண்.

என்னும்படியள்—இகழுந் தன்மையள்; இதனால் இவ்வுலகில் அவளை விரும்பேன். எ-று. எள்ளும்படியளென்றது "தழற்றண்ணென் றேனா ளறிவில்லா ளாயி, னிழற்கண் முயிறாய் விடும்" (சிறுபஞ்ச மூலம்) என்பது கருதி. கொள்குடியில்—பெண் கொள்ளுங் குலத்தின் கண். கற்றிளைய—கற்ற இளைய என்பது திரிந்தது. நாடு—உலகம்: "நாட்டைப்படையென்றயன் முதலாத்தந்த" (திவ்ய ப்ரபந்தம்) என்ப. இங்ஙனம் செய்தல் இவ்வுலகியல்பு என்று மேல் நீதி காட்டியவாறும். ஒரு குடியிற் கல்லாது மூத்தானைக் கைவிடப கற்றாற், னிளமை பாராட்டுமுலகு" என்பது விளம்பிநாகனார் நான்மணி. கல்லாது மூத்தவர் நல்லாராகாமைக்குக் கற்றிளைய நல்லார் என்றதாம். இதனால் இவன் உள்ளக் குறிப்பு உணர வைத்தவாறும்: தன் பெருந்தேவி கல்லாது மூத்தவ ளாதலும் பாரி மகளிர் கற்றலோடு இளைய நல்லா ராதலும் நினைந்தது புலப்படுத்தல் காண்க. (7)

172. அறிவுபாழ் பட்ட வரும்பாவை யன்னார்ச்
செறிவுதா னின்பஞ் செயாதா—னறியமண
மில்லா மலரி னெழின்மானுங் கல்வியிலா
நல்லார் வனப்பென்று னக்கு.

(இ-ள்.)—அரிய பாவை யன்னார் அறிவு பாழ்பட்ட செறிவு இன்பஞ் செய்யாது என்க. "தான் என்பது அதுவன்றி இது ஒன்று என்பது படநின்றதொரிடைச் சொல்" என்பர் பேராசிரியர் (திருக் கோவை 382) மேற்பாட்டில் "எள்ளும் படியள்" என்பதன்றி இவள் செறிவு இன்பஞ் செய்யாமையும் உள்ளதென்று கூறியதாகக் கொள்க அறிவு பாழ்பட்ட செறிவாதலின் அருமையிற் பெண்வடிவமைய செய்த மரப் பாவையைச் சேர்வதுபோலும் என்று கருதிக் கூறினான் செறிவு—புணர்ச்சி. தலைவற்குந் தலைவிக்கும் ஒப்புமை வகை இவை யென்று கூறிய "பிறப்பே குடிமை" என்னுஞ் சூத்திரத்துள் (மெய்ப் பாட்.) தொல்காப்பியனார் உணர்வுங் கூறுதலான் மகளிர் உணர்வில ராயின் ஒத்த இன்பத்தவரின்மை யுணர்க: தம்மைத் துய்ப்பாரைத் தாம் துய்ப்பதே இன்பமென்பது குறித்து அஃதில்லாமைக்கு மரப் பாவையை உவமித்தது: தன்னினைவு புலப்பட வைத்து உலகோர் நினைவும் இங்ஙனமே யாமென்று காட்டுவது மேல், அழகு கண்டு நெருங்கி அறிவின்மை கண்டு அகலுவர் என்பது குறித்து மணமில்லா மலரெழில் கூறிற்று. கண் சென்று பற்றினும் உட்கொள்ளுதற் கேற்றது ஒன்றுமின்மை காட்டியபடி. என்றான் நக்கு—இகழ்ச்சி நகை செய்து கூறினான் எ-று. "உருவோ டறிவுடையா ளில்வாழ்க்கைப

பெண்ணெனப்பாள்'' என்றார் பிறரும் (திரிகடுகம் 53). "நாற்றமிலாத மலரி னழகின்னா'' (இன்னா-8.) என்றார் கபிலரும். (8)

173. இமிழ்வா ரிதிசூ ழிரும்புவியிற் கல்வித்
தமிழ்நா டுரிய தலைமை—யமிழ்தாரு
மிந்திரனும் வேட்க வியைந்து முணர்வோவ்வாப்
பைந்தொடியைச் சேர்த்ததென்றீப் பால்.

(இ-ள்.)—இமிழ் வாரிதி—முழங்கு கடல். இரும்புவி—பெரிய பூமி. இனியாத உவர்க்கடல் சூழ்ந்த வுலகில் இனியது கல்வி என்பது குறிப்பு. கல்வித்தமிழ் நாடு—தமிழ்க்கல்வியையுடைய செந்தமிழ்நாடு. பெரியவுலகிற் றமிழ்நாடு உயர்ந்தது. அதன்கட் டமிழ்க் கல்வியையுடையது உயர்ந்தது என்று கருதக் கூறிற்று. "வீயாத்தமிழுடையான், பல்வேற் கதிர்த்தானைப் பாண்டியன் (யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்) என்பதனு லிந்நாட்டின் தமிழ்ச் சிறப்பு நன்குணரலாகும். செந்தமிழ் நாடாதலுங் கண்டு கொள்க. உரிய தலைமை—உரிமையாகெய்திய தலைமை. கல்வித் தமிழாராது அமிழ்தாரும் இந்திரன் என்க. உம்மை உயர்வு சிறப்பு. ஆரும்—உண்ணும். அவனும் விரும்பாநிற்க அவனுக்குக்கிடையாது எனக்கு இயைவதாகியும் உணர்வு ஒவ்வாப் பைந்தொடியை—உணர்வாலொப்புமை கொள்ளாது கோலஞ் செய்பவளை. என் தீப்பால் சேர்த்தது—என் தீவினை கூட்டிற்று. நற்பாலாற்றலைமையியைந்தும் தீப்பால் இங்ஙனஞ் சேர்த்தது எ-று. பால்—விதி. அமிழ்தினுந் தமிழ்க் கல்வி இனியதென்று குறித்து அமிழ்தாரும் இந்திரன் வேட்டல் கூறிற்று. வாயாற் பருக நாவளவே இனிப்பது அமிழ்து. செவியாற் பருகச் சிந்தையுள்ளே நின்றளவிலின்பம் பயப்பது தமிழ்க் கல்வி எ-று. "பாழொக்கும் பண்புடையா ளில்லாமனை'' (நான்மணி) என்பதுபற்றி ஒத்த பண்புடையாளில்லாமையாற் றன்றலைமை பாழாதல் நினைந்து கூறினன் என்க. தனக்குப் பாழ் கற்றறிவில்லா வுடம்பு (ஷை) என்பதுங் காண்க. காளிதாசரும் அரசன் இன்பம் அவன் ஆளும் உலகின்பாலுண்டாகாமற் றன்கோயிலுள் உலகமுழுதுடைய பெருந்தேவி பாலுண்டாதல் கூறினர் (9)

174. தந்தை நினைத்த தகாவதுவைக் கியானியைதன்
முந்தை முறையான் முடிந்ததரோ—சிந்தைக்
குன்றயா விழுச்செல்வக் கோம்பன்னார் வேட்பி
னிறைவாமென் கோயி னிலை.

(இ-ள்.)—தாய்க்குந் தான் நினையாது தந்தை நினைத்தலாற் றகாவதுவையாயிற்று. வதுவை—கலியாணம். முந்தை முறையால்—முன்னை

பூதால். முறை, நியதி, ஊழ் என்பன ஒரு பொருளவாம். யான் இயைதல் முடிந்ததென்க. குறையாத சிந்தைக் கண்ணேயுள்ள விழுச் செல்வம் கல்வி. கொம்பன்னார்—கொடியைத் தாங்கும் பற்றுக்கோடு போலக் குடிதாங்க வல்லார்; இயற்கை நலம்பற்றி வஞ்சிக்கொம்பன்னாரெனினும் அமையும். என் கோயில் நிலை—என் அரசிற்குரிய இல்லற நிலை. நிறைவாம்—நிரம்பும். (10)

175. உற்றார் செவிக்கண் ணுரையாத தோன்றில்லை
கற்றா ரிசைக்குங் கவின்பாரி—பெற்றாரை
யான்மணக்க வுள்ள மியைந்தே னெனமொழிவான்
றேன்மணக்குந் தார்ச்செழியன் றேர்ந்து.

(இ-ள்.)—அகத்திணை வேட்கை பலர் அறியக்கூறுதல் ஆகாமை தோன்ற 'உற்றார் செவிக்கண்' எனப்பட்டது. கற்றவர் புகழும் கவினையுடைய பாரி பெற்ற மகளிரை என்க. கவின்—மகளிர்க்கு அடை. தன் உள்ளம் இயைதலே மகளிர் மணத்தற்கு உள்ளமியையும் ஏதுவாமென்னுங் கருத்தினாற் கூறினானென்க. 'தேன் மணக்குந் தார்' என்றது, "மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர், நெடுங்கொடியுழிஞைப் பவரொடு மிடைந்து, செறியத்தொடுத்த தேம்பாய் கண்ணி' (புறம். 76) என்பதுபற்றி. தேர்ந்து மொழிவான் என்க. தேர்தல்—பாரிக்குச் சொல்லு மொழி தேர்தல். (11)

176. வினையறிந்தோ தன்பர் விடுத்தேன் னுளந்தின்
னினைவறியப் பாரிக்கு நேர்ந்தேன்—மனைமகளி
ராக வவனல் லருமை மகளிரைத்தந்
தீக வெனவுரைக்க வேய்ந்து.

(இ-ள்.)—வினையறிந்தோ தன்பர்—தாம் மேற்கொள்ளும் அரசன் காரியத்தை அறிந்து எடுத்துச் சொல்லும் அன்புடைத் தூதர். 'அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க் கின்றி யமையாத மூன்று' (குறள். 682) என்பதனால் அறிதலும் ஓதலும் அன்பும் இன்றியமையாமைபற்றிக் கூறப்பட்டன. என் உளம் தின் நினைவு—உளம் என்னைத் தின்னும் நினைவு காமம் எ-று. "தனியேயிருந்து நினைத்தக்கா லென்னைத், தினிய விருந்ததென் னெஞ்சு." (குறள்: 1296) என்ப. பாரிக்கு அறிய நேர்ந்து—பாரிக்கு உடன்பட அறிவித்து. என் மனை மகளிர்—என் இல்லற மகளிர். 'வடமீன் கற்பின் மனையுறை மகளிர்' என்ப (சிலப்—இந்திர விழவு). ஆக என்றான்—தன் மனையின் பெருமை நோக்கி; பிறர்க்கு அருமையாம் எ-று. அம்மனைக்குத் தக்க மாண்பு

க்ருதி நல்லருமை மகளிர் என்றான். குண நன்மையுங் கல்வியருமையும் ஈண்டுக்கொள்க. தந்திக—தருக. என ஏய்ந்து உரைக்க என்க. நேர்தல் உடன்பாட்டில் வந்தது. (12)

177. வேளிர் குடிக்குமு வேந்தர் குடிக்குநெடு
நாளி னிகழு நறுமணத்தை—நீளவிசைத்
தென்விழைவு தீர்ப்பிக்க வென்றான் வழுதியர்கோன்
றன்மகிழ்மெய்ப் பாடு தர.

(இ-ள்.)—அரசுரிமையுடைய ஒளியராகிய வேளாளர் (பட்டினப்பாலையுரை) பாண்டி நாட்டாராதலானும் (தொல்-எச்ச—சூத் 4.) "பாண்டிநாட்டுக் காவிதிப்பட்ட மெய்திஞேரும் குறுமுடி குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளர்" என நச்சினார்க்கினியர் (தொல். அகம் 30) கூறுதலானும் பாண்டியர் குடிக்கும் வேள்குடிக்கும் மணம் உண்டென்பது உணரலாம். ஒளிப்பற்று*—பாண்டிநாட்டு நிலப்பகுதியாகும். பதிற்றுப்பத்துள் உதியஞ்சேரல், (பதிகம் 2) சேரலாதன், செல்வக்கடுங்கோ, (8-ஷை) குட்டுவ னிரும்பொறை (9-ஷை) என்னும் சேரர்கள் வேள்குடியின் மணத்தல் காண்க. "உருவப் பஃறேரிளஞ் சேட் சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும் அவன்மகனுகிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும்" (நச்சி-தொல். அக-30) கூறுதலாற் சோழர் குடிக்கும் வேளிர்குடிக்கும் மணமுண்மை யுணரலாம். இவற்றான் மூவேந்தர் குடியும் கூறினன் என்க. நெடுநாளின்—தொல்லை நாடொட்டு. நறுமணம்—நல்ல கலியாணம். முடியுடைப் பேரரசர் பிறத்தற்குக் காரணமாயினபடி குறித்தது. நீள இசைத்து—முன்னை யரசர் தொட்டு வழிவழியாய் நிகழ்ந்தவாறு நெடிது புகழ்ந்து பேசி. வழுதியர் கோன்—பாண்டியரிற் கோவுரிமை பூண்டவன். தன் மகிழ் மெய்ப்பாடுதர—தன்னுள்ளத்து உவகை தன் சொல்லினும் மெய்யினுமுண்டாம் இங்கிதம் காட்டாநிற்க எ-று. "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென், றல்லனித்த வுவகை நான்கே" (தொல். மெய்ப்-11) என்பதனுல் புணர்வு நினைந்து உவகை உண்டாயிற்று. "கண்ணினுஞ் செவியினும் திண்ணிதி னுணரும், உணர்வுடை மாந்தர்க்கல்லது தெரியி, னன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்தே" (ஷை 27) என்பதனுல் இம்மெய்ப்பாடு இவன் சொல்லினும் மெய்யினுந் தோன்ற நின்று உணர்வுடை மாந்தர்க்கு உணர்த

* புதுக்கோட்டை யிராச்சிய சாசனங்கள் நெ. 145, "சிறுவாயில் நாட்டு ஒளிப்பற்று வாளுவமங்கலம்" என வந்தது காண்க.

லாதல் அறியலாம். உள்ளக்களித்தல் உண்டென்பது "உள்ளக் களித்தலும்...காமத்திற் குண்டு" (குறள். 1281) என்பதனுன் அறிக. (13)

178. வேந்த னகத்தே விளைந்த வவாப்பெருக்கி
னய்ந்த வமைச்ச ரவணியையத்—தேர்ந்தவினைத்
தூதரையே யுய்த்தான் சுடர்ச்செழியன் பாரிகுல
மாதரையே பேச மணம்.

(இ-ள்.)—அகத்தே விளைந்த அவாப்பெருக்கு—காமவெள்ளம்; ஆய்ந்த அமைச்சராயிருந்தும் அவர் இயைதற்கு இவன் அவாப் பெருக்குக் காரணம் என்று குறித்தவாறு. அவாப் பெருக்கில் அரசே மூழ்குமென்று ஆராய்ந்த அமைச்சர் எனினும் பொருந்தும். தேர்ந்த வினைத் தூதர்—வினை தேர்ந்த தூதர். ஏகாரம்—முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம். சுடர்ச் செழியன்—இருசுடரினுட் டண்சுடர்வழியிற் றோன்றிய பாண்டியன். குலமாதர்—நற்குலத்தை யுண்டுபண்ணுதற்குரிய மகளிர். மணம் பேச வுய்த்தான் என்க. "காமக்கூட்டந் தனிமையிற் பொலிதலிற்றாமே தூதுவராதலு முரித்தே" (தொல். கள. 28) என்பது கந்தருவத்திற்குச் சிறந்தது. ஆசுரம், இராக்கதம், பைசாசம் ஒழிந்தவற்றிற்குப் பிறர் தூதுவராவரென்க. "கொற்றவன்றன் றிருமுகத்தைக் கொணர்ந்த தூதா" (அரங்கக்கலம்பகம்) என வருதலான் உணர்க. அமைச்சர் 'காம முதிரி னுயிர்க்கின்னு' (இன்னு.) என்று இயைந்தாரெனினும் ஆம். (14)

179. தூதர் பறநாடு துன்னித் தொழுபறம்பென்
றோது புகழ்வெற்பி னூங்கெய்தித்—தீதுபுகா
வேள்கோயில் வாயில் விரைந்து தமிழ்த்தென்ன
னுள்கோமான் றூதென்று ராய்ந்து.

(இ-ள்.)—தொழு பறம்பென்றோது புகழ்வெற்பு—தொழத்தக்க பறம்பு என்று ஓதப்பட்ட புகழ் வடிவாகிய மலை. "பெரும்பெயர்ப் பறம்பே" (புறம்-13) என்புழி உரைகாரர் பெரிய புகழையுடைய பறம்பே எனக் கூறுதல் காண்க. தொழத்தக்கதாதல், "நீர்வார் கண்ணேந் தொழுது நிற்பழிச்சிச் சேறும், வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே" (ஷை ஷை) எனக் கபிலர் பாடுதலானறிக. வெற்பின் ஊங்கு—மலையின் மேல். தீதுபுகாக் கோயில் வாயில் என்க. தமிழ்த்தென்னன் என்றது அவன் கல்வி வளர்த்தற் சிறப்புக் கூறியது. ஆள் கோமான் என்றது அவன் பேரரசுத் தலைமை குறித்தது. தொழுபறம்பு, புகழ் வெற்பு, தீதுபுகாக் கோயில் என்பன தூதுபுக்கார் கூறும் அறனில்லா

மணத்திற்குப் பொருந்தா இடமென்று குறித்து நின்றன. அறக்கிழத்தியரே நிறைதலாற் றொழு பறம்பு எனினும் அமையும். பழிச்சு மாறுதல் குறிக்கப் புகழ் வெற்பு எனப்பட்டது. நீதுபுகா என்றது புக்கதூதர் வினைத் தீது நோக்கி. பாரீச்வரர் இருத்தலாற்றொழு பறம்பு என்றலும் ஆம். (15)

180. பாண்டியர்தந் தூதென்னப் பாரி வரவருள
வீண்டி வழியுரைப்பா ரேர்கோளச்சேன்—றண்டறமே
வீரம் புனைந்தன்ன வேள்வேந்தைக் காண்முறைகண்
டோர வுரைப்பா ருவை.

(இ-ள்.)—வழி உரைப்பார்—அரசன் கூறியதை அநுவதிக்குந் தூதுவர். "வழியுரைப்பான்" (குறள். 688) எனத் தூதுவனைக் கூறுவர். ஏர் கொளச்சென்று—என்றது மெய்த்தோற்றம் பொலிவுகொள்ளப் போய் எ-று. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன், செறிவுடையான் செல்க வினைக்கு" (குறள். 684) என்பதனுல் இவர்க்கு உருப்பொலிவும் வேண்டுதல் காண்க. அறமே வீரம் புனைந்தன்ன வேள்வேந்தை—அறக்கடவுளே வீரமாகிய அணிகலனை அணிந்தாலன்ன வேளிர் அரசனை. "மன்னுயிர் காக்குமன்புடை வேந்தற்கு மறத்துறையினுமறமே நிகழும்" என நச்சினார்க்கினியர் 'வேற்றுப்புலக் களவின் ஆதந்தோம்பல்' (தொல். புறத். சூ. 2) என்புழிக்கூறுதல் காண்க. ஆண்டுக் காண்முறை கண்டு என்க. மகட்பேசப் புகுவார் காணுமுறைப்படி கண்டு எ-று. ஓர—ஓர்ந்து கொள்ள. (16)

181. அமிழ்துடைய தேவ ரழுக்காறு கோளத்
தமிழுடைய ஞய தனிவேந்—திமிழ்திரைசூழ்
மண்பேசு கீர்த்தி வளர்மாற னின்னகத்துப்
பெண்பேச விட்டானெம் பேறு.

(இ-ள்.)—அமிழ்துடைய தேவர்—அமிழ்தத்தைத் தமக்கு உணவாக உடைய தேவர். அழுக்காறு கொள்ள என்றது வாயாற் சுவையுணர்தற்குரிய அமிழ்தினும் செவியாற் சுவை யுணர்தற்குரிய தமிழ் உயர்ந்ததென்பது குறித்தது. "செவியிற் சுவை யுணரா வாயுணர்வின் மாக்கள்" என்ப (குறள்—420). உடற்குறுதியாகிய அமிழ்தினும் உயிர்க்குறுதியுடையதாகிய தமிழுடைமையால் ஒப்புமையின்மை கருதித் தனிவேந்து என்றதாம். மண்சூழ் இமிழ் திரையினும் மண்பேசு கீர்த்தி வளர்தல் குறித்து வளர்மாறன் எ-று. நின்னகத்துப் பெண்பேச எம்மை உய்த்தது எங்கள் பாக்கியப் பயன் எ-று. தூதர் தம்பேறு கூறுமுகத்தாற் பாரி பேறு நினைய வைத்த

வாறு காண்க. இது செங்கோலரசற்கு எடுத்த ஏழுவகைப் பேற்றுட் புகழ்ப்பேறு கூறியது. சிறப்பு நோக்கிக் கல்விப் புகழ் கூறிற்று. இனித் தலைவற்குப் பெருமைதரற்கு அமைந்தனவெனக் கூறிய எட்டுக் குணங்களுள் 'வரம்பில் கல்வி' கூறிற்றெனினுமமையும். அவ்வெண் குணங்கள் "இளமையும் வனப்பு மில்லொடு வரவும் வளமையுந் தறுகணும் வரம்பில் கல்வியும் தேசத்தமைதியு மாசில் சூழ்ச்சியோ டெண்வகை நிறைந்த நன்மகற் கல்லது மகட்கொடை நேரார் மதியோர்" எனவரும் பெருங்கதை (சாங்கியத்தாயுரை 89-93)யாலுணர்க. "பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு, நிலக்கிழமை மீக்கூற்றங் கல்வி நோயின்மை, யிலக்கணத்தா லிவ்வெட்டும் எய்துப" எனப் * பெருவாயின் முள்ளியார் கூறியவற்றையும் இயைய நோக்கிக்கொள்க.

182. அறிவார் தெரிவையர்வேட் டாய்ந்த மதியோ
னெறியான் மணக்க நினைந்து—பிறியா
விசைவளர்ந்த நின்மகளி ரின்னியல்பு கேட்டு
நசைவளர்ந்தான் கோற்கையர்கோ னன்கு.

(இ-ள்.)—ஆய்ந்த மதியோனுதலாற் றனக்கொத்த அறிவு நிறைந்த மகளிரை வேட்டல் கூறிற்று. நெறியால்—அறநெறியால். நெறியால் மணக்க நினைந்து என்றது தலைமையால் மறத்தாலுங் கொள்ள வல்லன் என்பது உள்வைத்ததாகும்: இவ்வாறு பொருள் கொள்ள வைப்பது வைப்பு, நயன், அளவை, புகுவாயில் என்பனவற்றுள் வைப்பு எனப்படும். "பெயரினும் பிழம்பினும் பொருளினுங் குறிப்பினுஞ் செப்புவதொன் றினை வைப்பென வியல்பே" என்பது நீலகேசித் தெருட்டுச் சமயதிவாகர விருத்தி (தருமவுரை). தொல்காப்பியனார் "நோக்கு" (செய். 1) என்று ஆள்வதில் இவை யடங்கும். முப்பாலை "வள்ளுவனார் வைப்பு என்பதும்" இக்கருத்தேபற்றி யென்று துணிக; "முப்பாலுமுண்டே மூலைப்பா லினிநுகரே, மப்பாலுக்கப்பாலு மாயினே மெப்பாலு, முள்ள டியுணர்ந்தே மோதிக் குறைதீர்ந் தேம், வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து" என்பது பழம்பாட்டு. மேல் மகட்பாற் காஞ்சிபற்றிப் போர் நிகழ்தலும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. இசை பிறியாமை மட்டுமன்று வளர்தலுஞ் செய்தல் குறித்தது. இன் இயல்பு—இனிய மென்மை. நசை—ஆசை. நன்கு வளரலானான் என்க. இது மதிப்பேறு கூறிற்று. 'கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்' என்றலாற் கொற்கையர்கோன் என வந்தது (18)

* ஆசாரக்கோவை. 2

183. கறையொன்றெய் தாமற்றன் கைகுறைத்துக் காத்துப்
பொறையொன்று நன்குடியிற் போரேறே—றிறையொன்று
வேள்வேந்தே நின்னிளையர் மென்மை செவிநிறைப்ப
நீள்வே ணவாவுற்றா னோர்.

(இ-ள்)—சிறு மாசும் எய்தாமல். ஒன்றும் என்னும் உம்மை செய்யுள் விகாரத்தாற்றொக்கது. பாண்டியன், கீரந்தை மனைவி புதவக்கதவம் புடைத்துத் தன் கை குறைத்துச் செங்கோன் முறைகாத்த செய்தியைச் சிலப்பதிகாரக் கட்டுரைக் காதையிற் கண்டு கொள்க. கை குறைத்துக் கறை யொன்றெய்தாமற் காத்து எ-று. இது "கோன் மேற்கொண்டுங் குற்றமகற்றிய" (கம்பநாடர்—அயோத்தி) சிறப்பாற் பொறையாயிற்று. நன்குடி-"விழுக்குடி" (சிலப். கட்டுரை). போரேறு-போரிற் சிங்கம் போல்வான். இறை யொன்று வேள்—இறைமை ஒன்றிய வேள்; அப்பாண்டியற்கு இறையிறுத்தலொன்றிய வேள் எனினும் இவ்வுழிக்கமையும். நின் இளையர்—நின் இளமகளிர்: "நன் மென் சீறடிக்கல்லா விளையர்" (சிறுபாண்) என்புழி இளையர் இளைய மகளிராதல் காண்க. மென்மை—சாயல். செவிநிறைப்ப—மென்மை பற்றிய கேள்வி செவிகளை நிறைத்தலால். நேர் நீள் வேணவாவுற்றான்—தன் இளமைக்கு நேராக நீண்ட வேட்கையொடு கூடிய அவாவை அடைந்தான்; செய்யுளாதலின் வேட்கை அவா வேணவா எனலாயிற்று. (தொல்-எழுத். உயிர்மயங். 86). இளையர் இளையரை வேட்டல் இயல்பென்று குறித்தவாறு. இவன் இளஞ்செழியன் ஆதலும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. (சிலப்-உரைபெறு கட்டுரை—அடியார்க்கு நல்லாருரை) இளமையாலிவரை விழைந்தானாயினும் குடிப்பிறப்பிற் றன்கோன்முறை யொழுக்கத்தாற் பொறை குன்றான் எனக் காட்டியவாறும். இதனை "நன்னுதன் மடந்தையர், மடங்கெழு நோக்கின் மதமுகந் திறப்புண், டிடங்கழி நெஞ்சத்திளமையானை, கல்விப் பாகன் கையகப் படாஅ தொல்கா வுள்ளத்தோடு மாயினு, மொழுக்கொடு புணர்ந்தவிவ் விழுக்குடிப் பிறந்தோர்க், கிழுக்கந் தாராது" என்ற இளங்கோவடிகள் கூற்றொடு (கட்டுரைக்காதை) ஈண்டைக் கேற்ப நோக்கிக்கொள்க. வேணவா வுறுதற்கு நின் இளையர் மென்மைக் குணம் காரணமென்னுமுகத்தான் இவன் குற்றமாகாதென்று குறித்ததாம். ஒன்றுதல்—பொருந்துதல். காத்து ஒன்று நன்குடி என்க. பொறையைக் குடிக்கேற்றி இவனைப் போரேறு என்று கூறியது மணம் மறுத்தபோது போரெழுதல் குறித்து; இங்ஙனம் வருவது குறித்துக் கவி ஏற்ற சொற் பெய்துகொள்ளல் மரபேயாமென்பது "அரிமா னேந்திய வமளிமிசை யிருந்தனன், திருவீழ் மார்பிற்

றென்னவர் கோவே'' (சிலப். வழக்குரை) என்புழி இளங்கோவடிகள் திருவிரும்பப்பட்ட மார்பு எனவும், அமையம் நோக்கித் திருக்கழிகின்ற மார்பு எனவும் பொருள் கொள்ள வைத்தவாறு உய்த்துணர்க. இது பொறைப்பேறு கூறிற்று. இஃது எண்குணங்களுள் இல்லொடு வரவுந் தறுகணுங் கூறிற் றெனினுமமையும். (19)

184. தோக்கவுயி ரன்பிற் சுடர்வழுதி யன்புறலான்
மிக்க குலவேளிர் வேந்தேநின்—மக்க
ளுலகாளுஞ் செல்வ மோருங்காள வந்த
நலகால மீதேன்பே நாம்.

(இ-ள்.)—உயிர்கள் ஒரு தொகையாகச் செய்யும் அன்பினுற் சுடர்கின்ற வழுதி. சுடர்வழுதி வினைத்தொகை: "சுடரும் பொன்'' எனவரும் (குறள் 267). அன்புறலால் மிக்கநின் மக்களென்க. மக்கள்—ஆண்பெண் பொதுப்பெயர்: "மக்க ளுதலிய வகனைந்திணையும்" (தொல். அகத். 54) என்ப. உலகாளுஞ் செல்வம்—உலக முழுதுடைய ராதற் சிறப்பு. ஒருங்காளல்—அவ்வுலகுடைய பாண்டியனையுஞ் சேர ஆளுதல். நலகாலம்—பாக்கிய காலம். உயிர் அன்பு செய்யும் வழுதியன்புறல் உலகாளுஞ் செல்வமொருங்காளுதற்கு ஏது. இஃது அற்புப்பேறு கூறிற்று. தொக்கவுயி ரன்பிற் சுடர்வழுதி யென்றலாற் றேசத்தமைதி கூறிற் றெனினுமமையும். (20)

185. எல்லா நலனு மியைமடவார் வேட்டறத்தா
னல்லா னிளஞ்செழிய னுடினன்காண்—பல்லாரு
நின்மகளிர் கல்வி நிரம்பினு ரேன்றுசோலத்
தன்மலம்மைவத் தான்றகைகமை தந்து''.

(இ-ள்.)—நலம் எல்லாம் இடைந்தும் மடப்பம் குறையாதவரை விரும்பி. அறவொழுக்கத்தால் நல்லவன் என்று சிறந்தவன்: "மறப் போர்ப் பாண்டிய ரறத்திற்காக்குங் கொற்கையம் பெருந்துறை முத்தி னன்ன'' (அகம் 27) என்பதனுல் அறச்சிறப்புணர்க; அறத்திற் காத்தலாலிவர் துறைமுகத்து முத்துப்படுதல் குறித்தது. அத்தகை மடவாரைத் தேடினன். காண்பல்லாரும்—கின்னைக்கண்ட பலரும் எ-று. கல்வி நிரம்பினுர் இம்மகளிரன்றிப் பிறரல்லர் என்பது குறித்ததாம். இஃது அறப்பேறு கூறிற்று. இளமையிலே அரசு பூண்டவனுதலின் இளஞ்செழியன் எ-று. இதுவே பெயரென்பதும் பொருந்தும்; இளமை குன்றுத நிலைமைபற்றி இங்ஙனம் வழங்கப்பெற்றுன் என்றுங் கொள்க.

இஃது இளமை கூறிற்றெனினுமமையும். நலன் எல்லாம் இயைதல் கூறியது, "சடனென்ப நல்லவை யெல்லாம்" (குறள். 981) என்பது பற்றி. (21)

186. மேவு மறங்கல்வி வீரம் புரந்துமலர்த்
தேவி பிரியாச் செழியர்கோன்—மாவிழா
மண்கொள்ள யாரு மகிழ்கொள்ள நின்னகத்துப்
பெண்கொள்ள வேட்டான் பெரிது.

(இ-ள்.)—விரும்பும் அறமும், கல்வியும், வீரமும் காத்தலான் மலர்த்தேவியாகிய திருமகள் என்றும் பிரியாத செழியர்கோமான். மாவிழா—பெரிய விழா; மண்கொள்ள—உலகு பெருவிழாக் கொள்ள எ-று. யாரு மகிழ்கொள்ள—இவனை வேட்டிருக்கும் பிறமகளிரும் மகிழ்கொள்ள என்க: அவரும் மகிழ்கொள்ளல் குறித்து இம்மகளிருடைய பல்வகைத் தலைமையும் கருத வைத்ததாம். பெரிது வேட்டான் எ-று. நின்னகத்துப் பெண் கொள்ளல்—நின் சிறப்பு நோக்கிப் பல பேரரசரும் வேட்குந் தகைமையர், அவருளிவன் பெரிது வேட்டான் எ-று. உலகுடைப் பேரரசன் கல்யாணம் ஆதலாற் பெருவிழா மண்கொள்ளுதல் கூறிற்று. "அறத்தினூங் காக்கமு மில்லை" (குறள்) என்பதனாற் திருமகள் பிரியாமைக்கு அறமும், "இன்னாதே கல்லார்கட் பட்ட திரு" (ஷை) என்பதனாற் திரு வருந்தாமைக்குக் கல்வியும், கிடைத்த அரசுத்திருவை இழவாமைக்கு வீரமும் புரத்தல் கருதியது. இது பொருட்பேறு கூறிற்று. இது வளமை கூறிற்று எனினுமாம். "திருக்குழா, மொண்செய்யாள் பார்த்திறி னுண்டாகு மற்றவள், துன்புறுவ ளாயிற் கெடும்" என்றார் நான்மணியினும் (65).

187. இகலு மரச ரிளமடவார் காதன்
மிகலின் மடல்விழையும் வேந்தன்—மகளிர்
குணங்கருதி நின்னற் குலங்கருதி நின்பான்
மணங்கருதி னானென்றார் மற்று.

(இ-ள்.)—தன்னோடிகலுதற்குரிய சேரர், சோழரிவர் இளமங்கையர் இவன்பாற் காதல் மிகக் கொள்ளலாற்றமக்கு ஒவ்வாத மடலூர்தலை விரும்பும் பாண்டியராசன்: "எத்திணை மருங்கினு மகடூஉ மடன்மேற் பொற்புடை நெறிமை யின்மை யான" (தொல். அகத்-35) என்பதனால் மடல் மகளிர்க்கொவ்வாதாதல் காண்க. இதனால் ஊர்தல் கூறாது விழைதலளவே கூறிற்று. நச்சினார்க்கினியர் மடவாள் "ஏறுவல்" எனக்கூறிய துணையும் உடன்படுவர். (தொல். ஷை. ஷை) மடல் விழைதற்கு இவன் வனப்பாற் காதல் மிகுதல் ஏது என்று காட்டியது. இகலு

மரசரிளமடவார் என்றதனால் இகலா அரசர் மகளிர் நிலை கூற வேண்டாம் எ-று. இத்தகை வனப்பினன் மணங்கருதல் கூறுமுகத்தான் மகளிர் குணத்தையும் பாரிகுலத்தையும் உயர்த்தியவாறு காண்க. குணங்கூறியது "குணநலன் சான்றோர் நலனே பிறநலம், மெய்ந்நலத் துள்ளதூஉ மன்று" (குறள். 982) என்பதுபற்றி. நின்பான் மணங்கருதினான்—நீ யவன்பாற் கருதவேண்டிய மணத்தை யவன் நின்கட் கருதினான் எ-று. மற்று வினைமாற்றின்கண் வந்தது. இஃது இன்பப் பேறு கூறிற்று. இவ்வேழு பாடல்களினுங்கூறிய இவ்வேழு பேறுஞ் செங்கோலரசர்க் கின்றியமையாமை சேந்தன் திவாகரத்து— "அறம்பொரு ளின்ப மன்பு பொறுமை, திறம்பாப் புகழ்மதி யென்றிவை யேழும், பெருஞ்செங் கோலி னெழுவகைப் பேறே" (பல்பொருட் கூட்டத் தொருபெயர்த்தொகுதி) எனவருஞ் சூத்திரங்கொண் டுணர்ந்து கொள்க. இது தலைவற்கு வேண்டிய எண் குணங்களுள் வைத்து 'வனப்புக்' கூறியதெனினுமமையும். இளமடவார் மடல் விழைதலான் வனப்பின் சிறப்புணரலாகும். (23)

188. திங்கட் குலத்திற் செழியன் மணவேட்கை
துங்கக் கலைத்தூதர் சொல்லக்கேட்—டங்கண்
விடையிறுத்தல் செய்வான் வெருவப்புக் கொன்னார்
படையிறுத்த வேளேறு பாத்து.

(இ-ள்.)—மதிமரபிற் பாண்டியன். மணவேட்கை—வேட்கை மணம் என மாறுக. "தடக்கை மொய்ம்பின்"—(பதிற்றுப்பத்து 9-10) என்புழி மொய்ம்பிற்றடக்கை என்றது காண்க. காதல் வதுவை எ-று. அறக்கிழத்தியுள்ள நிலையில் வேட்டலான் இது காதல் வதுவையாதலுணர்க. துங்கத் தூதர்—அறிவும், உருவும் சிறந்த தூதுவர். முன்னையிரண்டுடன் ஆராய்ந்த கல்வியும் வேண்டுதலான் (குறள். 684) கலைத் தூதர் எனப்பட்டது. அங்கண்—அவ்விடத்து. ஒன்னார் படை வெருவப் புக்கு அதனை இறுத்த வேளேறு பகுத்து விடையிறுத்தலைச் செய்வான் எ-று. ஒன்னார் படையுட் புகுதலே அருமை; அது வெருவப் புகுதல் அதனினும் அருமை. அதனினும் அதனை இறுத்தல் அருமை குறித்து வேளிருள் ஏறு என்றது. திங்கட்குலம் என்றது முறையின்றிக் காதல் செய்தவன் குடி என ஈண்டைக்கு ஏற்ப வந்தது. பாத்து என்றது தூதர் கூறியனவற்றிற்கெல்லாம் விடை பகுத்துக் கொண்டு எ-று. பாரி பல்பெண்டிராளனாகாது கற்பரசி யொருத்தியே துணையா யுடைமையான் அவன் ஏறுபோற் பீடு நடையைக் கருதி வேளேறு எனப்பட்டான். "பாவையன்ன நல்லோள் கணவன்"

(பதிற். 7–1) என்பதனான் உண்மையுணர்க: பல் பெண்டிர் கூறுமையு நோக்கிக் கொள்க. படைக்கஞ்சாதவன் விடைக்கஞ்சான் என்பது குறித்து நிற்பது காண்க. (24)

189. தன்னே ரிலாச்செந் தமிழர் பெருவேந்தற்
கென்னே புகுந்த திஃதந்தோ—முன்னே
யுலகறிய நல்லா ளொருத்தி துணைவாய்ந்
திலகுந் திருநா ளிடை.

(இ-ள்.)—தமிழர் பெருவேந்தன்—பிறரிருவரினும் இவனுயர்வு தோன்றச் செந்தமிழர் வேந்தன் எனப்பட்டது. தன்னொப்பில்லாத தமிழ். செந்தமிழர்—செந்தமிழ் நாட்டார். இச்சிறப்பான் இதனைப் "பாடல் சான்ற நன்னாடு" (மதுரைக்காஞ்சி) என மாங்குடி மருதனார் கூறுதல் காண்க. இளஞ்செழியனேனும் பெருவேந்தனல்லனோ எ-று. "புகுந்த திஃதந்தோ" என்புழி ஆய்தம் "அற்றா ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்" (குறள். 226) என்பதிற்போல ஒரு மாத்திரையுடைத்தாய் வந்தது. அந்தோ என்பது இரங்கல் குறித்தது. புகுந்ததாகிய இஃதியாதோ எ-று. இஃது என்றது முன்னைக்கூறிய சிறப்பை அழித்தற்குரிய இத்தீது. எ-று. அந்தோ என்றலான் இது தீதாதலறியலாம்; உலகறிய என்றது தன்னுடன்றிப் பிறநாடுகளும் அறிதல் குறித்தது. நல்லாளொருத்தி—நற்குண நிறைந்த தலைவியொருத்தி. துணைவாய்ந்து—இல்லறத்துணை வாய்க்கப்பெற்று. துணைவாய்ப்புடைமை இவன் செயலன்று என்பது குறிப்பு. நல்லாள் என்றது இவன் அன்பு செய்தற்குரிய நன்மையுடையள் என்பது குறித்தது. துணையென்றது செய்யும் இல்லறத்திற்குத்துணையாயவள் எ-று. "அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கைப் பண்பும் பயனு மது" (குறள். 45) என்புழித் துணைவிமேற்செய்யும் அன்பு பண்பாதலும் இவர்க்கு அறம் பயனாதலும் கண்டுகொள்க. இலகும் திருநாளிடை—விளங்குகின்ற பாக்கிய காலத்திற்கிடையில். திருநாளிடைப்புகுந்த திஃதென்னே என்க. இஃதென்றது திருநாளை நோக்கித் தீக்காலம் எனினும் பொருந்தும். "மனைக்கு விளக்க மடவாள்" என்பது பற்றி இலகுதல் கூறிற்று. உலகறிய என்றது தானும் அறிதல் குறித்தது. முன்னே வாய்ந்து என்க. (25)

190. அறிவோர்முற் றேல்வேள்வி யங்கி கரியா
நெறியான் மணந்தமயி னெஞ்சி—னெறிகோல்
புகக்காண்ப தல்லாற் புகழ்கோன் வதுவை
தகக்காண்ப தீதாங்கோல் சார்ந்து.

(இ-ள்.)—அறிவோர் என்றது அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர் முதலிய இவரை. தொல்வேள்வியங்கி—தொன்று தொட்டு வேட்பித்தற்குரிய தழற் செல்வன். கரியா—சான்றாக. வேள்வி நெறியான் மணந்த—மறைவேள்வி நெறியால்வதுவை செய்யப்பட்ட. ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்னு மணங்கட்கு வேள்வியங்கியில்லாமை குறித்தது. சாயலாலும் மென்னடையாலுங் கூந்தலானும் தன்வரையன்ன கோயிற்கு அழகுசெய்யும் மயில்போன்றதுணை. நெஞ்சின்கண் எறிந்த அம்பு தப்பாது உள்ளே புகும்படி செய்வது இஃதாமன்றித் தனக்கு மணங்காண்பதாமோ எ-று. வதுவை சார்ந்து தகக் காண்பது என்க. விளையாடி விழ விட்டதன்றி உடம்பிற் சிறு பீலியும் ஊறுபடப்பறித்தற்காகாத மயிலினெஞ்சிலே எறிகோல் புகக் காண்பதைக் கூறியதனாற் றுணைவி தலைவனாற் சிறுதுயர் செய்தற்கும் உரியளல்லள் என்பதூஉம் அத்தகையாளுக்கு நெஞ்சிற்கோல்புக எறிந்தாற்போன்ற தெதுவுஞ் செய்தல் எங்ஙிலையினுந்தகா தென்பதூஉம் குறித்தவாறும். "செந்தாளவாகிச் சிவந்து புடையொதுங்கி, வந்தாற் கொலையென்று வைத்தொழியர்—தந்தாண், முளைபோல்வ முல்லை முகைபோல்வ கொள்வர், விளையாடி வீழ்ந்தனவென் றோர்ந்து" (நீலகேசித் தெருட்டு. சமயதிவாகரவிருத்தி மேற்கோள்') இதனாற் சிறுபீலியும் பறித்த லாகாமையுணர்க. புகழ்சோன் என்றது நீவிர் புகழ்ப்பேறு கூறிய கோமான். எ-று. (26)

191. கற்ற புலவர் கழக நடுவணுறப்
பெற்று மிதுதேரியாப் பெற்றியா—துற்றபெருந்
தேவிக்கு நேர்ந்ததேனோ தென்னர் பெருமானோ
ராவிக்கு நேர்யா ரயல்.

(இ-ள்.)—கற்றதனாற் புலவரென்று சிறந்தவா அவை; "புல்லாப் புன்கோட்டிப்புலவரையும்" (நாலடி. 255) "நாட்டாடஞ் சொல்லி நயமுணர்வார்போற் செறிக்குந் தீப்புலவரையும்" (நாலடி. 312.) விலக்கற்குக் கற்றபுலவர் எனப்பட்டது. நடுவணுறப்பெறுதல்—புலவர் சூழத் தென்னர்பெருமானோர் இருக்கப்பெறுதல். உறப்பெறுதல் பேறு என்று குறித்தது: "தேவரனையர் புலவருந்தேவர், தமரனையரோரூருறைவார்" (நான்மணி. 74) ஆகவும் இவர் அவர் நடுவணுறப் பெற்றும் இவ்வுண்மைதெரியாத இயல்பு யாது காரணத்தாலாயதோ எ-று. புலவரறிவுக்குறையன்று என்பதூஉம் இவர்குறையே என்பதூஉங் குறித்தது. உற்ற பெருந்தேவிக்கு—உறவுபூண்ட உலகமுழுதுடையாட்கு. என்னோநேர்ந்தது என்றது உளளோ இலளோ என்னும் ஐயத்தால்.

தென்னர்பெருமானுர் என்றது நீர் கூறியவாறு எத்துணைச்சிறந்தா ராயினும் இதுதெரியாமை யாது என்பதற்குறித்தது. பெருந்தேவியன்றி இவர் ஆவிக்கு வேறியார் நேராவர் என்ருன் என்க. அவளை வேறு படுத்தல் தம் உயிரை வேறுபடுத்த லாகாதோ என்பது உவமையாற் கொள்ளவைத்தான். பெருமானுருடம்பில் ஈருயிர் நிலைகொளாமை தெளிவித்ததெனினுமமையும். கோப்பெரும்பெண்டு அரசற்கு உயிர் போறல் "யாங்குப்பெரிதாயினு நோயளவெனைத்தே, உயிர் செகுக் கல்லா மதுகைத்தன்மையின்.........ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை, யின்னும் வாழ்வ லென்னிதன் பண்பே" (புறம். 245) என மாக் கோதை இரங்குதலைநோக்கி யுணர்க. (27)

192\. பாண்டிமா தேவியறப் பத்தினியா ரில்லிருக்க
வேண்டியதேன் வேளிரயல் வேற்ருரை—நீண்ட
துன்பா யிறுத றணிபேன் மகளிருக்கு [பெருந்
மின்பாய் நிகழா திது.

(இ-ள்.)—பாண்டிமாதேவி—பாண்டி நாடு பெருந் தேவுபோற் போற்றத் தக்கவள்: என்றதனுற்ருனும் போற்றுவது குறித்தது. அறப்பத்தினி—அறத்தின்ற் பதியோ டொழுகுதற்குரியள். இவளிற் பிறர் தருமபத்தினியர்காமை குறித்தது; இல் இருக்க—கோயிற்கண் இராநிற்க. வேளிர் குடியினராய் முன்னுறவில்லாதபிறரை விரும் பியது என்பொருட்டு என்றது அறப்பொருட்டன்று காமப்பொருட் டே என்பது தெளியவினவிய குறிப்பிற்று: "இன்னுகலத்தல் குலமில் வழி" என்பதும் நினைக்க. நம் அரசிற்கு உயிருள்ள வரையும் உடன் நீண்ட பெருந்துன்பமாய்முடிதல் ஒருதலை யென்க. பெருந்துன்பு— எல்லாவின்பத்தையும் அழித்துத் தானே பெருகிநிற்றல் கருதிற்று. 'கிரப்பிடும்பை பல்பெண்டி ராள னறியும்" (நான்மணி. 95.) என்பதை ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. நிரப்பிடும்பையே அறியா உலகுடை வேந்தனே எனினும் பல்பெண்டிராளனுயின் அஃதறியும் என்று தெளிவித்தல் உய்த்துணர்க. இது என் மகளிருக்குமின்பாய் நிகழா தென்ருன், பெண்டிற்கு இம்மைத் துன்பம் தன் கணவன் மற்ரொ ருத்திபுடைமை என்னும் வியாசபாரதத்தைக் கருதி. (28)

193\. புதுமடவா ணெஞ்சுபுகப் புக்க திருமான்
கதுமெனவே ருகுமெனக் காட்டீர்—விதுமரபோ
னெண்ணுத தெண்ணினும்யா னென்மகளிர்க் கீதுசெய
லோண்ணுத தென்றறைவீ ருங்கு.

(இ-ள்.)—புதிய பெண் ஒருத்தி நெஞ்சிற்புக்க அளவே முன்னே புக்குள்ள திருவாகிய மான்பிணையனையாள் விரைந்து மாறுபடுவளா வள் என்று எடுத்துக்காட்டுவீராகுக. விது மரபோன்—திங்களின் வழிவந்தோன்: என்றது இருபத்தெழு வரையுடையவன் வழித்தோன் றலாதலான் அதற்கு ஏற்றது விளைவான் என்பது குறித்தது; "மதிய மாயின் இருபத்தெழுவர் மகளிரோடு போகந்துய்த்துச் சிறப்பில்லாத கட்டுரைபுனையும்" (தொல். உவம. 35) என்றார் இளம்பூரண வடிகள். எண்ணுறது—நல்லோர் விளையற்காகாதென்று தள்ளியதை. அவன் விளைந்தாலும் என்மகளிர்க்கு இத்துன்பஞ் செய்தல் ஒல்லாதது என்று உவ்விடத்துத் துணிந்து சொல்க. "நுவன்றறைந்தனரே" (தொல். செய். 155) என்புழி அறைதல் துணிதற் பொருட்டாதல் பேராசிரியர் நச்சினார்க்கினியருரை நோக்கியுணர்க. புதுமடவாள் நெஞ்சுபுக்க வளவே யிங்ஙனமாயின் அவள் இல்விற்புகுமாயின் என்னாகுமோ எ-று. "மங்கலமென்ப மனைமாட்சி" (குறள். 60) என்பதுபற்றி அறக் கிழத்தி திரு எனப்பட்டாள். தன்னை வேட்ட கலையன்றி விழையாத மான் போன்றவள் என்க. சான்றோரும் குழவி பெற்றுவாழும் தலைவன் தலைவியர் இல் வாழ்க்கை வனப்பிற்கு மானை எடுத்தாளுதல் "மறி யிடைப்படுத்த மான்பிணைபோலப், புதல்வனடுவணனாக நன்று, இனி துற வமர்கிடக்கை" (ஐங்குறு 401) என்புழிக் கண்டு கொள்க. ஈது என்றான் மேற்குறித்த இம்மைத் துன்பத்தைச் சுட்டி. (29)

194. கோவிற்குச் சிற்றின்பங் கொள்வ தெனினுங்கோத்
தேவிக்குத் துன்பஞ் செயலொல்லேன்—பாவிக்கு
நேராவேன் றீங்கா ணிகழு மனைத்திடர்க்கும்
வேராவே னீதுசெய்யின் மிக்கு.

(இ-ள்.)—ஈது செய்யிற் கோவிற்குச் சிற்றின்பங் கொள்வதாகும் எனினும் என்க. எனினும் என்றான் அன்பு பலதிறப்பட்டுத் தேய்த லான் அவ்வின்பமும் கொள்வதாகாது என்பது கருதி. தன் மகளிர்க்கு இன்பமில்லை யென்னுங் கருத்தாற் கோவிற்கு என்றான். கோவிற்கு இச்சிற்றின்பம் கொள்ளச் செய்தலையும் அதுவே கோத் தேவிக்குத் துன்பஞ் செய்தலையும் ஆராய்ந்து துன்பஞ் செயலொல்லேன் என்றான். தீங்காற்பாவிக்கு நேர் ஆவேன்—உலகிற் பாவச்செயலுடையானுக்கு இத்தீங்கினால் உவமையாவேன்: என்றது கொடியருட் கொடியனாவேன் என்பது குறித்தது. உவமை உயர்ந்ததும் உவமேயம் அதற்குத் தணிந் ததுமாதலுணர்க. அங்ஙனம் பாவிக்கு உவமையாதற்கு ஏது கூறுவது மேல்; மிக்கு நிகழும் அனைத்திடர்க்கும் வேர் ஆவேன்—இனி மிக்கு

நிகழும் எல்லா இடர்க்கொடிகட்கும் ஒருவேர் யான் ஆவேன் எ-று. வேர் என்றதனால் நிகழும் அனைத்து இடரும் அதனின்று கிளைத்துப் படரும் கொடிகளாயின: இவ்வொரு செயலை வேராகக்கொண்டு எல்லா இடர்களும் கொடிபோற்கிளைத்துப் படரும் என்பது குறிப்பு. இஃதேக தேசவுருவகம். பிறரைத் துன்புறுத்தாத இன்பமே ஒருவன் செய்யத்தக்கது என்பது கருத்து. யார்க்குந் துன்பஞ்செயலொல்லேன்; அதனினும் எவர் தேவிக்குந் துன்பஞ்செயலொல்லேன்; அதனினும் கோத்தேவிக்குச் செயலொல்லேன் என்று கருதிக் கூறியது காண்க. (30)

195. அரசர்க்கு மற்றை யருந்துணு வற்றுப்
பரிசிற் குயங்கியிரப் பார்க்குங்—கரிசில்
லொருத்தி யோடுவா ழுயரில் லறமே
திருத்தியோடு மின்பஞ் செயுட்

(இ-ள்.)—அரசுச் செல்வர்க்கும்: உம்மை உயர்வு சிறப்பு. அற்றை யருந்துணு அற்று—அற்றைக்கு அருந்தற்குரிய உணவு அறுதலான். பரிசிற்கு உயங்கி—பரிசிலே வேண்டி அது கிடையாமையால் வாடி. இரப்பார்க்கும்—இரத்தல் செய்வார்க்கும். உம்மை இழிவு சிறப்பு. தாம் இரத்தல் செய்வதே கூறிற்று. இரந்துழியும் அவ்வுணவும் கிடையாமை குறித்து. பெருஞ் செல்வத்தினும், நிச்சல் நிரப்பினும் எ-று. கரிசு இல் ஒருத்தியொடுவாழ்—குற்றமற்ற ஒரு பெண்டுடன் வாழ்கின்ற. செல்வத்தினல்லாது நிச்சல் நிரப்பினும் வாழ்க்கை இனிதாம் என்பது தோன்ற வாழ்தல் வினை கூறிற்று. உயரில்லறமே—உயர்ந்த இல்லற நிலையே என்றது "அறனிழுக்கா வில்வாழ்க்கை நோற்பாரி னோன்மை யுடைத்து" (குறள்-48) என்பதுபற்றி. இருவரும் உயர்தற்குக் காரணமான இல்லறம் எனினும் அமையும். வாழ்வாங்கு வாழ்தலான் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுதல் (குறள் 50) காண்க. "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, யெனைமாட்சித் தாயினு மில்" (குறள் 52) என்பதுபற்றிக் கரிசில்லொருத்தி என வந்தது. திருத்தியொடும்—எல்லாம் நிறைந்தனவாதலுடன் "இல்லதெனில்லவண் மாண்பானல்" (குறள்-53) என்றது கொண்டுணர்க. இன்பமுஞ் செய்யும் எ-று. "கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (ஷை 51) யாதலின் அரசர்க்கும், வறியார்க்கும் ஒத்த இன்பமே பயப்பது இல்லறமென்று கொள்க. ஒருத்தியொடு வாழ்தல் கூறியதனாற் பல்பெண்டிருடன் ஆயின் வாழாமை குறித்ததாம். உயரில்லற மென்றதனாற் பல் பெண்டிராளன் மனையறந் தாழ்தல் கருதியதாம். எல்லா நிறைந்த

விடத்தும் ஒன்றும் இல்லாமை போறலும், துன்பமே செய்தலும் இறுதியடியாற் குறித்தல் காண்க. (31)

196. கைப்பிடித்த தேவியைத்தான் கல்லா நினைந்தான்கொன்
மைப்பிடித்த கண்ணுடன் வன்றுயர—மிப்படித்தா
மென்றறியா வாறுகொலோ வீதுசொலித் தூதுவிட்டா
னன்றறியா னன்றறிவா னன்கு.

(இ-ள்.)—தான் கைப்பிடித்த தேவியை—தான் கையிற் பிடித்த காரணத்தாற் றன்றேவியாயவளைப் பெண்ணுருவிற் கல்லாகக் கருதினன் கொல்லோ; இவன் செய்யும் அன்பின்மை நினையாதது கல்வடிவே எ-று. முன்னே மகளென்று பிடித்தவன் இப்போது கல்லாக நினைந்தனனோ என்க. தேவியின் மென்மைக்கு மாறாக இவன் கன்மனத்தால் அவளைக் கல்லாகத் திரிய நினைத்தான்கொல் எனினும் அமையும். வன்றுயரத்தால் மைப்பிடித்த கண் அழ நேர்தலால் அஃதழியும் என்பது குறிப்பிற் கொள்ளவைத்தவாறு. உயிரையும் போக்கவல்ல துயராதலின் வன்றுயரம் எனப்பட்டது. இப்படித்து ஆம்—இத்தன்மைத்தாம். தன் சிற்றின்பமே கருதிப் பிறர் துன்பறியாதவாறே. ஈது சொலி—இக் கொடியதைச் சொல்லி. ஈதென்றான் தன் வாயாற் சொல்லுதல் கூசி. நன்று அறியான்—நல்வினை அறியான். அன்று நன்கு அறிவான்—தீவினை நன்கு அறிவான் எ-று. தனக்கு நன்மை செய்வது அறியான் பிறர்க்குத் தீமை செய்வது நன்கறிவான் எனினும் அமையும். நன்று அன்று என்பனவற்றை "நன்றாங்கா னல்லவாக் காண்பவ, னன்றாங்கா லல்லற் படுவ தெவன்" (குறள்-378) என்புழிப்போலக் கொள்க. (32)

197. என்மக்க டம்மோ டியையவா னெனின்வேறு
மன்மக்க டம்மெய் மனங்கொளா—வன்மையோடு
நிற்பா னெனவே நிகழ்த்தற்கு மாகானாற்
பொற்பாற் பலர்விழைவான் போம்.

(இ-ள்.)—அறிவு நிறைந்த என் மகளிரோடு இவன் இயைவான் எனின். எனின் என்றது இயைதல் அருமை குறித்தது. வேறு மன்மக்கள்—வேற்றரசர் மகளிர். தம் மெய் மனங்கொளா வன்மை—பிறர் மகளிர் மெய்யைத் தன் மனத்துள் எழுதிக்கொள்ளாத உரம்: "கோட்டியுட் கொம்பர் குவிமுலை நோக்குவோ, னேட்டை மனவனுரமிலி" என்னும் பரிபாடலான் (12) இது வன்மையாதலுணர்க. வன்மை—திண்மை. நிற்பான்—நிலை பெறுவான். நிகழ்த்தற்கும் ஆகான்—வாயாற் சொல்லற்

கும் உதவான் எ-று. மெய்வனப்பாற் பலரை விழைவானுய்ப் போவான் என்க. போம் என்றது நிற்பான் ஆகாமை குறித்தது. கைப்பிடித் தாரைக் கல்லா நிலைபவன் ஆதலான் இவ்வாறு போதல் ஒருதலை யென்று தெளியக் கூறியவாறு. பொற்பால் என்றது இவன் விழைதற்கு அறிவு காரணமன்று என்பது குறித்தது. (33)

198. தன்பாலன் பாய தலைவி யகத்துவகைக்
கின்பாலன் பாகாத வேந்தலைநீர்—வன்பாரிற்
பேய்த்தேர்நீர் வேட்டுப் பெருங்கா னலைகலையே
ருய்த்தேர்வீர் நுங்க ளகத்து.

(இ-ள்.)—தன்கண் அன்புடையளாய பெருங்கோப்பெண்டு: இவள் மனமகிழ்தற் பொருட்டு. இன்பால் அன்பாகாத—இனிய திறத் தில் அன்புடையனுகாத. ஏந்தல் என்றது இவளை ஏந்த மாட்டாதவன் உலகேந்துவனுஞன் எ-று. நீர்—நீவிர். வன்பாரில்—பாலை நிலத்தில். பேய்த்தேர் நீர் வேட்டு—கானலை நீரென்று விரும்பி. பெருங்கான் அலை கலையேறு—பெரிய காடெல்லாம் அலைகின்ற கலைமானேறாக. நுங்க ளகத்துத் தேர்வீர்—நும்மனத்திற் றெளிந்து கொள்க. எதிரிற் கூறற்கு வலியில்லீராயினும் மனத்திற் கொள்வீர் என்க. "தம்மையுகப் பாரைத் தாமுகப்பர்" என்பது நாச்சியார் திருமொழி. அவள் அகத்து உவகை கண்டு அதற்கு இன்பத்தால் அன்பு ஆகாத ஏந்தலை எனினும் அமை யும். அலை கலையேறு என்றது அலைதலன்றி வேட்கைதணியாமை குறித்தது. வன்பாரிற் பெருங்கான் என்க. போரேறு என்ற தூதர்க்கு அலை கலையேறு என்று காட்டினன்; "பேஎய் வெண்டேர்ப் பெயல் செத்தோடித், தாஅம் பட்ட தனிமுதிர் பெருங்கலை" (அகம் 241) என வருதலாற் கலையேறு பேய்த்தேரை நீரென்று விரும்பி அலைதல் உணர்க. (34)

199. பெற்றது கொண்டு பெரிதுமகி ழாதலைவான்
மற்றேதனு லுள்ள மகிழ்ந்தடங்கும்—கற்றபெருங்
கோவிற்கு நீர்தேரியக் கூறீர்கோல் லீதுகுலத்
தேவிக்குத் துன்பஞ் செயல்.

(இ-ள்.)—கிடைக்கப்பெற்ற சிறியதும் பெரிதென்று மனத்துட் கொண்டு இன்புறாது அலைவான்—கிடைத்தது சிறிதென்று பெரியது வேட்டு அலைபவன். பிறிது எவ்வாற்றால் மனமகிழ்ந்து அடங்கி நிற்ப வன் ஆவன். அலைவானே அல்லது மகிழ்வால் அடங்கான் எ-று. கற்ற

பெருங்கோவிற்கு—இதையெல்லாம் கல்வி யறிவாலறிந்த பெருங்கோமானுக்கு; கற்றவளவே யன்றி அக்கல்வி தன்கட் பயன்படாமை குறித்தது. கற்ற பெருங்கோ என்று இகழ்ச்சிக் குறிப்பாற் கூறியதுமாம். தூதர் பாண்டியன் கல்வி நலங்கூறியது கொண்டு இது மொழிந்தான் எனினும் அமையும். நீர் தெரியக்கூ றீர் என்றது அக்கல்வியாற் றானே தெரியாமை கருதிற்று. குலத்தேவி—தன் குடி வளர்தற்குரிய பெருங்கோப் பெண்டு. பெற்றதன்பின் கொள்ளுதல் கிடைத்ததை மனத்தாற் கொள்ளுதல் என்க. கூறீர்கொல் என்றதற்கு நம்பணிவாற் கோவிற்குத் தெரியக் கூறீர்கொல்லோ என்றாலும் பொருந்தும். (35)

200. அரசல் லதுசெய்யு மாயி னவற்கு
முரச மெனநா முழக்கி—யுரைசெய்
யறவோ ரிலாதுவே றாயிற்றே கல்வி
நறவோர் தண்கூட னகர்.

(இ-ள்.)—அல்லது அரசு செயும் ஆயின்—அறஞ்செய்தற்கமைந்த அரசன் பாவத்தைச் செய்வன் ஆயின். முரசம் என நாமுழக்கி அவற்கு உரைசெய் அறவோர்—அவன் வாயலில் முழங்கும் நியாய முரசமென்று சொல்லும் வண்ணம் தம் நாவான் முழக்கி அவனுக்கு அறிய வுரைக்கும் அறநூல் வல்லவர். இல்லாது வேறாயிற்றே—இல்லாமையால் நகரம் நரகம் ஆயிற்றே என்க. கல்வி நறவு ஓர்—கல்வித்தேன் சுவையே தேர்கின்ற. தண்கூடல் நகர்—தமிழ்த் தென்றலாற் குளிர்தலையுடைய மதுரைப்பதி எ-று. கல்விநறவு கூறியது மதுரை என்னும் பெயர்க் காரணத்தைக் குறித்தது. பிறர் தலைநகர்கள் நறவு தேர்வனவாக இந்நகர் கல்விநறவு தேர்தல் குறித்தது. "நான்மறைக் கேள்வி நவில் குரலெடுப்ப, வேமவின் றுயி லெழுதலல்லதை, வாழிய வஞ்சியுங் கோழியும் போலக், கோழியி னெழாதெம் பேரூர் துயிலே" எனவரும் பரிபாட்டடிகளான் இதன் கல்விச் சிறப்புணர்க. "அறங்கரை நாவி னான் மறைமுற்றிய" (தொல்-பாயிரம்) என்பது ஈண்டைக்கு நினைக்க. வாய் முரசமாகவும் நாக்கடிப்பாகவும் கொள்க. (36)

201. கல்வி நலங்கண்டு காதலித்தான் யான்பயந்த
செல்வி யரையெனநீர் செப்பினீர்—பல்வகையிற்
சீர்த்தபெருந் தேவியர்க்குத் தேன்றமிழ்நூ றேற்றுவிக்க
வோர்த்தபுல வோரிலரோ வூங்கு.

(இ-ள்.)—யான் பெற்ற செல்வ மகளிரைக் கல்வியானுய நலத்தைக் கருதி விரும்பினான் என நீர் சொற்றீர். அரசுத் திருவிற்குப்

பல்வகையாலுஞ் சிறந்த பெருந்தேவியார்க்குத் தெற்கணுள்ள தமிழ் நூல்களைத் தெளிவித்தற்கு ஓர்ந்துணர்ந்த புலமையாளர் உவ்வூர்க்கண் இல்லரோ எ-று. தேவியார் குறையை நிரப்பிக் கொள்வதல்லது அவரை விடுத்து வேறு நினைப்பது தகாதென்று அறிவுறுத்தியவாறு. ஆண்மகவிற்கு மிடிப்படுதலால் இவரே செல்வமகளிராதல் குறித்தது. "நல்கூர்ந்தார் செல்வமகள்" என்பது கலி. நல்கூர்ந்தார்—பிள்ளைக்கு மிடிப்பட்டார் என்பர் நச்சினார்க்கினியர். தென்றமிழ்—திசைமாறுதல் எஞ்ஞான்றும் தெற்கணுள்ள இனியமொழி: "என்றுமுள தென்றமிழ்" (ஆரணிய.) என்றார் கம்பநாடரும். தென்றிசை என்றுமுள்ளது போல அதன்கட் டமிழும் என்றுமுள்ளது கருதிற்று; "தென்றமிழ்" என்பது பரிபாடல். தாமே தேற ஒன்றை ஓர்ந்த புலவரின் வேறு தோன்றத், தேற்றுவிக்க ஓர்த்த புலவர் எனப்பட்டது. "கற்ற செலச்சொல்லாதார்" (குறள்-650) பலருளராதல் கருதிக்கூறினன். (37)

202. பெற்றதாய் கற்றுப் பெருகிலளேன் றேயவள்கண்
ணுற்றபே ரன்பு மொழியுங்கோல்—கோற்றவன்மற்
றன்பின் பெருமை யறியான்கோல் தன்னெஞ்சத்
தின்பின் வணஞ்செய்வா னீது.

(இ-ள்.)—பெற்றதாய்—நற்றாய்: கற்றுப்பெருகிலள்—கல்வி கற்று அறிவு நிறைந்திலள். கொற்றவன் தனக்கு அவள்கண் இயல்பாகப் பொருந்திய அளவில்லாத அன்பும் ஒழிவானோ; என்றது அன்பிற்குக் கல்வி காரணமாகாதென்று காட்டியபடி. தாய் மகவால் எந்நிலையினும் அன்பு செய்யப்படுதல் போலக் குலமகளும் கொண்டானால் அன்பு செயற்கு எந்நிலையினும் தகுதியுடையவள் என்று குறித்ததாம். தாய் தன் தந்தைக்குக் குலமகளாதலும் தன் குலமகள் தனக்குண்டாம் மகவிற்குத் தாயாதலும் உணர்க. ஒரு குலமகள் தாயாய்த் தன் மகவையும் இல்லறக் கிழத்தியாய்த் தன்றலைவனையும் அன்பு செய்வதுபோலவே தலைவனும் தன் குலமகளையும் தன் மகவையும் ஒக்க அன்பு செய்தற்குரியன் என்று கொள்க. தன்னை இன்றியமையாத தலைவியைத் தன் வழிக்குத் தாயென்று கருதித் தானுண்டாதற்குக் காரணமாகிய தாயை யொப்பப் பேணுதல் விளக்கிற்று. நீர் அற்புப் பேறு கூறிச் சிறப்பித்த வெற்றிவேந்தன் அன்பின் பெருமையை அறியானோ எ-று. அன்பறியாமைக்குக் காரணங்காட்டுவது மேல். தன் நெஞ்சத்து இன்பின் வண்ணம் ஈது செய்வான்—தன் மனமகிழ்தற்படி இது செய்வானாதலான் எ-று. தலைவி மனமகிழ்தற்படி செய்யாமையால் அன்பறியான் எ-று. கொற்றவன் என்றது கிடைத்ததின் மகிழாது மேலும் வென்று

கொள்ளும் வேத்தியல்பு குறித்தது. வெற்றி விழையும் அரசர்க்கு அன்பு நிலைபெறுதலரிதென்பது "வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி வேற்கணார் கலவியே கருதி, நின்றவா நில்லா நெஞ்சினை யுடையேன்" (பெரிய திருமொழி) என்ற கலிகன்றியார் திருவாக்கானுணர்க. தன் மனமகிழ்தற்படி செய்பவன் உலகு மகிழ்தற்படி செய்யான், இதனால் அரசனாகான் என்பது குறிக்கும். (38)

203. தொடங்கினை யி னந்நிலையே தோற்றித் திரிந்து
விடநினையிற் போவதுகோன் மெய்யன்—பிடர்நினையா
வான மகளிர்க்கு மாறுங்கோல் தன்னினிக்கு
மான மகளை மறுத்து.

(இ-ள்.)—தன்னினிக்கு மானமகளை—கணவன் தான் இனிக்கா விடினும் அவன்றன்னாலே இனிக்கும் மானமே வடிவாகிய ஒருத்தியை. தொட நினைத்த அளவிலே உண்டாகிப் பின் வேறுபட்டு மறுத்து விட நினைத்த அளவிலே மெய்ம்மை யன்பு ஒழியுமோ; ஒழிவது மெய்யன்பு அன்று பொய்யன்பே எ-று. இடரே நினைத்தற்கில்லாத வானுலகத்து அரமகளிரேயாயினும் மெய்யன்புடையான் அவர்பொருட்டு மனமாறுவனோ எ-று. இடர்ப்பட்ட நிலையினுந் தன்னாலே இனிக்கும் மானமகள் என்பது இடர் நினையா வானமகளிர்க்கும் என்பதனாற் குறிக்கப்பட்டது. மானமகள் என்றது இவன் மானம் போற்றாது இடங்கழியாளனாதல் குறிக்கும். "இடங்கழியாளர் தொடர்பின்னா" (இன்னா. 12) என இச்செயலுடையார் உறவு பழிக்கப்படுதல் காண்க. (39)

204. மனையா ளிருக்க மறுமடந்தை வேட்க
நினைவா னுளத்திடரி னின்று—தினையேனு
மன்பு மறனு மறிவும் பெருமிதங்கோ
ளின்பு முளையா வெனல்.

(இ-ள்.)—மனையாள்—கிருகணி எனற்குரியவள்: இவளொருத்தியேயாதலால் மறுமடந்தை என்று கூறிற்று. அவள் அகமுடையாள் ஆகாள் எ-று. வேட்க நினைந்த அளவிலே அவன் உள்ளம் ஈரம் படாத திடரேயாம் என்பது கருத்து. தினையேனும்—சிறிய தினையின் அளவேனும். ஈண்டுத் தினையைக் கூறியது குறிஞ்சியில் மேட்டு நிலத்தில் உண்டாதற் றன்மையால். அத்தினையளவேனும் இவன் உளத்திடரின் முளையாவாம் என்க. இயல்பாகிய அன்பும் அதுபற்றி நிகழும் அறமும் அவையிரண்டும் தப்பாது செய்யும் அறிவும் இம்மூன்றின் பயனாகிய இன்பமும் முளையா என்று சொல்க எ-று. பெருமிதங் கொள்

இன்பு என்றது நெறிதவறாது வந்த இன்பமாதலிற் றனக்கே செருக்குக் கொள்ளற்குரிய இன்பம் எ-று. தன் மனையாளையன்றிப் பிறமடவாரை நினையாமையாலுண்டாகிய பெருமிதமென்க. இக்கற்புடையாட்டியை உடையேன் என்று "ஏறுபோற் பீடுநடை" கொள்வனுதலிற் பெருமிதங் கூறிற்று எனினுமமையும். "அன்பு மறனும்' (குறள்-45) என்புழிப் பரிமேலழகர் "இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சொன்றாகாவழி இல்லறங் கடைபோகாமையின் அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பயனாயிற்று" எனக் கூறியது கொண்டுணர்க. இது தூதுவர் கூறிய பேறுகளிற் பல இல்லாமை காட்டியபடி காண்க. (40)

205. இருவ ருளத்து மெழுந்தபே ரன்பை
யொருவ ரளந்தறித லுண்டோ—வுருவத்
தெழில்பற் றியதா வியம்பேனற் கல்வித்
தொழில்பற் றியதாச் சொலேன்.

(இ-ள்.)—தலைவன் தலைவி இவ்விருவருள்ளத்தும் எழுந்த அன்பை—ஓராவிற்கு இருகோடு போல ஒத்து வளர்ந்த அன்பினை. ஒருவர்—பிறர் ஒருவர். அளந்தறிதல்—அறிந்தளத்தல். உண்டோ—இல்லை எ-று. உருவத்து எழில்—வடிவழகு. நற்கல்வித் தொழில்—நல்ல கல்வியானுண்டாய பல்வகை வினைசெயல்வன்மை. வடிவழகுடையார் வடிவழகில்லார்பால் அன்பு செய்தலையும், கல்வி வல்லவர் கல்வி வல்லர் அல்லார்பால் அன்பு செய்தலையும் உலகிற் காண்டலால் அன்பு செயற்கு இவை காரணம் என்றல் இயையாமை காட்டியபடி. இருவர்க்கு மனமொத்த தன்மை காரணமல்லது வெளியிற் காணப்படும் இவை காரணமில்லை எ-று. அழகுடையாரிருவரும் கல்வியுடையாரிருவரும் மனம் பொருந்தாது தம்முட் கலகப்படுதலும் காண்டலால் இதனுண்மை யுணர்க. "பெண்ணி னுருவின்றி மாண்டவுளவாம்" என நான்மணியின் (63) வருதல் காண்க. (41)

206. உற்றா ரிருவ ருளத்தின் விளைந்துவள
கற்றா வியல்பிற் கசியன்பை—யிற்றா
வளந்தறித றேவர்க்கு மாகா ததன்சீர்
வளந்தேரியுந் தெய்வமே மற்று.

(இ-ள்.)—உற்றார்—ஊழ்வினையாற்றம்முள் ஒருவராய் இயைந்தார். இருவர் என்றதனால் ஒருவராய் உற்றார் என்றதாம். "ஈருடற் குயி ரொன்றாயினார்" (கம்பநாடர்) எனவுரைப்ப. உளத்தின் விளைந்து

என்றது அன்பிற்கு விளைநிலம் அகம் என்று குறித்தது. "அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை" (குறள்) என்ப. விளைந்து வளர் அன்பை—வளர்ந்து அறம் விளைகின்ற அன்பினை. கற்றா இயல்பிற் கசி யன்பை—கன்றையுடைய ஆவின் தன்மையின் இயல்பாகவே கசிகின்ற அன்பினை; ஒன்றையொன்று இன்றியமையாமைபற்றிக் கன்றும் ஆவும் கூறப்பட்டன. இற்றா அளந்தறிதல்—இப்படித்தாக அறிந்தளத்தல். தேவர்க்கும் ஆகாதது—மக்களினும் அறிவாற் சிறந்த அமரர்க்கும் இயலாதது; "அன்பென்பதொன் றின்றன்மை யமரருமறிந்த தன்றால்" என்றார் கம்பநாடரும். அதன் சீர்வளம்—அதன் சீர்ப்பெருக்கம். "வினைவளை நீறெழ நீறணி யம்பலவன்" (திருக்கோவையார் 118) என்புழிப் போல வளம் பெருக்கத்தின் வந்தது. தெய்வமே தெரியும்—அன்பே உருவாகிய கடவுளே தெரியும். ஏ—தேற்றம். அன்பானன்றிக் காண வியலாத தெய்வமே தெரியும் எனினும் அமையும்: "அன்பினன்றி யாழியானை யாவர் காண வல்லரே" (திருச்சந்த விருத்தம்) என்ப. கன்று தாயினையும் தாய் கன்றையும் இடையறவு படாது நினைத்தலானும் உவமையாதல் காண்க; "தாய் நினைந்த கன்றே யொக்க வென்னையுந் தன்னையே நினைக்கச்செய்து தானெனக்காய் நினைந்து அருள் செய்யுமப்பனை" என்றார் கலிகன்றியாரும். (பெரிய திருமொழி.) (42)

207\. திடவுள் ளுணர்விற் சிறந்தார்நல் லன்பைக்
கடவுளின்வே றாகக் கழறார்—தொடர்புடைய
வித்தகைய தொன்றனே யாத்த மனையறச்சீ
ரெத்தகைய தென்றுரைப்பேன் யான்.

(இ-ள்.)—திடவுள் ளுணர்விற் சிறந்தார்—தடுமாறாது உள்ளே நோக்கும் உணர்வுடைமையாற் சிறப்பெய்தினார்; வெளியே நோக்கும் பொறியுணர்வினும் வேறு தோன்ற உள்ளுணர்வெனப்பட்டது. இவ்வுணர்வு இடையறவு படாமைக்குத் திடம் வேண்டிற்று. நல்லன்பு என்றது "மறத்திற்கும் அஃதே துணை" (குறள்) என்பதுபற்றி. கோல மலர்ப்பாவைக் கன்பாவென் னன்பேயோ" என்பது திருவாய்மொழி. 'அன்பே சிவமாவதியாரு மறிகிலர்" என்பது திருமந்திரம். இவற்றாற், கடவுளின் வேறாகக் கழறாமை காண்க. தொடர்புடைய இத்தகையது—பிறவிதொறும் தொடர்தலையுடைய இத்தகுதியது. ஒன்றனே—ஒப்பற்றதனே. யாத்த மனையறச்சீர்—கிழவன் கிழத்தி யிருவரையும் பிணித்த இல்லறச் சிறப்பு. எவ்விதத் தகைமைத்தென்று சொல்வேன் யான்—உள்ளுணர்விற் சிறத்தலில்லாத யான் என்பது குறிப்பு. அன்

பின் வேறாகாத தெய்வத்தாற் பிணித்த மனையறம் எனினும் பொருந்தும். (43)

208. அவ்வில் லறம்புகுந்த வண்ண லேதுபயன்வேட்
டோவ்வில் லிதுபுரிய வுன்னினன்—செவ்வியுளத்
தன்பறியா னாகு மதனனற் காமத்தி
னின்பறியா னாகு மிவண்.

(இ-ள்.)—அத்தகைய இல்லறம் புக்க தலைவன், ஏது பயன் வேட்டு—யாது பயன் விரும்பி, ஒவ்வில் இது—இல்லறத்திற்குப் பொருத்தமில்லாத இது, முன்னரே இன்பந் துய்த்தவன் துய்த்தறியாருடன் கூடுதலாதலின் ஒவ்வில்லிது என்றான். "மெய்யுற்றறியாதாரிருவர் அன்பொத்துப் பான்மை வகையாற்றாமே மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சி" எனப் பரிமேலழகர் "காமத்துச் சிறந்தது விருப்போரொத்து மெய்யுறு புணர்ச்சி" என்னும் பரிபாடற்குக் கூறலானுண்மையுணர்க. இம்மைப்பயனும் மறுமைப்பயனும் எய்தற்குரிய இல்லறம் புக்கவன் இவற்றின் வேறு யாது பயன் விரும்பி இது செய்ய வினைந்தான் என்க. உறுதிப் பொருள்களுட் காமமே பயனெனின் அது கருதி எழுந்தது மேல். உளத்துச் செவ்வியன்பு—உள்ளத்திலே ஒத்த பருவத்தன்பு. நற்காமம்—அறமும் இன்பமுந் தரவல்ல காமம். நற்காமத்தின் இன்பு—நற்காமத்தின்கண் உண்டாகும் இன்பம். நற்காமம்—ஒத்தகாமம்: அது மேற்காட்டிற்று. இன்பறியாமையாற் கருதிய காமமும் எய்தாமை குறித்தது. இவண் என்றது மறுமை யின்பமில்லாமை குறிப்பானுணர்த்திற்று. அண்ணல் என்றது தலைமையால் வினைந்தது புரிவான் என்று குறித்தது. (44)

209. அண்ண றயரதனா ராவி பதைத்தொழிய
விண்ணும் பரவும் விழுக்கடவுண்—முண்ணிறைகான்
றன்மனையோ டேகித் தணந்த பழங்கதைதான்
பன்மனையா னுய பயன்.

(இ-ள்.)—அரசரிற்றலைமை யெய்திய தயரதரெனப் பெயரிய அயோத்தியரிறை: தலைமையானும் மகப்பேறுகருதிப் பன்மனை வேட்டலானும் உள்ள உயர்வு கருதி ஆர்விகுதி வந்தது. அத்தகையார் உயிர் பதைத்தொழிதல் காண்க என்றதாம். அப்பன்மனையாளர் கோயிற்கட் பரதெய்வம் அவதரித்தாலும் அதுவும் இடர்ப்படுமென்று காட்டுவது மேல். பதைத்தொழிய என்றது போரால், நோயால் ஒழியாது தான்

பின்னை கொண்ட கைகேயியின் கொடுமையாற் றளைத்து அது காரண மாக ஆவியொழிதல் குறித்தது. விண்ணும் பரவும் விழுச்சடவுள்—விழுப்பத்தால் மண்ணேயன்றி விண்ணுலகும் பரவல் செய்யும் இறைவன். முள் நிறைகான்—தன் அரசுத்திருவிற்கேற்ப எல்லாச் செல்வமும் நிறைந்த நாட்டை விட்டு நடந்தாலும் வருத்தும் முட்கள் நிறைந்த காட்டில் எ-று. தான் ஏகுதலே யன்றித் தன் மனையாட்டியுடன் ஏகி. எ-று. தணந்த—அம்மனையாட்டியையும் தணக்க நேர்ந்த. பழங்கதை—பழைய சரிதம். பன்மனையாட்டியரை யுடைமையின் விளைந்த பயன் எ-று. உலகெலாம் உடைய தலைமையும் பத்துத்திசையிலும் தன்றேர் தட்டறச் செல்லும் வீரமும் படைத்த பெருவேந்தனேயாயினும் அவன் பன்மனையுடையன் ஆயின் அவன் உயிர்பதைத்தொழிய நேரும் என்றும்; அவனகத்துத் தெய்வம் அவதரித்தாலும் அதுவும் அவ்வவதாரத்தில் இடர்ப்படுவதே யுளதாமென்றும் முன்னை இதிகாசங் காட்டியவாறு. மனையோடேகி என்றது கான் ஏகுதற்குரிமையில்லாத அஞ்செஞ்சீறடியுடைய சீதா தேவியின் உயர்பு குறித்தது. (45)

210. ஈதெல்லாந் தேருத தென்வினையோ தன்வினையோ
தூதெல்லா மாறன் சொலவிட்டான்—கோதெல்லாஞ்
சூழுமா றல்லாற் குலமகளிர் தொல்லறத்தே
வாழுமா றிஃதன்றன் மற்று.

(இ-ள்.)—ஈது எல்லாந் தேருதது—இப்போதுரைத்த இது முதலாக முற்கூறிய அனைத்தையுந் தெளிந்து கொள்ளாததன் காரணம். என் வினையோ—என் தீவினையோ என்றான் முறைகெட மகட்பேசப்படுதற்கு உரியனாகிய தன் நிலை நோக்கி. முற்பட என் வினையோ என்று கூறியது பேரரசன் பகைமையாற் றனக்கே கேடு முந்துற வருமென்னும் உணர்வால். தன் வினையோ—பாண்டியன்றன் வினையோ; என்றது பல்பெண்டிரைக் கொள்ளுதலான் அவன் எய்துந் துன்பத்தைக் கருதி என்க. மாறன் எல்லாஞ் சொல்லத் தூது விட்டான் என்க. எல்லாஞ் சொல்ல என்றது ஆய்ந்து தெளிந்து சில சொல்லலன்றி மனத்தில் நினைத்தனவெல்லாம் சொல்லுமாறு. எ-று. கோது எல்லாம்—எல்லாக் கேடும். சூழும் ஆறு—சூழ்தற்குரியவாயில். இரு குடிக்கும், கொண்ட கணவற்கும் புக்க மகளிர்க்கும் கோது பலவாதலின் எல்லாம் எனப்பட்டது. குலமகளிர்—குலத்தை உண்டுபண்ணுதற்குரிய பெண்டிர். தொல்லறத்தே வாழும் ஆறு—பண்டையறவொழுக்கத்திலே கணவனோடு ஒத்து வாழ்தற்குரிய வாயில். இஃதன்று—இப்பன்மணங்கொள்ளுதல் அன்று. மற்று—அசை. குலமகளிர் என்றதனாற் போகமகளிராகாமை

காண்க. தொல்லறத்தே வாழுமாறன்று என்றதனாற் குலமகளிர்க்குக் காமவின்பமே பயனென்னாமையும் இல்லற நிகழ்த்தி வாழ்தலே பயனென்பதும் குறித்தல் காண்க. "பரத்தை வாயில் நால்வர்க்கு முரித்தே" (தொல். பொருளி. 30) என்புழி நச்சினார்க்கினியர் "ஒருவனும் ஒருத்தியுமாகி இன்ப நுகர்ந்து இல்லற நிகழ்த்துதலே சிறந்ததென்றற்கு இங்ஙனம் பலராதல் வழுவென்று அதனை அமைத்தார்" எனக் கூறியதுகொண்டு இதனுண்மை யுணர்க. (46)

211. மகளிர் மணஞ்சூட்ட வந்தீ ரலீர்நீ
டிகழும் பழிசூட வெற்கே—புகல்வீர்
குலப்பெருந் தேவியார் கோயில் விளக்காய்
நிலைப்ப ரவர்மறந்து நீர்.

(இ-ள்.)—எப்படியும் பேரரசன் மணஞ் சூடுதல் கருதி வந்திரல்லது என் மகளிர் மணஞ்சூடுதல் கருதி வந்திரல்லீர் எ-று. மகளிர் மணஞ் சூடுதலைத் தலைமையாக நினைந்திராயின் அதற்கொத்தபடி எற்கே புகழ் சூடப் புகல்வீர் என்க. இகழும்பழி—பழியுள் வைத்து இகழ்தற்குரிய பெரும்பழி எ-று. "பழிமலைந்தெய்திய வாக்கம்" (குறள். 657) ஆதலின் இவ்வாறு கூறினான். எற்கே பழிசூடப் புகறலால் மணஞ்சூட வந்திரல்லீர் ஆதல் காண்க என்று காட்டியவாறும். குலப்பெருந்தேவியார்—குடியை உண்டு பண்ணுதற்குரிய பெருமையை யுடைய தெய்வமாதர்; இராச குலமகளிரைத் தெய்வமாதர் என்பது

"வையம் வந்து வாயிலி னின்றது
தெய்வ மாதர்க் கிசைமின் சென்றென"

எனப் பெருங்கதையுட் பதுமாபதியைக் கூறுதலானறிக. உயர் குடிப் பெண்டிற்குத்தேவி என்பது விருதுப் பெயரெனினுமமையும். வளர்த்த தாயக்குச் சித்திரத்தேவிப்பட்டஞ் சீவகனல்கினானே (2567) எனச் சிந்தாமணியுள் வருதலானறிக. கோயில் விளக்காய்—இராச கிருகத்தினிருள் நீக்கும் விளக்கமாய். நிலைப்பர் என்றது நிலை விளக்காய் ஒருவர் தூண்ட வேண்டாது விளங்குதல் குறித்தபடி. நீர் அவர் மறந்து எற்கே பழிசூடப் புகல்வீர் என்க. இகழும் பழி சூட என்றதனாற் புகழும் மணஞ் சூடவந்தீர் அல்லீர் என்றவாறும். பாபமும் விளைத்தல் நோக்கி இகழும் பழி என்றானெனினுமமையும். சூட என்னும் வினையாற்றலையின்மேற் புனைவதாதல் குறித்தது. மணம்—மணமாலை; ஆகுபெயர். "இனிது செய்தனையா லுந்தை வாழியர், நன்மனை வதுவை யயர விவள், பின்னிருங் கூந்தன் மலரணிந்தோயே" (ஐங்குறு நூறு 293) என

வருதலாற் சூடுதலறிக; "சூடக வால்வளை சூட்டிட நீட்டு, மேடவிழ் மாலே" என்றார் கம்பநாடரும்; குலப்பெருந் தேவியார் என்றலாற் பின் வருவைமகளிர் அவராகாமை குறித்தது. கோயில் விளக்கு என்றது "மனைக்கு விளக்கு மடவாள்" என்பது கருதி வந்தது. கோயில் விளக்கு—கோயிற் கட்டொழு சுடர்விளக்கு எனினுமமையும். நிலேப்பர் என்றது பிறமகளிர் அங்ஙன நிலேயாமை காட்டிற்று. எல்லாப் பொருளே யும் விளக்கிக் காட்டவல்ல விளக்கினைக் காணுது மறத்தல் அறிவும் ஆராய்ந்த கல்வியுமுடைய தூதர்க்கு இயல்பன்று என்பது கருதி மற ந்து நீர் புகல்விர் என்ருன். நீடுபழிசூடப் புகல்வீர் என்க. இது பழி சூட்டுமாறு காட்டுவது மேல். (47)

212. அரசினசை வைத்தோ வரசர் பெருமான்
பரிசினசை வைத்தோவேள் பாரி—யுரைசுலவுந்
தேவியுடைக் கோமகற்குச் செல்வியரை யீந்தனன்
பாவியெனச் சொல்வர் பழி. [வேம்

(இ-ள்.)—தன் மகளிர் வழிக்கு அரசர் பெருமான் அரசிலாசை வைத்தோ எனவும், தனக்கு அரசர் பெருமான் பரிசிற்கண் ஆசை வைத்தோ எனவும் கொள்க. தான் வேளரசனேனும் அரசர் பெரு மான் அரசாதலின் விழைதக்கதெனக் குறித்தது. "வேந்து விடு தொழிலிற் படையுங் கண்ணியும், வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே" (தொல்—மரபு 81) என்பதனல் உழுவித்துண்ணும் குறு முடி மன்னராகிய வேளிர்க்கும் பேரரசர் தரும் பரிசில் உண்டென் றுணர்க. "மூவருளொருவன் றுப்பாகியரென, வேத்திணர் தரூஉங் கூழே" (புறம்-122) என்பதனல் இக்குறுநில மன்னர்க்கு மூவர் தருங் கூழ் உண்மை யுணர்க. உலகு இங்ஙன நினைத்தாலும் பாரி யவற்றை விரும்பலனுகிக் கூறியது "பீணகெழுவேந்தரை யிறந்து மிரவலர்க் கீயும் வள்ளியோன்" (புறம் 119) எனவும் மூவேந்தரை "ஆடினிர் பாடினிர் செலினே நாடுங் குன்று மொருங்கீயும்மே" (புறம் 109) என வும் கபிலர் பாடுதல்பற்றி யென்று தெரிந்துகொள்க. நசைவைத்தோ- பற்றுவைத்தோ. முடியுடைப் பேரரசர்க்கு வேள்குலமகளிர்பாற் ருேன்றிய நன்மக்கட்கு அப்பேரரசுரிமை யுண்டென்பது உருவப் பஃ றேரிளஞ்சேட்சென்னிக்கு அழுந்தூர் வேள் மகளீன்ற மகன் கரி காலன், சோழகுல வேந்தனுதல் நோக்கி யுணர்க. இவன் இளமையிலே வெண்ணியில் இருபெரு வேந்தரையும் வேளிரையும் வென்ற அரிய செய்திக்கு அழுந்தூர் பெருமகிழ் கூர்ந்தார்த்தது என்பதனன் இவன் அழுந்தூர் வேட்டுப்போனதாக உய்த்துணரலாம். இதனைக்

"காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகா
லார்கலி நறவின் வெண்ணி வாயில்
............................................
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா வழுந்தூ ரார்ப்பினும் பெரிதே"

எனவரும் அகப்பாட்டான் (246) அறிக. "உதியஞ் சேரற்கு வெளி யன் வேண்மா ணல்லினியீன்ற மகன் நெடுஞ்சேரலாதன்" (பதிற். 2. பதிகம்) என்பதனானும் இதனுண்மை இனிது துணியப்படும். உரை சுலவும் தேவி-புகழ்சூழும் தெய்வப் பெண்ணாகிய தலைவி. கோமகற்கு ஈந்தனன் என்பது கோமகனல்லாத எளியன் ஒருவனுக்கு நல்கான் என்பது குறித்தது. ஈந்தனன் என்றது கூறுவர் கருத்தாலிழிவு குறித்தது. வெம்பாவி—கொடும்பாவச்செயலுடையன். பாவியென எ-று. பெருந்தேவிக்கு மனமழலச் செய்தலான் இது பாவமாதல் அறிக. "மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனமென்றாள்" என்றார் கம்பநாடரும். "கொளல்தீது" (குறள்) என வருவது கொண்டு பழியெனவும் பெருந்தேவிக்குத் துயர் விளைத்தலாற் பாவமெனவும் கருதிக் கூறியதாகக்கொள்க.

"கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்றலதனினு முயர்ந்தன்று"

(புறம். 204) எனச்சான்றோர் கூறுதலாற் கொள்ளாமை புகழாதலுண ரப்படும். செல்விடரை என்றது செல்வக்குறைபாடில்லாது பிள்ளை யான் மிடிப்பட்ட தன்குடிக்குச் செல்வமாகவுள்ள புதல்வியரை எ-று. பிறந்தகத்துச் செல்வியராகியவர் புக்ககத்து மிடிப்படுவர் என்பது குறிப்பு. (48)

213. கிழவன் கிழத்தியெனக் கேட்குந்தோன் னூற்கண்
வழுவின் றியைந்தவில் வாழ்க்கைக்—கொழுகப்
புகுவிப்பே னல்லாற் புதல்வியர்சீர் வாளா
வுகுவிப்பே னென்றெண்ணி னுங்கு.

(இ-ள்.)—கேட்குந்தொன்னூற்கண்-கேட்டற்குரிய நூல்களில், கிழவன் கிழத்தியென-கிழவனும் கிழத்தியும் என்று. வழு இன்று இயைந்த இல்வாழ்க்கைக்கு-ஒருகுற்றமும் இல்லாமல் மனம் பொருந் திய இல்வாழ்க்கைக்கண். ஒழுகப் புகுவிப்பேன்-ஒழுகும் வண்ணம் புகச்செய்வேன். கேட்டற்குரியன அல்லாத புதிய நூல்களை விலக்

சற்குக் கேட்குந் தொன்னூல் எனப்பட்டது. நூற்சட்கிழவன் கிழத்தி யென இயைந்த இல்வாழ்க்கை. எ-று. கிழவன்-கிழத்திக்கு உரியவன். கிழத்தி—கிழவற்குரியவள். இவ்வொருமையில் ஒருவற்கு ஒருத்தியும், ஒருத்திக்கு ஒருவனுமே உரிமையெய்துதல் குறித்தது. கிழவற்குக் கிழத்தியையும், கிழத்திக்குக் கிழவரையும் இத்தொன்னூல் வழக்கு உடன்படாமை தெளிய வைத்தவாறும். "ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப." என்னுந் தொல்காப்பியத்து (களவியல்) நச்சினார்க்கினியர் "கிழவன் கிழத்தி எனவே பலபிறப்பினும் ஒருவர்க்கு ஒருவர் உரிமை எய்திற்று" எனக் கூறிப்தனுன் இதனுண்மையுணர்க. நூற்கண் இயைந்த இல்வாழ்க்கை என்றது அருமை நோக்கியும், அதுவே பெரியோரொழுக்கம் ஆதல்நோக்கியும் எண்க. இல்வாழ்க்கைக்கு என்பது "கிழங்கு மணற் கீன்றமுளை" என்புழிப்போல உருபு மயங்கி வந்தது. இலக்கண நூற்கண் இயைந்த இல்வாழ்க்கைக்கு இலக்கியமாயொழுகப் புகுவிப்பேன் என்பது கருத்தாகக் கொள்க. புதல்வியர்சீர்-என்புதல்வியர்க்கு இயற்கையினுஞ் செயற்கையினுமுள்ள சீர்களை. வாளா ஊங்கு உகுவிட்பேன்என்றெண்ணீர்-வீணாக உம்விடத்துச் சிந்தச்செய்வேன் என்று நினைகிலீராகுக. எ-று. பல்பெண்டிராளற்கு மகட்கொடை நேர்வது புதல்வியர் சீர் வாளாஉகுவித்தல் ஆவது குறித்தது. பிறந்தகமும் புக்ககமும் ஆகாது வேறு என்னுங் கருத்தால் ஊங்கு என்றொழிந்தான். புதல்வியர் என்றதனாற் புதல்வியர்க்குத் தந்தையர் செய்வது இஃதென்று தெளிவித்தவாறும். இருமகளிர்க்கும் ஒருவனை மணமகனுக்குதல் பாரி கருத்தன்று என்பது "சேறும் வாழியோ......மகளிர் நாறிருங் கூந்தற்கிழவரைப் படர்ந்தே" (புறம். 113) என்பதன்கட் கபிலர் பன்மையாகக் கிழவரைக் கூறுதலான் அறிக. (49)

214. துய்க்கும்பண் பின்றித் தொடாஅ தொழிவதுநன்
றுய்த்தங் கணத்துக்க வொள்ளமிழ்தி—னெய்த்துத்
தனியே முதிர்நல்லா டக்கோ ரிரங்கற்
கினியள்பல் பெண்டாள னிற்கு.

(இ-ள்.)—அங்கணத்து உய்த்து உக்க ஒள்ளமிழ்தின்-தூயவல்லாதன கலந்து கழியும் பொல்லாப் புறைக்கடையிற் கொண்டுபோய் உகுத்த ஒள்ளிய அமிழ்தத்தினும், தொடாஅது-பிறராற் றொடப்படாது. துய்க்கும்பண்பின்றி-தொடப்படாமையாற் றுய்க்குந் தன்மையில்லாமல். ஒழிவது நன்று-சுவையொழிவதாகிய அமிழ்தம் நல்லதாகும். அதுபோல; பல்பெண்டாளன் இற்கு-பல் பெண்டிராளனிடத்துப்புக்க இல்லாளினும். எய்த்துத் தனியே முதிர் நல்லாள்-உடம்

பும் மனமும் இளைத்து மணவாது தனிநிலையிலே மூத்த நற்பெண்டு. தக்கோர் இரங்கற்கு இனியள்-தகுதியுடைய பெரியோர் இரங்குதற் பொருட்டு இனியளாவள் எ-று.

அமிழ்து-பால் முதலிய இனிய உணவு. "கற்புடைய பெண்ணமிழ்து" என்பதுபற்றி உவமையாயிற்று. இஃதெடுத்துக் காட்டுவமை. தொடாதொழிவது நன்றென்றது அதன் தகுதியறிந்தவர் கண்டு இரங்கற்கு இனியதாதல் கருதிஎன்க. இதனை உவமேயத்துவைத்து விளக்கியதனாலறிக. பல்பெண்டிராளன் அகம் பல கழிமுடைநீரும் கலந்து கழியும் அங்கணமென்றது அதன் றூய்மையற்ற இழிபுகுறித்து வந்தது. பல் பெண்டிராளனிடைப் புக்க இல்லாள் அங்கணத்துக்க அமிழ்து தன்னிலைகுன்றி அங்கணமே யாகி உருமாய்தல்போலத் தன்னிலை குன்றி இழிவெய்தி உருமாய்வள் என்பது கருத்து. பல் பெண்டிராளன் இல்லாள் தக்கோரால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுவள் என்றும் மணவாது தனிமூத்த நல்லாள் அவரால் இரங்கற்கினியள் என்றும் உவமையால் வேற்றுமை காட்டியவாறும். பல் பெண்டிராளன் மனைவி வெறுக்கப்படுதல் முன் வதுவையின் மங்கலமடந்தையுடையவனை மணத்தற்கு உடன்படுதனோக்கி என்றறிக. தனியே முதிர் நல்லாட்குத் தொட்டுத்துய்க்கப் பெறாத அமிழ்தை உவமித்ததனால் அவள் மிச்சிற்படாத தூய்மையளென்றும் பல்பெண்டிராள னில்லாட்கு அங்கணத்துக்க அமிழ்தை உவமித்ததனால் அவள் நல்லோர் ஒதுக்கும் மிச்சிலேபாவளென்றும் கொள்ள வைத்ததுகுறிக் கொள்க. அங்கணத்து உகாத நிலையில் ஒள்ளமிழ்தம் ஆகியது உக்கநிலையில் அங்கண மாதல் காண்க. ஒள்ளமிழ்தம் என்றது "கடல் விளையமிழ்தம்" (நற்றிணை. 88) எனப்படும் உப்பினை விலக்கற்கு.(50)

215. வேட்டுழி யெல்லாம் விலங்கிற் செலாதுமன
நாட்டலறி வென்றுமண நாட்டினா—ரூட்டும்
அறத்தா றொழுகற்கே யன்புகரை செய்தார்
புறத்தாறு போகாப் பொருட்டு.

(இ-ள்.)—விலங்கின்-விலங்குபோல். மனம் வேட்டுழியெல்லாம்-உள்ளம் விரும்பிய இடங்களிலெல்லாம். செலாது நாட்டல் அறிவென்று-செலவிடாது ஓரிடத்தே நிலைசெய்வதே யறிவென்று. மணம் நாட்டினார்—வதுவை மணத்தை மக்கட்கு நிலை செய்த பெரியோர். ஊட்டும் அறத்தாறு ஒழுகற்கே-மறுமையினும் பயனை உண்டாக்கும் அறநெறியில் இயலுதலேவேண்டி. புறத்தாறு போகாப்பொருட்டு-நெறியின் புறம் செல்லாமைப் பொருட்டு. அன்புகரைசெய்தார்-மனத்தெழும் அன்பினைக் கரை கட்டினார். எ-று.

"எல்லா வுயிர்க்கு மின்பமென்பது தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்" (தொல் பொருளியல் 29) என்பதனால் இன்பமென்பது மக்கள் தேவர் நரகர் விலங்கு எனப்பட்ட நாற் கதியினும் ஒத்து நிகழுமேனும் ஈண்டு விலங்கினை எடுத்து உவமை கூறியது முறையின்றி யாண்டும் வேட்கையைச் செலவிடும் இழிபு நோக்கி என்றறிக. விலங்கு என்பன மாவும் புள்ளும்-எ-று. செலாது மன நாட்டலறிவு என்றது "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பாலுய்ப்பதறிவு (குறள்) என்றதுபற்றி. வேட்டுழியெல்லாம் மனம் செலவிடுதல் விலங்கறிவென்பதும், அங்ஙனமன்றி மன நாட்டல் மக்களறிவென்பதும் உணர்க. மன நாட்டல்-வதுவை முறையாற் காரண நிலை செய்தல். இருமனமாயின் அது மன நாட்டலாகாமை உணர்க. கரை செய்தல் வினையால் அன்பு என்பது வெள்ளம் என்று குறித்தவாறும். இஃதேக தேச உருவகம். அன்புவெள்ளம் மணந்த ஆணும் பெண்ணுமாகிய இருகரையினிடையே தொட்டொழுகற்கும், அவ்விருகரையும் கடந்து நெறியின்புறம் போகாமைக்கும் அணைசெய்தார் என்பது கருத்து. வெள்ளம் கரையுடைத்தோடுவது தீங்குபயத்தல் போல இவ்வன்பும் இவ் விட்டகரையைக்கடந் தோடிற்றீங்கு பயக்குமென்று காட்டிய வாறும். புறத்தாறு-ஆற்றின் புறம். நெறியின் புறம்: "நெறியின்புறஞ்செலாக் கோசலம்" என்றார் கம்பநாடர். தீது ஒருவுதலும் நன்றின்பால் உய்த்தலுங் கருதிப் புறத்தாறு போகாது அறத்தாறொழுகல் கூறிற்று. மக்கட்கும் விலங்கிற்கும் உணவும் துயிலும் அச்சமும் புணர்ச்சியின்பமும் ஒக்குமேனும் இவற்றை நெறியின் அளவு செய்தொழுகலே மக்களறிவிற்குச்சிறந்த தென்று மன நாட்டின பெரியோர் காமத்திற்குக் கரை செய்த வாறென்று காட்டியதாம். உணவையும் துயிலையும் அளவு செய்தல் மிருதிகளிற்கண்டு கொள்க. "அஞ்சுவ தஞ்சாமைபேதைமை" (குறள்) "அஞ்சுவ தோருமறனே" (குறள்) என்பனவற்றால் அச்சத்தையும் நெறிப்படுத்தல் கண்டு கொள்க. இல்லற நிகழ்த்துவார் துறவற நிகழ்த்தவேண்டுதலின் மன நாட்டலிற் பயிறல் ஈண்டே இன்றியமையாதென்பது. "இல்லற நிகழ்த்தினர் துறவற நிகழ்த்துங் கருத்தினராக வேண்டுதலின்" என்றார் நச்சினார்க்கினியரும் (தொல். கற்பியல் 47). (51)

216. மிக்க வலிகெழுமு வேந்தர்க்கே வேட்டாலுந்
துக்க வறியோர்க்கே சூழ்ந்தாலுந்—தோக்க
வறத்துக்கே பெண்ணல்க லல்லால்வெங் காமத்
திறத்துக்கே நல்கல் சேயேன்.

(இ-ள்.)—ஆறறுப்புக்களாற் சிறந்த வலிகெழீஇய முடியுடை வேந்தர்க்கே வதுவை விரும்பினும் அவரின் வேருய்த் துக்கப் பிறப்பினராய வறுமையாளர்க்கே வதுவை சூழ்ந்தாலும். எ-று. இரப்பிடும்பை எனப்படுதலாற் றுக்க வறுமை எனப்பட்டது. "மக்கட்பிறப்பினிரப்பிடும்பையிம்மூன்றுந் துக்கப்பிறப்பாய் விடும்" என்பதனுனும் அறிக. "அறிவுமொழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல் கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ் சோறுள்ளாள்" எனவரும் நற்றிணையாற் (110) செல்வர்கட் பிறந்தமகளிர் வறியவர்கட்புக்கு இனிது வாழ்தலும் உணர்ந்துகொள்க. எனக்கு உதவவல்ல வேந்தர்க்கு வேட்டாலும் என்னல் உதவற்குரிய வறியர்க்கே சூழ்ந்தாலும் எனக் கருதினுமமையும். தொக்க அறம்-இருவர் சேர்ந்து புரியும் அறவொழுக்கம். இல்லறம் துணையொடுபுரிவதாதல் நினைக்க. பெண் நல்கல் - மகட்கொடை நேர்தல். வெங்காமத்திறம்-கொடிய காமக் கூறுபாடுகள். இல்லறத்தில் ஒருவனும் ஒருத்தியும் ஒத்துத்துய்க்கும் இன்பத்தின் வேறு என்றற்குரிய வெங்காமம் என்றும், அதன் கூறுபாடுகள் பலவிதமாய் வாத்ஸாயனம் முதலிய காம சாஸ்திரங்களிற் கேட்கப்படுதலிற் காமத்திறம் என்றும் கூறிற்றென்க. அறக்கிழத்தி ஒருத்தியே யென்றும் பின்வதுவையர் காமக்கிழத்தியர் என்றும் நூல்கள் கூறுதலான் இவ்வாறு பகுத்துரைத்தான் எனினும் அமையும். (52)

217. பூவலர்தேர் வண்டினுளம் போகப் பலர்விழையுங்
காவலர்தம் பொல்லாத காமத்திற்—கேவியசெய்
மாக்கள்யா மல்லே மறுவாற்றுத் தொல்வேளிர்
கோக்கள்யா மாகக் கோளும்.

(இ-ள்.)—பூவலர்—பூக்கின்ற மலர்; வினைத்தொகை. பூக்கும் அமயந் தெரிந்து கொள்ளவல்ல வண்டு புதிய புதிய மலர்களை விழைந்து போதல் போலத் தம் உளம் புதியர்புதியர் மகளிர்பாற் செல்வது காரணமாகப் பலரை விரும்பாநிற்கும் காவலருடைய தீயகாமத்தின் பொருட்டு அவர் ஏவியனவற்றைச் செய்யும் விலங்கனையர் யாங்களல்லேம். எ-று. மறு ஆற்றுவேளிர்—குற்றஞ் செய்யாத் தொல் வேளிருள்ளே மறுவைப் பொறுக்கமாட்டாத வேளிர் எனினும் அமையும். மறுவாற்றுமையிடையிலுண்டாயதன்று, பழைமை தொட்டே என்பது குறிப்பு. "தொன்முதிர் வேளிர்" என்பது புறப்பாட்டு (24). கோக்கள் எனப் பெயர் சிறந்தவர் யாமாகக் கருதிக் கொள்ளுக எ-று. வேளிர்க்கு வேந்து விடு தொழிலுண்டேனும் அவை அறங்காத்தற்கும் நாடுகாத்

தற்கும் ஆதலல்லது பொல்லாத காமத்திற்காகாமை நோக்கிக் கொள்க. காவலர்தம் பொல்லாத காமத்திற்கு அவர் ஏவியன தாம் செய்தலாகத் தூதுவர் தம்முள் விளைந்து கொள்ளுமாறு கிடத்தல் கண்டு கொள்க.

218\. மறுத்தே னெனவழங்கி மாறன்முன் சீர்த்தி
பொறுத்தே னெனநீர் புகல்வீர்—வெறுத்தாற்
பகைக்கஞ்சே னெல்லாம் பகுத்துணரும் நல்லோர்
நகைக்கஞ்சு வேனென்பீர் நன்று.

(இ-ள்.)—பாண்டியன் முன்னர் மகண்மறுத்தே னெனச்சொல்லி இவ்வினை மறுத்தலாற் பழிபொறுத்தேனுகேன் சீர்த்தி பொறுத்தே னுவேன் என்று நீர் விரும்பிக் கூறுவீராகுக என்பதாம். இம்மகண் மறுத்தல் காரணமாக என்னை வெறுத்தானுயின் அவ்வெறுப்பான் மூளும் பகைமைக்கு அஞ்சுவேனல்லேன். எல்லாம் பகுத்துணரு நல்லோர்—நன்றுந் தீதுமாகக் கலந்துள்ள பலவற்றையும் குணமுங் குற்ற மும் கண்டு பகுத்துணரும் நன்மையாளர். பழிமுறுவற்குப்பெரிதும் அஞ்சுவேன் என்றுரைப்பீராகுக. எ-று.

அரசர் பகை பூதவுடம்பை யழித்தலானும் நல்லோர் நகை புக ழுடம்பை அழித்தலானும் உள்ளவேற்றுமை கருதி இங்ஙனங் கூறி னுன் என்க. நல்லோர் நகை என்றலாற் பொல்லார் பகைக்கஞ்சேன் என்று குறித்தவாறு காண்க. எல்லாம் பகுத்துணரு நல்லோர் என் றது ஒன்றும் பகுத்துணர மாட்டாத பொல்லார் என்று மறுதலையிற் கொள்ள வைத்தவாறும். நல்லோர் நகை அவர் தொடர் விடுதற்குக் காரணமாதலானும் இத்தொடர் விடுதலே பல்லார் பகை கொளலினும் பெருந்திமை பயப்பதாதலானும், இவ்வாறு கூறினுன் என்க. 'பல்லார் பகை கொளலிற் பத்தடுத்த திமைத்தே நல்லார் தொடர் கைவிடல்'' என்றார் திருவள்ளுவனுரும். நன்று—பெரிது. ''நன்று பெரிதாகும்'' என்பது தொல்காப்பியம் (உரியியல்). ஈண்டுப் பெரிதஞ்சுதல் கூறிய தனுற் பகைக்குச் சிறிதஞ்சேன் என்று குறித்தவாறு காண்க. ''பணி யாத மன்னர்ப்பணிவின்று'' (இன்னு நாற்பது 14) என்ற கபிலர் கருத்தே கொண்டு பாரி பணிந்து மொழியலனுயினன் என்று உய்த்துணர்க. (54)

219\. என்றே பலவா றெடுத்தியம்பித் தூதுவரை
யன்றே செலவிடுத்தா னுண்டகைவே—ணன்றே
யுளத்தமைத்தா ரன்னு ருயர்வழுதி முன்போய்க்
கோளத்தேரித்தார் கேட்டவேலாங் கோண்டு:

(இ-ள்.)—பலவாறு-பன்னெறி எடுத்தியம்பி என்றது படுத்த மொழியாற் கூறுது எடுத்த நெடுமொழியான் மறுத்தது குறித்தது. பன்னெறி எடுத்துக்காட்டி இயம்பி எனினும் அமையும். தூதுவரை-ஒருவனுழை ஒருவன் மாற்றங் கொண்டுரைப்பாரை; "ஒருவனுழை ஒருவன் மாற்றங்கொண்டுரைத்தலிற் றூதாயிற்று" என்றார் நச்சினார்க்கினியர். (தொல். அகத்-40.) அன்றே என்றது புக்க நாளிலே எ-று. மறுத்துச் செலவிடுத்தற்கு ஏற்ற ஆண்டகைமையை யுடையோன் என்க. அன்னோர் நன்றே உளத்துக்கொண்டு அமைத்தார் ஆகித்தாம் கேட்டன எல்லாவற்றையும் உயர் வழுதியுளத்துக்கொள்ள அவன்முன் சென்று தெரிவித்தார். எ-று.

கேட்டவெலாங் கொண்டு வழுதி கொளத்தெரித்தார் என்றது கேட்டன எல்லாவற்றையும் நெஞ்சிலவ்வாறே கொள்ளுதலருமையும் அங்ஙனங் கொண்டனவற்றைப்பிறன் கொள்ளத் தெரிவித்தலருமையுங் குறித்தது. உயர் வழுதி என்றது மகள் மறுத்தவேள் சிற்றரசன் என்பது கருத நின்றது. வழுதிமுன்போய்—என்றது அமைச்சர் வாயிலாற் புகாமல் நேரேசென்று கூறியது கருதிற்று. மறுத்த செய்தியாதலிற் பலரறியாமல் அரசற்கெதிரே சென்று கூறினர் என்றலும் ஒன்று.

(55)

220. மனைவி யுடையான் மறமடந்தை வேட்கு
நினைவை யறப்பழித்து நீதி—தனையறிவித்
தேரார் மணமறுத்தா னென்றார் விழைவழுதி
வேரா வெதும்ப வெறுத்து.

(இ-ள்.)—மனைவி-க்ருகணி; அசமுடையாள் என்பது வழக்கு. மனைவியுடையான்-மனைவியால் எல்லாவுடைமையும் உள்ளவனாயினவன்; "இல்லதெனில்லவள் மாண்பானால்" (குறள்) எனவும் பிறன் பொருளாள்" (ஷை) எனவுங் கூறுதலான் உண்மையுணர்க. "பொற்றாலி யோடெவையும் போம்" என்பதும் உண்டு. இவன் வேட்டாலும் மனைவியாகாள் என்பது தோன்ற மறமடந்தை என்றதாம். வேட்கும் நினைவையே அறப்பழித்தலாற் செயல்பழித்தல் கூறவேண்டாதாயிற்று. அறப்பழித்தல்-முற்றப் பழித்தல்; அறப் பெறுதல் போலக் கொள்க. "நின்னையறப்பெறுகிற்பேனேல்" என்ப. நீதி-அரசற்குச் சிறந்த நெறிமுறை; ஈண்டுக் கொண்டாளைக் கைவிடாது பொன்போற் போற்றி உடன் வாழ்வது குறித்தது:

தன்னுடம்பு தார மடைக்கலந் தன்னுயிர்க்கென்
றுன்னிக்து வைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப் போற்போற்றிக் காத்துய்க்க வுய்க்காக்கான்
மன்னிய மேவதந் தரும்'' (ஆசாரக் கோவை 95) என்பது காண்க. ஏர் ஆர் மணம் - அழகு நிறைந்த கலியாணம்; என்றது பாண்டியன் கருத்தொடு படுத்துக் கூறியதாம். விழை வழுதி—இம் மணத்தை விழைந்த பாண்டியன். வெறுத்து-இவ்விடையைக் கேட்டுப் பாரியை முனிந்து எ-று. உடல் வேர்த்து உள்ளம் வெதும்ப மணமறுத் தான் என்றார் என்க. ''வேர்த்து வெகுளார் விழுமியோர்'' (நாலடி 64) என்றாருமுண்டு. சிற்றரசன் பேரரசற்குவேட்கு நினைவை அறப்பழித் தலும் நீதியறிவித்தலும் வெறுத்தற்கு ஏது எனவும், மணமறுத்தல் வேர்த்து வெதும்பற்கு ஏது வெனவுங் கொள்க. ஏரார் மணம் என்று தூதுவர் புகழ்ந்து கூறி, மணமறுத்தது தமக்கு உடன்பாடின்மை முற் படக்காட்டினர். வேரா வெதும்ப—வெதும்பி வேர்க்க என மாறுக. ''பெயர் பெற்றுப் பிறந்தேன்'' (மணி–9–41) என்பது பிறந்து பெயர் பெற்றேன் எனவாதல் போலக்கொள்க. (56)

221\. மணமறுத்தல் கேட்டுக்கோ மாற னுளத்துக்
குண மறுத்தின் னுதனைத்துங் கொண்டு—திணைநிறுத்த
நூல்வலியோ வீது நுவல்வித்த தன்றியவன்
வேல்வலியோ வென்றுசோலு மேல்.

(இ-ள்.)—கோப்பாண்டியன் தனக்கு மணம் இயையாது மறுத் தலைக் கேள்வியுற்று உள்ளத்திற் பாரிக்குள்ள குணமனைத்தும் இல்லை யாக மறுத்து அவற்கில்லையாகிய இன்னாதனைத்தும் உளவாகக்கொண்டு என்க. திணை நிறுத்த நூல் வலியோ-ஒழுக்கத்தை நிறுவிய நூலு ணர்ச்சி வன்மையோ நுவல்வித்தது. இஃதன்றி அவன் வேற்படை வன்மையோ நுவல்வித்தது என்றுரைத்து மேலுஞ் சொல்வான். எ-று. அன்றியவன்—பகைத்தவன் எனினும் அமையும்; அன்றியவன் வேல்வலியோ நூல்வலியோ ஈது நுவல்வித்தது என்க. கல்விப்பெரு மிதமோ, தறுகட் பெருமிதமோ ஈதுநுவல்வித்தது என்பது கருத் தாகக் கொள்க. இவ்விரு பெருமிதமும் பாண்டியர் குடிக்குச் சிறந்தன வாதல் நினைக்க. சங்கம் அரங்கேறிய நூலும் கடலெறிந்த வேலும் அக்குடிக்குச் சிறப்பாக உண்மை நினைக்க. பாரிமறுத்த மொழியில் நெறிமுறையும், வீரமுமே தோன்றலால் இவ்விரண்டுமே கூறினான். ஆசாரம் நுவறலால் ''ஆசாரமென்பது கல்வி'' (நான்மணி) என்பது பற்றி நூல்வலியோ என்றான் என்க. (57)

222. பாரி மகளிர்பாற் பாரித்த காமம்போய்
நேரில் வெகுளியாய் நீண்டதே—காரியமாய்
தூதர் மறுத்தபடி சொல்லக்கேட் டங்கிலையே
கோதில் குலச்செழியர் கோக்கு.

(இ-ள்.)—மகளிர்பால் பாரித்த காமம்—மகளிடை வளர்ந்த வேட்கை. பாரித்தல்—பருத்தல். அஃது ஈண்டு வளர்தற்கு ஆயிற்று. "முலைப்பாரிப்புக் கண்டு" என்பது திருக்கோவை (132). காமம்—காமந் திரிந்து; காமம்—புணர்வு விருப்பம். மகளிர்பாற் காமம் போய்ப் பாரி பால் வெகுளியாய் நீண்டதே என்க. காமம் கிட்டாத காரணத்தால் உண்டாவது வெகுளியாதல் காண்க. "காமம் வெகுளி மயக்கம்" என்ற முறையும் உணர்க. "பால் போய்த் தயிராயிற்று" என வழக்கினும் வரும். பேரரசனாகிய பாண்டியன் தனக்கு நேரில்லாத சிற்றரசன்கட் செய்யலான் நேரில் வெகுளி எனப்பட்டது.

√"இன்னா சிறியார் மேற் செற்றங்கொளல்" (இன்னாநாற்பது) என்றார் கபிலரும். நீண்டது—வளர்ந்தது. காரியம் ஆய்தூதர்—இராச கார்யத்தை ஆராய்ந்த தூதுவர். காரியம் மாய்தூதர் என்பதும் இடத்திற்கேற்ற விழுக்காடு. பாரி மறுத்தபடி தூதர் சொல்லக்கேட்டு என்க. காமம் வெகுளியாய்த் திரிந்து நீளுதற்கு நாழிகை சில வேண்டாது கேட்டவளவே வெகுளியாய் நிகழ்தலால் அங்கிலையே எனக்கூறிற்று. கோதில் குலத்தால் விசேடித்தது அக்குலத்து இவ்வரசன் கோதுடையன் ஆயினன் என்பது குறித்து நின்றது. நேரில் வெகுளி தீதுள் வைத்துத் தனக்கு ஒப்பில்லாத சினம் எனினுமமையும். (58)

223. தன்னை யதிகனாத் தானினைந்தோ மற்றுலகா
ளென்னை யெளியனா வெண்ணியோ—வென்னோ
மகள்தல் செய்யான் மறுத்துவே ளெற்குத்
துகள்தல் செய்தான் றுணிந்து.

(இ-ள்.)—என்னினுந் தன்னை மிக்கோனாகத் தானே கருதிக் கொண்டோ என்க. உலகாள் என்னைத் தன்னினு மெளியனாக வெண்ணியோ என்க. தன்னை யெளியனா யெண்ணுமைக்கு "உலகாள்" என்று விசேடிக்கப்பட்டது. மற்றிவ்விரண்டும் அல்லவாயின் யாதோ; யார்க்கும் வேண்டியதையீயும் வேள் எற்கு ஈதல் செய்யான் துணிந்து மகண்மறுத்து, அம்மறுத்தவளவே யன்றி எற்குத் துகளும் ஈதல் செய

தான் என்றுணருகக்கொள்க. "மகளிரைத் தந்திக" என்று கேட்டற்கு மகளீதல் செய்யான் என்றது இருவருள் ஒருத்தியையும் ஈதற்குடன்படாது மறுத்தல் குறித்தது. "தானினைந்தோ" என்றது உலகு அங்ஙனம் நினையாமை குறித்தது. உலகாள் என்னை என்றது, என்போல் உலகாளாத தன்னை என்பதுபட நின்றது. துகளீதல்—தான் கருதிய கருத்திற்குக் குற்றம் ஏறிடுதல். தன்னை அறிவினால் அதிகனாகவும், என்னைச் செல்வத்தால் எளியனாகவும் எண்ணியோ என்பது கருத்தாகக் கொள்க. (55)

224. கண்கோண் டுலகில்யான் காண விவனகத்துப்
பெண்கோண்டு வாழ்வார் பிறருளர்கோன்—மண்கோண்ட
யான்விழைந்த கன்னியரை யார்நினைவா ரென்றறைவா
னான்விழைந்த வேலோ னுருத்து.

(இ-ள்.)—யான் கண் கொண்டு காண என்க. கண் கொண்டு என வேண்டாது கூறியது அம்மகளிரைப் பெண்கொண்டு வாழ்தல் காணவேட்ட என் கண்கள் என்பது குறித்து வந்தது. உலகிற் பிறருளர் கொல் என்க. பெண் கொள்ளினும் அப்பிறர் இவ்வுலகில் யான் காண வாழ்வாரல்லர் என்பது கருத்து. உலகில் என்றான் "யாண்டுச் சென்றியாண்டு முளராகார் வெந் துப்பின் வேந்து செறப்பட்டவர்" (குறள்) என்னுந் துணிபுபற்றி மண்கொண்ட யான்—உலகினை உரிமையாகக்கொண்ட யான் எ-று. விழைந்த கன்னியரை—விரும்பிய கன்னிப் பெண்டிரை. யார் நினைவார்—யாவர் உள்ளத்தாற்றொட எண்ணுவார். யான் விழைந்த கன்னியரை யார் நினைவார் என்றது, தான் விழைந்ததைப் பிறர் விழைதல் பொறாமை யுணர வந்தது காண்க. கபிலர் வேண்டியும் பிறரிம்மகளிரைக் கொள்ளாமைக்கு ஏது இஃதென உணர்க. "மன்னர் விழைப விழையாமை மன்னரான், மன்னிய வாக்கந் தரும்" என்றதிருவள்ளுவர்க்கு மன்னர் விழைப விழைதல் மன்னரால் மன்னிய கேடுதரும் என்பது அருத்தாபத்தி முகத்தால் உடன்பாடாதல் கண்டுகொள்க. ஊன் விழைந்த வேலோன் என்றது இனி அவ்வேலே துணையாக அவனினைத்தல் கருதிற்று. உருத்து-வெகுண்டு.

225. காரைப் பிணித்துக் கடலை யடியடக்கிப்
பாரைச் சுமந்தபுயப் பாண்டியர்தம்—வீர
நினையான் மணமறுத்து நின்றவேள் பாரி
தனையா னுணர்த்த றகும்.

(இ-ள்.)—காரைப் பிணித்தது—"மழை பிணித்தாண்ட மன்னவன்" என்னுஞ் சிலப்பதிகாரத் தொடரானறிக. கடலை யடியடக்கல்—"அடியிற் றன்னள வரசர்க்குணர்த்தி, வடிவேலெறிந்த வான்பகை பொறாது" எனவரும் அந்நூலடிகளான் அறிக. பாரைச் சுமந்த புயப் பாண்டியர்—பூமிதேவியை ஏந்திய தோளுடைய பாண்டிய குலத்தோர்; புயப்பாண்டியர் என்றதற்கேற்பப் பார் பூமிதேவி எனப்பட்டது. இப் பெருந் தெய்வமகளைத் தம்புயத்திலேந்துதற்கு முன்னே அவள் நன்மையின் பொருட்டு அரும்பெரும் வினையிரண்டு செய்தது குறித்ததாகச் சொல்க. பாரையளிக்கவல்ல காரையும் பாரையடுக்கவல்ல கடலையும் அவட்கு அநுகூலமாக முறையே பிணித்து அடக்கியது கூறிற்றென்க. பாண்டியர்தம் வீரம் என்றது "மறப்போர்ப் பாண்டியர்" (அகம்) என்பதுபற்றி வந்தது. மறுத்தும் நின்ற வேள்பாரி என்றது மறுத்தவளவே ஒழியாது இன்னும் நிற்றலை வெறுத்தல் குறித்தது. கடலைப்படி யடக்கி அரசர்க்குணர்த்திய எங்குல வீரத்தை யான் இவனுக்கு உணர்த்தல் தக்கதாம் எ-று. பாரியைப் பிணித்து அடியடக்கவெளிதென்பது குறிப்பு. (61)

226. மணம்பேசி னேற்கு மறுத்தில் லறத்தின்
குணம்பேசி விட்ட கொடியோ—னிணங்காற்கு
நூலா னறிவித்த னொய்தாகு மேன்வெற்றி
வேலா னறிவிப்பேன் வேறு.

(இ-ள்.)—பேசினேற்கு மணம் மறுத்து என்க. பேசுதல்—மகட் பேசுதல். "பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ" (பாலகாண்டம்) என்று கம்பநாடர் கூறுதல் காண்க. "மகட்பேசி" என்பது ஆண்டாள் திருமொழி. இல்லறத்தின் குணம்—இல்லற வொழுக்கத்தின் இனிய பண்பு. பேசிவிட்ட கொடியோனிணங்காற்கு—இல்லறத்தினிய பண்பினை வாயளவிற் பேசி என்னைத் தள்ளிய உள்ளக் கொடுமையுடையனாகிய இணங்காதாற்கு நூலான் அறிவித்தல் நொய்தாகும்—இல்லற வொழுக்க நூல்கள் ஒருவற்குப் பல் பெண்டிர் உடன்படுதலைக் காட்டி உணர்வித்தல் மெல்லிதாகும், "மிக்க, கனம் புரிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ் தன் மனம் புரிந்த வாறேமிகும்" (நாலடி) என்று வேள்பாரியைக் கீழாக நினைத்துப் பாண்டியன் தன் கருத்தாற் கூறினானெனினும் அமையும். வெற்றிவேல்—"கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன்" என்னுஞ் சிலப்பதிகார வடியைத்தழீஇ வந்தது. வேறு என்றது தாங்காவலியதாக உணர்வித்தலைக் குறித்தது. (62)

227. முத்தங் கோழிக்கு முதுநீர்த் துறைவழுதி
சித்தங் கோதித்த சினவார்த்தை—யித்தனையும்
பேதைக் குரைத்த பெருமறையிற் பாயதுவேண்
மேதைப் புகழோடு மிக்கு.

(இ-ள்.)—முதுநீர்த்துறை—பழங்கடற்றுறை. பிறர்கடல் உப்புக் கொழிக்க இவ்வழுதியர் கடல் முத்தங்கொழித்தலைக் கூறியது வருந்தாத செல்வ வருவாய் உடைமை காட்டியதாம்; பிறர் வேந்தர் இவன் கடற்பிறந்த முத்தினாரத்தை அணிபவராதலும் இவன் "தன் கடற் பிறந்த முத்தினாரம்" (அகம். 13) அணிபவனாதலும் ஈண்டைக்கு நினைக்க. சித்தங் கொதித்த சினவார்த்தை—உள்ளம் வெந்ததனாலாகிய வெகுளிக்குறிப்பு நிறைந்த சொற்கள்; வருந்தாத வருவாயுடையவன் சினத்தைப் பொருளென்று கொள்ளுதல் குறித்தது. "சினமில்லாச் செல்வத்தைச் சேர்க்க" என்றார் பிறரும். இத்தனையும்—இம்முழுதும். பேதைக் குரைத்த பெருமறையின்—மறை போற்றாத அறிவிலிக்குக்கூறிய பெருமையைத் தரத்தக்க மந்திர மொழியினும் விரைந்து. பாயது—பரந்தது. வேள் மேதைப்புகழோடு—பாரியினுடைய அறிவோடு கூடிய புகழொடு மிக்குப் பரந்ததுஎன்க. சினவார்த்தையின் இழிவுதோன்றப் புகழோடு எனப்பட்டது. மேதைப் புகழ் என்றது பேதைமைச் சினவார்த்தை என்பது தோற்ற வந்தது காண்க. சினவார்த்தைக்குக் காரணம் ஆராயப் புகுமிடனெல்லாம் வேள் மேதைப் புகழே முன்னிற்றல் உய்த்துணர்ந்து கொள்க. (63)

228. அகத்தான்வேள் பாரி யருமைபா ராட்டி
மிகத்தாம் புறத்தான் வெறுத்துச்—சேகத்தாள்
குலவேந்தன் மாறன் குறிப்பி னியன்றார்
நிலவேந்தர் பல்லோரு நேர்ந்து.

(இ-ள்.)—நிலவேந்தர் பல்லோரும் வேள்பாரி யருமையினை அகத்தால் மிகப்பாராட்டி என்க. ஈண்டு அருமை முடியுடை வேந்தற்கு அறமுரைத்து மகண்மறுத்த அரிய பண்பு. அருமை பெறுதற்கு அரிய தன்மையுமாம்; "பாரியதருமை யறியார்" என்பது புறம் (116). பாராட்டி மிக—மிகப்பாராட்டி எ-று. போர்மலைந்த மூவரை அருமை யறியார் என்றதனாற் பிறர் சிற்றரசர் பலரும் அருமை யறிந்தார் என்றும், அறிந்து பாராட்டியும் தம் வலியின் சிறுமையாற் பேரரசர்க்கு இயைபப் புறத்தால் வெறுத்து நடித்தார் என்றும் கருதிக்கொள்க.

இங்ஙனம் உள்ளும் புறனும் வேறுபட்டொழுகற்குக் காரணம் மாறன் உலகத்து ஆள்குல வேந்தனாதலான் என்று காட்டியது காண்க. மாறன் குறிப்பின் நேர்ந்து இயன்றார்—பாண்டியன் வெறுத்த குறிப்பின் ஒத்து ஒழுகினார்; குறிப்பு—கருத்து. "குறிப்பேகுறித்தது கொள்ளுமாயின்" என்ப (தொல். களி 6). இவ்வாறு பொய்யே ஒழுகல் நிலவேந்தாரதல்பற்றி எ-று. ஒத்து ஒழுகாராயின் நிலனுடையராகார், வேந்தராகார் என்பது கருத்து. அறம் போற்றாது பொருள் போற்றுவார் செயல் இங்ஙனமென்று காட்டியவாறும். (64)

229. தேன்னன் பகைத்த திறமிதுமேற் செப்புவதிம்
மன்ன னவைக்கவ்வை வந்திடையே—தன்னகத்துத்
தேய்வப் புலமை தேருள்வித்துப் பாரியருள்
செய்யப் பறியுண் டிறம்.

(இ-ள்.)—தென்னுடைய பாண்டியன் பகைகொண்ட பகுதி இஃதாம் எ-று. மேற் செப்புவது—இனிக் கூறக்கிடப்பது. ஔவை இவ்வாறு பகைத்த வேந்தனவைக்கு இடையே வந்து; தன் அகத்துத் தெய்வப் புலமை—தன்னுள்ளத்துத் திப்பிய ஞானத்தை. தெருள்வித்து—தெருட்டி. பாரி அருள்செய்யப் பறியுண்திறம்—பாரி தன்பால் அருளுதல் காரணமாகப் பறியுண்ட பகுதி எ-று. பறியுண்திறம் மேற் செப்புவது எ-று. இடையே என்றது, அதிகனைப் பிரிந்ததற்கும் பாரியைக் கண்டதற்கும் இடையே எ-று. பறியுண்டது குற்றமாகாமைக்கு அருள் செய்யப் பறியுண்ட திறம் எனப்பட்டது.

"உறைகழித்த வேலையொத்த விழிமடந்தை மாதர்மே
லுறைய வைத்த மனமொழித்தவ் வுலகளந்த நம்பிமேற்
குறையை வைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்
கொல்லைதன்னில் வழிபறித்த குற்றமற்ற செங்கையான்
மறை யுரைத்த மந்திரத்தை மாலுரைக்க வவன்முனே
மனமடக்கி மடியொதுக்கி வாய்புதைத்தவ் வொன்னலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றவிந்த நிலைமையென்
கண்ணைவிட்டகன்றிடாது கலியனாணை யாணையே"

(மணவாள மாமுனிவர்.)

என்பதனுல்

"வழி பறித்த குற்றமற்ற செங்கையான்" எனப் பிருண்டும் பெரியோர் பாடியருள்வாராதலின் இவ்வுண்மை யுணர்க. மன்னன் அவைக்கு வந்து என்றதனுல் மன்னனினும் அவனளிக்குந் தமிழவையைக் காண்டலே ஒளவைக்குக் கருத்தென்பது குறித்தது. ஐம்பொற்கிழியும் அறப்பாடுதலாற் புலமையின்றிட்பியம் தெருட்டியது பிற்காண்க. (65)

பாண்டியற்கு மணமறுத்த திறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள் 65.

## 6. ஔவை பறியுண்ட திறம்.

230. பாவலர்க்கு வேளீயப் பட்ட பெரும்பெயர்தான்
மூவுலகுக் கப்பான் முழங்கக்கேட்—டாவலுற்று
ளஞ்சி நெடுமா னதியன் றிருந்தவைக்கு
நெஞ்சி னொளிரவ்வை நீடு.

(இ-ள்.)—பாவலர்க்கு—ஐவகைப் பாவும் வல்லவர்க்கு. ஈயப்பட்ட பெரும்பெயர்—ஈதலானுண்டாய புகழ். தான் என்பது காவலற்கு மண மறுத்த மேதைப்புகழே யன்றி ஈயப்பட்ட புகழ் என்பது படவந்தது. பெரும்பெயர்—புகழ். "பெரும்பெயர்ப் பறம்பே" என்பது புறம். மூவுலகு—தமிழ் வேந்தர் மூன்று நாடும் "அடுக்கிய மூவுலகுங் கேட் குமே சான்றோர், கொடுத்தாரெனப் படுஞ்சொல்" (நாலடி) என்பத னல் மேல், நடுவண், கீழ் என்னும் மூவுலகெனினும் அமையும். அப் பால் முழங்கல் கூறியது, பாவின் உயர்வு தாழ்வு தெரிந்து, தகச் செய்யுங் கொடையைக் குறித்தது. புகழ்கேட்டுப் புகழ் செய்யும் வேளைக்காண ஆவலுற்றாள் எ-று. ஆவலுற்றாள்—ஆசைமிக்காள். அஞ்சி நெடுமான் அதியன் திருந்தவைக்கு—அதியமான் நெடுமானஞ்சி என்பவனுடைய திருந்திய அவையாகிய உடம்பிற்கு. நெஞ்சின் ஒளிர் ஔவை—நெஞ்சுபோல விளங்கும் ஔவை எ-று. நீடு ஆவலுற்றாள் என்க; "உடம்பு சிந்தைவயம்" (கம்ப—பாலகாண்டம்) ஆதல் போல இவ்வவைக்கு நெஞ்செனக் கூறியதனல் அதியன் உயிர் என்பது குறித்ததாம். திருந்தவை என்றது தீயவையாகா நல்லவை என்பது கருதி. அதியன்—அதியர் குடியிற்றோன்றலாற் போந்த பெயர்; "ஆர் கலி நறவினதியர் கோமான்" எனவரும் புறப்பாட்டடியால் (91) அறிக. அஞ்சி—இவன் இயற்பெயர். நெடுமான்—சிறப்புப் பெயர்; "நெடு மானஞ்சி நீ யருளன்மாறே" (புறம்–92) என வருதலான் அறிக. நீடு—நெடுநாள்; அதியன்பால் விடைகேட்க இயலாமையால் ஆவலுற்றே நெடுநாட் கழிதல் குறித்தது. "வேந்தரை யிறந்தும் ஈதலால்" (புறம். 119) மூவுலகுக்கு அப்பான் முழங்கல் கூறிற்று. (1)

231. "மண்டேய நீண்டு வளர்புகழ்வேள் பாரியேதிர்
கண்டே யகத்துக் களித்துவரத்—தண்டேன்
றேடையளிக்கு மஞ்சிபாற் சூழ்ந்திரந்தா ளௌவை
விடையளிக்க வேன்று விழைந்து".

(இ-ள்.)—மண்டேய—உலகு தன்னளவிற் சிறிதாக; புகழ் நீண்டு வளர்வேள் பாரி என்க; "மண்டேய்த்த புகழினான்" (சிலப்) என்ப. நீண்டு ஒரெல்லையினில்லாது பின்னும்வளர்தலால் நீண்டுவளர் புகழ் எனப்பட்டது. எதிர்கண்டே—நேரிற் காண்டல் மட்டுஞ் செய்தே; காண்டலே வேட்டதல்லது வேறு அவன்பாலொன்று கொள்ள வேட்டதில்லை யென்பது குறிப்பு. "நல்லாரைக் காண்பதுவு நன்றே" (மூதுரை) என்பது காண்க. அகத்துக் களித்து—உள்ளத்துள்ளே களிப்புற்று. வர-மீண்டும் இங்கே யெய்த: என்றது தனக்கிருப்பிடம் அதியமான் ஊரே என்பது குறித்ததாம். தண் தேன் தொடையளிக்கும் அஞ்சி—தட்பமுடைய வண்டினங்களை அணிந்தமாலை புரக்கும் நெடுமானஞ்சி. சூழ்ந்து விடையளித்தற்குரிய எதுக்களை ஆராய்ந்து எ-று. விழைந்திரந்தாள் என்றது அதியனை விழைந்தபடியே விடையளிக்கவேண்டியதை வினைந்து. தேன் தொடையளிக்கும் அஞ்சி என்று இவன் மார்பின்மாலை பாடுமினங்களை யளித்தல் கூறியதனு லிவன் மார்பு பாடுநரைப்புரத்தல் குறிப்பாற் கொள்ள வைத்ததாம்; "புலவர் நாவிற்சென்று வீழ்ந்தன்றவனரு ளிறத்தி யங்கிய வேலே" (புறம் 235) என ஔவை பாடுதலான் உய்த்துணர்ந்து கொள்க. (2)

232\. அகடூர் பசிப்பகைதீர்த் தாளு நெடுமான்
றகடூ ரதியர் தலைவன்—பகடூர்ந்து
கோவற் களங்கொண்ட கோமான் விடைகோடா
ஞேவற் குளம்போரு தூங்கு.

(இ-ள்.)—அகடூர் பசிப்பகை—வயிற்றை ஊர்ந்து கொள்ளும் பசியாகிய பகை. இதனைத்தீர்த்து நாடாளுதலே சிறந்ததாதலிற் றன்பகை தீர்த்தற்கு முன்னே கூறப்பட்டது. "தன்பகை கடிதலன்றியுஞ் சேர்ந்தோர், பசிப்பகை கடிதலும் வல்லன்" என்றார்புறப்பாட்டினும் (400). பசிப்பகை என்றது உடம்பை அழிக்கும் இயல்பினதாதல் பற்றி. தகடூர்-நெடுமானஞ்சிதலைநகர்; தகனூ எனவும் வழங்கும்; "சேர னதியன் றிருநெடுமான் றென்றகடை, வீரன் விடுகாதழகியான்" என்பது சாசனம். அதியர்தலைவன்—அதியர் குடியிற்றலைமை பூண்டவன். பகடூர்ந்து—யானையினையேறி நடாத்தி. கோவற் களங்கொண்ட கோமான்—காரியொடு பொருது அவன் கோவலூர்க் களத்தைத் தனதாக்கிக்கொண்ட வேந்தன்; இதனைப் "பரணன் பாடினன்மற்கொன் மற்றுநீ, முரண்மிகு கோவலூர் நூறிநின், னரணடு திகிரியேந்திய தோளே" (புறம். 99.) என்புழிக்காண்க. "கின்னினக் களிறு செலக்கண்டவர்" (புறம் 98) என்பதனுல் இவ்வதியன் யானைப்படை

யுடைமை யறிக. ஒவற்கு உளம் பொருது—ஔவையை நீங்கற்கு உள்ளந்தரிக்காமல். ஊங்கு விடைகொடான் என்க. ஊங்கு—அவள் விடை கேட்டஉவ்விடத்து எ-று. பசிதீர்த்தாளுதலானும் வீரத்தானும் அவன் சொற்றள்ளலாகாமை குறித்துப் பின்னும் அவன் இவள் பிரிவிற்கு உளம் பொருதபடி தெரித்தல் கண்டு கொள்க. அதியன் பசிதீர்த்தாளுதல் "சிறுசோற்றானு நனிபல கலத்தன்மன்னே" (புறம் 235) எனப்பாடுதலான் அறியலாம். (3)

233. வேள்பாற் படர விடைகோடான் பாணிக்கு
நாள்பார்த் தறிவாட்டி நன்றுய்ந்து—நீள்பார்க்க
ணெல்லிக் கனியளித்து நீடுவாழ் நாளளித்த
வில்லிக் கிதுசோற்றுண் மீட்டு.

(இ-ள்.)—வேள்பாற் படர—பாரி வேளிடஞ் செல்ல. பாணிக்கும நாள் பாரித்து-காலந்தாழ்க்கும் நாள்களை எண்ணி. தன்னை நீங்கற்கு உளம்பொருது விடைகொடான் ஆதலின் அவனுக்கட்செலச்சொல்லுதற்கு அறிவாட்டி நன்றுய்ந்து சொற்றாள் என்க. விடைகொடாமை அன்பாலென்பது காட்டுவது மேல். நீள்பார்க்கண்—தன்கண் உள்ளாரை நீள வையாது தான்மட்டும் நீளவுள்ள உலகத்தில். அதியன் நாள் நீடு வாழ்தல் கருதி உண்ணற்கரிய அரியதொரு நெல்லிக் கனியை ஔவைக்குச் சாதல் நீங்க அளித்தவரலாறு "வலம்படுவாய்வாள்" (93) என்னும் புறப்பாட்டிற் கண்டு கொள்க. நீடுவாழ் நாள் என்றது இயல்பாகப் பலர்க்கும் வாழ்நாள் நீடாமை கருதிற்று. நன்றுய்ந்து கனியளித்து நாளளித்த வில்லிக்கு அறிவாட்டி மீட்டுஞ் சொற்றாள் என்றியைப்பினும் பொருந்தும்; ஈண்டு நன்றுய்ந்து அளித்த என்றது அதியன் தன் வாழ்நாளினும் ஔவை வாழ்நாள் நீடுதலான் உலகு பெரும்பயனெய்தலை நன்கு தெளிந்து தந்தது குறித்தது. கனியளித்து நாள் அளித்த என்றது கனி தருவதுபோலக்காட்டி உண்மையில் வாழ் நாள் அளித்த தனக்கென வாழாப் பெருங்கொடைச்சிறப்பினைக் கருதிற்று. சேரமாற்கு உறவினனுதலாற் கொடியாகிய வில்லுடையானுதல்பற்றி வில்லி எனப்பட்டனன் என்க. "வில்லுடையான் வாண வன்" என்ப; "செங்கோடுபோலச் சிலையை வடதிக்களவும் கங்கோடவெட்டினுன்கல்" என இவ்வதியன் வழியினன் பாடப்படுதல் காண்க (சாசனப்பாட்டு). இவ்வாறே இவனுக்குப்பனந்தார் கூறுதல் "அமரர்ப்பேணியும்" (99) என்னும் புறப்பாட்டிற்காண்க. (4)

234. பல்லோ ருளராய பார்வரைப்பி னின்னுேத்த
நல்லோ ருளர்கோலென நாடினே—னெல்லோரு

மாரியே பாரியென வாழ்த்துவா ரவ்வாய்மை
சீரியோய் தேர்வலேன்றுள் சென்று.

(இ-ள்.)—பல்லோர் என்றது நல்லரும் தீயருமாகியபன்மைகருதி. பார்வரைப்பில்-நிலவெல்லேக்கண். நின் ஒத்த நல்லோர்—நன்மையால் நின்னை ஒத்தவர். உளர் கொலென நாடினேன்-ஒருவருளரோ என்று தேடினேன், எல்லோரும்—அறிவரும், மடவரும் ஆகிய அனைவரும். மாரியே பாரியென—கொடையான் வேள்பாரி மாரியே என்று; ஏகாரம் தேற்றம். வாழ்த்துவார்—மாரியேயெனக் கூறுதன் மேலும் அவ்வான் வாழ்த்தாது அவனைவாழ்த்துவார் எ-று. அவ்வாய்மை சென்று தேர் வல்-அவ்வுண்மையினை நேரிற்போய் அறிவல். சீரியோய்—சீர்த்தவ.(5)

235. ஆத லடக்கி யமிழ்து விளைநெல்லி
சாதல் கெடக்குறியாய் தந்தாயை—யாதும்
பிரிதற் கியலேன் பெருவேள் குணங்க
டேரிதற் கிடர்ப்படுவல் சென்று.

(இ-ள்.)—அமிழ்தவிளை நெல்லி ஆதல் அடக்கி—அமிழ்தின்றன்மை விளைந்த நெல்லிக்கனியால் ஆகும் பேற்றினைக்கூறாது நின்னகத்தே அடக்கிக்கொண்டு. குறியாய் சாதல் கெடத்தந்தாயை—அதனல் விளையு நன்மையினைத் தனக்கெனக்கருதாது சாதல் ஒழியத்தந்த நின்னை. அடக்கி என்றது இதன்பேற்றினை உரைத்தாற்றன்னையே உண்ணுமாறு ஔவை வேண்டுவள் என்று அதியன் நினைத்துச் செய்தது குறித்தது. குறியாய் என்றது தன்பேறு கருதாமல் அவன் செய்தது கருதிற்று. "நீங்கனி குறியா, யாதனின்னகத் தடக்கிச், சாதனீங்க வெமக்கீத் தனையே" (புறம் 91) என்பதனானுண்மை யுணர்க. சாதல் கெடக்குறியாய்—நினக்குச்சாதல் ஒழிதலைக் கருதாய் எனினுமமையும். "அமிழ்து விளை தீங்கனி யௌவைக்கீந்த வதியனும்" என்பது சிறுபாண். யாதும்—எப்படியும். பிரிதற்கு இயலேன்—பிரிய இயல்கிலேன் அங்ஙனம் இயலாதயான் பெருமைபெற்றவேளின்பண்புகளைச் சென்று தெரிதற்பொருட்டு இடர்ப்படுவேன் என்றாளென்க. "குணநலன் சான்றோர் நலனே" (குறள் 982) என்பதனாற் குணங்கள் அகப்பண்பாதலும் அவை சான்றோர்பாற் புக்குப் பயின்றறியத்தக்கன வாதலும் உணர்க. குணங்கள் "ஈத்ததிரங்கா னீத்தொறு மகிழா னீத்தொறுமாவள்ளியன்" (பதிற். 7–1) ஆம் பண்புகள் எனினுமமையும். (6)

236. சூரிசின் மகப்போற் குறைவின் றருளப்
பரிசில் பெறயான் படரேன்—வரிசிலைவேள்

வேண்டப் படாத விழுக்கோடையா னின்னேர்தல்
காண்டற் கியல்வேன் கசிந்து.

(இ-ள்.)—குரிசில் மகப்போற் குறைவின்றருள-குரிசிலாகிய நீ நின்குழவிபோல் வைத்துக் குறைவிலாமல் எல்லாப் படியானும் அருளுதலான் யான் பரிசில் பெறப் படரேன் என்க; நின்மகவு பிறர்பாற் பரிசில் பெற வேண்டுவதில்லை என்றது அம்மகப்போல் யானும் படரேன் எ-று. "தந்தையர்க் கருள்வந்தனவாற் புதல்வர்தம் மழலை, பென்வாய்ச் சொல்லு மன்ன" (புறம்-92) என்ற இவர் கருத்தொடு படுத்து மகப்போல் அருளல் கூறப்பட்டது. அருள என்றது "நெடுமானஞ்சி நீ யருளன்மாறே" (ஷை ஷை) என்பதைத் தழீஇ வந்தது. வேண்டப்படாத விழுக்கொடை-தன்னடைந்தார் கூறுமலே அவர் வேண்டுவதறிந்து நல்கும் சீரிய வள்ளன்மை. இஃது அதியன் நெல்லிக்கனியை ஔவைக்கீந்த வரலாற்றான் நன்கறியப்பட்டதாம். பாரி தன்னரசு முழுதும் கபிலர் வேண்டாதே அவர்க்களித்தலாற் பாரிபாலும் இஃதறியப்படும். கசிந்து-நின்கட்கசிவுற்று, இயல்வேன் என்க. நின்னை வெறுத்துச் சேறலில்லை யென்பது கருத்து. வரிசிலை-கட்டிய வில். வரிசிலைவேள் நின் னேர்தல் என்ற விசேடித்தலாற் படையால் நின்னேர்தல் உடம்பொடு புணர்த்தியவாறு காண்க. மக என்பது அகர வீற்றுப்பெயரென்பது "மகப்பெயர்க்கிளவிக்கு" (எழுத். 218) எனத் தொல்காப்பியனார் கூறுதலானறிக; குரிசில்—தலைவ; விளி. விழுக்கொடை என்றது மறுமைக்கு ஆம் என்று, தன்பேறு கருதாது கொடுப்பது பற்றி. (7)

237. என்னைப் புரக்குநினை யேய்ப்பத் தமிழணங்கை
நன்னர்ப் புரக்கு நசைமேய—மன்னர்
வழுதியர்சீர்ப் பேரவையின் மாண்பளந்தும் பின்சில்
பொழுதினிவண் மீள்வலென்றாள் போய்.

(இ-ள்.)—என்னை மகப்போலவைத்துப்புரக்கும் நின்னையொப்பத் தமிழ்த் தெய்வப் பெண்ணைத் தன்மகப்போலவைத்துச் செவ்வனம் புரக்கும் விருப்பம் மேவிய மன்னவராகிய பாண்டியர் எ-று. சீர்ப்பேரவையின் மாண்பு அளந்தும்—அவருடையசீர்மைக்குக் காரணமாகிய பெருமைபெற்ற கழகத்தின் மாட்சிமையை அறிவால் அளந்துகொண்டும். அவையின் மாண்பு. போயளந்து பின் மீள்வல் என்றாள் என்க. முன்னைப்பாடல்களால் வேள்பாரியோடு அதியன் கொடையொப்புக் காண்டல் கூறி இப்பாட்டாற் கழகத்தோடு தன்னறிவொப்புக்காண்டல்

கூறினள் என்று கொள்க. பாரியிருப்பது பாண்டி நாடாதலின் அந்நாட்டுத் தமிழவையைளத்தலும் உடன் கூறினள். மாண்பளந்தும் என்புழி உம்மை இறந்தது தழீஇயிற்று. (8)

238\. இன்ன வுரைக ளியம்ப முதுக்குறைவி
மன்ன னதியன் மனம்விடா—தின்னமிழ்திற்
சொல்லை யுடையாட்குத் தூவார் விடையளித்தா
னொல்லை வருகென் றுரைத்து.

(இ-ள்.)—இன்ன வுரைகள்-இப்பொருண் மொழிகள். முதுக்குறைவி இயம்ப என்க. முதுக்குறைவி-பேரறிவாட்டி; "சிறு முதுக் குறைவி" (அகம்-17) என்புழிச் சிறுபிராயத்தே பேரறிவெய்திய விளக் கூறியதனானறிக. மன்னன் அதியன் என்றது "அதியர் கோமான்" (புறம்—191) என்பதுபற்றி. மனம் விடாது-தன் மனத்தி னின்று ஒளவையைப் புறம் போகவிடாமல்; என்றது உள்ளத்திலே அவளை வைத்துக்கொண்டு எ-று. தூவார் விடை-பற்றுக்கோடு நிறைந்த விடை; தனக்குப் பற்றுக்கோடு ஒளவையாதல் பன்முறை கூறி நல்கிய விடையாதல் குறித்தது. தூ-பற்றுக்கோடு; "இனத் தூய்மை தூவாகும்" (குறள். 455). உடனுறைதலினும் பிரிவின் கட் பற்றுமிகுதலிற் றூவார் விடை எனப்பட்டது. இன் அமிழ்திற் சொல்-இனிய அமிழ்தினனைய சொல். சொல்லை உடையாள்-சொல்லை உடைமையாக வுள்ளவள். விடையளிக்கச் செய்த இன் சொல்லாதலான் அவ்வுயர்த்திக்குத்தக அமிழ்திற் சொல் எனக் கூறப் பட்டது. ஒல்லை வருக என்றலால் அதியன் மனம் விடாமை காட்டிய படி. ஒல்லை என்றது ஒளவை கூறிய சில்பொழுதினும் விரைந்து வரு தல் கருதிற்று. தான் துய்க்கும் உணவினும் இவள் சொல்லமிழ்தையே மிகுத்து அருந்தி உயிர் வாழ்பவன் என்பது குறிக்க அமிழ்திற் சொல்லை யுடையாட்கு விடையளித்தான் எனினுமமையும். (9)

239\. உள்ளிருத்தி யஞ்சி யுதவும் விடைகொளா
வொள்ளிருத்தி பெற்ற வொழுக்கத்தாள்—புள்ளருத்திப்
பொங்கர் மதுப்பொழிந்து பொங்குந் தகடூர்நீத்
தங்க ணடந்தா ளதர்.

(இ-ள்.)—அஞ்சி-நெடுமானஞ்சி. உள்ளிருத்தி யுதவும் விடை கொளா-உள்ளத்து விடாமலிருக்கச் செய்து பின்னர்த்தரும் விடை கொண்டு. உதவும் விடை என்றது ஒளவை கருத்தால். ஒள் இருத்தி

பெற்ற ஒழுக்கத்தாள்—ஒட்பமுடைய சித்திகளைப் பெற்ற ஒழுக்க முடையவள்; "அளப்பிலிருத்தியொடு" என்பது மணிமேகலை (21–166): "ஒழுக்கம் விழுப்பந்தரலால்" (குறள் 91) என்பதனால் ஒழுக்கம் எல்லாச் சிறப்பும் தருதல் காண்க. பொங்கர்—சோலை. புள்—வண்டு. பொங்கர் மதுப்பொழிந்து புள்ளருத்திப் பொங்குந் தகடூர் என்க. பொங்கர் அருத்திப் பொங்கும்—பொழில்கள் உண்பித்துத் தழைக்கும். தழைக்குந் தகடூர் என்றதனால் அவ்வூரும் பிறரை உண்பித்துத் தழைத்தல் வைப்பாற் கொள்க: புறத்தின் இங்ஙனம் பொருள் கொள்ளுதல் உண்டென்பது,

"அறமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கு
மாளி லத்த மாகிய காடே" (புறப்பாட்டு—23)

என்புழிப் பழைய வுரைகாரர் "அவன் பகைவரைக் கொன்றவழி அவன் பெண்டிர் தம் இளம்புதல்வரை ஓம்புதற் பொருட்டு இறந்துபடாது அடகுதின்று உயிர் வாழ்கின்றாரென்பதோர் பொருள் தோன்ற நின்றது" எனக் கூறியதனால் உணர்க. அதியற்கு ஒப்புக் காண்டல் வேட்டுப் போதலாலீண்டு ஒழுக்கக் குறைபாடில்லாமை தோன்ற ஒழுக்கத்தாள் என்றதாம். அங்கண் அதர் நடந்தாள்—அவ்விடத்து வழி நடந்தாள். தான் இனிதுண்டற்குரிய தகடூரை நீத்து அதர் நடந்தாள் என்றது தான் இன்பந் துய்த்து இருத்தலினும் ஒரு நல்லோனைத் துன்புற்றுச் சென்றேனும் காண்டற்கண் இவட்குள்ள விருப்பம் குறிப்பித்தவாறும். (10)

240. பாரிவேட் காணப் படரு முளமீர்ப்பச்
சீரியா ளௌவை செலலுற்றாள்—மாரிவெயி
லாறு பலவு முணராது நானிலத்தி
னாறு பலவு மரிது.

(இ-ள்.)—பாரிவேட் காணப் படரும் உளமீர்ப்ப—வேள்பாரியைக் கண்ணினு முற்படக் காண்டற்கு வேட்டு விரைந்து செல்லும் உள்ளம் இவள் உடலை வலிந்திழுத்துச் செல்லலால். சீர்த்தவளாகிய ஔவை. மாரியூறு—மழையாலாகிய இடையூறு. வெயிலூறு—வெயிலானாகிய இடையூறு. பலவும் என்றது அரிய நெறியினுண்டாம் பிற இடையூறுகளைக்குறிக்கும். நானிலத்தின் ஆறு—நெய்தலொழிந்த நால்வகை

நிலங்களின் வழி. இவள் புக்க நெறியில் நெய்தலே யில்லாமையால் இங்ஙனம் கூறப்பட்டது. உணராது அரிது செலலுற்றாள் என்க. இவள் விட்ட ஊராகிய தகடூர், "மலையல ரணியுந் தலைநீர் நாடன்" (புறம் 390) தலைநகராதலானும் அது பூந்துறை நாட்டதாதலானும் முதற்கண் மாரியூறு கூறப்பட்டது. கொங்கிற்கு "வடக்குப் பெரும் பாலை" (பழம்பாடல்) என்பதனானும் இதற்கியையவே "வானவரம்ப னன்னாட்டும்பர், வேனினீடிய வெங்கடற் றடைமுதல்" (அகம்-389) என அகப்பாட்டில் வருதலானும் வெயிலூறு பிற்கூறப்பட்டது. நெறி கடந்தழி நெய்தலொழிய நானிலங் கோடல் பெருங்கதை யினுங் கண்டது. உளம் ஈர்த்து விரைதலான் உடலுணர்தற்கில்லை என்றதாம். நல்லானைக் காணவேட்டு ஊறுணராது அரிது சேறலாற் சீரியாள் எனப்பட்டாள் எனினுமமையும். "நல்லாரைக் காண்பதுவு நன்றே" என்பது நினைக்க. (11)

241. அசும்பின் வயனெறியு மாமிழியும் வெற்பி
னிசும்பி னிடைநெறியு மேகி—விசும்பு
துளிமறந்த வன்பாற் சுடுநிலனுஞ் சென்றாள்
களிறுறைந்த கானுங் கடந்து.

(இ-ள்.)—அசும்பின் வயல் நெறியும்—நீர்க்கசிவினையுடைய விளைவயல் வழிகளும்; வயல் வரப்புக்களின் நீர்க்கசிவுண்மை குறித்தது. ஆமிழியும் வெற்பின்—நீர்வழியும் மலைகளினுடைய. "ஆமிழி அணிமலை" என்பது (குறிஞ்சிக்கலி. 12). இசும்பினிடை நெறி—ஏற்றிழிவுகளின் இடைப்பட்ட வழிகளும். இசும்பு—ஏற்றிழிவு. விசும்பு துளிமறந்த பாலை—வானம் துளி பெய்தலை மறந்த பாலை. இபல்பாக யாண்டும் பெய்யும் வானம் ஆண்டுப் பெய்யாமைக்கு மறவியே காரண மென்று கருதிற்று. வன்பாலாகிய சுடுகின்ற நிலன்; பாலையில் நெறி கூறாது நிலனென்றொழிந்தது, ஆண்டுப் புகுவாரின்மை குறித்தது. வன்பால்—வலிய பகுதி; மென்பாற்கு எதிரிடை. களிறுறைந்த கான் மலையடுத்த முல்லை நிலனாகக் கொள்க. வயனெறியால் மருதமும் வெற்பினிடை நெறியாற் குறிஞ்சியும் சுடுநிலனாற் பாலையும் கானால் முல்லையுங் குறித்தல் காண்க. (12)

242. கோங்கி னடந்து குளிராவி நன்குடிபோ
யெங்கும் புலவ ரெதிர்கொள்ளப்—போங்கர்
மதுப்பொழியும் வையை வளநாட்டி னுள்ளம்
வேதுப்பொழியப் புக்காள் விழைந்து.

(இ-ள்.)—கொங்கில் நடந்து—கொங்கு நாட்டில் நடந்து. குளிராவி நன்குடி போய்—மலையாதலாற் குளிர்கின்ற ஆவிநன்குடியிற் சென்று. வையை வளநாட்டின் எங்கும் புலவரெதிர் கொள்ள என்க; பாண்டி நாட்டிற் புலவர் நிறைதல் குறித்தது. ஆவிநன்குடியைக் கூறியபின் வையையை வைத்தது வையாவி நாட்டு மலையிற் றோற்றமுடைய காரணத்தால் வையை என்று பெயர் பெற்றது கருதி என்க. பொங்கர் மதுப்பொழியும் வையை என்றது "அவிரறல் வையைத் துறை துறை தோறும் பல்வேறு பூத்திரட்டண்டலை சுற்றி" எனவரும் மதுரைக்காஞ்சியடிகளைத் தழீஇயிற்று. புலவர் எதிர்கொள்ள உள்ளம் வெதுப்பொழிய என்க; "உவப்பத்தலைக் கூடுதலால்" (குறள் 394) உள்ளம் வெதுப்பொழிதல் கூறிற்று. மதுப்பொழியும் வையை வளநாடு கூறியதனால் உடல்வெக்கை தீர்தல் குறிப்பாலுணர்க. (13)

243. நல்ல தமிழ்வழக்க நன்னர்ச் செவிநிறைப்ப
மெல்ல நறுந்தென்றன் மெய்வருடத்—தொல்லைச்
செழிய றம்வளர்த்த தென்னடேன் றுள்ளங்
கழிய மகிழ்கூர்ந்தாள் கண்டு.

(இ-ள்.)—நல்ல தமிழ் வழக்கம்—நல்ல தமிழான் வழங்கப்படுங் குரலொலி. செவியை நன்னர் நிறைப்ப என்க. நறுந்தென்றல் மெல்ல மெய்வருட என்க; நறுந்தென்றல் என்றது சந்தனப் பொதியத்தென்ற லாதல் கருதி. "கோடைசென்றெறியுங் கொல்லி" (கல்லாடம்)ப் புறன்போலாது தென்றல் மெல்லிதாக அசைந்து வருதல் குறித்தது; "திங்க ணிறைந்துவருஞ் சேயிழை யார்நடைபோற், றென்றலசைந்து வருஞ் செந்தமிழ் நாடுடையாய்" என்பது பழம்பாடற் பகுதி. நல்ல தமிழ் வழக்கத்தால் உள்ளும் தென்றலாற் புறனுங் குளிர்தல் குறித்தது. "செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்" (குறள். 411) என்பதுபற்றிச் செவி நிறைத்தல் முற்கூறிற்று. தொல்லைச் செழியர்—பழங்குடியராகிய பாண்டியர்; "பழங்குடி பண்பிற் றலைப்பிரிதலின்று" (குறள். 955) என்புழிப் பரிமேலழகர் "படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" கூறுதலான் இஃதறிக. செழியரறம் வளர்த்த தென்னடென்றது "அறங்கடைப்பிடித்த செங்கோலுடனமர், மறஞ் சாய்த்தெழுந்த வலனுயர்திணிதோட், பலர்புகழ் திருவிற் பசும்பூட் பாண்டியன்" (அகம்—338) என்பதைத் தழீஇ வந்தது. கல்வியும் இயற்கை வளனும், அறமும் ஒரு நாட்டின் மேம்பாட்டிற் கின்றியமை யாமை குறித்தவாறும். கல்வியும் வளனும் உள்வழி அறம் வளர்த்தலே ஆம் என்பதனால் அறம் வளர்த்த தென்னடென்றதாம். நிறைப்

பக்கண்டு வருடக்கண்டு தென்னுடென்று மகிழ்கூர்ந்தாள் என்க. "சோழன் வழிவந்த பாண்டியனின், னுட்டுடைத்து நல்லதமிழ்" (முருகாறு) என நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோட் பகுதியாற் பாண்டிநாட்டு நல்ல தமிழ்வழக்கம் உணரப்படும். தென்றல் மெய் வருட மகிழ்ந்தாள் என்றும் நல்ல தமிழ் வழக்கஞ் செவி நிறைப்ப மகிழ் கூர்ந்தாள் என்றும் அறம் வளர்த்த தென்னுடென்று கழிய மகிழ்கூர்ந் தாள் என்றுங் கொள்க. கழிய—மிக. (14)

244. சில்காத தூரஞ் செலப்போகி யெளவைமறை
யொல்காத கூட லுயர்பதிப்புக்— கெல்காலும்
வேன்மாறன் கோயில் விருந்தமர்ந்தா றெய்திளைப்புத்
தான்மாற லுற்று டழைத்து.

(இ-ள்.)—சில்காத தூரம்—காதத்திற் சிலவாகிய தூரம். செலப் போகி என்றது தூரம் பின்செல்லத் தான் நடந்து சென்று என-று. மறை ஒல்காத கூடல்—வேதகலையறிவு தளராத மதுரை. கூடலாகிய உயர்ந்த பதியின்கட் புக்கு என்க. உயர்பதி—சேரர் சோழர் தலைநகர்களினும் மறையொலியான் உயர்ந்த நகர்: "நான்மறைக்கேள்வி நவில் குரலெ டுப்ப, வேம வின்றுயிலெழுதலல்லதை, வாழிய வஞ்சியுங்கோழியும் போலக், கோழியினெழாதெம் பேரூர்த்துயிலே" எனப் பரிபாடலிற் கூறுதலானுணர்க. எல்காலும் வேல்—ஒளிக்கும் வேற்படை; எல் காலும்கோயில் எனினும் அமையும். கூடலிற் பாண்டியர் ஆடகமாட முண்மை "ஆடக மாடங் கடந்தறி யாதவென் னுரணங்கே" (பாண்டிக் கோவை இறையனார் களவியலுரை) என்பதனு லுணர்ந்து கொள்க. கோயில் விருந்தமர்ந்து தழைத்துத் தான் ஆறெய்து இளைப்பு மாற லுற்றுள் என்க. தழைத்தல்—உள்ளந்தழைத்தல். (15)

245. நான்மாடக் கூட னகர்வனப்பு நாடுபுகழ்
வேன்மாற னுண்டு விழைந்தளிக்கு—தேன்மானுந்
தூமுத் தமிழவையுந் தோலாத வெளவைகண்டாங்
கேமுற் றமர்ந்தா ளினிது.

(இ-ள்.)—"நான்மாடக் கூடனகர்" என்பது பரிபாடல். கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்னும் நான்கு மாடக் கோயில்கள் கூடிய தனுலிப்பெயர் எய்தியதென்பர் (மதுரைக்காஞ்சி. நச்சினார்க்கினிய ருரை). நாடுபுகழ் தமிழ் அவை என்க. இனிமையாற் றேன் மானுதலே யன்றி அதற்கில்லாத தூய்மையுமுடைய முத்தமிழ் என்க. முத்தமிழ்—

இயல், இசை, நாடகமாகிய தமிழ். இங்ஙனமுத்திறப்படுத்தது உள்ளம் உரை, செயல் என்னும் இம்மூன்று கரணங்களையும் ஒருங்கு பயில் வித்தல் கருதியதாகும். மாறன் விழைந்து ஆண்டு அளிக்கும் அவை எ-று. ஆண்டளிக்கு மவை என்றது உலகையாண்டு அளித்தலினும் அவையினை ஆண்டு அளித்தல் அருமை குறித்து வந்தது. "முரச மூன்றுட னுளந் தமிழ்கெழு கூடல்" என்ப. ஆண்டு—அந்நகர்க்கண் எனினும் அமையும்; நான்மாடக் கூடல் என்றது திருக்கோயில்களாற் றிருவுடைய வூர் என்பது குறித்ததாம். (16)

246. தோலாத வாலறிவிற் றேல்கலைஞர் பல்கிமகிழ்
மேலா மவைக்கண் விழைந்தெய்தி—நூலாறு
கண்டா ளவர்பாற் கசிந்தளவ ளாய்க்கையான்
விண்டா ளரிய வினா.

(இ-ள்.)—வாலறிவிற் றோலாத தொல்கலைஞர்—தூய அறிவுடைமையால் எவர்க்குந் தோலாத தொன்னூல்கள் வல்லவர். பல்கி மகிழ்—குழீஇ மகிழ்கின்ற. இயற்கை யறிவிற்றூய்மையும் பல தொன்னூல் வன்மையுமுடைமையே தோலாமைக்கு ஏது என்று குறித்தது. மேலாம் அவை என்றது நல்லவையை. கலைஞர் பல்குதலும் இகலில ராய் மகிழ்தலும் நல்லவைக்கு இன்றியமையாமை காட்டியபடி. எய்தப் பெறுதற்கண் உள்ள விழைவுதோன்றலால் விழைந்தெய்தி எனப் பட்டது. நூலாறு கண்டாள்—நூனெறி கண்ட ஔவை; நூல் கண்டவரின் இவட்குள்ள உயர்த்தி தோன்ற நூலாறு கண்டாள் என லாயிற்று. 'நூல் கண்டு நெறி காணுநரும் நெறிகண்டு நூல்காணுநரும் உரைத்தல் நோக்கியுணர்க. கசிந்தளவளாய்—உருகி நெஞ்சங் கலந்து. அரிய வினா—அரிதின் விடையிறுத்தற்குரிய வினா. கையான் விண்டாள்—கையபிநயத்தால் வருத்திக் காட்டினாள். முத்தமிழ் வல்ல பேரவையாதலால் நாடக நூன்முறையுந் தெரியக் கையான் விண்டாள் என்றவாறும். அபிநயக் கைவகை நாடக நூலுள் உண்மை உணர்க. இவள் விறலியாதல் "மடவர லுண்கண் வாணுதல் விறலி, பொருநரு முளரோநும் மகன்றலை நாட்டென, வினவ லானாப் பொருபடை வேந்தே" (புறம். 89) என வேந்தனை விளித்தவிடத்து அவன் தன்னை விளித்து வினவியவாறு கூறுமுகத்தாலுண்மை யுணர்க. ஔவை பாணர் குடியிற் வளர்ந்தமை தொன்றுதொட்டுக் கேட்கப் படுதலும் ஈண்டைக்கு நினைக்க. (17)

247. கைதிறந்து முடிக் கருதியமுன் மூன்றுவிர
லைது குவித்தா ளதன்பின்னே—மெய்தெரியச்

சுட்டுவிர னேர்நிறீஇச் சூழைந்துங் காட்டியவை
தோட்டசைத்தேன் னென்றாள் சோல.

(இ-ள்.)—கை திறந்து மூடி என்றது திறந்த கையும் மூடிய கையும் முறையே காட்டுதல் கருதிற்று. மூன் மூன்று விரல் ஐது குவித்தாள்—பெருவிரல் முதலாக மூன்று விரல்களை அழகிதாகக் குவியச் செய்தனள். மெய் தெரிய—வாய்மை தெளிய. சுட்டுவிரல் பெருவிரற்கு அடுத்தது. நேர் நிறீஇ—நேரே நிறுவி. சூழ் ஐந்துங் காட்டி—ஆராயத்தக்க ஐந்து விரலையும் காணச் செய்து. அவை தொட்டு அசைத்து—அவ்விரல்கள் தம்முட்டொட்டு அசையும்படி செய்து. அவையோர் சொல்ல அக்கையாலே என் என்று வினவினள் என்க. திறந்தகையும், மூடிய கையும், மூன்று விரல் தம்முட் குவிந்த கையும், சுட்டுவிரல் நேர்நிறுவின கையும், ஐந்து விரலையும் விரித்த கையும், அசைத்த விரற்கையும் என்னென்று வினவிய கையும் என்ற இவ் வேழு கையுங் காட்டியவாறு குறிக்கொள்க. (18)

அவையோர் பாடிய பழம்பாடல்.

248. "இவ்வளவு கண்ணினா ளிவ்வளவு சிற்றிடையா
ளிவ்வளவே போலு மிளமுலையா—ளிவ்வளவா
னைந்த வுடலா ணலமுண்க மாறவே
* லைந்துகணை யாலசைவ ளால்."

(இ-ள்.)—திறந்த கையைக் குடங்கையாகக் கொண்டு குடங்கை போலுங் கண்ணினள் எ-று. மூடிய கையை ஒரு பிடியாகக் கொண்டு பிடியளவு போலும் சிறிய இடையாள் எ-று. குவிந்த மூன்று விரற்கை சூது அளவு காட்டுதலாற் சூதுபோலும் இளமுலையாள் என்றதாம். போலும் என்றதை முன்னை யிரண்டிடத்துங் கூட்டிக்கொள்க. சுட்டு விரனிறுவிய கை ஒற்றை விரல் அளவாக வுள்ளதனால் உடம்பு ஒரு விரலாக நைந்து இளைத்தது குறித்தது எ-று. ஐந்து விரலுங் காட்டிய கை மன்மதன் ஐந்துகணையும் வைத்தெய்யுங் கையைக்குறித் தது எ-று. அசைவள்—அலைவள். ஒரு நிலைக்கொள்ளாமை குறித்தது. ஆல்—அசை. விரலசைத்த கை தலைவி அலைதலைக் குறித்தது எ-று. என் என்று வினவிய அடையாளக் கைக்கு, இத்தலைவிக்கு யாது பரிகாரம் என்று வினவியதாகக் கொண்டனரும். மாற நலமுண்க என்றதனாற் பாண்டியன் இவளெழில் உண்டலே மருந்து என்று

* "ஐந்துகணை யால்வாடி னாள்" என்பதும், பாடம்.

தெளிய அவனை நோக்கி வேண்டினரென்று கொள்க. வேள் ஐந்து கணையால் நைந்த வுடலாள் அசைவள் நலமுண்க் என்க. தளர்வினுங் கவின் வளர்ந்து காட்டுதல் காம நோயியல்பாதலின் கணையால் நைந்த வுடற்கு நலங் கூறினர். விரலசைத்த கைக்கு அலைதல் பொருளாகக் கொண்டார். இஃது "அருளாயாகலோ கொடிதே" (144) என்னும் புறப்பாட்டுப் போலக் கைக்கிளைவகைப் பாடாண்பாட்டெனக் கொள்க. கண்ணினகலமும், இடையின் சிறுமையும் முலையின் இளமையும் கணையால் நைந்த உடலும் ஒரு நிலைக்கொள்ளாத பாடும் தலைவன் நலம் விழைதற்கு ஏதுவாக வந்தன. நைந்தவுடலும் நிலைக்கொள்ளாமையும் கண்டார் இரக்கற்கு ஏதுவாயின எனினுமமையும். தலைவனைக் காணப்பெறாத கண்ணும், அவனாற்றுங்கப் பெறாத இடையும், ஞெமுக்கப் பெறாத இளமுலையும், அணைக்கப் பெறாத நைந்தவுடலும் துணை பெறாது அசையுந்தனிக்கிடக்கையுங் காட்டி இவள் நலமுண்டற்கு அருள்வரக் கூறியதாகக் கொள்க. இப்பாட்டால் மாறனும் இளையனுதல் இனிதுணரப்படும். ஒருவர் பாடியதற்குப் புலவர் பலரும் உடன் படுதலான் இது சங்கத்தார் பாட்டாக வழங்கலாயிற்றென்க. (19)

249. இவ்வளவு கண்ணினு ளேன்றெடுத்த பாடல்கேட்
டவ்வளவோ நம்பே ரறிவென்று—சேவ்வியா
ளாய மிடுமினென வாய்ந்த பெருங்கவிபா
ருய்யுந் திறனிசைத்தா ளுங்கு.

(இ-ள்.)—எடுத்த பாடல்—எடுத்து மொழிந்த பாட்டு. கைப்பொருள் கண்ட மகிழ்ச்சியிற் கூறியதாதலின் எடுத்து மொழிந்த பாடல் ஆயிற்று. இவ்வளவு கண்ணினுளென்ற பாடலே யமைவதாக என்றெடுத்த பாடல் என்றதனு லிவ்வாறு கொள்ளப்பட்டது. நம் பேரறிவு அவ்வளவோ என்று என்க. நம்பேரறிவு—உலகின் மக்கள் பலரினும் நமக்கு மேம்பட்ட பெரிய கல்வியறிவு. அவ்வளவோ—அவ்வகப்பொருளளவேயோ எ-று. ஓ ஐயத்தில் வந்தது. உறுதிப்பொருள்களிற் காமத்திற்கப்பாலுஞ் சேறலளவில்லையோ என்பது குறிப்பு. செவ்வியாள்—பதனறிந்தவள். வினவப்பட்ட புலவர் பதனறியாமை குறித்தது. வினவியவள் அறிவுஞ்செறிவு நிறைந்த பெண்பாலாதலைக் கருதாது எழுந்த விடை நோக்கி இஃதுணர்க. பாருய்யுந்திறன்—உலகுய்யுங் கூற்றில். ஒருத்தி படன்கொண்டு உய்யுந்திறனிசைத்த அவர் பாடலைக் குறித்து நின்றது. பெரியோர் ஆராய்ந்த பேரின்பக் கவியாதலின் ஆய்ந்த பெருங்கவியாயிற்று. அவர் ஆராயாத சிற்றின்பக் கவியை விலக்கிற்று. இடுமினென விசைத்தாள் என்க. என ஆய்ந்த—என ஆய்ந்து கொண்ட என்றியைப்பினுமமையும். (20)

*இது பழம்பாட்டு*

250. "ஐய மிடுமி னறநெறியே கைப்பிடிமி
னிவ்வளவே னும்முணவை யிட்டுண்மின்—றெய்வ
மொருவனே யென்றிங் குணரவல் லீரே
லருவினைக ளைந்து மறும்."

(இ-ள்.)—*திறந்த கையால் ஐயம் இடுமினென்பதும், மூடிய கையால் அறநெறியை விடாது பிடிமினென்பதும் மூன்று விரல் குவித்தகையாற் சிறிதளவேனும் உண்ணும் உணவைப் பசித்தார்க்கிட்டு எஞ்சியதை யுண்மினென்பதும், சுட்டுவிரல் நிறுவிய கையால் இங்குத் தெய்வம் ஒருவனே என்று உணரவல்லீராமின் என்பதும் ஐந்து விரலுங் காட்டிய கையால் வினை ஐந்தும் உணர்மினென்பதும் அசைத்த கையான் அவ்வினைகளறும் என உணர்மினென்பதும் கருதினளாகக் குறிக்கொள்க.*

*ஐயம்—இல்லார் இரக்கும் பொருள். இடுமின்—உதவுமின். புகழ்ந்கு இடுதலையும் இட்டும் தீ நெறி யொழுகுதலையும் விலக்கி அறநெறியே கைப்பிடிமின் என்றதாம். கைப்பிடிமின்—ஒழுக்கமாகப் பற்றுமின் எனினும் அமையும். இல்லார்க்கிரப்பதை யளிப்பது செல்வர்க்கே யியையுமாதலின் வறியரும் இவ்வறநெறி யொழுகற்கு அறிவுறுத்துவது மேல். உண்ணுதுயிர் வாழ்வார் இல்லறத்தினருள் ஒருவரிலரன்றே; உண்பீரெல்லாம் சிறிதளவேனும் உணவைப் பசித்தார்க்கு இட்டு உண்மின் என்றதாம். இடுதன்மேல் உண்மின் என்றது பின்னும் இடுதற்குயிர் வாழ்தல் வேண்டி. இவ்வாறு இட்டுண்டு அறநெறியே கைப்பிடித்தீர்க்குப் பயனளித்தற்குத் தெய்வம் பலவில்லை ஒருவனே யென்று நினைந்து அவனை இங்கு உணரவல்லீர் என்றும் அங்ஙனம் உணரவல்லீராயின் நுமக்கு அறுக்கரிய வினை ஐந்துந்தாமே அறும் என்றும் கூறியதாகக் கொள்க. புருடனென்று மறைகூறுதலான் ஒருவன் என்றாள். வினை ஐந்து. அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, வெகுளி, இவற்றான் ஆயின (சிவஞானபோ: டாயிரம்).* (21)

251. திருவுற்ற தென்னன் றிருந்தேளவை யார்தம்
பொருவற்ற தெய்வப் புலமைப்—பெருமைப்பா
டிம்ப ருணர வியற்புலவர் தம்மொடுசூழ்ந்
தைம்பொற் கிழிதூக்கி னான்,

(இ-ள்.)—திருவுற்ற தென்னன்—செல்வமிக்க தென்னவன். திருந்து ஔவையார் தம்—ஒழுக்கத்தாற்றிருந்திய ஔவையாருடைய. பொருவற்ற தெய்வப்புலமை—ஒப்பில்லாத திப்பிய ஞானம்; "திரு வேறு தெள்ளியராதலும் வேறு" (குறள். 374) ஆதலான் திருமிக்க வன் தெள்ளியார் புலமையின் பெருமைத்திறம் இங்குணர விரும்பி னன் என்க. இயற் புலவரைத் தனியே பிரித்தது ஒன்று சூழ்ந்து துணிதற்கண் அவரே தக்க துணையாதல் கருதி. ஐம்பொற்கிழி—பொன்னாற்கிழி ஐந்து. தூக்கினன்—தூங்கவிட்டான். (22)

252. மூன்று நிகள மிறற்பொருட்டு மூன்றேன்றற்
கான்றது நேர்நிறைநில் லாவகவ—னொன்றவோன்றற்
கின்னாவு கோடி யெழிற்கவிசோல் கேன்றிட்டா
னன்னன் போலங்கிழியோ ரைந்து.

(இ-ள்.)—மூன்று நிகளம் இறற்பொருட்டு—மூன்று சங்கிலிகள் இறுதற்பொருட்டு. மூன்று—மூன்று கவிதைகளும். ஒன்றற்கு—ஒரு சங்கிலிக்கு. ஆன்றது நிறைநில்லா அகவல்—அமைந்தது ஒப்பில்லாத அகவற் கவிதையும்; ஒன்றற்கு ஆன்றது அகவல் என்க. ஈன்ற ஒன் றற்கு—மற்றுத் தொங்கியதோர் சங்கிலிக்கு. இன் நாலுகோடி யெழிற் கவி—இன் நாலுகோடி அழகுடைக் கவிதையும். சொல்கென்று—சொல் லுக என்று சொல்லி. பொலங்கிழியோரைந் திட்டான்—பொன்பொதிந்த ஓரைந்து கிழிமுடிப்புக்களை இட்டுவைத்தான். எ-று. (23)

253. கற்ற பயனக் கடவு ளடிபரவப்
பெற்றே னவனருண்மீப் பெய்போழுதின்—மற்று
ரிடைதட்ப வல்லா ரேனவியைந்து பாடு
நடைசோற்ற சேந்நாவி னள்.

(இ-ள்.)—கற்றபயன—பல்கலையுங் கற்றதனாலாகிய பயனாக, தெய்வத்தின் திருவடிகளை ஏத்தப் பெற்றுள்ளேன். அவன்—அக் கடவுள். அருளை என்மீது பெய்யும் காலை. மற்று ஆர் இடைதட்ப வல்லார்—வேறு யார் இடையே புகுந்து தடைசெய்ய வல்லராவர். என வியைந்து—என்று தன்னுள்ளே கூறு இசைந்து உடன்பட்டு. நடை சொற்ற செந்நாவினள் பாடும்—உலகிற்கு ஒழுக்கங்கூறிய செவ்விய நாவினையுடைய ஔவை பாடுவாள். எ-று.

கற்றபயன அடிபரவப் பெற்றேன் என்றது "கற்றதனாலாய பய னென்கொல் வாலறிவ, னற்றா டொழாஅ ரெனின்" (குறள். 2) என்ற

தைத் தழீஇ வந்தது. பெற்றேன் என்றது சுற்றம் பரவப்பெற்றார் பலரென்பது குறித்தது. அவனாகிய மேகம் அருளாகிய மழையை மீது பெய்யும்பொழுதில் எ-று. பெய்தல் வினையால் உருவகமாதல் குறித்ததாம். "மலருமிந்நோய்" (குறள் 1227) என்புழிப் போலக் கொள்க. பரவப் பெற்றேன்மீது அருள்பெய் பொழுதின் என்புழிப் பரவப்பெறுதலை அருள் பெய்தற்குக் காரண மாக்காது அருள் பெய்தால் அது தங்குதற்குரிய அதிகாரிக்கு விசேடணமாக்குக. எங்ஙனம் திடரைப் பள்ளஞ் செய்தல் மழை பெய்தற்குக் காரணமாகாது முகில் பெய்தால் நீர் தங்குதற்குரியதாகும் அங்ஙனமே இதனையுங் கொள்க. அருளைப் பெய்விப்பார் பிறர் ஒருவரில்லாமையால் அதனைத் தட்டாரும் இல்லாமை கருதித் தட்பவல்லார் மற்று ஆர் என்றான். யார்—ஆர் என மரீஇயிற்று. "ஆரானு மல்லனறிந் தேனவனையான்" (சிறிய திருமடல்) என்புழிக் காண்க. இங்ஙனம் அரியனபாடற்கு இயைதல் அருமை குறித்து இயைந்து எனப்பட்டது. இயைந்தபடி பாடவல்ல நாவுடைமை தோன்றச் செந்நாவினேன் எனலாயிற்று. "அறங்கரை நாவின்" (தொல்-பாயிரம்) என்பது போல நடைசொற்ற செந்நா எனப்பட்டது. தட்ப—தடுக்க "புள்ளிடை தட்ப" என்பது புறம். (124). (24)

இனிவருவன மூன்றும் ஔவைபாடியன (பழம்பாடல்.)

254. "தண்டாம லீவது தாளாண்மை தண்டி
யடுத்தக்கா லீவது வண்மை—யடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
போய்த்தா னிவனென்று போமே லவன்குடி
யெச்ச மிறுமே லிறு."

(இ-ள்.)—தண்டாமல்—இரப்பவன் தணிந்து சில சொல்லாமல் ஈவது—அவன் விரும்பிய தறிந்து ஈதல். "தண்டாவீகை" என்பது புறப்பாட்டு (6). தாளாண்மை—ஒருவன் ஈதற்குச் செய்த முயற்சியின் பயனாகும் எ-று. தாளாண்மை—ஆகுபெயர்; "ஈதற்குச் செய்க பொருளை" என்பது திரிகடுகம். தண்டியடுத்தக்கால் — அடுத்துத்தண்டியக்கால் என்க; அடுத்து நின்று தணிந்து சில சொல்லியக்கால் எ-று. ஈவது வண்மை—ஈதல் ஒருவன் கண் வள்ளன்மையின் பயனுங் கழிவதாகும்; அடுத்தடுத்துப் பின் சென்றால்—பலகால் அடுத்து வழிபட்டுச் சென்றால். ஈவது காற்கூலி—கால் சென்ற செலவிற்குக் கூலியின் பொருட்டாயது எ-று. அங்ஙனம் வழிபட்டுச் சென்றும் இவன் பொய்த்தான் என்று போமேல்—வழிபட்டும் ஒன்றுங் கொடாமையால் இவன் உள்ளது

பொய்த்தானுமென்று நினைந்து வறிது மீள்வனேல். அவன் குடி எச்சம் இறமேல்—அவன் பிறந்த குடிவழி இடைமுரியுமாயின். இறு-நீயும் இடைமுரிக என்று இழியிட்ட நிகளத்தை நோக்கிக் கூறியதாகக் கொள்க. ஈகையாளரை முதல் இடைகடை யென முத்திறப்படுத்து அவரவர் தகுதிக்கேற்ப எச்சம் வளரும் என்றும் இவரின் வேருய்க் கூலி யளவுங் கொடாது பொய்த்தானுக்கு எச்சம் அழியும் என்றும் கூறி இவ்வுண்மை பலருந் தெளிய 'இறு' என்று ஏவினுளெனக் கொள்க. அவன் குடி யெச்சமிறுதல்கூறியதனுல் அவனிறுதல் தனியே கூற வேண்டாதாயிற்று. (25)

255. "சென்றுழ துண்பதற்குச் செய்வ தரிதேன்று
மன்றுழ துண்பான் மனைவாழ்க்கை—முன்றிலிற்
றுச்சி லிருந்து துடைத்தேழுகண் ணீரானே
ழெச்ச மிறுமே லிறு."

(இ-ள்.)—உண்பதற்குச் சென்று செய்வதரிதென்றும், உண்பதற்கு உழுது செய்வதரிதென்றும் கொள்க. உண்பதற்கு—துய்ப்பதற்கு. சென்று செய்வது—கலத்தினும் காலினுஞ் சென்று பொருள் செய்வது. அரிது—அருமையானது. உழுது செய்வது—உழுது பயிர்செய்வது. பிறநாட்டுப்புக்குப் பொருள் செய்வதும், தன்னூர்க்கண் வதிந்து பொருள் செய்வதும் ஆகிய இரண்டினும் மெய்வருந்த வேண்டுதலின் அரிதென்று நினைந்து என்று கருதியதாகக் கொள்க. மன்று உழுதுண்பான்—நீதி மன்றங்களிற் சொல்லால் அடியகழ்ந்து துய்ப்பான். மன்றுழுது என்பது "களவுழவு" (அகம்-91) என்புழிப்போல வந்ததெனினும் அமையும். ஈண்டு மன்றுழுதுண்டல் மன்றங்களிற் பொய்க்கரி கூறி அதனுற்றுய்த்தல் கருதிற்று. மன்றுழுதுண்பான்—வாய்மூட்டன் என்பதும் பொருந்தும் "வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும், வல்லாளன் வாழ்ந்தமனை" என்பதனுல் இவன் பண்டே இந்நாட்டுண்மை உணரலாம். துச்சில் முன்றிலிருந்து—துச்சின் முற்றத்திலிருந்து எ-று. உள்ளே ஒன்றும் இல்லாது வறிதாதலின் முற்றத்திருத்தல் கூறிற்று. துச்சில்—ஒதுக்கிடம். துடைத்தெழு கண்ணீர்—துடைத்தவளவின் அருது எழுகின்ற கண்கள் அழுதநீர். கண்ணீராகிய படையான் ஏழ் எச்சமிறுமேல் என்க. கண்ணீர் படையாதல் "அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள்-555) என்பதனுனறிக. மனைவாழ்க்கை யேழெச்சம் என்க. கண்ணீர்—அழிவழக்கால் வழக்கிழந்தவன் கண்ணீர். (26)

256. 'வழக்குடையார் நிற்ப வரும்பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்வான்—வழக்குடையார்
சுற்றமுந் தாமுந் துடைத்தெழுகண் ணீரானேழ்
சுற்ற மிறுமே லிறு.''

(இ-ள்.)—வழக்குடையார் நிற்ப—வழக்கைத் தமக்குரியதாக வுள்ளவர் புறம் நிற்க. வரும்பொருள் கைவாங்கி—வழக்கில்லாரான் வரும் பொருளைக் கையில் வலிந்து கொண்டு. அழியாவழக்கை வழக்கழிதல் சொல்லின் என்க. வழக்குடையார் தாமும் சுற்றமும் என்க. இது மன்றத்து நீதித் தலைவனை நோக்கிற்று. சொல்வான் ஏழ்சுற்றம் இறுமேலிறு என்க. ஏழ்சுற்றம் இறுதல் கூறியதனாற் சொல்வான் இறுதல் வேறு கூறினாரில்லை. இதனைக் "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ முண்பதூஉமின்றிக் கெடும்'' (குறள்) என்பது போலக் கொள்க. (27)

257. எனமூன்று மௌவை யெடுத்து மொழியா
முனநான்ற பொன்னிகள மூன்று—மனமூன்ற
வேந்த னவையோர் வியப்ப விடையிற்ற
வேந்துங் கிழிவீழ்ந் திட.

(இ-ள்.)—என எடுத்து மூன்றும் ஔவை மொழியாமுனம் என்க. மொழியாமுன்னம் என்றது பாடல்கள் முழுமையும் சொல்லுதற்கு முன்னம் எ-று. நான்ற பொன் நிகளமூன்றும்—தொங்கவிட்டகரும் பொன்னலாகிய மூன்று சங்கிலிகளும், வேந்தன் மனம் ஊன்றவும் அவையோர் வியப்பவும், இடையிற்ற—இடையில் இற்றன. ஏந்துக் கிழி வீழ்ந்திட—தான் தாங்கிய பொற்கிழி கீழே வீழ்ந்து இடுவதாக. வீழ்ந்திடை இற்ற எ-று. மனம் ஊன்ற என்றது வேந்தன் இவள் பெருமையை மனத்திலழுந்த நினைத்தல் குறித்தது. வேந்தனும் அவையோரும் மனமூன்றவும் வியப்பவும் இடையிற்ற எனினுமமையும்.

258. வையக மெல்லாம் வளவயலா வென்றெடுத்தோர்
பொய்யி லகவல் புகல்பொழுதின்—மையிலாண்
முன்னங் கிழியின் முடிப்பவிழாப் பெய்ததுபொன்
மன்னன் கெழும மதித்து.

(இ-ள்.)—வையகமெல்லாம்—பூமி முழுதும். வளவயலா—வளஞ் செய்யும் விளை நிலனாக. விளையா நிலனே மிகவுண்மையால் எல்லாம் வயலா என்றார். இப்பாடல்.

"வையக மெல்லாம் வளவயலா வானோர்
தெய்வமா முகடு சேரி யாகக்
காணமு முத்து மணியுங் கலந்தன
கோடாநு கோடி கொடுப்பினு மொருநா
ளொருபொழு தொருவனூ ணொழிதல் பார்க்கு
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே."

என்பதாம். வானோர் தெய்வமாமுகடு—வானுலகத்தவருடைய தெய்வத் தன்மைபொருந்திய அண்டப் பெருமுகடு. சேரியாக—பலர் திரண்டு தங்கும் இடமாக. காணம்—பொன். கலந்தன—இவை கலந்த பொருட் டொகைகள். கோடாநுகோடி—பல் கோடி கோடி. ஒருவனுண ஒரு நாள் ஒரு பொழுதொழிதல் பார்க்கும் நேர்நிறை-ஒருவனுக்கிடும் உண வால் அவற்கு ஒருநாளில் ஒரு பொழுதொழிதலைப்பார்க்குமதற்கு ஒத்த நிறையாகக், கலந்தன கொடுப்பினு நில்லாது என்க. உறுதிபற்றி யிருகாற் கூறலாயிற்று. கலந்தன கொடுப்பின் பெற்றாற்கு மகிழ்ச்சி யுடன் அவைகாத்தலை நினைந்து துன்பமும் தோன்றுமாதலின் மகிழ்ச்சி யே முகத்திற்றோன்றலால் ஒருவற்கு ஈத்து, உணவால் ஒருபொழு தொழிதல் பார்த்தல் உயர்ந்ததாயிற்று. "உண்டிகொடுத்தோருயிர் கொடுத்தோரே" (புறம். 18) என்பதனாற் கலந்தன பலவும் உயிராகா மையின் நேர்நிறை நில்லாமையுணரலாம். பொய்யிலகவல்—மெய்ப் பொருளுடைய அகவற்பா. புகல் பொழுதின் சொல்லும் அமயத்து. மையிலாள்—குற்றமில்லாதவள். கிழியின் முடிப்பவிழா—பொற்கிழியின் முடிப்பவிழ்ந்து. மன்னன் மதித்துக் கெழுமப்பொன் பெய்தது எ-று. மதித்துக்கெழும-நன்குமதித்து உள்ளம் நட்புக்கொள்ள. (29)

259. கோடி மதியாதார் கோடாநு கோடியுண்ணீர்
பாடு மிவைமுதலும் பாநான்கு—மேடவிழ்தார்
மாறற் குரைத்தாண் மதிப்பேரியாண் மற்றோன்றும்
பீறிப் பொழிந்ததுபோன் பேர்ந்து.

(இ-ள்.) 'கோடி' எனவும் 'மதியாதார்' எனவும் "கோடாநு கோடி" எனவும் 'உண்ணீர்' எனவும் பாடுமிவை முதலும் பாநான் கும்—பாடப்படுமிச்சொற்கள் முதலுகின்ற நான்குபாவையும். ஏடு அவிழ் தார் மாறற்கு—இதழ்கள் மலர்ந்த மாலையையுடைய பாண்டியன் பொரு ட்டு. மதிப்பெரியாளுரைத்தாள்—மதியாற் பெருஞ் செயல் செய்பவ ளாயினாள் சொற்றாள். எஞ்சிய பிறிதொன்றும் சிறிதிடம் பெயர்ந்து

விழுந்த பொன்னைப் பெய்தது எ-று. மீறுதல்-கிழிதல். "மீறிற்றும் அண்டம்" என்றார் கம்பநாடரும் இந்நான்கு பாடல்கள்,

"கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்"

"மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்"

"கோடாது கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்"

"உண்ணீருண் ணீரென்ன ஊட்டாதார் தம்மனையி
னுண்ணாமை கோடி பெறும்."

இவை யென்றுணர்க. குடிப்பிறந்தாரே பழிநாணுவாராதலிற் பழி படாது வாழ்தற்குக் குடிப்பிறந்தாருடன் கோடிகொடுத்துங் கூடுதலைச் சிறப்பித்தாரென்க. "குடிப்பிறந்து தன்கட்பழிநாணுவானைக், கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு" (குறள்-794) என்றது காண்க. "இற்பிறந்தார் கண்ணல்லதில்லை யியல்பாகச் செப்பமு நாணு மொருங்கு" (ஷை. 951) என்பதனாற் குடிப்பிறந்தார்க்குப்பழி நாணுதல் இயல்பாதல் உணர்க. மதியாதார் தம்மை மதியாமையை மதித்து அவர் முற்றம் ஒருகாலுஞ் சென்று மிதியாமை கோடிபெறும் என்க. உம்மை விகாரத்தாற் றொக்கது. மதியாதாருள்ள தெருவிற் செல்ல நேர்தல் கூடுமாதலின் முற்றம் மிதியாமையை விதித்தார். கோடுதற் பொருட்டுக் கோடாதுகோடிகொடுப்பினும் என்க. கோடாது கோடி என்பது "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" (தொல்—சொல். 396) என்றபடி சிதைந்து வந்தது. "நடுவிகந்தா மாக்கத்தை யன்றே யொழியவிடல்" (குறள். 113) என்பதனால் இக்குணம் கூறினார். உண்ணீர் உண்ணீர் என்ன ஊட்டாதார்—பலமுறை உண்ணீர் என்று சொல்லுதலுடன் உண்பிக்காதவர் தம்மகத்து என்க. உண்ணாத நீவிர் உண்ணுவீராகுக என்று கூறினுமமையும். அவரகத்து உண்ணாமையைச் சிறப்பித்தது அன்பிலாரிட்டதாதல் கருதி. "என்பெலாம் பற்றி யெரியவே யையகோ, வன்பிலானிட்ட வமுது" என்பதனானிதனுண்மை யுணர்க. (30)

260. வையைக்கோ மாறன் மறுவி லறிவாட்டி
தெய்வப் புலமைத் திறங்கண்டு—மெய்யே
பெறற்கரிய சீரயர்ந்து பேணினான் யாரு
முறற்கரிய வென்னா வுரைத்து.

(இ-ள்.)—வையைத் துறையையுடைய கோப்பாண்டியன். மறுவில் அறிவாட்டி—குற்ற மில்லாத அறிவினையுடையாள். தெய்வப் புலமைத்திறம்—திப்பியஞான வன்மை. பெறற்கரிய சீரயர்ந்து—பிறர் புலவர் பெறுதற்கரிய சிறப்புச்செய்து. யாரும் உறற்கரிய என்று மெய்யே யுரைத்துப்பேணினான்—எத்துணைப் பெரியாரும் உறுதற்கரியனவாம் இவை யென்று உண்மையே கூறிப் போற்றினான்-எ-று. யாரும் என்புழி உம்மை உயர்வு குறித்தது. "யாருமோரறிவரிய நிலையன்" (திருவாய்மொழி) என்புழிப்போல. மெய்யேயுரைத்து மெய்யே பேணினான் என்க. (31)

261. நெஞ்சவல மில்லா நிறைந்த கலைத்தகுவி
பஞ்சவனுஞ் சான்றோரும் பாராட்ட—விஞ்சுதன்க
ணுற்றபொரு ளற்ற ருறநல்கிப் பாண்டியற்கு
மற்றிவைநேர் சொற்றாண் மதித்து.

(இ-ள்.)—நெஞ்சத்து அவலமில்லாமல் நிறைந்த கலையாற் றக்கவள் என்க. அவலம்—ஈண்டுக்கவலை. நெஞ்சத்தவலமிலராகிய கயவரின் (குறள்-1072) விலக்கற்கு நிறைந்த கலைத்தகுவி எனலாயிற்று. மேற்றான் பாரியைப்பற்றிக் கூறுவதனைலிது விளையுமென்று கவலை கொள்ளாமையைக்குறித்து அவல மில்லாக்கலைத்தகுவி என்றது கண்டுகொள்க. பஞ்சவன்—பாண்டியன்; ஐவருளொருவனாகிய அருச்சுனன் வழியினன் ஆதலிற் போந்த பெயரென்ப. அருச்சுனன் மகன் பப்ருவாகன பாண்டியன் என்பது வியாச பாரதத்துட்கண்டது. தன்கண் உற்றவிஞ்சு பொருள் என்க. அற்றார் உறநல்கி—வறியார்கொள வளித்து. பஞ்சவனும் சான்றோரும் என்று மேற்கூறியதனால் அவருட் பிரித்துக்கூறியது தோன்றப் பாண்டியற்கு எனவேண்டிற்று. தன்னுள் மதித்துக்கொண்டு இவை சொற்றாள் என்க. வரவிடைப்பெற்றவை பிறர் பிறர்க்கார்த்தி (பொருநாறு) என்பதனால் கலைவல்லவர் பிறர்க்களித்தலுணரலாம். (32)

262. உலகத் துயர்ந்தோ னொருபாரி யென்று
பலகற் றுயர்ந்தோர் பகர—விலகுற்ற
வத்தகையோற் காணு மவாஅப் பிடித்தீர்ப்ப
வித்தரையிற் போந்தே னிடை.

(இ-ள்.—ஒருபாரி உலகத்துயர்ந்தோனென்று என்க. ஒருபாரி—பாரியொருவன், பலகற்றுயர்ந்தோர்—பலகற்றுக் கற்றவாறொழுகி யுயர்ந்தோர்; தான் நம்புதற்குக்காரணங்காட்டியது. இலகுற்ற அத்தகை

யோன்—விளங்குற்ற அத்தகைமையோனை, காணுமவா—கண்ணிற் காண மனத்துண்டாகிய ஆசை. இத்தரையின்கண் இடையிற்போந் தேன் எனக. தன்னை நோக்கி ஔவை எய்தவில்லை யென்று பாண்டி யன் கொள்ளற் காதல் கண்டுகொள்க. (33)

263. பாரியை நோக்கிப் படர்ந்தயான் றென்னர்கோ
னேரியல் கோயி லிடைப்புக்குன்—பேரவையைக்
கண்டே களிக்கக் கருதும் விருப்பினமர்ந்
துண்டேன் செவிவாய்க் குணு.

(இ-ள்.)—பாரியைக் கருதி வழிப்படர்ந்த யான், தென்னர் கோன்—விளி. கோயிலிடைப்புக்கு அமர்ந்து என்க. புகுதற்கும் அமர் தற்கும் சாரணம் உன் பேரவையைக் கண்டே களிக்கும் விருப்பு என்றதாம். இதனுற்றன்னைக் காணும் விருப்பின னல்லனெனப் பாண்டி யன் வினைதற் காதல் கண்டுகொள்க. வாயுணவினுஞ் செவியுணவு சிறத்தல் நோக்கி முன் வைக்கப்பட்டது. (34)

264. கறங்கு மிசைப்புலவர் கண்விளக்கத் தெய்யேன்
பிறங்கு மமையமும் பெற்றே—னறங்கொண்
மதிவழியின் மாற வளர்கநின் செங்கோ
லுதிவழிய வின்பஞ் சுரந்து.

(இ-ள்.)—கறங்கும் இசைப்புலவர்—எங்குஞ் சுழலும் புகழுடைய புலமையாளர்; நல்லிசைப் புலவராதலுணர்க. கண் விளக்கத்து—கண்ணாகிய விளக்கொளியின் கண் எ-று. எய்யேன் பிறங்குமமயமும் பெற்றேன்—அறியேனாகிய யான் விளங்கும் வேளையும் பேறாக எய்தி னேன். இருளிடைப்பட்ட பொருள் விளக்கொளியின் விளங்குதல் போலப் புலவர் கண்ணாகிய விளக்கொளியின் அறியேன் விளங்குதல் பெற்றேன் என்றதனாற் றற்புகழ்தலாகாமை யுணர்க. புலவர் கண் ணைக்கத்தால் விளங்கினேன் என்பது குறிப்பு. மதியினின்று போந்த அறங்கொள் வழியிற் பாண்டிய என்க. நின் செங்கோல் மக்கள் துதி யாகிய நீர் பெய்தலானனைந்து வழியும் வண்ணம் அவர்க்கு இன்பம் பெருக்கி வளர்வதாகுக எ-று. அறங்கொள் வழி என்றதனால் நீ யதற் கேற்ப அறங்கொள்க என்றும் நின் செங்கோல் வளர்க என்றதனால் நீ கொடுங்கோலனாகற்க என்றும் துதிவழிய என்றதனாற் பழியி னனையாது என்றும் இன்பஞ் சுரந்து என்றதனாற் றுன்பஞ் சுரவாது என்றும் குறிப்பித்தாள். "எய்யாமையே அறியாமையே". என்பது தொல்காப்பியமாதலின் (சொல்—உரி) எய்யேன் என்றாள். (35)

265\. தீந்தண் டமிழ்பெய்த தெய்வ முனிபோதியில்
வேந்த னெனச்சிறந்த வேன்மாற--வேந்து
நிலவ ரேவருக்கு நேர்வரிதே நின்போற்
புலவர் நடுவிருக்கும் பொற்பு.

(இ-ள்.)—தெய்வமுனி – அகத்தியன். "அமரமுனிவனகத்தியன்" என்பது மணிமேகலை. தனது தெய்வத் தன்மைக்கேற்ப இனிக்காத வெய்ய வுவர்க்கடலை யுண்டு தீவிய தட்பமுடைய இன்றமிழ்க் கடலை உலகிற் பெய்த முனி எ-று. முனி பொதியில்—முனிவனுடைய பொதியின்மலை "பொதியின் முனிவன்" என்பது பரிபாடல் (11–11) அம்மலைக்கு வேந்தனுதல் மற்றை இருவரினுஞ் சிறந்தது என்பது குறிப்பு. தமிழ் முனி பொதியில் வேந்தனுதற்கியைபப் புலவர் நடுவிருக்கும் பொற்பு நின்போல் ஏந்து நிலவரெவருக்கும் நேர்தலரிது எ-று. ஏந்து நிலவருட் புலவரேந்தி அவர் நடுவிருக்கும் பொற்பு என்க. நேர்தல்—பொருந்துதல். "கற்றோர்க் காண்டலாகுங் காவலிற், பெற்ற பயனென வெற்றி வேந்தன்" (மகத—அமாத்தியர்) எனப் பெருங்கதைக் கண் வருதலாற் காவலர்க்குக் கற்றூர் சூழல் வேண்டப்படுதல் உய்த்துணரலாம். (36)

266\. கோமாற னுள்ளங் குறிக்கோள்ள விவ்விசைத்துப்
போமாறு நாடிப் புறப்பட்டாள்—பூமாண்
புகழ்சிறந்த பாரி புரைதீரு மாட்சி
நிகழ்பறம்பு நீடு நினைந்து.

(இ-ள்.)—குறிக்கொள்ள—குறித்துக் கொள்ள இவ்விசைத்து—இவற்றை உரைத்து. போம் ஆறு—போதற்குரிய வழி. பூமாண் புகழ்—உலகின் மாட்சிமைப்பட்ட கீர்த்தி. புகழ்சிறத்தற்குக் காரணமான பாரி: புகழாற் சிறந்த பிறரை விலக்கியது. பலர் புகழ்தலாற் சிறந்தார்க்கும் பலர் புகழும் வண்ணம் சிறந்தார்க்கும் உள்ள வேற்றுமை நுனித்தறிக. புரை தீரும் ஆட்சி நிகழ் பறம்பு—குற்றம் நீங்கும் அரசாட்சி நிகழ்கின்ற பறம்புமலை. நீடு நினைந்து என்றது இடைவிடாது நினைதலான் எ-று. பேரரசர் பலர் புகழ்தலாற் சிறப்பார் என்றும் அவர்கட் புரை தீருமாட்சி நிகழ்தலரிதென்றுங் குறிப்பித்தவாறும். (37)

267\. மதுப்பெய் தலர்சோரிந்து வண்கனிகள் சிந்தி
வேதுப்போழிய நீழல்ரேறு மேன்கா – லேதிர்ப்பேய்தத்

தண்கோம் பிலைவிசிறித் தாருச் சுரும்பிசைப்பக்
கண்கோள் வழிநடந்தாள் கண்டு.

(இ-ள்.)—தாரு—மரங்கள். பெய்து—சொரிந்து. சிந்தி விசிறிச் சுரும்புகளான் இசையைச் செய்ய என்க. கீழ்நீரூறும் மென்கால் வெதுப்பொழிய எதிர்ப்பெய்த எ-று. எதிர்ப்பெய்த—எதிர்தற்கண் எய்த விசிறி என்றியைக்க. பறநாடு செல்வழியிலே தாருக்கள் நன்றாற்றல் கூறி அவ்வழி மக்கள் நன்றாற்றல் குறிக்கொள்ள வைத்தவாறும். கண் கொள் வழி கண்டு நடந்தாள்—கண்ணைக் கவர்கின்ற வழியினைப் பார்த்துக்கொண்டு நடந்தனள் எ-று. கண் கொள்வழி என்றது இனைப் பற இயங்குதற்குரியது குறித்தது. மதுப்பெய்து கனிகள் சிந்தி என வாய்க்கும், அலர் சொரிந்து என்பதனால் மூக்கிற்கும் இலைவிசிறி என்பதனால் மெய்க்கும் சுரும்பிசைப்ப என்பதனாற் செவிக்கும், கண் கொள் வழி என்பதனாற் கண்ணிற்கும் இன்பஞ் செய்தல் கூறியவாறும். வாய்க்குமதுவுங் கனியுங் கூறியது குடிப்பதும் உண்பதுங் கருதியதாம். தாகந் தணிப்பதும் பசி தணிப்பதும் வேறு வேறாதலுணர்க. (38)

268. சில்லோ சனைபோய்ச் செருக்கில் கோடைப்பாரி
நல்லோ னுடைப்பறம்பு நாடெய்திச்—சொல்லோங்க
மாரி யளிக்கும் வளனெல்லாங் கண்டுணர்ந்தாள்
பாரி யளிக்கும் படி.

(இ-ள்.)—ஓசனை சில கடந்து. செருக்கில் கொடை—கொடைமையாற் பெருமிதங் கூறப்பட்டுள்ளதேனும் (தொல்—மெய்ப்பாட்டியில்) அப்பெருமிதத்தாற் செருக்கடைதலில்லாத கொடை எ-று. பாரி நல்லோன்—பாரியாகிய நல்ல இயல்புடையான். பறம்புநாடு—பெயர். சொல் ஓங்க—நெற்பயிர் ஓங்கி வளர; "சொல்லருஞ் சூற்பசும் பாம்பின்றோற்றம் போன், மெல்லவே கருவிருந் தீன்று" என்பது சிந்தாமணி. மாரியளிக்கும் வளனெல்லாங் கண்டு பாரியளிக்கும்படி யுணர்ந்தாள். எங்க. பாரியளிக்கும் நிலன் என்பது மாரியளிக்கும் வளனால் கண்டு அறிந்தாள் என்பது குறிப்பு. (39)

269. அறம்பகர மேவிவள ரந்நாட்டின் மேன்மைத்
திறம்பகர்த லில்லாமற் றேற—நறும்பேரியர்
முன்பறநா டென்று மொழிந்தனரோ வென்றுய்ந்தா
ளன்புறநீ டவ்வை யளாந்து.

(இ-ள்.)—அறம்பகரம் மேவிவளர் அந்நாடு—அறக்கடவுள். அழகு பொருந்தி வளர்கின்ற அழகிய நாடு. பகரம்—அழகு. "பகரமாமயின்

மிசைவ்ர நினைவதும்'' (திருப்புகழ்) என்பதனானறிக. பறநாடு—அறம் என்பது பகரம் என்பதனை மேவிற் பறம் ஆதலும் அதனாற் பெயர் சிறந்து பறநாடாதலும் உய்த்துணர்க. புறம் புறம்பாதல் போலப் பறம் பறம்பாயிற்றென்க. மொழிந்தனரோ என்புழி ஓ ஐயத்தின் வந்தது பிறிது காரணமுண்டோ என்று தன்னுள் ஆய்ந்தாள் என்றலால் உணர்க. நீடு அன்புறுதலாற் றன்னறிவானளந்து ஆய்ந்தாள் எ-று. அன்பிற்கும் அறிவிற்கும் தக அளந்து கூறி ஆய்ந்தவாறு காண்க. முன் நறும் பெரியர்—முன் நன் பெரியோர். நறும்பொன் என்பது போலக் கொள்க. புகழ் மணமுடைய பெரியோர் எனினுமமையும். (40)

270. பார்த்தவள வூரெல்லாம் பாடு புலவருடைச்
சீர்த்தவள மாளிகைகள் சேணோங்கிப்—போர்த்த
கார்தழுவி நின்றவா கண்டுமகிழ்ந் தாளறிவி [பெருங்
னேர்தழுவி நின்ற விவள்.

(இ-ள்.)—தான் கண்ணாற் கண்ட வளப்பம் பொருந்திய எல்லா ஊர்களும். பாடு புலவர்—பாடிய புலமையாளர். சீர்த்தவள மாளிகைகள்—சிறப்புடைய தவள மாளிகைகள். தவள மாளிகைகள்—வெண்சுதை மாடப் பெருமனைகள். சேணோங்கி—உயரத்தில் நெடிது வளர்ந்து போர்த்த பெருங்கார் தழுவி நின்றவா கண்டு—மூடிய பெரிய மழை முகிலைத் தழீஇ நின்றவாறு கண்டு; இவள் மகிழ்ந்தாள். அறிவினேர் தழுவி நின்றவிவள்—அறிவாகிய ஏரினைத் தழீஇ நின்ற இவள் எ-று. இன் அல்வழிச்சாரியை "காமத்திற் காழில்கனி'' (குறள். 119) என்புழிப்போல. பார்த்த எல்லா ஊர்களிலும் புலவர் மாளிகை கார்தழுவி நிற்றல் கண்டு அறிவி னேர் தழுவி நின்ற இவள் மகிழ்ந்தாள் என இயைபு படக்கூறியது காண்க. அழுக்காறின்மையும் அறிவினேர் தழுவற்கியைய மகிழ்ந்தாள் என்பதனானுடன் புணர்த்தியதாம். (41)

271. குடியுயர்பான் வேள்பாரி கோலுயர்பு தேர்ந்து
படியுயர்பே லாங்கண் பருகி—மிடியுயர்பா
னஞ்சும் புலவர்க் கரணும் பறம்புமகிழ்
நெஞ்சம் புகக்கண்டா ணேர்.

(இ-ள்.)—நாட்டிற் குடிகளின் உயர்வினால் வேள்பாரியின் செங்கோலுயர்தலைத் தெரிந்து கொண்டு அவ்விரண்டாலும், உண்டாகிய நாட்டினுயர்த்தியெலாம் கண்ணாற்பருகி எ-று. மிடியுயர்பான் அஞ்சும் புலவர்க்கு—வறுமை வளர்தலான் அஞ்சும் புலமையாளர்க்கு. அஞ்சுதல்

இரக்கவேண்டுதல் பற்றியென்க; "இரவச்சம்" (குறள் அதி. 107) எனவழங்குதலான் அறிக. "கிரயத்தன்ன வறன்" (புறம். 376) என்பதனானும் அஞ்சுதல் உணர்க. இவர் இரவாமலே குறிப்பறிந்து நல்கும் இடனுதலான் அரண் ஆகிய பறம்பெனப்பட்டது. அரண்—புக்கில். மகிழ் நெஞ்சம்புக அரண் ஆகிய பறம்பு நேர்கண்டாள் என்க. "நாவாக்குடியுயரத்தாங்கருஞ்சீர்க்கோவுயரும்" (சிறுபஞ்சமூலம்) என்றார் பிறரும். (42)

272. ஈதோ வருளிற் கினிய வரசிருக்கை
யீதோ வறியோர்க் கிரும்புக்கி—லீதோ
வறுமைப் பிணிதீர் மருத்துமலை யீதோ
வுறுமேய்ப் புகழ்நாறு மோன்று.

(இ-ள்.)—நன்று செய்தார்க்கும் தீது செய்தார்க்குந் தகஉதவற்கண்ணும், ஒறுத்தற்கண்ணும் அருளே நிகழ்தலானும் முறை பிறழச் செய்யாமையானும் அருளிற்கு இனிய அரசிருக்கை எனப்பட்டது. இரும்புக்கில் - பெரும்புகலிடம். பிற மருந்துகளாற்றீராத வறுமையென்னும் பிணியைத் தீர்க்கும் மருந்துடைய மலை. பிணிதீர் மருந்து-பாரிகொடை. உறுமெய்ப்புகழ் நாறும் ஒன்று—மிக்கவுண்மைப் புகழ் மணத்தற்குக் காரணமான ஒப்பற்றது எ-று. அருளிற் கரசிருக்கையாதலான் வறியோர்க்குப் புக்கிலாயிற்றென்றும் புக்கிலாதற் கேற்பப் பிணிதீர் மருத்துமலையாமென்றும் இவற்றான் மெய்ப்புகழ் நாறுமென்றும் இயைபுபட வந்ததுகாண்க. ஓ—வியப்பின்கண் வந்தன. "பெரும்பெயர்ப் பறம்பே" (புறம். 113) என்பதனான் மெய்ப்புகழ் நாறுத லுணர்க. (43)

273. ஈதோ புலவ ரினியசெந்நா வீற்றிருப்ப
தீதோ கவிவாழ்ந ரெய்ப்பினில்வைப்—பீதோநன்
மாந்தர் திலகன் வள்ர்பறம்பு மற்றீதோ
வேந்த ரழுக்கறுக்கும் வெற்பு.

(இ-ள்.)—இனிய சொல்லிற் செம்மைப் பொருள் கூறுநாயாதலால் இனிய செந்நா எனலாயிற்று. மெய்ப்புகழ் காணுதற்குப் புலவர் நாவில் வீறுடன் இருப்பது வேண்டப்பட்டது. நாவீற் றிருப்பதன் காரணம் கவிவாழ்நர் எய்ப்பினில் வைப்பாதலான் என இயைபுபட வந்தது. எய்த்தபோது கொள்ளற்கு வைத்த நிதி எ-று., மடவோர் உண்ணாது ஈயாதுவைக்கும் நிதியின் வேறு தோன்றக் - கவிவாழ

நர்வைப்பு எனப்பட்டது. "பறம்பு பாடின ரதுவே" (புறம். 108) என்பதனல் இம்மலே கவிவாழ்ந ருடையதாதல் உணர்க. கவிவாழ் நர்-கவிதையால் வாழ்கிற்பவர். நன்மாந்தர் திலகன்—நன்மக்களாகிய முகத்துக்கு மங்கள விலாஞ்சனையாகிய திலகம் ஆயினன். உலகராகிய உடம்பிற்கு நன்மக்கள் முகமென்றும் அம்முகத்திற்கு இப்பாரிவேள் திலகமென்றுங் கொள்க. இக்காரணங்களாற் பெருமுடியரசர் அழுக்காறு கொள்ளும்மலே ஈதோஎன்க. ஈண்டும் ஓ வியப்பு. சேரர் கொல்லியும், பாண்டியர் பொதியமும், சோழர் நேரியும் எய்தற்கரிய இச்சிறப்புக்களான் வியப்புண்டாயிற்றென்க. புறப்பாட்டுக்களில் (116-158) இப்பறம்பினை "அண்ணனெடுவரை" என்றதனு லிதன் தலைமையும் பெருமையுங் கருதிக் கூறியதாம். (44)

274. என்று சேவிக்கோத் தெழில்காண் பறம்போளிரு
நன்று பலவு நயந்தேண்ணித்—துன்று
வெறிவருந்தாள் வெற்பை விழைந்துற்ற ளௌவை
நெறிவருந்தா ளேகி நெடிது.

(இ-ள்.)—எனவுரைத்து முன் கேட்ட செவிக்கியைப அழகுவிழியிற் காண்டற்குரிய பறம்பு மலே விளக்குதற்குக்காரணமாகிய அறங்கள் பலவற்றையும் நினைந்து விரும்பிஎன்க. நயந்தெண்ணி என்பதனை எண்ணி நயந்தெனமாறுக. துன்று வெறிவரும் தாள்வெற்பை - மூக்கிற்குப் பொருத்தமான மணம் வருதற்குரிய பாத சைலத்தை; "தாள் வரை" (திருவாய்மொழி) என்பது வழக்கு. தாள்வெற்பு—வெற்பின் அடி; பின்முன்னுகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. நெறி நடந்தேகி வருந்தாள் விழைந்துற்றுள் என்க. நெறி நெடிது நடந்தும் வருந்தாமை விழைதலான் என்று காட்டியவாறுணர்க. சந்தனத்தையே விறகாகக் குறவர் எரித்தலானுண்டாகிய புகை தவழ்தலான்வெறிவருந் தாள் வெற்பு எனப்பட்டது "வெறிகமழ் சந்தனம்" என்ப (நாலடி) இப்பறம்புமலே யங்ஙனமாதல் "குறத்தி மாட்டிய விறற்கடைக் கொள்ளி, யார மாதலி னம்புகை யயலது, சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும் பறம்பு" (புறம். 108) எனவருதலான் அறிக. (45)

275. கோவேந்த ரவ்வியங்கோள் கோன்பாரி வண்மை [கோடு
மாவேந்த ரேன்னவிறு மாந்தேதிரும்—பாவேந்தர்
நீடு வரவே நேறிகாட்ட வேறினள்
தோடு வளர்பறம்பின் குன்று.

(இ-ள்.)—புலவர் இவன்கட் பரிசில் கொள்வர்; கோவேந்தர் இவன்கண் அழுக்காறு கொள்வர் என்பதாம். கோன்—பாரி. "பறம்பிற் கோமான்பாரி" பாரி வண்மைகொடு—பாரியின் கொடைக் கொண்டு எ-று. இவரும் அவனைப்ப வறியார்க்கும் அறிஞர்க்கும் வழங்கற்குரிய வள்ளன்மையைக்கொண்டு எனினும் அமையும். பாரியீத்த பொருட்பெருக்கத்தைக் குறித்ததாம். மாவேந்தர்—யானை குதிரை யேறிவரும் அரசர். இறுமாந்து—செருக்கி, இவ்வாறு வறியார் வேந்தரொப்ப இறுமாந்தெதிர்வர நல்கும் வள்ளன்மையே கோவேந்தர் அவ்வியத்திற்கு ஏது என்பது தோன்ற நின்றது காண்க. "வேந்தரை யிறந்து மிரவலர்க்கீயும் வள்ளியோன்" (புறம். 119) என்றதை ஈண்டைக்கு நினைக்க. பாவேந்தர் நீடுவரவே—கவிராசர்கள் நெடிது தொடர்ந்து வருதலே. ஏ-தேற்றம். கோடு—சிகரம். வளர்கின்ற பறம்பாகிய இனியகுன்று எ-று. குன்றேறினன் என்க. "இனியோன் குன்று" (புறம் 115) என்பதனால் இன்குன்று எனலாயிற்று. புறப்பாட்டில் (120) "ஆடுகழை நரலுஞ் சேட்சிமை......நாடு" என்பது பற்றிக் கோடுவளர்தல் கூறிற்று. (46)

276. நல்ல பறம்பு நகரேய்தி மாக்கபிலன்
மல்லன் மலையனைய மாளிகைகண்—டெல்லார்க்கு
மிக்கா னகத்துவகை மீப்போய் முகன்மலரத்
தக்காள் புகுந்தமர்ந்தா டான்

(இ-ள்.)—நல்லோன் உண்மையால் நல்ல பறம்பு நகர் எனலாயிற்று; "எவ்வழி நல்லவ ராடவ ரவ்வழி நல்லைவாழிய நிலனே" (புறம். 187) என்றது நோக்கியறிக. மாக்கபிலன்—பெருமையையுடைய கபிலன். மல்லன்மலை—வளநிறைந்த மலை. நுட்புரவெல்லா நிறைதலாலும் உயர்த்தியாலும் மாளிகைக்கு உவமையாயிற்று. எல்லார்க்கு மிக்கான் - மிக்கார் எல்லார்க்கும் மிக்கவன். நல்லிசைப் புலவர்க்குள் "விளங்குபுகழ்க் கபிலன்" என்பது காண்க. அகத்துவகை-மன மகிழ்ச்சி. முகனின் மலர்ந்து காட்ட என்க. என்றது. "உவப்பத் தலைக் கூடல்......புலவர் தொழில்" (குறள் 394) என்பதன் கருத்தைத் தழீஇவந்தது. தக்காள் – அக்கபிலற்கு ஒத்த தகுதியுடைய ஔவை. (47)

277. அன்போ டறுசுவைய வந்நால் வகையடிசி,
லின்போ டருத்த வினிதுண்டு—துன்போவார்

நின்ரு ளகத்து நினைவோர்ந் தவட்குரைத்தான்
போன்ரு விசையோன் புரிந்து.

(இ-ள்.)—அடிசில் அன்போடருத்த என்க. அடிசிலினும் அன்பு உயர்தல் நோக்கி ஒடு வந்தது. இன்போடருத்த என்றது கிடைத்த விருந்தின் உயர்வு பற்றி உண்டாகிய உள்ள மகிழ்ச்சியால் எ-று. அருத்த—ஊட்ட. இனிதுண்டு—அன்பினினிமையையும் அடிசில் இனிமையையும் துய்த்து. துன்பு ஒவாகின்ருள்—பசிவருத்தம் நீங்கி நிலை பெற்றவள். நின்ருள் என்றது மேற் பயணமில்லாதவள் என்பது குறித்தது. அகத்து நினைவு-வேள்பாரியைக் காண வேட்ட உள்ள நினைவு. ஓர்ந்து-தன்னறிவான் அவள் கூருமலே யுணர்ந்து. பொன்ரு இசையோன்-இறவாது விளங்கு புகழ்க்கபிலன். "உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசைக்கபிலன்" (அகம் 78) புரிந்துரைத்தான் - விரும் பிக்கூறினன் எ-று. "அறுசுவை நால்வகை யமுதமாக்கினர்" என்பது சிந்தாமணி (1937). அறுசுவைய அடிசில் - அறுவகைச் சுவையையு முடைய உணவு. அவ்வச்சுவைகளில் நாலுணவும் உளவாதலின் அந்நால்வகை எ-று. (48)

278. நெருந னினசீர்த்தி நீள்கோடைவேள் கேட்டுத்
திருநல் லவளீங்குச் சேர்ந்து—பெருநல்
விருந்தாக வெற்கு வினையூட்டுங் கோல்லேன்
றிருந்தாற்கு நீபோந்தா யின்று.

(இ-ள்.)—நினசீர்த்தி - நின்னுடைய புகழ்களைக், கொடைநீள் வேள் நெருநற் கேட்டு எ-று. நெருநல் - நேற்று. திருநல்லவள்-திருமகள் செய்யும் பயனினு நல்ல பயன் செய்பவள்; கல்வி யெழுமைக்கு மேமாப்புடைத்து" (குறள் 398) இங்குச்சேர்ந்து - இவ்வுழிப் போதுதலால் பெருமையு நன்மையுந்தரத்தக்க விருந்தினளாகு் வண்ணம்; என்றது. 'விருந்தின் றுணைத்துணை வேள்விப்பயன்" (குறள் 87) என்பதுபற்றி. எற்குவினையூட்டுங் கொல் என்று இருந்தாற்கு - எனக்கு நல்வினையுண்பிக்குமோ என நினைந்து அவாவியிருந்தான் பொருட்டு இன்று நீ போந்தாய் என்க. (49)

279. நின்னுசை யோவன்றி நீள்கோடைக்கை வேள்பாரி
தன்னுசை யோவிவணிற் றந்ததேன—வேன்னுற்
றுணிவரிதே யென்று துணைந்தேளவை யாரோ
டணிவருகோ யிற்புகுந்தா னன்று

(இ-ள்)—நெருநல் நினைந்தாற்கு இன்று நீ கிடைத்தலான் வேள்பாரி ஆசைகின்னை இங்கே தந்ததாம்; அன்றி நீயே நெடுந்தூரம் நடந்தெய்தலான் நின்னாசை நின்னை இங்குத் தந்ததுமாம்; இவ் விரண்டனுள் ஒன்று என்னல் துணிதலரிதே என்றான். ஓ. ஐயம். துனைந்து—விரைந்து. இருவராசைக்கும் இயையத் துனைந்து கோயிற் புகுந்தான்—எ. று. அன்று—ஔவையார் போந்த நாளின் வேறாகாமை கருதிற்று. ஔவையாரை முன்னிட்டுச் செல்லும் உயர்பு குறித்து ஒடுவந்தது. (50)

280. நிலவு வரல்பார்த்து நீள்புள்ளிற் றூய
புலவர் வரல்பார்த்துப் போற்பி—னிலகும்
பெருவிறன்முன் மிக்கோன் பெருகௌவை கல்வி
யுருவிவளே யென்று னுவந்து.

(இ-ள்)—நிலா வெழுந்து வருதலைப்பார்த்து நீளவிருக்கும் நிலாமுக்கிப் புட்போல. தூயபுலவர்—புலமையிற்றூய்மையுடையர். பொற்பின் இலகும்—பொலிவுடன் விளங்கும். பெருவிறன்முன்—பெரிய வென்றியையுடைய வேள்முன்னர். "செருவெஞ்சேய் பெருவிறல்" (புறம் 120) என்ப. மிக்கோன்—கபிலன். பெருகு ஔவை—ஔவை யென்று உலகிற் பெருகியவள். உவந்து இவளே கல்வியுரு என்றான் என்க. இவள் வடிவு கல்வியின் வேறாகாமை காட்டியபடி. ஔவை—தாய்ப்பெயர்: அதுவே இவட்குப் பெயராயிற்று. (51)

281. தூயா ருளத்திற் றுகடீர வுள்ளியது
வாயா திருத்தல் வழக்கன்று—னீயோ
நெருந னினைந்தா யிவள்கிடைத்தா ளின்றுன்
றிருநன் றெனமொழிந்தான் றேர்ந்து.

(இ-ள்)—ஒழுக்கத்திற் றூய்மையினர் உள்ளத்து மாசுநீங்க நினைந்ததொன்று கிடைக்காது புறனிருத்தல் உலகவழக்கு அன்றாகும். ஆல்—அசை. நீயோ—ஓ வியப்பு. நெருநல் நினைந்தவாறு இன்று கிடைக்கப்பெற்றாள். உன்றிரு நன்று—உன்செல்வம் உனக்கும் பிறர்க்கும் நன்மை தருவது. நல்லவர் துய்த்தற்குக் காரணமாதலாற் றிரு நன்றென மொழிந்தான்; நன்றியில் திருவும் உலகிலுண்டாதல் நினைக்க. (52)

282. ஔவை யெதிர்காணு வம்புலிநோ் கண்டபெரும்
பேளவ மெனவெழுந்து பாரிவே—ளேவ்வமிலீ

ரேன்பாக் கியம்புரிந்தே னேன்பானீ ரெய்தவென்ற
னன்பாக் கியசொல்லா ஞங்கு.''

(இ-ள்)—எதிர்காணு—நேரிற்கண்டு. அம்புலி நேர் கண்ட பெரும் பௌவம்—திங்களை எதிர்வரக் கண்ட பெருங்கடல். "திங்களன்ன கல்வியும்" (ஆத்திரையன் பேராசிரியன் பொதுப்பாயிரம்) என்பது பற்றிக் கல்வியுருவாயவட்கு மதியுவமையாயிற்று. மதி பெண்டன்மை யுடைமை மேலே காட்டப்பட்டது (பாரி—வளம்பாடு). எவ்வமிலீர்—இளிவரவில்லீர்; "இலனென்னும் எவ்வம்" (குறள்—223) என்புழிப் போலக் கொள்க. இளிவரவுடையார் பலர் கொடையுடையார் பால் எய்துதல் கருதி இவ்வாறு கூறினனென்று கொள்க. நும்பால் யான் எய்தற்குரிய நீவி ரென்பாலெய்த யாது நல்வினை செய்தேன். அன்பினால் ஆக்கப்பட்ட மொழியினாற் பாக்கியம் என் புரிந்தேன் என்றான் என்க. (53)

283. மிக்க கபிலனோடு மேவியசீ ரௌவையினைத்
தக்க மணியா சனத்திரீஇத்—தொக்க
வதிய னறமனைத்து மன்பூரக் கேட்டு
மதியின் மகிழ்கூர்ந்தான் மன்.

(இ-ள்)—புலவரின் மிக்க கபிலன் ஔவையினைக்கபிலனொடு மணியாசனத் திருத்தி. தன்பால் மேவிய ஔவையினை என்க. தக்க மணியாசனம்—ஆண்பாற் புலவர்க்கும் பெண்பாற் புலவர்க்கும் தக்கன வாகிய மணியழுத்தியமணை. அதியன் றொக்க வறமனைத்தும்—அதியனுடைய திரண்ட அறங்கள் முழுவதையும். கேட்பார்க்கும் உள் அன்பு ஊர்ந்து கொள்ளவினைவியறிந்து. மன்—பறம்பிற் கோமான். மதியின் மகிழ்கூர்ந்தான்—அறிவின்கண் மகிழ்ச்சி மிக்கவன் ஆயினன். மதியின்—விடை கூறிய ஔவை மதியினால் எனினும் அமையும். பாரி அறம் பூண்டவனாதலான் அறமே கேட்டான் எனவறிக. ஔவை யறவுரை கூறியவளாதலும் ஈண்டைக்கு நினைக்க. (54)

284. தருண மதியனைய தண்முகனும் பாரி
கருணை மடைதிறந்த கண்ணும்—பொருணயங்கோ
ளின்மொழியு மன்பு மெழிலுங்கண் டௌவையிணை
யென்மொழிவ லென்று ளிவற்கு.

(இ-ள்)—தருணமதி—இளமதி. மேன்மேலும் ஒளிவளர்தற் சிறப்பானுங் குளிர்த்தியானும் தண்முகனுக்காயிற்று "வளர்மதிமுகத்தி

ஞனே'' என்பர் கம்பநாடர். உடல் குளிர்விக்குமதியினும் உள்ளங் குளிர்விக்குஞ் சிறப்புத் தோன்ற முகனுக்குத் திட்பங் கூறப்பட்டது. கருணையின் பெருக்கத்தால் மடைதிறந்த தன்மைத்வாகிய கண்களும் எ-று. பொருளால் விருப்பங் கொள்ளத்தக்க இனிய மொழியும், அவ்வினிய மொழியை யுண்டாக்கும் நெஞ்சத்தன்பும், இவை யெல்லாஞ் சேரத் தோற்றஞ் செய் அழகும்; ஒளவை கண்டு என்க. இவற்கு இணை என் மொழிவலென்றாள்—இவனுக்கு உவமை யாது மொழிவேன் என்றாள் எ. று. (55)

285. கொடையறமே யிம்மலையிற் கோலோச்சு கின்ற
திடையறவி லாமேயென் றெண்ணிப்—புடையுறநன்
மாரியெதிர் கண்ட மயில்போ லுளங்களித்தாள்
பாரியெதிர் மூதௌவை பார்த்து.

(இ-ள்)—கொடையறமே — கொடையாகிய அறம் ஒன்றே. கொடையறம்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கோலோச்சும்பாரி கொடையறமே என உருவகஞ் செய்தவாறு; சிராமமூர்த்தியைக்கண்டு வீடணன் "அறநிறங்கரிதோவென்றான்'' எனக் கம்பநாடன் கூறிய தனை ஈண்டைக்கு நினைக்க. இடையறவு—இடையில் அறுதல். இடை யறுதல் அறத்தின் மாறுகிய பாவம் உள போதாதலின் அஃதெய்தாத படி ஒச்சுதல் குறித்தது. நன்மாரி புடையுற எதிர்கண்டமயில்—நன் மையைச் செய்யும் முகிலைத் தன்பக்கலிலே பொருந்த எதிரிற் பார்த்த மயில். மூது ஒளவை—அறிவுடைய ஒளவை. முன்னே "இவற்கு இணை என்சொல்வல்'' என்றவள் ஈண்டு இணைசொல்லாது இவனைக் கொடையறமே எனத் துணிந்தது காண்க. மாரியைக்கண்டவளவிலே மகிழ்தலான் மயில் ஒளவைக்குவமையாயிற்று. (56)

286. கல்வித் திறனுங் கவித்திறனுங் சொற்றிறனும்
பல்வித் தகமும் பகுத்தறியச்—செல்வி
சிலவே மொழிந்தாள் செருவெஞ்சேய் பாரி
பலவா றுவந்தான் பரிந்து.

(இ-ள்)—கல்வித்திறன்—கல்விவன்மை. தொல்லைப் பன்னூல் வன்மையைக் குறிப்பது. கவித்திறன்—அத்தொன்னூற் செய்யு ளொப்பச் செய்யும் செய்யுள்வன்மை. சொற்றிறன்—அவ்விரண்டை யும் பொருள் விளக்கவல்ல சொல்வன்மை. பல்வித்தகம்—இவற்றிற்குக் காரணமாகிய பல்வகைச் சதுரப்பாடு. பன்னெறியுஞ் சென்றுணமை

யறியவல்ல மதிநுட்ப விரகினைக்குறிப்பது. பகுத்தறிய—பாகுபடுத் துணரும் வண்ணம். செல்வி—செவிச் செல்வமுடையவள். "சில சொல்லறேற்றாதவர்" (குறள் 649) என்பதனாற் சிலவே மொழிதலின் அருமையுணரப்படும். சில மொழிதல் இவட்கியல்பென்பது அரும் பெரும்பொருள் பொதிந்த இருசீரோரடியான் ஓதிய அறவுரைச் சூத் திரங்களான் அறிக. செருவெஞ்சேய் பாரி—போரை விரும்பிய முரு கக்கடவுளை யொத்த வேள்பாரி; "செருவெஞ்சேய் பெருவிறனாடே" (புறம் 120) என்பர் கபிலர். ஈண்டுச் சேயென்றது புலவர் தரந்தெரி யும் புலமையனாதலானும் தன்னையடைந்தார்க்கருளற் சிறப்பானும் எனவுணர்க. பாரிபரிந்து பலவாறுவந்தான் என்க. பரிதல்—இது காறும் ஔவையைக் கேளாமற் கழிந்ததற்கு உள்ளம் இரங்குதல். பகுத்தறிய மொழிந்ததனால் ஒவ்வொரு வகையிலும் இவனுக்குண்டா கிய உவப்புக் கருதிப் பலவாறுவந்தான் எனப்பட்டது. (57)

287. இன்பே நிறைந்த விதய நிறைந்துவழி
யன்பே நிறைந்த வணிமொழியாற்-பொன்போல்வாட்
குன்னில்லே யிஃதா வுவந்துறைகேன் றுனேப்புத்
தன்னில்லா வேள்பாரி தான்.

(இ-ள்)—தாமின்புறுவதற்கு உலகு துன்புறவதாகும் பிற பொருள் போலாது தாமும் உலகமும் ஒருங்கின்புறுவது கல்வியாலாத லின் அதனைக் கேட்டலான் இன்பே நிறைந்த இதயம் எனப்பட்டது. அன்பே ஆர்வமொழியை உண்டுபண்ணுதல் கருதி அவ்விதயத்து நிறைந்து புறம் வழியும்அன்பே அணிமொழியினிறைந்தது குறித்தது. அணிமொழி—பூணுதற்கினிய அணிபோற் போற்றற்குரிய மொழிக ளான், உறை கென்றான் என்க. பொன்போல்வாட்கு — பொன்போல விரும்பற்குரியாட்கு. பொன் பெரிதாகாதென்று இது கூறினன் என் பது குறிப்பாற்கொள்க. இஃது உன் இல்லமேயாக விரும்பி அமர்க என்றான் என்க. ஔவை மனையாக்கி யதன் கட் டான் ஒதுக்கிருத்தல் கருதியவாறும் "இது நினதில்லமென்றான்" என்றார் சிந்தாமணி யிலும் (544). தனக்கு ஒப்பில்லா வேள்பாரி உறைக என்றான் எ. று. கோயிலினுள்ளவெலாமும் இவட்குரிமையாக்குதல் குறித்ததாம் எனினும் பொருந்தும். உறைக என்றதனாலிவன் இவளைப்புறஞ் செல விட மனமில்லாமை காட்டியது. (58)

288. பாரி மொழிந்த படிகேட்டுக் கற்றுயர்ந்த
நாரி யெதுவு நவிலாமற்—பேரில்

லிருகன்றிற் குள்ளுருகு மீற்று வேனவே
யுருகுந்த னுள்ளத்தி னுள்.

(இ-ள்)—கற்றுயர்ந்த நாரி—பலநூலுங்கற்று அதனுன் மக்களுள் உயர்ந்தவள். எதிவும்—உடன்படுதலும் உடன்படாமையும். மொழிந்த படி—சொற்றதன்மை; படி—தன்மை. ஈண்டுத் தன்மையென்றது தான் புறன்போகாது வதிதற்கு மொழியாற் காட்டிய இங்கிதம். பேரிலிரு கன்றிற்கு—இல்லத்து இடம் பெயர்ந்துள்ள இரண்டு கன்றுகளுக்கு. உள்ளும் ஈற்றுவெனவே—தன்னுள்ளே யுருகாநிற்கும் அக்கன்றுகளை ஈனுதலையுடைய பசுவே என்று சொல்லும் வண்ணம்; பேர்ந்த இடங் களிலுள்ள இரண்டு கன்றுகளில் ஒன்றை யடைத்த பசு. அடைத்த கன்றை விடாமையும் அடையாத கன்றை எய்துதலும் விழைந்து உருகுதல் நினைந்து கொள்க. ஈண்டுப்பாரியை விடாமையும் ஆண்டு அதியனை யெய்துதலும் ஒளவை விழைந்துருகுதல் குறித்தது. "இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்" என்றார், கம்பநாடர். (59)

289. ஒல்லை வருகேன் றுரைத்த வதியன்றன்
சொல்லை நினைந்து துயர்கூரு—நல்வேள்
பிரியாமற் றன்னைப் பிணிக்கும்பே ரன்பு
தேரியா மயங்குஞ் சிதைந்து.

(இ-ள்)—"விடைகொடுத்தான் ஒல்லை வருகென் றுரைத்து" என முன்னே அதியன் மொழிந்ததனைக் கருதிற்று. தண் சொல்—பிரியும் போது உள்ளங்குளிரக் கூறிய மொழி. நினைந்து அவன் சொல்லிய வாறு பிரிய இயலாமையாற் றுன்பமிகுவாள். நல்வேள் தன்னைப் பிரியாமற் பிணிக்கும் பேரன்பு. அறிந்து மனஞ்சிதைந்து மயங்குவாள். மயங்குதல்—செய்வது துணியாது தடுமாறுதல். சிதைதல்—மனத்திட் பங்கெடுதல். (60)

290. வேன்றி யதியன்பான் மேவே னெனிற்சிறியே
னஃறி மறந்தேனு நான்கெடுவேன்—றுன்றிப்
பெருமைவே ளின்பம் பெறுதகலிற் பாரி
யருமைதே றுதே னகத்து.

(இ-ள்)—ஒளவை அதியன் போர்வென்றியே பாடுபவளாதலின் அதற்கேற்ப வென்றியதியன் என்றாள். நான் உலகர் கண்ணிற் சிறியேனுதலன்றி நன்றிமறந்தேனுகக் கெடுதலும் செய்வேன் எ. று.

நன்றி மறந்தார்க்குக் கழுவாயின்மையாற் கெடுவேன் என்றான். வேளின்பம் பெறத்தன்றி இன்பம் பெறாமல் அகன்றால் என்க. எல்லாப் பெருமையுமுடைமையாற் பெருமைவேள் எனலாயிற்று. கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நால்வகைப் பெருமையுங் கொள்க. அகலின் கிழலினீளிடைத் தனிமரம் போல இப்பாரி விளங்கும் அருமை அகத்துத் தெளியாதேனுவல் என்க. "பாரியதருமை யறியார்" என்று மூவேந்தரிகழப்படுதல் புறப்பாட்டிற் (116) காண்டலான் இவனருமையுய்த்துணரப்படும். (61)

291. என்றுள்ளிச் சின்னா ளிவண்வைகி மீள்வலென
வொன்றுள்ளத் தாய்ந்த உறுதிகோடீ—நன்றுன்ன
தன்பின் வலையறுக்கு மாற்றலிலே னென்றுவே
ளின்பங் கோளமோழிந்தா ளேய்ந்து.

(இ-ள்)—என்றுள்ளி—என நினைந்து. இவண் சின்னாள் வைகி மீள்வலென—இவ்விடத்துச் சில நாட் கழித்துத்தகடூர்மீள்வேனென்று. உள்ளத்தாய்ந்த உறுதி ஒன்று கொண்டு. உள்ளது பெரிதாகிய அன்பு வலையை அறுத்து ஏகும் வலியில்லேன் என்று பாரி வேள் மகிழ் கொள்ள இயைந்து மொழிந்தாள் எ. று. அன்பின்வலை; இன்—அல் வழிச்சாரியை. வலையறுக்குமாற்றலின்மை கூறியதனால் வலையிலகப் பட்டமான் அறுத்தேக நினைப்பதுமட்டும் உண்டெனக் குறித்தல் உய்த்துணர்ந்துகொள்க. (62)

292. கற்றாரைப் பெற்ற கழிபே ருவகைபொங்கி
யுற்றாரைப் பெற்றதினு மோங்காத—றெற்றாக
வேல்லு புகழ்வேளிர் வேளுக்கு வைகினவா
னல்ல பயன்மிகவே நாள்.

(இ-ள்)—உடம்பிற்கு உற்றாரைப் பெற்றதினும் உயிர்க்குற்றாராகிய கற்றாரைப் பெற்ற கழிபேருவகை பொங்கி மேன்மைத்தாதல் தெளிவாக எ. று. நல்ல பயன் மிக நாள்கள் வேளுக்குக் கழிந்தன வென்க. எல்லாருடைய புகழினையும் வெல்லுகின்ற புகழினையுடைய வேளுக்கு என்க. கல்வி எழுமையு மேமாப்புடைத்தாதலானும் இருமையும் பயத்தலானும் நல்ல பயன்மிக எனலாயிற்று. ஏகாரம் பயனில் பொழுதே இல்லாமை குறித்து வந்தது. "கற்றோர்க்காண்ட லாகுங்காவலிற், பெற்றபயனெனை வெற்றவேந்தனும், காண்பது விரும்பி" என்பது பெருங்கதை (மகதகாண்டம் — அமாத்தியரொடுங்

கிபது) 'பிறனெரு நாங்கோண் மன்னர் தொழிலைம்'' (நான்மணி—85) என்பது பற்றி வெல்லுபுகழ் வேள் எனப்பட்டது. (63)

293. உலையாக் கபிலனொடு மோள்ளௌவை யோடுங்
கலைமாக் கடலிற் கருத்தே—தோலையாப்
புணையாக நீந்தலாற் போயினபன் ஞட்க
டிணையார்வேள் பாரிக்குச் சீர்த்து.

(இ-ள்)—''உவலை கூராக் கவலையில் நெஞ்சின்.....கபிலன்'' (பதிற்—85) என்பதுபற்றி உலையாக் கபிலன் என வந்தது. ''எஞ்சிக் கூறேன்'' (பதிற் 7–1) என்றிவன் கூறுதல் பற்றி வந்ததெனினும் அமையும். ஒள் ஔவை—அறிவாலொட்பமுடைய ஔவை. ஒடு, ஒடு—எண்ணில் வந்தன. கலைமாக்கடல்—கல்வியாகிய பெருங்கடல். கருத்தே தொலையாப் புணையாக—நெஞ்சமே கெடாத தெப்பமாக; ''நெஞ்சம் புணையாக் கலைமாக்கடனீந்தி'' என்பது சிந்தாமணி(பதிகம்) திணையார் வேள்பாரி—ஒழுக்க நிறைந்த வேள்பாரி. நாட்கள் சேர்த்துப் போயின என்க. கலைமாக் கடலை நீந்திக் கரைகண்டவர் இருவர் துணையொடு கருத்தே புணையாக நீந்தலானும் அந்நீந்தலை மகிழ்தருத லானும் சேர்த்துப்போயின எனலாயிற்று. (64)

294. கல்வி மணங்கமழுங் காரிகையாள் பாரிதரு
செல்வியர்க ணுள்ளறிவின் றேன்பெய்து—நல்ல
வொழுக்க மெனும்பா லுணவூட்டி யுள்ளங்
கொழுக்க மகிழ்ந்தாள் குளிர்ந்து.

(இ-ள்)—(254) கல்வி என்னும் நறுமணங்கமழ்தற்குக் காரண மான அழகுடைய ஔவை. பாரிதரு செல்வியர்கண்—பாரிதந்த செல் வப் புதல்வியர்பால். ஒள் அறிவின்றேன் பெய்து—ஒள்ளிய அறிவாகிய இனிய தேனைப் பொழிந்து. நல்ல ஒழுக்கமெனும் பாலுணவூட்டி—நல் லொழுக்கமென்னும் பாலடிசிலையுண்பித்தலான். உள்ளம் கொழுக்க—மனம் தழைத்துப் பெருக; ''மழைதொழிலுதவ மாதிரங் கொழுக்க'' (மதுரைக்காஞ்சி). அதுகண்டு குளிர்ந்து மகிழ்ந்தாள். உள்ளங்கொழுப் பது நல்லறிவொடு கலந்தொழுகும் ஒழுக்கத்தாலென்பது தோன்றக் கூறியதாம். அறிவில்லாவொழுக்கமும் ஒழுக்கமில்லா அறிவும் விலக் கற்கு இரண்டின் கலப்புக் கூறப்பட்டது; மாணக்கர் உள்ளங் கொழுப் பதே குரவர்க்கு மகிழ் தருதல் தோன்றக் குளிர்ந்து மகிழ்ந்தாள் எ-று. தேனும் பாலும் பசித்தாருண்ண வூட்டி அவருடல் கொழுக்கக்

கண்டு மகிழ் வள்ளற் பெருஞ்செல்வரொப்ப அறிவும் ஒழுக்கமும் இவர்க்கு ஊட்டி இவர் உள்ளந் தழைத்தலைக்கண்டு கல்வி மணங் கமழும் காரிகையாள் குளிர்ந்து மகிழ்ந்தாள். குளிர்ந்து—தங்கி எனினும் அமையும் "குளிர்சாகரதத்தன்" என்பது (சிந்தாமணி 1973). ஒழுக்கத்தின் உயர்வு தோன்றப் பாலாகக் கூறிற்று. "பாலொடு தேன்கலந் தற்றே" (குறள் 1121) என்பதனாற் றேனினும் பாலுயர்ந்ததாதல் தெளிக. (65)

295. பல்போது கல்விப் பயன்றுய்த்து மஃதில்லாச்
சில்போது நல்லூண் சிறிதுண்டு—மல்போது
பாரிவேள் செங்கைப் பரூஉக்கோடையைக் கண்டு
நாரிநாள் போக்கு நலத்து. [முயர்

(இ-ள்)—நாட்கூற்றிற் பலபோது கல்வியாகிய பயனைப் பெரிது அருந்தியும் அங்ஙனம் பயன்றுய்க்காத சில்போது நல்ல உணவைச் சிறிதளவாக உண்டும் என்க. சிறிதுண்டும் என்றதனாற் பயன் பெரிதுண்டல் குறித்தது. நல்லூண் என்றது பாவமின்மையும் உடம்பிற்கும் அறிவிற்கும் நன்மையும் நாவிற் கினிமையும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற தன்மையும் உடைமைகருதி. அத்தகைய உணவையுஞ் சிறிதுண்டல் கூறியது "உண்டிசுருங்குதல் பண்டிக்கழகு" என்பதுபற்றி; ஈண்டுப் பண்டி—வயிறு; "அருச்சுக யார்மாட்டு முண்டி" என்பது நான்மணி (87). இவ்விரண்டுமல்லாதபோது, பரூஉக்கொடை—பெரும் பெரிய கொடை. செங்கை—கொடுத்தலாற் செம்மையாகிய கை. உயர்நாரி—உயர்ந்த நங்கையாகிய ஔவை நலத்து நாள்போக்கும் என்க. (66)

296. பன்னாள் செலவாகப் பாங்கா மதியனையு
மின்னோன் மறப்பிக்கு மென்றுமனத்—துன்னாத்
தோடுத்துரைத்த தோன்னூற் றுறைகண்டாண் மேல்ல
வேடுத்துரைத்தாள் பாரிக் கிவை.

(இ-ள்)—நாட்பல செல்லுத லாகாதிற்க. பாங்காம் அதியனை—தன் நன்மைக்கு ஆகிய அதியனை. உம்மை—மறக்கப்படாமை குறித்து உயர்வின் வந்தது. இன்னோன்—இவன். தான் செய்யுஞ் சிறப்பால் மறக்கும்படி செய்வன் என உள்ளத்து எண்ணி; தொன்னூல் தொடுத் துரைத்த துறை கண்டாள்—பழைய நூல்கள் இயைபுபடக் கூறிய பல துறைகளும் உணர்ந்த ஔவை. பாரிக்கு இவை எடுத்து மெல்ல

உரைத்தாள்—இவற்றை யெடுத்து மெத்தெனக் கூறினள் என்க. விடை கேட்பதனால் அவன் வருந்துமென்று தன்மனம் அஞ்சுதலான் மெத்தெனக் கூறினளாம். "செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந் தென, மெல்லெனக் கிளந்தன மாக" (பொருநராற்) எனவருதலான் இஃதறிக. (67)

297. பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனைமுன்
ளுங்குமறப் பித்த வதியனையு—மீங்கு
மறப்பித்தா யென்னன் மதிமயங்கு மன்பிற்
சிறப்பித்தாய் பாரி திறம்.

(இ-ள்)—பூங்கமலவாவி—அழகிய தாமரைக்குளம். புல் வேளூர்—பெண்ணையாற்றங்கரையதோரூர். ஆங்கு—அத்தகரேில். முன் மறப்பித்த-முற்படமறப்பித்த அதியனையும். உம்மை மறக்கப்படாத வுயர்பு குறித்தது. ஈங்கு—இப்பிறப்பில். என் நல்மதி—என்வயமான நல்ல புத்தி. அது மயங்குதற்குரிய அன்பினல், நாளும் சிறப்பித்தாய். பாரி—விளி. (68)

பூதனை அதியன் மறப்பித்தவரலாறு.

"பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையு
மாங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய் வாளதியா வன்கூற்றை நாவை
யறப்பித்தா யாமலகந் தந்து."

என்னும் பழம்பாடலானறிக.

இப்பூதன் ஒளவையை இனிதூட்டியபோது அவள் பாடிய,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டு
முரமுரவென் றேபுளித்த மோரு—முருசியுடன்
புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்."

என்னும் வெண்பாவானும் இவனை மறவாமைக் குரிய காரணம் உணரலாம்.

298. நின்பாற் புகுந்த நெடுநோட் டொடுத்ததியன்
றன்பான் மனம்புகுத ருனில்லேன்—முன்டாய

வுற்ரு ரோருவரையு முள்ளாது நல்வீடு
பெற்ரு ரேனவானேன் பின்.

(இ-ள்)—நெடுநாள்—நெடிது முற்பட்ட நாள். உடலாற் புக வியலாமையே யன்றி உள்ளமும் புகுதலில்லாமை குறித்து அதியன் பான் மனம்புகுதல் தானில்லேன் என்ருள். முன்பு ஆய உற்ருர்—முன்னம் உறவாகிய சுற்றத்தார். ஒருவரையு முள்ளாது—உறவினர் நட்டார் யாரையும் நினையலாகாமை கருதிற்று. மகிழ்ச்சியால் நன்மைக்கே இடனுகிய வீட்டின்பத்தைப் பெற்றவர் என்று சொல்லும் வண்ணம் ஆயினேன் எ-று. வீடுபெற்ருர் உறவினரெவரையும் நினையாமை வேத வழக்கு. வீடுபுக்கார் பின் திருமிவரலின்மையும் ஈண்டு நினைக்க. "திருக்கிளர் கோயி லொருசிறைத்தங்கித், தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ, ததன்பய மெய்திய வளவை மான" (பொருநாறு) என்பதனுற் றுறக்கத்தை உவமித்தார் பிறர். (69)

299. என்னை மறக்கு மிறுதிப் பொழுதுமஞ்சி
தன்னை மறக்கத் தரியாதே—னின்னை
யடைந்தபெரு நாடோட் டவன்மறந்தே னீதுன்
மிடைந்தகுணஞ் செய்யு மிகை.

(இ-ள்)—என்னை மறத்தற்குரிய கடைநாளமயத்தும் நெடுமானஞ்சியை மறத்தற்கு மனந் தரியாத யான் என்றது அவன் செய்த பெரு நன்றியை உடல்விடும் இறுதியிலு நின்றுவரும் பிறவியினு நினைய வேட்டல் குறித்தது. நின்னை அடைந்த பெருநாள்—நின்னை அடைதற்குக் காரணமாதலால் என் நாள்கள் பலவற்றுள்ளும் பெருமை பெற்றநாள் எ-று. உன் மிடைந்த குணம். உன்கட் பலவாக நெருங்கியுள்ள குணங்கள். செய்யுமிகையிது - செய்யுங் குற்றம் ஈது. எ-று. உன் பல நற்குணங்கள் இவள் ஒரு குணத்தை யழித்தலான் மிகை என்ருள். உயிர்போம் பொழுதும் மறத்தல் நேருமோ என்று நினைந்து இப்போது தரியாதேன் என்க. "என்னுயிர் யாக்கையிற் பிரியும்பொழுது, மென்னியான் மறப்பின் மறக்குவென்" என்பதை ஈண்டைக்கு நோக்குக. (70)

300. நின்னைப் பிரியு நினைவிலேன் மற்றதியன்
றன்னைப் பிரிந்து தரிக்கிலே—னென்னை
புரிவே னிரண்டாய்ப் புவியி னியங்கத்
தெரியேன் கவல்வேன் சிதைந்து.

(இ-ள்)—கின்னையும் அதியனையும் பிரியாமலிருத்தற்கு ஈருடம் பாய் உலகில் நடக்கத் தெரியேன் என்றாள். இருத்தி பலவற்றுள் இது பெற்றிலேன் எ-று. கின்னைப் பிரிந்து அதியனை யெய்தலும், அதியனைப் பிரிந்து கின்னை யெய்தலும் என்றும் இரண்டனுள்ளும் பிரிவு வருத்தமே யுளதாதலிற் சிதைந்து கவல்வேன் என்க. ஒருவர் பலவுடம்பிலியங்குதல் உண்டென்பது சௌபரி வரலாற்றிற் (ஸ்ரீபாகவதம்) காண்க. (71)

301. என்னைப் பிரிய விதயங் கொளாதுவிடை
முன்னர்க் கொடுத்தான் முகமதியத்—தின்னன்
மறத்தலோ வொல்லாது மாப்பாரி நின்னை
துறத்தலோ வொல்லாது சூழ்ந்து.

(இ-ள்)—என்னைப் பிரிதற்கு மனங்கொள்ளாது முன்னர் விடை கொடுத்தான். முகமாகிய மதியத்தின் வருத்தக் குறிப்பை மறத்தலோ இயலாது. மாப்பாரி—விளி. "நெடுமாப்பாரி" என்பது புறம் (201). கின்னைச் சூழ்ந்து—கின்னை ஆய்ந்தறிந்த பின்னர்; துறத்தலோ ஒல்லாது—விட்டுப் பிரிதலோ இயலாது. அதியன் இன்னல் அறிந்த யான் அதையே கின்கட் காணத் துறத்தற்கியலேன் என்றாள் என்க. குளிர்த்தியான் முகத்தை மதியாகக் கூறியதாம். "திங்களனையை யெம்ம ேனார்க்கே" (புறம். 59) எனவருதலான் அறிக. உலகெல்லா மகிழ்செய்வது இன்னலுறுவதற்குப் பொருந்தாமை காட்டி முகமதியம் என்றதாம். (72)

302. நின்னற் குணமனைத்து நீள வதியற்கு
நன்னர்ப் பகரு நசையொன்றே—வென்னைநனி
யீர்ப்பதுகா ணன்னு னெனைவேறு யுள்ளுமென
வோர்ப்பதுகா ணென்ற னுளம்.

(இ-ள்)—கின்னுடைய நற்குண முழுதையும், அதியற்கு நன்று நீளப் பகரும் வேட்கை யொன்றே என்னை ஆண்டு மிக ஈர்த்து விரைவது. ஆண்டு விரைந்து புகாமைபால் என்னைத் தன்னின் வேறாய் அதியன் கினைப்பனென்று என்மனம் ஆராய்ந்து கொள்வது; இந்நிலைமை காண்பாயாக. எ-று. (73)

303. ஒல்லை வருகென் றுரைத்தாற்கு மன்பாலிவ்
வில்லை யெனதாக்கு மேந்தற்கு—நல்லநெறி

யோத்தில்லா யானே யுளனங்தோ வென்றுசோலும்
போத்தில்லாச் சீரேளவை புக்கு.

(இ-ள்)—ஒல்லை வருகென்றுரைத்தான் அதியன். இவ்வில்லை அன்பால் எனதாக்கும் ஏந்தல்—பாரி. "உன்னில்லேயிஃதா வுவந் துறைக" என்றது குறித்தது. நல்லநெறி ஒத்தில்லா யானே உளன் அந்தோ - நல்லவழியில் ஒத்துச் சேறலில்லாத யாஞெருத்தியே ஆயுணீட்டத்தால் உள்ளேன் ஐயோ; இருவர்க்கும் ஒத்தில்லாமை யால் என் நாள் தேய்க—என்று இரங்கிய வாறும். பொத்தில்லாச்சீர் —உள்ளத் துப்புரையில்லாத சிறப்பு; "பொத்தில் நட்பிற் பொத்தி" என்பது புறம் (212). புக்குச் சொலும் - பின்னு நெருங்கிச் சொல் வாள். எ-று. (74)

304. காண்டலே பேருக் கருதினேன் மற்றேன்றும்
வேண்டலே னீக விடையேன்று—மாண்டகையாள்
சோற்ருள் விறற்பாரி தூய மனங்கவன்ருன்
கற்ருள் பிரியுமேனக் கண்டு.

(இ-ள்)—நின்னைக் காண்பதே என் பேருகத் துணிந்தேன்; "நல்லோரைக் காண்பதுவு நன்றே" என்றது நினைக்க. அக்காண்ட லின் வேருய தெதுவும் விரும்பிலேன். விடையீகவென்று. மாட்சி மைப்பட்ட தகைமையள். விறற்பாரி—பிறிதொன்றற்கும் கவலாத வலியையுடையபாரி. கற்றவள் பிரிவளென்று தெரிந்து மனங் கவலையுறலானுன். எ-று. தூயமனம்—"உள்ளப் பிரித லினைத்தே புலவர் தொழில்" (குறள்–394) என்பதை நினைக்க. "கற்ருர் பிரிவுங்கல் லாதா ரிணக்கமுங் கைப்பொருளொன், றற்ரு ளிளமை யும் போன்றே கொதிக்கு மருஞ்சுரமே" என்பது அசதிக் கோவை. (75)

305. இல்லோன் பேருஞ்சேல்வ மேய்தி யிழந்தாங்கு
நல்லோன் றுயருழந்து நங்கைமீர்—போல்லாங்கு
சேய்தேன்கோல் சேஞ்சோற் புலவரணி புல்லேனவிவ்
வேய்தேன்கோ லேண்ணினீர் வேறு.

(இ-ள்)—இல்லோன் - வறியன். இவளது பெரும் புலமை தெரியப் பெருஞ் செல்வங் கூறப்பட்டது. செல்வம் எய்தற்கு முன்னர் வறியற்குச் செல்வும் இல்லாமையே யுள்ளதன்றிச் செல்வ மிழத்தற்றுன்பமில்லாமை காண்க. இழந்தாங்கு - இழந்தாற்போல.

பொல்லாங்கு செய்தேன் கொல் - தீங்கு செய்தேனே. தீங்கு தம்பக் கலன்றி யார்பால் ஒருவன் செய்யினும் பெரியார் அவனை யகலுதல் செய்வராதலின் பொதுமையிற் கூறினன். பல நன்மணி பதித்த அணிகலத்தி லொருமணி யிழப்பினும் அவ்வணி புல்லெனும் என்பது கருதிக் கூறினன் என்க. புலவரையே உயிர்க்கு அணியாக இவன் கருதுதல் குறித்ததாம். இவ்வேறு வெய்து என் கொல் எண்ணினிர் என்க. வேறு வெய்து - சுடுதற்குரியதாகிய தீயின் வேறாகிய கொடிது; என்றது கற்றாரைப் பிரிதல் என்பது கருத்து. புலவர் குழுவிற்கு அணிகலம் உவமையாதல் "பொன்னுந்துகிரும்" (218) என்னும் புறப்பாட்டிற் காண்க. (76)

306. நன்றுற்று வாருகு நங்கைமீ ரேற்பிரிவ
தென்றுற்று நெஞ்சோ டினிதியம்பிப்—பின்றுப்
பெருஞ்சிறப்பு முன்னையினும் பேணினன் கற்றார்
தருஞ்சிறப்புத் தேர்மே தகை.

(இ-ள்)—எற்பிரிவது - என்னைவிட்டு அகல்வது; யான் பெரிது உபசரிக்காததன் பயனாகும் என்று துயராற்ற மாட்டாது மனத்தொடு இனிய மொழிகளைச் சொல்லி. பின்றுப் பெருஞ் சிறப்பு - தலைமைக் குரிய பெரிய சிறப்பு. பின்றுமையாற் றலைமைத்தாயிற்று. தான் கற்றார்க்கு நல்கும் சிறப்பினும் கற்றார் தனக்கு நல்கும் சிறப்பு இத் தகைத்தென்று தெளிந்த மேதகவுடையான் - எ-று. தான்றருவது நிலைபாமையும் அவர் தருவது நிலைப்பதும் தெளிதல் குறித்தது. (77)

307. பல்லாறு தேர்ந்துரைத்தும் பாரி தனைப்பிரிதற்
கொல்லாது செய்யு முயர்சிறப்பை—நல்லாள்கண்
டென்னை புரிவலென வெண்ணினள் பன்னாட்க
டன்னை நிகரிலா டாள்.

(இ-ள்)—தேர்ந்து பல்லாறு உரைத்தும் - தெளிந்து பலவாறு கூறியும். தனைப் பிரிதற்கு இயலாமற் பாரிசெய்யும் உயர்ந்த சிறப்பினை நல்லாளாகிய தன்னை நிகரிலாள் பார்த்து யாது செய்வேனென்று பன்னாட்கள் எண்ணினள் என்க. நல்லாள் என்பதனுல் மேலிவள் துணிவது தீதன்றெனபதும் தன்னை நிகரிலாள் என்பதனால் அங்ஙனம் துணிதற்கேற்ற அறிவுயர்த்தியும் குறித்தவாறும். தன்னை நிகரிலாள் —தன்னை யொப்பது இல்லாதவள். பாரி விடைகொடாமைக்கு இந் நன்மையும், நிகரின்மையும் காரணமெனக் கருதுதலும் ஆம். (78)

308. கோடைநல்க லன்றிக் கோழுங்கவிவாழ் நர்க்கு
விடைநல்க லோல்லானிவ் வேளோன்—றடை
பாரிநேர் காணுதிப் பார்நீத்த னன்றேன்று [வுணர்ந்து
சீரியாள் கோண்டா டேளிந்து.

(இ-ள்)—கொழுமையை யுடைய கவிதையால் வாழ்கிற்கும் புலவர்க்குக் கொடை நல்குதற்கு அல்லாமல் இவ்வேள் விடை நல்குதற்கு இயலான் என்று. அடைவுணர்ந்து - தான் புக்க ஊரிடங்களையுஞ் சீர்தூக்கி உணர்ந்து, அடைவு—தான் அடைந்த இடங்கள். பாரிநேர் காணுது - பாரி தன் பிரிவினை நேரே காணுமல், தனக்கும் அவற்கும் வருத்தமிகுதி விளைப்பதனுல் நேரே காணுமை கருதினுள். இப்பார் என்றது பறநாட்டை. சீரியாள் நன்றென்று தெளிந்து கொண்டாள் என்க; சீரியாள் என்றது இவள் தெளிந்துகொண்டது சீர்த்தது அன்று எனக்கருதாமைப் பொருட்டு நின்றது. (79)

309. வணங்கு மியவுள் வடிவுட் போதிந்து
மணங்கோ டகின்முடித்து வைத்தாங்—கிணங்குபோதி
தூக்கி யேவருந் துயிலிரவிற் கோயினீத்
தூக்கி நடந்தா ளுவண்.

(இ-ள்)—தான் நாளும் வணங்குதற்குரிய தெய்வத்தை உள்ளத்துப் பொதிந்து அதன் திருவுருவை மணங்கொள் துகிலின் முடித்து வைத்து என்க. மணங்கொள்துகில் கூறியது தெய்வத் திருவுருவைப் பொதிதற்கேற்ற தூய்மையுடையதென்பது குறித்தது. ஆங்கு இணங்கு பொதி - அப்பறம்பினின்று தான் எடுத்தற்குரிய தன் மூட்டை இஃதொன்றே என்பது குறித்தது. இணங்கு பொதி தன் மனத்திற்கு இணங்கிய பொதியெனினுமமையும். பாரியைப் பிரிதலால் நடத்தற்கியலாத கால்களை ஊக்க வேண்டிற்று என்க. எவரும் துயில் இரவில் - துயிலாத காவலாளரும் காவலை யிகழ்ந்து துயிலும் ஓரிரவில் எ-று. இடையூறில்லாததனுற் காவலாளர் துயிலுதல் இயல்பேயாகுமென்க. இயவுள் - கடவுள். இயவுள் வடிவு உட்பொதிந்து துகின்முடித்து என்று கூறிக்கொள்க. துகிலும் உள்ளமும் சாந்த மணத்தல் நினைக்க. உள்ளத்தை நன்மணப் பொருளாகப் பாடிய பெரியாரும் உண்டு. "பூசுஞ் சாந்தென் னெஞ்சமே" என்பது திருவாய்மொழி. எவரும் என்றது இவளைக் காத்துத் துயிலாத பாரியையும் உட்படுத்தற் கெனினுமமையும். (80)

310. வெள்வே லறவேள் விழுத்தண் பறநாட்டுக்
கள்வோரு மூறுமின்மை கண்டதனாற்—றெள்ளியா
டன்னந் தனியாத் தழைகானத் திட்டுநெறி
முன்ன நடந்தாண் முயன்று.

(இ-ள்)—வெள்ளிய வேலினையும், அறத்தினையும் உடையபாரி வேள் எ-று. விழுத்தண் பறநாட்டு - விழுமிய குளிர்ச்சியையுடைய பறம்புமலை நாட்டின்கண். கள்வோரும் ஊறும் - களவேர் வாழ்நரும், தீயவிலங்கு முதலிய ஊறுசெய்வனவும்; ஊறுசெய்வனவற்றை ஊறு என்றது ஆகுபெயர். இன்மை கண்டதனால் - இல்லாமையைத் தான் கண்டுள்ளதனால். தெள்ளியாள் - நூல்களிற் றெளிவுடையவள். தன்னந்தனியா - துணையில்லாது தானே தனியாக. தழைகானத்து இட்டுநெறி - தழைந்த காட்டில் சிறுவழியில், முன்ன முயன்று நடந்தாள் - முற்பட முயறலுற்று நடந்தனள். வேலும் அறமும் முறையே கள்வோரின்மைக்கும் ஊறின்மைக்கும் வேண்டப்பட்டனவாதல் குறிக்கொள்க; இங்ஙனமே பெரும்பாணாற்றில் "அல்லது கடிந்த வறம்புரி செங்கோற், பல்வேற் றிரையற் படர்குவிராயின்" என்று தொடங்கிக் "களவேர் வாழ்க்கைக், கொடியோரின்றவன் கடியுடைவியன்புல, முருமு முரறா தரவுந் தப்பா, காட்டுமாவு முறுகண் செய்யா" எனக் கூறியதனான் உண்மையுணர்க. (81)

311. ஔவை தனியகற லாகக் கனவொன்று
கௌவை யுறவிரவிற் கண்டுவிழித்—தவ்வகத்திற்
கல்விப் பிராட்டியினைக் காணாது நேடிவேள்
செல்விக்குப் பின்சென்றான் தேர்ந்து.

(இ-ள்)—ஔவை தனியே அகன்றேகுதல் உளதாக என்க. கௌவையுற இரவிற் கனவொன்று கண்டு - துன்பமிக இராத்திரியில் ஒரு கனாக்கண்டு. பாரி இவள் பிரிவளோ எனச் சிந்தித்திருத்தலாற் கனாக் காண்டல் இயல்பேயாம். அஃது இவ்வமயத்திற் சேற்றதாயது ஓர் விழுக்காடு. தனியகறல் என்றது தன்னைவிட்டுப் பிரிந்து தனிச் சேறல் குறித்தது. பாரி கருத்தாற்றீக்கனா இஃதாதலாற் கௌவையுறக்கண்டு எனப்பட்டது. அவ்வகத்தில் - ஔவைக்குரியதாக்கிய அவ்வில்லத்து எ-று. கல்விப் பிராட்டி - கல்வித்தலைவி. அவ்வகத்தில் நேடிக்காணாது வேள்தேர்ந்து செல்விக்குப் பின்சென்றான் எ-று. செல்வி - பாரிக்குக் கிடைத்துங் கிடைக்காத செல்வம் போன்றவள்.

312. சிறிதா றியங்கித் திருவாட்டி கான
நெறியான் விரைந்தேக னேர்கண்—டறியாம
லொன்றுபுரி வேனென் றுருத்தழையின் மாற்றி
சேன்று வழிமறித்தான் சேய். [முனர்ச்

(இ-ள்)—திருவாட்டி தன்னை இவனென்று அறியாமல் என்க. ஒன்று புரிவேன் - ஒருபாயஞ் செய்வல். உருத்தழையின் மாற்றி—தழையுடையாற் றன் வடிவினை மாற்றிக்கொண்டு. சேய் - சேயை யொத்தவேள் "செருவெஞ்சேய்" (புறம்–120) என்பது காண்க. (83)

313. தள்ளாத வண்மைத் தமிழ்ப்பாரி நாட்டின்வே
றுள்ளாய்கோல் யாரை யுரையென்று—விள்ளாமுன்
மேய பொதிபறித்து வெங்கான் குறுநெறியிற்
றூய னடந்தான் றுணிந்து.

(இ-ள்)—இரவலரைப் புறந்தள்ளாத கொடையாற் றமிழைத் தனக்குரித்தாக்கிய பாரிவேள் நாட்டின்கண். வேறு உள்ளாய்கொல் - தமிழ்ப் புலவர்பாற் பொருள் கவர்ந்து கொள்வாயாய் வேறொரு நீ உள்ளாயோ? எ-று. யாரை யுரையென்று விள்ளாமுன் - யாது செய்யப் புக்கனையென்று சொல்லுஞ் சொல் முழுதும் உரையாத முன்னே. மேயபொதி - ஔவை விரும்பிய மூடையை. வெங்கான் குறுநெறி - வெய்யகாட்டின் குறுக்குவழி. பொதிபறித்த குற்ற மின்மை தோன்றத் தூயன் எனலாயிற்று. துணிந்து - ஔவை மீண்டு வருவளென்றுதான் துணிவுகொண்டு. யாரை யுரையென்று வினவிய ஔவைக்கு விடை கூறாதது ஈண்டுக் குரலாற் றன்னைத் தெரிவளென்று கருதி, என்க. பொதி பறித்தலல்லது விடைகூறி நிற்றல் ஆறலை கள்வற்கு இயல்பல்லாமையும் உணர்க. (84)

314. பொருளொன்று மில்லையாற் புத்தேட் படிமை
தருகென் றிரந்தா டருவல்—வருகென்று
வேறோர் குரலெழீஇ வேடன் வழிச்சென்றான்
தேறுள் கலைமான் செயல்.

(இ-ள்)—பொதியின்கண் கள்வர் கருதும் ஒரு பொருளுமில்லை. புத்தேட் படிமை - தெய்வத் திருவுருவம். இதனைத் தருக என்றிரந்து கள்வரும் தெய்வ வடிவைப் போற்றி வழிபடுவாராதலான் அதன் இன்றியமையாமை கருதி நல்குதல் ஆகும் என்னுங் கருத்தால்: இவர்

வழிபாடு சிலப்பதிகார வேட்டுவ வரியிற்கண்டு கொள்க - வேறோர் குரலெழீஇ - வேறாக ஒர்த்தற்குரிய குரலை எழச்செய்து வேள் தன் வழிச் சென்றான் என்க. வேடன் வழி என்றது காடு. கலைமான் செயல் தேறான் - கல்வியையுடைய மான்போன்ற ஔவை செய்வது தெளியான். கள்வனைப் பின்பற்றுவதும் தவிர்வதும் ஆகிய செயல் தெளியாது தடுமாறியது குறித்தது. கலைமான் - கலைக்குரியமான்; சாடு. (85)

315\. மக்கள் வழங்கா வழிப்போய்ப் பொதியின்கட்
டொக்க பொருளறிவான் சூழ்கின்றா—னிக்கள்வ
னென்ன நினைந்தவன்பின் னேகினாள் மற்றவன்முன்
சொன்ன மொழியே துணிந்து.

(இ-ள்)—வழங்கா வழிப்போய் - நடவாத இடத்துப்புக்கு. பொதியின் கட்டொக்க - மூடையிற் றொகுக்கப்பட்ட. அறிவான் - அறியும் பொருட்டு இயங்காவழி சூழ்கின்றான் என்க. அவன்முன் சொன்ன மொழி - 'தருவல் வருகென்று' அவன் சொற்ற சொல். ஔவைக்குத் தருதல் நோக்கும் பாரிக்கு வருதல் நோக்கும் குறித்துக்கொள்க. (86)

316\. பூசைக் கெளிவந்த புத்தேட் டிருவடிவை
யாசைப் படுமுளத்தா னங்கவன்பின்—னோசைக்
குரலோடு மௌவை கொடுங்கா னதரின்
வரலோடுங் கொண்டான் மகிழ்.

(இ-ள்)—புத்தேட் பூசைக்கு எளிவந்த திருவடிவை என்க; தெய்வ வழிபாட்டிற்கு எளிதாகத் தன்கண் வந்த சிமத்தாகிய படிமையினை. ஆசைப்படு முளத்தான் - பற்றுச்செய்யும் உள்ளத்தினன்; "ஆசைபற்றி யறையலுற்றேன்," என்றார் கம்பநாடர். 'ஓசைக் குரல் - படிமை தருக என்றிட்ட நெடுங்குரல். கொடுங்கானதர்—கொடிய காட்டுவழி. வரலோடும் - வருதல் தொடங்கியவுடனும். பிரிவிற்றுயர்பவன் மகிழ்கொண்டான் எ-று. எளிவந்த வடிவு என்பதனாற் புத்தேள், பெருமைக்கு வரம்பாவது தெரியவைத்ததாம். அவள் குரலுக்கு இரங்குபவனாயினும் அவள் வரலுக்கு உளமகிழ்ந்தான் எ-று. இத்தெய்வப்படிமை யல்லது வேறொரு பொதியாயின் அது பெற வேண்டி இவன் மீளவேண்டாமை குறிக்கொள்க. (87)

317\. காவார் கோடைப்பாரி கானக் குறுநெறியில்
வாவா வெனப்பின் வரக்கோடுபோய்த்—தாவாப்

பறம்பெய்தக் கீழ்வான் படரொளிவேள் ளென்ன
வறம்பெய்தாள் கண்டா ளவண்.

(இ-ள்)—காவார் கொடைப்பாரி - நிழலி னிளிடைத்தழை பொழில்போல நிறைந்த கொடைமையை யுடைய பாரிவேள். கா— கற்பகச் சோலையுமாம். கானக் குறுநெறி - காட்டுக் குறுக்குவழி. அறம்பெய்தாள் பின்வரக் கொடுபோய் என்க. தாவாப் பறம்பு.— கெடாத பறம்பு. படரொளியால் கீழ்வான் வெள்ளென்ன என்க. கீழ்வான் - கிழக்கண்வானம், படரொளி - படரும் அருணோதய வொளி. அறம் பெய்தாள்—உயிர்களாகிய பயிர்கட்கு அறமாகிய நீரைப் பொழிந்த முகிலாகியவள். அறம் பெய்தல் இவள் கூறிய அறவுரை யாற்றெளிக. வாவா என - வருக வருக என்று. (88)

318\. கான நெறியிற் கடிதுட்கப் போந்தியவு
ளான பொதிபறித்த வக்கள்வ—னேனைப்
புகழ்கொள்ளை கொள்ளும் பொருவில்வே ளென்று
நிகழ்வெல்லாந் தேர்ந்தியம்பு நேர்.

(இ-ள்)—காட்டு வழியில் அஞ்சும்படிக் கடிதுபோந்து எ-று. இயவுள் ஆனபொதி - கடவுளுண்டாயின மூடை. அக்கள்வன் என்றது தன் நெஞ்சிற் பிறனாக எண்ணியவனைச் சுட்டியது. ஏனைப் புகழ் - கள்வர் பறிக்கும் நிலையாப் பொருளின் வேறாய் நிலைத்த புகழினை, கொள்ளை கொள்ளும் - பிறர்பாவில்லாது ஒரு சேரத்தானே கவர்ந்துகொள்ளும், பொருவில் வேள் - ஒப்பில்லாதவேள் எனவும் போர் புரிகின்ற வில்வேள் எனவும் இருமுறை ஒதிப்பொருள் கொள்க. ஏனைப்புகழ் என்பது அக்கடவுளின் வேறாகிய புகழ் எனக் கொள்ளின் புகழும் என்னும் உம்மை விகாரத்தாற் றொக்கதாகக் கொள்க, நிகழ்வெல்லாம் - எல்லா நிகழ்ச்சியும், தெரிந்து நேரியம்பும் —அவன் எதிரே சொல்வள். எ. று. (89)

319\. என்னை புரிந்தனைகா ணென்றௌவை கூறவேதி
ரன்னை புரிந்ததுவே யாமென்று—பின்னரும்வே
ணுங்களவி னேன்களவு நோய்தேன்ன வந்நிலையிற்
றங்களிலே முற்றியன்றூர் சார்ந்து.

(இ-ள்)—ஔவை பாரி யெதிர் நோக்கி யாது செய்தனை என்று வினவியவளவில் அதற்கெதிரே பாரி, என் அன்னையார் செய்ததே

யான் செய்ததாமென்று விடை சொல்லி என்க. அன்னை செய்ததும் களவு என்று கருதிக் கூறினன். நுங்களவின் என் களவு நொய்து என்றது நீவிர் என்னினின்று நும்மைக் கொண்டேகிய வஞ்சக்களவினும் யான் நும் எதிர் நின்று பொதிமட்டிற் கவர்ந்துகொண்டது மிகவுஞ் சிறியதோர்களவாம் என்று வினையக் கூறினனாகக் கொள்க. யான் றெய்வமாக வழிபடும் நும் திருவடிவினும் கவர்ந்த திருவடிவு நொய்து என்னுங் குறிப்பாற் கூறினன் எனினுமமையும்; நீவிர் உயிருள்ள தெய்வ வடிவு, இஃது உயிரில் வடிவு என்பது கருத்தாம் "தேவரனையர் புலவர்" என்பதை ஈண்டைக்கு நினைக்க. தங்களில் எமுற்றுச் சார்ந்து இயன்றார் - தம்முள் மகிழ்கூர்ந்து நெறிச் சார்ந்து நடந்தார். இருவர்க்கும் குறித்த தெய்வம் கிடைத்தலான் மகிழ்கூர்ந்தார். எ. று.

320. பொன்னு மணியும் பொலந்துகிலும் பாய்மாவு
மின்னு மணித்தேரு மிக்கீந்து—பின்னளி
லௌவை செலுமா றளித்தான் விடையரிது
செவ்வை யுளந்துணையாச் சேய்.

(இ-ள்)—பொன்னை முற்கூறியது எல்லாப் பொருளும் கொள்ளற்குக் கருவியாதற் சிறப்பான். மணி கூறியது சுமத்தற்கரிய அப்பொன் பொறையிற் பலவற்றையும் விலையாகச் கொள்ளுதலும் எடுத்தற்கெளிமையும் கருதி. பொலந்துகில் இவை முடித்தற்கும் உடுத்தற்கும் வேண்டியன. பாய்மாவைத் தேரிற்கு முன்னர்க் கூறியது அத்தேரினை ஈர்த்தற்கு வேண்டுதல்பற்றி. தேர் கூறியது ஔவையையும் அவள் பெற்ற பரிசில்களையும் கொண்டுய்த்தற்கு. மணிமுன்னது அரதனம், பின்னது நாமணி. பரிசிலீதலினும் விடையளித்தல் வேறு என்று காட்டியது காண்க. பொருநராற்றுப்படையுள் "தரவிடைத் தங்கலோ விலன்...செல்கென விடுக்குவனல்லன்," என்பதனாற்; பரிசில் தருவது தாழ்த்தலிலன் என்றும் செல்க எனவிடுக்குவன் அல்லன் என்றும் கூறியனகொண்டு உண்மை யுணர்க. அரிது விடையளித்தான்; தான் அளித்தற்கரிதாயது விடையென்று குறித்தவாறு. அரிது விடையளிக்கும்போதே தன் செவ்வையுளத்தை அவட்குத் துணையாகச் செலவிட்டது முன்னல்கிய பரிசில் எவையுநல்ல துணையாமோ என்னும் ஐயத்தால் என்று கொள்க. பின்னளில்—பின்னொர் நாளில் எ. று. செவ்வையுளம்—செம்மைப்பாடுடைய தன் நெஞ்சம் துணையாக விடையளித்தான் என்க. (91)

321. பாரியா லௌவை பறியுண் டிறமீது
மாரியே யில்லாத வற்கடத்துப்—பாரிமகள்

**பொன்றுறந்து கொண்டு புகாவாக நல்குதிற நன்றறிந்து பாடுதுமே ணும்.**

(இ-ள்)—பறியுண்திறம் - பறியுண்ட கூறுபாடு. மழையே இல்லையான வறனுறு வேலையில். பாரிமகள் - வேள்பாரியின் மனையாட்டியாகிய நல்லாள். பொன்துறந்துகொண்டு புகாவாக நல்குதிறம் - தான் துறத்தற்காகாத தாலிப் பொன்னைப்பெருக்கி அதனல் உணவுப்பொருள் கொண்டு பாண்மகனுக்கு உணவளித்த கூறுபாடு நாம் மேற்பாடுதும் எ. று. நன்றறிந்து பாடுதும் என்க. என்றது, சிலர் ஈண்டைக்கு வேறு கூறுதல் குறித்தது. இங்குக் குறித்த வரலாறு :—

> "மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்துப்
> பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுட்
> பொன்றுறந்து கொண்டு புகாவாக நல்கின
> ளொன்றுரு முன்றிலோ வில்"

என்னும் பழமொழிப் பாட்டான் அறிக. பொன்றந்துகொண்டு என்பதூஉம்பாடம். இதன்கட் பாரி மடமகள் என்றது பாரியின் மடப்பத்தை யுடைய மனையாட்டியை. நீருலையுட் புகாவாக என்க. உலைநீருட் சோருக எ. று. பொன்னைத் துறந்து அரிகொண்டு அவ்வரி நீருலையுட் சோருனவளவிற் பாண்மகற்கு நல்கினள். புகா —உணவு; "புகாக்காலை - உணவு வேளை"- என்பது தொல்காப்பியம் (களவி 16). இனி நீருலையுட் பொன்றுறந்து கொண்டு எனக் கிடந்தபடியே வைத்து அடுப்பிலேற்றிய நீர் கொதி நீராதற்குட் பொன்னைத் துறந்து அரிகொண்டு எனவுரைப்பினும் பொருந்தும். இதற்கு விரைவிற் சோறடுதற் பொருட்டுப் பொன்றுறந்து அரிகொள்ளு முன்னே நீருலை யேற்றினள் என்று கருதிக் கொள்க; இங்ஙனங் கொள்ளாது நீருலையுட் பொன்னையே பெய்து புகாவாக நல்கினள் எனின் "ஒன்றுரு முன்றிலோவில்" என்னும் பழமொழிக்கு அஃதியையாமை காண்க. (92)

6. ஔவை பறியுண்ட திறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள். (92)

## 7. பொன்றுறந்து புகாநல்கு திறம்.

322. ஊரெல்லாங் கற்றோர்க் குதவிவேள் பாரிதன
சீரெல்லா மேற்றோர்க்குத் தேர்ந்தளித்துப்-பாரெல்லாம்
பாயபுக ழொன்றே படைத்திருக்கு மேல்வைக்கண்
மேயதவண் வற்கடந்தான் வேறு.

(இ-ள்) ஊரெல்லாம் கற்றோர்க்குதவி என்றது "மூந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்" என்பதுபற்றி. தனசீர் - தன்னுடைய சீர்த்த பொருள்கள்: "புலங்கந்தாக விரவலர்செலினே, வரைபுரைகளிற் றொடு நன்கலனீயும், உரைசால் வண்புகழ்ப்பாரி" (அகம். 303) என ஔவையார் பாடுதலான் இதனுண்மையறிக. தேர்ந்து - அவரவர் தரந் தமந்தெரிந்து. பாரெல்லாம் என்றது தன் பறநாடல்லாத பிறநாடு முழுதும் புகழ்பரத்தலைக் குறித்தது. ஒன்றே என்றது வற்கடம் வருதற்கு ஏதுவாகிய பழிபாவங்களை விலக்கியது காண்க. அவண் - புகழ் படைத்த அவ்விடத்து. வற்கடமாகிய வேறுதான் மேயது என்க. வேறு என்றது புகழ்படைக்கும் அறத்திற்கு இது பயனாதற் குரியதாகாத பிறிது எ. று. ஏல்வை- அமயம். வற்கடம்- வறற்காலம். (1)

323. ஒருகா லுணவுபகுத் துண்டுசின்னாள் போக்கித்
திருநாள் விழாச்சிறப்புத் தீர்ந்து - வருநாளைக்
கென்னோ புரிவே மெனவுயிர்க ளேங்கியவே
பொன்னேர்நெல் லாகப் புக.

(இ-ள்) ஒருகால் உணவு - இல்லறத்தாற்கு ஒருவேளை யுணவிற்கு எனவிதித்த முப்பத்திரண்டு கவளங்கள். ஒரு வேளைக்குரியவற்றைச் சின்னாட்குப்பகுத்து உண்டுபோக்கி என்க. திருநாளிற் செய்யும் விழாவும் சிறப்பும் ஒழிந்து எ-று. வருநாளைக்கு - வருநாள் உணவிற்கு, என்னோ புரிவேம் - யாதுபுரிவேமோ. கொடுக்கும் பொன்னளவும் கொள்ளும் நெல்லளவும் நேராகப் புகுதலான் என்க. உயிர்கள் ஏங்கிய- நெல்லுண்ணும் உயிர்கள் பொன்னும் நெல்லும் இல்லாமல் ஏங்கின எ-று. வருநாளைக்கேக்குதல் "இன்றும் வருவது கொல்லோ நெருநலுங் கொன்றது போலு நிரப்பு" (குறள் - 1048) என்பதனானும் உணரலாம். (2)

324. பாரி கோடைகண்டு பாரின் வளம்புரக்கு
மாரி யொளித்ததுகோல் வற்கடமிவ்—வூரினுறத்

தீதுவே றுண்டுகோலோ தெய்வமுந் தீர்ந்ததுகோ
லேதுதா னென்னேன்ற் ரேன்று.

(இ-ள்)—பாரின் வளம்புரத்தற்குரிய மாரி பாரி கொடை கண்டு ஒளித்தது கொல் என்க. பாரிகோல் கோடான், கபிலன் முதலாயோர் செய்தவம்பிழையார், பறநாட்டுக் குலமகளிர் கற்பிற் குறைபடார் இங்ஙனமாகவும் இவ்வறற்காலம் இவ்வூரின் எய்தற்கு வேறு தீது உண்டுகொல்லோ எ-று. அவ்வவ்வினைக்குத்தக்க பயனைப்புரிவிக்கும் தெய்வமும் நீங்கிற்றோ என்க. வற்கடமுற ஏது என் என்றார் எ-று தாமறியாத காரணமாதலின் என்னென வினவியிருந்தார்: தன்னினும் பாரி கொடை புரப்பது கண்டு வெள்கி மாரி யொளித்தது கொல் எ-று. (3)

325. அறனன்றி வேறேன் றறியாப் பறம்பில்
வறனொன்று வற்கடந்தான் வந்த—திறனுணரி
னள்மைக்கேற் காம னவைத்த கலிகாலப்
புன்மைக்கேற் பஃதேன்றார் புக்கு.

(இ-ள்.)—வேறு என்றது அறனின் பிறிதாகிய பாவத்தை: பாவம் நெஞ்சானுஞ் செய்யப்படுதனோக்கி அறியா எனப்பட்டது. வறன்ஒன்று - கோடையொடுகூடிய: வற்கடம் - வற்கடக்காலம். விளைவன்றி விளைவில்லாத இஃதொன்று என்னும் பொருளிற் றான் என்பது வந்தது. வந்ததிறன் - வந்தவகை. நன்மை - பிறர்க்குநலஞ் செய்தற்கு. நவைத்த - குற்றத்திற்குள்ளாகிய. கலிகாலப்புன்மை - கலியுகத்தின் புல்லிய தன்மை. இந்த யுகத்திற் புண்ணியந் தேயும் என்றும் பாவம் வளரும் என்றும் நூல்கள் கூறும். புக்கு -சேரக்கூடி. முதலூழியிற் புண்ணியம் நான்கு கால்களுடனும், இரண்டாம் ஊழியில் மூன்றுகால்களுடனும், மூன்றாமூழியில் இரண்டு கால்களுடனும் கலியூழியில் ஒரு காலுடனும் நடக்கும் என்பது வடநூல் வழக்கு. (4)

326. பறம்பிற் சுனைநீர் பருகி யுயிர்தான்
புறம்பிற் புகாவாறு போற்றி—யுறங்கல்
பொருவார் வயிற்றுத்தீப் பொங்கலா னின்ப
மருவார் தளர்ந்தார் மதி.

(இ-ள்.)—பறம்பிற் சுனைநீர் பருகி - பறம்பிலுள்ள தேன் சுனையினீரைப்பருகி. உயிர் உடம்பின் புறம்பே புகாமற் காத்து என்க. உறங்

கல் பொருவார் - துயிலுதல் பொருந்தார். வயிற்றுத்தீப் பொங்கலான் வயிற்றிற்பசித்தீமூளுதலான். "நெருப்பினுட் டுஞ்சலுமாகு நிரப் பினுள், யாதொன்றுங் கண்பா டரிது" (குறள் - 1049) என்பது காண்க. வெளியிலுள்ள தீயின்வேறு தோன்ற வயிற்றுத்தீ என்றதாம். வெளியிற்றீ இடுதலாற் பெருகுதலும் இஃதிடுதலாற் றணிதலும் வேற்றுமை காண்க. பறம்பிற்சுனை வற்றாதது என்பது மேலே கூறினும். தண்ணீருஞ்சோறும் உயிர்போகாமற்காக்கும் இருமருந் தாதலின் ஒரு மருந்தாலே உயிர்போற்றுதல் குறித்தது. கவலைமிகுத லான் உறங்காமை கூறிற்று. உலகு உண்டாதற்குக்காரணமாகிய அறத்திற்றிரியாத இன்பமும் பொருந்தார். மதிதளர்ந்தார் - அறிவு ஒய்ந்தார்: மதிதளர்தல் கூறியது உடம்புதளர்தல் மேலே கூறியவாற் ருற் பெறப்பட்டது பற்றி என்றறிக. இன்பமருவார் - இம்மை யின்பம்பொருந்தார் எனவும், மதிதளர்ந்தார் - மறுமையின்பத்தைச் சிந்திக்கு மதியுந்தளர்ந்தார் எனவும், கூறினுமமையும் "மறுமையு மிம்மையுமின்றி வரும்" (குறள்-1042) என்றதை நோக்கிக்கொள்க. "நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததங், கூர்மையுமெல்லா மொருங் கிழப்பர்" (நாலடி-287) எனவருதலுங்காண்க. (5)

327. கலியின் கோடுமையோ காசினியோர் தீமை
வலியின் மிகுதியோ வானத்—தோலிமுகிலே
யில்லாமற் கூவலுநீ ரில்லாம லில்வாழ்க்கை
சேல்லாமற் காய்ந்த திறம்.

(இ-ள்.)—கலியின் கொடுமையோ என்றது தளர்கால இயல்பு குறித்துக் கூறியது. காசினியோர் - பருகிவாழ்தற்குரிய உலகோர். தீமைவலியின் மிகுதி - பாவபலத்தின் பெருக்கம். புண்ணியஞ்செய் வார் இவ்வொருசிறு பறநாட்டாரேயாய் உலகிற் பெரும்பாலார் பாவ மேசெய்தலான் அவ்வலியின் மிகுதிபற்றியோ எ-று. வானத்தொலி முகில் - விசும்பில் முழங்கும் மேகம். கூவல் - கிணறு. வானம்பெய் தலும் கிணறு நீரூறுதலும் இல்லாமல் எ-று. இல்லறவாழ்க்கை நடைபெறாமல் வெம்பிய திறம் கொடுமையாலோ அன்றி மிகுதி யாலோ என்றதாகக் கொள்க. (6)

328. நாடே வறங்கூர்த ஞடி யருட்சேல்வங்
கூடு பேருவேளிர் கோமான்றன்—வீடடையத்
தாளாண்மை யாற்றித் தருபல் வளன்முழுதும்
வேளாண்மை சேய்தான் மிக.

(இ-ள்.)—நாடுவறங்கூர்தல் நாடி என்றது பாரி தான் வறங்கூர் தலை நாடாமை குறித்தது; அருட்செல்வங் கூடுதல் கூறியதனுற் பொருட் செல்வங் குறைதல் குறித்ததாம். தன்வீடு அடைய்த்தரு பல்வளன் என்க. தாளாண்மை ஆற்றி-முயற்சிசெய்து. காடுகெடுத்து நாடாக்கலும் யாறுதடுத்துத் தரிசில்லாமல் விளைவித்தலும், பொன் மணியகழ்ந்தெடுத்தலும் முதலியன அரசர்க்குத், தக்க தாளாண்மையா கும். "இளையனுயினும் மணிமுடி புனைதலின் னரசுதொழிலல்லது பிறிதுதொழில் பெருன்" (நவநீதப்பாட்டியலுரைமேற்கோள்) என் பதனுலிவ்வாறு கூறப்பட்டது. வேளாண்மை - உபகாரம். (7)

32). உண்டிப் பொருட்டாக வுள்ள வளமனைத்தும்
பண்டிப் பொதியிற் பகர்ந்துபோய்க்—கொண்டபெருங்
கூலத்தாற் காலன்வாய்க் கொள்ளாமற் பல்லுயிருஞ்
சீலத்தாற் காத்தான் சிறந்து.

(இ-ள்.)—உண்டிப் பொருட்டாகக் கொண்ட பெருங்கூலத்தால் என்க. கூலம் - தானியம். உள்ள வளமனைத்தும் - தன்கணுள்ள மணி பொன் முதலிய செல்வமுழுதும். பண்டிப்பொதியில் - பண்டி களிலேற்றிய மூடைகளில், பகர்ந்துபோய் - விலைகூறிச்சென்று, பல் லுயிர் என்றது மக்களேயன்றி யானை, குதிரை, ஆளினம் முதலியன வுமடங்குதல்பற்றி; சீலத்தாற் சிறந்து காத்தான் என்க. சீலம் - மிகப் பெரியோன் மிகச்சிறியனுடனும் வேற்றுமையின்றிக் கலந்தொழுகும் பெருந்தன்மை என்ப வடநூலார். இத்தன்மையிற் தலைசிறந்து காத் தான் எ-று. எல்லாப் போக்கியங்களையும் உயிர்கள் வாழ்தற்குரிய உண விற்கு ஒழித்தல் இதனுற் குறிக்கப்பட்டது. போக்கியத்தின் சிறுமை யும் உணவின் பெருமையும் தெளிவிப்பது வற்கடமே என்பதறிக. (8)

330. பசிநோய் நலியாது பாலிக்கு முள்ளக்
கசிவான் மனையாள் கழுத்தி—னசியாத
தாலியோன் றன்றித் தமனியமின் ருயதற
வேலியோன் றன்றியுரு வேட்கு.

(இ-ள்.)—உயிர்களைப் பசிப்பிணி வருத்தாது காக்கும் உள்ளத் தின் இக்கத்தினுல் வேட்குத் தமனியம் இன்ருயது எ-று. தமனியம் இன்ருயது - பொன் இல்லையாயிற்று. அறமாகிய வேலி என்பது ஒன் றன்றி வேறு பொருந்தாத வேட்கு என்க. இவனைக் காத்தற்குப் பொன்னில்லையே என்னுங் குறையைப் பரிகரித்து அறவேலியுண்டு என்று காட்டியபடி. நசியாத தாலி என்றது பாரியுளவரையும்

செடாமை கருதி வந்தது. மனையாள் கழுத்திற்றாலியை இவனுடைமை யாகக்கூறியது ஒற்றுமைபற்றி. "ஈகையரிய விழையணி மகளிரொடு சாஅயின்றென்ப வாஅய்கோயில்" (புறம் - 127) என்றார் பிறரும். அவ்வேள் என்றது அங்ஙனம் பொன்னில்லையானவேள். எ-று. (9)

331. அருளொன்று மல்லா தனைத்துயிரு மோம்பப்
பொருளொன்று மில்லாமற் போகுந்—தருணங்
கடன்கொண்டுஞ் செய்வல் கடனென் றயனாட்
டிடன்கொண்டா னவ்வே ளெழுந்து.

(இ-ள்.)—அருளொன்றும் - அருளென்னப்பட்டதொன்றும். தொடர்பில்லாது எல்லாவுயிர்க்கண்ணும்ஓம்பச்செல்வது அருள்என்பது குறித்தது. பொருள் ஒன்றும் - பொருள் சிறிதும். பொருள் சிறிதுள்ள போதே அயனாடுபுக்கான் என்பது தோன்றப்போகுந்தருணம் எனப்பட்டது. "கடன் கொண்டுஞ்செய்வன செய்தலினிதே" (இனியவை நாற்பது 32) என்பது காண்க. கடன் - பின்னது கடப்பாடு. அயனாடு - எவ்விமிழலைக்கூற்றம். கடனீரால் உப்பும் மீனும் பெறும் செய்தல் வளநாடாதலின் மழைவேண்டாதும் வாழ்வார் அந்நாட்டார் என்க. "வானம் வேண்டா வுழவினெங் கானலஞ் சிறுகுடி" என்பது (நற்றிணை. 254) "எவ்விதொல்குடிப்படீஇயர்" (புறம் - 202) என்பதனால் எவ்விகுடிக்கும் இப்பாரிகுடிக்கும் உள்ள இயைபும் உணரப்படும். கடன் கொண்டுங் கடன்செய்தல் அருளுடையாரியல்பு என்று காட்டியவாறு. கடன் பெறுவரை ஆண்டுத்தங்குதலைக் குறித்து இடன் கொண்டான் என்றதாம். கடன் கொள்ளுதற்குக் கொள்வாருடைமையினும் அவர் தரமே ஏது ஆதலான் பாரியே அயல்நாட்டுப்புக்குக் கொள்வான் எழுந்தது கூறிற்று. இவனில்லாத அமயமே பாரிமடமகள் பொன்றுறந்து புகாநல்கற் குரியதாதல் உய்த்துணர்ந்துகொள்க. (10)

332. மாரி மறந்து வறந்தபெரு வற்கடத்தும்
பாரி விருந்தோம்பும் பான்மைகேட்—டேரிசைதேர்
பாண்மகனீள் வெய்ய பசிப்பிணிகூர்ந் தெய்தினனவ்
வேண்மகளுள் வண்பறம்பின் மீது.

(இ-ள்.)—மாரி - காலமழை. மறந்து - பெயல் மறந்து. அது மறந்ததனால் வறந்த என்க. வறந்த வற்கடம் - வறந்ததனாலாய வற்கடம். தானுண்ண இயலா நிலையினும் பாரி வந்த புதியரைப்புரக்கும் இயல்பைக் கேட்டு என்க. ஏரிசைதேர் பாண்மகன் - அழகிய பண்ணி

சையிற்றேர்ந்த பாண்குடிமகன். பண்ணிற்கு அழகு கேட்டாரால் நன்றென்று கூறப்படுதல் "பண்வனப்புக் கேட்டார் நன்றென்றல்" (சிறுபஞ்ச. 9.) என்பது காண்க. அவ்வேண்மகன் - அயனுட்டிடங் கொண்ட அவ்வேள்குலமகனால் ஆளப்பட்ட வளவியபறம்பின் மேல் என்க. வண்பறம்பு என்று வறந்த நிலையினுங்கூறியது அதற்குண்டாகிய புகழ்ப்பெயர் பற்றிஎன்க. "பெரும்பெயர்ப்பறம்பே" (புறம்-113) என்று கபிலர் கூறுதல் காண்க. (11)

333. பாரி யிலாத பறம்பின் பெருங்கோயின்
மாரி பெயாத வறுங்காலைச் — சீரிசையோன்
வெய்ய பசிகூர மேவியது கேட்டனள்வேள்
செய்யகுலத் தேவித் திரு.

(இ-ள்.)— வறுங்காலை - வற்கடக்காலத்து. பாரிக்கு இல்லாத குறைகூறி மாரிக்குப் பெய்பாதகுறை குறித்தது பாரியிருந்தாலிந்நிலையினும் பெய்தல் நினைந்து : பெருங்கோயிலென்றது எந்நிலையினுந் தன் பெருமை குறையாத கோவிருக்கை என்பது கருதி. சீர்இசையோன் - தாளங்கெடாத இசைவல்லவன் "கொண்ட சீர்தருவாளோ" என்பது (கலி). யார் பசித்தாலும் இரங்கும் இயல்பினள் கலைவல்லவன் பசிகூர எய்தியது கேட்டனள் என்பது குறித்துச் செய்யதிரு என்றதாம். திருவினுஞ் செய்யவள் எனினுமமையும். கற்றூர் பசிக்கு இரங்காத திருவின் வேறெனக்காட்டியது.குலத்தேவி—குலக்கிழத்தி; வேள்குலம் பெருகுதற்குரிய தேவிஇவளாதலின் வேள்குலத்தேவி என்றதாம். (12)

334. சாவாமற் காக்கத் தனிநீர்ச்சில் புற்கையன்றி
யாவாமற் றில்லா வவதிக்கட்—பாவாழ்நன்
புக்கதுதேர்ந் தெப்பாலும் பொன்ஞென்றுங் காணும
லுக்கதுதே விக்காண் டுளம்.

(இ-ள்.)—தன் உடம்பு சாவாமல் உயிர்காக்க என்க. தனிநீர்ச்சில்புற்கை - வடிகஞ்சிகலவாத தனிநீரிலிட்டசில்லுணவு. புற்கை - அற்பவுணவு; பாரிதுப்புரவுடன் வருவது குறித்த நாள் இல்லாதலின் இங்ஙனம் பெருமனையிருந்தது குற்றமாகாதென்க. ஆவா - கவியிரங்குவது. மற்று - பிறிதுணவு. அவதி - ஈண்டுக்காலவெல்லை. பாவாழ்நன் - செந்துறைப்பாட்டால் உயிர்வாழ்பாணன். எப்பாலும் - தன் உடலுக்குப் புறம்பாகிய எவ்விடத்தும். பொன் ஒன்றும் - பொன்சிறிதும். ஆண்டு - அந்நிலையில், தேவிக்கு உளம் உக்கது

தேவிக்கு உள்ளம் இறந்துபட்டது ; "உள்ளமுடைந்துக்கக்கால்" (குறள்-1270) என்ப. (13)

335. வந்தவிருந் தூட்டாவில் வாழ்க்கையினுஞ் சாதலே
முந்தவினி தேன்பாண் முனமாடி—தந்தமெயாற்
சீலிப்பெ ணல்லா டிருக்கழுத்திற் கண்டுவந்தா
டாலிப்போ னுண்மை தனி.

(இ-ள்.)—தன்கண் வந்த விருந்தினரை உண்பியாத மனையில் வாழ்தலினும் இறப்பதே முற்பட இனியது என்று தன்னுட் கூறுவாள் முன்னம் கண்ணாடி எதிர்தந்த உடம்பினால் என்க. சீலிப்பெண் நல்லாள் - சீலமுடையவளாகிய பெண்பாலில் வைத்து நல்லாளெனப் பெயர் சிறந்தவள். திருக்கழுத்து - திருமகள் இறைகொள்ளும் கழுத்து. தாலியாய்ப்பயன்பட்ட நிலையினும் இப்போது பொன்னுய்ப் பயன்படுதல் சிறந்தது என்னுங்கருத்தாற்றாலிப்பொன் எனப்பட்டது. தனிக்கண்டு உவந்தாள் - கண்டு தனிமையின் உவந்தாள் எ-று. ஆடி தந்தமெய் - கண்ணாடிதந்த மெய்ந்நிழல். இறக்க நினைப்பாளை ஆடிதந்த மெய்காத்தது குறித்தவாறு. வந்த விருந்தூட்டல் - தன்கண் வாராது சேய்மைக்கட் பசித்தாரையுஞ் சென்று ஊட்டுதல் வேண்டப்படுவது குறித்து நின்றது காண்க. "சாதலினின்னாத தில்லை யினிததூஉ மீதலியையாக்கடை" (குறல் - 230) என்பதனாற் சாதலே முந்தவினிது எனப்பட்டது. (14)

336. பாரியா னெங்கோனுட் பாங்கறிவேன் மற்றிதுவே
சீரிதா மென்றுணர்ந்தேன் றெய்வங்கா—ணீரறிதிர்
தன்மங் கலமாய்த் தழைப்பதெனத் தன்கழுத்தி
னன்மங் கலம்பெருக்கி னாள்.

(இ-ள்.)—யான் எங்கோன் பாரிஎன்க : பாரி - மனையாட்டி. பாரியான் - வேள்பாரியேதானுதல் குறித்தசாடு : பிரிவின்றியைந்தவராநட்பின் ஒருயிராகவுணரவைத்துக் கூறியவாறும். தான் அவனுய நிலையினும் தலைவன் உயர்பே கருதுதலால் எங்கோன் என்றார் என்க "கிழவோனுயர்புங்கிழவோள்பணிவும்" வேண்டிவர் தொல்காப்பியனார். உட்பாங்கு அறிவேன் - அவன் உள்ளத்துக்கருதிய நன்மை இஃதென யானறிந்து கொண்டொழுகுவேன். தலைவன் உட்பாங்கறிந்தொழுகலே மனையாட்டிக்கு வேண்டப்படுவது "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி",இவர் மூவர் பெய்யெனப்பெய்யு

மழை" (திரிகடுகம்-96) என்பதனுன் உணர்க. இத்தகையார் கூறு வதைத் தெய்வங்களுணர்தல் இத்திரிகடுகத்தானே அறிக. இதுவே சீரிதாம் - யான் செய்புமிதுவே தலைவன் உட்பாங்கிற்கும் தெய்வங் களைத் தலைமையாக்கொண்ட நூற்றுணிபிற்குஞ் சிறந்தது ஆகும். தெய்வங்காள் - விளி. பன்மையாற் கூறியது பொற்றொலி திருமகளா தல் கருதியும் அதனைப் பெருக்கி விருந்தூட்டல் அறக்கடவுட்கு மகிழ்செய்தல் கருதியும். தன்மம் கலமாய்த்தழைப்பது நீரறிதிர் - அறம் உயிர்க்கு அணியாக நின்று பிறவிதோறுந்தழைக்கச்செய்வது நீவிர் தெரிவீர் எ-று. உடற்கிடும் அணி அணிதலிற்றேய்வது குறித்துத் தழைப்பது எனப்பட்டது .அறம் பூண்ஆதல் "பாரியும் அறம் பூண்டு" (புறம் - 108) என்னும் கபிலர் வாக்காலுணர்க. பொருள் இன்பங்களை யும் உடம்பையும் வெறுத்தாரும் அறத்தைப்பூணுதலான் இஃது உயிர்க கணியாதல் தெரிக. மாட்சியுடைய மனையாட்டி கழுத்தின் மங்கல மாதலால் நன் மங்கலமாயிற்று. பெருக்கினுள் - பெருகவிட்டனள் ; மங்கலமொழி. (15)

337. வற்கடந்தான் செய்யும் வறுமை யறக்கோடிதே
யிற்கடமை யோம்பு மிருந்தேவி— பொற்புடைய
தோன்மங் கலவணியுந் தோட்டதரோ விவ்வெல்லாந்
தன்மஞ் செயுஞ்சோ தனை.

(இ-ள்.)—வற்கடம் நாட்டிற் செய்யும் வறுமை மிகக்கொடிதென் பது இஃதொன்றே கொண்டு அளந்து கொள்ளலாகும் எ-று. இற் கடமை - இல்லாளுக்குரிய கடப்பாடு. ஓம்பும் இருந்தேவி - அதனைப் பாதுகாத்தொழுகும் பெருந்தேவி. பொற்பு - பொலிவு. தொன்மங் கலவணி - தொன்மைதொட்டு மங்கலத்திற்கு அணியப்படுவது : தொட்டது என்றது தொடுதற்குமேல் மாற்றப்படாமை குறித்தது. இவ்வெல்லாம் - இவைமுழுதும். தன்மம் - தருமதேவதை. செய்யுஞ் சோதனை - செய்கின்ற சோதனைகளின் வகைமையாம் எ-று. தேவி மங்கலவணி தொட்டது அறக்கொடிதாதல் ஒருதலையென்று காட்டிய படி. கொண்டான் சோதனைக்கு நிற்காத பெண்டிரின்வேருக வைத்து இவ்விருந்தேவி தன்மஞ்செய்புஞ் சோதனைக்கு நின்ற பெருமை உணர்த்தியதாம். (16)

338. மழைபோல் வழங்கு மதிவேள்கட் டன்பி
னிழையே யணியா மெனக்கேன்—றுழையள்பாற்
பூண்ட நிறையணிமான் பொன்னணியை நல்கின
வேண்டு மரிவிலைக்கு வேட்டு. [ளால்

(இ-ள்.)—மழைபோல் வழங்குதலுடன் அம்மழைக்கில்லாத மதியையும் உடையவேள் என்பது குறிப்பு. வேள்கட்டு அன்பின் இழையே-பாரிவேள் கட்டிய அன்பினாலாகிய இழையே எனக்குரிய அணியாகும் என்று சொல்லி. உழையள்பால் - பக்கலுள்ள ஏவற்சிலதியிடத்து. அவ் விழையிற் கோத்த பொன்னணியை நல்கினள் எ-று. பொன்னணியை வேண்டும் அரியின் விலைக்கு உழையள்பால் பூண்ட நிறையணிமான் வேட்டு நல்கினள் என்க. வேண்டும் அரி - உடற்கு இன்றியமையாது வேண்டப்படும் அரிசி. பொன் உடற்கு வேண்டப்பட்டதன்று என்பது குறிப்பு. மற்றுப் பொன் வழங்குவது விலைப்பொருட்டு என்பது தெரிய விலைக்கு எனப்பட்டது. வேட்டு நல்கினள் என்றது - தன் உள்ளத்து விருப்பந்தோன்றச்செய்து ஈந்தனள் எ-று. பூண்ட நிறையணிமான் - பூணப்பட்ட நிறையே அணியாகவுடைய மான் போன்றவள். நிறை-கற்பு. வேள் தன்னைப் பிணித்தது அன்பினால் என்பது தோன்ற வேள்கட்டு அன்பு என்றாள். அன்பின் இழை - அன்பினாலிழைத்த மங்கலிய சூத்திரம்: இங்ஙனம் பொற்றாலி கொடுத்தும் இரவலரையோம்பும் வள்ளன்மை இந்நாட்டிற்குச் சிறந்ததென்பது "ஈகை யரியவிழையணி மகளிரொடு, சாயின்றென்ப வா அய்கோயில்" (புறம்-127) எனவருதலான் அறியலாம். நிறையணிபூண்டவள் பொன்னணி நல்கினள் என்பது பொன்னினும் நிறை சிறந்தது என்பது தோற்றி நின்றது காண்க. (17)

339. ஈது புரியா ரேவருண்டோ நிற்குமா
றியாது முரைக்க வியல்கிலேன்—மாதரசி
என்று ளிடர்கொண் டிரும்பே ரணிகொண்டு
சென்று டொழிலாட்டி தேர்ந்து.

(இ-ள்.)—ஈது - தாலியிற்றுத் தம்கண் வந்த விருந்தூட்டும் இஃது. நிற்கு - நின்கருத்திற்கு. மாறுரைக்க யாதும் இயல்கிலேன் என்றது இதற்குமாறு பல நினைத்தல் குறித்து நின்றது: உரைக்க வியலாமை மாதரசி என்று விளித்துக் குறித்தாள். இடர் கொண்டு - கையில் அணிகொள்வதற்கு முன்னே உள்ளத்தே இடரைக்கொண்டு. இரும்பேரணி - சுமங்கலைகட்குப் பெருமை தருவதாகிய பெரிய அணி. தேர்ந்து - தான் இங்குச்செய்வது இஃதென்று தெளிந்து: ஏவற்சிலதி என்பது தோன்றத் தொழிலாட்டி என்றதாம். (18)

340. அட்டி லடப்பே னழன்மூட்டி நீருலைப்பெய்
திட்டு வழியி னிருவிழிவைத்—தேட்டா ...

வரிவரவு நோக்கி யமர்ந்தாள்வேள் பாரி
விரிவுறுகைக் கார்தழுவு மின்.

(இ-ள்.)—அட்டில்—அடுக்களை. அடுப்பின் உள்ள அழலை மூளச் செய்து எ-று. பகலிற்றீ அவிக்கலாகா தென்பதனால் அடுப்பினழலை மூளச்செய்து என்றதாம். கொதிநீராதல் வேண்டி முன்னரே நீர் உலைப்பெய்தல் வேண்டிற்று. இட்டு - அடுப்பினிட்டு. எட்டா அரி வரவு நோக்கி வழியின் இருவிழிவைத்து; இவ்வமயத்திற்குக்கிட்டாத அரிசியின் வரவு நோக்கி என்க. அரியே முதன்மைத்தென்பது தோன்றச்சிலதிவரவு குறியாமை காண்க. "பிறையை யெட்டினள் பிடித்து" என்றார் கம்பநாடர். (சித்திரகூட - 22). வேள்பாரியாகிய விரிவுற்ற கையையுடைய மேகம் தழுவிய மின்னல் போன்றவள் எ-று. மின்மேகத்தினிலைத்து அது பெய்தற்கே காரணமாதல் குறிக் கொள்க. அரசர் தேவியர்தாமே அட்டிற்றொழில் புரிவாராகக்கூறியது காண்க. "சிறுகாலை யட்டிற்புகாதாளரும்பிணி" (நாலடி) எனப் பொதுவாக வருதல் கண்டு கொள்க. வந்த விருந்தினனை இனிதூட்ட வேண்டித் "தன்மனைப் பொன்போன்மடந்தையைக் காட்டி யினனை, யென்போற் போற்றென்றோனே" (புறம் - 395) எனவருதலானும் இவ்வுண்மை நன்கறியலாகும். அரசர் பெண்டிர் கலையில் "மடைநூற் செய்தி" கூறப்படுதலும் காண்க. இனி வந்தார்க்குக் கடிதுவழங்குதற் பொருட்டு மடைத்தொழிற் குரியளல்லாததான் அடுப்பினழன்மூட்டி நீருலைப் பெய்து அரிவரவுநோக்கியமர்ந்தாள் என்றலும் ஒன்று. "விருந்தொடு கைதுவாவெம்மையு முள்ளாய்" (கலி - 81) விருந்தினர் வருதலாற் கைபொழியாத எம்மையுநினையாய், எனவருதலான் முன்னதே சிறந்த தென்க. (19)

341. பூவை யளித்த புனைமங் கலவணியை
யேவற் சிலதி யிருங்கைக்கோண்—டாவணம்போய்
விற்கத் துணியாமன் மேதக்க வோர்வணிகற்
கோற்கத் துரைத்தா ளுணர்ந்து.

(இ-ள்.)—மொழியாற் பூவையாயினாள். அவள் மங்கலவணி அளித்தபோது கூறியமொழியை நினைந்தவாறு. புனைமங்கலவணி என்றது புனைதற்குரியதன்றி விற்றற்குரிய தல்லாமை குறித்தது. மங் கலவணிஎன்றது ஒருதலைவனாற் புனையப்படுதலன்றிப் பிற வணிகள் போல விலைக்குக்கொண்டு தாமே அணியப்படாமை கருதிற்று. ஏவற் சிலதி - ஏவின செய்யுநிலையிற் றலைவிக்குத் தோழியுமாவளிவள்

என்பது காட்டியதாம். இருங்கை - பிறர்பாலொன்று கொள்ளவேண்டாத பெருமையையுடையகை. ஆவணம்போய் - கடைத்தெருக் கட்சென்று. விற்கத்துணியாமல் - விலை செய்தற்கு மனந்துணியாது. மேதக்கதோர் வணிகற்கு - குணத்தால் மேன்மைதக்க ஒரு வணிகனுக்கு. உணர்ந்து ஒற்கத்து உரைத்தாள் - சொல்வது உணர்ந்து தளர்வுடன் கூறினள். உணர்தல் - மேதக்க வணிகனைத் தெரிந்துணர்தலுமாம். ஒற்கம் - இக்காரியஞ் செய்வதிற் றனக்குண்டாகிய உள்ளத்தளர்வு. (20)

342. கேட்ட வணிகன்றான் கேட்டேனென் றந்நங்கை
வேட்ட வரியோடு வேண்வேதந்—தூட்டற்குச்
செல்கவேனத் தேவி திருமங் கலவணியை
நல்கலேண விட்டா னயந்து.

(இ-ள்)—கேட்ட வணிகன் தான்கெட்டேன் என்றது இச்செய்தி கேட்கப்பெற்றதே தனக்குக் கேடு பயப்பது என்பது குறித்துநின்றது. வேட்ட அரி - விரும்பிய அரிசி. அரியோடு என்றது அதனுயர்பு கருதி; அரியோடு வேண்டுவ - அவ்வரிசிக்குத் துணையாக வேண்டும் வியஞ்சனவகை. தேவியூட்டற்குச் செல்க - தேவி வந்த விருந்தை ஊட்டுதற்கு நீர் செல்க என்றும் திருமங்கல அணியை அந்தேவி பாலே கொடுக்க என்றும் நயந்துவிட்டான் என்க. நயந்துவிட்டான் - விரும்பிச் செலவிடுத்தான் எ-று. நல்கல்—உடம்பாட்டின் வந்த வியங்கோள். தாலியை விற்கநேர்ந்த தளர்விற்கு இரங்கியது செய்தலான் இவன் மேதக்கவணிகன் ஆயது காண்க. தாலியென்று நினையாது அதன் கண்உள்ள பொன்னையே நோக்கினேனாகாமை கண்டு துணிக. (21)

343. ஏவற்பெண் வல்விரைவி னேகிப் பெருங்கோயிற்
றேவிக்கு நேர்ந்தவேலாஞ் சேப்பியவ—டாவில்
கழுத்தணியி னோடு கருதுபல பண்ட
முழுத்துமேதிர் வைத்தாண் முயன்று.

(இ-ள்)—முயன்று வல்விரைவினேகி என்றது பையநடத்தல் பெண்பாற்கியல்பேயாக இவ்வமய நோக்கி விரைந்தேகலான் முயறல் வேண்டியது குறித்தது. கோயிற் பெருந்தேவிக்கு என்க. கோயிற்குப் பெருமை செய்யுந்தேவி எ-று. அவர்தாவில் கழுத்தணியினோடு- அப்பெருந்தேவியின் கேடில்லாத கழுத்திற்கு அணியாயதுடன். கருதிய பல்வகைமைப் பண்டங்கள் முழுதையும். கழுத்தணிக்கு ஒடுக்

கூறியது சிலதிகருதிய உயர்புகுறித்து: அவள் கருது பலபண்டம் என்பதனால் அவள் கருதியதுசமூத்தணியாகாமை காட்டியபடி. (22)

314. மைவந்த வுண்கண் மனைநல்லா ளிவ்வெல்லாந்
தெய்வம் புணர்த்த செயலென்று—மெய்வந்த
சீர்வணிகன் வாழ்கென்று செப்பிப்பல் பண்டமொடு
பேரணியுங் கொண்டாள் பிற.

(இ-ள்)—மை வந்த உண்கண் என்றது தெய்வம் புணர்த்த செயல் விளைந்து சிறிது உருகியது குறித்தது. மங்கலவணியும் உணவுப் பல் பண்டமும் இப்போது கிடைத்துள்ளனவாக இவை சிறிது பொழுதைக்குமுன் இல்லையாயின விலையை விளைந்து தெய்வம் புணர்த்த செயல் என்றாள் என்க. மெய்வந்த சீர்வணிகன் வாழ்கென்று செப்பி - வாணிகத்துறையில் வாய்மையிலொழுகிவந்த சிறப்பினை உடைய வாணிகன் வாழ்வானாகுக என்று கூறி. பல் பண்டமொடு ஊட்டுதற்குரிய பல பண்டங்களுடன்: இவர் கருத்தால் பண்டம் உயர்தல் குறித்து ஒடுவந்தது. பேரணி - பெருமையணி; திருமங்கலியம். பிற - அசை. விலைவேண்டாது பண்ட மளித்தலான் அந்நன்றி விளைந்து வாழ்க என்றாள். (23)

315. காய்ந்த வுலையிற் கழுவிய வாலரியை
யாய்ந்து சோரியு மவணெஞ்சந்—தோய்ந்த
கணவன் வறுங்கழுத்துக் காணமற் றெய்வ
மணிமங் கலமணிந்தாண் மான்.

(இ-ள்)—வாலரி - தூய்தாகிய அரிசி. தூய்தாதற்குக் கழுவலும் கல்லாய்தலும் வேண்டும் எ-று. அவள் - நல்லாள்: நெஞ்சந்தோய்ந்த கணவன். உடல் தோய்தலினும் உயர்த்திதோன்ற உள்ளந்தோய்தல் குறித்தது: "கருத்துமுற்றத் தோய்ந்தே கடந்தான்" என்றார் கம்பநாடர். வறுங்கழுத்து - திருப்பூணாக் கழுத்து "மங்கலக்கழுத்திற் கெல்லாந்தானணி" என்றார் கம்பநாடர்: தெய்வமணம் - தந்தை கொடுப்பப் புக்க மணமாதல் குறித்தது. மங்கலம் - மங்கலவணி: ஆகுபெயர். சுற்றபாரிமகளிரைப்பற்றிக் கபிலர் என்னும் புலவர் பெருமான் "தந்தை தோழனிவரென் மகளிர் அந்தணன் புலவன் கொண்டுவந்தனனே" (புறம்–201) எனவும் "வினக்கியான் கொடுப்பக்கொண்மதி" (ஷை 200)எனவும் கூறுதலான் இவர் குடி மணமுறை துணியலாகும். சொரியுமவள் அணிந்தாள் என்றது தானணிதலினும் விருந்தூட்டுதலே முற்படக்கருதியது குறித்தது காண்க. வறுங்கழுத்து - பொன்

ஏல் ட்டுபகழுத்து எனினுமமையும். கணவன் வறங்கழுத்துக் காணுது என்றது அவனே அணிக்கழுத்துக்காண்டற் குரியனென்றதாம்; பிறர் காண்டற் கணிவாளிவளல்லாமை குறித்ததாம். மணத்திற்குரிய மங்கலங்கலம் என்று கொண்டு அது திருமங்கலியம் எனினுமமையும். "திருப்பூட்டுதல்" என்பது இக்காலத்தும் வழங்குவது. (24)

346. சோறு சமைத்துத் துடவை யடகட்டு
வேறு கறிவற்றல் வேவித்துத்—தேறுவிருந்
தூட்டினாள் வள்ளற்கே யுற்ற துணையாதல்
காட்டினா ணல்லாள் கனிந்து.

(இ-ள்)—அரிசியைச் சோறாகச் சமைத்து, துடவை அடகு அட்டு—தோட்டத்துக் கீரையை அடுதல் செய்து. அவ்வடகின் வேறாகிய கறிக்குரிய வற்றல்களை வேகும்படிபண்ணி. தேறுவிருந்து - - விற்றேறிய விருந்தினனை. ஊட்டினாள் - உண்பித்தாள். இச்செயலால் நல்லாள்தான் பாரி வள்ளற்கே கனிந்து உற்றதுணையாதல் உலகிற்குக் காட்டினாள் எ-று. கனிந்து-வள்ளலொப்பக் கனிந்து நிற்றலால். நல்லாள் - பெயர். தாலிகட்டித் துணையாவாரினும் தாலிகொடுத்துத் துணையாயின இவள் வேறு என்பது தோன்ற வள்ளற்கே உற்ற துணை எனப்பட்டது. கனிந்து காட்டினாள் எனினுமமையும் : கூவநீர் சிறிது தெளித்தும் கீரை வளர்த்தலாகுமென்பதுபற்றி அடகடுதல் கூறப்பட்டது. துடவையடகு என்றதனால் மரத்தினிலைகளில் உண்டற்குரிய இலைக்கறியடுதல் குறித்ததெனினுமமையும்; விளைவில் கோவடையின் உண்டற்குரியவற்றை வற்றலாக உலர்த்திவைப்பது நன்மனையட்டிக் கியல்பு. (25)

347. ஈது நிகழ்பொழுதத் தேந்தல்வேள் பாரிவந்தா
னேது மிசைமகனு முண்டுவந்தான்—றீதில்
பயிர்க டழையப் படர்வானம் பெய்த
துயிர்க டழைத்த வற.

(இ-ள்)—ஈது நிகழ் பொழுதத்து - இது நிகழ்ந்த சமையத்து. இசைநூலோது மகனும் என்க. இசைமகன் உண்டலானும் வேள் பாரி வருதலானும் உவந்தானவன். தீதில் பயிர்கள் தழைய - உயிர்கள் தழைத்தலைப் பொருந்தக் குற்றம் இல்லாத உணவுப்பயிர்கள் தழைக்க. பயிர் - உணவுவிளைவு. தீதில்பயிர் என்றது அவ்வுணவு விளைத்தலிற்றீதேயில்லாமை குறித்தது. படர்வானம் - விசும்பிற்

படர்ந்த மேகம். உலகிலுள்ள நல்லோர் செய்யுமரும்பெருஞ் செயல்கள் உலகத்தார் பாவங்கழுவற்கும் நன்மைக்கும் ஏதுவாமென்ற வாய்மையைப் புலப்படுத்த இவள் செயலின்பின் மழை பெய்து காட்டிற்று என்க. (26)

348. தொழிற்குச் சிறந்தகுடித் தூய சிலதி
வழுத்து கொடைவேண்முன் வந்து—பழுத்தவிசைப்
பாணனர் வெய்ய பசிக்குச்சோ றூட்டுதிறங்
காணநீ டோதினள் கண்டு.

(இ-ள்)—தொழிற்குச்சிறந்தசிலதி - ஏவற்சிலதி ; (சிலப்-இந்திர) குடித்தூய சிலதி - குலத்தூய்மையை உடைய சிலதி. வழுத்து கொடைவேள் - கொடையால் வழுத்தப்பட்ட வேள்பாரி. பழுத்த இசைப்பாணனர் - கனிந்த இசைக்குரிய பாண்குடியினர். வெய்யபசி- கொடியபசி. வேள்முன் வந்துகண்டு ஊட்டுதிறம்காண நீடோதினள் என்க. காண — உள்ளத்துக் கண்டுகொள்ள; கேட்க எனினுமமையும் ; "நம்பிதந்த கீதமே யந்து காணவோடினர்" (சிந் - 2037) என்புழிக்காண்டல் கேட்டற்கு வருதல் காண்க. நீடோதல் - தலைவி செய்கைக்கு சிலதிக்குள்ள ஆதரந் தோன்ற நின்றது ;

"விருந்துபுறந் தருதலுஞ் சுற்ற மோம்பலும்
பிறவு மன்ன கிழவோண் மாண்புகள்
முகம்புகன் முறைமையிற் கிழவோற் குரைத்தல்
அகம்புகு மரபின் வாயில்கட் குரிய" (தொல் - கற்பியல் - 11)

என்பதனல் விருந்து புறந்தந்த இச்செய்தி பாரிக்குச் சிலதி கூறிஞளெனப்பட்டது. "தோழி தாயே......வாயில்களென்ப" (ஷை -52) என்பதனற் சிலதி வாயிலாதலுணர்க. தன் நலம் தானே தலைவி கூறாளென்க. (27)

349. தேவி செயலுர் திருந்தா வணவணிகள்
மேவி யருள்செய் விதமுமவண்—கோவியல்வேள்
கேட்டேத் திருத்துங் கிழத்தி தனிவிருந்தை
யூட்டி யதற்கு வந்தா னுள்.

(இ-ள்)—திருந்து ஆவணவணிகன் - ஆவணத்திற்றிருந்திய வணிகன் அருள்மேவிச்செய் விதமும் என்க. அருள்மேவல் - அருளை விரும்பல்; கோவியல்வேள் - கோத்தொழிலியன்ற வேள்பாரி. எத்

திறத்தும் - எப்படியும். தனியே கிழத்தி விருந்தூட்டியதற்கு உள்உவந்தான் எ-று. தனிஎன்றது தானில்லாத நிலைமை குறித்தது. உள்உவந்தான் - தனக்குண் மகிழ்தல் குறித்தது. தேவிக்கு அருள்கூறாது வணிகற்கு அருள் கூறியது அவளுக்கு இது செய்வது இயல்பு என்னுங் கருத்தாலுணர்க. தன்னொடு தொடர்புடைய தேவிசெயலினும் தொடர்பில்லாத வணிகன் செயலே இவன் பாராட்டற்குரியதாதல் தெளிக. எத்திறத்தும் என்றது தானும் இருந்து செய்ய வேண்டுவதொன்றை இவள் தனிமையின் இனிது செய்தது குறித்தது. (28)

350. மனைவிற்க நீட்டியபோன் மங்கலப்பூண் டானேன்
றனைவிற்றுந் தாங்கத் தகுமேன்—றினைவற்றம்
மங்கைக்கு விண்டு மகிழ்ச்சி புலப்படுத்தான்
செங்கைக்கு நேரில்லான் றேர்ந்து.

(இ-ள்)—இதுபாரி கூற்று. மனை - இல்லாள். பொன்மங்கலப் பூண் - மங்கலப் பொற்பூண். தான் என் - அஃதென்பயனுடைத்து: அஃது ஈயப்பட்டாலல்லது ஓர் சிறந்த பயனுடைத்தன்று என்பது குறிப்பு. மனை தன் மங்கலப்பொற்பூண்விற்க நீட்டியதல்லாமல் எனக்கு மங்கலப்பூணுகவுள்ள தன்னை விலை செய்தும் விருந்தினனைத் தாங்கத் தகும் என்றான் என்க. மங்கலப்பூண் விற்க நீட்டியதன்றி விற்கப்படாமை குறித்துத் தனை விற்றும் என்றான். இனைவு - வருத்தம். இச்செய்தியாற் சிலதி பாரிபால் எதிர்பார்த்த வருத்தம். அவ்வருத்தமில்லாமல் எ-று.இச்செய்தியால் வருத்தமில்லாமைமட்டுமன்று,மகிழ்ச்சியும் உண்டாதல் காண்க. இங்ஙனம் மகிழ்தற்குக் காரணம் செங்கைக்கு நேர் இல்லான் ஆதலான் என எதுப்படவந்தது. தேர்ந்து - சிலதி கூறியவற்றின் நலந்தீங்கு இரண்டையுந் தெளிந்து புலப்படுத்தான் என்க. அம்மங்கைக்கு விண்டு - அந்நங்கைக்கு வகுத்தோதி. தன்னை விற்றுந்தாங்கத் தகுவதொன்றைப் பொற்கலன் விற்க நீட்டித்தாங்கியது நோக்கி மகிழ்தல் காட்டினன் எனினுமமையும். இது "நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளின்" (தொ - கற்பியல்) தலைவன் மகிழ்ந்து கூறியதென்க. (29)

351. தன்னடைந்த வேடன் றழற்பசிக்குத் தன்னுடலைத்
துன்னழல்வா யோர்புறவு சுட்டீத்த—வின்னுரையைக்
கற்றார்பாற் கேட்டிலைகோல் காரிகைநீ யென்றவட்குச்
சொற்றான்வே டோன்மை தோகுத்து.

(இ-ள்)—வேடன் என்பதனாற்றன்னையே கொன்று வாழ்பவன் என்பது குறிப்பு. அத்தியனுந்தன்னடைந்தது குறித்து அவன் பசித் தழலை ஓர் புறவாற்றிய தூயசரிதம் வான்மீகத்திற் கண்டது. இன் உரை - உள்ளத்திற்கு இனிய பகழ்மொழி. கற்றோர் பலர் இக்கோயில் வருதல் குறித்தும் அவர் பல்லறங்களைத் தோற்றுவித்தல் குறித்தும் அவ்வறங்களைப் பெண்டிருங்கேட்டல் குறித்தும் இவ்வணம் கூறினன். விலங்காகிய ஓர் புறவு செய்த விருந்தோம்பற்கு இவள் செய்தது சிறிதும் பற்றாதென்பது தெரியக்கூறியவாறும். தலைவி செய்கையைப் பெரிதும் வியந்த சிலதியை நோக்கி ஓர் புறவின் செய்கை கேட்டிலை கொல் என்றான் எ-று. காரிகை - அழகு; ஈண்டு அதனை யுடையாட்காயிற்று. வேள்தொன்மை தொகுத்துச் சொற்றான் - பாரிவேள் பழைய கதையைச் சுருக்கி யுரைத்தான். (30)

352. இத்தருணம் பாண னெதிர்வந்தான் மற்றவற்கு
மெத்து சிறப்பும் விரும்பித்தந்—தோத்தபெருந்
தேவிநேர் தந்து திருமுறுவல் கண்டுளத்தின்
மேவினு னன்புமிக வேள்.

(இ-ள்.)—மெத்து சிறப்பு-புகழத்தக்க சிறந்த பரிசில்: விரும்பித் தந்து என்றது இரப்பானை வெறுத்துத் தருதலை விலக்கியது. ஒத்த பெருந்தேவி- தன்னுள்ளத்திற் கொத்தபெருமனைக்கிழத்தி. நேர்தந்து- எதிரிலே தன்னைத்தந்து. தான் விரும்பத்தக்க முறுவற்குறிப்பினைக் கண்டு உள்ளத்தின் அன்பு மிகமேவினுன் எ-று. இவண்முறுவற் குறிப்பானன்றித் தன் உள்ளக்கிடக்கை புலப்படுத்தற்கு உரியதாகாமை உய்த்துணர்க. தன்னின் வேறாகாத அவளை எதிர் பெய்து புகழ்தல் அவள் மென்மைக்கேற்கா தாகலின் அன்புமிக மேவினுனென்றதாம். தலைவன் தலைவி இருவர்க்குந் தம்முள் முறுவல் முகங்காண்டலே பேறு என்பது துணிக. இம்முறுவல் வந்த இடுக்கணை எள்ளியது பற்றி வந்தது. "இடுக்கண் வருங்கால் நகுக" (திருக்குறள். 621) என்ப.(31)

353. சின்னுளி னுடு செழித்துப் பயன்றரலா
னன்னுன் றனிசை யறத்தீர்த்தங்—கின்னுது
காணுனய்க் கற்றூர்வண் கற்பகமாய் நன்னெறியிற்
கோனுனய்க் காத்தான் குடி.

(இ-ள்.)—நாடு செழித்து-நாடு செழித்தல் காரணமாக. அரசன் பெறுபயன்களை அந்நாடே தருதலான் என்க. அன்னுன்-அத்தகைய

ளுகியபாரி. தனிசையறத்தீர்த்து-கடனை முழுதுந்தீர்த்து. பகையின் எச்சமும் கடனின் எச்சமும் தீயினெச்சமும் பின் வளர்ந்து கெறு மென்பது மாபாரத மாதலின் அறத்தீர்த்து எனப்பட்டது. நாடு செழித்தலானும் கடன் இல்லாமையானும் இன்றைத காணன் ஆயினன் எ-று. கற்றார்க்களிக்க நின்ற கொடைக்கற்பகமாகி. நல்வழியிற் கோடாதொழுகுவானுகிக் குடிகாத்தான் என்க. நன்னெறியிற் கோடியவன் குடிகாத்தல் பொய்யாதல் உணர்க. (32)

354. ஒற்கத் துயிர்த்தலைவற் கோண்கான் மணிச்சிலம்பு
விற்கக் கொடுத்திழந்த மென்பிடியோ—பொற்றிருப்
பாணற் கருத்தப் பகர்வேண் மடமகளோ [பூண்
பூணற் குயர்ந்தாள் புவிக்கு.

(இ-ள்)—உயிர்த்தலைவற்கு - தலைவனை தனக்குத் தெய்வமாத லான் உயிர்த்தலைவன் என்றதாம். தனக்கு உயிராகிய தலைவனெனினு மமையும். அவன் ஒற்கத்து - அவனது தளர்நிலைக்கண். ஒண்கான் மணிச்சிலம்பு - ஒள்ளிய காலிலணிந்த மணிப்பரலிட்ட சிலம்பினை. விற்றுப் பொருளீட்டற்குக் கொடுத்துத் தலைவனையிழந்த மென்னடைப்பிடி போல்வாளாகிய கண்ணகியோ. பொற்றிருப்பூண் - திருமகளடையாளமாகிய பொற்பூணென்றதனல் மங்கலக்கழுத்திற்றனிப் பூணுதல் குறித்ததாம். பாணன் - இசைவல்லவன். அருத்த - உணவூட்ட வேண்டி. பகர்வேள் மடமகளோ - விலை கூறிய பாரிவேட்குரிய மடப்பம் பொருந்திய துணைவியோ. புவிக்குப் பூணற்குயர்ந்தாள் - பூமிதேவியாகிய இவரைப் பெற்ற தாய்க்கு அணிந்தழகு பெறுதற் குயர்ந்து நின்றவள் எ-று. ஒண்கால் என்றது இம்மணிச் சிலம்பில்லாத போதும் ஒளிகுறைபாத அடிகள் என்றதாம். மனைவியர்க்குப் பொற்றிருப்பூண் ஒப்ப இன்றியமையாத தன்று என்பது குறிப்பு. ஆண்டுத் தலைவற்கு ஒற்கத்து விற்றுப் பொருளீட்டற் களித்ததும் ஈண்டு இயைபில்லாத பாணர்க்கு அருத்தத்திருப்பூணுகிய கழுத்தணியைத் துறந்ததும் வேற்றுமை தெரிந்து கொள்க. சிலப்பதிகாரத்துக் கணுத்திறமுரைத்த காதையில் " சிலம்பு முதலாக வகன்ற கலனோடு வந்த பொருளீட்டுதல் லுற்றேன் " என வருதலான் அறிக. இழந்த மென் பிடியோ - கணவனை யிழந்து வையைபொரு வழிக்கொண்டு மாமலையின் மிசையேறி ஈரேழ் நாட்கப்பால் உயிர்விடுதலான் இழந்து மெல்ல நடந்த பிடிபோல் வாளோ என்றதாம். பாரிமடமகள் பாரி யிறந்தானென்று தெரிந்தபோதே உயிர்நீத்தல் மேலே காண்க இரு

வரும் பூணற்குரியரென்றும் அவருளிவள் புவித்தாயால் உயர்ந்து பூணற்குரியளென்றுங் காட்டியவாறு. (33)

355. தாலிகோடுத்துத் தமிழ்ப்பாணன் பட்டினிக்குச்
சீலி யருத்து திறமிதுவா—னூலின்
வளர்ந்தபுகழ்ப் பாரிக்கு மண்வேந்தர் மூவர்
தளர்ந்ததிறம் பாடுதுமேற் றந்து.

(இ-ள்)—தமிழ்ப்பாணன் - தமிழ் இசைவல்லவன். பட்டினிக்கு-பசி நீக்கத்திற்கு. சீலி - சீலமுடைய பெண். நூலின் வளர்ந்த புகழ் - எட்டுத் தொகை நூல்களில் எல்லாருடைய புகழினும் மேம் பட்டு ஓங்கிய இசை. புகழ்ப்பாரிக்கு மூவர் தளர்ந்ததிறம் - பாரிக்குத் தளர்தலுடன் அவன் புகழ்க்குந்தளர்ந்தது உடன் கூறியவாறு; மூவ ரென்றது ஒருவற்கு மூவர் தளர்தல் அருமை என்பது குறித்தது. மண்வேந்தர் - மண்ணே சுமந்தார் அன்றிப் புகழ் சுமவாதார் என்பது பட வந்தது. புகழ்ப்பாரிக்கு எதிரே மண் சுமந்தார் தளர்ந்தபகுதி மேற்றந்து பாடுதும் எ-று. இம்மண்வேந்தர் பாரியைக் கொன்ற பின்னே மாய்தலால் இவர் நூலின் வளராமை குறித்ததாம். (34)

பொன்றுறந்து புகா நல்குதிறம் முற்றியது.
இத்திறத்திற் செய்யுள் (34)

---

## 8. மூவேந்தர் தளர்ந்த திறம்.

356. ஔவை யகல வடல்வழுதி தன்னுள்ளே
கௌவை யுறவே கருதினு—னொவ்வாத
மாரிக்கே யோப்பேன்று மாண்புலவர் பாடுபுகழ்
பாரிக்கே யெய்தும் படி.

(இ-ள்.)—தன்பால் எய்தி ஔவை யகன்ற வளவில் வழுதி தன் னுள்ளே கருதினன். இஃது ஐந்தாந்திறத்து ஔவை தன்முன்னே வேள்பாரியை உயர்த்துப் புகழ்ந்துபோய செய்தியைக் குறித்தது. அடல்வழுதி - வலியையுடைய பாண்டியன். கௌவை யுறவே கருதினன் - பழியடையவே கருதினன்; பாரிபுகழில் அழுக்காறு கொள் ளுதலான்; இதனுன் இவனுறுவது பழியே என்பது குறித்தது. ஒவ் வாத மாரிக்கே - தான் உவமையாவதன்றித் தனக்கோருவமையில்

[..]த மேகத்திற்கே. மாட்சிமைப்பட்ட புலமையாளர் ஒப்பென்று பா[..] புகழ்மை பாரியொருவற்கே பொருந்துமாறு கருதினான் எ-று. [..]ண்புலவர் ஔவை முதலாகியோர். பாரிக்கே எய்தும்படி என்பதனுட் பாண்டியன் றனக்கு எய்தாதபடியுங்கருதுதல் புணர்த்ததாம். [..]யை மாரிக்கு ஒப்பென்று உவமையாக்கியது மாரியினும் அவனு[..]புதோன்ற என்க. தன்னுள்ளே கருதினானேனும் அவன் மெய்ப்[..]ால் உள்ளக்கிடக்கை பலர் அறியப்படுதலின் அதுவும் கௌவை [..]த்தேயாயிற்று என்று காட்டிற்று. கௌவையுற - துன்பமுற [..]னுமமையும்; "தோன்றல்சான்ற மாற்றோர்மேன்மையும்" (தொல் [..]. அகத்) என்புழித் "தெவ்வர் தன்னின் மிக்காரெனக் கேட்டுழி அழுக்காறு தோன்றலின்" என நச்சினார்க்கினியர் கூறுதல் கொண்டு அரசர்க்குப் பிறர் புகழில் அழுக்காறுண்டாதல் உணர்ந்து கொள்க. (1)

357. சீரிய கூரிய தீஞ்சொற் புலவரேலாம்
பாரியை யேத்தும் படியோர்ந்து—தாரியல்
வேம்ப னுளங்கைத்து வெய்தா வழுக்கறுத்தான்
றேம்ப னிவந்து சினந்து.

(இ-ள்.)—பொருளாற் சீர்த்த, மதியால் நுண்ணிய, சொல்லால் இனிய, புலமையாளர் எ-று. எல்லாம்-தன்னை யேத்த வேண்டிய புலவரும் அடங்குதல் குறித்தது. அவரும் ஒருவரிருவரல்லர் என்க. தாரியல் வேம்பன் - வேம்பு தாராக இயன்றவன். உளங்கைத்து - மனங்கயந்து. தேம்பல் நிவந்து சினந்து - துன்பம் மீதூரவெகுண்டு உளங்கைத்து வெய்தா அழுக்கறுத்தான் : தாரியல் வேம்பன் - புறத்திற் கைப்ப தணிந்தவன் என்பதுபட வந்தது. இவன்உள்ளங்கைப்பதானான் என்பது கருத்து. "இணையலர்வேம்பன்றேரானுகி" (சிலப்-பதி.) என்றது காண்க. (2)

358. தாழ்த்து வனசூழ்ந்தான் றார்வழுதி சான்றோர்வாய்
வாழ்த்து மவமாகா வாறென்னே—பாழ்த்த
வழுக்கா றெனும்பே ரரும்பாவி செய்யா
வழுக்காண் பரிதுலகின் மன்.

(இ-ள்.)—தன்னைத் தாழ்த்தற்குரியவற்றைத்தானே ஆராய்ந்தான். தார்வழுதி - அரசன் என்பது தோன்ற நின்றது. தன்னைத் தானே தாழ்த்துவனசூழ்ந்தான்பாற் சான்றோர்வாய் வாழ்த்தும் அவமாகாவாறென்னே எ-று. சான்றோர் வாய்வாழ்த்தும் அவமாக இவன் தாழ்த்துவன சூழ்தல் குறித்தது. பாழ்த்த அழுக்காறு - எல்லா நன்

மைகளையும் பாழ் செய்த பொறாமை. பேரரும்பாவி - அரும் பெரும் பாவி; அழுக்காறெனு மொருபாவி (குறள்.) என்புழி ஒருபாவி என்றதைத்தழீஇயுரைத்தது. பாவி செய்யா வழூஉலகில் மன் காண்பரிது என்க. எல்லாவழுக்களும் அழுங்காற்றாற் செய்யப்படுவன என்றதாம்.

359. அழுக்காறு மூழ்குவா ரார்தூய ராவா
ரிழுக்கா றதனின்வே றேன்னே—வழுக்காதல்
பெற்றவருந் தாமே பெரும்பிறிதா வார்து
சுற்றமோடு மாய்த்த துணிபு.

(இ-ள்.)—அழுக்காறு - அழுக்குடைய யாறு என்பதுந் தோன்ற வந்தது; சாடு. அழுக்கினராதலன்றி ஒருவருந் தூயராகார் என்க. இழுக்காறு - இழுக்குடைய வழி; அவ்வழுக்காற்றினும் வேறியாதுள்ளதோ. வழுக்காதல் - குற்றமுடைத்தாகியகாமம் : நெறியான காமம் அல்லாமை குறித்தது. பெற்றவரும் என்புழி உம்மை இழிந்தற் கண் வந்தது. தாமே பெரும்பிறிதாவார்—தாமே இறப்பர். ஈது - இவ்வழுக்காறு தம்மைச் சுற்றத்தொடு மாய்த்தல் ஒருதலைபாகத் துணி தந்தது எ-று. ஈண்டுத்தீக்காமத்தையுங் கூறியது இவ்வரசன் பாரி மகளிரை விழைந்தது நோக்கி : இவன் காமத்தின் மேலும் அழுக்காறு டைய னுதலாலிவ்வணங் கூறியபடி. பெரும்பிறிது - சாவு. " அழுக் கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக்கெடும் " (குறள் 166.)என்பதனாற் சுற்றமுங் கெடுதல் கூறப்பட்டது. (4)

360. அறங்கெடுக்கு நான்கு ளழுக்காறு முன்னுந்
திறங்கிளந்த திஃதோன்றே தீங்காப்—பிறங்குவன
வெல்லாம் பிறத்தற் கிடனேன் றுலகறிய
வல்லான் வகுத்த வகை.

(இ-ள்.)—"அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு, மிழுக்கா வியன்ற தறம்" (குறள். 35) என்புழி அறத்தினைக் கெடுக்கு நான் கனுள்ளும் அவாவெகுளி முதலியவற்றிற்கும் முன்னாகும்படி வைத்துச் சொற்றது; இஃதொன்றே - இவ்வழுக்காறொன்றுமே. அறத் திற்குப் பகைபாகிய தீங்காகத் தலையெடுப்பன வெல்லாம் விளைதற்கு நிலமென்று வல்லவன் உலகறிய வகுத்த வகை ஏ-று. " இன் சொலா லீத்தளிக்க வல்லாற்கு " (குறள் 387.) என்புழிப்போல வல் லான் என்பது வன்மை யுடையாற்கு வந்தது. "சொல்லுதல் வல்லா ரார் வுள்ளுவரல் லால் " என்பது திருவள்ளுவமாலை. (5)

361. செவ்வியசீர் வள்ளன்மைச் சீர்ப்பாரி நன்மை
[யேலாம்
வவ்வியபுன் றீங்கா மருண்டுழந்தா—னவ்வியமேன்
னோயுற்று னுள்ளவா நோக்கான் பிறனுனன்
பேயுற்றான் போலப் பிழைத்து.

(இ-ள்.)—செவ்விய - செம்மையுடையன. வள்ளன்மைச்சீர் - கொடைச் சிறப்பு. வவ்வியபுன் றீங்கா - புன்மை வவ்விய தீங்காக. செவ்விய தேர்தலானும் வள்ளன்மையாலும் தீங்கு புகுதற்கு ஆகாமை காட்டியதாம். நன்மையைத் தீங்காக மருளுதலே உவமையால் விளக்குவதுமேல். அவ்வியமென் னோயுற்றான் - அழுக்காறென்னும் பிணி எய்தினன். உள்ளவா நோக்கான் - உள்ளவாறு காணமாட்டான். பேயுற்றான் போலப் பிழைத்துப் பிறனுனன் - பேய் பிடித்தவன் போலத் தவறிப் பிறனொருவன் ஆயினன் என்க. பேயுற்றவன் சொல்வன செய்வன பேயுடையன வாதல் போல அவ்வியமென்னும் மஞ்சள் நோயுற்ற கண்ணினனுதலால் உள்ளபடி காணுது பொருள்களை யெல்லாம் வேறுபடியாகக் கண்டு வேறு சொல்லுஞ் செயலு முடையனுயினன் என்பது கருத்து. (6)

362. மண்மகிழுந் தூய மதிபிரிந்த காமுகருக்
குண்மகிழ்வு செய்யா துடற்றல்போல்—விண்மகிழ
மெய்தழுவும் பாரி விழுப்புகழ்நீ டேள்சுடுமாற்
கைதவனுர் நெஞ்சிற் கடிது.

(இ-ள்.)—மண் மகிழுந்தூய மதி - உலகு மகிழ்தற்குரிய தூய வொளியைச் செய்யுந் திங்கள். பிரிந்த காமுகருக்கு - காமினியைப் பிரிந்த காதலுடையார்க்கு. உள்ளத்தில் மகிழ்ச்சியைப் புரியாது வருத்துதல் செய்தல் போல. விண் மகிழ மெய்தழுவும் பாரி - தேவருலகு மகிழுமாறு வாய்மை மனமொழி மெய்களாற் றழுவிய வேள்பாரி. விழுப்புகழ் - சிறந்த இசை. கைதவனுர் நெஞ்சினுட் கடிது நெடிது சுடும் - பாண்டியனுர் உள்ளத்தினுள்ளே கடிதாய் நெடிதுகாலம் சுடாநிற்கும் எ-று. நெஞ்சினுள் என்றது உள்ளத்தின் மருமத்தைக் குறித்தது. விண்மகிழுமெய் என்றது ஒருவன் வாய்மையைக் காண வல்லது இவ்வுலகினும் தேவருலகு என்பது தோற்றி நின்றது. புகழ் சுடுதலும் மதி சுடுதலும் ஒத்தல் உணர்க. சுடாத இவை சுடுதல் இயற்கை யன்றெனவும் சுடுதலாக நினைவது அவரவர் உள்ள வேறுபாட்டாலெனவும் தெரியக் கூறியபடி. (7)

363. திறையளக்குஞ் சிற்றரையன் றேடிசையா ளுளுந்
தறையளக்கு மாயிற் றரியேன்--முறையளக்குஞ்
செங்கோ லேனதாயுஞ் சீர்த்தியோரு வேளதேன
வெங்கோப மூண்டான் வெறுத்து.

(இ-ள்.)—இப்பாரி சிற்றரசு தனக்குத் திறையளத்தலான் உள்ளது என்பது குறிப்பு, இவன் தேடிய சீர்த்தி யான் ஆள்கின்ற நில வெல்லையை அளந்து கொள்ளுமாயின் யான் மனந்தரியேன் எ-று. முறையளக்குஞ் செங்கோல் - முறைமையினை அளந்து நிறுவுஞ் செவ்விய கோல். கோல் சுமப்பவன் யான், சீர்த்தி பொறுப்பவன் வேள் என்பது கருத்து. வெறுத்து - அவன் சீர்த்தியினை வெறுத்து. வெங்கோபம் - ஆருச்சினம். தரியேன் என வேளதென மூண்டான் எ-று. (8)

364. என்புவியோ வேனே னிசைபொறுப்ப தாவதேன்றன்
றன்புவியோ கந்தேரியேன் சூழ்வதேன்னேன்—றின்
காணு னளப்பில் கடலன்ன செல்வத்து [புடைமை
மாணுன் கவல்வான் மனத்து.

(இ-ள்.)—என்புவி - யான் பொறுத்த நிலனே. ஏனேன் - என்னின் வேறுகிய அயலான். இதனுற் பிறனிசை பொறுப்பதாகிய நிலத்தை யான் சுமந்தேன் என நினைதல் கூறிற்று. தன்பு வியோகம்-துக்க நீக்கம். அளப்பில் கடல் - வளங்களான் அளத்தலில்லாத கடல். அக்கடலன்ன செல்வத்தும் மனத்து இன்புடைமை காணுன் மாணுன் கவல்வான் என்க. மாணுன் என்றது மாணுதல் செய்யின் இன்பமும் உண்டு கவலுதலு மில்லை எ-று. (9)

365. படைக்கோருவ னென்று படைத்தான் பெரும்பேர்
கோடைக்கு மவனென்று கோண்டான்—குடிக்கட்
டோடங்காத மேன்மை தோடங்கி யெமக்கு
ளடங்காமை காட்டினு னல்.

(இ-ள்.)—படைக்கு ஒருவன் - படையை வெல்லுதற்கு ஒப்பில்லாதவன். கொடைக்கும் ஒருவன் - கொடை நல்குதற்கும் ஒப்பில்லாதவன். பெரும் பேர் படைத்தான் - பெரும்பேர் கொண்டான் என ஈரிடத்துங் கூட்டுக. பெருமைக்குரிய பெயர். படைப் பெரும் பேர் - "செருவெஞ் சேஎய் பெருவிறல்" (புறம் 120) என்பன போன்றன

கொடைப் பெரும் பேர் - "பணிகெழு வேந்தரையிறந்து, மிரவலர்க் கீயும் வள்ளியோன்" (ஷை 119.) என்பது போன்றன. குடிக்கண் - வேள்குலத்திடை. தொடங்காத மேன்மை - மூவேந்தர்க்கு இன்னாகிச் சான்றோர்க்கினியனாய மேம்பாடு : "அண்ணல் யானை வேந்தர்க், கின்னா ஞகிய வினியோன்" (ஷை 115) என்பது காண்க. எமக்குள் - எம்போல் வேந்தர்க்குள். அடங்காமை - அடங்கி யொழுகாமை. பெயர் பேர் எனவருதல் "பசப்பெனப் பேர்பெறுத னன்றே" (குறள்-1190) என்புழிக் காண்க. (10)

366. புகழ்தறுகண் கல்வி புகல்கோடையிந் நான்கி
ணிகழ்பெருமி தம்பலவு நேர்ந்தான்—றிகழுங்
குறுமுடிவேந் தாகக் குறித்தா னலன்று
ணுறுமுடிவேந் தாக வுயர்ந்து.

(இ-ள்.)—புகழ் - இசைமை. தறுகண் - உள்ளத்திட்பம். கல்வி - கலையறிவு. புகல் கொடை - விரும்பத்தக்க வண்மை. "கல்வி தறுகணிசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமித நான்கே" என்பது தொல்காப்பியம் (மெய்ப்பாடு.) இந்நான்கின் நிகழ் பெருமிதம் - இந்நான்கினும் நிகழ்கின்ற வீரம். பலவு நேர்ந்தான் என்றது இந்நான்கனுள் ஒரொன்றே ஒருவர்பானிகழ்வதாகவும் இவன் நான்கும் நேர்தற் சிறப்பினைக் குறித்தது. நேர்தல் - உடன் படுதல். குறுமுடி திகழும் வேந்தாகத் தன்னைக் குறித்துக் கொண்டான் அல்லன் என்க. உறுமுடி - பெருமுடி. உறுமுடி வேந்தாகத்தானுயர்ந்து குறுமுடி வேந்தாகக் குறித்தானலன் எ-று. பெருமிதம் வீரமாதல் "கொடை வீரமோ............படை வீரமோ சென்னிபண்பு" என வருதலானறிக. "எல்லாரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் எனப்படும், (தொல். பொ. மெய்ப்பாடு. 9.) எனப் பேராசிரியர் கூறுதல் காண்க. பெருமை மிதம்-பேரெல்லை. குறுமுடி குடியிற் பிறந்தவர் வேளெனப் பெயர் பெறுதல் முன்னரே கூறப்பட்டது. (11)

367. கோலு முடியுங் குடையுங் கோளும்வேந்தர்
போலு மெனத்தனைத்தான் புந்திசெய்தான்—சாலப்
புலவர்க் களித்துப் புகழ்கோள்ளை கோண்டா
னிலவர்க் குளவெல்லா மீத்து.

(இ-ள்.)—கோலை முற்கூறியது "தெரிவு கொள் செங்கோலரசர்க்குரிய" (தொல்-பொ-மர-71.) என்ற சிறப்பு நோக்கி. முடி அர

சர்க்கே சிறந்த அடையாளம். குடையும் கோலும் அளி செய்தற்கும் தெறல் செய்தற்கும் அடையாளமாகும். வேந்தர்போலும் என - பேரரசர் போல்வனென. தான் தன்னைப்புந்தி செய்தான் என்றது பாண்டியன்றான் அவ்வாறு வினையாமை குறித்தது. புலவர்க்குச்சால அளித்துப் புகழ் கொண்டான் எனவும் இலவர்க்கு உளஎல்லாம் ஈத்துப் புகழ் கொள்ளை கொண்டான் எனவுங் கொள்க. இலவர் - வறியர்.

368. சங்கப் புலவர் தலைவன் கபிலனைத்தன்
றுங்கத் துணையாக்கித் தோக்கிருந்தா—னிங்குற்ற
யான்சூடா நின்ற வெழிற்பெரும்பா மாலையெலாந்
தான்சூடா நின்றான் றமித்து.

(இ-ள்.)—என் துங்கத்துணையாய சங்கப் புலவர் எ-று. அவருட்டலைமையணுகிய கபிலனைத் தனக்குச் சிறப்புடைய நட்பினனாக்கி. நொக்கிருந்தான் - அவனோ டொருதன்மையனா யிருந்தான். உற்ற யான் - அவை சூடுதற்கு உற்றபான் எ-று. யான் சூடாநின்ற - யான் சூடாநின்ற எ-று. எழிற் பெரும்பாமாலை - சொல்லானும் பொருளானும் அழகு செய்யும் பெருமைப் பாடற்றொடை. தான் தமித்துச் சூடுகின்றான் எ-று. தமித்து என்றது பாண்டியன்றான் சிலவுஞ் சூடாமை குறித்தது. தான் சூடாநின்றான் என்றது "புலவர் பாடியாணுப் பண்பிற்.........செருவெஞ் சேஎய் பெருவிறல்" (புறம் 120) என்பது பற்றி. (13)

369. நாட்டுத் தலைமை நமதாயு நன்புலவர்
பாட்டுத் தலைமைவேள் பாரியதே—நீட்டுமேவ
னம்புகழைக் கொன்றானு ளுமவன்மேய் கோல்லா
பம்புமுறை யன்றென்றான் பார்த்து. [மை

(இ-ள்.)—புலவர் பாட்டு நன்றலைமை என்க. நாட்டுத்தலைமையினும் அதுவே உயர்ந்தது என்பது கருத்து. நீட்டும் அவன் - கொடுக்கும் அவன். நம் புகழுடம்பினைக் கொன்றான் நாம் அவன் உடம்பு கொல்லாமை நெருங்கிய நீதிமுறைமை யன்று. பார்த்து - புகழுடம்பிற்கும் வெற்றுடம்பிற்கும் உள்ளவேற்றுமையினை ஆராய்ந்து கண்டு என்க. நாட்டுத்தலைமையும் உடம்பும் நிலையாமையும், பாட்டு நன்றலைமையும் புகழும் நிலைத்தலும் குறித்தல் காண்க. (14)

370. இன்னா னிருப்பே யிசையின்மை செய்ததேனக்
கேன்னா வழுக்காற் றிகலினன்—றேன்ன

ளிரவு பகலா விதுவே பிணியாய்ப்
புரவுமுறை தீர்ந்தான் புலந்து.

(இ-ள்.)—இன்னான் - இவன்; தனக்கு இன்னமை செய்பவன் எனினும் அமையும் "அண்ணல் யானை வேந்தர்க்கின்னான்" (புறம் - 115) என்றது காண்க. இசையின்மை - பழி. அழுக்காற்றிகலினான் - அழுக்காறுடைமையாற் பகைத்தான். தென்னன் - தென்றிசையிலுள்ளவன். இரவு பகலா - இரவும் பகலுமாக. உடம்பின் வியாதியாயின் இரவின் மிகுத்துப் பகலிற் குறையும் என்ப. இஃது ஆதியாயப் நெஞ்சப் பிணியாதலின் இரவும் பகலும் ஒத்தல் குறித்தது. புரவு முறை தீர்ந்தான் - காவன் முறைமை ஒழிந்தான். புலந்து - பாரியை வெறுத்து: காவன் முறையினையே வெறுத்தொழிந்தான் எனினும் பொருந்தும். என்னு - என்று. (15)

371\. பாரி யுளவரைக்கும் பாரிற் புகழ்விளைத்த
னோர்வரிய தென்றுண் ணினைந்தனனாய்ப்—போரிற்
றுணிப்பா மெனவே துணிந்தான் வெகுளி
தணிப்பான் விரகில்லான் றன்.

(இ-ள்.)—தன்பாரிற் பாரி உள்ளவரைக்கும். புகழ் விளைத்தல் என்பதனால் இப்பாரி விளைத்தற்குப்பாரி களையாயிருத்தல்குறித்தது: ஏகதேசஉருவகம். வெகுளி - அழுக்காற்றானும் மகண் மறுத்தலானும் உண்டாகிய சினம். தணிப்பான் விரகில்லான் - தணித்தற் பொருட்டு வேண்டிய சதுரப்பாடு இல்லாதவன்; வெகுளி தணித்தற்குச் சதுரப் பாடு வேண்டுவது என்பது குறிப்பு. இத்துணையும் வேந்தர்க்கு இன்னாகிய வாறு விரித்துரைக்கப் பட்டதாம். (16)

372\. உடுவே மதியி னொளிவிஞ்சு மூறு
மடுவே கடலின் வளரும்—அடலில்
நரியே யரியி னனிவீறு மென்னிற்
பெரியோன்வே ளென்னினென்றான் பேர்த்து.

(இ-ள்.)—வேள் என்னிற் பெரியோன் என்னின் - என்னால் * வேளென உரிமை எய்தியவன் அவ்வுரிமையைத்தந்த என்னினும் பெருமையுடையவன் என்று சொல்லப்பெறின். மதியின் உடுவே

* தொல் - பொ - அகத் - ௩௦ ஆம் சூத்திரம். நச்சினார்க்கினியருரை பார்க்க.

ஒளிவிஞ்சும் - திங்களினும் மீன்கணங்களே ஒளியால் மிகுவனவாம். மதியினால் தெளிவுடைய உடுக்கள் அதனினும் ஒளிவிஞ்சும் எ-று. கடலினால் நீரூறும் மடுக்களே அதனினும் நீரான் வளரும் என்க. சிங்கத்தினால் அடுதலில்லாது விடப்பட்ட நரிகளே அதனினு மிக வீறுபெறும் என்க. இவற்றால் வேள் ஒளிபெறுதலும், செல்வமுடையனாதலும் வாழ்தலும் தன்னானே என்பது குறித்தல் கண்டு கொள்க. பேர்த்து விஞ்சும், வளரும், வீறுமென்றான் என்க. பேர்த்து - பெயர்த்து ; திரும்பவும் எ-று. என்னிற் பேர்த்து என இயைப்பினும் பொருந்தும். (17)

373. மகளீதல் செய்யாமை மட்டன் றேனக்குப்
புகழீதல் செய்யாமற் பூண்டோ—னிகழ்வீதேற்
கோன்று துணிப்பதே கோள்கை யேனச்சினத்தா
லன்று துணிந்தா னகத்து.

(இ-ள்.)—எனக்கு மகட்கொடைசெய்யாமை யளவன்று. எனக்கு ஈதல் செய்யாமற் புகழைத்தன் மட்டிற் பூண்டவன் என்க. இகழ்வு ஈதேல் - இகழ்ச்சி யிதுவாயின். கொன்று துணிப்பதே கொள்கை - அவனைக் கொன்று அவன் புகழைத் துணிப்பதே நமக்குரிய கோட்பாடு. அகத்துச்சினத்தால் அன்று துணிந்தான் - உள்ளத்து வெகுளியால் அல்லது துணிந்து கொண்டான். "அளிதோதானே" (120) என்னும் புறப்பாட்டு மகண்மறுத்தற்றுறை என்பதனானும் "வேந்தர்க் கின்னான்" (புறம் 115) என இவனைப் பாடியதனானும் மகளும் புகழும் ஈயாமை கூறப்பட்டது. இவனை வேந்தர் வஞ்சித்துக் கோறற்கு மகண் மறுத்தல் மட்டும் போதாமை உய்த்துணர்க. (18)

374. பாரிக்குத் தேன்னர் பகையேன் றுலகோழுகச்
சேரற்குஞ் சோழற்குஞ் சேய்திவிட்டா—னோரோரு
[வர்க்
கோன்றே யமையு மோருமூன்று குற்றமும்போ
லன்றே யியைந்தா ரவர்.

(இ-ள்.)—தென்னர் என்று பன்மையாற் கூறியது தானேயன்றித் தன்வழியினரும் உறவினரும் அடங்க. உலகுஒழுக - பகைமைக்கேற்றபடி தமிழ்நாடு ஒழுகவேண்டி. செய்தி - பகைமைச் செய்தி. விட்டான் சொல்லிவிட்டான் என்றது விடுமாற்றம் என்பது (குறள் 689) பற்றி. ஒரொருவர்க்கு - ஒரொருவரைக் கெடுத்தற்கு. ஒன்றே

யமையும் - முக்குற்றங்களுள் ஒன்றே போதும், கேடு செய்தற்கண் ஒப்பில்லாத முக்குற்றமும் போல் என்க. முக்குற்றம் - காமம், வெகுளி மயக்கம் ; அவர் - அச்சேரனும் சோழனும். அன்றே இயைந்தார் - அப்பொழுதே ஒருங்கு கூடினர்: "கடந்தடுதானை மூவிருங் கூடி யுடன்றனிராயினும்" (புறம் 110) என்பதுபற்றி இவ்வாறு கூறப்பட்டது. (19)

375\. அவ்விய மென்னு மழலை யகத்தடக்கிச்
செவ்வி வரவிருந்த தேர்வேந்த—ரவ்விருவர்
தாவாத பாரிக்குத் தாமும் பகையெனநா
காவாது சொற்றார் கதழ்ந்து.

(இ-ள்.)—அவ்வியம் - அழுக்காறு. அழல் என்றது காய்தற்றொழில்பற்றி. அகத்தடக்கி-புறங்காட்டாது நெஞ்சத்துவைத்து. செவ்வி - புறப்படவிடற்குரிய அமயம். அவ்விருவர் - அச்சேரனும் சோழனுமாகிய இருவர். தாவாத - புகழாற் கெடாத, வேள்பாரிக்கு. தம் புகழ் கெடச் சொற்றார் ஆதலின் நாகாவாது எனப்பட்டது. கதழ்ந்து-சினந்து; என்றது தமக்குள்ள சினத்தைப் புறந்தோன்றச் செய்து.(20)

376\. கோற்றத்தாற் றண்ணளியாற் கூரொளியான் முச்
[சுடர்போன்
முற்றப்பேர் பெற்றதமிழ் மூவேந்தர்—தேற்றெனத்தா
மாராய மாட்டா ரழுக்காற் றிருள்போதிந்து
சீராய விட்டார் சினந்து.

(இ-ள்.)—முச்சுடர் - ஞாயிறு, திங்கள், எரி. கொற்றம் எரிக்கும், தண்ணளி திங்கட்கும், கூரொளி ஞாயிற்றிற்குங் கொள்க. சேரர் பாண்டியர் சோழர்க்குக் குலத்தோற்றம் முறையே எரியினும், மதியினும், ஞாயிற்றினுங் கூறுதலானு முணர்க. பேர் முற்றப்பெற்ற - புகழ் நிறையப் பெற்ற. தெற்றென - தெளிய. முச்சுடர் போல்வாரேனும் அழுக்காற்றிருள் மூடுதலால், தெளிய ஆராயமாட்டாராயினர் என்றதாம். சினந்து சீராயவிட்டார் - வெகுண்டு தமக்குள்ள சீர்த்த இயல்புகளை ஒழித்தார். தமிழ் மூவேந்தர் - தமிழ் கெழுமூவர் என்பது போல வந்தது. (21)

377\. வெயிலுலாய்த் தீந்த வெறும்பாழ்ங் கடத்துக்,
குயிலுலாய்த் தண்ணென் குளிர்கா—வயில்வாளாற்

கோறல் விழைந்தார் கோடைப்பாரி வேந்தைவேல்
வேறல் விழைந்தார் மிக.

(இ-ள்.)—வெயில்உலாய் - வெயில் நடந்து. தீந்த - எரிந்த. வெறும் பாழ்ங்கடத்து - நீர்வெறிதாகி உணவுபாழ்த்த பாலை நிலத்து. குயில்கள் உலாவிக் குளிர்தற்குக் காரணமான தட்பமுடைய சோலை. அயில்வாளால் - கூரியவாட்படையால். கொடைப்பாரியைக் கொடையால் வெல்லுதல் விழையாது வேலான் வெல்லுதலே மிகவிழைந்தார் ஆகிய மூவேந்தர் பாழ்ங்கடத்துக்கா கோறல்விழைந்தார் ஆயினர் எ-று. பாழ்ங்கடம் கொடையில்லா நிலனாகவும், குயில் புலவராகவும் தண்ணென்கா வேள்பாரியாகவும் குறிக்கொள்க. "நிழலில் நீளிடைத்தனி மரம்போல.........ஈயும்வள்ளியோன்" (புறம் 119) எனப்பாரியைப் பாடுதல் காண்க. வேல் வேறல் விழைந்த வளவே கூறியது "அளிதோதானே பேரிருங்குன்றே, வேலின்வேறல் வேந்தர்க்கோ வரிதே" (புறம் 111) என்றதுபற்றி. (22)

378. தூய நறுந்தடத்தைத் தூர்ப்பா னடுவூருட்
பாய பயமரத்தைப் பற்றறுப்பா—ளய்புலவர்
நாவைச் சிதைப்பா னயந்தனரா னல்வேளிர்
கோவைச் சிதைப்பான் குறித்து.

(இ-ள்.)—தூய்மையையுடைய நல்ல ஊருணியைத் தூர்க்கவும், ஊர்நடுவுட் பரந்துதழைத்த பழமரத்தினை வேரறுக்கவும், ஆராய்ந்த புலமையாளர் நாவினைச் சிதைக்கவும் விரும்பினாராயினர், வேளிர் நற்கோவைச் சிதைக்க நினைந்து நயந்தனர் என்க. வேளிர் கோவைச் சிதைத்தால் அவனது ஊருணிபோற் பல்லோர் உண்டுவாழும் பறம்புநாடும் அவனது ஊர்நடுவுள் பழமரம்போற் பல்லோர் பயன்றுய்க்குங் கோயிலும் சிதையுமென்றும் கோயிலுநாடும் பாரியுஞ் சிதைதலானினிப்பாடுதற்குரியா ரின்மையாற் புலவர்நாச் சிதையும் என்றுங்கருதிக் கூறியவாறும். "தெண்ணீர்ச் சிறு குளங்கீள்வது மாதோ... தேர் வண்பாரி தன்பறம்புநாடே" (புறம் 118) என்பதனால் இவன் பறம்புநாடு குளம்போல்வது உணர்க. வள்ளியோன் இல்லம் பழுமரத்தினை ஒத்தல் "யாணர்ப்பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன வூனொலி யரவந்தானுங் கேட்கும்......பசிப்பிணி மருத்துவனில்லம்" (புறம் 173) என்பதனானறிக. வள்ளியோனைச் சிதைத்தல் புலவர் நாவைச் சிதைப்பதாதல் "அஞ்சொனுண்டேர்ச்சிப் புலவர் நாவிற், சென்று வீழ்ந்தன்றவனருநிறத்தியங்கிய வேலே" (புறம் 235) என்பதனானறிக. ஆய்ந்த

புலவர் ஆய்ந்தநா என்க. ஆய்ந்த அறிவும் ஆய்ந்த சொல்லும் உடைமை கருதிற்று : ' அஞ்சொனுண்டேர்ச்சிப் புலவர் ' என்றது காண்க. (23)

379. மூவேந்தர் வெம்பகையோ மூண்ட தெனத்தினையுங்
கோவேளங் கச்சங் கொளானகிப்—பாவேந்தன்
றூய கபிலனேடு சூழ்ந்து பெருஞ்செருவிற்
காய வேலாநிறைத்தா னுண்டு.

(இ-ள்.)—மூவேந்தர் என்பது பகைக்கப்பட்டவன் ஒருவேள் என்பதுபட நின்றது. பகைத்தவர் வலி தெரிய வெம்பகை என்றதாம். மூண்டது என்பது தீவளர்வது போல வளர்ந்தது குறித்தது. தினையும் அச்சங்கொள்ளான் என்றது வேள் மனத் தறுகண்மை தோற்றி நின்றது. சூழ்தற்கேற்ற தகுதி தெரியப் பாவேந்தன் எனலாயிற்று. பகை நொதுமல் நட்பு என்னு முத்திறத்தும் ஒப்பஒழுகும் உள்ளத்தியல்பு தெரியத் தூய கபிலன் என்றதாம். "உலகுடன் றிரிதரும் பலர் புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன் சூழ" (அகம். 78) என நக்கீரர் பாடுதல் காண்க. வெம்பகைக் கேற்கப் பெருஞ்செரு கருதிற்று. செருவிற்கு ஆயஎலாம் - படையும் அரணும் உணவும் முதலிய பலவும். (24)

380. அடைமதிற்பட் டாலு மருந்திப் பருகத்
தடையதோட் டாமற் சமைத்தான்—படையிற்
குறையுறு வாறுவலி கூட்டினு னென்னர்
தறையுறு வாறுசெய்வே டான்.

(இ-ள்.)—அடைமதிற்படுதல் - மதில் வாயில் அடைபடுதல் ; புறப்படை சூழ்தலால் நேர்வது. பசிக்கு அருந்தி, நீர்வேட்கைக்குப் பருக. தடையது - தடைப் படுத்தியது. ஒட்டாமல் - தன்பாற்பிற் குச்சாராதபடி. படையின் வலி கூட்டினன். படையிற்குறைகை கூட்டலினும் வலி கூட்டலே சிறந்தது என்றது கருதிற்று. உணவும் நீரும் படைவலியும் நிறைதல் போரிற்கு இன்றியமையா தென்க. ஒன்னர் - பகைஞர். பகைஞர் தன் நிலத்திற் பொருந்தா வண்ணஞ் செய்யும் வேள் என்க. "பகைவ ரோடுகழற் கம்பலை கண்ட, செரு வெஞ்சேஎய்" (புறம் 120) என்றது காண்க. (25)

381. வென்றுன் மறந்துணையாய் மேதினியை யாள்வேம்
மன்றே லுடனீத் தறந்துணையாய்—நன்றேகி [யா

யிவ்வுலகேல் லாமேம் மிசையாள வைத்தாள்வே
மவ்வுலகை யென்றான்வே ளாய்ந்து.

(இ-ள்.)—மறந்துணையாய் யாம்வென்றால் என்க. மறம் - வீரம். அன்றேல் - அங்ஙனம் அன்றாயின். தோற்ற உடலைக்கொண்டு வாழாது அதனைத்தள்ளி. நன்று அறந்துணையாயேகி என்க. எம்இசையாள - எம்புகழுடம்பு ஆளா நிற்க. அவ்வுலகை யாள்வேம் என்றான். அவ்வுலகு - வீரசுவர்க்கம். ஆய்ந்து - வென்றி தோல்வி இவற்றின் எய்தும் பயன்களை ஆராய்ந்து. (26)

382. மாரியைக் கோல்ல மதித்தார்போன் மூவேந்தர்
பாரியைக் கோல்லவுளம் பாவித்துப்—போரிற்
றிசைபரப்பி நாற்படையுஞ் சேன்றேற விட்டா
ரிசைபரப்பும் வேண்மே லிகன்று.

(இ-ள்.)—பாரியைக் கோறலும் மாரியைக் கோறலும் ஒத்தல் குறித்தவாறு. போரின் மாரியைக்கோறல் இயலாதவாறு போலப் போரிற்பாரியைக் கோறலும் இயலாமை உடன்றோற்றி நின்றது. போரிற் கோறவில்லாது பாரியை மூவேந்தரும் வஞ்சித்துக் கொன்றது கண்டு கொள்க. (புறப்பாட்டுரை - 112) நாற்படையும் நாற்றிசை பரப்பிச் சென்று ஏறவிட்டார். மலை என்பது தோன்ற ஏற விட்டார் என்றதாம். நாற்றிசையும் இசைபரப்பும் வேள்; வேள் மேல் இகன்று - பாரிவேள்மீது பகைத்தலான் என்க. பரப்பி என்றது "புலந்தொறும் பரப்பிய தேரினிராயினும்" (புறம் 109) என்பதைத்தழீஇவந்தது. (27)

383. கோடைநிரைத்த பாரி கோடுங்குன்றஞ் சூழப்
படைநிரைத்து முற்றினர்பூ பாலர்—தோடைநிரை
வில்லான் மலைந்து விழுமுரச மேற்றிமதக் [த்த
கல்லா னிடித்தார் கனன்று.

(இ-ள்.)—பாரியினது கொடை நிரைத்த குற்றம் எனவும் கொடுங்குன்றம் எனவும் கொள்க. புலவர்க்குக் கொடையும் பகைவேந்தர்க்குக் கொடுமையுஞ் செய்தல் குறித்தது. படை நிரைத்துச் சூழ முற்றினர். நிரைத்தல் - வரிசை செய்தல். ஒவ்வொரு படையும் தனித்தனி சூழ வரிசை செய்து முற்றினர் எ-று. கொடை வரிசை செய்த கொடுங் குன்றத்தைப் படை வரிசை செய்து முற்றினர்

என்பது கருத்து. இக்குன்றஞ் செய்த கொடுமை கொடை வரிசை செய்த தேயாம் எனக் கருதிக் கொள்ளினுமமையும். பூபாலர் - நிலங்காவலர் ; இவர் நிலங்காவல் செய்யும்முறை இஃதென்று இகழ்ச்சி தோன்ற நின்றது. தொடை நிரைத்த வில் - அம்புத்தொடையான் வரிசை செய்வில். விழுமுரசம் - போர்க்கு விழுப்பமுடைய வீரமுரசம். "வென்றெறி முரசின் வேந்தர்" (புறம் - 115) என இப்பறம்பு முற்றிய வேந்தரைக் கூறுதல் காண்க. மதக்கல் - யானை, மதமலை எ-று. கல்மலையாதல் "தென்குமரி வடபெருங்கல்" (புறம் - 17) என்புழிக் காண்க. இப்பகைஞர் யானையான் மலைதல் "மரந்தொறும் பிணித்த களிற்றினிராயினும்" (புறம் - 109) என்பதனானறிக. முற்றினர் என்பது "களிகொண் முரசின்மூவிருமுற்றினும்" (புறம்-109) என்றது பற்றி வந்தது. மலைமேலிருக்கும் படையை எய்ய வேண்டுதலின் வில்லான் மலைதல் கூறிற்று. (28)

384. வெய்ய பறம்பின் விழுத்தாள் வரைச்சார
லைய வரிதி னடைந்தனர்மே—லெய்யப்
படையேற மாட்டாமை பார்த்துத் தெரிந்தார்
தடையேற விட்டபல தாம்.

(இ-ள்.)—தண்பறம்பை வெய்ய பறம்பு என்றது போர் முற்றியது குறித்து. பகை வேந்தர்க்கு வெய்ய பறம்பு எனினும் அமையும். தாள் வரை - பாதசைலம். அதன் விழுச்சாரல் என்க. ஐயஅரிதின் - வியக்கத்தக்க அரிதின். அடைதலருமையின் வியக்கத்தக்கதாயிற்று. மேல் எய்ய - மிசையுள்ளாரை அம்பால் எய்தற்கு. படையாளர் ஏற இயலாமை தாம் பார்த்து ; ஏறத் தடையாக இட்டபலவுந் தெரிந்தார். விழுத்தாள்வரை என்றது தொழப்படுதல் நோக்கி எனினும் அமையும். "தொழுது நிற்பழிச்சிச், சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே" (புறம் - 113) என்பதனான் இம்மலை தொழப்படுதல் காண்க. "பாரி பலவுறுகுன்றம் போலப் பெருங்கவி னெய்திய வருங்காப்பினனே" (நற்றிணை -253) என்பதனால் இம்மலை அருங்காப்புடையது பற்றி ஐய வரிதினடைந்தனர் எனலாயிற்று. (29)

385. அடிபற்ற லன்றி யடல்வேள் பறம்பின்
முடிபற்ற றேவர்க்கு முற்று—தொடியா
மறங்காவல் பூண்டதலான் மண்டலிகர்க் காகா
வறங்காவல் பூண்ட தது.

(இ-ள்.)—அடி - தாள்வரை. முடி - உச்சிவரை. உச்சிவரைக்கு அண்மித்தாயுள்ள விண்ணிலுள்ளார்க்கு கிறைவேறாது. வேள் அடி பற்ற லாவதன்றி வேள் முடி பற்றல் தேவர்க்கு முற்றாது என்பதுந் தொனிக்க உடன் புணர்த்தியவாறு காண்க. தேவர்க்கு முற்றாதாக இம்மூவர்க்கு முற்றுவதியாங்ஙனம் எ-று. ஒடியாமறம் - போரின் உடையாத வீரம். மண்டலிகர் - மும்மண்டலங்களையு முடைய வேந்தர். அவர்க்கும் ஆகா அறங்காவல் பூண்டது என்றது "பணிகெழு வேந்தரை யிறந்து, மிரவலர்க்கீயும் வள்ளியோன்" (புறம் - 119) என்பதுபற்றி: "வண்மகிழ்ப்பாரி, பலவுறு குன்றம் போலப், பெருங் கவி னெய்திய வருங்காப் பினளே" என நற்றிணையின் (253) வருத லான் அறிக. இதன் வண்மையாலாய மகிழ்ச்சியையுடைய பாரியின் பலா மிக்க மலைபோலத் தலைவி பெரு வனப்பெய்தியவளென்றும் அரிய காவல் உடையளென்றுங் கூறுதலான் அறமும் மறமும் விஞ்சுதல் குறிக் கொள்க. (30)

386. படையேற மாட்டாப் பறம்பு கோளுதற்
கிடையூ றுளங்தேர்ங் திகல்வோர்—புடையிற்
படைமதிலாச் சூழ்ந்து பனிமலையைத் தட்ப
வடைமதிலா யிற்று லரண்.

(இ-ள்.)—தடையானும் உயரத்தானும் நெறியருமையானும் படையேறமாட்டாப் பறம்பு எ-று. கொளுதற்கு இடையூறு - பாரி படைமேனின்று எதிருன்றுவது. இகல்வோர் - இகலும் வேந்தர். புடையில் - எயிற் பக்கத்து. படை மதிலாச்சூழ்ந்து - தம்படைகளை யே அசையா மதிலாக வைத்து முற்றி. பனிமலையைத்தட்ப - குளிர் மலையைத் தடை செய்ய. அடை அடைமதிலாயிற்று எ-று. (31)

387. போக்கு வரத்துப் புரியாமல் வண்பறம்பைத்
தாக்கு படையாற் றனியடைத்தா—ராக்கு
முணவும்பல் பண்ணியமு முட்புகா தோம்பத்
தணவும் வலியேன்னத் தாம்.

(இ-ள்.)—எயிற்குப் புறம் போதலும் உள்வருதலும் செய்யாது அடைத்தது தீது என்பது தோன்ற வண்பறம்பு எனப்பட்டது. தாக்கு படை - நின்ற நிலையிலும் எயிலை மோதும் படை என்க. தனியடைத்தார் - எயில் தனியாக அடைத்தார். ஆக்கும் உணவும் பல் பண்ணியமும் - மக்களை உளவாக்கும் உணவுகளும் அவ்வுணவிற்

குரிய பல பண்டங்களும். உட்புகாது ஓம்ப - உள்ளே புகாமற் பரிகரிக்க. வலிதணவும் என்னத்தாம் அடைத்தார் என்க. பண்ணியம் - பண்டம். "பண்ணிய மட்டியும்" (பட்டினப்) எனவும் "மலையவுங் கடலவும் பண்ணியம் பகுக்கும்" (பதிற் - 59) எனவும் வருவன கொண்டு அறிக. மறந்தாற் கோறல் அரிதாகப் பசியாற் கோறல் கருதினரென்பது குறித்தவாறு. (32)

388. நாடு தருபண்ட நண்ணு தடைத்திகல்வோர்
நீடு பலவாண்டு நின்றதனுற்—றேடு
பொருளுங் குறைந்து புகாவின்றி வீரர்
மருளும் வறுமை வர.

(இ-ள்.)—நகர்க்கு நாடுதரு பண்டம் எ-று. பலவாண்டு இகல்வோர் நீடு நின்றதனுல் என்க. "யாண்டு பல கழிய" என்றூர் அகத்தினும் (78) தேடுபொருள் - உணவிற்குத் தேடிய பண்டங்கள். புகா - உணவு. வீரர் மருளும் வறுமை வர - மருளாத வீரர் மன மருளுதற்குக் காரணமாய் வறுமை வரா நிற்க எ-று இப்பாட்டு குளகம். (33)

389. ஆயும் விறல்வே ளறிவா னழுக்கற்ற
தூய கபிலனொடு சூழ்ந்துகோடு—சேய
புனத்து விளைகதிரைப் போய்க்கோணரக் கிள்ளை
யினத்தைப் பயில்வித்தா னென்று.

(இ-ள்.)—இதற்கு என் செய்வதென்று தன்னுள் ஆராயும் வலியுடைய வேள்பாரி. அறிவானழுக்கற்ற என்றது "புலனழுக்கற்ற வந்தணாளன்" (புறம் 126) என்பது பற்றி. தூயகபிலன் - ஒழுக்கத் தாற்றூய்மையுடைய கபிலன். சேயபுனத்து விளைகதிர் - சேய்மைக் கணுள்ள புனங்களில் விளைந்த கதிர்கள். கிள்ளையினத்தை - கிளிக் கூட்டங்களை. பயில்வித்தான் - கற்பித்தான். புலனழுக்கற்றுத் தூயன் ஆயின் அவன் விலங்குகளையும் பயில்விக்க வல்லனுவன் என்பது தோன்றக் கூறியது காண்க. இவ்வரலாற்றை "உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன் சூழச்சேய் நின்று, செழுஞ் செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு, தடந்தாளாம்பன் மலரொடு கூட்டி, யாண்டு பலகழிய வேண்டுவயிற் பிழையாது" (78) எனவரும் அகப்பாட்டானும் அதன் பழைய வுரைகாரர் "கபிலன் சூழ என்றது பாரியை அரசர் மூவரும் வளைத்திருப்ப அகப்பட்டிருந்து, உணவில்

லாமைக் கிளிகளை வளர்த்துக் கதிர் கொண்டுவரவிட்ட கதை '' எனக் கூறியதனானும் உணர்க. இதுவே ஔவையாரானும் "உரைசால் வண் புகழ்ப்பாரி பறம்பி,னிரை பறைக்குரீஇ யினங் காலைப்போகி, முடங்கு புறச் செந்நெற்றரீஇயரோராங், கிரைதேர் கொட்பினவாகிப்பொழுது படப், படர்கொண்மாலைப் படர்தந்தாங்கு '' (அகம் - 303) என்பதனாற் கூறப்படுதல் காண்க. (34)

390. தெளிந்த கிளிக்கணங்கள் சேட்புனத்திற சென்று
வளைந்த விளைகதிர்கள் வவ்விக் —குளிர்ந்தபறம்
பெய்தப் பலகா லிரும்போர் குவித்துணவு
செய்தப் படைகாத்தான் றேர்ந்து.

(இ-ள்.)—கபிலன் பயில் வித்தலைத் தெளிந்த கிளியினங்கள். சேட்புனம் - சேய்மைக் கணுள்ள விளை புனங்கள். விளைதலான் வளைந்த கதிர்கள். குளிர்ந்த பறம்பு - தண்பறம்பு. மாலையின் வருதலாற் குளிர்ந்த பறம்புமாம். பலகால் - பலதரம். இரும்போர் - பெரிய கதிர்ப்போர். தேர்ந்து - உணவின்றியமையாமை தெளிந்து. தன்னைக்காக்கும் படையைத் தான் காத்தவாறு கூறியதாம். போர் வளர்த்த வேந்தரெதிரே பாரி போர்வளர்த்த வாறிஃது எ-று. (35)

391. இவ்வண்ணம் பன்னா ளினிதேகப் போர்வேந்தர்
செய்வண்ணந் தேறார் திகைக்கும்போ—துய்வண்ண
மீதென்று காண விகலரசர்க் கோதினான்
றீதொன்றி லாக்கபிலன் றேர்ந்து.

(இ-ள்.)—இவ்வாறு பலகாலம் பாரிக்கு இனிதாகக் கழிய. வேந்தர் போர் செய்வண்ணந் தேறார் - அரசர் போர் செய்யும் வகையைத் தெளியார். திகைக்கும்போது-மனமயங்கும் அமயம். உய்வண்ணம் ஈது - நீவிர் பிழைக்கும் வகை இஃது. இகல்அரசர்க்கு - பகைவேந்தர்க்கு. தீதுஒன்றுஇலாக் கபிலன் தேர்ந்து ஓதினான் - தன் நெஞ்சத்து ஒருதீதும் இல்லாத கபிலன் றெளிந்து சொற்றான். இவன் சொற்றதே கொண்டு தீது செயப்படுதலின் நெஞ்சத்தீது தீதின்மை குறித்தது. இகலரசர் ஆதலினிவன் கூறியது கொண்டு தீதுபுரிந்தனர் எ-று. (36)

392. மறம்புகன்ற மூவிர் வலியெல்லாம் சூழ்ந்தும்
பறம்பு கோளற்கரிது பார்த்தீ—றறம்புகன்ற

வெம்போ லிரப்பீரே லின்னுயிரு மீயும்வே
ணும்போ ரினுக்குதவா னேன்று.

(இ-ள்.)—மறம் புகன்ற மூவிர் - வீரத்தை விரும்பிய மூவேந்தர். படைவலியும் துணைவலியும் அடங்க வலியெல்லாம் என்றதாம். சூழ்ந்தும் - சூழவிருந்தும். பறம்பு கொளற்கரிது என்றது "கடந்தடு தானை மூவிருங்கூடி, யுடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே" (புறம்-110) என்பதைத் தழீஇ யந்தது. பார்த்தீர் என்றது யாண்டுபல கழிதலாற் கண்டீர் எ-று. அறம்புகன்ற எம்போலிரப்பீரேல் - தருமத்தை விரும்பிய எம்மைப்போல் இரந்து வருவீரேல். இன்னுயிரும் ஈயும் - இப்பறம்பேயன்றி எமக்கெல்லாம் இனிய அவனுயிரையும் ஈவன். உயிரும் என்றதன் கணுள்ள உம்மை குன்றீதலைத்தழீஇயிற்று. எம்போலிரத்தல் - புலவராகிய எம்மைப்போற் பாடியிரத்தல். இன்னுயிர் என்பது பாரி உயிரேயன்றி அப்பாரிக்கு இன்னுயிராயுள்ள கபிலனாகிய தன்னையும் ஈவன் என்று கொள்வதும் பொருந்தும் "யாமும் பாரியுமுளமே, குன்று முண்டுநீர் பாடினிர் செலினே" (புறம் - 110) என்றதனால் இவ்வுண்மை யுணர்க. பாரியுளன் என்றது பாரிதன்னையீதற்குஉளன் எனவும் யாம்உளம் என்றது அவனீதற்கு யாமும் உளம் எனவும் குன்றமுண்டு என்றது இங்ஙனமல்லாது பொருள்வேண்டின் இம்மலையுண்டு எனவும் கூறுதல் காண்க. னோன்று உதவான் - வலி பொறுத்தலான் போரிற்கு உதவமாட்டான் என்க. (37)

393. சுனையுண்டு தேனுண்டு சூழ்ந்துகிளி நல்குந்
தினையுண்டு வேய்நெற் றிரளுண்—டினிய
வருக்கைச் சுளையுண்டு வள்ளிக் கிழங்குண்
டிருக்கத் தகும்படையோ டேன்று.

(இ-ள்.)—சுனையுண்டு - வேட்டுழிப் பருகற்கு நீர் வற்றாத சுனையுண்டு. இதனாற் றாரகம்உடைமை குறித்தார். இனி நால்வகை உணவும் கூறுகின்றார். தேன் - பருகுவது. கிளிநல்குந்தினையும், இயற்கையின் மலையின் விளையு மூங்கில் நெற்குவியலும் உண்பன. வருக்கைச்சுளை - பலாச்சுளை. இனியசுளை என்றதனால் அவிந்த சேற்றால் நக்குவது என்க. வள்ளிக்கிழங்கு - தின்பது. ஏன்று - நும்மை எதிர்ந்து: படையோடு இருக்கத்தகுவன எ-று. படையோடு என்றது இப்போது அதற்குள்ள உயர்த்தி குறித்தது. சுனையுண்டு என்றது "மீன் கணற்றதன் சுனையே" (புறம் - 109) என்பது பற்றி. பிற "உழவருழாதன நான்கு பயனுடைத்தே" (ஷை ஷை) என்று

கூறியவற்றைத் தழீஇயின. கிளி நல்குந்தினையுண்டு என்றது 78-ஆம் அகப்பாட்டுரையைத் தழீஇயது. (38)

394. தண்பறம்பு நாட்டுத் தழைத்தவூர் முந்நூறும்
வண்புலவர் பெற்று மகிழ்கூர்ந்தார்—பண்புடைய
பாரிமுன்போய்ப் பாடிப் பறம்புப் புகழ்மலையை
நீரிரந்து கோள்வீர் நினைந்து.

(இ-ள்.)—தண்பறம்பு நாடாதற் கேற்பத் தழைத்தவூர்கள் கூறப்பட்டன. பெற்றவரை வண்புலவர் என்றது அவர் ஊர் பெற்றதனாற் பிறர்க்கீயும் பெருஞ் செல்வராயினமை கருதி. பண்பு - பாடறிந் தொழுகும் தன்மை. "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" (கலி - 133) என்ப. பண்பு - மக்கட் பண்பு. பறம்புப் புகழ்மலை என்றது "பெரும் பெயர்ப் பறம்பு" (புறம் - 113) என்பதுபற்றி. நினைந்து கொள்வீர் - இதுவே தருவதென்று உணர்ந்து இரந்துகொள்வீர் என்க. இது பல்புலவர் பெற்றவழி யென்று காட்டியவாறு. (39)

395. பாழிற் பொருவீர் பயனெய்தீர் கோடியர்போல்
யாழிற் பருக விசைதொடுமி—னேழிசையிற்
பாடினீ ராடினீர் பார்மூவிர் நண்ணுவிரே
னுடுநீர் கோள்வீர் நயந்து.

(இ-ள்.)—பொருகின்றீர் பொருது பாழ் செய்தலிற் பயனெய்த மாட்டீர். கோடியர் போல் - யாழ்ப்பாணர் போல்: யாழின்கண் இசையைப் பருகும் வண்ணந் தொடுவீர் ஆகுக: மெலிவும், வலிமையும், சமனும் ஆக விரலாற்றெருடுதலான் உண்டாவது இன்னிசையாதலால் பருக இசைதொடுமின் எ-று. அவ்யாழிற் கொத்து ஏழிசையினும் பாடி அவ்விசையிற் சீர் பாணி, தூக்கிற்கு இயைய ஆடிநண்ணுவீரேல் என்க. ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. பார்மூவிர்-உலகுடைய மூவிர். நீவிர் மூவிராதலால் யாழிற்கும், பாடற்கும், ஆடற்கும் பிறர் மூவரைத் தேடவேண்டா என்பது குறிப்பு. யாழிற்குப் பாண்டியனையும் பாடற்குச் சென்னியையும் ஆடற்குச் சேரனையுங் கருதினரென்க. "கூடலிலைய்ந்த.......ஏழிசைச் சூழல்" (திருக்கோவை - 20) எனவும். "ஏழிசை நூற்சங்கத்திருந்தானும்" (நளவெண்பா) எனவும் வருதலானும் * இசை நுணுக்கம் கேட்டவன் மரபாதலானும் பாண்டியற்கு

* சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம் பார்க்க.

யாழ்வன்மை கொள்க. சென்னி என்ற பெயரொற்றுமையாற் சோழர்க்குப் பாடல் வன்மை கருதுக. சென்னி என்பது சோழற்கும் பாணற்கும் பெயர். "செவ்வரை நாடன் சென்னியம்" (பெரும் பாண்) 'ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்' என்னும் பெயரானும் இவன் "கோடியர் முழவின் முன்னராடல் வல்லானல்லன்" (பதிற்று-56) எனப்பாடப்படுதலானும் "ஆட்டனத்தி வஞ்சிக்கோன்" என்பதனானும் இச்சேர குலத்தவர் ஆடல்வன்மை யுணரலாம். "சுகிர்புரி நரம்பின் சீரியாழ்பண்ணி, விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர, வாடினிர் பாடினிர் செலினே, நாடுங்குன்று மொருங்கீயும்மே" (புறம் - 109) என்று கபிலர் பாடியது காண்க. (40)

396. பாராளு மூவிர் பரிசிலர்தாம் வேண்டிடத்து
வாரேனே ஞம லவர்வரையன்—பாரி
யவனுண் டியாமுண் டரும்பறம்பு முண்டா
லேவர்வேண்டி ஞலு மிட.

(இ-ள்.)—பாராளு மூவிர் என்றது பரிசிலர் வேண்டியது தந்து ஆளமாட்டீர் என்பது குறித்தது. பரிசிலர் தன்னை வேண்டிய இடத்து என்க. பாரி வரமாட்டேன் என்று வாயானுஞ் சொல்லாமல் அவரெல்லையிலிருப்பன். அவன் உண்டு - அங்ஙனம் யாவர் எதை வேண்டினும் இடுதற்கு அத்தகையன் உளன் : யாம் உண்டு என்றது கபிலர் தம்மொடு பாரிமகளிரையும் உளப்படுத்தியதாம். அரும்பறம்பு - நும் போரினுக்கரியபறம்பு : "பறம்பு கொளற்கரிதே" (புறம் - 110) என்றது காண்க. விலங்கொள வெஃகிய வேந்தர்க்குப் பறம்பு விழைவு செய்தலான் பறம்புண்டெனவும், அவர் பாரிமகளிரையும் புலவரையும் விழைதலான் யாமுண்டு எனவும், பாரியைப்பற்ற வினைதலான் அவனுண்டெனவும் கூறினரெனவறிக. "யாமும் பாரியு முளமே, குன்றுமுண்டு நீர் பாடினிர் செலினே" (புறம் - 110) என்றது காண்க. எவர் வேண்டினும் - மூவருள் யாரெது கேட்பினும் இட உண்டு என்க. மூவரை நோக்கிக் கொடைப் பொருளும் மூன்றாகக் கூறினர். (41)

397. நீடி வளைந்து நெடுங்கால மூவிருமே
கூடி யுடன்றுங் கோளற்கரிதே—பாடிப்
பரிசில் பெறற்குப் பறம்பேளிதேன் றுய்த்தான்
கரிசில் கபிலன் கவி.

(இ-ள்.)—நீடி - இடத்தால் நெடிது நின்று. வளைந்து - சூழ்ந்து முற்றி. மூவிருமே கூடி என்றது முன்னெல்லாம் கூடாது பகை கொண்ட மூவிர் என்பது படவந்தது. உடன்றும் - போர்புரிந்தும். அரிதே - ஏ தேற்றம். பறம்பு பரிசில் பெறற்கு எளிது - பரிசிலாகப் பெறுதற்குப் பறம்புமலை எளியது. கரிசில் கபிலன் - இங்ஙனங் கூறுதற்கணுள்ள குற்றங்களை நினையாத கபிலன் எ-று. என்று கபிலன் கவியுய்த்தான் - எளிதென்று கபிலன் கவியோலை விடுத்தான். இக்கவியோலை கிளிவாய்க்கொண்டு விழ விட்டதுமாம், எயிற் புறத் தெறிந்து செலவுய்த்ததுமாம். (42)

398. போய்பெய் திலாத புகழ்க்கபிலன் பாத்தோர்ந்து
நெய்பெய்த தீயி னிகராக—வெய்துகிளர்ந்
தெப்பாலும் வெம்படைமே லேற்றினா் மூவேந்த
ரிப்பா னிகழ்ந்த திது.

(இ-ள்)—" உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன் " (அகம் - 78) என்பதுபற்றிப் பொய்பெய்திலாத புகழ் எனப்பட்டது. பொய் பெய்திலாத பா எனினுமமையும். நெய் பெய்த தீயிற் கிளர்ந்து. வெய்து கிளர்ந்து - வெம்மையிலெழுந்து. வெம்படை - கொடும்படை. மேலேற்றினர் - மலைமேலேறச் செய்தனர். மேலேற்றினர் - நிலத்துள்ள படையை விண்ணேற்றினர் என்பது சாடு. (43)

399. பூக்கோ ளறைந்து புனல்படிந்து போர்வேட்டு
மாக்கோ ளரியேற்றின் வாண்மறவர்—மீக்கொள்ளக்
காவலெயின் ஞாயிற் கடைப்படிக்கா லேறியிகல்
யாவும் விழிக்கண்டா னேன்று.

(இ-ள்.)—பூக்கோள் அறைந்து - போர்க்குரிய பூவைச்சூடிக் கொள்ளுதற்குப் பறைபறைந்தவளவே. புனல் படிந்து - தான் புனலிற் றோய்ந்து. போர்வேட்டு வாண் மறவர் மீக்கொள்ள என்க. போர் வேட்டுப் புனல் படிந்து எனினுமமையும்; "பூக்கோளென வேஎய்க் கயம்புக்கனனே" எனப் புறப்பாட்டின் (341) வருதல் காண்க. மாக்கோளரி - பெரிய தீங்கிழைக்க வல்ல சிங்கம். மீக்கொள்ள - எயின் மேற்கொள்ள. காவலெயில் ஞாயிற்கடை - காப்பாகிய கோட்டையின் சூட்டினிடத்து. படிக்காலேறி - ஏணியாலேறி. என்று இகல் யாவும் விழி கண்டான் - எதிர்ந்த பகை முழுதையும் தன் விழியானே றிற் கண்டான் எ-று. எயில் ஞாயிலும் புழையுமாக உச்சியிலமைக்கப்

பட்டதாதலின் எயிலேறி ஞாயிலின் மறைந்து புழையின் வாயிலாகக் கண்டான் என்க. ஞாயில் - சூட்டு. "மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி, மன்ற வேம்பி னொண்குழை மலைந்து, தெண்கிணை முன்னர்க் களிற்றினியலி, வெம்போர்ச் செழியனும் வந்தனன்" (புறம் - 79) எனவரும் புறப்பாட்டானும் அதன் நல்லுரையானும் போர் புகுவார் நீராடிப் பூச்சூடுதல் உணர்க. (44)

400. வானேற லுற்றார்போல் வாழ்பறம்பி னீள்சிமைமேற்
றானேற லுற்ற சமர்ப்படைவேள்—கோனேகண்
டின்னே யழிக்க விவர்திரளை யென்றானாற்
றன்னேரி லாநற் றகை.

(இ-ள்.)—வான் ஏறலுற்றார்போல் ஏறலுற்ற சமர்ப்படை என்க. வாழ்பறம்பின் என்றது வாழ்தற்குரியதை அழித்தல் குறித்தது. நீள்சிமைமேல் - நீண்ட உச்சியின்மேல் : "சேட்சிமை...நாடே" என்பது (புறம் - 120). நீள்சிமை என்றது ஏறற்கரிது என்பது குறித்தது. வான் ஏறலுற்றார் போல் என்றதனால் இச்சமர்ப்படைஞர் கீழ்மீளாமை கருதிற்று. வேள்கோனே கண்டு என்றது ஆள்வாயிற் கேளாது நேரே காண்டல் கினைந்தது. இன்னே - இப்பொழுதே. இவர் திரளை - இவராகின்ற கூட்டத்தை. நற்றகைமைக்குத் தன்னேரில்லாதவன். வாழ்பறம்பை யழிக்க இவர் திரளையழிக்க என்றலாற் றகைமை குறையாமை குறித்தவாறும். (45)

401. பறம்பை யடைத்தகொடும் பாவியரிம் மூவர்
திறம்பி யிகலிற் சிதைய—விறும்பின்
வரையிற் பெருங்கற்கள் வார்ந்துருளச் செய்கென்
றுரையி னிடித்தா னுருத்து.

(இ-ள்.)—போர் புரியலாற்றாது பறம்பை யடைத்துப் பசியாற் கொல்ல முயறலாற் கொடும் பாவியர் எ-று. அந்தணர், சான்றோர், பெண்டிர், குழவி, ஆனினம், எல்லாம் பசியான் மடியப்புரிதலாற் கொடும் பாவியர் என்றான். இம்மூவர் திறம்பி இகலிற்சிதைய-இப்பகைமையிற் சிதைந்து இம்மூவேந்தர் திரும்ப என்றும் கொள்க : இம்மூவர் என்றது இச்சிற்றளவினர் சிதைதல் பலர் சிதையாமைக்கேது என்பது குறித்தது. இறும்பின் வரையில் - குறுங்காடுகளையுடைய மலையில். இன் - சாரியை. பெருங்கற்கள் வேண்டியது படைப் பெருமையையும், விரைந்துருண்டு அரைத்தலையுங் கருதி. வார்ந்துருள என்

றது கல்லருவியாக ஒழுக உருட்டுதலை நோக்கிற்று. உருத்து - பகையை வெகுண்டு : உரையினிடித்தான் - இடி முழங்குதல் போல் உரைத்தனன். (46)

402. கல்லிடியை யாயிரமாக் கார்வானம் பெய்ததெனச்
சொல்லிடியாற் பொங்கியபல் தொன்மறவ—ரேல் [லாம்
பறம்பின்மே னின்றுபெரும் பாறைகளை வீழ்க்க
மறஞ்சிதைந்தார் மூவர் மருண்டு.

(இ-ள்.)—கார்வானம் இடியிற் கல் பெய்தல் ஒரோர் காலத்துண்டாம். கல்லிடியை - இடியிற் கற்களை. சொல்லிடியால் - வேள் இடி போன் முழங்கிய சொல்லால். தொன்மறவர் - மூதிற்குடி வீரர். வீழ்க்க - வீழச்செய்ய. மூவர் மனமருண்டு தம்வீரஞ்சிதைவுற்றனர்.

403. யானை யுருட்டி யிரும்பரியைத் தேய்த்துத்தேர்த்
தானை யனைத்துந் தலைசாய்த்துச்—சோனைக்
கணைவீரர் மெய்யைக் கடுஞ்சேறு கண்ட
விணைவேறில் கற்க ளிவை.

(இ-ள்.)—யானைப்படையைத் தலைகீழாக உருள்வித்து, பெருங்குதிரைப் படையைத் தேயச் செய்து என்க. தானை என்றதனை யானைக்கும் பரிக்கும் ஒட்டுக. தேர்த்தானை அனைத்தும் என்றது பாகனும் குதிரையும் தேர்வீரரும் தேர் தலைசாய்தலிலே பாய்தல் குறித்தது. சோனைக்கணை வீரர் - சோனைமாரி போற் பெய்யுங்கணையினையுடைய காலாட்படை வீரர். கடுஞ்சேறு கண்ட - கடிய சேறாகச் செய்தன. வேறு இணைஇல் கற்களிவை - நாற்படையுங் கெடுதற்குத் தாமே போதுமாதலால் தமக்கு வேறுபடை எதுவும் ஒப்புஇல்லாத இக்கற்கள் எ-று. (48)

404. கையோ வயிறோ கழுத்தோ வடியோவன்
மெய்யோ பழுவோ விழுத்தலையோ—வையோர்
சிதையாத வோருடலைத் தேர்ந்தோருவர் காணி
னதுவே வியப்பிற் றவண்.

(இ-ள்.) —விழுத்தலை - ஐம்பொறியுமுடைமையாற் சிறப்புடைய தலையோ. வன்மெய் - வலியமார்பு. படையேந்துதலாற் கையும்

எல்லா வுறுப்பையுங் காத்தலான் வயிறும் சிறந்த தலையை யேந்தலாற் கழுத்தும் எல்லாவுறுப்பையும் ஏந்தலான் அடியும் இருதயம் உடைமையான்வன்மெய்யும் என்புதோல்போர்த்தவுடம்பாதற் சிறப்பான் பழுவும் எல்லாவற்றினும் தலைமையுடைமையால் விழுத்தலையும் கூறப்பட்டன. ஐயோ என்றது இரக்கக் குறிப்பு. அவண் சிதைவுறுத உடம்பொன்றினை ஒருவர் தேர்ந்து காணின் என்றது, காண வியலாமை குறித்தது. கல் இங்ஙனஞ் செய்தது வியப்புடைத்தன்று. காண்டற்சரியதைக்காணின் வியப்பிற்று எ-று. "சிலவரைக்கண் சிலவரைக்கழல், சிலவரை நாசி" முதலியன சிதைக்குங் கணைகள் போலாமலிக்சற்கள் உடன் முழுதுஞ் சிதைத்தல் குறித்தது. (கம்பர்-யுத்த-கும்ப 226-ம் பார்க்க) ஒருடல் - முழுஉடம்புமாம். (49)

405. சாய்ப்புண்ட தேர்த்தோகையுந் தாளற்ற வேங்களிறு
மாய்ப்புண் டேல்சிதைந்த வண்பரியுங்—தேய்ப்பு
காலாளு மாகக் களங்கிடக்க வோடியுய்ந்தார் [ண்ட
மேலோ ரோருமூவர் மீண்டு.

(இ-ள்.)—தாளற்ற வெங்களிறு - முயற்சியற்ற வெய்யகளிறு. வெங்களிறு - முயற்சியற்ற நிலையிலும் பார்ப்பார்க்குத் தோற்றத்தால் வெம்மை விளைப்பது கருதிற்று. மாய்ப்புண்டு தாளற்ற என யானைக்கும் ஒட்டுக. வண்பரி என்றது பேரரசர் வளர்த்த வளங்கெரிய நின்ற குதிரை எ-று. "நெய்ம்மிதியருந்திய கொய்சுவ லெருத்திற் றண்ணடை மன்னர் தாருடைப்புரவி" (புறம் - 299) என்பது காண்க. களங்கிடந்தன இந்நான்கும் எ-று. ஓடியுய்ந்தார் - ஓடா தொழியின் அவர் உடலும் இவ்வாறாகும் என்பது குறிப்பு. மூவர் ஓடுதல் "பகைவ ரோடுகழற்கம்பலை கண்ட செருவெஞ்சேஎய்" (புறம் 120) என்பதனுன் அறிக. மேலோர் - போரிலோடாத மேன்மையினர். ஒருமூவர் - தமக்கு ஒப்பில்லாத மூவர். மீண்டு போரினின்று திரும்பி. புறப்பாட்டில் (116) "பாரிய தருமையறியார் போரெதிர்ந்து வந்தவேந்தர்" என்று கூறியதனையும் "வென்றெறி முரசின் வேந்தர்" (புறம் - 112) என்றது ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது என்ற புறப்பாட்டுரையையும் நோக்கி மூவரோடி யுய்தல் உணர்க. (50)

406. பாரிக்கு மூவர் படையிற் றளர்ந்ததிற
மோர்வுற்ற வாறே யுரைத்தேமாற்—சோர்வுற்ற
நெஞ்சத்தோ டோதுதுமே னேரார்வண் பாரியுடல்
வஞ்சத்தாற் கோன்ற வசை.

(இ-ள்.)—மூவர் படையிற்றளர்ந்த திறம் - கொடையிற்றளர்ந்த திறம், இதற்கு முன்னேதிப் படையிற்றளர்ந்தபடி வுரைத்தேம். ஓர்வுற்றவாறே - நூல்களினின்று ஆராய்ந்துகொண்டவண்ணமே. சோர்வுற்றநெஞ்சத்தோடு என்றது இத்தகையவள்ளல் கொலையைப்பாடுதலுங் குற்றம் என்பதுகுறித்து. நேரார், - பகைஞர்; பாரிக்கு ஒப்பார் எனினுமமையும். பாரியுடலை வஞ்சத்தாற்கொன்ற வசைச்செய்தி ஓதும்மேல் எ-று. வசைச்செய்தி - பழித்தொழில். பாரியுடல் கொன்றவசை என்றது அவன்புகழுடம்பு இவரான் எவ்வாற்றானும் கொல்லப்படாமை குறித்தது. வஞ்சத்தாற்கொன்ற என்றது "அற்றைத்திங்களவ்வெண்ணிலவின்" (புறம்-112) என்பதனுரையின் பழையவுரைகாரர் "ஒருவனை மூவேந்தரு முற்றியிருந்தும் வஞ்சித்துக் கொன்றமையின்" என்றதனைத் தழீஇக்கூறியது. பாரியிசைபாடிய நெஞ்சம் அதனைவிடுத்து இம்மூவர் வசைபாடற்கெழாது சோர்வுறுதல் கருதிற்று. (51)

மூவேந்தர் தளர்ந்த திறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள். (51)

---

## 9. வஞ்சித்துக் கொன்ற திறம்

407. தளர்ந்தே யுயிர்கோண்டு தப்பியகோ மூவ
ருளந்தேர் வுறும வுயங்கி—விளைந்த
திதுவாயி னென்னோ விவண்செய்வ தேன்று
போதுவாக வாராய்ந்தார் புக்கு.

(இ-ள்.)—தளர்தல் மனத்திற்கும், தப்புதல் உடற்குங்கொள்க. மனந்தளர்ந்தே உயிர்கொண்டு உடல் தப்பிய என்க. தேர்வுறுமல் உள்ள உய்ங்கி - தெளிவடையாது மனம் வாடி. கோமூவர் "மூவர் கோவையும்" (ஔவைபாடல்) என்புழிப்போல வந்தது. இது என்றது வாயானுஞ் சொல்ல ஒண்ணாதது குறித்து விளைந்த கேட்டைச்சுட்டியது. இவண் செய்வது யாதோ என்று. புக்கு - தம்முட்கூடி. பொதுவாக - இவ்வாராய்ச்சியின்றுணிபு மூவர்க்கும் உரியதாதல் கருதிற்று. (1)

408. கல்லானஞ் சேனையெலாங் காலற் குணவருத்தும்
பொல்லா விறல்வேளைப் பொன்றுவித்தல்—பல்லாற்றி
னோத்ததே யின்னா னுயிர்கொண்டு மீளேமேற்
செத்தகோ டொப்பேஞ் சிதைந்து.

(இ-ள்.)—சேனை யெலாம் - நாற்படையும். பொல்லாமையுடன் வணங்காத விறலும் உடைய வேள் எ-று. பொன்றுவித்தல் - கொல்வித்தல். பல்லாற்றின் - பல நெறியினும் என்றது மகண் மறுத்தலும் தம்மையிறந்து ஈந்து புகழ்வளர்த்தலும் தமக்கடங்காமையும் கொள்க. இன்னான்-இன்னாமை செய்பவன்; "பல்வேலண்ணல் யானைவேந்தர்க் கின்னான்" (புறம். 115) எனவருதல் காண்க, இவன் எனினுமமையும். பெண்கொண்டும், வென்றிகொண்டும், புகழ்கொண்டு மீளாதயாம் இவன் உயிர் கொண்டு மீளேமாயின் எ-று. போரிற்சிதைந்து செத்த பிணத்தொடு ஒப்பேம். (2)

409. போரிற் புகுந்து பொருபழியும் பாவமுமேன்
றோரிற் சிதைவே மொருதலையாப்—பாரியினைக்
கொல்லாது மீளுங் கொடுவசையின் மற்றேதும்
பொல்லாத தில்லை புவிக்கு.

(இ-ள்.)—புகழொடும் புண்ணியத்தொடும் பொருகின்ற பழியும் பாவமும் என்க. சிதைவேம் - அரசர்க்குச்சிறந்த புகழும் மறமும் கெடுவேம். பழியும் பாவமும் ஒரும் இடம் இப்போர்க்களமன்று; எப்படியும் வெல்வதே போர்க்களம் வேண்டுவது என்பது குறிப்பு. பாரியினை மூவருங்கூடிக் கொல்லப்புக்குக் கொல்லவியலாது நம் உயிரளவிற்கொண்டு மீளுதலான் உண்டாகும் கொடியபழி. மற்றேதும் என்றது கொடாமையால் வரும் வசையும் நீதியின்மையான் வரும் வசையும் கருதி: அவ்விரண்டினும் பொல்லாதது அரசர்க்கு வீரக் குறையான் வரும் வசை என்பது கருத்து. தாம் ஆளுமிடம் அடங்காது போகும் என்னுங்கருத்தாற் பொல்லாத தில்லைபுவிக்கு எனக் கூறினாரெனினுமமையும். (3)

410. தீய விலங்கின் றிறத்துப் பலபொறியின்
மாய மிழைத்து வதிப்பதுபோ—னோயின்
வளர்வேளை யெப்படியு மாய்விப்ப தல்லாற்
றளர்வாற் பயனென்ன தாழ்ந்து.

(இ-ள்.)—தீயவிலங்கின்றிறத்து - தமக்குத்தீமை செய்வதாகிய விலங்கின்மாட்டு. பல் பொறியின்மாயம் - அகப்படுக்கும் பல யந்திரப் பொறிகளின் வஞ்சம். உடம்பிற்கு நோயைப்போல் வருகின்ற பாரி வேளை. எப்படியும் - போரினல்லாமை குறித்தது. தாழ்ந்து - சிற் றரசற்குப்பேரரசர் தாழ்ச்சியுற்று. தளர்வால் - மனந்தளர்தலால். என்னபயன் - பயன்களொவையும் இல்லை. (4)

411. கல்லுக்குத் தப்பியுங்கண் காணவிகற் கோடினரேன்
சொல்லுக்குத் தப்பாதேஞ் சூழ்ந்திவனைக்—கொல்
[லற்கு
வேறொன்று தேர்கிலே மெய்க்கபிலன் சொற்கியையு
மாறொன்று செய்வமென்றா ராங்கு.

(இ-ள்.)—கண்காண - பாரிவேள் கண்கள்காணுமாறு. "பகை வர் ஒடுகழற் கம்பலை கண்ட செருவெஞ் சேஎய்" (புறம். 120) எனப் பாரிபாடப்படுதலானறிக. இகற்கோடினர் என்ற சொல்லுக்குத் தப்பாமை இப்பாட்டானே அறியலாம். சூழ்ந்து - மூவருஞ்சூழ்ந்து. கபிலன் மெய்ச்சொற்கு இயைய - கபிலனுடைய வாய்மைச்சொல் விற்குப்பொருந்த. ஒன்றுசெய்வம் - அவர்வாயுஞ் சொல்லற்குக்கூசுதல் குறித்தது. (5)

412. படைக்கரியன் பாரி பரிசிலர்கள் வேண்டு
கொடைக்கெளிய னுதல் குறித்துத்—தொடுத்த
படையு ளொருவனையே பாண்மகனுப் போக்கி
யடைவ நினைவதென்றா ராங்கு.

(இ-ள்.)—"வேந்தர்க்கின்னாகிய வினியோன்" (புறம் - 115) என்றதனுன் இவன் அருமையும் எளிமையும் உணரலாம். பாண்மகனுப் போக்கி என்றது "பாடினிர் செலினே" (புறம் - 109) என்றகபிலர் கூற்றை நினைந்து. தொடுத்தபடை - படைப்பயிற்சியும், வலியும் உருவும் கருதி இணைத்தபடை: பாண்குடியிற்பிறந்த மகனொருவனை இவ்வினைக்கு வேண்டாதது அக்குடிமுழுதும் இப்பாரிவேள் கொடை கருதி ஊறு நினையாமை நோக்கி எனக்கொள்க. நினைவது - பாரியை இல்லாமை செய்வது. (6)

413. கூற்றி னுயிர்கோள் கொலைவல்லன் றன்னையவர்
தேற்றி யிரவலனுச் செய்தமைத்துப்—போற்றும்

பறம்பின்வேள் பாரியினைப் பாடி யிரக்குந்
திறம்புகன்று விட்டார் சினந்து.

(இ-ள்.)—கூற்றுவனுங் காலங்கருதி உயிர் கொள்ளுதல்போலப் பொரும்பொழுதிற் பிறருயிர்கொள்ள வல்லனன்றி இவ்வாறு இரந்து உயிர் கொள்ளவல்லனுகாமையாற்றேற்றுதல் வேண்டிற்று. இரவலனு-உயிரிரப்பானுக. செய்து அமைத்து - உருவத்தினைச்செய்து உள்ளத்தினை அவ்வினைக்கு அமைத்து எ-று. போற்றும்பாரியினை - இரந்தார்க்கு உயிருந்தருவனென்று போற்றப்படும் வேள்பாரியினை. பாண்மகனுயினமைக்கேற்பப்பாடி. இரக்குந் திறம் - இரந்து கொள்ளும் கூறுபாட்டில். புகன்றுவிட்டார் - அப்பாண்மகனை விருப்பங்காட்டிச் செலவிட்டார். சினந்து - உள்ளத்தாற் பாரியைவெகுண்டு. (58)

414. சாதுவன் போலத் தனைக்காட்டி வண்பறம்பிற்
றூதுவன் போலத் துனைந்துபோய்ப்—போதிரவின்
வேண்முன்னர் மேவியவன் மெய்ப்புகழைப் பாடவ
கேண்முன் னியதென்முன் கேட்டு. [வன்

(இ-ள்.)—போர்க்காலத்துஞ் சாதுவர்க்குந்தூதுவர்க்கும் எயில் புகுதற்கு எளிதாதல் தெரிக. சாதுவன் - யார்க்கு நன்மையே செய்பவன் "சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனுந்தன், தூதுவரைக் கூவிச் செவிக்கு" (நான்முகன்றிருவந்தாதி-68) என்பதனுனுணர்க. போதிரவின் - இராப்போதின். இதனுற் சாதுவர்க்குக் காலவரையறை யில்லாமை காட்டிற்று. பாடக்கேட்டு முன்னியது கேள் என்றான் என்க. முன்னியது - நினைத்தது. (59)

415. பொன்னைப் புவியைப் புனைமகளை வேண்டிலே
னின்னைத் தனிவேண்டி நின்றேன்யான்—மன்னர்
புரந்தார்க் கரியையாய்ப் போற்றி யிவண்வந்
திரந்தார்க் கெளியாய்க் கெதிர்.

(இ-ள்.)—"பொன்னினுகும் பொருபடைமற்றது, தன்னினுகுந் தரணி" (சிந்-1923) ஆதலாற் பொன்கூறிப் புவி கூறிற்று. பொன்னும் புவியும் இழந்தும் பெண்பெறுதல்பற்றிப் புனைமக்ள் என்முன்; "பெண்பெற்ரு னஞ்சா னிழவு" (பழமொழி-382) என்பதுகாண்க. இம்மூன்றினு மேம்பட்ட நின்னை என்பது கருத்து. தனிவேண்டி-தனிநிலையில் வேண்டி. படையுடன் வாராமை குறித்தது. மன்னரும்

தன்னைப புரந்தாருமாகிய காவலர்க்கு வெல்லற[illegible] அரியையாகி. இவண் வந்து போற்றி யிரந்தார்க்கு என்க. எளி[illegible]கு - எளியைக்கு எதிர்கின்றேன். எ-று. (60)

416. மூவரா ஞகாத தொன்றை முடிப்பதுதான்
றேவரோ யாருஞ் செயலொல்லா—தாவலா
னிற்கொண்டு யானெ நிகழ்த்தும் வினையுடையே
னேற்பின் வருகென்று னேற்று.

(இ-ள்.)—மூவரான் - தமிழ் மூவேந்தரான்; "விறல் கெழு மூவரை" (புறம் - 137) என்புழிப்போலவந்தது. ஒன்றை - ஒரு வினையை. யாரும் - தேவர்க்குத்தலைவராகிய இந்திரன் முதலாயோரும். மூவரான் ஆகாதவொன்றை முடித்தற்கு நின்னைக்கொண்டு நிகழ்த்தும் வினையுடையேன் என்றுணுகக்கொள்க: ஆவலால் - ஆசையால்; தன்னைசை யென்றும், மூவராசை யென்றும் வேறுபடுக்காதுரைத்தது காண்க. ஏற்று - யான்மொழிவதனை ஏற்றுக்கொண்டு. ஏற்று - இரந்து எனினுமமையும். ஏற்பின் வருகென்றான் என்றது "பாரியும் பரிசில ரிரப்பின், வாரே னென்னு னவர் வரையன்னே" (புறம். 108) எனக்கபிலர் கூறியதைத்தழீஇவந்தது. (61)

417. என்னு னியல்வதனை யீண்டெய்தி வேண்டியேனை
யின்னான்வாழ் வித்தா னிவனென்று—முன்னு
நினக்கீத்தே னென்னை நினைத்தபடி யுய்க்க
வெனக்கோ வுரைப்பா னியைந்து.

(இ-ள்.)—என்னுனியல்வது என்றது யான் இவன்பின் போதல். இன்னான் - இவன்; இன்னுமையுடையன் என்பது சாடு. வாழ்வித்தான் என்றது "இன்று வந்து துன்னினன் சூழ்ச்சியாலே, யிறந்தநா ளன்றோ வென்று மிருந்தநா ளாவ தென்றான்" (யுத்த-விடணன்) என்ற கம்பநாடர் கருத்திற்கு இயைய நிற்பது காண்க. மூன்னு - நினைந்து. உய்க்க என்றது - மூவர்பாலுய்த்தற்கும் விசும்பின்பாலுய்த்தற்கும் பொதுவாய் நின்றது. (62)

418. இற்றைக்கே யாக வினியாக வெற்றைக்குங்
குற்றப் புலாலுடம்பைக் கூற்றமே—பற்று
மிதனு னிரந்தாய்நிற் கிந்நிலையே யீத
-லேதனுனு மாற்ற வினிது.

(இ-ள்.) -குற்றப்புலாலுடம்பு தீங்குகட்குக்காரணமான ஊன் உடம்பு. கூற்றமே என்புழி ஏகாரந்தேற்றம். பற்றும் என்பது கொடுக்க உடன்படாத நிலையிற் கவர்ந்து கொள்ளுதல் குறித்தது: இரந்தாய் என்றதனால் கூற்றம் இரந்துகொளாமை கருதிற்று. இந் நிலையே - இத்தருணமே. குற்றப்புலாலுடம்பு என்றது இரந்த பொருள் மிகவும் இழிந்தது என்பது குறித்தது. (63)

419. விலைசெய்வை யேனும் விழைவே னேனையே
கோலைசெய்வை யேனுமகிழ் கூர்வேன்—றலைசெய்
யறத்திற் றிரியா வடிமை நினக்கேத்
திறத்து மேனையாள்க தேர்ந்து.

(இ-ள்)—விலை செய்தல் - மூவர்தரும் பொருள் கருதி அவர் பாலுய்த்தலான் ஆவது காண்க. கொலை செய்வை என்றது அவர் புரியாது நீ இது செய்யினும் என்பது கருதிற்று. விழைவேன் - விற்றி னென்னையும் கொண்ட பிறரையும் வெறுது விரும்புவேன். தளர்ந்த நிலையினும் ஈதலியைந்து இறத்தலான் மகிழ் கூர்வேனென்றான் என்க. தலைசெய் அறம் - எல்லாவற்றினும் தலைமைசெய்யப் பட்டஅறம். அறத்திற்றிரியா அடிமை என்றது பாவத்திற்றன்னையுய்க்காமைகாத்த தாம். தேர்ந்து - இரந்த வினைக்கு நன்மையைத் தெளிந்து. (64)

420. என்னொழிய யாவு மிரந்த பரிசிலர்தா
மென்னை யொருபொருளா வெண்ணிலர்நீ—யென்
பொருளா மதித்துப் புகுந்திரந்தாய் மேலென் [னைப்
றருளா னுகந்தா னகத்து.

(இ-ள்.)—யாவும் - ஊரும், தேரும், பொன்னும், பிறவுமாகஈயப் படுவன எல்லாம். என்னை - இவ்வெல்லாம் ஈந்த என்னை எ-று. ஒரு பொருளா - ஈதற்குரியதோர் பொருண்மைத்தாக. என்னைமதித்து என்னைப்புகுந்து என்னைப் பொருளா இரந்தாய் என்க. மேல் - நீ இரந்தபரிசிலருண்மேலாவை. அகத்து அருளான் உகந்தான் என்க.

421. ஏற்றூர்க் களித்தே யிருந்தே னடன்மூவர்
மாற்றூர் செருவான் வறுமைப்பட்—டாற்று
நிலையேன்பாற் கண்டு நிறையருளான் யானே
விலையேன்று தேன்னிரந்தா யின்று.

(இ-ள்.)—ஏற்றார்க்கு - இரந்தார்க்கு. அளிதிதயிருந்தேன் என்றது அளியேன் ஆயின் உயிர்வாழ்ந்திரேன் என்று படவந்தது. அடன் மூவர் மாற்றார் - என்னினும் வலிமையுடைய மூவேந்தராகிய பகைஞர். செருவான் வறுமை கூறியதனுற் கொடையான் வறுமை கருதாமை குறித்ததாம். ஆற்றாநிலை - இனி நன்றுற்ற மாட்டாத வறுமை நிலை. நிறை அருள் - நிறைந்த அருள். யானோ - ஏற்றார்க்கு இது காறும் இல்லையென்னுத யான் என்பது குறித்தது. இல்லையென்று வாயானுஞ் சொல்லாதபடி. என் இரந்தாய் - என்னைமட்டில் இரந்து வேண்டினுய். இன்று இரந்தாய் - நாளைக்கு யான் இல்லையாயினும் ஆவேன். வீணேயானில்லையாதற்கு முன் யான் இல்லையென்னுதபடி இன்று என்னை இரந்தாய் எ-று. இல்லை என்னுது என்றது "இல்லென்னு வன்மையின் வன்பாட்டதில்" (நான்மணி 30) என்பது பற்றிவந்தது. (66)

422. இல்லை யெனும லிரப்போர்க் களிப்பதினி
யொல்லுவ தோவேன் றுயங்கலுறு—மேல்லையினி
லேன்புல் லுடலை யினிதிரந்து வாழ்வித்தா
யன்பனீ யேன்ன வவண்.

(இ-ள்)—இனி - இப்போர்க்குப்பின். ஒல்லுவதோ - இயல்வதோ. போரால் விளையுந்தோல்வியினுங் கொடாமையே இவன் உயங்குதற்குக் காரணமாதல் காட்டியதாம். புல் உடல் என்றது அதன் இயல்புநோக்கியும் நிலையாமை நோக்கியும். இனிது இரந்து - இனிதாகிய பொருளாக இரந்து. இனிதாகாதென்பது கருத்து. வாழ்வித்தாய் - நீயிரந்தது என்கண் ஈதற்கில்லையாயின் வாழேன் என்பது குறிப்பு. ஒல்லுவதோ என்றுயங்குதல் "வளமிலாப்போழ்தத்து வள்ளன்மை குற்றம்" (நான்மணி. 92) என்பது பற்றி. நீ அன்பன் என்ன - நீ என்கண் அன்புடையன் என்று பாரிசொல்ல. அவண் - அவ்வமயத்து. (67)

423. ஈது தேரிந்த விருங்கபிலன் பாரியுடன்
போதுவ லேன்னப் புகலோழிகேன்—ரேதிப்
புறம்பேய்தப் பாணன்பின் போதுகேனப் போனுன்
மறம்பின் னறஞ்சேல் வணம்.

(இ-ள்)—இருங்கபிலன் என்புழி இருமை - பெருமை. கபிலன் உடன்போதுவேனென்று சொல்லப் பாரி புகுதல் ஒழிவாயாக என்று

ஒதி என்க. புறம்பு எய்த - எயிற்புறத்தின்கண் எய்திய அளவில். தன் பின்போதுக என்று பாணன்கூற: மறம்பின் அறம் செல்வணம் - பாவத்தின் பின்னே புண்ணியம் சென்றபடியாக; பாரிபோனன் எ-று. கபிலன் உடன்போதுவலென்னப் பாரி புகல் ஒழிகென்றோதி எய்தப் பாணன் பின்போதுகென மறம்பின் அறஞ்செல்வணம் போனன் என்க. மறத்தின் பின்னர் அறஞ்சேறல் முறையன்று என்பது குறிப்பு. ''இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி யேகு'' (அயோத்தி) என்றார் கம்பநாடர். பின்போதுக என்றது பாணன்றான் செல்லிடம் பாரிதெரியாமை நினைந்து இரந்தான் இட்டவழக்காயியங்குதல் குறித்ததும் ஆம்: மறம் வஞ்சப் பாணனும் அறம் வேள் பாரியும் ஆதல் நோக்கிக்கொள்க. பின்போதுகெனப் போனன் என்றது கபிலர் ''பாரி பரிசில ரிரப்பின் வாரே னென்னு னவர்வரை யன்னே'' (புறம். 108) எனக்கூறியதைத்தழீஇவந்தது. (68)

424. கலந்த பெருங்கேண்மைக் கோவ்வாய்வண் பாரி
புலந்தனைபல் யாண்டும் புரந்தா—யிலந்தீர்ந்
தோருங்குவர லோண்ணு தோழிகேன்று கூறிப்
பிரிந்தனைவே றுனேன் பிற.

(இ-ள்)—கலந்த பெருங்கேண்மைக்கு - உயிரொடுகலந்த பெருநட்பிற்கு. கேண்மை - புறநட்டல் என்றும், பெருங்கேண்மை உளநட்டல் என்றும், கலந்த பெருங்கேண்மை - உயிரொடுகலந்து நட்டல் என்றுங்கொள்க. பல்யாண்டும் என்னைக்காத்த நீ வெறுத்தனையாவை எ-று. இலந்தீர்ந்து - மனையை நீத்து. ஒருங்குவரல் - உடன்வருதல். ஒண்ணுது ஒழிக என்று கூறி - கூடாது ஒழிவாயாக என்று சொல்லி. பிரிந்தனை - என்னை நீங்கினை யாதலின்; வேறுனேன் - நின் உயிர்கலந்தவனுகாது பிறனுயினேன் எ-று. பிற - அசை; இது புறப்பாட்டில், (236)கபிலர் ''மலைகெழுநாட மாவண்பாரி, கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற், புலந்தனை யாகுவை புரந்தயாண்டே, பெருந்தகு சிறப்பி னட்பிற் கொல்லா, தொருங்குவரல் விடாஅ தொழிகெனக் கூறி, யினையை யாகலி னினக்கு மற்றியான் மேயினே னன்மையானே யாயினும்'' என்று கூறியதைத்தழீஇவந்தது. இதன்கட் கபிலர் ஒருங்குவரல் செய்தாராக அவரை வரல்விடாது ஒழிகெனப்பாரி கூறியதற்கு அவர் வருந்துதல் காண்க. (69)

425. இம்மைப் பிறப்பின்யா னின்புற்றுங் குன்னுழைட்புக்
கும்மை யுலகின் னுளமகிழச்—சேம்மை.

யுயர்ந்தபா லாக்குகென வோதியுடன் போகா
தயர்ந்தான் புலவ னகம்.

(இ-ள்)—உன் உழைப்புக்கு என்பதை இடைநிலைவிளக்காகக் கொள்க. உன்உழைப்புக்கு இம்மைப்பிறப்பின் இன்புற்றாங்கு என்க. உம்மை யுலகின் - மறுமை உலகத்தின்கண். உன்னுழைப் புக்கு உளமகிழ எ-று. செம்மை உயர்ந்த பால் - செவ்வைப்பட மேம்பட்ட என்பாக்கியம் நின்னுழைப்புக்கு உளமகிழ ஆக்குக என்க. புலவன் உடன்போகாது அகம் அயர்ந்தான் - அறிவன் உடன்போகா மையால் மனங்கவன்றனன். இது புறப்பாட்டிற் (236) கபிலர் "இம்மைபோலக்காட்டியும்மை, யிடையில் காட்சி நின்னோ, டுடனு றைவாக்குக வுயர்ந்த பாலே" என்று கூறியதைத்தழீஇ வந்தது. அயர் தல் - கவறல்; "உலகுடன் பெறினுங்கொள்ளலரயர்விலர்" (புறம்-182) என்புழிக்காண்க. (70)

426. எற்கொண்டு செல்க வினிதியல்க வென்றவன்பின்
மற்கொண்ட தோள்வேள் வரப்போகி--யற்கொண்ட
போதிற் பகைவேந்தர் போர்ப்படையி னுப்பண்வெங்
கோதிற் குருநின்றான் கொண்டு.

(இ-ள்)—தந்த என்னைக்கொண்டு செல்க எ-று. இனிது இயல்க என்றது என்னைக்கொண்டு சேறலால் ஊறு எதுவும் எய்தாமல் இனி தாக இயறல் குறித்தது. மற்கொண்டதோள் - போரான் வேறற் கரிய வலிகொண்ட தோள். பின்வரப்போகி என்க. அற்கொண்ட போதில் - கொண்ட இராவேளையில்; அவனை இரந்து கொண்ட அவ் விராத்திரிப்போதில் எ-று. பகை வேந்தர் - பகைமையை யாளும் அரசர். போர்ப்படை - இகழ்ச்சிக்குறிப்பு. வெங்கோதிற்குரு - கொ டிய தீங்கிற்கு ஒருவடிவாகியவன்; வஞ்சப்பாணன். கொண்டு - உடன் கொண்டு. (71)

427. முடிவேந்த ராயவொரு மூவர் தமக்குக்
குடிகேடு செய்தல் குறிக்கார்—படிமீது
பாரி புகழுள்ள காறும் பழிசூட
நேரில் வினைசெய்வார் நின்று.

(இ-ள்.)—முடிவேந்தர் ஆய ஒருமூவர் - வேத்து முடியுடைய ராகிய ஒருமைப்பட்ட மூவர்; தஞ்செயலான் இனிமுடியும் வேந்தர்

என்பதும் கதைநோக்கியாகும். குடிகேடு-குடிகெடுதலை. "குதிரையின் மேல்வந்து கூடிடுமேற் குடிகேடு கண்டீர்" (திருவாசகம்) என்ப. முடி வேந்தர் அம்முடியின்மேற் பழிசூட என்க. நேரில் வினை - நேர்மை யில்லாத காரியம். தமக்கு ஒவ்வாத காரியம் எனினும் அமையும். நின்று வினைசெய்வார் என்றது இவர் நின்று ஏவியது குறித்தது. "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்" (குறள்-550) உடன் பட்டதன்றி நல்லோனை ஒறுத்தற்கு நால்கள் உடன் படாமையாற் பழிசூடலுடன் நேர்மையில்லாத செயலாயிற்று. நல்லோன் என்பது பாரிபுகழுள்ள காறும் என்பதனுற் காட்டியது காண்க. நேரில்வினை என்றது வாயானுஞ் சொல்லுதற்கில்லாதவினை. பாரிமகளிர் "யா மெந்தையுமிலமே" (புறம்-112) என்ற நயத்தை உய்த்துணர்க. இப்புறப்பாட்டில் இவர் "எம்குன்றுங்கொண்டார்" என்றுகூறியதற் கேறுவாக இது கூறலால் இவ்வேந்தர் தங்குன்றங்கொண்டது பாரி யுள்ளபோதிலன்றென்பதாம். தந்தையில்லையாயவாறு இங்ஙன மென்று வாயானுஞ் சொல்லுதற்கு உடன்படாமல் யாம் எந்தையு மிலமே என்றொழிதல் நோக்கிக்கொள்க. எங்குன்று கொண்ட அளவுமில்லை இவர் எந்தையை யிழப்பித்த முறை என்றிரங்கியவாறும். (72)

428. விண்ணு மிடித்தது மீன்கோ ளொளித்தன
மண்ணு நடுங்கிற்று வானோரும்—புண்கொள்ள
வெல்லா மிருண்மூடிற் றிம்மூவர் நல்வேட்குப்
பொல்லாங் கிழைக்கும் பொழுது.

(இ-ள்.)—விண்ணும் இடித்தது - உலகத்தின் அறம், பாவம் இரண்டனையும் பெய்தும் பெய்யாது நின்று காட்டவல்ல மேகமும் பெய்யாமல் அதிர்ந்தது; பாண்டியன் "மழைபிணித்தாண்ட மன்னவ னுதல் குறிக்கொள்க. மீனொளித்தன - மீன்கள் தமக்கு நாயகனாகிய மதியோன் வழியினன் செயலாதற்கு வெள்கியொளித்தன. கோள் ஒளித்தன - கோள்கள் தம்மோடொத்தவன் வழியில் இது நிகழ்தலைக் காண ஆற்றுமல் ஒளித்தன. மண்ணும் நடுங்கிற்று - பூமியாகிய தெய்வமும் நடுக்கமுற்றது. தன்னையகழ்வாரையுந் தாங்கும் பொறை யுடையள் இது தாங்கமாட்டாமை குறித்தது. வானோரும் புண் கொள்ள - இன்பமேயன்றித் துன்பமில்லாத வானுலகத்தவரும் நெஞ் சம் புண்கொள்ள. "நெஞ்சுபுண் ணுறீஇ" என்ப (தொல். பொ. 147). எல்லாம் - ஒளிசெய்வனவாகியனவு மடங்கக் கூறியது. பொல்லாங் கிழைத்தற்குரியன் அல்லன் என்பது தோன்ற நல்வேள் என்றதாம்; மூவர்தீயர் என்பதுந்தோன்றவந்தது. மீனுங்கோளும் மேகத்தின்

மறைந்தன என்று கொள்க. இது மேற்பாட்டிற் காண்க. கோளிருந்து ஒளித்தல் கூறியது இப்பொல்லாங்கு நிகழ்ந்தது வெண்ணிலாப் போதாதல் கருதியென்க. இதனை "இவ் வெண்ணிலவின்............ யாமெந்தையு மிலமே" (புறம். 112). என்று மகளிர் கூறியதுகொண் டுணர்க. (73)

429. தன்படிகால் செய்வஞ் சனைக்காற்றான் றண்மதி [யோன்
றுன்புடைய னாகிமுகில் சூழ்ந்தொளித்தா—னன் [புடைய
வுற்றா ரேனினு முறாத கொடுஞ்செயற்குக்
கற்றா ருடன்படார் காண்.

(இ-ள்.)—தன்படிகால் - தன்வழித்தோன்றல்; "எழ்படிகால் தொடங்கி" (திருப்பல்லாண்டு) என்ப. செய்வஞ்சனை - செய்யும் வஞ்சச் செயல். ஆற்றான் - மனம் ஆற்ற ஒண்ணாதவனாகி. தண்மதியோன் என்றதனால் இது வெய்யவினையாதல் காட்டியதாம்; ஈண்டு மதியோன் சாடு. முகில் சூழ்ந்து - மேகத்தைப்போர்த்து. அன்புடைய உற்றார் என்றது அவர் அன்பற்றுப் பிறர்பாற்செய்யும் கொடுமை வினையைக் குறிப்பித்தது. மதியைக்கற்றார் என்றது "திங்களன்ன கல்வியும்" (ஆத்திரையன் பேராசிரியன் பொதுப்பாயிரம்) என்றவழக்குப் பற்றி.

430. நெஞ்சிற்றுப் போகாம னின்றேவேள் பாரியினை
வஞ்சித்துக் கொன்றார் மறமன்ன—ரெஞ்சாப்
பழிவிளைத்துத் தொன்மைப் படர்புகழோ டுந்தம்
வழியறுத்த லெண்ணார் வலித்து.

(இ-ள்.)—"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபிற், றன்னெஞ்சே தன்னைச்சுடும்" (குறள்-293) என்பதனானும் "வஞ்சமனத் தான் படிற்றொழுக்கம் பூதங்க ளைந்து மகத்தே நகும்" (ஷை -271) என்பதனானும் வஞ்சித்தார் நெஞ்சு இற்றுப்போகாமல் நிற்றல் அருமையாதலிற் கூறப்பட்டது. மறமன்னர் - வீரவேந்தர்; இகழ்ச்சி. எஞ்சாப்பழி - குறையாப்பழிப்பு. தொன்மைப்படர்புகழ் - தங்குலப் பழைமைக்கட்படர்ந்த கீர்த்தி. வழியினும் புகழ் உயர்ந்தது குறித்துப் புகழோடு எனப்பட்டது. புகழோடு தொன்மை வழியறுத்தலாகக் கொள்க. வலித்து எண்ணார் கொன்றார் - மனம் வலித்தலான் அறுத்தலை நினையாராய்க்கொன்றார். வலித்து - துணிந்து "வரை போக வலித்து" (கலி-பாலை. 14) என்ப. (75)

431. மருந்து மரத்தை வளவே ரறுத்தே
யிருந்தை புரிந்துநுதற் கிட்டார்—திருந்து
கோடையுருவே யாய குளிர்மெய்யு மின்ன
படவருமூழ் யாதோ பலித்து.

(இ-ள்.)—“கிழலில் நீளிடைத்தனிமரம் போல” (புறம். 119) என்பதுபற்றி மருந்து மரம் கூறப்பட்டது. இருந்தை - கரி: வீரராயுள்ளார் தம்மை எதிர்த்தபகைவரைக்கொன்று அவர் உதிரத்தை நெற்றியிலிடுதல் கேட்கப்பட்டது. இவர் தம்முகத்துக் கரி பூசியதன்றி வேறுபயன் கொண்டிலர் என்பது குறித்தது; பகைவருடைய உதிரம் நெற்றியிலிடப்படுதல் “பூதநெற்றியிற் புண்டரம் புகுந்,திபாது தானவர் நெய்த்தோரிழக்கவே” (தக்கயாகப்பரணி) என்னுந்தாழிசையான் உணர்க. மருந்துமரம் என்றது கொடையுருவாதல் பற்றி. குளிர்மெய்-அடைந்தாருள்ளங் குளிர்தற்குக்காரணமான பாரி உடம்பு; இது மரத்திற்கும் ஒத்தல்காண்க. இன்ன பலித்துப்படவரும் ஊழ் - இக்கொடுந்துன்பங்கள் பயக்கப்பெற்றுக் கெடவரும் முன்னைஊழ்வினை. பட என்பது மரத்திற்கும் பொதுவாக வந்தது. மரம்பட்டது என்பது வழக்கு. ஊழ்வினை கூறியது இம்மையின் இவன் செய்தன வெல்லாம் நல்வினையாதல் குறித்து. (76)

432. படைக்கூறு செய்தற்குப் பாலு ளிரவி
னிடைக்கூடி ஞன்பட்டா னேன்று—கிடைக்காத
போய்யான் மறைத்தார்தம் புன்றொழிலே மூவேந்தர்
மேய்யாப் பழிவிளைப்பார் மேல்.

(இ-ள்.)—படைக்கு ஊறு செய்தற்கு - நம் படைக்குக்கேடு புரிதற்பொருட்டு. பால் நாளிரவினிடை - நாளின் அரையிரவிடைக்கண். கூடிஞன்பட்டான் - சார்ந்தவன் இறந்தான். கிடைக்காத பொய்யான் - பொய்யர்க்குங்கிடைத்தற் கில்லாத பொய்ம்மொழியால். மெய்யாக மேற்பழிவிளைப்பார் என்க. ‘‘படைப்பழிதாராமைந்த’’ (புறம். 157) இஃதன்மையுணர்க. (77)

433. பாரி களப்பட்டா னேன்று பறையறைந்து
வீர முரச மிகமுழக்கிப்—போரினையே
வேன்று மேனப்பறம்பின் மேலேற வேவினர்தம்
போன்று முனைப்படையைப் புக்கு.

(இ-ள்.)—களப்பட்டான் - போர்க்களரியிலிறந்தான். "கணவன் களப்பட்டான்" (புறப்பொருள் வெண்பா மாலை-176) என்ப. பறை யறைந்து - போர்ப்பறையை யடித்து. வீரமுரசமிக முழக்கி என்றது இகழ்ச்சிக்குறிப்பு: "வென்றெறி முரசின்வேந்தர்" (புறம். 112) என் புழிப்பழைய உரைகாரர் இவ்வாறு கூறுதல் நோக்கிக்கொள்க. பொன்று முனைப்படையை - முன்னைநாட்போரில் இறவாதெஞ்சிய போர்ப்படையை. படையைப்புக்கு ஏவினர் என்க. (78)

434. மூவேந்தர் போய்ம்முழக்கின் முன்னே பெருவானிற்
றேவேந் திரன்முதலோர் சீர்முழக்கப்—பாவேந்த
ரேவரும் போற்று மிரும்பாரி வேள்வேந்தைத்
தேவருஞ் செய்தார் சிறப்பு.

(இ-ள்.)—பொய்ம்முழக்கு - தம் பொய்ம்முழங்குதலன்றி முரசு முழங்குதலன்றென்பது குறிப்பு. பெருவானில் - பெருமையையுடைய விண்ணில். முதலோர் என்றது உபேந்திரன், சயந்தன் என்பாரும் அடங்கவேண்டி. பாரிவேள் சீரை மெய்ம்மையாக முழக்க என்பது கருத்து. பாவேந்தர் - செய்யுளை ஆளவல்லதலைவர். ஏவரும் என்றது இம்மூவரையே பாடும் புலவரும் அடங்கவேண்டி. இருமை- பெருமை. தேவரும்-உம்மை உயர்வு குறித்தது: "வச்சிரத்தடக்கை நெடியோன் கோயிலுட், போர்ப்புறு முரசங்கறங்க வார்ப்பெழுந் தன்று ல் விசும்பினானே" (புறம். 241) என்பதன் உரையிற் பழையவுரை காரர் 'இப்பெற்றிப்பட்ட வள்ளியோனை வானோரெதிர் கோடல் தப்பாதென்றவாறு' எனக்கூறியது நோக்கி இதனையுங்கொள்க. பாரி வானுலகு புக்கனன் என்பது "மாவண்பாரி...வாராக்சேட்புலம் படர்ந் தோன்" (7—1) எனப்பதிற்றுப்பத்துட் கூறியதனான் அறிக. பாவேந்தர் போற்றுவாரைத் தேவர் போற்றுதல் நினைக்க; "புலவர் பாடும் புகழுடையோர் வலவ னேவா வான வூர்தி யெய்துப" (புறம். 27) என்பது காண்க. (79)

435. தேவர் கணத்துச் சிறந்து செழுஞ்சுடரா
யாவர் விழிக்கு மெதிர்ப்பட்டான்—பூவில்
வசைவிளக்கு மூவர் மனமுந்துண் ணென்னத்
திசைவிளக்க மேங்குஞ் செய.

(இ-ள்.)—தேவகணம் - பதினெண்வகைப்பட்ட தேவர்கூட்டம். யாவர் விழிக்கும் - இவனைக்காணக்கூசும் மூவேந்தர்கண்களுக்கும். இசைவிளைத்தற்குரிய பூமியில் வசையை விளைக்கு மூவர் என்க.

இவர் இசையிலாயாக்கை பொறுத்தகிலம்வண்பயன்குன்றுதலான் விளைப்பது வசையேயாயிற்று; "வசையிலாவண்பயன் குன்று மிசையிலா, யாக்கைபொறுத்த கிலம்" (குறள் - 239) என்பது பார்த்தறிக. மூவர் வஞ்சித்துக்கொன்ற நெஞ்சமுந்துண்ணென் றஞ்சவும் திசையில் எங்கும் ஒளிசெய்யவும் எதிர்ப்பட்டான். தாம் அழித்த உடம்பு ஒளியுடம்பாய்த்திகழ்தலாற்றமக்கு ஏதம்வருமென்று இவர் அஞ்சுதலுங் கூறப்பட்டது. மனமுந்துண்ணென்ன என்றது அவர் செய்தவஞ்சமறிந்தது அவர் மனம் என்பதுபற்றி. (80)

436. வையத் திருள்சீத்து வானத் துருவோளியாய்
வெய்யோற் குயர்வாய் விளங்கினன்வேண்—மேய்
[யாக
வாங்குச் சுரர்கோ னவனையெதிர் கோள்விழவோ
வீங்குத் துயிலெழுப்பிற் றேன்று.

(இ-ள்)—வெய்யோன் - சூரியன். அவனுக்கு உயர்வாதல் - இரவிற்றோன்றியிருள் சீத்தலான் என அறிக. ஒளியுருவாய் என்க. பாரி உருவே ஒளியுடையதாக விளங்குதல் குறித்தது. வெய்யோன் - விருப்பஞ் செய்பவன் எனவும் வெப்பஞ் செய்பவன் எனவும் கொள்க. மூவர்க்கு வெப்பஞ் செய்தல் காண்க. ஒளியும் ஒலியும் துயிலெழுதற்குக்காரணமாதல் கினைக. எதிர் கொள்விழவு - எதிர் கொள்ளும் விழவொலி எ-று. ஏன்று - அரையிரவின் எதிர்ந்து எ-று. ஒளியினொடு வடிவுதோன்றுதல் "பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை, நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர், மின்னுக்கொடியொன்று மீவிசும்பிற்றோன்றுமால்" (சிலப் - வாழ்த்து) என்புழிக்கண்டு கொள்க. "சோதிவெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு" (திருவாய்மொழி) எனப்பணித்தல் காண்க. (81)

437. வேந்தர் கோடுவஞ்சம் வேண்மேனி மாய்த்ததிற
மாய்ந்துணர்ந்த வாறே யறைந்தேம்வேள்—வீழ்ந்த
ஞடற் பறம்பி னடுத்தபெருங் கையறவு [தற்பின்
பாடற் கெழுந்தேம் பரிந்து.

(இ-ள்.)—வேந்தர் - வேத்தியற்குரியார். அதுபுரியாது செய்த வஞ்சனைக்கொடுமை. வேண்மேனி மாய்த்த திறம் - பாரிவேளுடைய பூதவுடம்பை ஒளித்த பகுதியை. புகழுடம்பு மாயாமையும், "வேலின் வேறல் வேந்தர்க்கோவரிதே" என்பதையும் கினைவித்தவாறு. ஆய்ந்

துணர்ந்தவாறே - தொன்னூல்களை ஆராய்ந்து அவற்றிற்கியைய அறிந்தபடியே. அறைந்தேம் - துணிந்துரைத்தேம். மூவர் பாரியொடு புரிந்த போரினை மகண் மறுத்தல் என்றதற்கும் பழைய உரைகாரர் ''அற்றைத்திங்கள்'' என்னும் புறப்பாட்டில் ''வஞ்சித்துக்கொன்றார்'' என்றதற்கும் இயைய ஆராய்ந்தறிந்தபடியைக் குறித்தது. வேள்வீந்தற்பின் - பாரி இறந்ததன் பின்னர். ஆடற்பறம்பு - வெற்றிப் பறம்பு. பெருங்கையறவு - பெரிய செயலற்ற நிலையைப்பரிந்து பாடற் கெழுந்தேம் என்க. எழுந்தேம் என்றதனால் வஞ்சித்தக் கொன்ற திறத்து மனம் எழ வலியற்று வருந்திக்கிடந்தது குறித்ததாம். பரிந்து- இரங்கி. (82)

9. வஞ்சித்துக் கொன்ற திறம் முற்றியது.
8, 9 இவ்விருதிறத்திற் செய்யுள் (82)

---

## 10. கையறவுரைத்த திறம்.

438. உலகு துயிலெடுப்ப வொள்ளொளியாய்ப் பாரி
யிலக விசும்பாங் கிமிழ—வலகி
லிசைகோள் பறம்பு மெழுந்துவிழி கண்ட
தசைவில் சுடரை யவண்.

(இ-ள்.)—உலகு துயிலெடுப்ப - உலகோர் துயிலினின்று தம்மை எடுத்தெழும்படி. இயல்பாக விடியலிற்றோன்றும் ஒளியினும் வேறாய் இரவிற்றுயிலெடுப்பது செய்தலான் ஒள்ளொளி எனப்பட்டது. பாரி இலகலானும் விசும்பு ஆங்கவனை எதிர்கொண்டு முழங்குதலானும் பறம்பு மலையும் எழுந்து கண்டது. எ-று. துயிலெழுதற்கு ஒளியும் ஒலியும் ஏதுவாதல் காண்க. அலகில் இசை கொள் பறம்பும் - அளவில்லாத புகழைக்கொண்ட பறம்பு மலையும். அளவின்றிக் கொடுப்பதாகிய பறம்பு கொள்வது அலகில்லாத இசை என்பது கருத்து. அசைவு இல் சுடரை - வருத்தமில்லாத ஒளியுடம்பை. அவண்- அப்பொழுது. (1)

439. வில்லொன்று பாரிவேள் மெய்ப்போரின் மாய்ந்திலன்
[றுன்
வல்லென்ற நெஞ்சரையர் வஞ்சமெனக்—கல்லென்
பேரொலியே யெங்கும் பெருகக் கரையிகந்த [ன்ற
வார்கலிபோ லாய தரண்.

(இ-ள்.)—பாரிவேள் மெய்மையான போர்க்கண் மாய்ந்தா னில்லையாம். வில்லொன்று பாரி என்றது போரின் மாயாமைக்குக் காரணம் குறித்து நின்றது. மெய்ப்போர் என்றது இது வஞ்சகப் போர் என்பது காட்டிற்று. நெஞ்சுவல்லென்ற அரையர் எனக. அரையர் - அரைசுடையர். வஞ்சஞ் செய்தற்கு வல்லென்ற நெஞ்சு ஏதுவாதல் உணர்க. கரையிகந்த ஆர்கலி - கரைகடந்த பேரோசைக் கடல். அரண் - மலையரண். பெருகலான் ஆயது என்க. (2)

440. பாரி யிலாத பறம்போ வேமக்கொழிக
யாருங் கொளுக விதையென்று—போரை
வெறுத்தார் படையேடேம் வெவ்வஞ்சர்முன்னேன்
றிறுத்தார் மறவோ ரியைந்து.

(இ-ள்.)—"எவ்வழி நல்லவராடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம். 187) என்பதுபற்றிப் பாரியாகிய நல்லோன் இல்லாமையாற் பறம்பை மதியாராயினர். யாரும் - எத்திறத்தரும். வெவ்வஞ்சர் - வஞ்சத்தால் வெய்யவர். வஞ்சர்முன்படையெடேமென்று போரை வெறுத்தார் எடேமென்று படையை இறுத்தார். இறுத்தார் - ஒடித்தெறிந்தார். இயைந்து - மறவோர் தம்முள் ஒருங்குகூடி.

441. மாற்றார் பொருபடைக்கு மாறேற்க மாட்டாத
வாற்றுமை யாற்றீர்ந் தனரல்லர்—கூற்றேனும்
போராற்ற வல்லர் புரவலர்செய் வஞ்சனைக்கே
நேராற்ற மாட்டார் நினைந்து.

(இ-ள்.)—மாற்றார் - பகையரசர். பொருபடைக்கு - படைபொருதற்கு. மாறேற்க - எதிரேற்றுப்பொர. ஆற்றுமை - வலியிலாமை. உயிர் கொள்ளும் கூற்றமாயினும் காலமில்லாக் காலத்துவந்தாற் போர்புரிய வல்லவர். புரவலர் - காவல்புரிதற்குரியார். அது புரியாது செய்யும் வஞ்சச் செயலுக்கே எதிரொருவஞ்சத்தை எண்ணிச் செய்ய இயலார் எ-று. மாறேற்றல் - ஒத்து எதிர்தல். "கோதை மாறேற்ற, பல் யானை மன்னர் பறை" (தொல். 100 உரை மேற்கோள்.) (4)

442. தீய கனவு சிதைக்கத் துயிலாது
மாய மறியா மனைத்தெய்வ—மாய
பெருந்தேவி யென்னேன்று பேதுற் றிடர்க்கண்
ணிருந்தே விழித்தாளவ் வேல்.

(இ-ள்.)—தீய கனவு - தீமையைப் பயக்குங் கன. மாயம் - வஞ்சம். அறியாப்பெருந்தேவி எனவும் மனைத்தெய்வம் ஆய பெருந்தேவி எனவுங் கொள்க. மனைத்தெய்வம் என்றது "கற்புக்கடம் பூண்டவித் தெய்வம்" என்று இளங்கோவடிகள் கூறியதைத் தழீஇ வந்தது. தீய கனவால் இடர்ச்கண்ணே இருத்தல் கருதிற்று. அவ்வெல் - அவ்வொளியை. (5)

443. பொன்னஞ் சுடராய்ப் புகழ்மெய்யோ வென்றேத்த
மின்னும் விறற்பாரி வேள்வான்கண்—டன்னாள் [சோர்ந்
தென்னீத்துப் போதியோ வென்ரு ளிதுபுகுமுன்
மெய்ந்நீத்துப் புக்காள் விசும்பு.

(இ-ள்.)—பொன்னஞ்சுடராய் - பொன்னின் ஒளியாக: "சுடரும் பொன்போல்" (குறள் - 267) என்ப. கண்டார் சுடரால் இது புகழ் வடிவோ என்று துதிக்க மின்னுகின்ற வெற்றிப்பாரிவேளை வானத்திற் கண்டு. அன்னாள் - அப்பாரியை ஒத்தவளாகிய நல்லாள்; அவள் எனினுமாம். தன்னைத்தனிநீத்ததற்கு உயிர் சோர்வுற்று. என்நீத்துப் போதியோ - என்னை இவண் ஒழித்துப்போகிற்பையோ. இது புகுமுன் - இச்சொல் விசும்பிற்புகுமுன்னர். மெய்ந்நீத்து - உடலொழித்து. விசும்பு புக்காள் என்க. சொல்லினும் உயிர் விரைவதென்பது குறித்தது. (6)

444. அழுத லயர்த லவலித்த லேங்கி
விழுத லுடித்தல் வெதும்பல்—குழைதலென
விவ்வெல்லாஞ் செய்வா ளிவளல்ல ளன்பூர
வவ்விண் படர்ந்தா ளவண்.

(இ-ள்.)—துன்பம் பொறுமல் அழுதலும், துன்பத்துறறன்னை மறத்தலும், துன்பந்தோன்ற கிற்றலும், துன்பத்தாற் றேம்பி உடல் அடியற்றமரம் போல வீழ்தலும், துன்பத்தால் வயிறுதுடித்தலும், துன்பஞ் சுட உள்ளம் வெந்தொழிதலும், துன்பத்தால் எல்லாவுறுப்பும் வலிகெட்டுத்தளர்தலும் என்னும் இப்பல் செயலும் செய்பவள் இந்நல்லாள் அல்லள் எ-று. இவையெல்லாம் உடல் செய்வன வாதல் நோக்கிக்கொள்க. அன்பு ஊர - உயிர்க்குணமாகிய அன்பு ஊர்தலால். அவண் - அந்நிலையில். அவ்விண்படர்ந்தாள் - பாரியுள்ள அவ்விசும்பிற் சென்றாள். வானம் துன்பாற்செல்லத்தக்கதன்றென்றும் அன்பானே எய்தத்தக்கதென்றும் குறித்தவாறும். (7)

445. பாரிக்குத் தோட்டுணையாம் பான்மை யுலகறியுஞ்
சீர்மிக்க வானுஞ் தெரிந்துதொழப்—பேரிற்
கிழவி யொளியாய்க் கெழுமித் தழுவ
விழவி னிறைந்ததரோ விண்.

(இ-ள்.)—தோட்டுணை - பாரிதோள்கள் தழுவற்குரியதுணைவி. பான்மை - இயல்பு. தெரிதற்கேற்ற சீர்மைமிக்க வானும் என்க. தெரிந்து தொழ என்றது "பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழுமுலகு" (குறள் - 58) என்பதுபற்றி. பேர் இற்கிழவி - பெருமையையுடைய மனைக்கிழத்தி. தழுவிக்கெழும என்க. விண் - வானுலகு. விழவினிறைந்தது - விழாக்கோளால் நிறைவுற்றது. பாரி தனியா யொளியுருவாய்த்திகழ்ந்த நிலையினும் இந்நல்லாள் தழுவிக்கெழுமிய நிலைமேம்பட்டது காட்டியதாம்; "பெண்டிரு, மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே, வாடாப்பூவி னிமையா நாட்டத்து, நாற்றவுணவினோரு மாற்ற, அரும்பெறலுலக நிறைய, விருந்து பெற்றனராற் பொலிகநும் புகழே" (புறம். 62) என வருதல் காண்க. (8)

446. புலனழுக் கற்ற பொருவில் புலவ
னிலனிற் கபிலனென நின்றோ—னிலகுமுளத்
தெண்ணாத தெண்ணி யிரவூழி யாவளந்து
புண்ணவான் கண்டான் புகுந்து.

(இ-ள்.)—புலன் அழுக்கற்ற - அறிவின்கண் மாசு இல்லையாய. "புலனழுக்கற்ற வந்தணாளன்" என்பர் நப்பசலையார் (புறம். 126). நிலனிற் கபிலனென நின்றோன் என்றது இவனேவானிற் புலவனும் (பிருகற்பதியாய்) நின்றவன் என்பதுகுறித்ததாம். நிலனில் நின்றோன் என்றது "உலகுடன்றிரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன்" (அகம். 78) எனப்பொருந்திலிளங்கீரனார் கூறியதைத்தழீஇ யதாம். இலகுமுளத்தென்றது அவன் "உவலைகூராக்கவலையில் நெஞ்சினன்" (பதிற். 85) ஆதல்பற்றி. எண்ணாதது - பாரிக்குரியார் எண்ணுதற்கு ஒண்ணாதது; சாவு எ-று. விடியலை விரைந்து வேண்டுதலான் இரவு ஊழியாயளத்தல் கூறிற்று. உளத்துப்புண்ணவான் - நெஞ்சத்துப்புண் உண்டாகிற்பவன். புகுந்துகண்டான் - வாயிற் புக்குப்பார்த்தான். (9)

447. ஏது தெரியே னிதயம் பறையடிக்குங்
கோதில் குலவேட்கேன் கோல்லோவேன்—றோதி

யிரவேலா மாழ்குவா னெற்கண் டுணர்ந்தான்
புரவலோர் செய்த புலை.

(இ-ள்.)—மனம் பறைபோல் பதறி அடிக்கும். இதற்கு இதயந் தெரிந்த ஏது இன்னதென யான்தெரிகிலேன், கோதுஇல் வேட்கு என்றுங் குலவேட்கு என்றுங்கொள்க. வேட்கு யாது கோதோ, யாது குலக்கேடோ என்க. மாழ்குவான் - சோர்பவன். எற்கண்டு உணர்ந்தான் - ஒளியைப்பார்த்து உள்ளத்து அறிந்தான். புரத்தற்குரியராகிய வேந்தர் செய்த இழிசெயலை. (10)

448. பாரி விசும்பிற் பகல்செய் யொளியுருவி
னேரி னிலங்கு நிலைகண்டா—னீரமுளா
ரூராத காத லவன்மீ திவர்ந்தூரத்
தீராது சொற்றான் சில.

(இ-ள்.)—பகல் செய்யொளி என்றது இரவின் விளங்குதல் குறித்து. இலங்கும் நேரில் நிலை-விளங்கும் ஒப்பில்லாத உயர்நிலை. ஆராத காதல் - எதனாலு நிரம்பாத அன்பு. அவனைப்பெற்றாலன்றி நிரம்பாமை குறித்தது. அவன்மீது ஊர்ந்திவர என்க. தீராது - பாரி நீங்கிமறையாமல்; சிலசொற்றான்; சிலசொல்லல் இவற்கு இயல்பு.

449. பாரியைக் கொன்ற படுபாவி யானேவே
றாரும் பிறரில்லை யாய்ந்தறிமி—னேரினடும்
வில்லானும் வேலானு மல்லாதேன் வெய்யகொடுஞ்
சொல்லானே கொன்றேன் றுணிந்து.

(இ-ள்.)—படுபாவி - பாபத்திலே உண்டாய பாவி; "பாவந் தோன்றிய நான்முதற்றோன்றிய பகைஞர்" (கம்பநாடர்) என்பது போலக்கொள்க. பிறர் ஆருமில்லை. நேரின்அடும் - எதிரின் அடுகின்ற. வில்லும் வேலும் எதிர்நின்று அவனைக்கொல்லவியலா என்பது குறிப்பு. வில்லும் வேலுங் கொல்லாதவனைக்கொன்றதனால் வெய்ய கொடுஞ்சொல் வேண்டிற்று. அந்தணனுதற்கேற்ப வாக்காயுத மாயது காண்க. துணிந்து - கொல்லற்குரியனல்லாதானைக்கொல்லத் துணிந்து. சொல்லாற் கொன்றதனாற் படுபாவி ஆயேன் என்றான். (12)

450. செய்யாத பாடாச் சிறுசேந்நாக் கீறியவேள்
பொய்யாத வண்மைப் புகழ்மின்ன—லையோதான்

வாளாமண் மான்கண் மணியைப் பறித்ததே
மீளேனால் வெந்நரகை விட்டு.

(இ-ள்.)—ஒருவன் செய்யாத புகழைப்படவறியாத சிறிய செவ்வியனா எ-று. சிறுமைதற்புகழ்தலிற் சுருங்குதல் குறித்தது. செம்மை எப்படியுந்திதுரையாத நேர்மை. "எய்யா தாகுஞ் சிறுசெந் நாவே" (புறம் - 148) என்ப. வேளுடைய பொய்யாத வண்மை என்றது மேகம்போலப் பெய்வதன்றி அது சில்வேளையிற் பொய்ப்பது போலாமை குறித்தது. வேள்வண்மையாகிய மேகத்தினை என்னாவாகிய வாளாற் கீறியதனால் உண்டாகிய ஒருபுகழாகிய மின்னல் என்க. அவன் கொடைப்புயலிலுள்ள புகழாகிய மின்னற்றொகுதியில் என்நாக் கீறியது ஒரு மின்னலாம் எ-று. ஐயோ - இரங்கற்குறிப்பு. மண்மான் கண்மணியைவாளா பறித்தது - பூமிதேவியின் கண்மணிபோன்றவனை வீணாக அம்மின்னல் பறித்தது எ-று. இதற்குக்காரணம் யானாதலால் வெந்நரகை விட்டு மீளேன் என்க. பகைகொன்ற மூவர் எய்து நரகினும் நட்டோனைக்கொன்ற யான் எய்துவது வெந்நரகம் என்றும் அவர்மீளினும் யான்மீளேனென்றுங் கருதிக்கூறினான் என்று கொள்க.

451. பாரியைக் கொன்ற பழியேன் றலையதே
யோரிற் பிறர்பா லுறலில்லை—யாருந்
தெரியப் புகன்ற சிறப்பே யிவனை
யெரியிற் சுடலாயிற் றின்று.

(இ-ள்.)—கொன்றபழி - கொன்றதனா லுண்டாகிய பழிப்புரை. என்றலையதே - நட்டோனாகிய என்சென்னியிற்றங்குவதேயாம். தலை கூறியது மறைக்கப்படாமை கருதி. பிறர் - பகைஞராய் வேறு பட்டார். யாரும்-அப்பகைவரும் அடங்க. புகன்ற-விரும்பிக் கூறிய. இவனை - இவனுடலை. நாவினாற் சுடுதல் உண்டென வுணர்க. (14)

452. நேரே பரிசிலர் நின்றிரப்பின் வேள்பாரி
வாரேனென் னாமை லவர்வரையன்—பாரீரேன்
றியான்சோற் றதுவே யிவண்மூவர் செய்கொடாமிந்தார்
வானிற் புகவேளிர் மன்.

(இ-ள்.)—பரிசிலர் நின்று இரப்பின் வேள்பாரி நேரே வாரே னென்னாமல் அவர் வரையன்-இரவலர் எதிர் நின்று அவனை இரந்தால் வேள்பாரி அவரெதிரில் உடன்வாரே னென்று கூறாமல் அவரெல்லை

யிலே நிற்பன்: இத்துணையாக மூவரும் கூடிவெல்லற்கரியனேனும் அவனை ஒருவன் இரந்தால் அவன் பின்வாரேன் என்னுமல் அவர் குறித்த எல்லையில் நிற்கும் அத்துணை எளியன் என்னுங் கருத்தால் யான் சொற்றதுவே அம்மூவர்செய்து வேளிர்மன் வானிற் புகாநிற்கத் தாம் புகாது நரகிலொழிந்தார் எ-று. ஒழிந்தார் என்று கூறியது விரைவுபற்றி. பாரீர் - பாருடைய் வேந்தரை விளித்து, யான் சொற்றது என்க. "அறம்பூண்டு பாரியும் பரிசிலரிரப்பின், வாரேனென்னு னவர்வரையன்னே" (புறம். 118) இது கபிலர் கூற்று. (15)

453. ஏவினு னல்லா லியற்றினு ரேன்னுளர்வெம்
பாவியாற் றீமை பயில்வித்தோன்—பூவிழைகா
மாளச் சிதைத்த மதியிலியை நோவாது
வாளைப் பழிப்பரோ மற்று.

(இ-ள்.)—தீமை பயின்ற பாவியினும் பயில்வித்தோன் வெம்பாவி என்க. பூவால் விழையப்பட்ட சோலையை மாளச்சிதைத்த வாளைப் பழிப்பரோ என்க. மதியிலியை நோவப்பழியாது நோதலே இல்லாத வாளைப்பழிப்பரோ எ-று. இதனுற் பகைவர் வாளாயினர் என்றும் கபிலன் தான் எறிந்தவனுனென்றுங் கருதல் காண்க. சிதைத்தல் மதியின்மைபானென்பதுபடச் சிதைத்த மதியிலி எனப்பட்டது. பூவிழைகா - பூமியில் விழையப்பட்ட கற்பகச்சோலை எனினுமாம். (16)

454. ஐயோவென் னட்போ வழகிதே நட்டோனைக்
கோல்வா னிசைத்த கோவினையேன்—மெய்யா
ஞவைப் பறித்தாலு நண்ணுது தீர்வதோ [வேன்
பாவப் பழியாம் படர்.

(இ-ள்.)—அழகிதே என்று விளவி அழகியதன்று என்று கூறிக் கொள்க; எதிர்மறைவினு. என்னை மதித்து நட்டவனைக் கொல்வான் இசைத்த கொடுவினையேன் - கோறற்குரிய கொடுந்தொழிலை இசை போலக் கூறினேனுகிய என்நா என்க. இக்கொடுவினைக்குக் கழுவா யாக என் நாவினைப் பறித்தபோதும் படர் நண்ணுது தீர்வதோ எ-று. பாவப் பழியாம் படர் - பாவத்துடன் கூடிய பழியினுலாய துன்பம். பாவமும் பழியும் கூறியது மறுமைக்கும் இம்மைக்கும் படர்விளைத்தல் குறித்து. (17)

455. என்று தனைநோக் தியற்றும் வினைதேரியா
தன்று விளங்கு மவிர்சுடரி—னின்ற

விறற்பாரி வேளும் விழுத்துணையும் வான்கண்
டுறப்பேசி னான்றன் னுளம்.

(இ-ள்.)—இயற்றும் வினை - தான் செய்தற்குரிய காரியம். அன்று - அப்போது. அவிர் சுடரினின்று - பரந்தஒளி வடிவினின்று தோன்றிய. விறல் - வெற்றிப்புகழ். விழுத்துணை - சிறந்த துணைவியாகிய நல்லாள். உறப்பேசினான் - பொருந்த வுரைத்தான். தன் உளம் - தன் உள்ளக்கருத்தை. (18)

456. என்வாய்ப் பிறந்த விசைமொழியே வாளாக
நின்வாய் விழுந்த நினைவென்னு—ணன்பாரி
வெந்தீயிற் பெய்த மெழுகிற் கோதிகோதிக்கு
மந்தோ பிரிந்துறைவே னால்.

(இ-ள்.)—வாய்ப்பிறந்த இசைமொழி என்றது கேடுவிளைப்பது தெரியாமற் கூறியது குறித்தது. இசைமொழியே வாளாக என்றது "புலந்தொறும் பரப்பிய சேரினிராயினுந், தாளிற் கொள்ளலிர்வாளிற் றரலன், யானறி குவனது கொள்ளுமாறே" (புறம்—109.) என்பது முதலாகக் கபிலன்றான் கூறியது குறித்தது. நின்வாய் விழுந்த நினைவு - நின்கண் வீழ்ந்தது காரணமாக உண்டாம் நினைவு. விழுதல் - வீழ்தல்; "பொங்கி யெழுந்தாள் விழுந்தாள்" (சிலப் - 18-30) என்ப. என்னுள் கொதி கொதிக்கும் என்க. நன்பாரி - விளி. வாளாக விழுந்த என்றதும் தான் நினைந்து செய்யாமை குறித்தது. நினைவு - நன்று சொல்லித் தீதாய் முடிந்தநினை நினையு நினைவு. நினைவு கொதி கொதித்தும் பிரிந்துறைதலால் என் உயிர் போக்க வல்லதன்று என்பது கருத்து. (19)

457. என்னைத் தனிநீத் தியவுளர்வா னல்லாளோ
டென்னுக்குச் செல்லமன மெண்ணினை—யென்னை
யுயிர்த்துணைவ னென்றிங் குறநட்ட வன்பு
மயர்த்ததுவோ நின்னை யகன்று.

(இ-ள்.)—தனி நீத்து - நட்ட என்னைத் தனிமையிற் றள்ளி. இயவுளர்வான் - தேவருடைய வானுலகத்து. நல்லாளாகிய தோட்டுணையை உடன்கொண்டு போயதுபோல உயிர்த்துணையையுங் கொண்டு போகாது என்னுக்குச் செல்ல எண்ணினை என்பது குறிப்பு. என்னுக்கு என்றது "தான்செல் திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை"

என்பது குறித்து வந்தது. அன்பும் அகன்றதுவோ என்றது உடல கல்வது இயல்பு உயிர்ப் பண்பாகிய அன்பு நின்னையகல்வது பொருந் தாது என்பது குறித்தது. அகன்று அயர்த்ததுவோ - நின் னுடலுடன் அகன்று பின் எய்தாமை மறந்ததுவோ எ-று. உறநட்ட அன்பும், நல்லாளினும் மிகுத்து நட்ட அன்பும். (20)

458. அன்பீத்தா யெற்கோ வழிவஞ் சகருக்கு
மேன்பீத்தாய் முன்னின் றிரந்தபோ—தின்பீத்த
வூர்த்தாய் பாணர்க் குலகுக் கிசையீத்தாய்
தேர்த்தாய் முல்லைக்குத் தேர்ந்து.

(இ-ள்.)—" அன்பின் வழிய துயிர் நிலை " (குறள் - 80) என் பதனால் ஈத்த பலவற்றினும் தனக்கு அன்பீத்தது சிறந்தது என்று காட்டியதாம். அழிவஞ்சகர் - வஞ்சனையால் அழிபவர்க்கும். ஈப வினை அழிக்கும் வஞ்சனையாளர்க்கும் என்பதும் ஆகும். என்பு-ஈண்டு உடம்பு: "என்பு முரியர் பிறர்க்கு" (குறள் - 72.) என்பது நினைக்க. இன்பு ஈத்தவூர்-விளைவால் இன்பந்தந்த வூர்கள். இவற்றால் இசையை உலகிற்கு ஈத்தாய் என்க. முல்லையின் துயர்தேர்ந்து அதற்குத் தேரீத் தாய் என்க; இதனாலது மடமையாற் கொடுத்தது ஆகாமை குறித் தது. இதனாற் பாரி இங்குச் செய்வன எல்லாஞ் செய்தவனாதல் கருதிற்று. (21)

459. என்ன குறையு மிலையாக வான்சேல்வா
யுன்னை யிலாத வுயர்குறையோன்—றின்ன
பறம்புக்கே வைத்தோழிதல் பாங்கோவேஞ் ஞான்று
மறம்புக்க பாரி யறை.

(இ-ள்.)—என்னகுறையும் - எவ்வகைய குறைகளும். இலை யாக என்றது வினைமுடித்து வான் சேறல் கருதிற்று. நீ குறையில்லை யாய்ச் சேறல் நின்னளவினதேயாம்; நின்னையில்லாக் குறை இப் பற நாட்டினதாம்; இதனை லிங்ஙனடெய்தியது உயர் குறை என்றதாம். ஒன்று என்பது நிரப்பமுடியாதது என்பது கருதி வந்தது. இன்ன பறம்பு - இத்தகைய பறம்பு; என்றது நின்னாற் சிறத்தல் நினைந்தது. எஞ்ஞான்றும் - மறம் புரியவேண்டிய போர்ப் பொழுதத்தும்: என்றது " அறம்பூண்டு வாரே னென்னன் " (புறம்) என்பதுபற்றி. (22)

460. தமிழுண்டோ தேவர் தலத்தே யவர்மாந்
தமிழ்தின் சுவையன்ன தாமோ—விமிழ்வான்

புலவர் நிறைந்தார் பொலமு நிறைந்த
வுலகேன்று செல்வையோ வூங்கு.

(இ-ள்.)—தேவர்தலத்தே - தேவருடைய இடத்தே. தமிழ் உண்டோ - தமிழைச் செவியான் மாந்துதலுண்டோ என்பது குறிப்பு. அவர் வாயான்மாந்தும் அமிழ்தினுடைய இனியசுவை அத்தகையது ஆமோ. இமிழ்வான் - முழங்கும் வானுலகு. பெயர் மாத்திரையிற் புலவரெனப்பட்டாரும் பிறர்க்கு வழங்காத பொலமும் நிறைதலை நோக்கிக் கூறினன். (23)

461. எங்குப் புகுந்தாலு மெய்துவே னீயின்றி
யிங்குத் தரிக்க வியலேன்யான்—போங்கு
மெரிவாய்ப் புகுந்துன்னை யெய்துவனில் லென்று
விரிவாய்ப் புகன்றனவ் வேட்கு.

(இ-ள்.)—எங்குப் புகுந்தாலும் - நீ புகவொண்ணாத நரகுபுக்காலும் எ-று. தரிக்க - உயிர்தாங்க. எரிவாய்ப்புகுந்து என்றது "பசைந்தாரிற் றீர்தலிற் றீப்புகுத னன்று" (நான்மணி - 13.) என்பது பற்றி. இல் என்று - தான் எய்துந்துணையும் நிற்க என்று. விரிவாய் - விரித்து. (24)

462. பெருங்கபிலன் செய்கையினைப் பேணலன் பாரி
யொருங்குவர லொண்ணு தொழிகேன்—றருங்கை
மறித்துரைத்து வானின் மறைவானுக் கன்னன்
குறித்துரைத்தான் பின்னுங் கோள.

(இ-ள்.)—கபிலன் பெருஞ்செய்கையினை - கபிலன் செயற்கரிய செய்தலை; அது தீப்பாய்தல் என்க. ஒருங்குவரல் - தன்னொடு கூடவருதல். அருங்கை - பிறர் வேண்டுவதை நல்குவதன்றி நல்காமைக்கு அரியகை. மறித்துரைத்து - மறித்தலால் உரைத்து எ-று. மறைவானுக்கு - மறையப் புகுவானுக்கு. (25)

463. ஒத்துக் கலந்த வுயர்கேண்மைக் கோவ்வாயேன்
றத்த புலந்தனைநீ யாதியா—லேத்தாலு
முன்பாலெய் தாம வுயிர்தரியே னேன்றறிஞன்
சேன்றன் றழறேடல் செய்து.

(இ-ள்.)—ஒத்து - உளமொத்து. கலந்த - உயிர்கலந்த. கேண்மைக்கு ஒவ்வாய் என்று-நட்பிற்கு இயையாயென என்னை நினைந்து; நீ புலந்தனையாதி - நீ வெகுண்டனை ஆகிறபை. இன்பந் துய்த்தற்குரிய வானுலகத் துடன்வர லொண்ணாதென்று கைம்மறித்துக் காட்டலான் இங்ஙனங் கபிலன் கருதினான் ஆம். எத்தாலும் - எதனாலும் என்றது நீ மறித்தொழிக என்பதனாலும் எ-று. பெருவீடு கிடைப்பதனாலும் எனினு மமையும். அறிஞன் என்றது இங்ஙனஞ் செல்லற்கு அறிவுடைமை ஏது என்று குறித்து நின்றது. (26)

464. தீத்துரீஇச் செல்லுஞ் செழும்புலவன் கண்முகப்பே
நீத்தருக் கண்ணீர் நெடிதூற்றப் —போத்தந்தார்
பாரி தருமகளிர் பாவையருட் டெய்வமனார்
நேரிழையா ரவ்விருவர் நேர்.

(இ-ள்.)—தீத்துரீஇ - தழல்தேடி. செழும் புலவன் - புலமையாற் செழித்தவன். கண்ணின்று நீத்து அரு நீர் நெடிது ஊற்ற வந்தார் என்க. தீத்தேடிச் செல்வான் கண்முகப்பிலே நீர் நெடிதூற்ற வந்தார் என்ற நயத்தை நினைக்க. பாவையரில் இவரைத் தெய்வம்போல நினைத்துப் போற்றற்குரிய தூய்மையும் அறிவும் உடையார். நேரிழையார் - மெய்யழகிற் கியைந்த மெல்லிய அணியினர். அவ்விருவர் என்றது அங்கவை சங்கவை என்னும் அவரை. நேர் போத்தந்தார் - தனக்கு ஒப்ப வந்தார்; ஒத்தல் - பாரியையும் நல்லாளையும் பிரிந்த துயரத்திலுள்ள ஒப்புமை. (27)

465. பெற்றா ரிழந்த பெருமகளிர் துன்பமெலாங்
கற்றா னறிந்தான் கசிந்துடைந்தா—னெற்றாலு
மிம்மகளிர்த் தாங்க லெனக்கே கடனென்று
செம்மலுளத் தோர்ந்தான் றெளிந்து.

(இ-ள்.)—பெற்றார் - தாய் தந்தையர்; தன்னினும் இம்மகளிர்க்குரிய தேக சம்பந்தம் குறித்தது. பெருமகளிர் - மகளிருட் பெருமையுடையார். துன்பமெலாம் என்றது பெற்றாரைப் பிரிந்த துன்பமேயன்றி அப்பிரிவாற்றாங்குவாராற்றுப் பகையரசரான் நடுங்குவதுங்குறித்ததாம். கற்றான் என்றது எல்லாம் உய்த்துணர்தற்குரிய கல்விவல்லவன் எ-று. கசிந்து உடைந்தான் - உருகித்தன் திட்பஞ் சிதைந்தான் என்றது தான்தீப்புகத் துணிந்ததினின்று வேறுபட்டதை குறித்தது. எற்றாலும் - யாது செய்தேனும்; இரவாதாரிடை

யிரந்தும். எனக்கே - பாரிக்குத் தோழனுகிய எனக்கே. கடனென்று - கடப்பாடென. செம்மல் உளத்து - தலைமை உள்ளத்து. தலைமை - பன்னூலும் உணர்ந்த தலைமை. (28)

466. தீயிற் புகுதல் சிறிது கழித்தாக
தாயிற் புரந்திவரைத் தாங்கவலேன்—மாயி
னிவர்மாய்வ ரின்னே ருயிர்வாழ் வதற்கே
யிவண்வாழ்வல் சின்ன ளினி.

(இ-ள்-)—சிறிது - சிறுகாலம். தாயின் - தாய்போல. தான் தந்தை யாதலினுந் தாயாதல் அரியது; அவ்வரிய நிலையினின்று தாங்கவல்லேன் என்க. "இவரென் மகளிர்" (புறம்-201) என்று கபிலர் கூறுதல் காண்க. மாயின் - தந்தை தோழனுகிய யான்மாயின். இவர் மாய்வர் என்றதனுற் றான்மாயின் என்றதாயிற்று. இவண் வாழ்வல் - இவ்வுலகில் உயிர்வாழ்வேன். இவர் வாழ்வதற்கே வாழ்வல் என்றதனுற் றனக்கென வாழாமை குறித்தான். சின்னள் வாழ்வல் என்றதனுல் இவர் பன்னுள் வாழ்வதனை நினைந்ததாம்: தாயின் என்றது பெண்மக்களைப் பேணற்குத் தாய் சிறத்தல் பற்றி யெனினு மமையும்.

467. சாத லெளிதே தரையிற் கடப்பாடேன்
ருதல் புரிந்திருத்த லார்க்குமரி—தீது
புரிவே னிவரைப் புறந்தந்து பின்ன
ரேரிவாய் விழுகிற்பல் யான்.

(இ-ள்.)—சாதல் - சிறுபோது வருந்தி உடல் நீங்குதல் எளியதே யாம்; கடமைப் பாடென்று ஆவது புரிந்து அதனுல் வருந் துன்ப மெல்லாம் உழந்து நெடுநாள் இருப்பதுதான் அரியது. ஈது - இவ்வரி யதை. புறந்தந்து - காத்து. பின்னர் என்றது யான் இவர்க்குஒன்று செய்யவேண்டாத பின்பு. (30)

468. உள்ளம் வலித்தா னுயிரைப் பொறியோடு
மள்ளிப் பிடித்திங் கமைத்திட்டான்—வள்ளற்குப்
பின்னே யவன்மகளிர்ப் பேணிப் புறந்தருத
றன்னேர் கடனேன்று தான்.

(இ-ள்.)—உள்ளம் வலித்தான் - மனத்தை உறுதி செய்தான். எரிவாய்ப் புகாமலும் புறம் போதற்குரிய பிராணனை ஐம்பொறி களோடும் சேர்த்துப்பிடித்து எ-று. உயிர் போம்போது ஐம்பொறி

களையும் உடன்கொண்டு போதல் வேதவழக்கு. வள்ளற்குப் பின்னே - பிறர்க்கே உபகரித்து உயிர் வாழ்ந்து காட்டியவன் பின்னே எ-று. அவன் மகளிர் என்றது அவன் நெறிபற்றி அயலாரையே பேணற்குரிய யான், அவன் பெற்ற மகளிரைப்பேணல் இன்றியமையாமைபட நின்றது. பேணிப் புறந்தருதல் - புறந்தந்து பேணுதல். தன் நேர்கடன் - தனக்கு நேர்ந்த கடப்பாடு; தனக்கு ஒத்தகடன் எனபதுமாம்.

> " பொறியீச் சுரனு முயிரெவ் வுடலிற் புகுவா னெதினின்று [புறப்படுவான்
> எறிகா ளொருடுமெவ் விடனின் றுமணத் தினையீர்ப் பதுபோ [லிவனீர்த் தெழுமே " (15–8)

என்னுங் கீதைப்பாட்டாற் பொறியுடன்கொண்டு உயிர்போய்ப் பின் பிறிதோருடலிற் புகுதல் உணர்க. (31)

469. தன்னது துன்பத் தனிவெள்ளம் பாரிதரு
பொன்னனையார் துன்பப் புணரியிடை—மன்னிக்
கலந்த தகைமையாற் கற்றான் றனக்கென்
றிலன்று னிருந்தா னிவர்க்கு.

(இ-ள்.)—கபிலன் துன்பத்தினும் பொன்னனையார் துன்பம் மிகப் பெரியதாம் என்பது தெரிய வெள்ளம் எனவும் புணரி எனவும் கூறலாயிற்று. மன்னிக்கலந்த - கலந்து மன்னிய; அவர் துன்பத்தின் வேறாயதோர் துன்பம் இல்லையாயினான் எ-று. கற்றான் தனக்கென்றிலன் என்றது கற்றார் இயல்பு இஃதென்று காட்டிய வாறாம். பொன் - திரு. (32)

470. அருளு மறமு மணைந்து பயந்த
தெருணன் மகளீர் திறம்பாப்—பெருவேளு
நல்லாளு மில்லாதிஞ் ஞாலம்பா ழாயிற்றென்
சொல்வேனென் சொல்விளைத்த தோம்.

(இ-ள்.)—அருள் - தெய்வத்தின் கருணை. அறம் - அவ்வருள் பெறுதற்கு வாயிலாகத் தெய்வம் மறையிற் கூறிய விதிவிலக்குகள். இவ்விரண்டுங் கலந்து பெற்ற ஞானம்போன்ற நன்மகளிர் என்க. அருளைப் பாரியாகவும் அறத்தை நல்லாளாகவுங் கருதிக்கொள்க. திறம்பா - அருளிற்றிறம் பாத வேளும் அறத்திற்றிறம்பாத நல்லாளும் எ-று. அருளும் அறமும் இல்லாமையே ஞாலம் பாழாதற்குக் கார

ணம் என்பது குறித்ததாம். என்சொல் விளைத்ததோம் - என்பாடல் உண்டாக்கிய குற்றத்தை. என்சொல்வேன் - யாதாகச் சொல்வேன்.

471. போற்றிநுந் தந்தை புகழ்பாடு வேன்போன்று
கூற்றை விளித்தேன் கொடுநாவான்—மாற்றார்தம்
வஞ்சனைக்கு வேரானேன் மாய்ந்திலேன் பாரிக்கு
நஞ்சேனத்தா னின்றே னனி.

(இ-ள்.)—நுந் தந்தை புகழ் போற்றிப் பாடுவேன் போன்று. கூற்றை விளித்தேன் - எமனை அழைத்தேன். கொடுநாவால் - கொடுமை நாவினால். மாற்றார் - பகைஞர். வஞ்சனைக்கு - வஞ்ச மரத்திற்கு. வேரானேன் - மூலமானேன். பாரி மாய்தற்கு நஞ்சென நின்றேன்; பாரிக்கு மாய்ந்திலேன் - பாரிமாய்ந்ததற்கு மாய்ந்திலேன். இதனால் அன்பிலேன் ஆவேன். (34)

472. யாரு மிரப்பி னவர்வரையன் பாரிவேள்
வாரேனென் றனென்று வாய்வாழ்த்தி—நேராக
வேவினே னென்னை ரிதுசெய்தா ரென்செய்வேன்
பாவியே னானேனிப் பார்க்கு.

(இ-ள்.)—யாரும் - அன்புடையாரன்றி அன்பிலாரும். அவர் வரையன் - அவரெல்லையிலே யுள்ளவனாவன். வாரேனென்னான் - இரந்தார்பின் வாரேனென்று வாயானுஞ் சொல்லான்; என்று வாய்வாழ்த்தி - என வாயளவில் வாழ்த்துதல் செய்து, நெஞ்சால் ஒன்னாரை இது செய்க என ஏவினேன்: அவர் இக்கொடுஞ் செயல் செய்தார் இது கழுவற்கு என்செய்வேன்: இப்பார்க்குக் கழுவப்படாத பாவமுடையனாயினேன் எ-று. நேராக - பாரிக்கும் பகைஞர்க்கும் எதிர் நின்று ஏவினேன் என்க. "அறம் பூண்டு பாரியும் பரிசிலரிரப்பின், வாரே னென்னா னவர்வரை யன்னே" (புறம் - 108) என்பதைத்தழீஇ யுரைத்தது இஃது. (35)

473. என்று தனைநோந் திரங்கிக் கபிலனழு
கின்ற குரல்கேட்டுக் கேட்டேம்பா—மென்று [மகார்
தாங்கா ரணமாச் சமர்மூண்டு மாய்ந்ததிறத்
தேங்கா வழுதா ரினைந்து.

(இ-ள்.)—இரங்கி - உள்ளம் இரங்கி. அழுகின்ற குரல் - வாயழுகின்ற ஓசை. தாம் காரணமா - தாம் காரணம் ஆக. சமர்

மூண்டு - போர் வளர்ந்து. மாய்ந்த திறத்து - தந்தை மாய்ந்த பகுதியில். எங்கா - எங்கி. இனைந்து அழுதார் - வருந்தி அலறினர். ''அளிதோ தானே பாரியது பறம்பே'' (புறம் - 109) என்னும் பாட்டு மகண் மறுத்தற்றுறை யென்றதனால் மூவர் போர்க்குத் தாங் காரணமாதல் குறித்ததாம். ''யாமு......மூளமே......பாடினிர் செலினே'' (ஷை 110) என்றதனானு முணர்க. (36)

474\. அத்தாவோ வத்தாவோ வாவம்மா வம்மாவோ
வெத்தா லுயிர்வாழ்ந் திருப்பேம்யாஞ்—சேத்தாலும்
போகாத துன்பப் புணரிக் கிடையேமைநீத்
தேகாநின் றீர்விசும்பி னின்று.

(இ-ள்.)—ஆ அம்மா என்க. அத்தா என முற்கூறியது தம் தாயானும் போற்றப்பட்ட சிறப்பு நோக்கி. எத்தால் - எதனால். செத்தாலும் போகாத துன்பப் புணரிக்கு இடை - இவ்வுடல் போனாலும் போகாத துயர்க் கடற்கு நடுவில்: என்றது உள்ளம் பற்று வழிச் சேறலால் மறு பிறப்பினும் இத்துயர் ஒழியாது என்பது கருதியதாம். இவ்வுண்மையைச் சிலப்பதிகாரத்து வஞ்சிக்காண்டத்துச் சேடக் குடும்பி மகளும், அரட்டன் செட்டி யிரட்டைப் பெண்களும் ஆகிய மறு பிறப்பினும் மாதரியும் கோவலன் கண்ணகி தாயரும் முன்னைப் பிறப் புணர்ந்து துயரமுற் றரற்றின ரென்று இளங்கோவடிகள் பாடுதல் கொண்டு உணர்க. துன்பப் புணரிக்கிடை - துயரமாகிய கடனடுவண். எம்மை விட்டு, துன்பமே தொடாத விசும்பி னேகாநின்றீர் எ-று. இன்று - இப்போது. இச்செயல் நுமக்கியல் பன்று எ-று. (37)

475\. பெற்று ரிலாத பிறங்கடையாய்க் கெட்டேமுக்
குற்று ரெவரோ வுதவவலார்—மற்றுர்
புறந்தந்த போதும் புகழ்தக்கீர் நும்போ
லறந்தந்து காப்பரினி யார்.

(இ-ள்.)—பெற்றுரிலாத பிறங்கடையாய் - தந்தையுந் தாயும் இல்லாத மகவாய். கெட்டே முக்கு - நும்மைக் கெடுத்த எமக்கு. உற்றுராய் உதவ வல்லார் எவரோ. ஆர் புறந்தந்த போதும் - யார் காத்த காலத்தும். புகழ் தக்கீர் - புகழ்க்குத் தீணையாதற்குத் தகுதியுற்றீர். அறந்தந்து என்றது தந்தையுந் தாயுந் தம் வாழ்வு கருதாமல் மக்கள் வாழ்வு கருதியே அறஞ் செய்து அவ்வறப்பயனை உதவுதல் குறித்தது: இவ்வரிய செயல் பிறர்பால் நிகழா தென்பதாம்: சீவ

கன் வாழ்தற்கு விசயை நோற்றல் சிந்தாமணியுட் டிருத்தக்க தேவர் கூறுதலான் உணர்க. "உடுத்தாள் கற்றோய் நுண்கலிங்க முரவோன் சிறுவ னுயர்கெனவே" (சிந் - 353) என்பது காண்க. (38)

476. எம்மைப் பிரிய விமைப்பொழுது மெண்ணாத
வும்மைப் பிரிந்துமிவ ணுள்ளேமா—லெம்மைக்
கொளல்கருதா தென்னோ குளிர்வானி னீரே
யொளியுருவாய்ச் செல்வீ ருவந்து.

(இ-ள்.)—இமைப்பொழுது - இமைத்தற்பொழுது. குளிர்வான் என்றதனால் உம்மைப்பிரிந்த உலகு சுடுவதென்பது குறித்தது. நீரே - எம்மை உடன் கொள்ளாது நீவிர்மட்டுமே. துன்பந் தொடாத ஒளி யுருக் கூறியதனால் இவர் துன்பவுருவி லிருத்தல் குறித்ததாம். (39)

477. நீரிவ் வுலகத்தை நீத்தொழிய வோபிறந்தோம்
பாரிற் பிறந்தகத்தைப் பாழ்செய்தோ—மோரின்
மரத்திற் பிறந்து வளர்தீ யனையேம்
புரப்பைக் கெடுத்தேம் புவிக்கு.

(இ-ள்.)—நீத்தொழியவோ - உலகத்தை நீத்து உடலைவிட் டொழியவோ. பிறந்த அகம் மரீஇயிற்று. பாழ்செய்தோம் என்பது "புன்றலைப் பெரும்பாழ் செய்யு மிவணலனே" (புறம் - 346) என் பதைத் தழீஇயிற்று. மரத்திற் பிறந்து வளர்ந்த தீயை ஒத்தேம்: "மரம்படு சிறுதீப்போல, வணங்கா யினடான் பிறந்த வூர்க்கே" ஷை (349) என்பது காண்க. புவிக்குப் புரப்பைக் கெடுத்தேம் - உல்கத்திற்குக் காப்பாயதை அழித்தோம்: (40)

478. கண்ணாக வெம்மைக் கருதினுநீர் நும்முடலிற்
புண்ணாகப் போந்தியாம் பொன்றுவித்தேம்—பெண்
[ணாப்
பிறந்து சிறந்த பெருமையிது வன்றோ
விறந்தும் வசையா மிது.

(இ-ள்.)—நீ ரெம்மைக் கண்ணாகக் கருதினும் என்க: யாம் புண்ணாக நும் உடலிற் போந்து நும்மைப் பொன்றுவித்தேம்; பொன்றுவித்தல் - கொலை செய்வித்தல். பெண்ணா - நமக்கு மக ளாக. சிறந்த பெருமை - கல்வியாற் றலைசெய்த பெருமை. இறந்

தும் வசையாம் என்றது தாம் உள்ளவரையும் வசையாதல் மட்டுமென்று என்பதாம். (41)

479. பல்லார் விழைதக்க பாழ்த்த புறவனப்பே
யில்லாக வேம்மாட் டினியரோ—நல்லார்க்
கெழிலே குடிகெடுப்ப தென்று தெரிய
வழிசே ரளவையயேதோ மற்று.

(இ-ள்.)—பல்லார் என்றது தாம் விழைந்த கணவரல்லாத பிறரை விலக்கற்கு. பாழ்த்த - வறிதாய. விழைதக்க - தாம்விருப்பஞ் செய்யத்தக்க. இதனைப் பாழ்த்த என்க. புறவனப்பு - அகத்தழகல்லா வெளியழகு. நல்லார்க்கு - மகளிர்க்கு. எழிலே - அழகொன்றுமே. குடிகெடுப்பது - பிறந்த குடியை அழிப்பது. வழிசேர் அளவை - வழியளவை; அநுமானம் எ-று. மற்று ஏதோ - வேறியாதோ. ''பெரும்பாழ் செய்யு மிவணலனே'' (புறம்-346) எனச்சான்றோர் கூறுதல் கண்டுணர்க. குடிகெடுத்தல் கூறியதனுற் றுங்கெடுதல் கூறவேண்டாதாயிற்று. ''பகைவளர்த் திருந்தவிப் பண்பி றாயே'' (புறம்-336.) என வருதலான் எழில் பகைவிளைத்தல் உணரலாம். சிந்தாமணியினும் ''வெங்கண் வேந்தர்க் கமிழ்தாகி வேற்கட் பாவை பகையாய, வங்கண்முலை'' (350) எனக் கூறுதல் காண்க. (42)

480. ஆர்த்த கொழுநற் கழகாய்ப் பிறன்காணக்
கூர்த்த குரக்குமுகங் கோள்வலெனப்—பேர்த்த
புகாஅர்த் திருவிழைவாள் பூங்கொடியார்க் கெல்லா
மிகாஅ நெறிகாட்டு மின்.

(இ-ள்.)—ஆர்த்த கொழுநற்கு - தன்னுள்ளம் பிணித்த கணவனுக்கு. அழகாய் - அழகுடையதாகி. பிறன் காண - அயலான் ஒருவன் கண்ட வளவில். கூர்த்த குரக்கு முகம் - குரங்கினுடைய சினத்த முகம்; ''கூர்த்துநாய் கவ்விக் கொளக் கண்டும்'' (நாலடி -70) என்ப. பேர்த்த - முகம் பெயர்த்த. புகார்த் திருவிழைவாள் - புகார்ப் பட்டினத்திருந்த திருவால் விழையத்தக்கவள். மிகா நெறி - கடவாநெறி. இஃதெனக் காட்டும் மின் ஆவள் எ-று. இது ''வேற்றொருவ, னீணேக்கங் கண்டு நிறைமதி வாண்முகத்தைத், தானோர் குரக்குமுக மாகென்று, போன, கொழுநன் வரவே குரக்கு முகநீத்த, பழுமணி யல்குற்பூம் பாவை'' (சிலப் - வஞ்சினம்) என வருதலான் அறியப்படும். (43)

481. பகைவிளைத்தேஞ் சுற்றும் பழிவிளைத்தேந் துன்ப
மிகவிளைத்தேங் கேடு விளைத்தேந்—தகவிழைத்த
பெற்றாரை மாய்த்தேம் பிறந்தகுடி பாழ்செய்தே
மற்றார் சிறந்தார் வனப்பு.

(இ-ள்)—சுற்றம் பகை விளைத்தேம் என்க. பகை விளைத்தல் மேலே காட்டிற்று. பழி - ஈண்டுக்கபிலன் தன்சொற் காரணமென்று தன்னைப் பழிப்பதைக் குறித்தது. துன்பம் - பாரியை யடைந்தார் உற்றது. கேடு - பறம்பும் பறநாடும் உற்றது. தகவு இழைத்த பெற்றார் - சிறந்தன செய்த தந்தை தாயர். பிறந்த குடி - தாம் தோன்றிய வேள்குலம் இங்ஙனம் வனப்புச் சிறந்தார் வேறியாருளர் என்க. (44)

482. பெற்றார் தலையரியப் பெண்பிறந்தார் தாமுளரோ
கற்றாய்ந் துணர்ந்தீர் கழறுவீ—ருற்ற
பெருநாட்டைப் பாழ்செய் பெருவனப்பை நீவி
ரொருநாட்டுங் காணீ ருழந்து.

(இ-ள்.)—தலை அரிய என்றதனால் வாளாகப் பெண்பிறத்தல் நினைந்ததாம்; ஏகதேசரூபகம். உற்ற பெருநாடு - நும்போற் புலவர்க்கு உறவான பெருமையை யுடைய நாடு. உழந்துங் காணீர் என்க. உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. உழந்தும் - வருந்தியும். (45)

483. பேரரச ரெம்மைமணம் பேசும் பரிசிதுவாற்
சீரரசர் காமத்தாற் றீந்தகுடிக்—கோர்குறிதான்
வேறேதும் வேண்டா விறற்பாரி வேள்குடியோ
நீறாய துண்டேன்பார் நீடு.

(இ-ள்.)—மணமாலை சூடாது பழிமாலை சூடுதலான் இங்ஙனங் கூறினார். காமத்தால் - காம நெருப்பால். தீந்த குடி - வெந்த குலம். ஓர் குறி - ஒப்பற்ற அடையாளம். வேள் குடியோ - ஓ வியப்பு. நீடு - பின்வரு நெடியகாலம். (46)

484. யாமும் வருகின்றே மெம்மை யுடன்கொண்டு
போமென்னா முன்னம் புலவர்கோன்—றாமன்னா
சொல்லாற் றடுப்பான் யணிந்தனனாற் பாரிதரு
நல்லார்க் கினிதாய்ந்து நன்று.

(இ-ள்.)—என்னு முன்னம் என்றது உடன் போதற்கு வேண்டு வது புரியாமல் அச்சொல் முடிதற்கு முன்னமே எ-று. தூமன்னு சொல் - வினைத்த தூய்மை மொழி. நல்லார்க்கு நன்று இனி தாய்ந்து. (47)

485. மொழிநொந்தான் கற்ற முதல்வனே பெண்டி
ரெழினொந்தார் தாமேது வென்றார்—வழிவந்த
பாரி கொடையே படுகா ரணமாப்போர்
கூரரசர் செய்த கொலைக்கு.

(இ-ள்.)—மொழி நொந்தான் - தன் மொழியை நொந்தான். "பாரியும் பரிசில ரிரப்பின் வாரேனென்னா னவர்வரை யன்னே" என இவன் கூறிக்காட்டிய மொழி. எழில் - தம் அழகினை; நொந்தாராய்க் கொலைக்குத் தாமேது என்றார். வழி வந்த பாரி; நெறியில் வந்த வேள்பாரி கொடையே தன்னைப் படுக்குங் காரண மாக, தன்னை உடன் வரவேண்டிய பொய்ப்பாணனுக்கும் தன்னை நல்கிய வள்ளன்மையே கொன்றது என்பது கருத்து. போர் கூர் அரசர் - இகல் மிக்கவேந்தர். கொலைக்கு மொழி நொந்தான் என்க.

486. வைய மிழவடுப்ப வானம் விழவெடுத்த
துய்யும் படியிலையந் தோவென்று—செய்வ
தறியா தவலித்தா ராங்குக் கபில
னெறியாற் றெளிவித்தா னீடு.

(இ-ள்.)—வையம் இழவு அடுப்ப - உலகம் இழவு கொள்ள, வானம் விழாவினை எடுத்தது. ஆண்டுப் புகுவதன்றி இழவடுத்த இவ்வுலகத்திருந்து உய்யும் திறனில்லை. எ-று. ஆண்டுப் புகுவதற்குச் செய்வதறியா தென்க. அவலித்தார் - வருத்தத்தாற் றடுமாறினார். நெறியால் - நூனெறியால். (49)

487. பாரிவேள் புக்க பதியிற் புகுதற்கு
நாரியீ ரும்மி னனிவிரைவேன்—சீரியீ
ரும்பொருட் டன்றே வுடலைப் பொறுத்துள்ளே
னென்பொருட் டன்று லிவண்.

(இ-ள்.)—பதி-தேவர். தலைநகர். உடல் பாரம் என்பது தோன்றப் பொறுத்துள்ளேன் என்றான். என் பொருட்டன்று - எனக்கு ஒன்று

செய்து கொள்ளுதற் பொருட்டு அன்று எ-று. இவண் - இத்துயர் நிலத்து. (50)

488. மிகநலம் பெற்ற விழுத்தக்கீர் நீவிர்
தகமணந்து வாழ்ந்து தரையின்—மகவு
படைத்துப் பெருவான் படைப்பதலால் வாளா
துடைத்தற் கிலையுடம்பு சூழ்ந்து.

(இ-ள்.)—உள்ளத்தும் மெய்க்கண்ணும் நலம் மிகப்பெற்று அறிவானும் ஒழுக்கத்தானும் விழுப்பமுடைய தகவுள்ளீர். தகமணந்து- இவைக்கெல்லாந் தக வதுவை யெய்தி. வாழ்ந்து - இல்லறத்து வாழ்ந்து: மகவு படைத்து - மக்கள் வாய்த்து. சூழ்ந்து பெருவான் படைப்பதலால் வாளா உடம்பு துடைத்தற்கில்லை என்க. (51)

489. செப்பிட்ட பூவிற் சிதையாது நந்நலத்துக்
கோப்பிட்ட தூயா ருடன்வாழ்ந்து—மெய்ப்பட்ட
தாய கடன்றீர்த் தறம்வளர்த்த லல்லாது
மாய நினைத்தல் வசை.

(இ-ள்.)—கிடைக்கப் பெற்றால் மோந்து மகிழாது செப்பிலடைத்து வைத்த பூப்போல உள்ளே வாடி யொழியாது. மெய்ப்பட்டது ஆயகடன் - சரீரருணம். அறத்தாற்றின் இன்பந்துய்த்து அறம் வளர்த்தலாற் சரீரருணம் தீர்வது என்பது நூற்றுணிபு: "செய்ப வெல்லாஞ் செய்தனனாதலி, னிடுக வொன்றோ சுடுக வொன்றோ, படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே" (புறம் - 239) என்பதனால் இதனுண்மை யுணர்க. நினைத்தல் வசையென்றது வாளா மாய்தலினுள்ள கேடு தெளிவித்தற்கு. (52)

490. அறத்துக்கு மாய்த லரும்புகழ்க்கு மாய்தன்
மறத்துக்கு மாய்தன் மதியித்—திறத்தல்லாற்
றுன்புக்கு மாய்த றுணிபன்றேத் துன்பத்து
மின்போத் திருத்த லிசை.

(இ-ள்.)—மறத்துக்கு - வீரத்திற்கு. துன்புக்கு - துன்பநீங்கற்கு. துணிபு - அறிஞர் துணிந்தது. துன்பத்தும் இன் போத்திருத்தல் "இன்னாமை யின்ப மெனக்கொளின்" (குறள் - 630) என்பதனானறிக. இருத்தல் இசை பயப்பதாம் என்க. (53)

491. பிறந்தா ரிறக்கின்ற பெற்றி யெவர்க்குஞ்
சிறந்தார் தெருட்டுந் திறத்தின்—மறந்தார்க்குஞ்
சேத்தபறை நாளுளுஞ் செப்பா திருப்பதோ
வோத்த வுணர்வுடையீ ரூங்கு.

(இ-ள்.)—பெற்றி - தன்மை. சிறந்தார் - அறிவிற்றலைமையார். தெருட்டுந்திறத்து இல் - தெளிவிக்குங் கூறுபாட்டிலில்லை. சாவுண்டென்பது, வினையாதார்க்கும் செத்தது காரணமாக ஒலிக்கும் பறை தினந்தோறுஞ் செப்பா திருப்பதில்லை எ-று. நாளுளும் என்றது தினமுஞ் சாவாரும் பிறப்பாரும் உண்டு என்பதுபற்றி. ஒத்த வுணர்வு - உலகிற்கு ஒத்த அறிவு. செத்தபறை - செய்தற்பறை. ஊங்குச் செப்பாதிருப்பதோ. ஊங்கு - மிக. (54)

492. படைகோன்ற தில்லையாற் பாரியை யன்னான்
கோடைகோன்ற தென்சோற் குறிப்பா—னடையு
மிசையேன்ற வோன்றே விடரின்றி யேவர்
மிசைநின்ற தென்றுரையீர் மிக்கு.

(இ-ள்.)—படை - பகை வேந்தர்படை. என்சொற் குறிப்பால் - என்னுடைய புகழ்ச்சொல்லிற் குறித்த பொருளால். நல்வினைசெய்தார் பாற் றானே வந்து அடையும் இசையென்க. ஒன்றே - ஒப்பற்றதோ. இடரின்றி யேவர் மிசை நின்றது என்றது. "நத்தம்போற் கேடும்" (குறள்-235) என்னுந் திருவள்ளுவனார் கருத்தைத் தழீஇயது. மிக்கு நின்றது என்க. (55)

493. அறிவறிந்த மக்க ளலாம லோருவன்
பெறுமவற்றுள் யாமறிந்த பேறு—பிறவிலையா
லுப்பேறு பெற்று ருமைப்பெற்றார் வான்விருந்தா
மிப்பேறும் பெற்றார்க ளீன்று.

(இ-ள்.)—"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட் பேறல்லபிற" (குறள் - 61) என்ப. உப்பேறு - அப்பயன். உமைப் பெற்றார் பேறுபெற்றார் என்றது அறிவறிந்த மக்களாகிய நம்மைப் பெறுதலாற் பயன் பெற்றாராயினர் என்று காட்டியதாம். இப்பேறு என்று வான்ஒளி வடிவினைச் சுட்டிக் காட்டினான் என்று கொள்க. நம்மையீன்று பெற்றார்கள் எ-று. தாய்க் கன்றித் தந்தைக்கும் ஈனுதல் கூறுவது புறப்பாட்டில் "வாளிற்றப்பார், ஈன்மரோ

விவ்வுலகத்தானே" (74) என வருதலான் உணர்க. பதிற்றுப் பத்தின் ஏழாம்பத்துப் பதிகத்தினும் "ஒரு தந்தையீன்ற மகள் பொறையன் பெருந்தேவி" எனவருதல் காண்க. (56)

494. அதுபே றடையா தவரடைந்த வான
மிதுபோ தடைத லியல்பன்—றுதுகாணீர்
மக்க ளிலாதார்க்கு வானம் வழிதிறவாப்
பக்க மறைசோல் படி.

(இ-ள்.)—அது பேறு - அப்பேறு; அந் நன்மக்கட் பேறு. இது போது - இக்கன்னிப் பருவத்து. "அபுத்ரஸ்யகதிர் நாஸ்தி" என்பது வடநூல். வழிதிறவாப்பக்கம் - வாயில் திறவாத கொள்கை. மறைசொல் படியாகிய உது காணீர் என்க. (57)

495. பல்குக வேன்று பரமன் படைத்ததலா
லல்குக வேன்றியற்றி ஞனல்லன்—வேல்புகழீர்
பேண்டிர் தருபேற்றிற் பேருலக நிற்பதேனக்
கண்டீர் தேருளீர் கருத்து.

(இ-ள்.)—பல்குக - பெருகுக. அல்குக - குறைக. வெல்புகழீர் - புகழால் வெல்வீர்; படையாற்றோற்பது ஒன்றாகாது எ-று. தருபேறு - தரும் பயன்களில். கண்டீர் - கண்கூடாகப் பார்த்திர்: இதனைக் கருத்துந் தெருளீர் என்க. ஆணும் பெண்வாயிலாக வரவேண்டுதல் கருதி இங்ஙனங் கூறப்பட்டது. (58)

496. பேண்ணேன்னுந் தூய பேருநிலந்தா னில்லாயின்
மண்ணேன்னு மீண்டுமோரு வானத்து—மேண்ணிற்
கடைக்கண்ணு நிற்குங் கடவுளுக்கு மாமோ
படைப்பேன்னுந் தேய்வப் பயிர்.

(இ-ள்.)—பெண் என்னும் நிலத்திற்குத் தூய்மையும் பெருமையுங் கூறியது அதன் வழியும் அவை யெய்தற்கு. எண்ணின் - ஆராயின். கடைக்கண்ணும் - ஊழிமுடிவிலும். உம்மையால் ஆதியிலு நிலைபெறுதல் குறித்தது. தெய்வப்பயிர் - திப்பியமான கிருஷி. (59)

497. புகழ்சேய் தறங்கோண்டு போகும் பேருவா
னிகழுந் துயர்கோடுபோக் கேண்ணன்—மிக்கயா

மிதனு வுடலெடுத்த விப்பேறு கோட
லெதனுவு மாற்ற வினிது.

(இ-ள்.)—புகழ்செய்து - இவ்வுலகிற் புகழ் செய்துவைத்துத் துணையாக அறங்கொண்டு. இகழும் துயர் - பெரியோர் இகழ்தற்குரிய துன்பம்; கொண்டு போதற்கு வினைத்தல். மிகையாம் - குற்றமாம். உடலெடுத்த இப்பேறு - உடலெடுத்ததனால் அடையத்தக்க இப்பயன்: இந் நன்மக்கட்பேறு எ-று. ஆற்ற - மிக. எதனுனும் எப்படியானும். (60)

498. எல்லார்க்கு மேலா மிசைப்பாரி வேளுக்கு
நல்லாள் பயக்க நனிவந்தீ—ரொல்லுஞ்
சிறப்புக்குஞ் சீருக்குஞ் சேர வளர்த்த
திறப்புக்கோ வாழ்வுக்கோ வீங்கு.

(இ-ள்.)—வேளுக்கு நல்லாள் பயக்க வந்தீர் என்பது "வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன், றன்மகள் பீலிவளை தான் பயந்த புனிற்றிளங் குழவி" (மணிமேகலை - உசு. அடி 3-4.) என்பது போல வந்தது: சிலப்பதிகாரத்தும் "சேரலாதற்கு...சோழன் மகளீன்ற மைந்தன்" எனவருதல் காண்க (வாழ்த்து). சேதியர் பெருமகற்கு, அறஞ்சேர் நாவி னவந்திகை திருவயிற்று......தோன்றிப் பிறந்த நம்பி (5-6-32-39) எனப் பெருங் கதையினும் வந்தது. ஒல்லுஞ் சிறப்பு - இயலுந்தலைமை. சீர் - செல்வம். வளர்த்தது - தந்தையுந் தாயும் வளர்த்தது. தமிழ்ப் பெருமுடியரசரு மடங்க எல்லார்க்கும் என்றதாம். பாரிமேலாதல் "பாரியதருமை யறியார்" எனக் கபிலர் இரங்குதலான் அறியலாம். தந்தை தாயர், மக்களை வாழ்விற்கு வளர்த்தலல்லது இறப்பிற்கு வளர்க்கார் என்று தேற்றியவாறு. (61)

499. நீர்மாயிற் பாரி நெடுமரபு மாயுமாற்
பேர்மாய் விலாத பெருவேளு—மோர்தன்
வழிபெருகு மென்று மதித்ததலா னும்மா
லொழிவுறுமேன் றெண்ணு னுளத்து.

(இ-ள்.)—நெடு மரபு - நெடுங்கால நிலைத்தற்குரிய குலம். தன் பெயர் மறைதலில்லாத வேளிற் பெரியோன் நும்மாற் றன்வழி பெருகுமென்று என்க. வழி ஒழிவுறும் என நினையான். எ-று. (62)

500. உம்மினிய தந்தை யுயிர்த்துணையா னென்பதவன்
செம்மை மொழியாற் றெரிந்துள்ளீ—ரும்மரிய
தந்தைக்குத் தந்தையாய்த் தாயர்க்குத் தாயரா
யெந்த விடர்க்குமுளேன் யான்.

(இ-ள்.)—அவன் செம்மை மொழி - அவன் கூறிய செவ்விதாகிய வார்த்தை. அரிய தந்தை, அரியதாயர் என்க. தாயர் எனப் பன்மையாற் கூறியது செவிலித்தாய் முதலாயினாரும் அடங்க. எந்த இடர்க்கும் - எவ்விடரையும் நீக்கற்கு யான் உள்ளேன் என்க: எந்த இடர்க்கு மென்றது - பேரரசரான் எய்தும் துன்பத்திற்கும் எ-று. (63)

501. பெற்ற குலவேள் பெரிது மகிழ்கூரக்
கற்றதூஉங் கேட்டதூஉங் காட்டாதே—வெற்றெ
[ன்னத்
துவ்வாக் கனிபோற் சுவைமாய்ந் தொழிவதோ
வொவ்வாது நுங்க ளுழை.

(இ-ள்.)—பெற்ற - நும்மைப் பேறாகப்பெற்ற. பெற்றதனாற் குலத்தை உண்டாக்கிய வேள் எ-று. என்பாற் கற்றதூஉம் ஔவை பாற் கேட்டதூஉம் ஒழுகிக் காட்டாதே எ-று. வெற்றென்ன - பிறவி வெறுமைத் தென்னும் வண்ணம். துவ்வாக் கனி - உண்ணாத பழம். நுங்கள் உழை-நும்மிடத்து; பொருந்துவதாகாது என்க. நுங்களுழை என்றது துவ்வாக் கனிபோற்றோன்றி மாய்வார் பிறர் என்பதுபட வந்தது. (64)

502. வாடு பயிர்க்கு மழைபோ லினியவுரை
நீட வுயிர்வந்து நின்றார்க்குத்—தேடு
புகழ்க்கபிலன் பின்னும் பொருந்துசில மாற்ற
நிகழ்த்துங் கடனென்று நேர்.

(இ-ள்.)—நீரின்றி வாடிய பயிர் தளிர்த்தற்கு மழைநீர்போல், வாடிய உள்ளத்திற்கு இனியவுரை நீடுபெய்ய. உயிர்வந்து நின்றார் - முன் உயிர் போயவராதல் குறித்தது. நல்லோர் தேடும் புகழ்தனக் குரிய கபிலன் கடப்பாடென்று நேரேமாற்றம் நிகழ்த்தும் என்க. (65)

503. மறுத்ததிறற் பாரிக்கு மாறாக வேந்தர்
கறுத்துக் கவர்வருளாங் காவார்—நெறிக்க

ணறத்திற் புகுத்து மளவுமுமைக் காக்குந்
திறத்திற் புகுவல் சிறந்து.

(இ-ள்.)—பாரிக்கு மாருக - பாரிதிருவுள்ளத்திற்கு மாறுபாடாக. பகை அரசர் சினங்கொண்டதனுல் நெறியில்லாமல் நம்மைக்கவர்ந்து கொள்வர். நூனெறிக்கணின்று நம்மை இல்லறத்திற் புகுவிக்கும் வரையும் உம்மைக் காத்துய்க்குங் கூறுபாட்டிற் சிறந்து புகுவல் எ-று. உம்மைக்காத்து அறத்துய்த்தபின் இறப்பல் என்பது தன் கருத்தாம். (66)

504. பாரியைக் கொன்ற பழிபா தகர்வேந்தர்
போரி னறத்தைப் புலந்தழித்தார்—பூரியருஞ்
செய்யா தநுசெய்தார் தீயார் புலைமுகத்தி
லையோ விழியோ மற.

(இ-ள்.)—பழி பாதகர் - உலகம் பழிக்கும் பாதகச்செயலுடையர். போரின் அறம் - யுத்த தர்மம். புலந்தழித்தார் - பாரியைப் புலந்தலாற் கெடுத்தார். பூரியரும் - இழிந்த கயவரும். செய்யாதது - செய்ய நினையாத கொலை. தீயார் - தீமைபுருவாயினர். புலை முகத்தில் - இழிவைத் தோற்று முகத்தில். அற விழியோம் - அறவே விழிக்கேம். ஐயோ என்றது அவர் ஆததாயிகள் ஆதல் கருதி இரங்கியவாறு. (67)

505. பொன்னில்லாச் செப்புற்ருர் போன்மூவர் பாரிவேண்
மன்னில்லா நம்பறம்பை மற்ருள்க—வின்னுர்
படைவருமுன் வெய்யோன் பகல்வருமுன் னூர்நீத்
திடையிருங்கான் செல்வ மேன.

(இ - ள்.)—பொன் வைத்ததனுற் செப்புப் போற்றப் படுதல் போலப் பாரி இருந்ததனுற் பறம்பு போற்றப்பட்ட தென்பது. நல்லோனில்லாத பறம்பைத் தீயோர் ஆள்க என்றதாம். நும்பறம்பு என்றது "எங்குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே" என்று இவர் கூறுவதுபற்றியாம். இன்னுர் - இவ்வேந்தர். இன்னுதார் எனினுமமையும். "இன்னுகிய வினியோன்" (புறம்) என்ப. இருங் கானிடைச் செல்வமென்ற அளவில். (68)

506. மனையகத்துப் பூங்கா வனத்துத்தந் தாய்மேய்
வினையனைத்துஞ் செய்தார் விரைந்தார்—தனையோப்பி

றூய கபிலன் றுகடீர் திருவாயா
னேய புரிவா ரியைந்து.

(இ-ள்.)—பாரி மகளிரைக் கபிலர் உடன்கொண்டு சென்றார் என்று கேட்கப் படுதற்கண் நல்லாளும் உடன்சென்றா ளென்பது கேட்கப் படாமையான் மகளிர்க்குத் தாய் அப்போதில்லாமை கருதி இவ்வாறமைக்கப்பட்ட தென்க. பதிற்றுப்பத்துள் "நல்லோள் கணவன்.........வாராச் சேட்புலம் படர்ந்தோன்" (61) என்புழி நல்லவள் கணவனென்று தேவர்சொல்லும்வண்ணம் பாரி மேலுலகு புக்கனன் எனக்சொள்ளவைத்த வாற்றான் இவ்வுண்மை உய்த்துணர லாகும். தாய் மெய்வினை - தாயின் சரீரத்திற்குச் செய்யுங்கன்மம். மனையகத்துப் பூங்காவனம் - மனையகத்தைச் சூழ்ந்த பூஞ்சோலைக் காடு. தனை ஒப்பு இல் - தன்னை ஒப்பது ஒன்றில்லாத அதுலன் எ-று. தூயகபிலன் - அறிவொழுக்கங்களிற் றூயனாகிய கபிலன். துகள் தீர் திருவாய்-குற்ற நீங்கிய எல்லாரும் விரும்புந் தன்மையையுடைய வாய். ஏய - ஏவின; இயைந்து புரிவார் செய்தார் விரைந்தார் என்க. இங்ஙனம் ஏவற்குரிய அறிவும் தூய்மையும் குலப்பிறப்பும் உடைமை காட்டியபடி. (69)

507. பெற்ற வுடலைப் பெருங்கண்ணீ ராட்டினார்
மற்றவர்செய் வஞ்ச மனத்தெண்ணிப்—பற்றியெரி
யுண்ணெருப்பை வாயானே யூதித்தீ மூட்டினார்
விண்ணிருப்பை விட்ட மினார்.

(இ-ள்.)—விண் இருப்பைவிட்ட மின்னார் - மேகத்திருப்பினை விட்டு மண்ணின் வந்த மின்னலாயவர்: கபிலன் தேற்றத்தந்தை தாயொடு சுவர்க்கத்திருத்தலைவிட்ட மின்னார் என நிகழ்ந்த கதைக் கேற்பக் கொள்ளுதலும் ஆம். பெற்ற உடலை - தம்மைப்பெற்ற தாயுடம்பினை. மற்றவர் - வேற்றாராகிய வேந்தர். எண்ணிப்பற்றி எரி உள் நெருப்பை - எண்ணுதலான் உள்ளே பிடித்தெரிகின்ற நெஞ்ச வெக்கையை. வாயானே ஊதிப் புறன் வரவிட்டுப் புறத்துள்ள தீயை மூளச்செய்தார் என்க. (70)

508. ஒத்த வுயிர்மீ துணர்ச்சி யுடையார்தாஞ்
சேத்த வுடற்குச் சிறப்பியற்று—ரெத்தனைசீர்
செய்தாலு மூத்துச் சிதையு முடையுடலோ
பொய்தான்மெய் போலும் பொருள்.

(இ-ள்.)—ஒத்த உயிர் - எல்லா உடலினும் ஒத்துவாழும் உயிர். உயிர்மீதுணர்ச்சி - உயிரின் கண் நிலைத்த வுணர்வு. செத்த உடற்கு- உயிரிறந்த உடலுக்கு. உயிரோடிருப்புழித்தான் உடல் சிறப்பிக்கப் படுதல் குறித்தவாறு. உயிருள்ளபோதே மூத்து உயிரில்லாதபோது சிதையும் உடல் என்க. "உயிரொடு நின்று மூத்த யாக்கை" என்பது புறம். (24) சிதைந்த தன்மை முடையாற் காட்டலான் முடையுட லெனப்பட்டது. பொய்தான் - இயல்பாக உள்ளீ டில்லதுதான். மெய்போலும் பொருள்-உயிருள்ளே இருக்கும்போது உளது போலத் தோன்றும் பொருளாம். எ-று. மெய்போலும் பொருள் மெய்யெனப் பட்டது என்பது கருத்து. (71)

509. பல்லா ரறியாமற் பாரி மகளிரைக்கொண்
டல்லார் நிலவி னருங்கானஞ்—செல்லாநின்
றெல்கூர் வதன்முன் னிரும்புலவ னுங்கணெறி
யில்லாதுஞ் சேன்று னெழுந்து.

(இ-ள்.)—பல்லார் - தமரும் பிறரும் ஆகிய பலரும். எல் கூர் வதன்முன் அல்லார் நிலவின் என்க. எல் கூர்தல் - பகல் மிகுதல். பலர் அறியாமற் சேறற்கு அல்லும் அருங்கானத்துத் தாம் சேறற்கு நிலவுந்துணையாதல் கருதிக் கூறிய வாறும். "அற்றைத் திங்களவ் வெண்ணிலவின்" என்னும் புறப்பாட்டான் இவர் பறம்பு விட்டுப்புறப் பட்டது வெண்ணிலாப் போது என்பது உய்த்துணர்ந்து கொள்க. அருங்கானம் சேறல் குறித்தது 'கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற் கடும்புலிவாழுங்காடு நன்றே' (நறுந்தொகை) என்பதனுல் இயைதல் காண்க. இரும்புலவன் - பெரும் புலமையாளன். ஆங்கண் நெறியில் லாதும் - அச்சானகத்து நெறியில்லா இடங்களிலும். (72)

510. கரந்து படுத்த கடுநெறியைப் பற்றி
விரைந்து மகளிருடன் மிக்கோன்—பரந்த
கொடுங்கா னகத்துக் குறுந்து றேளித்து
நெடுங்கால் வழிச்சேன்று னீடு.

(இ-ள்.)—கரந்து படுத்த கடுநெறி - எயிலினின்று அடைபட்ட போது புறன் போதற்கு ஒளித்துப்பதித்த கடிய சுருங்கைவழி. கடுநெறி என்றது சில்வழி என்றதுபற்றி (மணி - 12 - 79) குறுந் தூறுஒளித்து - சிறு காட்டுப் புதல்களில் மறைந்து. காலிற்செல்லு நெடுவழி என்க. தெரிந்தார் அல்லாது பிறர்புகுதலிற் கொடுமையுடைய

கானகம் எ-று. கரந்துபடுத்த நெறியைக் கூறியது கபிலன் மகளிரை உடன் கொண்டு சேறல் ஊரார்க்கும் அறியப்படாமை குறித்தது.

511. விடியற் படைசூழ மேவிப் பறம்பை
நொடியிற் கவர்ந்தனர்தா நொய்தா—முடிவேந்தர்
பெண்டேடிச் செய்த பெரும்போரி னுலவரைக்
கண்டேடி னூரெங்குங் காத்து.

(இ-ள்.)—விடியல் - இருள்விடிந்த பொழுதில். நொடியில் - கைந்நொடிப் பொழுதில். நொய்தாக் கவர்ந்தனர் - எளிதாக வவ்வினர். பெரும்போர் - இகழ்ச்சிக்குறிப்பு. காத்து - பிறர்புறம் போகாது போற்றி. கண்ணுற்றேடினர் என்க. போர் புரிவாரின்மை யால் நொடியில் நொய்தாக் கவர்ந்தனர் எ-று. அவரை - அம் மகளிரை. (74)

512. மணியில் கிழியை வறிதவிழ்த்துப் பார்த்துப்
பிணிகொள் பவரிற் பிணங்கித்—தணியாத்
துயர்க்கடலின் மூழ்கினர் சூழ்கொடிய வஞ்ச
மியற்றியதா னும்பயனில் லென்று.

(இ-ள்.)—கிழியை அவிழ்த்து மணியில் வறிதுபார்த்து நோய் கொள்பவரையொப்ப. மணியில் வறிது - மணியில்லாத வறிய தன்மை. கிழி - மணி முதலியன முடித்த துகில். (75)

513. வஞ்சத்தை யோர்ந்து மகளிரு நற்றாயு
நெஞ்சத் தறிஞருட னீறுற—ரஞ்சா
விறலோரைக் கோள்ள மிகைசெய்தே மென்றே
யிறலானு ருள்ள மிளைத்து.

(இ-ள்.)—தாம்செய்த வஞ்சத்தை அறிந்து வெறுத்தற்குரியார் மகளிருந் தாயும் அறிஞரும் என்பது குறிப்பு. நீறுற்ற என்றது தாய்க்கடனிகழ்ந்த இடனேக்கியபின் என்க. அஞ்சாவிறலோர் - சாவிற்கு அஞ்சாத மனவலியுடைய மகளிரை. கொள்ள - கவர்ந்து கொள்ள. மிகை செய்தேம் - குற்றச்செயலை இழைத்தேம்; என்று உள்ளம் இளைத்து. இறலானுர் - சிதைதலுற்றனர். (76)

514. பறம்பு கவர்ந்தும் பயனில்லை யென்றே
புறம்பு படைமீட்டுப் போனுர்—மறம்போலிந்த

வாகைக்கு மாருக வன்பழியே சூடிப்போ
யோகைக்கு மாருஞ ரோய்ந்து.

(இ-ள்.)—பறம்பு கவர்ந்தும் பயனில்லை என்றது மகண் மறுத்தல் காரணமாக எழுந்த போராதல்பற்றி. படைமீட்டுப் புறம்புபோனுர். மறம்பொலிந்த வாகைக்கு - வீரத்தின் விளங்கிய வெற்றிமாலைக்கு. வன்பழி - அழிக்கலாகாத வலிமையையுடைய வசை. சூடி - தந்தலை மேற்கொண்டு; "கரப்பினுங் - கொன்ருர்மே னிற்குங் கொலை" (நான்மணி. 90) என்றது காண்க. ஓய்ந்து ஒகைக்கு மாருஞர்-மனந்தளர்ந்து உவகைக்குப் பகைவராயினர்; என்றதனுற் றுன்பத் திற்கே நட்பாயினுர் எ-று. மறம்பொலிந்த வாகை - வெற்றிமடந்தை விளங்கிய வாகை எனினுமாம், "கடவுள் வாகை" என்பது பதிற்றுப் பத்து (66) (77)

515. அறம்பழித்து வேளை யறவழித்துச் செய்ய
பறம்பழித்துப் பண்ணுத பண்ணி—மறம்பழித்துப்
பாவலர்சேந் நாவிற் பழிபாட மூண்டதரோ
காவலர்வெங் காமக் கனல்.

(இ-ள்.)—வேளின் அறத்தைப் பழிசெய்து. வேளையறவழித்து-பாரிவேளை அறவே அழித்து; நல்லாளும் இறத்தலான் அறவழித்து என்றதாம். செய்யபறம்பு அழித்து - செம்மையையுடைய பறம்பு மலையின் வளத்தை அழித்து. இவை செய்தற்கு யாரும் பண்ணுத கொடிய வஞ்சத்தைப் பண்ணி எ-று. மறம் பழித்து - வீரத்தைப் பழித்து. பாவலவர் செவ்விய நாவாற் பழியைப்பாடும்படி காவலர் வெம் காமமாகிய கனல் மூண்டது என்க. (78)

516. தலையாய நாவலந் தண்பொழின் மூவர்
கொலையானே யுள்ளங் குலைந்தார்—நிலையாகச்
சின்னுளும் வாழார் சிதைந்து புகுந்துழந்தா
ரெந்நாளு மீளா விருள்.

(இ-ள்.)—நாவலந் தண்பொழிற்குத் தலையாய மூவர். உள்ளம் கொலையானே குலைந்தார் என்றது "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க ளைந்து மகத்தே நகும்" (குறள். 271) என்பதுபற்றி. சில் நாளும் நிலையாக வாழார் - சில நாளளவும்கூட வாழ்க்கை நிலையாக இல்லாதவராய். சிதைந்து - உடல் சிதைந்து. எந்நாளும் மீளா

இருள் - நித்திய நரகத்து. இதனை " வரையா நிரயத்துச் செலீயரோ வன்னை " (குறுந்தொகை. 292) என்பதனானுணர்க. இருள்புகுந்து உழந்தார் - நரகிற்புக்கு வருந்தினர் எ-று. (79)

517. வழியெஞ்சி மாய்ந்த மறமன்னர் பின்னே
பழியஞ்சு தாயத்தார் பாரைத்—தழீஇநின்று
பண்பிற் பிரியாப் பழங்குடியின் சீர்க்கிளைய
நண்பிற் புரந்தார் நனி.

(இ-ள்.)—வழியெஞ்சி மாய்ந்த மறமன்னர் - தமக்குச் சந்ததி யில்லாது மறைந்த பாவ வேந்தர். பழியஞ்சு தாயத்தார் - இவர் செய்த பழியை அஞ்சி யொழுகுகின்ற தாயவேந்தர். பாரை - பார் மகளை. பண்பு - பாடறிந்தொழுகல். பழங்குடி - மறமன்னர்க்கு முந்திய பழமைக்குடி. நண்பின் - யாவரோடும் பகைமை கொள்ளாத நட்பின்கண். (80)

518. பறம்படுத்த கையறவு பாடினேஞ் சொல்வே
மறம்படைத்த மூவர் வருமுன்—புறம்படுத்த
சீர்ப்பா வலவன் றிருமகளி ருய்த்துப்போய்ப்
பார்ப்பார்ப் படுத்த படி.

(இ-ள்.)—பறம்பு அடுத்த கையறவு - பறம்புமலை எய்தியதுன்பம். மறம்படைத்த மூவர் - பாவத்தை உண்டாக்கிய மூவேந்தர். புறம்பு அடுத்த - பறம்புமலையின் புறத்து எய்திய. திருமகளிர் - திருமகளொத்த மகளிரை. உய்த்துப் போய் - உடன் கொண்டு சென்று. பார்ப்பார்ப் படுத்தபடி - அந்தணரிடத்து அடைக்கலமாக வைத்ததிறம் சொல்வேம் என்க. படுத்தல் - வைத்தல்; " அருங்கடிப்படுக்கு வளறனில் யாயே " (அகம் - 60) என்புழிப் பழைய வுரைகாரர் காவற் படுத்துவள் எனக்கூறியதனை னுணர்க. நீர்ப் படுத்து என்புழி நீரிடை வைத்து எனப்பொருளாதலும் காண்க. "நங்கை தன்னை நீர் படுத்தி" என்பது சிலப்பதிகார வாழ்த்துக்காதை (உரைப்பாட்டு மடை.) 113-ஆம் புறப்பாட்டுக் கொளுவில் " அவன் மகளிரைப் பார்ப்பார்ப்படுக்கக் கொண்டுபோவான் பறம்புவிடுத்த கபிலர் பாடியது" எனவும் 236-ஆம் புறப்பாட்டுக் கொளுவில் "வேள்பாரி துஞ்சியவழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது" எனவும் வருமிடங்களினும் பார்ப்பார்ப்படுத்தல் என்பது பார்ப் பாரிடன் வைத்தல் என்னும் பொருட்டாம். கபிலன் பல்லிடத்தும் கொண்டுபோய் இறுதியாக அம்மகளிரைப் பார்ப்பாரிடன் வைத்து

விட்டு வடக்கிருத்தலான் அம்முடிந்த செயலையே ஈண்டுப் 'பார்ப்பார்ப் படுக்கக் கொண்டு போவான் பறம்புவிடுத்த' என்றுரெனக. இங்ஙனம் கொள்ளாது பறம்பு விடுக்கும் போதே கபிலர் அம்மகளிரைப் பார்ப் பார்க்கு மணஞ்செய்தல் கருதினராயின் அவர் அவரை விச்சிக்கோ, இருங்கோவேள் என்னும் பலர்பாற் கொண்டு மணஞ்செய்து கொள்ள வேண்டுதலும் " எவ்விதொல் குடிப்படீஇயர் மற்றிவர்" (புறம் - 202) என இவர்பாடுதலும் பொருந்தாமை காண்க ; பறம்பு விடுக்கும்போது இவர் " சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே, கோறிரண் முன் கைக் குறுந்தொடி மகளிர், நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே " (புறம் - 113) எனப்பாடுதலானும் பார்ப்பார்க்கு மணப்பித்தல் இவர் கருத்தே இல்லாமை நன்குணர்க. திருக்கோவலூர் வீரட்டானேச் சுரர் கோயிற்சாசனப் பகுதியும் "மொய்வைத் தியலு மூத்தமிழ்... கபிலன், மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப், பெண்ணை மலை யர்க்குதவிப் பெண்ணை, யலைபுன லழுவத் தந்தரிகூஞ்செல, மினல் புகும் வீடுபே றெண்ணிக் கனல்புகுங் கபிலக்கல்லது " ⁕ எனக் கூறுதலானும் இம்மகளிர் பார்ப்பார்க்கு மணஞ்செய்யப்படாமை யுணர்க. (81)

10. கையறவுரைத்ததிறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள். (81)

---

## 11. கபிலர் மகளிரைப் பார்ப்பார்ப்படுத்த திறம்.

519. பறம்பிற் படையும் பகலும் வருமுன்
புறம்பி னடைந்துவனம் போனான்—றிறம்பாத
தூயோன் மகளிரோடு சூழ்ந்தேகி யெப்படிக்குந்
தீயோர் விழியாத் திறத்து.

(இ-ள்.)—படையும் பகலும் வருமுன் என்றது மகளிரைக்கவ ராமைக்கும் அவரை உடன் கொண்டு சேறல் தெரியாமைக்கும் என்று கொள்க. புறம்பு - எயிற்புறம். வனம் - எயில் சூழ்காடு. திறம்பாத தூயோன் - தூய்மை திறம்பாதவன். மகளிரொடு சூழ்தல் - அவ்வாறு புறப்பட்டுப் போதற்கண் அவருடன்பாட்டினை ஆராய்தல். தீயோர் விழியாத்திறத்து - தீமையையுடைய அரசர் இங்ஙன்மகளிரைப் பாராத கூறுபாட்டில். (1)

---

⁕ செந்தமிழ்த்தொகுதி. 4 - பக்கம், 232 - பார்க்க.

520. வேள்பெற்ற மக்கள் விழைதக்கார் வண்பறம்பின்
றாள்வெற்பை நண்ணியவத் தண்ணிலவி—னாள்
[பெற்று
நீடச் செலாத நிலையாமை நோக்கியிது
பாடப் புகுந்தார் பரிந்து.

(இ-ள்.)—வேள்பெற்ற மக்கள் என்பதனாற் குடிப்பிறப்பும், விழைதக்கார் என்பதனால் அவர் இயற்கையும் செயற்கையுமாகிய வனப்பும் பிறவுங் குறித்தல் காண்க. தாள் வெற்பு - பாதசயிலம். நீடநாள் பெற்றுச் செல்லாத நிலையாமை என்க. நோக்கி - உள்ளத்துணர்ந்து. இது - வருஞ்செய்யுளைச் சுட்டியது. பரிந்து - அந்நிலையாமைக்கு இரங்கி. (2)

521. முந்தை மதியின் முழுவெண் ணிலவினெமக்
கெந்தையுமுண் டெங்குன்று மேதிலர்போர்—வந்து
[கொளா
ரிற்றை மதிநிலவி லெந்தையுமில் லெம்பறம்பும்
வெற்றி யறைவேந்தர் வெற்பு.

(இ-ள்.)—இஃது "அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்" (112) என்னும் புறப்பாட்டையே தழீஇக்கூறியது. முந்தை மதியின் - முற்றிங்களில். இதனால் பாரியுடன் மூவர்பொருத பின் போர்க்காலம் ஒருதிங்களென் றுய்த்துணரலாம். முழு வெண்ணிலவு - முழுமதியின் வெண்ணிலவாம். ஏதிலர் - பிறர். போர் வந்துகொளார் - போரின் வந்து கொள்ளமாட்டார்; பாரியுள்ளபோது இரந்து கொள்வர் என்பது குறிப்பாம். இற்றைமதி - இற்றைத்திங்கள். நிலவின் - நிலாப்போதில். எமக்கு எந்தையும் உண்டு-எமக்குத் தந்தையுந் தாயும் உண்டு. எ-று. பாரியுளகாறும் போரிற் கொள்ளமாட்டாத பொய் வேந்தர் வெற்பு எம் பறம்பும் ஆயிற்று என்க. வெற்றியறை வேந்தர் - இகழ்ச்சிக் குறிப்பால் வந்தது. வஞ்சித்துப் பற்றினர். எ-று. எந்தையும் இல் - தந்தையுந் தாயும் இல்லை. உம்மைகளாற் றாயுங் கூறிக்கொள்க. எந்தையுமில் என்றதனால் யாக்கை நிலையாமையும், எம்பறம்புவேந்தர் வெற்பு என்றதனாற் செல்வ நிலையாமையும் பற்றி இரங்கிய வாறும். முன்னைப்போர் யாண்டு பல (அகம்-78) ஆதலுணர்க. (3)

522. என்றும் பயின்ற வினிய குளிர்பறம்பைச்
சென்று மறப்பேமோ தீவினையே—நன்றியிலா

தூன்புகுந்த யாக்கை யொழிகின்ற காலத்தும்
வான்புகுந்த போழ்தத்து மற்று.

(இ-ள்.)—சென்று - பிரிந்துபோய். நன்றிசெய்ததை மறத்தல் தீவினையின் பயன் என்பது கருத்து. நன்றியிலாது மறப்பேமோ என்க. நன்றியிலாது - நன்றி நினைத்தலிலாது எ-று. உயிர் என்பது வருவித்துக்கொள்க. உயிர் யாக்கை ஒழிகின்ற காலத்தும், உயிர் வான்புகுந்த போழ்தத்தும் என்று கொள்க. "சாதலினின்னாத தில்லை" (குறள் - 130) என்பதனால் யாக்கையைப் பிரியும் கேட்டினும் "வான்புகுந்த போழ்தத்தும்" என்றதனாற் பெருவாழ்வினும் மறப்பேமோ என்றார் எனக்கொள்க. (4)

523. பாரிக் கினியையாய்ப் பன்னாட் பயில்பறம்பே
யாருக் கினியை யெனவிருப்பாய்—போருக்கு
வஞ்சத்தான் மிக்கமற மன்னர்க்கோ வஞ்சத்தை
யஞ்சிப்போ வார்க்கோ வறை.

(இ-ள்.)—பாரிக்கு இனியை என்றது பறம்பு பாரியுள்ள காலமெல்லாம் அவற்கு இனிய வளங்களைச் செய்தது நினைந்து கூறியதாம். போர் உக்கு - போரின் உகுதலான் என்க. வஞ்சத்தால் மறமிக்க மன்னர்க்கோ. மறம் - பாவம். வஞ்சத்தை அஞ்சிப்போவார் - பாரி மகளிரும் கபிலரும் ஆகக்கொள்க; தம்மையே பிறர்போலக் கூறியதாம். வஞ்சத்தை யஞ்சுதல் அறிவார் தொழில் என்க; "அஞ்சுவ தஞ்ச லறிவார் தொழில்" (குறள் - 428) என்ப. (5)

524. மாரி நினக்கீத்த மல்லற் பெருவளனே
பாரி நினக்கீத்த பல்புகழோ—வோரிற்
பறநாடு வாழப் படைத்த பறம்பே
யிற்வாது நிற்ப தேது.

(இ-ள்.)—மல்லல் - ஈண்டு அழகு; "மல்லற்றன்னிறம்" (திருக்கோவை - 58) என்ப. பல்புகழ் - வீரத்தானும், கொடையானும் நல்கிய பலபுகழ். வளம் நிலைநில்லாதழிதலும் புகழ்நிலைத்தலும் உய்த்துணர்க. கபிலர் பறம்பை நோக்கி "யாணர்த்து நந்துங்கொல்லோ" (புறம் - 119, 120) எனப் பாடுதலான் அறிக. பறம்பிற்கும் மாரியினும் பாரி சிறத்தல் காட்டியவாறு. அளக்கலாகா வளமுடைமையான் நாடுவாழப் படைக்கப்பட்டது மலையென்பது உணர்க, (6)

525. கற்றார்க்கு வாயிற் கதவ மடையாம
லெற்றாலு மீத்த வெழிற்பறம்பே—வற்றா
விசைபூண வல்லா யினியில்லை யென்று
வசைபூண வல்லையோ மற்று.

(இ-ள்.)—கற்றார்க்கு என்றதனாற் கல்லாத பகைஞர்க்கு அடைத்தல் நிகழ்ந்தது குறித்ததாம். எற்றாலும் - எப்படியானும். உடல் பொருளுயிர் எனப்பட்ட பலதிறத்தானும் ஈதல் நிகழ்ந்தது நினைக்க. ஈத்த எழில் - ஈந்ததனாலாய எழுச்சி. எழுச்சி - யாண்டுந் தோற்றஞ் செய்தலுடைமை. வற்றா இசை - இனி நின்கண் வளம் வற்றினும் வற்றாத புகழ், பூணவல்லாய் எ-று. பாரியுடன் பல்காலம் பயின்ற சிறப்பால் வசைபூண வலியை யல்லை என்று கருதிக் கூறியதாம். இல்லை யென்று - இரப்பார்க்கு இல்லை யென்னுஞ் சொல்லைச் சொல்லி.
(7)

526. மலைப்பட்ட தார மலைக்கென்ன செய்யு
மலைப்பட்ட தாரமு மாங்கா—நிலைப்பட்
டுனக்குதவே மேனு முனையுள்ளு மெம்போ
னினைப்பையோ வெம்மை நெடிது.

(இ-ள்.)—மலைப்பட்ட தாரம் - மலையின்கணுண்டாகிய பல பண்டம்; பொன்னும் சந்தனமும் முதலியன. அலைப்பட்ட தாரம் - திரைக் கடலினுண்டாகிய பல பண்டம்: அவை முத்தும் பவளமும் முதலியன: இப்பொருள்கள் மலைக்குங் கடற்கும் ஒன்று உதவாமை கருதிக்கொள்க. நிலைப்பட்டு - ஒரு நிலைமையில் நின்று. உனக்கு - எம்மைப் பிறப்பித்த நினக்கு எ-று. மலைப்பண்டமும் கடற்பண்டமும் போற், பிறந்தகத்திற்கு உதவே மேனும் அப்பொருள்களின் வேறாய் மக்களாய்ப் பிறந்த தன்மையால் உனக்கு ஒன்று உதவிலேமே என்று எப்போதும் நின்னை நினைதலுடையேம் என்றுதெரிய, உனையுள்ளு மெம்போல் என்றார் என்க: நினைத்தற்குரிய கருவிகள் மலைக்கண் வெளிப்படலில்லாமையால் எம்போல் நினைப்பையோ என்றார் என்க: "தொழுதனிற் பழிச்சிச் சேறும் வாழியோ பெரும்பெயர் பறம்பே" (புறம் - 113) எனக் கபிலர் பாடுதலான் இம்மலைக்கு அறிவுண்டோ என்னும் ஐயுறவால் இங்ஙனங் கூறினாரெனினு மமையும்: இனித்தொல்காப்பியனார் செய்யுளியலுள் "ஞாயிறு திங்கள்......அவையல பிறவு நுவலிய நெறியாற், சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ் சொல்லியாங்கமையு மென்மனார் புலவர்" (201) என்புழிப் பிறவு

மெனக் கூறியது பற்றிக் கேட்குந போலவைத்து மலையை விளித்துக் கூறினரென்பதும் ஆம். (8)

527. நிழல்போ லெழான்முன் னேவிண் பருந்திற்
குழல்போ னறிய குரற்பாட்—டேழலி
னினிய விசைகேட் டெதிரோலித்த வெற்பே
யினியென் னெதிரோலிப்பா யீங்கு.

(இ-ள்.)—நிழல் போல் எழால் முன் - பருந்தின் நிழல் போன்ற யாழ்க்கு முன்பு. பருந்தின் - பருந்துபோல, நறிய குரற்பாட்டு எழலின் என்க. குழல் போல் நறியகுரல் என்றது அப்பாட்டுக்குரிய குரல் குழல்போல் நல்ல இன்னோசை யுடைத்தென்று குறித்தவாறு. குழல் இனிமைக்கும் பருந்து பறத்தல்போலப் பாடற்கும் உவமையாதலின் உவமைக் குவமை யாகாமை யுணர்க. "குழலொடு கண்டங் கொள" என்றார் மணிமேகலையினும் (சிறைக்கோ - 210). குழல் போனல்ல குரற்பாட்டுப் பருந்தின் எழலின் என்க. பருந்துபோல உயரச்சென்று ஆராய்ந்து இறங்குதலின் என்று கொள்க. "பருந்து மெழாலும்" என்னுஞ் சிந்தாமணிப் பாட்டையும் (730) அதற்கு நச்சினார்க்கினிய ருரையையும் காண்க. "பருந்தொடு நிழல்சென் றென்னப் பாட்டிசைப் பயன்றுய்ப்பாரும்" என்று கம்பநாடர் "பருந் தொடு அதன் நிழல்சேறல் குறித்தாரன்றி நிழலொடு பருந்துசேறல் குறிக்காமையின் பருந்தும் நிழலும் உடனிகழுமாயினும் நிழலுக்குப் பருந்து முற்படல் கருதிற்று. அவ்வாறே யாழ் பாட்டொடு நிகழ்வ தாயினும் பாட்டு யாழ்க்கு முற்படுவதேயா மென்க. இடையீடு வெளிப்படாது பாட்டொடு நிகழ்வதாயினும் பாட்டு யாழ்க்கு முற்படுவ தேயா மென்க. இடையீடு வெளிப்படாமல் ஒத்த நினைப்பால் யாழ், நிகழ்குரலொடு சேர்தலின் உடனிகழ்வது போல்வதென் றுணர்ந்து கொள்க. "குழல்வழி நின்றதியாழே" (சிலப் - அரங்கேற்று) என் புழி அரும்பதவுரை யாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் "மிடற்று வழிப்படியாழாகலான்" எனக் கூறுதலானும் இவ்வுண்மை புணர்க. குரற்பாணரும் யாழ்ப்பாணரும் இனி வாராதலான் இனிய இசை கேட்டெதிரொலித்த லில்லை எ-று. பாட்டுக் குரலானும் யாழ் விரலானும், குழல் வாயான் ஊதலானும் விரலானும் இசை நிகழ்த்தல் உணர்க. "ஊதுசீர்த் தீங்குழல்" என்பது பரிபாடல் (உஉ). (9)

528. கோடைபயின்றே நின்பாற் குழப்பருவந் தோட்டு
நடைபயின்றேங் கல்வி நயந்து—குடைவெயில்காய்
கோவாய வர்க்கே குலைந்தேம்போ லாகாது
நீவா ழியரோ நிலத்து.

(இ-ள்.)—குழப்பருவம் - இள வயது; கல்வியானடை பயிறற்கு முன்னர்க் கொடைபயிறல் கூறியது நடை பயின்றார் பாலுங் கொடையருமை குறித்து. நடைபயிறற்கு முன்னே ஒருயிர்க்குக் கொள்வதுங் கொடுப்பதும் பிறந்தது தொட்டு நிகழ்த லுய்த்துணர்ந்து கொள்க. நின்பாற் பயின்றேம் என்பது நின்னிடத்து நிகழ்ந்த வள்ளன்மையான் மட்டுமன்றி நீ உண்டாக்கிய பல்பொருளையும் வேண்டினர்க் கீத்து விளங்கிய கொடைமையை நின்கட் பயின்றேம். எ-று. "பெட்டாங்கீயும் பெருவளம் பழுநி" (புறம் - 113) என்றது நோக்குக. கல்வியை விரும்பிக்கற்று நின்னடையைப் பயின்றேம் என்க. என்றது அளக்கலாகாத நிலையினிற்றலும் பலபொருள்களை உபகாரப்பட உண்டாக்குதலும், துளக்கலாகா நிலைமையும் புகழ் செய்தலும் வறந்துழியும் பிறர்க்குதவலும் அஞ்சினார்க் கரணாதலும் முதலாகிய பல ஒழுக்கங்களையும் நினைந்தென்க. இனிக்கொடை பயிறற்கும் நடைபயிறற்கும் இடனாக நின்றது பற்றிக் கூறினா ரென்றலு மொன்று. குடைவெயில்காய் கோ ஆயவர் - நிழல்செய்ய எடுத்த குடையால் அற நிழல் செய்யாது வெயில் போலக்காயும் அரசராயினவர். "தண் குடைவெம்மை விளைத்ததிது வென்னே" எனச் சிலப்பதிகாரம் ஊர் சூழ்வரிக்கண் வருதல் காண்க. கோ - இராசசாதி. எம்போல் ஆகாது - எம்மைப்போல் வறுமைப்பட்டுப் புறன் போகாது. எ-று. அவ்வேந்தராற் கவரப்படுதற்கு அஞ்சித் தாம் புறம்போதல் குறிப்பானுணர்த்தியவாறு. (10)

529. என்று பறம்பை யினிதிசைத்துப் பாடினார்
சென்றனர்கால் கண்க டிருமுவார்—கன்று
புலவன் கபிலன் புகழ்வெற்பை நோக்கிச்
சிலநன் றிசைப்பான் றெரிந்து.

(இ-ள்.)—இசைத்து - புகழ்ந்து. கண்கள் திருமுவார் கால் சென்றனர் என்க. கன்று புலவன் - மனங்கன்றிய அறிவன். புகழ் வெற்பு என்றது புகழ்வடிவாகிய மலை எ-று. 'பெரும்பெயர்ப் பறம்பே' என்பது காண்க. (புறம் - 113) தெரிந்து - உள்ளத்து அத்தன் நன்று

தெரிந்தனல். சில இசைப்பான் - சில புகழ்வான். சில சொல்லக் காமுறுவ ஞதலிற் சில இசைத்தல் கூறிற்று. (11)

530. பெட்டாங் களிக்கும் பெரிய வளம்பழுநி
நட்டாய் பறம்பேமுன் நன்பாரி—பட்டானய்
நீர்வார்கண் ணேமோய்ந்து நின்னைத் தொழுதிசைத் [துப்
பேர்வா னெழுந்தேம் பிரிந்து.

(இ-ள்.)—இது "பெட்டாங் கீயும் பெருவளம் பழுநி
நட்டனை மன்னே முன்னே யினியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே"
(புறம். 113)

என்னும் அடிகளையே தழீஇக்கூறியதாம். பெட்டாங்கு - விரும்பிய பரிசே. பழுநி - பழுத்து; முதிர்ந்து எ-று. முன்னே - பாரியிறத்தற்கு முன்னே. நட்டனை- எம்மொடு நட்புச்செய்தனை. பாரி பட்டாளுய் - பாரிதானே இறந்தானக; என்றது கொடையாற்றன்னை நல்கித் தானே பகைஞர் கைப்புக்குப் படுதல் குறித்ததாம். நூலுள்ளும் கபிலர் "பாரிமாய்ந்தென" (புறம் - 113) எனக் கூறியதன்றிப் பாரியை மாய்த்தாரெனக் கூருமை காண்க. ஒய்ந்து - உள்ளமும் உடலும் ஒய்வுற்று. பிரிந்து பேர்வான் - நின்னைப் பிரிந்து வேற்று நாட்டுப் பெயர்தற்கு. நட்புடையதைப் பிரிதலருமை காட்டியதாம்.

531. கோறிரண் முன்கைக் குறுந்தொடியார் வேண்மகளிர்
நாறிருங் கூந்த னலந்தீண்டும்—பேறுடைய
நல்ல கிழவோரை நாடி நினைப்பழிச்சிச்
செல்லுதும்யாம் வாழ்பறம்பே சீர்த்து.

(இ-ள்.)—இது, "நிற்பழிச்சிச், சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே, கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர், நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" (புறம் - 113) என்னும் அடிகளையே தழீஇயதாகும். கோல் - கோற்றெழில். முன்கையிற் கோற்றெழில் திரண்ட குறுந்தொடி யுடையார் என்க. நாறு இருங்கூந்தல் - கமழ்கின்ற கரிய கூந்தல். தொடியாற் செயற்கை யழகும் கூந்தலான் இயற்கை யழகுக்குறித்தார். "வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய"

எனப் பட்டினப்பாலையினும் வருதல் காண்க. கூந்தற்கிழவரை - கூந்தலைத் தொடுதற்குரியவரை; கணவரை எ-று. "யாரிவனெங் கூந்தல் கொள்வான்" (39) என்னுங் கலிப்பாட்டாற் கணவரல்லாதார் தொடற் காகாமை யுணர்க. கிழவர் என்றதால் இருமகளிர்க்கும் இரு கணவரைத் தேடிச்சேறல் குறித்ததாம். நலந்தீண்டும் பேறுடைய நல்ல கிழவர் என்றதனால் மூவேந்தர் நலந்தீண்டும் பேறுடைய நல்லரென்றும் நல்ல கிழவராகாரென்றுங் காட்டியவாறும். "நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி மகட் பாடஞ்சிய" (தொல். புறத். 24) தன்மையால் இவ்வுண்மையுணர்க. அரசர்கள் பல் பெண்டிராளர் ஆதலே இம்முதுகுடி அஞ்சுதற்கு முதன்மையான ஏதுவாம் என்க. "பஹுவல்லபா ராஜா" எனமஹாகவி காளிதாஸரும் கூறினார். (சாகுந்தலம், 3-ஆம் அங்கம்). நினைப்பழிச்சிச் செல்லுதும்- நின்னை வாழ்த்திச் செல்கின்றேம். யாம் வாழ்த்தியவாறு நீ சேர்த்து வாழ்க என்க. மேற்பாட்டிற் றொழுதலும் இப்பாட்டிற் பழிச்சுதலும் மகளிர்க்கு நல்ல கிழவர் கிடைத்தற் பொருட்டெனிற் பொருந்தும்.

532. ஆண்டுள்ள வர்க்கு மறிதக்க தாயதினி
யீண்டுள்ள வர்க்கே யெதிர்தோன்று—நீண்டு
மதுப்பிழிந்த கோதசும்பு வார்முன்றிற் றேர்வீ
சிதப்பெருவேள் வெற்போ விது.

(இ-ள்.)—இஃது "ஈண்டு நின்றோர்க்குந் தோன்றும்" (114) என்னும் புறப்பாட்டை அதன் பழையவுரைகாரர் கருத்திற்கு இயையத் தழீஇக் கூறியதாம். அவ்வுரைகாரர் ஆண்டு "இவ்விடத்து நின்றோர்க்குந் தோன்றும் சிறிது எல்லைபோய் நின்றார்க்குந் தோன்றும் நிச்சயமாக" என்று கூறிப் பின்னர், "நெடியோன் குன்று தோன்றும்" என்றது புகழானுயர்ந்து காணாதார்க்குஞ் செவிப்புலனாகத் தோன்றும் அவனுளனாயகாலத்து; இப்பொழுது பிறமலைபோலக் கட்புலனாகத் தோன்றும் அளவாயிற்று எனக் கையற்றுக் கூறியவாறாகக் கொள்க" என விளக்குதல் காண்க. இப்புறப்பாட்டின் கருத்தினை வளம்பாடுதிறந்துப் பறம்பு மலையைப்பாடிய "ஒங்கலாற் காதம்" என்னும் பாட்டானும் அதனுரையானும் உணர்ந்துகொள்க: பழையவுரைகாரர் இப்புறப்பாட்டைக் கையறுநிலை யாக்கியது கண்டு பாட்டின் அத்துறைக் கேற்பப் பொருள்கொள்ளுதற் கொன்றுங் காணாது குறிப்பெச்சத்தால் இனி இவ்வாறு கெடும் என்று இரங்கிக் கூறியதாக அடக்குதல் நோக்கிக் கொள்க.

ஆண்டுள்ளவர்க்கும் அறிதக்கது என்றதனால் முன் ஈண்டுள்ள வர்க்குத் தோன்றுதல் கூறவேண்டாதாயிற்று எ-று. அத்தகையது

பாரியிறந்ததனால் இனி ஈண்டுள்ளவர்க்கே தோன்றும் என்க. அசும்பு - ஈண்டுத் தேன்கசிவு. அசும்புவார் முன்றில் - தேன்கசிவு வார்கின்ற முற்றம்; கோது நன்குபிழியப் படாமையாற் றேன் கசிவு வாரும் எ-று. முற்றத்துத் தேர் வீசுகின்ற நன்மையாற் பெரியோனாகிய வேள். அசும்பு நீண்டுவார் முன்றில் என்க. (14)

533. அருவி யொருபுற ணர்ப்ப வொருசார்
மருவிய பாணர்தம் மண்டை—பெருகவொழுக்
கின்றே னொலிக்குமன் னேற்கினியன் மூவேந்தர்க்
கின்னான் பறம்போ விது.

(இ-ள்.)—இஃது "ஒருசாரருவியார்ப்ப" (115) என்னும் புறப்பாட்டைத் தழீஇக் கூறியதாம்: மேகம்பெய்தலா னாகிய அருவி ஒரு புறனார்ப்ப அதனினுஞ் சிறந்து வேள்பாரி பெய்யுந் தேன் ஆறு ஒரு சார் ஒலிக்கும் என்பது கருத்து. மன் - இனி அவை கழிந்தன என்பது கருதி வந்தது. மண்டை - பிச்சைக்கலம். இன்றேன் - நீர் அருவியினும் இனியதேன். கொடையான் எனக்கினியன் எனவும் புகழான் மூவேந்தர்க்கு இன்னான் எனவும் கொள்க. நல்லோனில் லுழி யருவியும் இலதாம் என்று கொள்க. (15)

534. தந்தை யருமையெணுத் தார்வேந்தர் போர்ப்பரிவெற்
பந்தி லிவர்ந்தேண்ணி னார்மகளிர்—முந்தையினி
யீத்திலைக் குப்பைமீ தின்னகையா ருப்பொழுகைச்
சாத்தெண் ணுவர்தேய்வல் சாய்ந்து.

(இ-ள்.)—இது "தீநீர்க் குண்டுசுனை" (116) என்னும் புறப்பாட்டுள் "இன்னகைமகளிர்...ஈத்திலைக் குப்பையேறியுமண, ருப்போ யொழுகை யெண்ணுப" எனவும் "அண்ண னெடுவரை யேறித் தந்தை, பெரிய நறவிற் கூர்வேற்பாரிய, தருமையறியார் போரெதிர்ந்து வந்த, வலம்படுதானை வேந்தர், பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே" எனவும் வரும் அடிகளைத் தழீஇக்கூறியதாம். மகளிர்-பாரி மகளிர், வெற்பேறி வேந்தர் போர்ப்பரி எண்ணுவர், முந்தை, இனி இன்னகையார் ஆகிய பறம்புள்ள பிறபெண்டிர் குப்பை மீதமர்ந்து உப்பு ஒழுகைச்சாத்து எண்ணுவர் என்க. ஈத்திலை - ஈந்தின் இலை, உப்பு ஒழுகைச்சாத்து - உப்புச்சகடத்தை யுடையாராய் வழிச்செல்லும் உமணர் திரள். முந்தை இதன் உயர்த்தியைக் கண்டயான் இனி இதன் தாழ்த்தியைக் காணாது சாய்ந்து தேய்வல் என்று

கூறியதாகக்கொள்க. சாய்ந்து தேய்வல் - நுணுகித்தேய்வேன். இன்னகை மகளிர் பறம்பினுள்ள பெண்டிராகவும் மகளிர் உடன்வரும் பாரிமகளிராகவும் கொள்க. தந்தையருமை யறியாவேந்தர், பரி யெண்ணினுர் என்பதனுலும் எண்ணினுரிவ ரென்பது புலனும். அந்தில் - அசை. (16)

535. கால மலாமலுங் கான மரம்பலவுஞ்
சாலப் பயனுதவுந் தண்பறம்பு—மேலைக்குப்
புன்முண் மிடைவேலிப் புன்பஞ்சி முன்றிலுள
கோன்சிற்றி லுள்ளதுமாங் கோல்.

(இ-ள்.)—இது "தீநீர்க் குண்டுசுனை" (116) என்னும் புறப் பாட்டிற் "புன்மூசு கவலைய முண்மிடை வேலிப், பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கண்" எனவும் "பலவுங் கால மன்றியு மரம்படம் பகரும், யாணரறு அ வியன்மலை யற்றே, யண்ண லெடுவரை" எனவும் வரும் அடிகளைத் தழீஇச் சொல்வான் குறிப்பாற் கூறியது. காலம் - பருவ காலம். கானமரம் - காட்டிலுள்ள பயமரங்கள். மேலைக்கு - மேல் வருங்காலத்திற்கு. புன் முள் மிடை வேலி - புல்லும் முள்ளும் பின்னிய வேலி. புன்பஞ்சி முன்றில் - புல்லிய பஞ்சு பரந்த முற்றம். கோன் சிற்றில் - பயனில்லாத சிறுமனே. பஞ்சி முற்றம் கூறியது வறுமையால் அஃதிழைத்து அற்றை நாள் வாழ்க்கை நடத்தல் குறித் தது. (17)

536. தென்றிசையின் வெள்ளி செலினுஞ் சனிபகைவீ
டோன்றிப் புகைக்கோடிவிண் ணுற்றுலு—மென்
[றைக்குஞ்
சால்புடையார் பல்கித் தளிபொய்யா நாடோன்
கோல்கோடா தென்னுங் கோலோ.

(இ-ள்.)—"மைம்மீன் புகையினும்" (117) என்னும் புறப்பாட் டைத் தழீஇக் கூறியது இது. வெள்ளி வடக்கண் வழிச் செல்ல வேண்டுவது அது திரிந்து தெற்கட் சென்றுலும் என்க: "திசை திரிந்து தேற்கேகினும்" எனப் பட்டினப்பாலேயுள் வருதலான் உணர்க. சனி இடபம், சிங்கம், மீனம் என்னும் பகை இராசிகளிற் பொருந்தா நிற்க. புகைக்கொடி - தூமகேது. இம்மூன்றும் மழை பொய்த்தற்குக் காரணமென்ப. சால்புடையார் - வற்கடத்தும் சான் றுண்மை விடாமலுள்ளவர். பல்கி - நிறைந்து. தளி பொய்யா நாடு.

மழை பொய்யாத பறநாடு. பாரி ஆட்சியிற் கோல் கோடாது, இனி இம் மூவர் ஆட்சியில் யாதாகுங் கொல்லோ எ-று. இதற்குரிய புறப் பாட்டும் சொல்வான் குறிப்பால் முன் பெயல் பிழைப்பறியாப்புன் புலத்ததுவே இனி என்னுங்கொல் என இரங்கிக் கூறியதாகக் கொள்க. இங்ஙனங் கொள்ளாக்கால் வளம் பாடியதாகவே முடிதல் காண்க. இனிச் சால்புடையார் பல்கார், கோல் கோடும், தளிபொய்க் கும் ஆதலான் இந்நாடு என்னுங்கொல் என இரங்குதல் கருத்தாம். ()

537. எண்ணாண் மதியோத் திருந்த கோடுங்கரைசேர்
தெண்ணீர்க் குளனுடைந்து தேய்வதுபோன்—
[றெண்ணலாங்
கோன்வேற் பெருந்தோட் குலவேள்பஃ றேர்வண்
[கை
நன்பாரி தண்பறம்பு நாடு.

(இ-ள்.)—இஃது "அறையும் பொறையு மணந்த" (118) என்னும் புறப்பாட்டைத் தழீஇவந்தது. எண் நாள் மதி - அட்டமி மதியம். இது குளத்தின் வளைந்த கரைக்கு வடிவுவமை. குளன் கொடுங்கரை யுடைந்து தெண்ணீர் தேய்வதனை ஒத்து நினைக்க லாம். கொன்வேல் - பகைவர்க்கு அச்சந்தரும் வேல். வேலாற் செயற்கை வலியும் பெருந்தோளான் இயற்கை வலியும் குலத்தாற் குடிப்பிறப்பும் வண்கையாற் கொடையும் குறிக்கப்பட்டன. நீர்க்குள னுடைந்து தேய்தல் உவமையாக்கி நாடு பசிகூர்தல் குறித்ததாம். (19)

538. நீழ லிலாவெங் நிலத்துத் தனிமரம்போன்
றாழி யுளவேந் தரையிறந்துஞ்— சூழ்வறிஞர்
பொன்பயப்பா னுடே புதுமென் றினையாணர்த்
தென்பயக்கு நந்து மினி.

(இ-ள்.)—இது "கார்ப்பெய றலைஇய" (119) என்னும் புறப் பாட்டில் "நிழலி னீளிடைத்தனி மரம்போலப் பணை கெழு வேந்தரை யிறந்து, மிரவலர்க்கீயும் வள்ளியோன் குன்றே" என்னும் அடிகளைத் தழீஇ வந்தது. வெங்நிலத்து - பாலைக்கண். தனிமரம் - ஒருமரம். ஆழியுள வேந்தர் - சக்கரவர்த்திகள். இறந்தும் - மிகுத்தும். சூழ் வறிஞர் - தன்னைச் சூழ்ந்த இரவலர்க்கு. பொன்பயப்பான் - பொற் கனிபழுத்துதவுபவன் என்க. மரம் என்றதற்கேற்பப் பொன் பொற் கனி யாயிற்று. புது மென்றினையாணர்த்து - புதிய மெல்லிய தினை

வருவாயையுடையது. இனி என் பயக்கும் - இனி யாது உதவும். நந்தும் - கெடும். அறவோனில்லாமையாற் கொடையும் வளனும் இன்றிக் கெடும் எ-று. பறம்புமலை நாடாதற்கேற்பத் தினை வருவாய் கூறிற்று. அறிஞர் பொன் பயப்பான் என்புழிக் குவ்வுருபு "வித்துமிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் புலம்" (குறள் - 85) என்பதன்கட் புலம் என்புழிப் போலத் தொக்கது. (20)

539. கன்றினா ரோடு கழற்கம் பலைகண்ட
வென்றிவே ணாடு மிகுவரகு—மென்றினையு
மெள்ளு மவரையு மின்றேன் கடலையோடு
கோள்வதினி நந்துங் கோலோ.

(இ-ள்.)—இது "வெப்புள் விளைந்த" (120) என்னும் புறப்பாட்டைத் தழீஇயது. கன்றினார் - சினந்த அரசர். 'கலிகன்றி' என்னும் பெயரானுணர்க. ஓடு கழற்கம்பலை - புறக்கொடுத்து ஓடிய வீரக்கழலினது ஆரவாரம்; கண்ட - கண்டு பொறாது நின்ற; பறநாடு குறிஞ்சி சார்ந்த முல்லையாதலின் அதற்கேற்ப வரகும், எள்ளும் அவரையும் கடலையும் தேனுந் தினையும் கூறப்பட்டன. இனிக்கெட்டொழியுமோ. (21)

540. தண்ணம் பறம்பே தமிழ்ப்பாரி வேணாடே
மண்ணிற் புலவர்க்கு வாழ்வானீர்—நண்ணாம
லும்மைத் துறப்பே முளத்தைத் துறந்திலிருஞ்
செம்மைத் திறத்தாற் செறிந்து.

(இ-ள்.)— தண்ணம் பறம்பே - குளிர்ந்த அழகிய பறம்புமலையே. தமிழ்ப் பாரிவேள் - தமிழ்ப்பாடலுடைய வேள்பாரி; "தமிழ்வையை" (6) என்னும் பரிபாடற்றொடரைப் போலக் கொள்க. புலவர்க்கு வாழ்வென மண்ணில் ஆனீர் என்க. வானிற் புலவர்க்கு வாழ்வாயிருக்கத்தக்கீர் நீர் என்பது குறிப்பு: "வான்க ணற்றவன் மலையே" (புறம் 109) என்றது காண்க. யாம் உம்மை நண்ணாமல் துறப்பேம் ஆயினும் நீர் நும் செம்மைத்திறத்தால் எம் உள்ளத்தைத் துறந்திலிர் என்க. (22)

541. பாராண் முடிவேந்தர் பாலுங் கிடையாத
சீராள் பரிசில் சிறந்தவராய்ப்—போர்வேள்பாற்

பொன்கொண்டு போய புலவோர் குழாமெல்லா
மென்கொள்வான் போது மிவண்.

(இ-ள்.)—"பணிசெழு வேந்தரை யிரந்து, மிரவலர்க்கீயும் வள்ளி யோன்" (புறம் - 119) ஆதலான் முடிவேந்தர் பாலுங் கிடையாத பரிசில் கூறப்பட்டது: சீர் ஆள் பரிசில் - அவரவர் சிறப்பின் ஆள் கின்ற பரிசில். விளைவும் கெட்டுத் தருபவனும் இல்லையாதலான் இவண் யாது கொள்ளற்கு வரும் எ-று. குழாம் வாராதொழியும் என்பது கருத்து. (23)

542. இன்முகங் காணுமோ வின்சொல்லுங் கேட்குமோ
நன்றுற்றல் பெற்று நயக்குமோ—வென்றேனும்
பாரி யிலாத பறம்பிற் புகுமாயிற்
கூரறிஞர் பாணர் குழாம்.

(இ-ள்)—கூர் அறிஞர் - மிக்க அறிவாளர். அறிஞர் குழாம் பாணர் குழாம் என்க. என்றேனும் - பிற்காலத்து எந்நாளிலேனும் எ-று. பாரிகாட்டும் இன்முகத்தையும் அவன் சொல்லும் இன் சொல்லையும், அவன் நன்றுற்றலையும் நினைந்து இரங்கியதாகக் கொள்க. புகுமாயின் என்றது புகாமையே பெரிது என்பதுபட வந்தது. (24)

543. களிறில்லாப் பாழ்மன்றங் கண்ணில்லா மேனி
யொளியில்லா மாளிகைபோ லுள்ளாய்—தேளி [பறம்பே
வாரி யிலாத வறுங்குளனும் போல்வையாற்
பாரி யிலாத படி.

(இ-ள்.)—வேள்பாரி களிறும், கண்ணும், ஒளி விளக்கும், நிறை நீரும் போல்வன் என்று காட்டியவாறும்: போரிற் களிறுபோலவும் பொருள்களைக் காண்டலிற் கண்போலவும், பொருள்களைக் காட்டுதலின் இருளில் ஒளி விளக்கம் போலவும், எல்லாரும் முகந்து பருகற்காதலின் நிறை நீர் போலவும் அவனிருந்தவாறு நினைந்திரங்கியதாகக் கொள்க. பாழ் மன்றமும் மேனியும் மாளிகையும் வறுங் குளனும் போல்வது பறம்பு என்று உடனிரங்கியவாறும். (25)

544. காத றதும்பக் கவிஞர் பறம்பினிசை
-போதப் புகழ்ந்தொழிப் போயினன்—மாத

ருடன்கொண்டு பன்னு டொழியக் கபில
னிடன்கொண்டான் விச்சி யிருப்பு.

(இ-ள்.)—காதல் ததும்ப - அன்பு பொங்கிவழிய. இசைபோதப் புகழ்ந்து - புகழ் நெஞ்சின்கண்வரப் புகழ்ந்து பாடி. போயினான் இடன் கொண்டான் என்க. விச்சியிருப்பு - விச்சிக்கோ என்பா னிருக்கும் ஊர், விச்சி ஓரரசன் பெயரென்பது பதிற்றுப்பத்துள் ஒன்பதாம்பத்துப் பதிகத்துள் "இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ" என வருதலான் அறிக. இவன் வழியினர் 'விச்சியர்' (குறுந் - 328) எனப்படுவர். இதனை ஆவி வழியினர் ஆவியர் என்பதுபோலக் கொள்க. தேவாரத்துள் காவிரி விச்சிமலைச்சாரற்பட்டை கொண்டு பகடாடி (ஐயாறு) வருதல் கேட்கப்படுதலான் இவனிருந்த மலை யிருப்புக் காவிரிக்கு அடுத்து உளதாதல் அறியப்படுவது; விச்சிமலை - விச்சியினுடைய மலை என்க; விச்சி யென்னும் பெயர் இந் நாவலந் தீவில் நெடுங்காலத்து முன்தொட்டு வழங்குதல் பிரயாகைக்கு அடுத்த 'பீடா' என்னும் ஊர்ப்புறத்து அகழ்ந்து கிடைத்த முத்திரைத் தொகுதியி லொன்றினும் * நன்கறியப்படுவது. இது குப்தர் காலத்து எழுத்து என்பர். (26)

515\. கடுவன் பலவின் கனியுண்டு மந்தி
யொடுநீள் கழையி னுறங்கு—நெடுவெற்பின்
விச்சிக்கோ நின்பால் விளம்பு சிலமாற்ற
நச்சிக்கேட் பாயா லனி.

(இ-ள்.)—இது "பனிவரை நிவந்த பாசிலை" (200) என்னும் புறப்பாட்டின் முற்பகுதியைத் தழீஇ வந்தது. கடுவன் - குரங்கி லாண். மந்தி - குரங்கிற் பெண். கடுவன் மந்தியொடு பலவின்கனி யுண்டு அம்மந்தியொடு நீள் கழையினுறங்கும் வெற்பு என்க. நனி நச்சி - மிக விரும்பி. கேட்பாயால் - ஆல் அசை. பலவின் கனி கடுவன் முயன்றீட்டிய இனியவுணவாகக் கொள்க. நீள் கழை - பிற விலங்குகளான் ஏதம் உறாதபடி ஓங்கிய மூங்கில். மக்கட்கும் விலங்கிற்கும் பொதுவாகிய உணவும் புணர்ச்சியும் உறக்கமும் கூறி அச்சத்தை விலக்குதல் உய்த்துணர்க. உண்டு மந்தியொடு நீள்கழை யின் அச்சமின்றி யுறங்கும் வெற்பு என்பது கருத்து. விச்சிக்கோ நீயும் இம்மகளிருள் ஒருத்தியுடன் இனிது துய்த்து உடன்மகிழ்ந்து

* இந்திய புராதன சில்ப பரிசோதனைத் தலைவர் வெளியீடு - 1911 - 1912, பக்கம் 49, பார்க்க.

மூவரான்வரு மச்ச மின்றித் துயின்று வாழ்க எனக் குறிப்பானறிவுறுத்தினரென்க. ஒரு மந்தியே கூறுதலான் ஒருத்தியுடன் வாழ்தல் கருதினராதல் புலனும். இவனுக்குத் தம்பியாக இளவிச்சிக்கோ என்பானொருவனிருத்தல் 153ஆம் புறப்பாட்டின் கொளுவில் 'இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக் கோவும் ஒருங்கிருந்தவழி' என்னுந் தொடரான் அறியப்படுதலான் அவனுக்கு இளையவளைக் கருதினராவர் என்க. (27)

546. பாடாத தேனும் படர்பூங் கோடிமுல்லை
வாடாது தன்றேர் வழங்கியோன்—கோடாத
செங்கோற் புகழ்ப்பாரி செம்மைச் சிறப்பறியா
ரெங்கேனு முள்ளா ரிலே.

(இ-ள்.)—படர் முல்லை - படர்தற்குரிய முல்லை. 'பூத்தலையறாப் புனைகொடி முல்லை' (புறம் - 200) என்பது பற்றிப் பூங்கொடி முல்லை எனப்பட்டது. வாடாது - படர்தற்கு ஒன்றில்லாமையால் வாடாமல். தன்றேர் - தானே ஊர்தற்கு வைத்துள்ள தேரினை. செம்மைச் சிறப்பு - தலைமைச் சிறப்பு; 'பரந்தோங்கு சிறப்பிற்பாரி' (ஷை - ஷை) என்ப. கூறுமலே குறையறிந்தீயும் வள்ளன் மகளிராதலான் இவர்குறை சொல்லாமலே தெரிந்தளிக்க என்பது குறிப்பாம். பாடாதது-பாடற்குரிய தல்லாத அஃறிணை. பெருவேந்தர் செங்கோலும் கோடுதல் கேட்கப்படுதல் குறித்துக் கோடாத செங்கோல் எனப்பட்டது. எங்கேனும் என்பது தமிழ் நாட்டிற்குப் புறம்பான தேயத்தும் தெரிதல் கருதிவந்தது. (28)

547. இவர்பாரி பெற்ற விருநிதியே யன்னா
ரிவர்பான் மணமியைய வெண்ணித்—தவமாறன்
பேச மறுத்த பெருவே ளருமையெண்ணன்
பூசல் விளைத்தான் புலந்து.

(இ-ள்.)—இருநிதி - சங்கநிதி, பதுமநிதி. மாறன் தவப்பேச - [illegible]டியன் மிக மகட்பேச. வேள் அருமை - வேள்பாரி யினது [illegible] கரிய தன்மை. புலந்து பூசல் விளைத்தான் என்க. பூசல் - [illegible]து - சினந்து. மணமியைய எண்ணிப் பூசல் விளைத்[illegible] [illegible]காள்க. (29)

[illegible]ரியோடும் வானவனைச் சேரத் துணையாக்கி
[illegible]ளி வளைத்தான் வளம்பறம்பைப்—பன்னாள்கள்

விஞ்சத்தான் வெல்லா மிகையெண்ணி நல்வேளை
வஞ்சத்தாற் கொன்றான் வலித்து.

(இ-ள்.)—சென்னி - சோழன். வானவன் - சேரன். சேர - இருவருந் தம்முட் சேர்ந்தொழுக; என்றது அவர்க்குளிதற்கு முன்னர்ப் பகைமை யுண்டென்பது காட்டிற்று. மன்னி வளைத்தல் - நெடுங்கால முற்றுதல் குறித்தது. "யாண்டுபல கழிய" (அகம் - 78) என்பது காண்க. வளப்பறம்பு என்றது அப்பன்னாள் முற்றுதலானும் குறையாத வளன் உடைமை நினைந்தது. வெல்லாமிகை - ஓர் சிற்றரசனைப் பேரரசன் இருவேந்தர் துணைபெற்றுப் பன்னாள் பொருதும் வெல்லமாட்டாமையாலுண்டாகிய தன் குற்றம். வலித்து - வலி செய்து. நல்வேளை - போற்றற்குரிய நன்மையையுடைய பாரியை எ-று. விஞ்ச - பெருக. (30)

549\. முடிமன்னர் வேட்க முனைந்துங் கிடையாக்
கொடியன் னவரையுடன் கொண்டு—படியிலிவர்
சீர்க்குங் குடிக்குந் தெருளுக்குந் தக்காரைப்
பார்க்கப் புகுந்தேனிப் பால்.

(இ-ள்.)—வேட்க முனைந்தும் - வதுவை புரிதற்குப் போர் செய்தும். சீர் - அழகு முதலிய சிறப்பு. குடி - குடிப் பிறப்பு. தெருள் - அறிவு. தக்கார் - தகுதியுடையார். இப்பால் - இந்நிலப் பகுதியில். பார்க்கப் புகுந்தேன் - நேரிற் கண்டுகொள்ளப் புக்கேன்: கொடியன்னவர் உடன் வருதலான் அவரும் தக்காரை நேரிற்றெரிந்து கொள்ளல் நினைத்ததுமாம். (31)

550\. அந்தண னேற்பே னடற்சே யுயிர்த்தோழன்
தந்தையென நல்குவல்வே டந்தாரைச்—சிந்தை [விழைந்
தும்பியு நீபு முயர்மணத்திற் கொள்கென்று
நம்பியவற் கோதினா னன்கு.

(இ-ள்.)—அந்தணன் ஆதலான் இஃது ஏற்பவனாவேன் என்பது கருத்து. அடற் சேய் - பாரி; "செருவெஞ்சேஎய்" என்பது காண்க (புறம் - 120.) உயிர்த்தோழனாதலாற் றந்தையை யொப்பத் தருவேன். தருதலும் அந்தணன் அறதொழிலு ளொன்றாதலுணர்க: வேள் தந்தாரை - வேள் பெற்றாரை. உயர் மணத்திற் கொள்ளுதற்குச்

சிந்தை விழைதல் கூறியது நினைக்க. முன்னவளை நீயும் பின்னவளை உம்பியும் கொள்க என்று. நம்பி - கபிலன். அவற்கு - அவ்விச்சிக் கோவிற்கு. உயர் மணம் - உம்பியு நீயும் உயர்தற்குக் காரணமாகிய வதுவை. இவரை மணத்தலான் நுங்குடி உயர்தல் குறித்தது. "மேதக்க தந்தை யுவாத்தி" என நான்மணிக்கடிகை (43) யில் வருதலாற் கபிலன் தந்தையென நல்கற் குரியனாதலு முணர்க. "கற்பெனப் படுவது கரணமொடு புணரக், கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக், கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள் வதுவே" (தொல் - கற்பியல், 1) என்புழி நச்சினார்க்கினியர் "தாயொடு பிறந்தாரும், தன்னையரும், தாயத்தாரும், ஆசானும் முதலி யோர் கொடைக்குரிய ரென்றற்கு மரபினோர் என்றார்" என வுரைத்த தனையு நோக்கிக் கொள்க. சிந்தை விழைந்து என்றது உள்ளப்புணர்ச்சி யின்வழிக்கற்பு நிகழுதல் கருதி; இதனை "ஒருவனையும் ஒருத்தி யையும் எதிர்நிறீஇ இவளைக்கொள்ள இயைதியோ நீயெனவும், இவற்குக்கொடுப்ப இயைதியோ நீ யெனவும் இருமுதுகுரவர் கேட்ட வழி இவர் கரந்த உள்ளத்தான் இயைந்தவழிக் கொடுப்பவாகலின் அதுதானே ஒருவகையாற் கந்தருவ வழக்கமாம்" (தொல். கற்பியல், 1) என நச்சினார்க்கினியர் கூறிச்செல்லுதலான் அறிக. குறிஞ்சிப்பாட் டுப்பாடிய கபிலரே களவு நிகழாத நிலையினின்று "யான் கொடுப்பக் கொண்மதி" (புறம் - 200) என வேண்டுதல் நோக்கி யுண்மை யுணர்க. இருங்கோவேளுழைக்கொண்டு ஏதுதற்கும் இஃதொக் கும். நினக்கியான் கொடுப்பக்கொண்மதி என்றிருக்கவும் உம்பியு நீயுங்கொள்கென்று கூறியது. "நாறிருங்கூந்தற் கிழவரைப்படர்ந்தே" (புறம். 113) என முதலிற் கருதியது நோக்கி என்று கொள்க. (32)

551. எனமாக் கபில னெடுத்தியம்பப் பாரி
கனமாப் பெருமை கணித்து—மனஞுற்று
னிச்சித்தா னேனு மிவண்கோப் பகைக்கஞ்சி
விச்சிக்கோன் சோற்றான் வெறுத்து.

(இ-ள்) மாக்கபிலன் என எடுத்தியம்ப - பெருமையையுடைய கபிலன் மகளிர் சிறப்பினை உயர்த்தி இவ்வாறு சொல்ல. பாரி கன மாப்பெருமை - பாரியின் மேகத்தையொத்த பெருஞ்சிறப்பு. கணித்து - மதித்து. இவண் - இவ்வமயத்து. கோப்பகை - பேரரசன் பகை; "யான்விழைந்த பெண்டிரையிங் கியார்நினைவார்" என மகண்மறுத்த போது பாண்டியன் சொற்றதை நினைக்க. வெறுத்துச் சொற்றான் - சொல்லான் வெறுத்தான். (33)

552. மூவர் பகைக்கு முரணழியாச் சிற்றரசர்
யாவ ருலகத் திவணுள்ளார்—தேவர்கோன்
சென்னி முடிதொடியாற் செற்றபெருஞ் சேவகமோ
வென்னி னரிதா லிகற்கு.

(இ-ள்.) மூவர் - தமிழ்வேந்தர் மூவர்: ஐவர் பாண்டவரைக் குறித்தல்போலக்கொள்க. முரண் - வலி. அம்மூவருள்வைத்து ஒருவன் சேவகமோ என்னின் இகற்கு அரிது எ-று. அமரர்தலைவன் சிரத்தைத்தன் றோள்வளையாற் சிதைத்த பெரியவீரச்செயல் என்க. சேவகம் இகற்கு அரிது எ-று. என்னின் - என்றால். இகற்கு - போர்க்கு. உலகத்து இவண் உள்ளார் - உலகத்து இப்போது உள்ளனர். மூவருட்டலைமை பற்றியுங் கதையினைப்பற்றியும் பாண்டியன் சேவகமே கூறப்பட்டது: ''நாவலந்தண்பொழில் மன்ன, ரேவல் கேட்பப் பாரரசாண்ட, மாலைவெண்குடைப் பாண்டியன்'' (ஆய்ச்சியர் குரவை) என்னுஞ் சிலப்பதிகாரத்தான் இத்தலைமை ஒரோர்கால் எய்தலுணர்க. தேவர்கோன் சென்னிமுடி தொடியாற் சிதைத்தது ''வானவன் முடித்தலையுடைத்த தொடித்தோட்டென்னவன்'' (ஆய்ச்சியர் குரவை) என்பதனான் அறிக. (34)

553. என்று சொலக்கேட் டிருங்கபிலன் விச்சிக்கோக்
கொன்று சிலமாற்ற மோதினன்—னின்றுகோளாய்
நிற்கெவ்வ மில்லை நிரைதொடியார்க் கெவ்வமிலை
யெற்கெவ்வ மாயிற் றிது.

(இ-ள்-) விச்சிக்கோக்கு ஒன்று சில மாற்றம் - விச்சியாகிய அரசனுக்குப் பொருந்திய சிலசொல். நின்று கோளாய் - யான் கொடுப்ப நீ நின்று கொள்ளாதாய். இது - யான்வேண்ட நீ கொள்ளாத இஃது. நிற்கு எவ்வமில்லை - நினக்குப்பழிதருவதில்லை. நிரைத்த வளையலணிந்த இவர்க்குப் பழி தருவதன்று எனக்குப் பழி தருவதாயிற்று என்க. அரியது கொள்ள வறியாத நின்னைக் கொளற்குரியையாக நினைந்து வந்ததனால் எனக்குப் பழிதருவ தென்றான் என்க. (35)

554. தனக்கா வளர்த்தமாஅத் தாங்கா துதிர்காய்
புனற்பா லெடுத்துப் புசித்தாள்—வினைக்கவணோர்
பொற்பாவை யும்பலவெண் போர்க்களிறுந் தள்ளி
செற்றா னிரயஞ் சேல. [நன்னன்

(இ-ள்.) தனக்கா - தானுண்டற்காக. மா அத்தாங்காது உதிர் காய் - கிளை தாங்காது உதிர்ந்த மாங்காயை. புனற்பால் எடுத்து - புனல் கொணர்ந்து தருதலான் அதன்கண் எடுத்து. இதனால் இக்காயினை எடுத்துத்தின்ற பெண்குளித்த ஆற்றில் அம் மாமரத்தின் கிளைகள் நீண்டிருத்தல் உய்த்துணரலாகும். புசித்தாள் வினைக்கு - தின்றவள் செயலுக்குத்தண்டமாக. அவள் நேர்பொற்பாவையும்-அவளொத்த நிறையினையுடைய பொன்னாலாகிய பாவையையும். பல எண் போர்க்களிறும் — எண்பலவாகிய போர்யானைகளையும். தள்ளி - கொள்ளாது தள்ளி. நிரயஞ்செலச்செற்றான் - தான் நரகிற்புகவேண்டிக்கொன்றான். உதிர்காய் புனற்பாலெடுத்துப் புசித்தாள் என்றதனால் ஒரு குற்றமுமில்லாள் என்று காட்டியவாறு. நல்லனகொள்ளாமையின் மேலும் தீயனசெய்தலும் நின் முன்னோன்கண் உண்டு என்று குறித்ததாம். இப்பாட்டுக் குறுந்தொகையுள் "மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை, புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற், கொன்பதிற் றொன்பது களிற்றொடவணிறை, பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான், பெண்கொலை புரிந்த நன்னன்போல, வரையா நிரயத்துச்செலீஇயரோ வன்னை" எனவருவதனைத் தழீஇயது. (36)

555. அன்னான் வழிவந் தனையாவை பாவலர்க்கு
முன்னா ளடைத்தவசை மூடினா—யின்னாநின்
மண்புக்க வென்றன் மதிநோவ லிவ்வெல்லாம்
பெண்பெற்றார் செய்யும் பிழை.

(இ-ள்.) அன்னான் வழிவந்தனை - அந்நன்னன் மரபிற்றோன்றினை: ஆவை என்றது அந்நன்னவன் வழிவருதற்கு உரியை எனக் கருதிற்று. பாவலர்க்கு முன்னாளிற் கதவடைத்தலானாகிய வசையாற் போர்த்தனை. இன்னாமையையுடைய நின்னது நாடுபுக்க என்மதி என்க. நோவேன் - நோதல்செய்வேன், வசைமூடினாய் என்றது இவன் குடிக்குள்ளவசையை இவனுக்கு ஏற்றியதாம்: இதனை "நன்னன் மருகனன் றியும்......பாடுநர்க்கடைத்தகதவி னுடுமழை, யணங்கு சாலடுக்கம் பொழியுநும், மணங்கமழ் மால்வரை வரைந்தனரெமரே" (புறம் - 151) என்பதனான் அறிக. இவ்வாறு புலவர் வரைந்தமலை நிலம் புகுதலான் 'மண்புக்க என்றன் மதிநோவல்' என்று கூறினான் என்க. பெண்பெற்றார் பெண்பெறுதலாற் செய்யும் பிழைகள் எ-று. தன்னைப்பெற்றாரோ டொப்பவைத்தது தான் இம்மகளிர்க்குத்தந்தையுந்தாயும் ஆகிப்போற்றும் உளப்பாட்டால். பெண்பெற்றார் பிழை என்றது தெரிந்துஞ் செய்தல் கருதி; பின்னும் கழாத்தலையாரை இகழ்

ந்தவன் வழியிலுள்ள இருங்கோவேள்பாற்புகுதலும் ஈண்டைக்கு ஏற்ப நோக்குக. (37)

556. வறிதியான் போவேனுன் மன்னிநீர் வாழ்கென்
றுறுதியான் பெண்டி ருடன்சேன்—றிறுதியெண்
ணில்லாத செல்வத் திருங்கோவேள் பாற்புக்குச்
சோல்வான் சிலசோற் றுணிந்து.

(இ-ள்.) யான் வறிதுபோவேன் - யான் வறிதாகச் செல்வேன்; "வறிது பெயர்குவரல்லர்" (புறம். 124) என்பது போன்றது: ஒரந்தணன் புலவன் தம்மகத்துப்போந்து வறிது போதலான் நீவிர்வாழாமை இனியுள்ளது அன்னையின்றி வாழ்க என்று கூறினுன் என்க. உறுதியான் - உற்றசாரியத்திலுள்ளவன்: உறுதி - உற்றசாரியம். 'தாமறிகுவர் தமக்குறுதி' (புறம் - 61) என்புழிப்போலக்கொள்க. "உறுதி பயப்பதாம் தூது" (குறள் - 690) என்புழிப்போல உறுதி மிகுதி எனவும் "கேட்டினுமுண்டோருறுதி"(ஷை - 796) என்புழிப்போல நல்லறிவு எனவும் கொண்டு மிக்கோன் என்றும் நல்லறிவாளன் என்றும் கூறினுமமையும். இறுதியெண் இல்லாத செல்வம் - எண் முடிவில்லாத பொருள்; என்றது "கோடிபலவடுக்கிய பொருணு மக்குதவிய நீடுநிலை யரையத்து" (புறம். 202) என்பது குறித்தது: தன்பொருட்டில்லாமையாற் றுணிந்து சொல்வான் என்றதாம். நீர் வாழ்க என்றது இளவிச்சிக்கோவாகிய தம்பியுடன்சேர்த்து எனக் கொள்க. ஒருவனை முன்னிலையாக்கிச் சிலவுரைத்தப்பின் அவனுற வினரையுஞ் சேர்த்துப்டன்மையாற் கூறுதல்வழக்கே யென்பது "நீயு முயங்கற்கொத்தனை" என்று கூறிப்பின் "நும்மணங்கமழ்மால்வரை வரைந்தன ரெமரே" (புறம். 151) என்பதுபோன்ற இடங்களிற் கண்டு கொள்க: நும் என்றதனுலீண்டு இளவிச்சிக்கோவை மூத்தவனை விச்சிக்கோவொடு சேர்த்துக் கூறினுராத வுணர்க. (38)

557. வடபான் முனிதடவின் வந்து துவரை
யிடஞ் ளிறைவழியி னேழேழ்—படிகால்கோள்
வேளிருள் வேளே விறற்போர்ப் புலிகடிமால்
கேளிருங் கோவே கிளர்ந்து.

(இ-ள்.) இது முதன் மூன்று பாடல்கள் "இவர்யாரென்குவை யாயின்" என்னும் புறப்பாட்டைத் (201) தழீஇ வந்தன. வடபால் முனிதடவின்வந்து - வடபக்கத்து முனிவன் ஓமகுண்டத்தினின்று

தோன்றி. துவரையிடன் ஆள் இறைவழியின் - துவராபதியென்னும் இடத்தை ஆண்ட அரசர் வழிமுறையின்கண். ஏழேழ் படிகால் - நாற்பத்தொன்பது தலைமுறை. வேளிருள் வேள் என்றது செல்வத்துட் செல்வம் என்பது போலத்தலைமையின் வந்தது. விறற்போர் இவனுக்குக்கூறியது "உடலுநருட்குந்தானை" (புறம். 201) உடைமை பற்றி. இருங்கோ - இவன் பெயர், புலிகடிமால் - இவன் குடிமுன்னோன் பெயரை இவனுக்கிட்டு வழங்கியதாம்: இஃது 'ஒய்சள' என்னும் பெயர்க்கருத்தைத்தழீஇ வந்ததென்ப. (39)

558. யாரிவ ரென்னி னிரப்போர்க்கூ ரீத்திரவாச்
சீரிவர் முல்லைக்குத் தேரீத்த—பாரி
பறம்பிற் கிறைவன் பயந்த மகளி
ரறம்பெற் றனையா ரணிந்து.

(இ-ள்.) யாரிவ ரென்னின்என்றது " இவர்யா ரென்குவையாயின் " (புறம்- 201) என்பது நோக்கி. கபிலரை வந்த காரியம் வினுதற்குமுன்னே இவர் யாரென்றான் இவர் இயற்கைவனப்பும் தெருண்முகப்பொலிவும் விழிகவர்தலான். இரப்போர்க்கு ஊரீத்து என்றது ஊருடன் இரவலர்க்கருளி என்பதைத்தழீஇயிற்று. இரவாச் சீர் இவர் முல்லைக்கு - ஒருவரிடம் ஒன்றை இரவாத சிறப்பேறிய முல்லைக்கொடிக்கு; "முல்லை நாத்தழும்பிருப்பப் பாடா தாயினும்" (புறம். 200) என்றதுகாண்க. 'பறம்பிற்கோமான்' (ஷை. 201) என்றதுபற்றிப் பறம்பிற்கிறைவன் எனப்பட்டது. பயந்த - பயன்பெற நல்கிய. அறம் அணிந்துபெற்ற அனையார் - தருமத்தையே பூணுதலால்அதனாற்பெறப்பட்டாலொத்த தன்மையாரவர் என்பது கருத்து. அறக்கிழவியராக்க வேண்டுதலான் இங்ஙனங் கூறினன். (40)

559. இவர்தந்தை தோழ னிவரேன் மகளிர்
தவவந் தணன்புலவன் சார்ந்தே—னிவரையே
யான்றரநீ யேவ்வி யிருங்குடியிற் கோள்கேன்று
தேன்றரவோ துற்றுன் றேரிந்து.

(இ-ள்.) இவர்க்குத்தந்தையாய்ப் பாரி சிறந்தான்; அவற்குத் தோழனாய், யான்சிறந்தேன் என்பது கருத்து. பாரி தோழனாதல் கருதி என்மகளிர் என்றான். இதனாற் றோழமையினியல்பும் உடன் கூறினராவர். தவவந்தணன் - தவத்தினையுடைய பார்ப்பனன். புலவன் - இவற்றின்மேலாகப் புலமையும் உள்ளோன். சார்ந்தேன் - நீ தேடிப்புக வேண்டியதைக் கொண்டுவந்தனன் எ-று. விச்சிக்கோ

னிடை 'யான் கொடுப்பக்கொண்மதி' (புறம் - 200) என்று மிக்கோன் கூற்றாற் கூறிய கபிலன் "யான்றரக்கொண்மதி' (ஷை 201) என ஒத்தோன் கூற்றாற் கூறியது இவ்விருங்கோவேள் அவனினும் உயர்ந்தவனாதல் புலப்படுத்துவதற்குப்போலும். "சிறிது,வயிற்றுக்கு மீயப் படும்" (குறள். 412) என்புழிப்பரிமேலழகர் "ஈதல் வயிற்றதிழிவு தோன்ற 'ஙின்றது' எனக்கூறுதலான் இவ்வுண்மையுணரப்படும். எவ்வியிருங்குடியிற்கொள்கென்று-வேள் எவ்வியுடையபெருங்குடியிற்கொள்ளுக என்று; "எவ்விதொல்குடிப்படீஇயர் மற்றிவர், கைவண்பாரி மகளி ரென்றவென், றேற்றாப்புன்சொ னோற்றிசிற்பெரும" (புறம் - 202) எனக்கபிலர் கூறியது காண்க. இதனைவிருங்கோவேள் எவ்விகுடியினனாதல் புலனாம், அக்குடியிலிருவரை இம்மகளிர்க்கு மணமக்களாக ஙினைந்தனனாதலின் 'தொல்குடிப்படீஇயர்' என்றான் எனக்கொள்க. கபிலர் இப்புறப்பாட்டில் "நும்போலறிவினுமருளொருவன்" என்புழி 'நும்போல்' எனவும் "கோடிபலவடுக்கிய பொருணுமக்குதவிய" என்புழி நுமக்கு எனவும் பன்மையாற் கூறுதலானும் இஃதுய்த்துணரப்படும். புறப்பாட்டுரைகாரர் (202) "இப்பொழுது எவ்விதொல்குடிப்படீஇயர், இவர்பாரிமகளிர் என்ற புன்சொல்லைப் பொறுப்பாயாக" என இயைத்துரைத்தவாற்றானும் எவ்விகுடியில் வந்தவன் இருங்கோவேள் என்பது உணரலாம். இருபுதல்வரையுடைய இருங்கோவேள் ஆகிய தந்தையை நோக்கிக் கபிலர் கூறினாரென்பது பொருந்தும். விச்சிக்கோவை நோக்கிக் கபிலர் கூறிய புறப்பாட்டில் (200) "ஙினக்கியான் கொடுப்பக்கொண்மதி" என்றவர் இருங்கோவேளை நோக்கிக்கூறிய பாட்டில் (201) ஙினக்கு என்று கூறாது "யான்றரவிவரைக்கொண்மதி" என்றொழிந்த நயத்தானும் இதுதுணிக. இதற்கியையவே இவன் பால் "எவ்விதொல்குடிப்படீஇயர் மற்றிவர், கைவண்பாரி மகளிர்" (ஷை 202)என்றதனையுநோக்கிக் கொள்க. இனிக்கபிலர் இவனை "ஆண்கடனுடைமையிற் பாண்கடனாற்றிய வொலியற்கண்ணிப் புலிகடி மாஅல்" எனப்பாடுதலானும் இவன் பிராய முதிர்ந்தவனாதலுய்த்துணரலாம். (41)

560\. அவனு முடிவேந்தற் கஞ்சி யிகழ
விவருஞ் சினத்தா னிருங்கோக்—குவணே
வெறுத்து மொழிந்தான் விறற்பாரி தோழன்
மறுத்தங் கிகழ்ந்த மதிக்கு.

(இ-ள்.) அவனும் - விச்சியேயன்றி இருங்கோவேளும் எ-று. முடிவேந்தற்கு - பாண்டியற்கு. அஞ்சியிகழ - உள்ளத்தாலஞ்சி

வாயான் இகழ. இவரும் சினத்தான் - ஏறிய வெகுளியால். உவணே - உவ்வமயத்தே. மறுத்து - மணமறுத்து. மதிக்கு என்றது "நும் போலறிவி னுமருளொருவன்" எனக்கபிலர் கூறியது கருதி. விறற் பாரி தோழன் ஆதலான் வெறுத்தவாறு அஞ்சாது மொழிதலுஞ் செய்தான் எ-று. இருங்கோவேள் இகழ்ந்தது மேற் "கழாத்தலையை இகழ்ந்ததன்பயனே" என்று அவற்குக் கபிலர் கூறிக்காட்டுதலான் உய்த்துணரப்படும் (42)

561\. அளந்துபல் கோடி யடுக்கி நுமக்கிவ்
வளந்தந்த வீரரைய மாய்ந்த—துளங்கொள்க
நும்போ லறிவி னுமரு ளொருவன்முன்
வம்பே கழாத்தலையை வைது.

(இ-ள்.) பல்கோடி அளந்து அடுக்கி என்க. வளம் - செல்வம். ஈரரையம் - சிற்றரையம் பேரரையம் என இரு கூறுபட்டது. கழாத் தலையை வம்பேவைது ஈரரையம் மாய்ந்தது உளங்கொள்க என்க. வம்பேவைது-புதிதாக இகழ்ந்து. கழாத்தலையார்க்கு இகழ்ச்சி பயிலாத புதுமைத்தென்பது கருத்து. நுமருளொருவன் என்றது தாயத்தவனை. கோடிபல வடுக்கிப் பொருணுமக்குதவிய, நீடு நிலையரையத்துக்கேடுங் கேளினி......நும்போ லறிவினுமருளொருவன், புகழ்ந்த செய்யுட் கழாஅத்தலையை, யிகழ்ந்ததன்பயனே" (புறம். 202) என்றது காண்க. இவ்வாறழிந்த இடம் சோணாட்டுக் 'கழாத்தலையேடு' என் னும் பெயரான் இன்றும் வழங்குவதென்பாருண்டு. புறப்பாட்டுள் (202) "நெடுவரைப்படப்பை......வூதார்" எனப்பெருமலைப்பக்கத்துப் பழையவூராகக் கூறுதலான் அஃது ஒருதலையாகத் துணிதற்காகாமை யுணர்க. (43)

562\. * எவ்வி குடியி லிவர்படுவோ ராகேன்ன
விவ்வே புகல்வுற்ற வென்றேற்கு—வெவ்வமுள
புன்சொற் பொறுத்தி புறப்பட்டே னின்வேலோ
வேன்கோள்க வென்றகன்றன் விட்டு.

(இ-ள்.) இவர் படுவோர் ஆக என்ன - இவர் மணம்புகுவாராக என்று; மகட்பாடு (தொல். பொரு 77) என்பதனுணர்க. இவ்வே - இவையே. தேற்குப்புன்சொல்-தெளியாதபுல்லிய மொழி. எவ்வமுள சொல் - குற்றமுடைய சொல்: 'விட்டுப்புறப்பட்டேன் நின்வேலோ

* எவ்வி தொல்குடிப்படி இயர்.

வென்கொள்க என்றான் என்க; விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே (புறம். 202) என்றதைத் தழீஇக் கூறியது. வென்கொள்க - வெற்றி கொள்க எ-று. வெற்றி கொள்ளாமை குறிப்பு. (44)

563. கன்னியருக் கோத்த கணவர் கிடையாமை
யுன்னி யுளத்தே யுழந்திட்டா—னிந்நிலையிற்
பெண்பெற்றா ரெய்தும் பெருந்துயர மத்தனையுங்
கண்பெற்றான் கண்டான் கருத்து.

(இ-ள்.) ஒத்த கணவர் - உரு, உணர்வு, குடிமுதலியவற்றான் ஒப்புமையுடைய கிழவர். ஒத்தகணவர் கிடையாமை உன்னி யுளத்தே உழந்திட்டானாகிய கண்பெற்றான். உலகிற் பெண்பெற்றார் ஒத்த கணவர்கிடையாமை யெய்தும் பெருந்துயரம் அத்தனையும் கருத்துக் கண்டான் என்க. கண் என்றது ஞானக்கண்ணாகிய கல்வியை; "கைப் பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின்கண்ணுமாகும் (சிந் - 1595) என்பது காண்க. "கண்ணுடைய ரென்பவர் கற்றோர்" (393) என்றார் திருவள்ளுவனாரும். (45)

564. குலங்கருதார் நல்ல குணங்கருதார் கல்விப்
புலங்கருதார் மெய்யிற் புரைதீர்—நலங்கருதார்
பொன்கருதி வேட்பர் புடவியா ரென்றழிந்தா
னென்கருதிச் செய்வ லிவண்.

(இ-ள்.) 'கையண்பாரி மகளிர்' என்றதனாற் குலமும் "பரந் தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்" என்றதனால் நல்லகுணமும் "அற் றைத்திங்கள்" என்னும் பாட்டினாற் கல்விப்புலமும் 'நாறிருங் கூந்தல்' என்பதனான் மெய்யிற் புரைதீர் நலனும் நினைந்து கொள்க. புரைதீர் நலம்- குற்றநீங்கிய வனப்பு: பிறர் தொடற்காகாத அழகு. கல்விப்புலம் - கல்வியறிவு. புடவியார் - பூமியை யுடையவராகியும், பின்னும் பொன்கருதி மணப்பர் எ-று. இவண் கருதி என் செய்வ லென்று அழிந்தான் என்க. (46)

565. எல்லா முயர்ந்தனவாம் யார்பாலும் பொன்னுளதே
லில்லாமை யேதா னிவர்குறையே—னல்லாந்து
மங்கைய ரோடு மலையன் றிருக்கோவ
லங்க ணமர்ந்தா னகன்று.

(இ-ள்.) எல்லாம் உயர்ந்தனவாம் - இழிந்தனவெல்லாம் உயர்ந்தன ஆகும். எல்லாம் என்றது குலமின்மை, குணனின்மை, அறிவின்மை, அழகின்மை இவற்றை நினைந்து. யார் பாலும் என்றது தாம் பெண்கொள்ளுதற்கு உரியரல்லாதார் பாலும் பொன் உளதேல் உயர்ந்தனவாம் என்க. இல்லாமை - பொன் இல்லாமை. அல்லாந்து - அலமந்து; "ஆக்க மிழந்தேமென் றல்லாவார்" (குறள். 593) என்பது காண்க. அங்கண் அகன்று கோவல் அமர்ந்தான் என்க. மலையன் - மலையமான்திருமுடிக்காரி : மலையன் பெயரென்பது "பீடுகெழுமலையற் பாடியோரே" (புறம். 124) எனவருதலான் அறிக. இல்லாமையேதானிவர்குறை என்றது "அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை, யின்மையா வையா துலகு" (குறள்.841) என்பது பற்றி.

566. மறையந் தணர்செல்வ மல்கியோர் சான்றோர்
நிறையுந் திறத்தை நினைந்தான்—முறையாகச்
சுற்றத் தவரோடு சூழ்ந்தான் மகளிர்தோள்
பெற்றுத் திகழ்வார்ப் பெற.

(இ-ள்.) மறையந்தணர் - வேதத்துடன் நெஞ்சத்து அழகிய தட்பமும் உடையர் எ-று. செல்வ மல்கியோர் - பிறர்க்கு வழங்கற்குப் பொருள் நிறைந்தோர். சான்றோர் - சால்பு அமைந்தோர் 'காரிநின் னாடே, யழல்புறந் தருஉ மந்தண ரதுவே' (புறம். 122) என்பதனால் அந்தணர் நிறைதற்காரணமுணர்க. "சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூர்" என்பது பெரியதிருமொழி (2–10–8) அவ்வந்தணருட் சுற்றத்தவராயுள்ளாரோடு முறையாகச் சூழ்ந்தான் என்க. மகளிர்தோள்பெற்றுத்திகழ்வார் - இம்மகளிர் தோளையுரிமையாகப்பெற்றுப் புகழ்விளங்குவார். அவரைப்பெறச்சூழ்ந்தான் என்க. மகளிர் தோள்பெறுதல் பேருக்கக்கூறியது இம்மகளிர் உயர்த்தி குறித்தது. வடமீன் புரையுங் கற்பின் மடமொழி, யரிவைதோளள வல்லதை நினதெனவிலை நீ" (புறம். 122) என்றதுகாண்க. சுற்றத்தார் - தன் கோத்திரத்தார் எனினும் ஆம். இனிமறையந்தணர் கலைமகளையும், செல்வமல்கியோர் திருமகளையும் சான்றோர் எண்டோள்மங்கையையும் வழிபடுவோ ரெனினும் அமையும்; இவ்வூரிலிம்மூன்று சத்திகளும் விளங்குதல் "வெறியார்ந்த மலர்மகளு மங்கையோடு வியன்கலையெண்டோளினள் விளங்குசெல்வச்செறிவார்ந்த மணிமாடந் திகழ்ந்து தோன்றுந்திருக்கோவலூர்" எனக்கலிகன்றியார் பணித்தலானறிக. சான்றோர்வீரர்க்குமாதல் "சான்றோர் மெய்ம் மறை" எனப் பதிற்றுப்பத்தின் வருதலானுணர்க. அந்தணர்க்கு

விறற்புகழுண்மை "விறற்புகழ் சிறப்ப விளங்கிய கேள்வித் திறத்திற் றிரிவில்லாவந்தணர்" எனப் பரிபாடற்கண் வருதலானுணர்க. தநூர் வேதம் வல்லராதல் நினைக்க. "விறன்மிகு விழுச்சீ ரந்தணர்" என்பது பரிபாடல்-(1) (48)

567. கோவலாள் காரி குமர ரிருவருக்கு
நாவலோ யிம்மகளிர் நல்கனல—மாவல்கூர்ந்
தன்ன னுடன்படவா ளுருக்கு மஞ்சானேன்
றுன்ன வுரைத்தா ருவர்.

(இ-ள்.) கோவல் ஆள் காரி-கோவலூரை ஆள்கின்ற மலையமான் திருமுடிக்காரி. காரி குமரர் - காரியின் புதல்வர். இருவருக்கும் என்றது அவன் மக்களுள் மூத்தவற்கும் இளையவற்கும் என்க. மலையமானுக்குப் புதல்வர் இருவரிற் குறையார் என்பது 46 ஆம் புறப் பாட்டுக்கொளுவில் "கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக் கிடுவுழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது" எனவருதலான் அறிந்தது. "அரிவைதோளளவல்லதை நினைதன விலனே" எனக் கபிலர் இவனைப்பாடுதலான் இவன் பல்பெண்டிராளனல்லாமை நன் குணரலாகும். மகளிர் நல்கல் - கன்னிகாதானஞ் செய்தல். ஆருக்கும் என்றது பாண்டியற்கன்றிச்சேரசோழர்க்கும் என்பது படுகின்றது. உவர் - உவ்வுறவினர். உன்ன உரைத்தார் - உன்னி உரைத்தார். அன்னான் - காரி. ஆவல் கூர்ந்து உடன்படுவான் - இம்மகளிரைக் கொள்ள ஆசைமிக்கு இயைவன். நாவலோய் என்றது நின் சொல் வன்மையானும் நிறையேறுமென்பது குறித்தது. (49)

568. வென்று ஞெடுதோற்றுன் மேவிப் புகழ்துப்பாய்
நின்றான் கொடுங்கா னெடுங்காரி—யென்றுனு
மூவர்க்கு மஞ்சாத முள்ளூ ரிறைமகார்
மேவற் கிவர்க்கோத்தார் வேட்டு.

(இ-ள்.) வென்றுஞெடு தோற்றுன் மேவிபபுகழ்துப்பாய் நின்றான் என்றது "வென்றோனு நிற்கூறும்மே......தோற்றோன்றானு நிற் கூறும்மே" (புறம் - 125) எனவருதல்பற்றி. மேவிப்புகழ்துப் பாய் - விரும்பிப்புகழ்கின்ற துணைவலியாய் எ-று. கொடுங்கால் நெடுங் காரி - கொடுங்கால் என்னும் ஊரினையுடைய, யாருக்கும் பணியாத காரி; நெடுமை - நெடுமொழி என்புழிப்போல வணங்காமையைக் குறிப்பானுணர்த்திற்று. "தந்தையு, நெடிய வல்லது பணிந்து மொழி

யலனே'' (புறம் - 349) என்பது காண்க. ''காரிகொடுங்கால் முன்றுறை'' (35) என்று நெடுந்தொகைத்தொடராற் கொடுங்கால் என்னும் ஊர் காரியதாதல் உணர்க. என்றானும் என்றது தளர்ந்தவிலை யினும் என்பது படவந்தது. மூவர்க்கு மஞ்சாமை ''மூவருளொருவன் றுப்பா கியரென, வேத்தினர் தரூஉங் கூழே'' (ஷை - 122) என்பத னுன் உய்த்துணர்க. முள்ளூரிறை-முள்ளூர்மலைக்கு இறைவன் எ-று; முள்ளூர் மலையாதல் ''முள்ளூர்மிமிசைப், பட்ட மாரி யுறையினும் பலவே'' (புறம் - 123) என்பதனுனுணர்க. இறைமகார் - இறைவன் மக்கள். இது பெண்மக்கட்கும் ஆண்மக்கட்கும் பொதுவாக வழக்கப் படும். ''மகாஅ ரன்ன மந்தி'' (சிறுபாண்) எனவும் ''கன்று சடாஅ வுறக்கு மகாஅர்'' (மலைபடுகடாம்) எனவும் வருவனவற்றானுணர்க. இவர்க்கு மேவற்கு ஒத்தார். வேட்டு - வேள்விசெய்து. கரணமொடு புணர்தலின் வேட்டுமேவல் கூறிற்று. (50)

569. எனவந் தணராய்ந் தியம்பத் துணிந்து
தனம்வேண் டுவவெல்லாந் தந்து—கனமாப்பார்
காரிகையார் கண்ணாலங் காணக் கடவதென
வாரியன்பின் செய்தா னது.

(இ-ள்.) தனம் வேண்டுவ வெல்லாம தந்து-செல்வமும் பெண் புறத்தார் மணத்தில்வழங்க வேண்டுவன பிற எல்லாமும் கொணர்ந்து தந்து. கனமாப்பார் - பொறையை யுடைய பெரும்புவி; இக்காரிகை யார் கல்யாணம் பார் காணக்கடவது என்று சொல்லியபின் ஆரியன் அது செய்தான் என்க. அது என்பது வரும்பாட்டிற் கபிலன் செய லைச் சுட்டியது. (51)

570. பாரி மகளிரையப் பார்ப்பார்ப் படுத்தவர்நற்
காரியமாச் செல்வக் கடுங்கோவி—னேர்புக்குப்
பாடினான் பத்துப் பசுந்தீந் தமிழ்ச்செய்யு
ளீடிலான் கேட்க வேடுத்து.

(இ-ள்.) அப்பார்ப்பார்ப்படுத்து - அவ்வந்தணரிடை வைத்து: சிலப்பதிகார வுடைக்கலக்காதைக்கண் ''கருந்தடங்கண்ணியொடு கடி மனைப்படுத்துவ' எனவும், கொலைக்களக்காதைக்கண் அரும்பெறற் பாவையையுடைக்கலம் பெற்ற, விரும் பேருவகையினிடைக்குல மடந் தை......காவற்சிற்றிற் கடிமனைப்படுத்து'' எனவும் வருமிடங்களில் கண்டுகொள்க. அவர் நற்காரியமா - அம்மகளிருடைய மணவினை

யின் பொருட்டாக: செல்வக்கடுங்கோ - சேரமான் செல்வக்கடுங் கோவாழியாதன். ஈடிலான் என்றது இவன் 'மல்லலுள்ளமொடு மாசறவிளங்கிய' (பதிற். ஏழாம்பத்துப் பதிகம்) சிறப்பால். பசுந்தமிழ், திந்தமிழ் என்க. பசுமை என்றும் புலராமை. தீந்தமிழ் - சொல்லும்வா யும் கேட்குஞ் செவியும் உள்ளத்தோ டினிக்குந்தமிழ். எடுத்துப்பாடி னன்- உயர்த்திப்பாடினன்; "எடுப்பிற்கிளையுட்கழிந்தாரெடுக்க" என்பது காண்க. பொன்வேண்டுதலாற் செல்வக்கோவை யினைந்தார்; "செல்வக்கோவே சேரலர்மருக" என்பதும் (பதிற்-63) "சேர்ந்தோர் செல்வ" (டை. 65) என்பதும் "செல்வக்கோமான்" (டை. 67) என் பதும் இவர் கூற்று. நேர் புக்கு - எதிர் சென்று. (52)

571. பலாஅம் பழுத்த பசும்புண் ணரியல்
சுலாஅம் வளிதுரக்குந் தொன்னாட்—டெலாஅமினிய
நன்பறம்பி னெங்கோவே ணல்லோள் கணவன்ற
னன்பறம்பின் செல்பாரி யாம்.

(இ-ள்.) இது முதல் நான்கு செய்யுள் பதிற்றுப்பத்துள் ஏழாம் பத்து முதற்பாட்டின் பொருளைத்தழீஇக் கூறியன. இச்செய்யுண் முதலடி கபிலர் பாடிய முதற்பாட்டின்றலையடியாகும். பலாப்பழுத்த என்பது மெலிந்தது என்ப. பசும் புண் என்றது - புண்பட்டவாய் போலப் பழுத்துவெடித்த புறத்தினை. பலாப்பழுத்தவற்றின் பசும் புண்ணினின்று ஒழுகும் அரியல் என்க. அரியல் - அரித்துவிழும் தேன் என்ப. சுலாஅம் வளிதுரக்கும்-சுழலும் காற்றுத்தேனை எடுத்து வீசும். தொன்னாடு - பழைய பறநாடு. எலாஅமினிய-நால்வகையுண வானும் இனியதாகிய. எங்கோ - என்போன்ற புலவர்க்குக் கோ என்று சிறப்பித்து நும்போன்ற கோக்கள்முற் புகழத்தக்கான் என்பது கருத்து. கபிலர் 'நல்விற் பாவையன்ன நல்லோள்' என்பதனால் நல்லாள் பெயராதல் உணரலாம். நல்லோள் கணவன் என்று தலைவி யாற் சிறப்பித்தது மகடூஉவாற் குலந்தூய்தாதல் கருதியும் அவளே மனைக்கு விளக்காதல் பற்றியும் என்க; சிந்தாமணிப் கனகமாலையா ரிலம்பகத்துப் "பொன்னனையாள் வேந்தன்" என்னும் பாட்டுரையில் நச்சினார்க்கினியர் கூறியவை கொண்டுணர்க. கபிலர் இச்சேரனைக் 'கற்பிறைகொண்ட கமழுஞ் சுடர்நுதற் புரையோள்கணவ" (பதிற் - 70) எனவிளித்தலுங்கண்டு கொள்க. தன்னுடைய அன்பு அறத் தின் பின்னர்ச்செல்லும் பாரி என்க. அறம்பின் என்பது 'கலந்திமை' (குறள் - 1000) என்புழிப்போல மெலிந்தது. எங்கோக் கணவனாகிய பாரியாவன் எ-று. "பலாஅம் பழுத்த பசும்புண் ணரியல், வாடை

திரக்கு நாடுசெழு பெருவிற, லோவத் தன்ன வினைபுனை நல்லிற், பாவை யன்னநல்லோள் கணவன், ......எங்கோ......மாவண் பாரி'' என்பது காண்க. (53)

572. புலர்ந்தசெழுஞ் சாந்திற் புலராத வீகை
மலர்ந்த திருமார்பின் வள்ள—லலர்ந்தினிய
பொன்னைப் பொரும்பூப் போதுளுஞ் சிறியிலைகோ
ளுன்னப் பகைஞ னுவன்.

(இ-ள்.) புலர்ந்த சந்தனத்தானும் புலராத ஈகையானும் புறமும் அகமும் மலர்ந்த திருமார்பினையுடைய வள்ளல் என்க. திரு மார்புகூறியது "எழுமுடி கெழீஇய திருஞெமரகலத்து......நார்முடிச் சேரல்'' (பதிற் - 40) என்பதுபோலக்கொள்க. இனிய பொன் - இல்பொருளுவமை. பூவும் இலையும் கொண்ட உன்னமரத்திற்குப் பகைவன் என்றது உன்னமரம் பூத்துத்தழைத்தது நன்னிமித்த மென்று வென்றிதுணிந்து பொரவந்த வேந்தர் ஓடுகழற்கம்பலைகண்ட செருவெஞ்சேஎய் அப்பாரிவேளாதல் உணர்த்திற்று. செழுஞ்சாந் தினுன் இன்பமும் புலராத ஈகையான் அறமும் உன்னப்பகைவன் என்பதனுற் பொருளும் நிரம்புதல் குறிப்பு. புலராத ஈகை எப்போதுந் தான் நிருடைமையானுங் கொள்க; "கையார்புனலானனையாதன கையுமில்லை'' என்றூர் கம்பநாடரும், "பொன்னினன்ன பூவிற் சிறியிலைப், புன்கா லுன்னத்துப் பகைவன் ...புலர்ந்தசாந்திற் புலரா வீகை. மலர்ந்த மார்பின் மாவண் பாரி'' என்பதுகாண்க. பொதுளும் - தழைக்கும். (54)

573. ஏரார் முழாப்புலர வேற்பார் குழாமினைய
வாராத சேட்புலம்போய் மன்னினுன்—சீர்கோளவ
னீயுந் தோறுமகிழா னீத்த துளமிரங்கா
னீயுந் தோறும்வள் ளியன்.

(இ-ள்.) ஏர் ஆர் முழாப்புலர - அழகினையுடைய ஆர்க்கின்ற முழவு மண்புலரவும். "மண்முழாமறப்ப'' (புறம் - 65). ஏற்பார் குழாம் இனைய - இரவலர் கூட்டம் வருந்தவும், வாராத சேட்புலம் - மீண்டுவருதலில்லாத சேய்மையிடம்; வீடு எ-று. வானோர்க்குயர்ந்த வுலகம்'' என்றூர் திருவள்ளுவனாரும். ஈயுந்தொறுமகிழான் என்றது ஈயுந்தோறெல்லாந் தானயலா யிருத்தலல்லது ஈயா நின்றேமென்று ஒரு மகிழ்ச்சியுடையனல்லன் எ-று என்ப; குறைபத்தந்தே னென

வினைதலான் மகிழான் எனினுமமையும். ஈத்தது உளமிரங்கான் - ஈயாதுவைத்துள்ளதற்கு இரங்குதலல்லது ஈத்தபொருட்கு உளமிரங் கான் என்க. ஈயுந்தொறும் வள்ளியன் என்றது ஒருகாற்றந்தவன் முன்தந்தேனென்று சொல்லி உலோவாது பின்னரும் ஏற்ற இரவல னுக்கு மேலும் மேலும் ஈதலான் பெருவண்மையுளனுவன் எ-று. "முழவுமண்புலர விரவலரினைய, வாராச்சேட்புலம் படர்ந்தோன்...... ஈத்ததிரங்கா னீத்தொறு மகிழா னீத்தொறு மாவள்ளியன்" என்ற கபிலர் கூற்றையும் ஈண்டுப்பழைய வுரைகாரர் "ஈத்ததற் கிரங்காமை முதலிய அப்பாரி குணங்கள் நின்பாலுமுள" என உரைத்ததனையும் நோக்கிக்கொள்க. ஆர்முழா - வினைத்தொகை. ஈயுந்தொறு மகி ழான் என்பது முதலியவற்முற் பாரி யானென தென்னுஞ் செருக் கறுத்தவனென்றும் அதனுல் வானோர்க்குயர்ந்த வுலகம் புக்கனன் என்றும் இயைபுபடக் கூறியவாறு கண்டுகொள்க. இங்குப்பாரி சேட் புலம்புக்கது கூறியதனுல் அவன் மகளிர்க்குச் செய்யவேண்டுவதைக் கபிலன் ருன்செய்ய நினைந்தது குறித்தது எனினுமமையும். (55)

574. இரப்பே னெனவாரே னெஞ்சியோ கூறேன்
புரப்பாய்வேள் பாரி புகழ்தான்—றரைப்பாலோ
ருன்பா லுளதேன் றுரைத்தாரந் நல்லிசைமை
நின்பாற் றரவந்தே னீடு.

(இ-ள்.)—இரக்கவே வந்து இவர் இரப்பேனென வாரேன் என்றது தான்பெற நினைந்த செல்வத்தினும் செல்வக்கோவிற்கு இவர் தரநினைந்த புகழ்ச்செல்வம் இறப்பப் பெரிதாதல் கருதி என்க; இதனை இவர் "நல்லிசைதரவந்திசினே" என்றதனுல் நன்குணர்க. பாரிபுகழ் உன்பாலுளதென் றுரைத்தாரென்றது "ஈத்தொறுமாவள்ளிய னென நுவலுநின் னல்லிசை" என்புழி, என நுவலும் என்பதனை விளக்கி நின்றது. எஞ்சியோ கூறேன் - குறைந்து சொல்லேன்: என்றது உண்மையிற் குறைந்து சில புகழாமையையும் கபிலர் தாம் குறையுற்றுப் புகழாமையையும் உணர்த்தி நின்றது. "பாரியருமையறியார்" என்றதனுல் மிகவும் அரியனுகிய பாரியின் குணங்கள் இவன்பாலுமுள வென உலகம் நுவலுவதே கபிலர் செல்வக்கடுங்கோவைத்தேடி யடைதற்குக் காரணமெனத் துணியலாம். பாரியினுடன் வாழ்ந்த உயிர்த்துணையாதலான் கபிலர் அவ்விசைமைக்குரிய குணங்களை நேரே இச்சேரன்பாற்கண்டு உண்மை கூறவல்லர் ஆதல் உணர்க. "இரக் கெனவாரேனெஞ்சிக்கூறேன்......வள்ளிய னென நுவலுநின், னல் லிசை தரவந்திசினே" என்றதுகாண்க. இசைமை நீடு தரவந்தேன்

வேறு' இரப்பேன்என்ற மட்டில் வாரேன் எனினுமமையும். எஞ்சியோ கூறேன் - புகழ் தொகுத்தலாற் பொருளொழியவிட்டோ சொல்லேன் என்பதும் ஆம். "விரிப்பினகலுந் தொகுப்பினெஞ்சும்" (புறம் - 53) என்றது காண்க. (56)

575. என்று பலவா றெடுத்துக் கடுங்கோவை
வென்றி கொடையான் வியந்தேத்தி—நன்றறிவா
னின்னாட் டயிரை நெடுவரைபோ னீநிலைஇ
யெந்நாட்கும் வாழ்க வென.

(இ-ள்.)—இச்செல்வக்கோமான் கடுங்கோ ஆதலை "மடங்கல் வண்ணங் கொண்ட கடுந்திறற், றுப்புத்துறைபோகிய கொற்றவேந்தே (பதிற்-62) எனக்கபிலர் பாடுதலானறிக. வென்றியும் கொடையும் பாரிவேளுடையனவேயாம்; அவ்வரிய பண்புகள் இவன்பாலுங் காண்டலான் வியந்து அவ்வுண்மையைக்கண்டவாறு புகழ்ந்து. நன்றறிவான் - கபிலன்: "நன்றின்பாலுய்ப்பதறிவு", (குறள் - 422) என்பது காண்க. நின்னாட்டு அயிரை-நின்னுடைய நாட்டிலே உள்ள அயிரைமலை; என்றது சேரர் கொங்குநாட்டிற்கும் சேரர் கடன்மலை நாட்டிற்கும் இடையேயுள்ள நெடுவரையாதல் குறித்தது. "அயிரை நெடுவரை போலத் தொலையா தாகநீ வாழு நாளே" (பதிற் -70.) என்பது காண்க. எந்நாட்கும் -ஊழியும் என்பதுபடநின்றது. (57)

576. ஒருமாய வண்ண னுளனுறப் பெற்ற
பொருவா ரிலாத பொறையன்—றிருவாதன்
பார்ப்பார்க் கலாது பணிபறியான் மாக்கபிலன்
சீர்ப்பாக் ககம்பணிந்தான் றேர்ந்து.

(இ-ள்.)—ஒரு மாயவண்ணன் - ஒப்பற்ற மாமை நிறமுள்ள இறைவன்; "மாயோன்மேயமன்பெருஞ்சிறப்பிற் றாவாவிழுப்புகழ்" (தொல் - புறத்) என்பதனால் ஒப்பற்ற தன்மையுணர்க; வல்லாராயினும் வல்லுநராயினும், புகழ்தலுற்றோர்க்கு மாயோனன்ன. வுரைசால் சிறப்பிற்புகழ்" (புறம். 57) என்ற சான்றோர்வாக்கும் கண்டுகொள்க. "நீலமுண்ட மின்னன்னமேனி" (திருவிருத்தம்) யுடையனாதலின் ஒப்பற்றதன்மையை வண்ணத்திற்கேற்றினும் அமையும். ஒப்பற்றவன் உளனுறப்பெற்றதனால் ஒப்பாரில்லாத சேரன் என்க. பொருவாரிலாத - போர்செய்வாரிலாத எனினுமமையும் 'மாயவண்ணனை மன்னுறப் பெற்று' என்பது பதிகம், (ஏழாம்பத்து). பொறையன் - அந்துவன் சேரலிரும்பொறையின் மகனாதல் குறித்தது. 58

திரு ஆதன் - வெற்றித்திருவுடைய சேரலாதன் வழியினன். திருச்- ''சாறபடுதிரு'' (பதிற் - 65) எனினுமமையும்; ''பார்ப்பார்க்கல்லது பணிபறியலையே'' (ஷை. 63) என்றார் கபிலர். பணிபு - பணிதல். பணிபறியான் - பணிந்தறியான் என்பதும் ஆம். மாக்கபிலன் - பெருங் கபிலன். சீர்ப்பா- பல்வகைப்புகழையும் அடக்கிய சிறப்புடைய செய்யுள்; ''செறுத்த செய்யுட்......கபிலன்'' என்பது புறப்பாட்டு (53.) உளம் பணிந்தான் - இவன் பாடற்கு உள்ளம் வணங்கினான். என்றது பார்ப்பானாதலாற்கபிலனுக்குத்தலைவணங்கினன் என்பது குறித்தது. தேர்ந்து - அப்பாக்களின் பொருள்களைத்தெளிந்து. இவன் அகம் பணிந்தது தான் பெருங்கொடைநல்கியும் சிறுகொடையென்று உரைத்த பதிக வரலாற்றான் உய்த்துணர்க. (58)

577. தானன்றா வாளுந் தனிநாட் டேர்வடபாற்
றேனன்றா வெற்பின் சிகரம்போய் — மேனின்று
காண்டகுமா நாடீத்துக் காணநூ றாயிரம்பெய்
தாண்டகைசோற் றான்சிறிதேன் றங்கு.

(இ-ள்.)—தான் நன்றாக ஆளுந்தனிநாடு - கருவூராகிய வஞ்சியையுடைய கொங்கு நாடு என்க. இவன் அந்துவன் மகனாதலானும் அந்துவன் சேரல் கருவூரரசன் என்பது ''இவன்யாரென் குவையாயின்'' (13) என்னும் புறப்பாட்டுக்கொளுவால் நன்கறியப்படுதலானும் அந்நாட்டின் வடக்கண்ணே * தேன்நன்றாமலை இன்றும் விளங்குதலானும் உண்மை யுணர்க. செல்வக்கடுங்கோவும் கருவூரினனாதல் ''புல்விலை வஞ்சிப் புறமதிலலைக்குங், கல்லென் பொருநைமணலினுமாங்கட், பல்லூர் சுற்றிய கழனி, யெல்லாம் விளையு நெல்லினும் பலவே'' (புறம் - 387) எனப்பாடப்படுதலான் உய்த்துணரலாகும். தேன் நன்றா வெற்பு - தேனையுடைய நன்றாவென்னுங் குன்று. சிகரம் போய் - உச்சியிற்சென்று. மேனின்று காண்டகுமாநாடு - அம்மேனிலையில் நின்று காணத்தக்க பெருநாட்டை. காணம் - பொற்காசு. சிறிதென்று - சிறுகொடையென்று. அங்கு - அப்பெருங்கொடை பெய்த அந்நிலையில். ஆண்டகையாதலான் இங்ஙனம் பெருகத்தந்து பணிந்துமொழிந்தான் என்பது குறிப்பு. இதனைப் ''பாடிப்பெற்ற பரிசில், சிறுபுறமென நூறாயிரங்காணங் கொடுத்து நன்றா என்னுங் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாங் காட்டிக்கொடுத்தான் அக்கோ'' எனப்பதிகத்திறுதியின் வருதலான் அறிக. (59)

---

* தேனன்றாமலை - இப்போது சேலத்தைச்சார்ந்தது. நன்றா குன்றத்துச் சீயர் என்ற பெரியார் வைணவருள் உண்டு.

578. பொன்னிற் சிறந்தது பொன்விளையு நன்னாடேன்
றன்னி யுளத்தி னுவந்தனனாய்—மன்னருளே
செல்வக் கடுங்கோத் திருந்து பெருங்கொடையைக்
கல்விக் கடல்புகழ்ந்தான் கண்டு.

(இ-ள்.) பொன்னிற் சிறந்தது - பெய்த நூறாயிரங்காணத்தினும் அளப்பில் காணம் விளையு நன்னாடு சிறந்ததென்று உளத்தின் உன்னிச் சிறந்த பொன்னையும் அதனினும் சிறந்த நாட்டையும் உவந்தனன் ஆகி. மன்னருள்ளே - சேரவேந்தர்க்குள். செல்வக்கடுங்கோ என்று பெயர் சிறந்தானுடைய திருந்திய பெரிய கொடையைக் கல்விக் கடலாகிய கபிலன் கண்டு புகழ்ந்தான் எ-று. கண்டு - நேரிற் பார்த்து. (60)

579. தேடும் பொருட்குச் சிலமொழியச் செம்பொன்னு
நாடுங் கொடுத்தனையா னல்லாத—பாட
ரேடுப்பா ரேதுங்கொள்வார் சூடுந் தகையோர்
கொடுப்பார் தெரிவர் கொடை.

(இ-ள்.) தேடும் பொருட்கு - தேடும் பொருள்பெறற்கு. சில மொழிய - சிலபாடல் சொல்ல. நல்லாத - இசையால் நல்ல ஆதனே. பாடலாகிய மாலையைத் தொடுக்கவல்லராகிய புலவர். ஏதும் - அம் மாலைக்கு விலையாக எச்சிறு பொருளும்; கொள்ளுவர். அம்மாலையைத் தலையிலணியும் தகைமையோராகிய கொடைபுரிவார் தாம் கொடுத்தற்குரிய விலையை வேறேதெரிவர் எ-று. இஃது "இரப்பவரென் பெறினுங்கொள்வர் புரப்பவர், தாமறிவர் தங்கொடையின் சீர்" என்னும் ஔவை பாட்டடிகளைத் தழீஇ வந்தது. இதனாற் கபிலர் திருக்கோவலூர்க்கு மீடற்கு முன்னர்ச் சேரனிடம் விடைகொள்ளுமமையத்தில், ஔவையைத் தாம் மேற்கொண்ட பாரிமகளிர் திருமணத்திற்குத் துணையாக நினைத்தது காட்டியதாம். இவர் நினைந்தவாறு ஔவை வந்து துணைபுரிதல் மேல்வருந் திறத்துக்கண்டு இயைபுணர்க. இது பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தியதாம் (தொல். - பொருள். 88). ஏதும்- யாதும். (61)

580. எனச்சேல்வக் கோவை யிசைத்துவேள் பாரி
மனக்கோத்த மக்கள் மணத்தை—நினைத்தறிஞன்
பூங்கோவ லூர்க்குப் புறப்பட்டான் சேரன்பா
லாங்கே விடைகோ ளறைந்து.

(இ-ள்.) பாரி மனக்கு ஒத்தமக்கள் என்றது "தந்தையரொப் பர்மக்கள்" (தொல் - பொருள். 145) என்பதுபற்றி வந்தது: உருவொத்தலினும் மனத்திற்கு ஒத்தல் சிறந்தது காட்டியது. "மகனறிவு தந்தையறிவு" என்பது காண்க. பூங்கோவலூர் என்பது பண்டைவழக்கு "பூங்கோவலூர் தொழுதும்" என்று பெரியார் பணிப்பர். விடைகோளறைந்து - தான்விடைகொள்ள வேண்டுதலைச்சொல்லி. இது "நடையிற்றோன்றிய இருவகை விடை" (தொல், பொருள். 88) யினுள் தான்போதல் வேண்டுமெனக்கூறுதல் என்க. இதனலவன் கபிலரை விடலினையாமை குறித்ததாம். (62)

581. விடைகோள் பெரும்புலவன் மென்கையைப் பற்றி
யிடையின் றடியே யினிதே—நடைகொண்டு
சென்னெறிக்கட் டேரிற் செலவிட்டு மீண்டனன்
நன்னெறிச்சேல் வக்கோ நயந்து. [மெய்

(இ-ள்.) செல்வக்கோ கபிலர் மென்கையைப்பற்றிய செய்தி "கடுங்கண்ண கொல்களிற்றால்" (14) என்னும் புறப்பாட்டுக் கொளுவாலறிக. இடையின்று - வெளியின்று; இருவரும் நெருங்கியதைக் குறித்தது. மெய்நன்னெறி - மெய்ம்மையையுடைய நல்லவழி; "வேள்வி யாக்கிய பொழுதி னறத்துறை போகி" (பதிற். 7. பதிகம்) என்று கூறுதல் காண்க. நயந்து இனிதே நடைகொண்டு மீண்டனன் என்க. (63)

582. நன்று மலைநாடு நன்பொன்னு ராயிரமுந்
தன்றூய பாரி தருமகளிர்க்—கென்றுனய்
மாக்கபில னுள்ள மகிழ்கூர்ந்து வண்மலையன்
றூக்கோவ லூர்க்கேகுஞ் சூழ்ந்து.

(இ-ள்.) தன் தூய பாரி - தன்னுடைய தூய்மையையுடைய பாரிவேள். மகளிர்க்கு என்றுனய் என்றது தனக்கென்று கினையாமையைக்காட்டிற்று. மகிழ்கூர்தல் மகளிர்க்கு வறுமை தீர்தல்பற்றி என்க. தூக்கோவலூர் - இருபெருந்தெய்வமும் முச்சத்தியும் கோயில் கொள்ளுதலாற் றூய்மையையுடைய கோவலூர் எ-று. வண்மலையன் - தேர் வண்மலையன் என்றபெயரானறிக. (புறம் - 125). சூழ்ந்து - செய்வது ஆராய்ந்து. (64)

583. பாரி மகளிரைப் பார்ப்பார்ப் படுத்ததிறஞ்
சேரன் கோடையோடு சேர்த்துரைத்தேஞ்—சீரேளவை

யம்மகளிர் செய்திகேட் டக்கோவ லெய்துதிறஞ்
செம்முறையே சொல்வேந் தெரிந்து.

(இ-ள்.) பார்ப்பார்ப்படுத்த திறம்-பார்ப்பாரிடை யிருத்திய பகுதி. அம்மகளிர் செய்தி - பாரிமகளிர் தந்தையுந்தாயுமிழந்து திருக்கோவலூரிற் பார்ப்பாரிடை யிருக்குஞ் செயல். (65)

மகளிரைப் பார்ப்பார்ப்படுத்ததிறம் நிறைவேறியது.
இத்திறத்திற் செய்யுள்—65.

---

## 12. மகளிர்பால் ஔவை வரவுரைத்த திறம்.

584. செல்வக் கடுங்கோத் திருவூரின் றேண்கபில
னெல்லைத்தண் பூங்கோவ லூர்புகுமுன்—கல்விநிறை
யௌவைப் பெருந்தகுவி யப்பாரி மாய்ந்ததெலா
மவ்வப் படிகேட்டா ளாய்ந்து.

(இ-ள்.) திருவூர் என்றது சேரர் தலைநகரைத் "திருமாவியனகர்க்கருவூர்" (அகம்-93.) என்பதுபற்றி. மகளிர்தனிமை நினைந்தானென்பது தோன்ற ஒல்லைப்புகுதல் குறித்தது. 'பொய்கைவேலிப் பூங்கோவலூர்' (திருநெடுந்தாண்டகம் - 6) என்பதனுற்றட்பம் கூறப்பட்டது. கல்விநிறை ஔவை - கல்வியும் கற்றவாறு மனத்தை நிறுவலுமுடைய ஔவை: கல்வி நிறைந்த ஔவை என்பதும் ஆம். பெருந்தகுவி - பெருமைதக்காள். அப்பாரி-உலகம் அறிந்த வேள்பாரி. மாய்ந்தது எல்லாம் - மாய்ந்ததும் அதன் பின் நிகழ்ந்த எல்லாமும். அவ்வப்படி - நிகழ்ந்தவாறு. ஆய்ந்து கேட்டாள் - நுணுகிக் கேட்டாள். நுணுக்கம், கேட்கும் போதே உடல்தளர்ந்து நுணுகுதல் கருதிற்று: "ஒய்த லாய்த னிழத்தல் சாஅ, யாவயி னான்கு முள்ளத நுணுக்கம்" (தொல் - உரி - 24) என்பது காண்க. (1)

585. மணிகிளரும் பாம்பு வலியிடிகேட் டஞ்சிப்
பிணிகிளர்வ தென்னமனம் பேதுற்—றணிகிளரு
நல்வேட் படுத்த நலிவோ பொறேனென்று
சொல்லா வெழுந்தா டுனைந்து.

(இ-ள்.) மணிகிளரும் பாம்பு - மணிசிறக்கும் பாம்பு: மணியோடு விடமுமுடைய பாம்பை உவமித்தது கல்வியுடன் அழிக்கவல்ல சாபமும்

உடையளாதல்பற்றி. பிணிகிளர்வதென்ன - நோய்சிறப்பதென்னும் வண்ணம். மனம் பேதுற்று - உள்ளந்தடுமாறி. அணிகிளரு நல்வேள் உலகிற்கு அணியாகச்சிறக்கும் நன்மையையுடைய வேள்பாரி. நல்வேட் படுத்த நலிவு - நல்வேளைக் கொன்றதனாலாகிய துன்பம்; வேள்பட்ட தினும் வேளைப்படுத்த துயரம் பொறுக்கரிதாதல் கருதிற்று. இறத்தல் முறையாம், இறப்பித்தல் முறையன்றென்பது நினைந்தது. சொல்லாத் துனைந்து எழுந்தாள் - சொல்லி விரைந்து எழுந்தனள். (2)

586. சூழ்ந்த கபிலன் றுணையாகப் பல்வேளிர்
வாழ்ந்த மனைக்கு வறிதுபோய்ப்—போழ்ந்த
மனத்தோடு பாரி மகளிருளார் கோவ
லெனக்கேட்டுப் போனா ளினைந்து.

(இ-ள்.) சூழ்ந்தகபிலன் - பாரிக்குவேண்டியன ஆராய்ந்துசெய்த கபிலன். "கபிலன்சூழ" (அகம். 78) என்றது காண்க. பல்வேளிர் என்றது விச்சிக்கோவையும் இருங்கோவேளையுநினைந்து. வறிதுபோய்- பயனின்றிச்செல்லப்பட்டு. போழ்ந்த மனத்தோடு - துயரத்தாற்பிளக் கப்பட்ட உள்ளத்துடன். கோவல் உளார் - திருக்கோவலூரினுள்ளார்; எனக் கேட்டு இனைந்து போனாள் - என்று கேள்வியுற்று வருந்திச் சென்றாள். (3)

587. சிறிதுந் தவிரத் தெரியா துலகோ
வெறிதேன் றிடர்கூர்ந்து வெம்பிப்—பிறிது
செயப்புகாள் சோனை தெறுவெயிலென் றெண்ணாண்
மயற்புகா ளெய்தினள்கோ வற்கு.

(இ-ள்.) சிறிதுந்தவிரத் தெரியாது - சிறுபொழுதுந்தங்க நினையாது. மக்கள் நிறைந்தும் பாரியாகிய நல்லோனிலாத உலகமே வெறும் பாழென்று துயரமிக்குமனம் வெந்து. பிறிது செயப்புகாள் - தனக்கென மற்றொன்று செய்யமுயலாதவளாகி. சோனை மழையும் தெறுவெயிலும் என்று கருதாளாய், மயலிற் புகாத ஔவை கோவற்கு எய்தினள் என்க. கோவற்கு வழிதெரிய வேண்டுதலான் மயற்புகாள் என்பது கருதிற்று. கோவற்கு - கோவற்கண். சோனை - விடா மழை; "மாமேகஞ் சோனைபட" என்ப (கம்பர்). தெறுவெயில் - சுட்டுக்கொல்லும் வெயில். (4)

588. உடுத்த துகிலு முரறு மழையா
னடுக்க நனையவது நாடா—தடுத்து

மனமீர்ப்பப் பாரி மகளிர் வதியு
மனேமீப் படவந்தாண் மான்.

(இ-ள்.) உடுத்ததுகிலும் நடுக்கும் வண்ணம் உரறு மழையால் நனைய என்க. உரறுதல் - முழங்குதல். அது நாடாது - அதைப் பற்றி நினையாமல். மனேமீப்பட - தன்வரவால் மனைமேலாக எ-று. (5)

589. கோடைபெற்ற செல்வக் குழவிகா ணுங்கட்
கிடையுற்ற திவ்விதியோ வென்றுள்—விடையற்ற
பாரி யிலாதும்மைப் பார்ப்பலோ வென்றுங்கோன்
மாரி யிலாமலிம் மண்.

(இ-ள்) பாரிகொடையறத்தின் வேறுகானென்பது கருதக் கொடைபெற்ற எனப்பட்டது. செல்வக்குழவி - செல்வத்தின் வளர்ந்த பிள்ளை: பிறந்த இல்லத்தும் இனிப்புகும் இல்லத்தும் இடரில்லாமை நினைந்து இடையுற்றது எனவந்தது. விதி - விதிப்பயன். குழவிகாள் என மனை உள்ளே புகும்போதே கூவிவிளித்தாளென்க. பாரியிலா மல் நும்மைப் பார்த்தல் செய்வேனே எ-று. மகளிரைத் தந்தையில ராய்த் தனியே பார்த்தற்கண் உண்டாய வருத்தந்தோற்றுவித்த வாறு இஃது. நும்மளவினன்று இக்கேடு, உலகிற்கே இது கேடாம் என்பது தெரிய மாரியிலாமலிம்மண் என்னுங் கொல் எ-று. பார்ப்பலோ என் றது ஔவைதன் விழிகளைத்தானே மூடியதை குறித்தது. (6)

590. பறம்பின் றிருக்கோயிற் பல்புலவர்க் கீத்தே
யறங்கோண் டிருந்த வருவே—டிறம்பரிய
செல்வக் குடிக்குஞ் சிதைவுண்டோ வென்றழுது
கல்விக் கடலோயுங் கண்டு.

(இ-ள்.) அறங்கொண்டிருத்தலாற் றிறம்பரிய செல்வம் உடைமை கூறிற்று. அருவேள் - அருமை வேள்; "பாரிய தருமை யறியார்" என்றது காண்க (புறம்-116.) கல்விக்கடல் - ஔவை. கண்டு - மகளிரைப்பார்த்து ஓயும் என்க. மகளிர் துக்கம்வளராமைக்கு அவரைக் கண்டவளவி லோய்ந்தது காட்டிற்று; பல் புலவர்க்கு என்றது, "புலங்கந்தாக விரவலர் செவினே வரைபுரைகளிற்றொடு நன்கலனீயும் பாரி" என்பது பற்றி. பல்புலமையையுடைய இரவலர்க்கு ஈத்தே இருந்த வேள் என்க. ஈத்தேயிருந்த என்றது ஈயாதிலேயின் இராமை குறித்தது. இவ்வருமை நோக்கி அருவேள் எனலாயிற்று. (7)

591. வேந்த ரழுக்காற்று மேலாப்பின் வெங்காம
வார்ந்த விரிப்பின் வசைமுழங்கப்—போந்தமர்ந்து
கோவஞ் சுடரக்கை கொட்டிமகிழ்ந் தார்கோலோ
பாவங் களித்தாடல் பார்த்து.

(இ-ள்.) வேந்தர் என்றது மூவரையுங்குறித்து. அழுக்காற்று மேலாப்பின் - அவ்வியமாகிய விதானத்தில். வெங்காமவிரிப்பின் - வெய்ய காமமாகிய கீழ்விரிப்பில். மேற்கட்டி அழுக்காறாகவும் கீழ் விரிப்புக் காமமாகவும் கினைக. வசையாகிய முழவு முழங்க. தம் வெகுளியே விளக்காக எரிய: பாவம் - பாவமாகியசேட்டை. அறத்தை வென்றதனாற் பாவத்திற்குக் களிப்புண்டாயதென்க. வார்ந்த விரிப்பின் - ஒழுக இட்ட விரிப்பின்கண். கைகொட்டல் - ஆடற்கு ஒற்றறுத் துக் கையாற் கொட்டுதல் என்ப. (8)

592. ஊதுலை போல வுயிர்த்தா ளிவையுரைத்தாண்
மாதர் துயரை வளர்விப்ப—தாதவுள
ளய்ந்தா ளெழாஅ தடக்கினு டன்னுறுகண்
சாய்ந்தாள் கிடந்தா டரை.

(இ-ள்.) உயிர்த்தாள்-உயிர்த்தவளாகிய ஒளவை, இவையுரைத் தாள். இவை யென்றது முற்பாடல்களிற் கூறியவற்றை. தன்உறுகண் எழாமல் ஆய்ந்தாள், தன்னுளன் அடக்கினுள் என்க. சாய்ந்தாள் தரை கிடந்தாள் - சாய்ந்துதரையிற் கிடந்தாள். ஊதிய கொல்லன் உலைபோலச் சுடவும், பெருகவும் உயிர்த்தாள் என்க. தன் உறுகண் புறத்தே எழாமல் உள்ளே அடக்கினுள். உறுகண் - வருத்தம். "எற்றுக உலையே" (புறம். 173) என்புழிப்போன்ற உலையன்மைக்கு ஊதுலை எனப்பட்டது. "தோன்மிதியுலை" (பெரும்பாண்) எனவந்த விடத்து நச்சினார்க்கினியர் ஊதுலை யெனவுரைத்தல் காண்க. "ஊது லை தோற்கவுயிர்க்கும்" (சிலப், துன்ப) என்ப. (9)

593. உண்ணு வயிற்றே டுடுக்கை நனைந்தகுளி
ரெண்ணு திடர்மே வியல்பினைத்தான்—கண்ணுற்கண்
டன்னு ளுடுக்க வவிழ்த்தளித்தா ளங்கவையா
டன்னீலச் சிற்றுடை தாழ்ந்து.

(இ-ள்.) அகத்து உண்ணுத வயிற்று வெப்பமும், உடை நனைந் ததனலாகிய புறத்துக்குளிரும் கினையாமல் தம்பொருட்டுத் துயர்

மேவிய இவளியல்பினைக் கண்ணுற் கண்டு என்க. தாழ்ந்து அளித் தனள் - வணங்கி நல்கினள். அன்னாள் - அவள்; ஔவை என்ற வாறு. அவிழ்த்தளித்தாள் என்றதனால் வேறு நல்கற்கேற்றதொன் றில்லாமை அறிக. நீலச்சிற்றுடை - நீலம் ஊட்டிய சிறிய புடைவை.

594. சின்னத் துணியுடுத்துச் செங்நீலச் சிற்றுடை
யன்னைக் களிக்க வவளுடுத்துப்—பொன்னொத்த
மக்கட் கியல்பாய வள்ளன்மைக் குள்ளுவந்த
பக்கத் திதுசோற்றுள் பாட்டு.

(இ-ள்.) அங்கவை சின்னத்துணியுடுத்து என்க. சின்னத்துணி-கிழித்துக்கொண்டதோர் துணி. செங்நீலச்சிற்றுடை - நீலவருண மூட்டிய செம்மையான சிறிய ஆடை; உடுத்தற் குரியவள் என்பது தோன்ற அன்னை எனப்பட்டது. பொன்னொத்த மக்கள் - இவரே பொன் ஒத்தலான் இவர்க்குப் பொன்னில்லாமைகுறையில்லை என்பது தோன்றக்கூறியதாம். இயல்பாய வள்ளன்மை என்றது கொடை பிறவிக்குணமென்றது பற்றி. உள் உவந்த பக்கத்து - உள்ளத்தே விரும்பியதிறத்து. இதுபாட்டுச்சொற்றுள் என்க. இது என்பது வரும் பாடலைச் சுட்டியது. (11)

595. பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி யளித்த களைக்கோட்டுஞ்—சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்று
நீலச்சிற் றுடைக்கு நேர்.

(இ-ள்.) இது பழம்பாட்டு. 'பாரி பறித்தபறி, இச்செய்தி முன் னரே கூறப்பட்டது. பழையனூர்க்காரி என்றது கோவலூர்க்காரியின் வேறென்று குறித்தது; பழையனூர் தொண்டை நாட்டது. இக்காரி களைக்கொட்டு அளித்தது 'ஔவை இவன்பால் விடைபெற வர அஃ தறிந்து அவளை விட்டுப்பிரிதற்குமனமில்லாமல் அவள் விடைகேளாத வாறு அவளெய்திய வுடனே ஒரு களைக்கொட்டை யீந்து தன்னொடு வயலிற் களைபெடுக்கச்செய்தனன்' என்னுங்கதையாற்றெரிக. சேர மான் வாராயோவென்றழைத்த வார்த்தை 'ஔவை சேரன் கோயிலிற் பலருடன் உண்ணப்புக்கபோது விருந்தினன் ஒருவனெய்த,அவனுக்கு இடமளித்தற் பொருட்டுக், கலத்தமர்ந்தார் பலரும் வேற்றுராதல்கரு தித், தன்னொடு வேற்றுமையிலாதாள் என்னுந்துணிவால், ஔவையை நோக்கி எழுந்துவாராயோ என்றுஅவன் சொற்றான்' என்னுங்கதையா

னறிக. இம்மூன்றும் அவரவர் அன்பினேதோய்தல்போல இச்சிற்றுடையும் இம்மகளன்பினே தோய்தல் விளக்கிய வாறும். பாரிமுதன் மூவர் செய்த அன்பும் சேர இவ்வொருத்தியின் அன்பிற்கு ஒப்பாக்குதல் காண்க. அவரெல்லாம் செல்வநிலையராய்ச்செய்தலும் இவள் நல்கூர்ந்துஞ் செய்தலும் வேற்றுமை காண்க. ஔவை சேரமான் என்றது அதியனை என்றுந்துணியலாம். "சேர னதியன் றிருநெடுமால் தென்றகடை, வீரன்" எனவரும். புறப்பாட்டினும் (99) பனைமாலையும், எழுபொறிநாட்டத்தெழா அத்தாயமும் இவனுக்குக் கூறுதல் காண்க. (12)

596. என்ற கவிகேட் டிரும்பாரி வேண்மகளி
ரொன்று முரையா துவந்தனராய்க்—கன்று
பசிக்குச்சோ றட்டுப் பரிகலத்து வைத்துப்
புசிக்கக் கறியின்றிப் போய்.

(இ-ள்.) ஔவை பாடலைக் கேட்டு அதனை வியந்து தாமும் பாடவல்லவரேனும் அடக்கத்தால் ஒன்றும் உரையாது உள்ளத்தே உவத்தல் குறித்தது. பரிகலத்து வைத்துப் புசிக்க - உண்கலத்து முற்பட வைத்து உண்ண ஒரு கறியும் இல்லாமற் புறம்போய் - எ.று. இப்பாட்டுக் குளகம். (13)

597. கொல்லைப் புறத்துக் குளிரடகைத் தாம்பறித்தா
ரொல்லைச் சமைத்தா ருணவூட்டச்—சொல்லின்
பெருந்தகுவிக் கன்பு பெருக மலர்ந்து
விருந்தயர்ந்தார் மெல்லியலார் வேட்டு.

(இ-ள்.) குளிர் அடகு - தங்கும் இலை யுணவு: குளிர்ந்த அடகு என்பதும் ஆம்; தாம் பறித்தார் என்றது வேறு தொழுத்தை இல்லாமை காட்டியது. உணவூட்ட என்றது சோறாகிய உணவினை உண்பிக்க எ-று. கறி உணவினை உண்பிப்பதே என்க. பெருந்தகுவி - பெருமைதக்காள். அன்பு பெருகச் சொல்லின் மலர்ந்து - வேறு நன்றூற்ற இயலாமையைச் சொல்லாகிய தேனின் மலர்ந்து காட்டி : மலர்தல் வினையாற் சொல்தேனுயிற்று: இன் சொற் கூறியது குறித்தது. வேட்டு - உள்ளத்தான் விரும்பி. (14)

598. அடகன்றி யாது மருந்த விடாத
மடையின்றி யாமமைத்தேம் வாளா—புடவிக்கு

வாயா விருந்தாவீர் வந்தீர் வழிபடற்குத்
தாயாவீ ரெம்பாற் றளர்ந்து.

(இ-ள்.) இஃது அவர் சொல்லின் மலர்ந்தவாறு. அடகன்றி யாதும் - இலைக்கறியன்றி வேறியாதும். அருந்த இடாத மடை - உண்டற்குப் படைக்காத உணவு. மடுத்தலான் உணவு மடையாயிற்று. மடைப்பள்ளி என்பது காண்க: இன்று என்றது, முன்னர்த் தங் கோயிற் புக்கபோது தாம் ஒளவைக்குப் பெருகப் படைத்தது குறித்தது. அன்றவ்வாறு செய்த யாம் இன்று வாளா இவ்வாறிழைத் தேம் எ-று. உலகிற்கு வாய்க்கப்பெறாத விருந்தாதல் தக்கீர். அத் தகைய நீவிர் யாம் வழிபடற்கு எளிய தாயாகி எம்பொருட்டுத் தளர்ந்து எம்பால் வந்தீர் என்க; ஈது விருந்தூட்டுவதாக நினையாது தாயை யூட்டுவதாக நினைகவென்று பணிந்து கூறியவாறு. (15)

599. என்பு குளிர விசைத்தூட்டு நல்விருந்தை
யன்பி னுடுமெடுத்த வௌவையாண்—மன்புகன்று
தானோர் கவிசொற்று டண்புவியோ மற்றதற்கு
வானோ ருலகமோ மாறு.

(இ-ள்.) வயிறு உண்டு குளிரா நிற்க இவர் இன்சொல்லால் என்பு குளிர்தல் காட்டிற்று. அன்பின் உயர்வு தோன்ற ஒடுவந்தது. நல்விருந்து - தூய்மையும் இனிமையுமுடைய புதிய வுணவு: விருந்து புதிய வுணவாதல் "திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென" என மலைபடுகடாஅத்தில் வருதலானறிக. மன்புகன்று - மிக விரும்பி. மடுத்த ஒளவையாள் கவி சொற்றாள் என்றது "இன்னா மடுத்துழிப்பாடாவிடல்" (இன்னா நாற்பது, 40.) என்ற அறவுரை பற்றி. அவ்வோர் கவிக்கு ஈருலகும் ஒப்பாகா எ-று. இலைக்கறியின் சுவையைப் பாடிய கவியின் சுவையை இரண்டுலகும் செய்யா என் பது கருத்து. இலைக்கறி வடிவின் அமுது இவர் படைத்ததன்றி யாண்டு மில்லாமை உய்த்துணர்க. மாறு - ஒப்பு. (16)

600. வெய்தாய் நறவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப்—பொய்யே
யடகென்று சொல்லி யமுதத்தை யிட்டீர்
கடகஞ் செறியாதோ கைக்கு.

(இ-ள்.) இது பழம்பாட்டு. வெய்தாய் - சூடாறிப் பழையதா காது. நறவிதாய் - மூக்கிற்கும் நாவிற்கும் இன்மணமும், இன்

சுவையுமுடைத்தாகி. வேண்டு அளவுந்தின்பதாய் - உள்ளம் விரும்பும் அளவு தீங்கில்லாமையாற் றின்னத்தக்கதாய்: தேன் முதலியன போலச் சிறிது உட்கொள்ளாமை நோக்கியது. நெய்தான் அளாவி- நெய்யே விராவி. தான் பிறிதெண்ணெய் கலவாமை குறித்தது; நெய் கிறையப்பெய்து தாளித்தது தோற்றியது: கிறையிட்டு - கிறைவதாகக் கலத்திற் படைத்து: நன்று செய்த கறியைச் சிறிதிடாமை தெரித் தது. அடகென்று பொய்யே சொல்லி - இலைக்கறியென்று ஒரு பொய்ப் பெயரே பேசி. அமுதத்தை யிட்டீர் - இலைக்கறி வடிவில முதத்தைப் படைத்திர். இங்ஙனம் படைத்த கைகட்குக்கடகம்இறுகப் புனையப்படாதோ; இவ்வாறு அன்புகூர்ந்திடாத கைகளிற் றெய்வம் செறித்த கடகம் இக்கைகளிற் செறியாதோ எனினும் பொருந்தும். செறியாதோ என்பதனால் இவர் மேனி மெலியாமையும் உடன் வேண்டினளாவள். பறம்புவிட்டுப் புறப்படும்போது "ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே" (புறம்-117) எனவும் "கோறிரண்முன் கைக் குறுந்தொடி மகளிர்" (ஷை 113) எனவும் கூறியவாறு முன்பு இவர் கைகளிற் புனைந்த பொற்றொடிகள் வறுமையாலொழிந்தன என்று கினைதல் தகும். விச்சிக்கோனுழையும், இருங்கோவேளுழை யும் இவரைச் சுட்டிக் கூறியபொழுது இவர்க்கு அணிகலங் கூறுமை கினைக; பொய்யே அடகென்று சொல்லி என்றது அமிழ்து விளை அரு நெல்லியை யுண்டதனால் நீள விருப்பவள் இவ்வமுதுண்டு பின்னு நீள விருத்தலை முனிவளோ என்றுகருதி யென்று கினையலாம். (17)

601\. என்ப தனதுள்ளத் தின்பரிவு தன்றிருவாய்ச்
சென்ற வழிவதெனச் செய்யுளிசைத்—தோன்றக்கு
மஞ்சலீர் நம்பெருமைக் கன்ன கொழுநர்க்கே
செஞ்செவே யீவ றெரிந்து.

(இ-ள்.) இன்பரிவு - இனிய இரக்கம். ஒன்றக்கும் என்றது மூவர் பகைக்கும் அஞ்சவேண்டாமை கருதிற்று. நம் பெருமை - பிறப்புக் குடிமை முதலிய பத்தானும் (தொல்-பொ-273) நமக்குள்ள பெருஞ்சிறப்பு. அன்ன கொழுநர்க்கே - ஒத்த கணவர்க்கே. செஞ் செவே - செப்பத்திற் செப்பமேயாகத் தெரிந்து நல்குவேன் எ-று. "கற்பெனப்படுவது ...கொடுப்பக் கொள்வதுவே" (தொல்-பொ-கற்-1) என்றதனால் ஈவல் என்றாள்; தெரிந்து - நும் உள்ளம் உடன்படல் அறிந்து. (18)

602\. அதிய னளித்த வருநெல்லி யுண்டே
யிதுகா றிருந்தேனுக் கீதே—முதிர்பயனென்

றுள்ளன்பு போங்க வுரைப்பாள் விழிபாய்நீர்
வெள்ள முளம்விள்ள மிக்கு.

(இ-ள்.) அருநெல்லி - அரியது செய்யும் நெல்லிக்கனி. உளம் விள்ள - உள்ளம் உருகுதலை விழிபாய் நீர்மிக்குச்சொல்லாநிற்க. (19)

603. தென்னன் மணம்பேசு சீரிதுவோ நுந்தமையம்
மன்னன் மொழிமாற வாழ்வியே—னென்னின்
மகளாகேன் யானோய் மரமாவே னென்று
திகழ்வாள் சோணுள்வஞ் சினம்.

(இ-ள்.) தென்னன் - பாண்டியன். அம்மன்னன் மொழி - அவன் முன் "பான் விளைந்த பெண்டிரை யிங்கியார் கொள்வார்" என்று கூறியது: நோய்தீர் மருத்துமரம் உண்டாதலானும் மரமாகியும் பயன்படுதல் கூடுமாதலானும் அவற்றை விலக்கி, அடுத்தார்க்கு கிழலுங் கனியும் உதவாது நோயே செய்யும் மரம் ஆவேன் என்றாள். வஞ்சினம் - வீரவார்த்தை. திகழ்வாள் - என்றும் விளங்குபவள். மன்னன் மொழி மாறத் தன்மொழி விளங்குபவள் ஆதலுகினைக. (20)

604. ஔவை நனிபேணி யம்மகளிர்க் கன்பவிழ்க்குஞ்
செவ்வி யிடைக்கபிலன் சேரவந்தா—னௌவை
விழிநீரிற் பாத மிகக்கழீஇ யேற்றா
னிழிநீரி லாரோ டியைந்து.

(இ-ள்.) அன்பு அவிழ்க்குஞ் செவ்வியிடை - உள்ளத்து அன்பினை வாயான் அவிழ்க்கும் அமயநடுவண். பாதம் விழி நீரிற்கழீஇ யென்றது வணங்குதலையும் உடனுணர்த்திற்று. இழிநீர் இலார் - செல்வம் இழிந்த வறுமையினும் இழிந்த நீர்மையில்லார்; பாரி மகளிர். (21)

605. துக்கந் ததும்பலாற் சொல்ல வலியற்றார்
மிக்க தலைகவிழ்ந்து விம்மினார்—பக்க
னிலைநின்ற நன்மகளிர் நீள்கண்ணீர் வாரத்
தலைநின் றவரானார் தாம்.

(இ-ள்.) புலவர் இருவரும் வலியற்றார், விம்மினார், தலை நின்றவரானார் என்க. பக்கல் நிலை நின்ற நன்மகளிரை வேறு பிரித்தலான் புலவிருவருமேயாதல் தெளிக. மகளிர் கண்ணீர் வாரக்கண்ட

அளவில் அதனை ஒடுக்கவேண்டிக் கவிழ்ந்த தலையை நிமிர்த்த னர். எ-று. (22)

606. இறந்ததற் கேங்கி யினியென்ன செய்வேம்
பிறந்த குலமகளிர்ப் பேணுந்—திறந்தெளிய
விவ்வண்ண மென்பதியா மாராயத் தக்கதென
வவ்வண்ண மோர்ந்தா ரவர்.

(இ-ள்.) இறந்ததற்கு - கடந்ததற்கு. இனி ஏங்கியதனால் யாம் செய்வன யாவை; தெளிய ஆராயத்தக்கது என்ற அளவில் அப்படியே அவர் ஓர்ந்தார் எ-று. பிறந்த குலத்தை உடைய மகளிரைப் புக்க குலம் உடையராகப் பேணுந்திறம் என்று வினைக. (23)

607. வேந்தர் பகைக்கஞ்சி வேண்மரபோர் கோள்ளாது
போந்ததுங் கோவற் புகழ்க்காரி—யேந்தல்
குலத்திவரைச் சேர்க்கக் குறித்ததூஉங் கற்ரு
னலத்தகுவிக் கோதிஞ னன்று.

(இ-ள்.) வேந்தர் - பேரரசர். வேண்மரபோர் - வேளிர் குலத்தவர். காரியாகிய ஏந்தல் என்க. நலத்தகுவி - நலத்தக்காள். கற்ருன் - கபிலன். நன்று - பெரிது. (24)

608. மல்லன் மறையோர் மகளிர் புறங்காக்கச்
செல்வக் கடுங்கோமான் சேரன்பாற்—செல்லுற்றுப்
பெண்புறனுக் கம்பொன் பெருநாடு பெற்றதூஉ
நண்புறுவாட் கோதிஞ னன்று.

(இ-ள்.) மல்லன் மறையோர் - செல்வ மறையாளர். புறங்காக்க - புறத்துநின்று பாதுகாக்க: "புலிபுறங் காக்குங் குருளைபோல" என்னும் புறப்பாட்டடிபோல ஒரு சொல்லெனினுமமையும். பெண்புறன் - பெண்ணுக்கு உரியதாக்குஞ் செல்வம்: கோயிற்புறம், மடப்புறம், அறப்புறம்எனவரும். அம்பொனும் பெருநாடும் என்க. நண்புறு வாட்கு - தன்னொத்து மகளிர்பால் நட்புமிகும் ஔவைக்கு. (25)

609. எல்லாந் தெரிந்தௌவை யிம்மகளிர் நன்மணத்தைப்
பல்லாற்றுந் தெய்வம் பரிந்துதவ—நல்லாருள்
யார்க்கு மியலா விருஞ்சிறப்பிற் செய்வலென
வார்க்க மொழிந்தா ளவண்.

(இ-ள்.) தெய்வம் பரிந்து பல்லாற்றும் உதவ. நல்லாருள் - உலகத்து மகளிருள். யார்க்கும் - முடிவேந்தர் மகளிராயினார்க்கும். ஆர்க்க மொழிந்தாள் - உள்ளம் பிணிக்க வுரைத்தாள். (26)

610. பாரியுந் தாயுமிவர் பாலின்மை யொன்றல்லாற்
சீருஞ் சிறப்புஞ் செழித்தோங்க—நாரியர்தங்
கண்ணாலங் காணக் கடவேன்யா னென்றிசைத்தாண்
மண்ணோர் தவமா மகள்.

(இ-ள்.) தாயும் - நல்லாளும். பாரியு நல்லாளும் இவர்பக்க லில்லாமையாகிய ஒரு குறையல்லால் என்க. நாரியர் - மகளிர். கண்ணாலம் - கல்யாணம். 'கண்ணாலங் கோடித்து' (நாச்சியார் - 11-9) என்ப. கடவேன் - கடப்பாடாகவுடையேன். மண்ணவர் தவப்பயனாகும் ஔவை. காண - செய்ய. (27)

611. பாரி வளர்த்தவறம் பாரி னுமதுருவாய்
நாரியீ ரிம்மனைக்க ணண்ணிற்றேன்—ஆரியனும்
பாராட்ட வுள்ளம் பரிந்திசைத்தா ளெவ்வுலகுஞ்
சீராட்டுங் கல்வித் திரு.

(இ-ள்.) இம்மனை - இம்மகளிருள்ள மனை. ஆரியன் - உயர்ந் தோனாகிய கபிலன். ஔவை பாடியவாறு வருணன் முதலிய தேவரும் உதவலான் எவ்வுலகுஞ் சீராட்டுங் கல்விப்புடையளாத லுணர்க. திரு - திருமகள்போலப் பயன்படுபவள். (28)

612. மாவூர் வளவன் மதயானைக் கீவுழிநற்
கோவூர் கிழாருய்யக் கொண்டேள்ளார்—பாவூருங்
காரிமகா ரேன்பதியாங் கண்டதிவர் தோண்மணக்
சீரியநாள் பெற்றார் சிறந்து. [குஞ்

(இ-ள்.) 'கண்ணார்கண்ணிக் கலிமான் வளவ' (புறம் - 39)என இக்கிள்ளி வளவன் சிறப்பித்துப் பாடப்படுதலான் 'மாவூர் வளவன்' எனப்பட்டான். இவன் மலையமான் மக்களை யானைக்கிடப் புக்கதும் அப்போது கோவூர் கிழார் பாடி அவரை உய்யக்கொண்டதும் "நீயே புறவினல்லலன்றியும்" (46) என்னும் புறப்பாட்டானும் அதன் கொளுவானும் அறிக. உய்யக்கொண்ட சிறப்பான் நற்கோவூர்கிழார் எனப்பட்டார். பாவூருங்காரி - பாடலின் ஊர்ந்து செல்லும் காரி என்னும் பெயருடையன். இவன் பெயரைப் பல்லிடத்துங் கொண்

டெய்த்தலாற் பா ஊர்தியாயிற்று. யாம் கண்டது என்றது ஒத்தகாலம் பற்றி. கோவூர் கிழாருய்யக்கொள்ள நாள் பெற்றார், இவர் தோண் மணத்தலாற் சிரிய நாள் பெற்றாராவர் என்றுணர்க. இம் மகளிர் தோண் மணக்குஞ் சிரிய வாழ்நாளைப் படைப்பிலே பெற்றாராதலான் கோவூர் கிழாரான் உய்யக்கொள்ளப்பட்டு உள்ளனர்; இஃதியாங் கண்டது எனக் கூறினும் அமையும். (29)

613. புலனுழு துண்மார்தம் புன்கண்மை யஞ்சிப்
போலம்பகுத் துண்பான் பொருவின்—மலையன்கோ
வேந்தர்க்குத் துப்பாம் விறலோ னவன்மகார்
யாந்தக்கா ரேன்பே மிவர்க்கு

(இ-ள்.) புலனுழுதுண்மார் - அறிவால் உழுதுண்ணுங் கற்றோர். புன்கண்மை யஞ்சி - வறுமையை அஞ்சி. பொலம்பகுத்துண்ணும் - உள்ள பொன்னைப் பகுத்தீத்து எஞ்சியதை உண்ணும். பொருவு இல் மலையன் - தன் ஒப்பு இல்லாத மலையமான்காரி: பொருகின்ற வில்லையுடைய மலையன் எனினுமமையும்; "புலனுழு துண்மார் புன்க ணஞ்சித் தமது பகுத்துண்ணுந் தண்ணிழல்" (புறம் - 46) என்பதைத் தழீஇ வந்தது. கோவேந்தர்க்குத் துப்பாம் விறலோன் - பெருமுடியரசர்க்குத் துணைவலியாகுஞ் சிறப்பினன்; "மூவருளொருவன் றுப்பாகியரென" (புறம் - 120) என வருதலானறிக. இதனான் மூவர்க்கு அஞ்சாமை குறித்தது. இவர்க்குத் தக்கார் - இவர் தகுதிக்கு ஒத்தார். இரு குடிக்கும் இயல்பாய கொடை ஒற்றுமை கருதிப் புலவர்க்குப்பகுத்துண்டலை முற்பட விளைந்தனர். (30)

614. குலத்தாற் கோடையால்வெங் கோவேந்தர்க் கஞ்சா
வலத்தான் மறையோர் மதிக்கு—நலத்தாற்
சிறந்தான் முடிக்காரி சேயாய்த் திகழ்ந்தார்
பிறந்தா ரிவர்தோள் பேற.

(இ-ள்.) குல முதலிய நான்கும் பாரிக்கும் ஒத்தல் நோக்கிக் கொள்க. கபிலர் மதித்த நலம் பாரிக்குண்மை விளைக. "யின்னுடே யழல்புறந்தரூஉ மந்தண ரதுவே (புறம் - 122) என்பதனாற் காரிக்கு முண்மை தெளிக. நற்றிணையுள் (170) "ஆரியர்துவன்றிய பேரிசை முள்ளூர்" என்பதனானும் இவன் முள்ளூர் மலை ஆரியர் நெருங்கி வாழ்ந்த பேரிசையையுடையதென்று நன்குதுணிக. ஈண்டுத் 'துவன்றிய' என்பதற்குப் 'போரில் நெருங்கிய' என்பது பொருளாகக்கருதி

மலையற்கு ஆரியரைப் பகைஞராக் கொண்டார் பிறர்; அவர் "ஆரியர் துவன்றிய பேரிசையிமயம்" (பதிற் - 2 - 1) என வந்தது கண்டிலராவர். ஆரியர் நெருங்கி வாழ்ந்த பேரிசையையுடைய முள்ளூர் மலையிற் பலர் பகைஞர் சேர நின்று உறை கழித்த ஒள்ளியவாட்படை, மலையனது ஒரு வேலளவிற்கு நில்லாது ஒடிஞற்போல என்பதே பொருளாதலுணர்க. பலர்ஒள்வாள் ஒருவேற்கு ஒடியதையே ஈண்டுப் பாடினரென வுணர்க: சேயாய்த் திகழ்ந்தார் இவர் தோள்பெறப் பிறந்தார் எ-று. (31)

615. என்று கபிலற் கிசைத்து மலையன்பாற்
சென்று கருத்தின் றிறந்தேரிய—வன்றே
புறப்பட் டனளாற் புலவர்கோ னோடும்
பிறப்பட் டிருந்ததவப் பெண்.

(இ-ள்.) மலையன்பாற் சென்று மலையன் கருத்தின் றிறந் தெரிய என்க. பிறப்பு அட்டு இருந்த தவப் பெண் - பிறவியைக் கெடுத்துத் தவவொழுக்கத்திருந்த பெண். சாதலினின்று தப்பி நெடிதிருந்ததன் பயனாகத் தவவொழுக்கம் பூண்டனளாவள். இஃது ஔவை யென்னும் பெயரான் உய்த்துணரலாகும். ஔவை தவப் பெண்டிர்க்காதல் "அணியிருங் கூந்தலை யௌவை மார்கடாம், பணிவிலர் பறித்தனர்" (சிந் - 2637) என்புழி ஔவைமார்களை ஆரியாங் கனைகள் என நச்சினார்க்கினியர் கூறுதலானறிக. (32)

616. ஆயும் புலவோர்க்கு மந்தணர்க்கு மாதுலர்க்கும்
வாயி லடையா வலியரண்கோள்—கோயிற்
புகுந்தார் மலையன் புலவரேதிர் கொண்டு
தகுந்தான மீந்தான் றனித்து

(இ-ள்.) இங்ஙனம் புலவர், அந்தணர், ஆதுலர் எனப் பல திறப்படுத்தல், புறப்பாட்டில் (361) "கேள்வி முற்றிய வேள்வி யந்தணர்க், கருங்கல நீரொடு சிதறிப் பெருந்தகைத், தாயினன்று பலர்க் கீத்துத், தெருணடை மாகளிறொடுதன், னருள்பாடுநர்க்கு நன்கருளியும்" என வருதலானறிக. ஆதுலர் - வறியர்: "ஒன்னார் யானை யோடைப்பொன் கொண்டு பாணர் சென்னி "பொலியத்தைஇ" (புறம் - 126) எனவும், 'நாடே......அந்தணர'துவே' (புறம் - 122) எனவும் "கூழே இரவலரதுவே" எனவும் வருதலான் இவண் இம் மூவர்க்கும் வாயிலடையாமை உய்த்துணரலாம். வலியரண் கொள்

கோயில் - தெய்வவலியை யுடைய அரணைக்கொண்ட இராசமாளிகை; ஈண்டுத் தெய்வவலி கூறியது "விந்தமேய கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட,...பூங்கோவலூர்" (திருநெடுந்தாண்டகம் - 14) என்பது பற்றி: தகுந்தானம் - அவரவர்க்குத் தகுதியாகும் இருக்கை. தனித்து என்றது ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் தக வேறாக எ - று. அடையா வாயிற்குவலி தெய்வவலியாதலுணர்க. தகுந்தானம் 'இரட்டைத்தவிசி னிருக்கை' (பெருங்கதை - உஞ்சை. 37) எனினும் அமையும். தனித்து - பொதுமையின் வைக்காது சிறக்க வைத்து என்பது நன்கு பொருந்தும். "பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே" (புறம் - 121) என முன்னம் ஒருபோது கபிலரால் பாடப்பட்டவனாதல் நினைக. (33)

617\. இருசுடரோ நீரோ விருகண் புவிக்குப்
போருவில் புலவீர் புகுந்தீர்—பெருவரவீ
தென்னலத்தா னன்று லெனது குலமுதலோர்
தந்நலத்தா னுயதென்றான் றாழ்ந்து.

(இ-ள்.) புவிக்கு இருகண் வானில் வேறு வேறு காலத்தியங்கும் இரண்டு சுடர்களோ; நீரோ - ஒரு காலத்தே சேர இலங்கும் நீவிரோ தெரிகிலேன் எ-று. ஞாயிறும் மதியும் தம்முள் ஒவ்வாமையும் இவற்றிற்கு வேறு உவமிப்பன இல்லாமையும் ஈண்டைக்கு நினைக. ஞாயிறுபோலக் கபிலனையும் மதிபோல ஔவையையும் கொள்க. பெருவரவு ஈது - பெருமையைத் தரும் வருகை இஃது. ஒருவேனுகிய என் நலத்தானன்று: குல முதன்மையபராகிய என் முன்னையோர் பலர் நலத்தான் ஆயது என்றான் என்க. இவன் குலம் வாழச் செய்யும் மணவினையாகு மியைபு நோக்கிக் கொள்க. தாழ்ந்து - வணங்கி. தாழ்ந்து என்றதனல் உடலும்,என்றான் என்றதனற் சொல்லும், இருசுடரோ நீரோ இருகண் என்று ஐயுறலான் உள்ளமுஞ், சேர்ந்து போற்றுதல் நினைக. இஃது இவரைப் பொது நோக்காது சிறப்பாக நோக்கியவாறாகும். (34)

618\. என்றவரைப் பாராட்டி யீர்ம்பெண்ணை நாடுடைய
குன்றனைய நீடேர்க் குலக்காரி—நின்றிருக்க
வன்னவனைப் பாட்டிசைத்தா னய்ந்த பெரும்புலவர்
மன்னன் கபிலன் மகிழ்ந்து.

(இ-ள்.) நின்றிருக்க என்றது காரி இவரை நின்று வழிபட்டது குறித்தது. ஈர்ம் பெண்ணை நாடு - பெண்ணையாற்றால் ஈரமிக்க நாடு

பெண்ணையம்படப்பை நாடுகிழவோயே'' என்பது புறம் (126). நீள் தேர்க்காரி; ''நெடுந்தேர்க்காரி'' என்பது அகம் (35). ''பாணர் சென்னி பொலியத் தைஇ, வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீ ரோடாப் பூட்கை யுரவோன் மருக'' (அகம் - 126) என்பதனல் இவன் குலச் சிறப்புணர்க; குலக்காரி - குலத்திற் பிறந்த காரி. பாட்டிசைத்தான் - பாடலாற் புகழ்ந்தான். மகிழ்ந்து - அவன் பொது நோக்கா வழிபாட்டின் மகிழ்ச்சியுற்று. (35)

619. பெருமிதமோ காரி பெரிதுள்ளாய் நிற்கேன்
ரேருவடமீன் மங்கைதோ ளுள்ளாய்—சேருவழி [வில்
நாடந் தணரதுவே நண்மூவர் நல்கியகூழ்
பாடேம் புலவர் பயன்.

(இ-ள்.) நிற்கென்று வடமீன்போன்ற ஒரு மங்கையின் றோளுடையை; பிறிதுடையை யல்லை; இங்ஙனமாகவும் காரி பெருமிதமோ பெரிதுள்ளாய் எ-று. இது ''வடமீன் புரையுங் கற்பின் மடவர, லரிவை தோளள வல்லதை, நினதென விலைநீ பெருமிதத் தையே'' (புறம் - 122) என்பதனைத் தழீஇயது. செரு அழிவு இல் நாடு - பகைஞர்போரும் கடன் முதலிய பிறவற்றால் அழிதலுமில்லாத நாடு. பார்ப்பாருடையதுவேயாம். ''நாடே...யந்தணரதுவே'' (ஷை ஷை) என்றது காண்க. நண் மூவர் - நின்கண் நட்புறும் மூவேந்தர். நல்கிய கூழ் - தந்த பொருள். புலவர் எய்தும் பயனுகும். நாட்டையந்தணரதாக்கியும், செல்வத்தைப் புலவர்பயனுக்கியும் உள்ள நீ கற்புடை மங்கைதோள்மட்டும் உடையையாய் அவ்வொன்றானே பெருமித மிக்காய்; ஆதலாற் கற்புடைக் கன்னியர் நாட்டினும் செல்வத்தினும் சிறந்து மேம்படுதல் நன்கறிந்தனே ஆவை. அத்தகைய நின்குடியில் நன் மகளிரை மணம்படுத்த விழைந்தேன் என்பது குறிப்பாற் கொள்ள வைத்தவாறு: கற்புடையாட்டி யுடைமையே மூவேந்தர் செல்வத்தினுஞ் சிறப்பது;

வில்லுடையான் வானவன் வீயாத் தமிழுடையான்
பல்வேற் கடற்றானைப் பாண்டியன்—சொல்லிகவா
இல்லுடையான் பாலை யிளஞ்சாத்தன் வேட்டனே
நெல்லுடையா னீர்நாடர் கோ. (யாப் - வி -உரைமேற்கோள்)

என்ற அரிய பழம்பாடலானறிக. வானவன் வில்லுடைமையானும் பாண்டியன் வீயாத்தமிழுடைமையானும் நீர் நாடர் கோ நெல்லுடை

மையானும் எய்திய பெருமிதத்தைப் பாலையிளஞ்சாத்தன் சொல்லிகவா இல்லுடைமையான் உடையன் என்று சிறப்பித்தலான் உண்மையுணர்க. கொங்குவேளும் பெருங்கதையுள் "வானுறை யுலகினும் வையக வரைப்பினுந், தானவிளைவினுந் தவத்தது பயத்தினு, மெண்ணரும் பல்லுயி ரெய்தும் வெறுக்கையுட், பெண்டிருண் மிக்க பெரும் பொரு ளின்மையி, னுயிரெனப் படுவ தரிமையர்தலின்" (உஞ்சை - 38) எனப்பாடுதல் காண்க: இங்ஙனந் தான் நினைந்து வந்த வினைக் கேற்பக் குறிப்பிற் கொளப் பாடினர் கபிலரென்பது மாறோக்கத்து நப்பசலையார் இக் காரியைப்பாடிய புறப்பாட்டில் (126) "முள்ளூர்ப் பொருந, தெறலரு மரபினின் கிளையொடும் பொலிய...புலனழுக் கற்ற வந்தணாளன்......பரந்திசை நிற்கப் பாடினன்' என்புழி "நின் கிளையொடும் பொலியப்பாடினன்' என்றதனால் உய்த்துணரலாகும். இவர் குறித்த மணம் கிளையொடும் பொலிதற்காதல் காண்க. "கூழே வாழ்த்தினர் வரூஉ மிரவலரதுவே" (புறம் - 122) என்புழி வாழ்த்தி வரும் இரவலரைக் கூறுதலான் ஈண்டு அவரைப் புலவர் என்றது. ()

620. பிறந்தநா ளென்று பெருங்கண் மகிழ்ந்து
சிறந்தபோ தீதல் சிறப்பர்—திறந்து
மகிழாதுங் காரி வழங்குதேர் முள்ளூர்
மிகும்வான் றுளியின் மிகும்.

(இ-ள்.) தாம் பிறந்த நாளென்று சொல்லி அந்நாள் விழவிற் பெரிய கள்ளான் மகிழ்ச்சியுற்று. சிறந்தபோது - ஆண்டில் இங்ஙனம் ஒரு நாட் சிறப்புற்றகாலை. ஈதல் சிறப்பர் - ஈதலைச் சிறப்பாக உடையராவர் பிறர் எ-று. திறந்து - வாயில் எப்போதும் திறப்பித்து. மகிழாதும் - தான்கள்ளான் மகிழாமலும். வழங்குதேர் - ஈத்த தேர்த்தொகை; முள்ளூர் மலையின் மிகுகின்ற முகிலின் றுளிகளினுமிகுவன எ-று. இங்ஙனங் கொடையை இயல்பாகவுடையனாதலான் இவண் நாள் வேண்டாது இப்போதே மகளிரைத் தேரிற்றந்து கொள்க என்பது மிகையென்று குறிப்பிற் கொள்ள வைத்தவாறும். இது 'நாட்களுண்டு' என்னும் புறப்பாட்டை (123)த் தழீஇயது. (37)

621. புட்டப்ப நாளன்று போகிப் பதனின்றி
யுட்புக்கு வேட்டேன் றுரைத்தாலும்—பெட்ட
பேறுஅர் வறிது பெயர்கலர்பா வாழ்நர்
மறுஅ மலையன்பால் வந்து.

(இ-ள்.) புட்டட்ப - புள் இடையே தடுக்க. நாளன்றுபோகி - நலலநாளன்றாகப் போகி. பதனின்றி - செவ்வியில்லாமல். உட்புக்கு - புகக்கூடாத உள்ளே புக்கு. வெட்டென்றுரைத்தாலும் - வெட்டென இன்னாச் சொல்லான் உரைத்தாலும் "வெட்டென வுரைத்தலை விடுத்திடுமி னென்றான்" என்பது நீலகேசித் தெருட்டு. பெட்ட - விரும்பியன. பெட்ட மறாஅ மலையன்பாற் பாவாழ்நர் வந்து பெறாஅர் வறிது பெயர்கலர் என்க: வறிது பெயர்கலர் பாவாழ்நர் என்றது முன் இருவர்பாற்புக்கு இவர் வறிது பெயர்ந்தது நினைந்து கூறியதாகும். மகட்பேசுதற்கண் நாளும், புள்ளும், செவ்வியும், ஏற்க வுரைத்தலும் வேண்டப்படுதல் உணர்க: இவையெல்லாம் வேண்டாமல் யாம் வந்தது மகளிர்மணம் விரைந்து நிறைவேறல் கருதி என்பது குறிப்பாகக் கொள்ளவைத்தவாறு. இது "நாளன்று போகி" (புறம் - 124) என்னும் பாட்டைத்தழீஇயது. இதன்கண் "மலையற் பாடியோர் வறிது பெயர்குவரல்லர்" என்பதனால் யானும் பாடினேன் வறிது பெயராமைக்கு எ-று. (38)

622. என்று மலைய னிசைபாடி யெய்துவினை
துன்று மவன்கட் சொலலுற்றான்—மன்றுபுக
ழௌவை யுடனே யரும்பாரி வேண்மகளிர்
செவ்வை மணமியையத் தேர்ந்து.

(இ-ள்.) எய்துவினை - வந்த காரியம். துன்று மவன்கண் - நெருங்கிய அவன்பால். மன்று புகழ் ஔவை - கல்வி மன்றங்கள் புகழும் ஔவை. இசைபாடியவன் கபிலனே என்றும் வந்த காரியம் அவன்ஔவையுடனே சொற்றான் என்றுங் கொள்க. ஔவை காரியைப் பாடாமை தொகை நூல்களிற் கண்டுகொள்க. காரி, ஔவைக்கு அமிழ்துவிளை தீங்கனியீந்த அதியனுடன் பகைமை பூண்டவன் என்பது "இன்றும் பரணன் பாடினன் மற்கொன் மற்று நீ, முரண்மிகு கோவலூர் நூறிநின், னரணடு திகிரி யேந்திய தோளே" (புறம் - 99) என்று அதியனை ஔவை பாடுதலானறியப்படும். அதற்கியைய ஒழுகினள் ஔவையென்று துணியலாம். செவ்வை மணம் - செம்மை மணம். (39)

623. வேந்தர் நெடும்போரில் வேள்பாரி வஞ்சத்தால்
வீந்த திறமும்வேண் மின்னுரை—மாந்தருளே
மிக்கார்க் களிக்க விழைந்ததூஉ மற்றெல்லாந்
தக்கா னுரைத்தான் றக.

(இ-ள்.) நெடும்போர் என்று கூறியது "யாண்டு பல கழிய" (அகம் - 78) என்றதையுட்கொண்டு. வேண்மின்னுரை - அவ்வேந்தர் வேட்கும் மின்னனையாரை. மாந்தருளே மிச்கார் - மக்களுட் சிறந்தார்: என்றது மக்கட் பண்பிற் சிறந்தார் எ-று. வேந்தர் வேந்துடைமை ஒன்றானே மக்களிற் சிறந்தாராகார் என்பது கருத்து: மற்றெல்லாம் என்றது விச்சிக்கோமுதலாயினார் அச்சத்தான் மறுத்ததும் பிறவும் பற்றி. தக்கான் தக வுரைத்தான் - சொல்லுதற்குத் தக்கவனாகிய கபிலன் காரிக்கும் மகளிர்க்கும் தகும்வண்ணம் சொற்றான். (40)

624. திருவாற் கலையாற் றிணையா னெவரும்
போருவா மடவாருன் பொன்னூர்—மருவா
மறையோ ரகத்துள்ளார் வந்தே மவர்பா
லிறைதேர் கருத்தேன் னென.

(இ-ள்.) திருவால் - எழிலால். கலையால் - நூலறிவால். திணையால் - குலத்தால். எவரும் - மூவேந்தர் மகளிரும். பொருவா மடவார் - ஒவ்வாத மடப்பமுடையவர். பொன்னூர் - "புலம்பரந்து பொன்விளக்கும் பொய்கை வேலிப் பூங்கோவலூர்" (திருநெடுந் தாண்டகம்.) என்பது காண்க. மருவா - மருவி. மறையோரகத்துள் ளார் - வேதியர் மனைக்கண் உள்ளனர். இறை - விளி. தேர்கருத்து - கருத்திற்றேர்வது. என் என - யாதென்ற அளவில். (41)

625. வேந்தர் வியக்கும் விறற்பாரி வேண்மகளிர்
போந்து தனதூர் புகுந்தாரென்—றேந்த
றெரிந்தான்றன் கோயினேர் சேரப் பெருமை
பரிந்தா னுரைத்தான் பல.

(இ-ள்.) வேந்தர் வியக்கும் விறல் - பேரரசர் அதிசயப்படும் சிறப்பு. ஏந்தல் - காரி. தன்கோயில் - தன் இராச மாளிகை. நேர்சேர - இடையிற் பிறர் மனைக்கட் டங்காமல் நேரே எய்த. பெருமைபரிந் தான் - மகளிர் நேரே தன் மனைக்கண் எய்தும் பேற்றைத் தானடை யாமைக்கு இரங்கினான். பலவுரைத்தான் - பலவாறு மொழிந்தான். எ-று. (42)

626. மன்ன ரழுக்கறுக்க வாழ்த்து கோடைப்பாரி
நன்மை யறியேனோ நண்மகளிர்—தன்மை

நிலங்கற்று வீறுமா னீரவரை யென்னில்
விலங்கிப் புகுவித்தீர் வேறு.

(இ-ள்.) மன்னர் அழுக்கறுக்க - வேந்தர் அவ்வியங்கொள்ள: "அண்ணல் யானை வேந்தர்க் கின்னான்" (புறம் - 115) என்றது காண்க. வாழ்த்து கொடை - புலவர் வாழ்த்திய வண்மை. பாரி நன்மை - வேள்பாரியின் நலங்கள். நண்மகளிர் - இங்கு நண்ணிய அவன் மகளிர். தன்மை - இயல்பு. நிலங்கற்றுவீறும் - நில மகள் அறிந்து இவரைப் பெற்ற சிறப்பான் வீறு கொள்வள். என் இல் விலங்கி அவரை நீர் வேறு புகுவித்தீர் - என் மனையை ஒதுக்கி நீர் அவரை வேற்றகத்துப் புகச் செய்தீர்: மகளிர்க்கு ஒத்தது கருதாது நீவிர் தமக்கு ஒத்தது செய்தீர் என்றானாகக் கொள்க. (43)

627. தளர்ந்த பெருங்குடிக்குத் தஞ்சமா காது
வளர்ந்த புவிவாழ்வு வாழ்வோ—வுளந்தெரிவீ
ரின்னலே செய்தீ ரெனதிற் புகவிடா
துன்னினீர் பார்ப்பா ருழை.

(இ-ள்.) தளர்தற்காகாத பெருமையையுடைய குடி தளர்ந்தது குறிப்பு. தஞ்சம் - பற்றுக்கோடு. புவிவளர்ந்த வாழ்வு - உலகில் நாள் வளர்ந்த இல் வாழ்க்கை. உளந் தெரிவீர் - என் மனம் முன்னரே அறிவீர். என்னது மனைக்கட் புகவிடாமையால் எனக்கும் மகளிர்க்கும் துன்பமே செய்தீராவீர். பார்ப்பாருழையுன்னினீர் - அந்தணர் பக்கத்தை நினைத்தீர்: அப் பார்ப்பார்க்கும் இவரைப் புறங்காத்தளித்தற்கண் இன்னலே செய்தீர் என்றாலும் பொருந்தும். பார்ப்பார் - மலையன் கொடையான் வாழ்பவராதலுணர்க. (44)

628. வேள்வேந்தன் பெற்ற விழுநிதியன் னார்போத
நாள்வேறு வேண்டே னனிவிரைதிர்—தாளாண்மை
யாற்றிப் படைத்த வரும்பொருள்க ளானவரைப்
போற்றிப் புரக்கப் புக.

(இ-ள்.) விழுநிதி - நிதியினும் விழுப்பமாவது. அன்னார்போது நாளே நாளாதலன்றி வேறு நன்னாள் என ஒன்று வேண்டேன். அன்னார்புக நனிவிரைதிர். தாளாண்மை - நன் முயற்சி. அவரைப் போற்றிப் புரக்க - அவரைப் புரந்து போற்றும் வண்ணம் அன்னார் புகநனிவிரைதிர் என்க. (45)

629. என்மக்கள் வாழ்விற் கியைந்தார்நன் பொன்னனை
[யார்
புன்மக்க ளில்லம் புகல்வேண்டா—மன்மக்கள்
வேந்தன்வேள் பாரி விறன்மகளி ரென்மனைக்கே
போந்தொளிர்க வென்றான் புகன்று.

(இ-ள்.) வாழ்விற்கு இயைந்தார் - இல் வாழ்க்கைக்குப் பொருந்தினர். நன் பொன்னனையார் - பொன்னினை நல்லதை யொத்தவர். மக்களிற் புல்லியர் மனைக்கட் புகுதல் வேண்டாம்; மன் மக்கள் வேந்தன் - நிலைபெற்ற மக்கட்டலைவன். விறன் மகளிர் - வெற்றிமாதர். புகன்று - விரும்பி. ஒளிர்க - விளக்கஞ் செய்க. "மனைக்கு விளக்க மடவாள்" என்பதனால் ஒளிர்க என்றான். (46)

630. இன்ன சொலக்கேட் டிரும்புலவ ரின்பமனந்
துன்னி வழியச் சுடர்வந்தார்—மன்ன
னரும்பாரி செய்த வறப்பயனே யீங்கு
விரும்பா வருவதென மிக்கு.

(இ-ள்.) இன்ன - இவ் வார்த்தைகள். இரும்புலவர் - பெரும் புலமையாளர். மனம் இன்பந்துன்னிப் புறன் வழிய நனி விளங்கினர். மிக்குச் சுடர்வந்தார் என்றதனால் மலையன் உள்ளம் உணரும்வரைச் சிறிது ஒளிமாழ்குதல் குறிப்பு. அருமைப்பாரி மன்னன் என்க. ஈங்கு விரும்பா வருவது - இவ்விடத்து விரும்பிப் புகுவது; பாரி செய்த வறப்பயன் வரவிரும்பாத அவ்விடங்களில் வீணே முயன்றது குறித்து ஈங்கு என்றார். "அறநெறிதானே யமர்ந்துகை கொடுப்ப" (4-17-88) என்றார் பெருங்கதையினும். (47)

631. அரசர் மகளிர்க் கமைத்தசிறப் பெல்லாம்
புரசை மழகளிற்றிற் போக்கிப்—பரசும்
பரிகரம்பொற் றேரேதிர்கோள் பாலிக்க வேவிக்
கரிதுரக முய்த்தான் கனிந்து.

(இ-ள்.) மகளிர்க்கு - மகளிரை அழைத்தற்கு. அமைத்த சிறப்பு - தமிழ் நாடு குறித்த மரியாதை. புரசை - கழுத்திடு கயிறு. பரசும்பரிகரம் - துதிக்கும் படையாட்கள். எதிர்கோள் பாலிக்க - எதிர் கொள்ளுதலைக் காத்து நடத்த. கரியும் துரகமும் செலவிட்டான். கனிந்து - மனங் கனிந்து. பொற்றேர் எதிர்கோள் - மகளிர் ஏறிவரும் பொற்றேரை எதிர்கொள்ளுதல். (48)

632. ஊரின் விழாவெடுப்ப வுற்றார் குழாஞ்சுலவப்
பேரி முழங்கப் பெருஞ்சிறப்பார்—தேரிற்
றரவிட்டுக் கோயிற் றகுகன்னி மாடம்
வரவிட்டான் மங்கையரை மன்.

(இ-ள்.) ஊர் இனிய விழாவினை எடுப்ப. உற்றார்குழாம் - காரிக்கு உறவினர் கூட்டம். சுலவ - சூழ்ந்து வர. பேரி - முரசு. தேரிற்றரவிட்டு - தேரிற்றந்து. தகுகன்னிமாடம் - இக்கன்னிமகளிர் வதிதற்குத் தக்க மாடம்; "மற்றவள் கன்னிமாடத் தடைந்த பின்" (மணிமே - 22 - 100) என்ப. மன் - மலையன். மன்கோயில் வாயிலள வுந் தேரிற்றரவிட்டான் அப்பால் கன்னிமாடம் வரவிட்டான் என்க. (49)

633. பொன்னந் துகிலிற் புனையிழையி லின்னமுதின்
மன்னு மகிழ்ந்தார் மடமானு—ரின்ன
லறியா தேவரு மளிபெருகப் போற்றி
நெறியா லுடனுறைய நின்று.

(இ-ள்) பொன்னந்துகில் - பொற்புடைவை. புனையிழை - புனைதற்குரிய அணிகள். இன் அமுது - இனிய உணவு. மன்னும் - மிகவும். இன்னல் அறியாது - துன்பம் அறியாவராமல். எவரும் - இளை யாரும் மூத்தோரும். (50)

634. இளைத்த குடியை யெடுத்தற் கியைந்த
விளைப்பின் மலையன் மிளிர்ந்தான்—திளைத்த
பெருஞ்செல்வம் பெற்றார்தம் பின்னுக வைக்கு
மருஞ்செல்வ வைப்பீதேன் றாய்ந்து.

(இ-ள்.) இளைத்த குடியை - இளைப்புற்ற குலத்து மக்களை. எடுத்தற்கு - உயர்த்தற்கு. இயைந்த விளைப்பு - பொருந்திய விளை விளைவு. மிளிர்ந்தான் - பொலிந்தான்: திளைத்த - நெருங்கிய. அருஞ் செல்வவைப்பு - கிடைத்த செல்வத்தை அருமையாக வைக்குமிடம்: இளைத்த குடி யெடுத்தற்கண்ணே தன் குலம் வளர்தலும் உண்மை யான் மிளிர்ந்தான் என்க. (51)

635. தேடிக் கிடையாத் திருமாதர் தன்கோயி
லோடிப் புகுந்த நலனெண்ணி—நீடி

யிதயங் களித்தா னிருஞால நன்மை
யேதையும் படைத்தா னேன.

(இ-ள்.) மூவேந்தர் தேடிக்கிடையாமை வினைக. நலன் - நல்வினை: இருஞால நன்மை ஏதையும் - பெரிய புவியோர் எய்தும் நலங்கள் முழுதையும். (52)

636. அம்மென் மகளிர்பா லௌவை வரவோடு
செம்மன் முடிக்காரி செய்கைசொல—மேம்மைக்குந்
தூப்பான் மனத்தோர்க்குச் சொல்லுதும்யா மாக்
[கபிலன்
தீப்பாய்ந்த மேன்மைத் திறம்.

(இ-ள்.) அம்மென் மகளிர்பால் - அழகியமெல்லிய மகளிரிடத்து-செம்மல் முடிக்காரி - தன்றலைமையான் முடியுடையகாரி. செய்கை - மகளிர்பாற் செய்தல். எம்மைக்கும் - மும்மைக்கும். தூப்பால் மனம். தூயபகுதிப்பட்டவுள்ளம். மேன்மைத்திறம் - பலதிறத்தினும் இச்செயன் மேன்மையது என்பது குறிப்பு. (53)

12. ஔவைவரவுரைத்த திறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள். (53)

---

## 13. கபிலர் தீப்பாய்ந்த திறம்.

637. இந்நிலையிற் றூய விரும்புலவன் வான்கபிலன்
றன்னுள்ளி லோர்ந்தான் றனியாக—மன்னுலகில்
யான்செய் கடப்பா டினிது முடிந்ததினி
வான்சேல்வே னேன்று வலித்து.

(இ-ள்.) கபிலர் தீப்பாய்ந்தசெய்தி திருக்கோவலூர் வீரட்டேச்சுரர் கோயிற் சாசனத்தாற் றெரிந்தது. "பாரிதன்னடைக்கலப் பெண்ணை மலையற்குதவி......கனல்புகுங் கபிலக்கல்லது" என அதன்கண் வருதல் காண்க. ஈண்டு மலையற்குதவி என்றது, மலையன் தன் மக்கட்குக் கொள்ள இயைதலான் அவன்பால் வரவிட்டு அவனகத்து அவரைத் தந்ததனையே குறிப்பதாகக் கொள்க. 236ஆம் புறப்பாட்

டின் கொளுவில் "வேள்பாரி துஞ்சிய வழி அவன் மகளிரைப் பார்ப் பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது" என வருதலான், மகளிர் மணவினைக்கு முன்னரே கபிலர் வடக்கிருத்தல் அறியப்படும். மண வினை பற்றிய பழம்பாடல்களிற் கபிலர் பாடியனவும் அவரைப்பற்றி யனவும் இல்லாமையு நோக்கிக் கொள்க. சாசனத்தினும் புறப்பாட்டுக் கொளுவே தொன்மைத்தாதல் துணியலாம். இனி வான் செல்வே னென்றது; பாரியுள்ள இடம் அஃதாதல் கருதி; 'உடனுறைவாக்குக வுயர்ந்தபாலே' (புறம் - 236) என்புழி 'உயர்ந்த விதி கூறுதலான் அஃது உயர்ந்த நிலையே தருதல் உணரலாம்: தனியாக - மகளிரில் லாத தனியிடத்தாக. வலித்தோர்ந்தான் - ஓர்ந்து வலித்தான் எ-று.(1)

638. பெண்ணேரு ளளவை பெரும்புவியோ டிம்மகளிர்
கண்ணலங் காணக் கடவளால்—விண்வே
ளோடுகூடித் தேவ ருடன்காண்ப லந்நா
ளிடுதீப் புகுந்தேன்று னின்று.

(இ-ள்.) பெரும்புவி - பேருலகத்தவர். இன்று இடுதீப்புகுந்து விண்வேளொடு கூடி அந்நாள் தேவருடன் கண்ணலங் காண் பல் எ-று. (2)

639. பாரி யிலாதுதனிப் பார்ப்பேனே நன்மகளிர்
சீரி னியலுந் திருமணந்தா—னேரி
னுலகந் திரண்டு முளமகிழே னெங்கோ
விலகி விசும்புறைய வேறு.

(இ-ள்.) எங்கோ விலகி - எம்முடைய கோமான் என்னைவிட்டு நீங்கி. வேறு விசும்புறையா நிற்க உலக முழுதும் திரண்டவிடத்தும் உளமகிழேன் எ-று. பாரி ஒருவற்கு உலகமுழுது மொவ்வாமை குறித்தபடி. இவை தன்னுட் கூறியன. (3)

640, என்ன வலித்தா னிதயந் துணிந்தபடி
பன்ன முயன்றான் பழிப்பில்வேண்—மின்னார்
தேரிந்தார் பெருங்குரவன் தீர்வதேன் னேன்றுள்
ளேரிந்தார் மேலிந்தா ரினைந்து.

(இ-ள்.) வலித்தான் - உறுதி செய்தான்; என் என்று - யாது காரணமென்று. உள் எரிந்தார் - உள்ளே நிந்தார். இனைந்து - உயிர் வருந்தி. மெலிந்தார் - உடன் மெலிவுற்றார். தந்தையுந்தாயும் குரவர் ஆதலாற் 'கபிலன் பெருங்குரவனெனப்பட்டான். (4)

641. காற்கு மிருசுடர்க்குங் கார்மழைக்குந் தாரகைக்கு
மேற்கொண்டு தாங்கும் விழுப்புவிக்கும்—பாற்கொண்
டுயிராற்றுங் கைம்மாறு முண்டோ விவைதாம்
பயிலாவே லென்னும் படைப்பு.

(இ-ள்.) காற்கும் - காற்று உயிர்க்க உலாவற்கும், சுடர்கள் கண்டெரிய ஒளி செயற்கும், கரிய மழை பெய்து உணவும் நீருமுத வற்கும், இருளிடை மீன் கணங்கள் மினிர்ந்து நெறி காட்டற்கும், பூமி தன் மேலேந்திக் காத்தற்கும் ஆக உயிர்கள் அவற்றிற்குச் செய்யுங் கைம்மாறும் உண்டோ; இவைகள் அவ்வத் தொழிலைப் பயிலாவேல் சிவர் படைப்பு என் ஆகும், என்க. கால் முதலிய ஒவ்வொன்றுஞ் செய்வன எல்லாம் நீவிரொருவிரே எமக்குச் செய்வீர் எ-று. யாம் உயிர்க்கவும், காணவும், உண்ணவும், நெறிநடக்கவும், நிலைபெறவும் செய்தீர் நீவிர் எ-று. அத்தகைய நீவிர் இல்லையேல் யாம் என் ஆவேம் என்று படைப்பின்மேல் வைத்துக் கூறித் தங்கட் கைம்மாறின்மைக் கும் உடனிரங்கினராகக் கொள்க. (5)

642. வறுமை வருத்தாது வாழ்வித்த நின்னல்
லறிவு பெருக்கத் தகலிற்—சிறியேம்
புனலில் லுழிமீன் பொருவே மினிநின்
னினமின்றேன் செய்வே மென.

(இ-ள்.) சுருக்க நிலையின் வறுமை வருத்தாமைக்கும் வாழ்விற் கும் துணையாய நின் நல்லறிவு, பெருக்க நிலையின் அகன்றொழியின், நிறைந்த வுணவிருந்தும் புனலில்லாத இடத்துள்ள மீன்களை யொப் பேம். நின் இனமின்று என் செய்வேம் என—நின் துணையில்லாது சிறியேம் யாது செய்வேம் என்று சொல்லா நிற்க. சிறியேம் என்றத னால் நீ பெரியாய் என்று குறித்தாராவர்; 'சான்றோரினத்திரு' என்ற அறவுரை நினைக. (6)

643. பாரி மகளிர் படரறிந்தான் மற்றவர்க்குத்
தேர விசைத்துத் தெருட்டினான்—பாரி
யிலாஅ துலகத் திமையுமினி நிற்றற்
கோலாஅ வலித்த வுளம்.

(இ-ள்.) படர் = வருத்தம். இமையும் - இமைத்தற்பொழுதும். இனி - நும்மை மலையனகத்துத் தந்தபின்னர். நிற்றற்கு - நிலைகொள்

னுத்ற்கு. ஒலாஅ-ஒல்லாமல். வலித்தவுளம் தேரவிசைத்துத் தெருட்டி னன் - ஈர்த்த உளப்பாட்டைத் தேரும் வண்ணம் கூறித் தெருள்வித் தான் எ-று. (7)

614. செய்வன செய்தேன் றிறற்பாரி யில்லாதிங்
குய்வ லேனவேண்ணீ ரும்போருட்டு—மேய்யைப்
போறுத்தேன்சில் போது போறேஎ னினியும்
வேறுத்தே னுலகம் விட.

(இ-ள்.) செய்வன-நாடும் பொன்னும் உதவலும், ஒத்த குடியிற் புக வுய்த்தலும். உம்பொருட்டு மெய்யைப் பொறுத்தேன் - உமக்காக உடம்பாகிய பாரத்தைச் சுமந்தேன். உமக்காவன செய்த பின்னரும் அது பொறேன். உலசம் என்னைப் பற்றுதவிடும்வண்ணம் அதனை யுள்ளத்தான் வெறுத்தேன் என்க. பாரியைக் கொன்றவுலகமாதலின் வெறுத்தேன் என்றான் எனினுமமையும். (8)

645. காரி வழிமுறையுங் காசினியில் வேளிர்வேள்
பாரி வழிமுறையும் பல்கற்கே—நீருள்ளீர்
யானோ வேரிவா யிவனுடலை மாய்வித்து
வானோ புகுவேன்வேண் மாட்டு.

(இ-ள்.) காரி ஆண்வழிமுறையும், பாரி பெண்வழிமுறையும் பல்கிப் பெருகற்கே நீருள்ளீர் என்றது பெண்டிர்வழியாகவே பெருக வேண்டியதுபற்றி. வேள்மாட்டுப் புகுதற்குத் தடையாயுள்ள உடம்பை மாயச் செய்து என்க. உடையாருள் மலையமான் கோத்திரத்தார் இவ்வழியினர், இன்று முள்ளனர். (9)

646. என்னிற் பதினா யிரமடங்கின் மேனும்மை
மன்னிப் புறங்காப்பண் மற்றேளவை—யன்னா
ளிருத்தி வலிய ளேதுபேறுந் தந்தே
யருத்தி புரிந்தளிப்ப ளால்.

(இ-ள்.) என்னின் மேலாகக்காப்பள் என்றது ஔவை புலமையுடன் இருத்தியும் பெண்மையும் உடைமைபற்றி. அருத்திபுரிந்து - ஆவல் செய்து. அளிப்பள் - புரப்பள். இருத்தி - தவத்தாலாகிய சித்தி. (10)

647. வைய மணமாக வாழ்த்தா ரிதுமறையோர்
தெய்வ மணமென்று சீர்பாட—மெய்யாய
கண்ணாலங் காண்பாள் கடிதேளவை மற்றதனை
விண்ணோ ருடன்காண்பேன் மேல்.

(இ-ள்) வையமணம் - வையத்தார்கூட்டிய வதுவை. தெய்வ மணம் - தெய்வங்கூட்டிய வதுவை. மறையோர் சீர்பாட என்க; "பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாண்டெடுத்தேத்தி" (நாச்சியார் திருமொழி) என்பது காண்க. மேல் - மேனிலையில். மெய்யாய கண்ணாலம் என்றது, களவு 'மாயப் புணர்ச்சி' (தொல் - பொ) என்பது பற்றி; பொய்யும் வழுவுந் தோன்றுமற் பலரறியக் கரணமொடு புணருங் கற்பாதல் காண்க. கடிது என்றது கபிலன் தானில்லாமையாற் றாழ்ப்பதன்று என்று காட்டியவாறு. (11)

648. நெய்யிடுவோர் சில்லோரா னீர்நீடு வாழ்கவென
மெய்யிடுவேன் றீயின் மிகவுவந்தே—தெய்வங்கள்
காப்ப வெனவும்மைக் கண்கூடு கண்டனனீர்
மீப்பெருகி வாழ்வீர் மிளிர்ந்து.

(இ-ள்.) கண்ணாலத்தில் நீர் வாழ்கவெனச் சிலரந்தணர் நெய்யை வேள்வியங்கியில் ஆகுதியாக இடுவார்; யான் நீர் நீடுவாழ்க வென அத்தியின் மெய்யிடுவேன் எ-று. உம்மைத் தெய்வங்கள் காப்ப என என்க: மீப்பெருகி - மேன்மேற் பெருக்கமெய்தி. தீப்பாய்ந்த சீதா தேவியை நெய்யாகுதிக்கு வான்மிகமுனிவர் உவமித்தல் காண்க. (யுத்த. 120 - 31) (12)

649. பாரி பகுத்தீத்த பல்கோடைமை பைங்கூழ்க்கேய்
காரி னெதிர்ந்துமக்குக் கைகொடுக்குஞ்—சீரியீ
ரொன்றுங் கவல்கிலீ ருய்த்தபடி கண்டீர்நீ
ரென்றுஞ்சோ ஞன்கபில னேய்ந்து

(இ-ள்.) பல்கொடைமை - பலகொடையறம். பைங்கூழ்க்கு ஏய்காரின் - பசிய பயிர்க்குப் பொருந்திய மேகத்தையொத்து. உய்த்த படி - செலுத்தியதிறம். வாழ்க்கையிலேறுதற்கு ஏற்றியபடி என்பதுமாம். கைகொடுக்கும் என்றது "அறநெறிதானே யமர்ந்து கைகொடுப்ப" (பெருங்கதை 4-17-88) என்றதுபற்றி. ஒன்றும் - சிறிதும் (13)

650. தூய கபிலன் றுரிசி றிருவுளத்தை
வாயி னவிழ்க்கமதி மாழ்கிறு—ராயினினி
யென்செய்வ மென்றேய்ந் திருந்தார்வேள் பாரிதரு
பொன்செய்த பாவையன்னார் புக்கு.

(இ-ள்.) *துரிசில் திருமனம் - அழுக்கில்லாத திருவுளம். 'புல னழுக்கற்றவந்தணாளன்' (புறம் - 126) என்ப. கபிலன் றுணிதலைத் தடுத்தற்கு யாது செய்வேம். பொன் செய்த பாவை என்றது உரு கற்கு இயைபுடைமை குறித்தது.* (14)

651. ஒளவைக் ககம்வலித்த வாறறியச் சொல்லினன்
செவ்வி மறையோர்க்குஞ் செப்பினு—னெவ்
வகைக்கு
நீருள்ளீர் கோவ னெடுங்காரி யுள்ளான்யான்
பேர்வேன் விசும்பென்று பின்.

(இ-ள்.) *எவ்வகைக்கும் என்றது கொடுத்தற்கும் கொள்ளற் கும். நீர் என்றது ஒளவையையும் அந்தணரையு நோக்கி.* (15)

652. என்றுரைத்துத் தீயை யெழுப்புகவென் றேவினன்
சென்று வடக்கிருந்தான் சில்போது—நன்று
விரிவா னெழுந்து மிளிர்தீயைச் கண்டே
வெரிவாய் வலம்வந்தா னென்று.

(இ-ள்.) *வடக்கு இருந்தான் - வடக்கண் நோக்கி வினையற் றிருந்தான். இருத்தல் வினையற்றிருத்தற்காதல் "வேனில் வீற்றிருக் கும்" என்னுஞ் சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் கூறிய வுரையானறிக. (மனையறம் - 26). உத்தராயண சதி வீட்டு நெறி எனப்படுதலான் வடக்கு நோக்குதல் மரபென்க. சில்போது - உள் ளத்தை ஒடுக்கி யுடலைத் தீயின் வீழ்த்தற்குத் துணிந்த சிறிதுகாலம். எரிவாய் - தீயிடத்து.* (16)

குழுவை நோக்கிச் சொல்லியன.

653. அந்தணீர் சான்றீ ரரசாள்வீர் வண்புலவீர்
வந்து குழீஇநின்ற மன்பதையீர்—முந்திய வண்
காணு திருக்குங் கடவுளீ ரெல்லீரும்
பேணீ ரருளீர் பெரிது.

(இ-ள்.) அந்தணர் - பார்ப்பார். சான்றோர் - பொறியடங்கி [illegible] "அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்" (தொல் - பொ. [illegible] என்பது காண்க. அரசான்வீர் என்றதனாற் காரியுமவன் உறவி [illegible] நின்றது குறித்ததாம். வண்புலவீர் என்றது ஔவை [illegible] யன்றபடி. மன்பதையீர் என்றது பிறர் மாந்தரை. காணாதிருக்குங் கடவுளீர் என்றது திசைகாக்குந் தேவரை. தான் செய்வது எல்லார்க்கும் உடன்பாடாதல் வேண்டிக் கூறியதாகும். (17)

654. யானந் தணன்புலவ னின்பாரி வேடோழன்
வானந் தொழுபெருங்கை வள்ளலவன்—றானுள்ள
தெங்கேனு மாக வேனையே யவணுய்க்க
விங்கே யருள்வீ ரியைந்து.

(இ-ள்.) அந்தணனாகப் பிறந்தேன், புலவனாக இருந்தேன், பாரிவேள் தோழனாக வான்செல்கிற்பேன் என்பது குறிப்பு: பாரி தோழனாதற்கண் யாது சிறப்பெனின் அதற்கு அவன் வானந்தொழு பெருங்கைவள்ளல் என்று விளக்கினானென்க. எங்கேனுமாக என்றது பிறந்து உலகிடையிருப்பினும் என்பது கருதிற்று. உள்ளத்தால் எல்லீரும் இயைந்தருளீர் எ-று. (18)

655. இலகுவேள் பாரி யிலாமையால் யானே
வுலகுபா ழாக வுளேனால்—விலகி
யெனையோ தனிநீத்தா னென்னெஞ்ச மன்னன்
றனையோ விடாதாற் றனி.

(இ-ள்.) உலகு பாழாக என்றது "தான் செல்லுந் திசைக்குப் பாழ் நட்டோரை யின்மை" (நான்மணி. 20) என்பதுபற்றி. தனி நீத்தான் என்றது "ஒருங்குவரல் விடாஅ தொழிகெனக்கூறி" (புறம் 236)ப்போயது குறித்து. அன்னான்றனைத் தனிவிடாது என்க. (19)

656. என்னைத் தனின்வே றெண்ணாத பெருங்கோடைவேண்
மன்னைத் தழுவி மனமகிழற்—கின்ன
வெரியே துணையாக யானே யவனுள்
விரிவான் புகுக மிசை.

(இ-ள்.) தன்னின் வேறெண்ணமை 'கபிலனே யானென்று" (160) என்ற பாரி கூற்றான் அறிக. வேள்மன் - வேள்குலக் குரிசில்

மனந்தழுவி மகிழற்கு என்றது இவ்வுடம்பாற் றழுவலாகாமை குறித்து: எரியே துணையாக - அங்கியே கொண்டுய்த்தற்குத் துணையாக மிசைவிரிவான் புகுக என்க. (20)

வேள்பாரியை விளித்துக் கூறியன.

657. வண்பாரி யென்னையுடன் வார லெனமறித்து
விண்போ யமர்ந்தாயேன் விட்டேநீ—நண்பிற்
புரைபட்டே ஞனேன் புலந்தனையா வாயேன்
னுரையட்ட வாற்ற னுளத்து.

(இ-ள்.) இது "கலைபுணக்கிழிந்த" (236) என்னும் புறப்பாட்டின் கருத்தைத் தழீஇயது. மறித்து - கைம்மறித்து. "சிற்கியான் மேயினேனன்மை" என்றதுபற்றி நட்பிற் புரைபட்டேன் என்றான். "நீ யெற்புலந்தனையாகுவை" என்றதுபற்றிப் புலந்தனையாவாய் என்றான். புலத்தற்குக் காரணம் என் உரை கின்னைக் கொன்றவா றென்று தெளிவித்தபடி: பாரி கபிலனைப் புலந்தானாக கினைத்தற்கு வேறு காரணமில்லாமை உய்த்துணர்ந்துகொள்க. (21)

658. உயர்ந்தபா லுண்டே லுடனுறையச் செய்க
வயர்ந்து முனையகலா வாறு—துயர்ந்த
நரகேனு மேற்கோ நனியினிதா நின்ன
தருகே யுளேனே லமர்ந்து.

(இ-ள்.) இது "இடையில் காட்சி நின்னோ, டுடனுறை வாக்குக வுயர்ந்தபாலே" (புறம் 236) என்றதைத் தழீஇயது. உயர்ந்தபால் - உயர் நல்வினை. மண்ணில் உடனுறைந்து பின் அகன்றதனால் விண்ணில் அகலாவாறு உடனுறையச் செய்க என்றான். நூலுள் 'உம்மை' (மறுபிறப்பினும்) என்றதன்றி வானுலகென்று கூறாமை யான் இன்பமே யில்லாது துன்புறு நரகமேனும் நனியினிதாம் எனப் பாடப்பட்டது. உடனுறை வாக்குக என்றதன்றி இடங்கூறாமை நோக்குக. நின்னருகே நின்னாலமரப்பட்டு (விரும்பப்பட்டு) உள்ளேனேல் என்க. (22)

659. உன்னைப் பிரிந்து முயிர்போகா தென்னுடலந்
தன்னைத் தழல்வீழ்த்த முக்கதே—நின்னைப்
பிரிந்துள்ளோ மூளும் பெருநெருப்புக் கீண்டு
விரிந்த தழல்குளிர்தன் மெய்.

(இ-ள்.) சாவிற்சாதல் அன்பிற்கியல்பாகவும் நின் சாவினுயிர் போகாத என்னுடலைத் தழலில் வீழ்வித்து மாய்த்தல் தகுதியுடைத்து; தழல்சுடுவது உணரப்படுமெனின் உயிருள்ளபோது உடலின் உள்ளே மூளும் பெரு நெருப்பிற்குப் புறத்தினுள்ள தழல் குளிர்வது மெய்மை எ-று. பிரிவு நெருப்பின் வெந்தார் 'தாமரை நள்ளிரும் பொய்கையுந் தியுமோ ரற்றே' (புறம் - 246) என்று பாடுதல் காண்க. புறத்துத் தழல்விரிந்து அவிதலும் அகத்துப் பிரிவு நெருப்பு அவியாது மேன் மேலும் மூளுதலும் உணர்க. (23)

660. வான்புக்கு மீகை மறுஅயன்றே வண்பாரி
யான்புக் கிரப்பே னிதோவுன்னைத்—தேன்புக்க
சொல்லாய் விசும்பிற் சுடர்வா யெனையகல
கில்லா தேனைக்கொள்ளு கென்று.

(இ-ள்.) வான் இரப்பாரில்லாத இடமாதலான் ஆண்டுப் புக்கது பற்றி நினக்கியல்பாகிய ஈகை நின்பால் மறுக்கப்பட்டொழியா தன்றே என்க. ஆண்டும் கொள்வாரைத் தேடியிருப்பாய் என்பது குறிப்பிற் கொள்க. யான்புக்கு - யானித்திமுன்னர்ப் புக்கு. தேன் புக்க சொல்லாய் - இனிமைபுக்குவதியும் மொழியினையுடையாய்: அச் சொல் ஈகைமறுப்பதாகாமையுணர்க. எனைக்கொள்ளுக என்று யானிரப்பேன் - எனக்கு ஈண்டுள்ள காலமெல்லாம் பலவற்றையும் கொள்ளுக என்று இரந்து ஈத்த நின்னை இப்போதே என்னைக்கொள் ளுக என்று இரப்பேன் எ-று. (24)

661. அன்பருத்தி யென்னைநீ யன்னைபோற் காத்ததிற
மேன்புருக்கு கின்ற தினித்தரியே—னின்புருக்கோ
ணிற்கண்டா லன்றியென் னெஞ்சவிடாய் தீர்கிலே
னெற்கோள்வா யெத்திறத்து மேன்று.

(இ-ள்.) புறத்திற் பல்வகை யுணவாக வைத்து உள்ளவாறு நின் அன்பினையான் உண்ணுமாறு செய்து என்னைத் தாய்போற் காத்த கூறுபாடு என்றவாறு; "போற்றலாற்றாயரோத்தும்" என்றார் சிந்தாமணியினும் (1895): உணவு என்பினை வளர்த்தலும், அன்பு உருக்குதலும் உணர்க. எனக்கு இன்ப வடிவாகிய நின்னைக் கண்ணாற் பார்த்தாலன்றி என்க. எத்திறத்தும் என்றது தான் ஒத்தவனல்லனாயி னும் என்பது கருதிற்று. விடாய் - வெய்ய தாகம்; "விண்ணின் மேகத்தை வாரிவாய்ப் பிழிந்திடும் விடாயர்' (மூலபல - 9) என்றார் கம்பநாடரும். (25)

*தழற்செல்வனை நோக்கிக் கூறியன.*

662. வானுளார்க் கேதும் வழங்குவார் நின்பாலே
தானிடுவா ருய்ப்பாய் தழற்சேல்வா—யானென்னை
நின்க ணிடுவே னெடும்பாரி யுள்ளுழிநீ
யென்னை யிடுவா யினி.

(இ-ள்.) தழற்செல்வன் கொண்டுய்ப்பவனாதல் "எது விதிப்படி யிடுமவி கொடுசெலும்" (சாகுந்தல நாடகம்) என்பதனாலறிக. பாரி வானுள்ளவனாதல் உணர்க. கேடியறிய வேண்டாதபடி பலரினும் நெடியனாவனென்று நெடும்பாரி என்றான். (26)

663. யாரேனும் பாடினார்க் கெங்கோன் பெரும்பாரி
வாரே னுமை லவர்வரையன்—பாரீரேன்
றியான்சோற் றதுவே யியற்றினார் மற்றதுவோ
வான்பேற்றுந் தீரா வசை.

(இ-ள்.) யாரேனும் என்றது பகைவரையுமுளப்படுத்த. பாடினார்க்கு - பாடிச்சென்றபரிசிலர்க்கு. அவர்வரையன் - அவரெல்லையின் கண்ணே சிறப்பன். பாரீர் - இவ்வாறு நீவிரே பாடிப் பார்ப்பீர்; பாருடையீர் என்பதும் ஒன்று. வான்பெற்றும் - யான் இன்னால் வானுலகு பெற்றவிடத்தும். நீங்காத வசையுடைத்து. (27)

664. இசைசெய்த வென்சோ லிரும்பாரி வேளைப்
பசையின்றிக் கோன்ற பழியேன்—மிசையிழியு
நீர்கழுவ மாட்டாது நீகழுவா யென்னிற்பின்
யார்கழுவ வல்லா ரியம்பு.

(இ-ள்.) இசை செய்த - புகழ்ந்த. பசையின்றி - அன்பின்றி. என்மிசை - என்மேனின்று. இழியுநீர் கழுவமாட்டாது - இழியுமியல்பையுடைய நீர் கழுவவல்லதன்று. நீகழுவாய்என்னின்—உயருமியல்புடைய நீ கழுவவல்லையல்லையேல். நீர் இழிவதும் தீ யுயர்வதும் காண்க. பின், இன்னினமாகிய விண்கால் மண் என்னும் மூவகைப் பூதங்களுள் எப்பூதக் கடவுளர் வல்லார் சொல்க. எ-று. (28)

665. என்று தழலை யிறைஞ்சிக் கரங்குவித்து
நன்று குதித்தா னடுத்தீயிற்— சென்று

முழுகினன் வானின் முழுச்சுடராய்க் காண
வொழுகின னும்ப ருழை.

(இ-ள்.) தழற்செல்வனைக் கரங்குவித்துத் தலைவணங்கித் தீ நடுவண் நன்று குதித்தான். குதித்தான் - பாய்ந்தான். தீ நடுவட் சென்று முழுகினன் என்க. முழுச்சுடராய் - பூரண சோதியாய். பாரி இப்போது உம்பரின் வேறுகாமையான் உம்பருழை எனப்பட்டது. ஒழுகினன் - இயன்றான். (29)

666. நட்ட தகைமையோ நன்றே யுடறீயி
லிட்ட வருமையோ வென்னேன்று—கிட்டக்
குழீஇயினு ரெல்லாங் குலாவி யிசைக்கக்
கெழீஇயினன் வானிற் கிளர்ந்து.

(இ-ள்.) உடல் தீயிலிட்ட அருமை நட்டதகைமையானுதல் வினைக. குலாவி - சூழ்ந்து. இசைக்க - புகழ. வானிற் சிறந்து தேவரோடொன்றினன். (30)

667. வேளிர் குலத்து விறல்வேந்தை யந்தணனந்
நாளிற் கெழீஇயது நன்றேன்றார்—நீளும்
புலமைக்குப் போறப் புரையற் றொழுகுந்
தலைமைக்குத் தக்கதேன்றார் தாம்.

(இ-ள்.) அந்நாளில் - அவ்விருவரும் உள்ளபோழ்தில். கெழீஇயது - நட்டது. பொற்ப - ஒப்பாக. புரையற்று - குற்றமற்று. இது கைபறு நிலை; "கழிந்தோன் றன்புகழ் காதலித் துரைப்பினு, மொழிந்தனர் புலவ ரத்துறை பெண்க" (புறப்பொருள்-வெண்பாமாலை). புரையற்றொழுகுந்தலைமை - பொய்யாதொழுகுஞ் சிறப்பு. "வாய்மொழிக்கபிலன்" (அகம் - 78). "பொய்யாநாவிற் கபிலன்' (புறம் - 174) என்பவற்றானறிக. நன்று என்றார் - குலம்பற்றி அல்லாமையால் ஒத்த நலம்பற்றி யென்றார். புரையற்றொழுகுந் தலைமை பாரிக்குங் கபிலர்க்கும் ஒக்குமென்பது பொருந்தும். (31)

668. வண்பாரி யேவள்ளன் மன்கபில னேபுலவன்
விண்பா ரறியயாம் விண்டேமா—னண்பாவ
தீதே பெருஞ்சான் றியாமே யெனவிசைத்துப்
போதே படிந்தார் புனல்.

(இ-ள்.) வண்பாரி - கொடுத்த வளமுடைய பாரிவேள். மன் கபிலன் - நிலைபெற்ற கபிலனே. விண்ணும் பாரும். நண்பு ஆவது - ஆக்கக்கடவதாகிய நட்பு: கூடாநட்பை விலக்கிய தொடர். பெருஞ் சான்று - பெருமையையுடைய கரி. 'பெருஞ்சான், றியாமே' என்புழிக் குற்றியலிகரம் அலகுபெற்று நின்றது. 'மற்றியானென்னுளேன்' (குறள்-1206) எனவும், "பட்டாங் கியானுமோர் பத்தினியே" (சிலப்-வஞ்சின) எனவும் வருமிடங்களிற்போலக் கொள்க. கபிலன் தன்னை யாகுதியாக இட்ட வேள்வியில் அவபிரதம் ஆடினார் எ-று. "முனிவர் அவபிரதங் குடைந்தாட" என்ப, (பெரியாழ்வார் - 4-7-6). (32)

669. ஆடினார் பெண்ணை யருங்கபில னட்டதிறம்
பாடினார் கண்ணீர் பனிப்பவே—வாடினார்
மெய்த்திறத்தில் ஞாலம் வெறிதாக நன்கபில
னெத்திறத்து நீத்தா னென.

(இ-ள்.) பெண்ணை - பெண்ணையாற்று நீர். நட்டதிறம் - நட்டவன்மை. கண்களில் நீர் துளித்துவரவே எ-று. மெய்த்திறத்து இல் ஞாலம்-வாய்மைப் பகுதியில்லாத பூமி: நிலையில்லா உலகம் எ-று. வெறிது ஆக - ஒன்றுமில்லது ஆக. 'அறிவின்மையின் மையு ளின்மை" (குறள் - 841) என்றது காண்க. எத்திறத்தும் - தனக் குயர்ந்த திறமேனும்; நம்மை நீத்தொழிந்தானென்று வாடினார். என்க. (33)

670. தானந் தணன்புலவன் றண்பாரி வேளிர்வேள்
வானம் புகுந்த வகைபாரீர்—வானங்
குணநல்க லன்றிக் குலநல்க லில்லென்
றிணைசொல்வீர் யார்க்கு மினிது.

(இ-ள்.) வானம் குணநல்கல் கூறியது "குணநலன் சான்றோர் நலனே' (குறள் - 982) என்றதுபற்றி. குலம் - உயர்குலத்திற் பிறத் தல். இணை சொல்வீர் - ஒப்புச் சொல்வீர். பாரிக்கும் கபிலர்க்கும் ஒத் தது குணமன்றிக் குலமல்லாமை யுணர்க. யார்க்கும் - இழிந்த பிறப் பினர்க்கும் உயர்ந்த பிறப்பினர்க்கும் எ-று. இனிது இணை சொல்வீர்- இனிய பண்பின்கண் இயைதல் கூறுவீர் என்பதும் ஆம். (34)

671. ஐந்து குலனு வமர்ந்த பெருங்குழா
மைந்து விரல்சே ரணிகரமாய்—முந்து

மோருவினைக்க ணொன்றி யுலகோம்ப நட்டல்
திருவினைத்தந் தார்க்குந் திறம்.

(இ-ள்.) ஐந்துகுடிப் பகுப்புடையராகப் பொருந்திய மக்கட் பெருந்திரள், விரல் ஐந்தும் சேர்ந்து அழகு செய்யுங் கையாகி, முன்னேற்றம் செய்யும் ஒரு காரியத்தில் விரல்கள் பிரிந்து நில்லாது ஒன்றுதல்போல ஒன்று சேர்ந்து, உலகத்தைப் பாதுகாத்தற்பொருட்டு உயிரோடு நட்புக்கொள்ளல், திருமகளை நம்பாற்றந்து அவள் போகாமற் பிணிக்கும் பகுதியாம் எ-று. (35)

672. மணனு லுடறழுவல் மன்னு நினையேங்
குணனு லுயிர்தழுவிக் கோள்ள—எணுவேமே
லிந்நாடோர் போன்னுடேன் றேத்தினர் மேய்க்
றந்நாடு புக்க தகை. [கபிலன்

(இ-ள்.) ஐந்து குடியும் வறுமையால் உடல் தழுவுதலை மிகவு நினைகிலேம். குணனொன்றுமையால் உயிரைத் தழுவிக் கோடலை எண்ணுவேமாயின், இந்த மண்ணுலகு ஓர் பொன்னுலகாம் என்று கூறி இவ்வெல்லாம் நினையும்வண்ணம் வாய்மைக் கபிலன் தம்முடைய நாடுபுக்க மேம்பாட்டைத் துதித்தார் என்க. தேவருலகும் உடல்தழுவும் பொன்னுடாதலான் அதனின் வேறாய் உயிர்தழுவலான் இஃதோர் பொன்னுடாமென்று கூறினரென்க. (36)

673. பேருங்கபிலன் பீடும் பேயரு மேழுதி
அருங்கனலிற் புக்க வவணே—யிருங்கடல்சூழ்
பாரேல்லாம் போற்றப் பருமணிக்கன் னட்டியவுட்
சீரேல்லாஞ் சேய்தாரில் சேய்து.

(இ-ள்.) பெரும்பீடு - புலமை வலியும், நட்பு வலியும், உதவியுமாம். பெரும்பெயர் - சிறப்புப் பெயர்: 'புலனழுக்கற்ற வந்தணாளன்,' என்றாற்போல்வன: வடக்கிருந்து பாய்தலான் அருங்கனல் எனப்பட்டது. இயவுட்சீர் - கடவுட் சிறப்பு. இல் செய்து - கோயிலெடுத்து. வடக்கிருந்து உயிர் நீத்தார்க்குக் கல் நடுதல், "நடுகலாயினன் புரவலனெனவே" (புறம், 221) என வருதலான் அறிக. 'கபிலக்கல்லது' என்ற சாசனத் தொடரும் நினைக. இயவுட்சீர்—நீராட்டல், நெய்ந்நறைக் கொளுவல், கமழ்புகை காட்டல், நாட்பலியூட்டல் முதலியன "சீறூர்ப் புடைநடு கல்லி னாட்பலி யூட்டி, நன்னீ ராட்டி நெய்ந்நறைக்

கொளீஇய மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்'' (புறம், 329) என் பதனுனறிக. கல்லிற் பெயரும் பீடுமெழுதல் 67-ஆம் அகப்பாட்டிற் கண்டது. "தேவரனையர் புலவர்'' (நான்மணி 74) என்பதனுனும் "தேவரே கற்றவர்'' (சிறுபஞ்சமூலம். 20) என்பதனுனும் கற்றுரை இங்ஙனம் வழிபடுதலுண்மை யுணரலாம். பருமணிக்கல் - பருத்த நீலமணிபோலுங் கல்வடிவு. (37)

674. கோவ லளவோ குழாங்கோண்டார் தம்மளவோ
தாவி றமிழளவோ சார்தோன்ஞண் —மேவளவோ
ஞால முழுது நவிலுமா னன்கபிலன்
சீலந் தினமுஞ் சிறந்து.

(இ-ள்.) "உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய் மொழிக் கபிலன்'' (அகம் - 78) என்பதன்கண் 'உலகுடன்' என்றது பற்றி ஞாலமுழுதும் எனவும், 'திரிதரும்' என்றதுபற்றி நவிலும் என வும், தினமும் எனவும் கூறலாயிற்று. கோவலளவோ என்றது ஒருரள வினில்லை எ-று. குழாமளவோ - ஒரு கூட்டத்தளவினில்லை எ-று. தாவில் தமிழளவோ - கெடாத தமிழ்மொழியி னெல்லையளவினில்லை என்றது; ஆரிய மன்னன் பிரமதத்தன் தன் வடமொழியாற் புகழ்தல் குறித்தது: "பலர் புகழ் நல்லிசை'' யென்ப. பலமொழியாளர் புகழு நல்லிசை யெனினு நன்கு பொருந்தும். தொன்ஞளளவினில்லை என்பதற்குத் தினமு நவிலு மெனப்பட்டது. சிறந்து - சிறப்பித்து. சீலம் - பெரியோன் தன்னிற் சிறியோனிடன் வேற்றுமையின்றிக் கலக்குந்தன்மை யென்ப. (38)

675. போய்யாநக் கீரன் போருந்தி லிளங்கீர
னையாத மாறேக நப்பசலை—மெய்யாக்
கிளந்தபெருங் குன்றூர் கிழாரல்லே னின்ஞேன்
வளர்ந்தபெருஞ் சீர்பரவ வாய்.

(இ-ள்.) பொய்யா நக்கீரன் - நக்கீரனுருடைய பொய்யாவீறு; "கொங்கு தேர் வாழ்க்கை'' (குறுந்தொகை) என்னும்பாடல் வரலாற்று னறிந்தது. நக்கீரனர் கபிலரைப் பாடியது 78-ஆம் அகப்பாட்டி னும், பொருந்திலிளங்கீரனர் பாடியது 53-ஆம் புறப்பாட்டினும், பெருங்குன்றூர் கிழார் பாடியது பதிற்றுப்பத்து ஒன்பதாம்பத்து, 5-ஆம் பாட்டினும், மாறோகத்து நப்பசலையார் பாடியன 126, 174 ஆம் புறப் பாட்டுக்களினும் கண்டுகொள்க. இம்மேற்கோள்கள் முன்னரே எடுத்

தாண்டனவாகும். பொருந்தில் - ஓரூர். நையாத மாறோகம் - கெடாத மாறோக நாடு. மாறோகம் கொற்கைசூழ்நாடு என்ப. மெய்யாக்கிளந்த-வாய்மையாகச் சொல்லிய. இன்னேன் சீர்வாய்பரவயான் நக்கீரனார் முதலிய பண்டை நல்லிசைப் புலவரல்லேன் எனக் கவி கூறியதாகக் கொள்க. (39)

676. மாப்புலவன் வண்பாரி வன்பிரிவிற் காற்றுது
தீப்புகுந்த செம்மைத் திறஞ்சோற்றேங்—கோப்பெரு
பாரி மகளிர் பழிச்சு திருமணமே [மைப்
லோர வுரைப்பே முவந்து.

(இ-ள்) பழிச்சு திருமணம் - புகழ்கின்ற திருவுடைய வதுவை. ஓர-உணர, உவந்துரைப்பேம் - விரும்பிச் சொல்வேம். (40)

கபிலர் தீப்பாய்ந்ததிறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள் (40).

---

## 14. மகளிர் திருமணத் திறம்.

677. பாரி மகளிர்க்குப் பாங்காய் வதிகின்ற
சீரியா ளௌவை சிலநாட்போய்க்—காரியுழைக்
கன்னிமார் கண்ணலங் காணக் கடவையெனப்
பன்னினா ளின்சொற் படர்ந்து.

(இ-ள்.) காரியுழைப்படர்ந்து இன்சொற்பன்னினாள் என்க. பாங்காய் - நன்மையாய். சீரியாள் - சீர்த்தாள். கன்னிமார்கண்ணலம் 'சீதாகல்யாணம்' போலவந்தது; மகளிர்பாங்காதற் கேற்பக்கூறினாள் என்க. இவர் கல்யாணமே அவன் மக்கள் கல்யாணமாதலான் வேறே கூறிலள். (1)

678. இளைத்த குடியெடுக்க வெண்ணினாய் நின்பான்
முளைத்த புதல்வர்மண முன்னி—விளைக்கு
மறமோ பேரிதாகு மன்றறிவா மென்னு
துறவா வுளுற்ற லுரிது.

(இ-ள்.) ஒருவினையில் இரண்டு பயன் கொள்ள வெண்ணுதல் குறிப்பு. புதல்வர் மணமும் இளைத்தகுடி யெடுத்தலும் ஈண்டு ஒன்ருதல்காண்க. அன்று என்பது வருங்காலத்து ஓர் நாளைச்சுட்டியது. உறவாஉளுற்றல் - உறவுடையதாகச்செய்தல். உரிது - உரியதாகும்.

679. மூவுலகுந் தாய முதல்வன் கொழுஞ்சுடராய்க்
கோவ லிடைகழியே கோண்டபிரான்—றேவர்
[தொழுந்
தேவ னிறைவன் றிருமாற் கடிமைசெய்து
மேவினுய் வேட்டவெலா மிக்கு.

(இ-ள்.) திருக்கோவலூரில் உலகளந்த மூர்த்தி கோயில்கொண் டருளுதல் நினைக. இடைகழி யென்பது இக்கோயிற்பெயர்; "கோவ லிடைகழியேபற்றியினி' (இயற்பா. 1, 86). இறைவன் - எப் பொருளினுந்தக்குயோன். காரி இத்திருமாற்கடிமைசெய்தல் "பொற் புடைய மலையரையன் போற்றநின்ற பூங்கோவ லூர்தொழுதும் போது நெஞ்சே" என்னுந் திருமங்கைமன்னன் திருவாக்காணறிய லாம். வேட்ட எலாம் - விரும்பின எல்லாம். 'தேவர்தொழும்,'' என்னுஞ்சீர் "கணவன்வாங் கல்லுருவ நீத்தாள்" (வஞ்சின - 17.) என்னுஞ் சிலப்பதிகார வடியின் முதற்சீர்போல வந்தது காண்க, தாய - தாவிய. முதல்வன் - வேதமுதல்வனைப் பயந்த முதல்வன் (சிலப் - ஊர்காண் - 48). (3)

680. மூவர்க்கு மஞ்சா முரணீ படைத்தனைபூத்
தேவர்க்குப் பாங்காந் திறல்படைத்தா— யாவர்க்கு
மிக்க திருப்பாரி வேண்மகளிர் தோள்புணரு
மக்கள் படைத்தாய் வரத்து.

(இ-ள்.) மூவர்க்கும் - மூவேந்தர்க்கும் "மூவருளொருவன் றுப்பாகியரென" என்பதனல் அஞ்சாமுரண்உணர்க. பூத்தேவர் - அந்தணர்; "நாடந்தணரதுவே" எனவும் "ஆரியர்துவன்றிய பேரிசை முள்ளூர்" எனவும் வருதலானிவன் அவர்க்குப்பாங்காதலுணர்க. தெய்வவரத்தால் மக்கள் படைத்தாய் எ-று. மக்கட்பேற்றிற்குவரம் வேண்டும் என்பது"குன்றக்குறவன் கடவுட்பேணி,யிரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமகள்" (ஐங்குறு-25) எனவருதலானறிக. அதிய மான் மகட்பேறு குறித்தவிடத்து "அதியமான்தவமகன் பிறந்தவனைக் கண்டானை...பாடியது (புறம்-100) என முன்னையோர் கூறுதலானும் உண்மையுணர்க. (4)

681. மையற் களிற்றடியின் வையாது முன்னமே
தெய்வத்தா னுய்ந்தாருன் சீர்ப்புதல்வர்—தெய்வத்தான்
வையைக்கோ வவ்வாது வந்தமகார் தோண்மணத்
செய்வர் பிறரல்லர் தேர். [தல்

(இ-ள்.) மையற்களிறு - மதயானை. வையாது-கிள்ளிவளவனால் வைக்கப்படாது. காரிமக்களைக் கோவூர்கிழார் காத்துய்த்ததும் பாரி மகளிரைக் கபிலர்காத்துய்த்ததும் தெய்வத்தால் என்று தெரியக்கூறிய வாறு. வவ்வாது - இராக்கத மணமாக வவ்விக் கொள்ளப்படாமல்; ''வவ்விக்கொளலு மறனெனக்காண்டன்று'' (குறிஞ்சிக்கலி. 26) என்பது காண்க. வையைக்கோ - வையையாற்றிற்கு வேந்தன். பிறர் - பிறர்புதல்வர். புதல்வரும் இருவர், மகளிரும் இருவர் ஆதல் கினைக. (5)

682. நல்லோ னிருந்துழியேந் நன்மையும் போதுமேனச்
சோல்வா ரஃதுன்பாற் சூழ்ந்தறிந்தேம்—பல்வகையாற்
போயா தரித்துமகட் பேசப் புகாதிவணே
வாயாது வாய்த்த மணத்து.

(இ-ள்.) அஃதுன்பால் என்புழி ஆய்தம், ''அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்'' (குறள் - 226) என்புழிப்போல ஒருமாத்திரையாய் நின்றது. நல்லோன் - மன நல்லவன். எந் நன்மையும் போதுமென்றது, ''மனநல மன்னுயிர்க் காக்கம்'' (ஷை - 457) என்பதுபற்றி. பல்வகையாற்போய் - நாளும் புள்ளும் பார்த்துச் சென்று எ-று. ஆதரித்து - பெண் பெற்றாரையும் உறவினரையும் அன்புடன் பேணி. மகட்பேச ஒரு மனைக்கட் புகாமல் என்க. இவணே வாய்த்த மணத்து - இருந்த இவ்விடத்தே வாய்த்த வதுவையால்; சூழ்ந் தறிந்தேம் என்க. வாயாது - அவணே முடியரசர்க்குக் கிடையாது.

683. பெண்டேட றுன்பமாம் பெண்டிர்க்கு நன்மக்கள்
கண்டேட ருனுங் கடுந்துன்ப—மண்டேடு
மிவ்விரண்டு மில்லா தியைந்த பெருமணமோ
தெய்வமண மாகுஞ் சிறந்து.

(இ-ள்.) புதல்வர்க்கு ஒத்த பெண்டிரைத் தேடுதல் துன்பமாகும். கடுந்துன்பம் என்றது புதல்வரைப் பெற்றாரினும் பெண் பெற்றவர்க்குள்ள துயர மிகுதி குறித்தது. கண் தேடல் - கண்ணுற்றேடிக்

காண்டல். மண் - உலகு. தெய்வமணம் - தெய்வங் கூட்டியவதுவை. இரண்டும் பெண்டேடலும், ஆடவற்றேடலும். (7)

684. நின்மகன்றெய் வீக னினைக்குங்கா லங்கவைக்கு
மன்மகனு மொத்த வனப்பினிய—னன்மகளாஞ்
சங்கவைக்குப் பொற்பிற் றகுவான் றிருக்கண்ணன்
மங்கலமாய்க் கோள்ளியைந்த வாய்ப்பு.

(இ-ள்.) அங்கவைக்கு மன்மகன் ஆம் - அங்கவைக்குத் தலைமகன் ஆவன். மூத்தவட்கு இளையவனும், இளையவட்கு மூத்தவனும் ஒப்பென்னுது நேரே ஒத்தவாய்ப்பு என்க. 'தெய்வீகன்' என்னும் பெயர் தமிழ் நாவலர் சரிதையிற் கண்டது. திருக்கண்ணன் என்னும் பெயர் 173-ஆம் புறப்பாட்டின் கொளுவிற் கண்டது: இப் பெயருண்மை "அஞ்சனவண்ணன் தந்து சிறுத்தாங்கு.........நீ தோன்றினையே" என்புழி, உரைகாரர், அஞ்சனவண்ணன் கண்ணன் என்று கூறி, அவன்போல நீயொருகண்ணன் தோன்றினையே என்று கொள்ளவைத்தலானும் நன்குணரலாம். (8)

685. நின்மக்கட் கோத்தார் நேடும்டாரி வேண்மகளி
ரென்னப் புகழ்வேமோ வின்காரி—யுன்மக்க
ளிம்மகளிர்க் கோத்தாரென் றேத்துவமோ விவ்
விரண்டுஞ்
சேம்மைத் திறனுகுஞ் சேர்ந்து.

(இ-ள்.) ஆடவர்க்கு மகளிர் ஒத்தார் என்பது ஆண்புறத்தார் சொல். மகளிர்க்கு ஆடவர் ஒத்தார் என்பது பெண்புறத்தார் சொல். செம்மைத்திறன் - தலைமைப் பகுதி. (9)

686. பாரி பிரிவின் படராற்ற மாட்டாதுன்
சீரில் லிவருய்த்துத் தீர்ந்தனனு—லூரி
னிறைவான் கபில னிறைமகளிர் வேட்கு
முறையான் சேயவே மோழிந்து.

(இ-ள்.) பிரிவிற்படர் - பிரிதற்கண் உண்டாகிய துன்பம். உன்சீர் இல் - உன்னுடைய சீர்த்த கோயிலில். ஊரினிறைவான் - ஊர்கள் பெற்று இறைபவன். "கபிலன் பெற்ற ஊரினும் பலவே" (85) என்பது பதிற்றுப் பத்து. வேட்கு முறை - மணத்தற்குரிய முறைமைகளை. (10)

687. நன்று மலைசூழ்ந்த நன்னாடு செல்வக்கோப்
பின்றாது தந்த பெருஞ்செல்வங்—கன்றாத
சீர்ப்பாரி மக்கள் சிறுபுறனுக் குள்ளதது
பார்ப்பாய் வளஞ்செய் படி.

(இ-ள்.) நன்னாடு என்றது பொன்விளையு நாடாதற் சிறப்பான். செல்வக்கோ - சேரன். பின்றாது தந்த - முற்படத் தந்த. கன்றாத சீர் - வெருளாத சிறப்பு. "நீரினு மினிய சாயற் பாரி" என்றது காண்க. சிறுபுறன் - ஸ்திரீதனம். இவர் புண்ணியத்தால் வளஞ் செய்யுந்திறன் பார்ப்பாய் என்க. (11)

688. கோடுத்து வளர்ந்த குடியிரண்டு மோன்று
யடுத்துப் பெருக வவாவித்—தோடுத்தமணத்
தியான்செய் பணியு மிவணுண்டு மற்றவைபின்
தேன்செய்தார்க் காரி தேரி.

(இ-ள்.) "மடவர் மெல்லியர் செலினுங் கடவன் பாரி கை வண்மையே" (புறம். 106) எனவும், "வறிது பெயர்குவரல்லர்......... மலையற்பாடியோரே" (ஷை 124) எனவும், வருவனவற்றான், இருகுடியும் கொடுத்து வளர்ந்த குடியாதலுணர்க. சிறுபாணாற்றிற் பாரியையடுத்துக் காரியைக்கூறும் இயைபும் நினைக. குடி பெருகுதலே மணத்திற்குப் பயன் என்பதூங் குறித்ததாம். அறிஞர் பணிசெய்தற்குரிய குடியென்று தெளிவித்தவாறுணர்க. (12)

689. என்றேளவை கூற விருங்காரி யீங்கிவர்தாங்
துன்று மணமாலை சூட்டுநோ—ளேன்றேன்று
நாளாய்ந்து சோல்வார் நலனாய்ந்து சோல்கேன்னக்
கோளாய்ந்தார் சோற்றார் குறித்து.

(இ-ள்.) இவர் - மகளிர். நாளாய்ந்து சொல்வார் - கணியர். நலன் ஆய்ந்து - மங்கல முகூர்த்தம் தெரிந்து. கோளாய்ந்தார் - நாளுக்குரிய கோள்களை வதுவரர்க்குப் பொருந்த ஆராய்ந்தவர். "இருபெருங் குரவரு மொருபெரு நாளான் மணவணி காண மகிழ்ந்தனர்." (சிலப் - மங்கல) என்பதனால் நாள் நலன் ஆராய்ந்துகொள்ளுதல் உணர்க. (13)

690. நாளைப் பதினெட்டா நாண்மணநா ளென்றவற்கு
வேளைக் கணிசொல்ல மிக்கோனு—மாளைப்
பலவிடத்தும் விட்டான் படைப்பான்பல் பண்டஞ்
செலவிடற்குஞ் சீர்க்குந் தெரிந்து.

(இ-ள்.) நாளைப் பதினெட்டு - நாளைமுதலெண்ணிய பதினெட்டு. வேளைக்கணி - முகூர்த்தங் காணுஞ் சோதிடன். செலவிடற்கும் - செலவாகக் கொடுத்தற்கும். சீர்க்கும் - ஆண்புறத்தார் செய்யும் சிறப்பிற்கும். ஆளை - ஏவலாளரை. (14)

691. இடையூ றிலாம லெதுவினையுங் காப்போன்
விடையூர் கடவுள் விழுச்சே—யடைவாகப்
பாரி மகார்வதுவை பாலிக்க வென்றேளவை
நேரின் வரநினைந்தா ணின்று.

(இ-ள்.) "அடியவர் தமதிடர் கடிகண பதிவர வருளினன்" என்பது தேவாரத் திருப்பாட்டு (வலிவலம்). விழுச்சேய் - மூத்த பிள்ளையார். (15)

692. களிற்று முகத்துக் கடவு ளெவர்க்கும்
வெளிற்றைத் துடைக்கும் விமலன்—றெளித்தென்னை
முன்ன மெடுத்தாண்ட மூர்த்தி யகத்திருக்க
வென்ன குறையுடையேன் யான்.

(இ-ள்.) எவர்க்கும் - அரிய கற்றுசற்றார்க்கும். வெளிறு - அறியாமை. "அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கா, லின்மையரிதே வெளிறு" (குறள். 503) என்றது காண்க. இது பாடியும் சிறிது பாணித்தலான் அடுத்தபாட்டுப் பாடினுளென்று கொள்க. (16)

693. ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் செம்மல்—கரிமுகவன்
கண்ணுல வோலை கடிதெழுத வாரானேற்
றண்ணண்மை தீர்ப்பேன் சபித்து.

(இ-ள்.) இது பழம்பாட்டு. ஒரு கை - ஒற்றைத் தூதிக்கை, இரு மருப்பு - கையிலொரு மருப்பும் முகத்திலொரு மருப்பும் உடைமையாற் கூறினர். நால்வாய் - தொங்கியவாய்; வினைத்தொகை; நால்

வாய்க் கரிமுகவன் என்க. கரியுரிவைக் கங்காளன் - யானைத்தோலைப் போர்த்த என்பு அணி வேடத்தன்; சிவபிரான். செம்மல்-கணநாதன். எழுதக்கடிதுவாரானேல். தண்ணளண்மை - அருளாளுதற்றன்மை மை. சபித்துத் தீர்ப்பேன் - வைது ஒழிப்பேன் எ-று. மாபாரதம் எழுதினுர்க்கு இவ்வோலை எழுதல் எளிது; இவ்வெளியது செய்ய வாரானேல் என்க. போர் எழுதலும் கல்லில் எழுதலும் செய்தாற்குக் கண்ணுலம் எழுதலும் ஒலை யெழுதலும் எளியவாதல் உணர்க: நன்றே செய்தற்குரிய தெய்வம் அது செய்யவேண்டி வைதுரைத்தலும் வழக்கே என்பது, "பரந்துகெடுக வுலகியற்றியான்" (குறள். 1062) எனத் திருவள்ளுவனர் கூறுதலான் அறிக. கலிசன்றியாரும் மடலில் "தன்னருளு மாசமுந் தாரானேல்.........தன்னிலைமை யெல்லா மறிவிப்பன்" எனப்பாடுதல் காண்க. வடநூல் பகர்ந்தோன் முன் வந்தவன் தமிழ்நூல் பகர்ந்த என் முன் வாரானேல் என்று கருதினு மமையும். மும்மதங் கூறியது கரிமுகவன் என்பதுபற்றி (நன்னூல் - எழுத். 39 சங்கரநமச்சிவாயப் புலவருரை பார்க்க) ஒரு கையும் இரு மருப்பும் மும்மதமும் நால்வாயும், கரிக்கு அடை எனினு நன்கமையும்.

694\. என்ற பொழுதி லிபமுகனு நால்வாயுஞ்
சென்று மறைந்த திருவுருவிற்—றன்கையி
லாணியு மேடு மழகா வேடுத்தவனோர்
மாணி யெதிர்நின்றான் வந்து.

(இ-ள்.) ஆணி - எழுத்தாணி. அழகா - காண்டற்கு அழகு ஆக. ஒர்மாணி - ஒரு பிரமசாரி. மறைந்த திருவுருக் கூறியது, வழி படும் ஔவையன்றிப் பிறர் அறியாமைக்கு. (18)

695\. நின்றானை நோக்கி நெடுமுடிமூ வேந்தர்க்குப்
பின்று தெழுதுமணப் பேரோலை—யென்றௌவை
ஓரோர் கவிதையா வோர்மூன்ய வாய்மலர
நேரே வரைந்தா னிரைத்து.

(இ-ள்.) நெடுமுடி - வணங்காமுடி. மணப்பேரோலை - பெரு மணவோலை. நிரைத்து - வரிசைப்படவைத்து. வரைந்தான் - எழுதி னான். பின்றுது - சொற்குப் பிற்படாது. (19)

696\. சேரலர்கோன் கோதை செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமக்

ளங்கவையைக் கோள்ள வரசன் மனமியைந்தான்
சங்கவையுங் கோள்ளற்குத் தான்.

(இ-ள்.) இது முதன் மூன்றும் பழம்பாடல்கள். சேரலர் - சேரர்குடிப்பிறந்தார். கோதை - சேரற்கு ஒரு பெயர். தாயத்தான் செய்த பழி நினைந்து நாணுமல் வருக என்க. உட்காதே - அஞ்சாமலே எனினுமமையும். பழியஞ்சுவதாகக் கொள்க. அரசன் - கோவலூர் மன்னன்; "கோவற்கோமா னெடுந்தேர்க் காரி" (அகம். 35) என்பது காண்க. சேரர், பாண்டியர், சோழர் என்றலே முறை பென்பது "போந்தை வேம்பே ஆர்" (பொ - புறத் - 5) என்னுந் தொல்காப்பிய முதலாய தொன்னூல்களிற் கண்டுகொள்க. (20)

697\. வையைத் துறைவன் மதுரா புரித்தேன்னன்
செய்யத் தகாதேன்று தேம்பாதே—தையற்கு
வேண்டுவன கோண்டு விடியல்பதி னேட்டாநா
ளீண்டு வருக வியைந்து.

(இ-ள்.) பாண்டியனே மூவருள்ளும் பாரிமேற் போர் தொடங்கியவன் ஆதலான், அத்தாயத்தவன் கொடும்பழி நினைந்து, இது செய்யத் தகாது என்று வாடாமல் அப்பழிக்குக் கழுவாயாகத் தையற்கு வேண்டுவன கொண்டு வருக என்றூர் என்க. தன் குடியினன் பிரதிகூலித்துச் செய்த வினையை இப்போது அனுகூலித்துச் செய்வதனுற் றீர்த்தற்குத் தையற்கு வேண்டுவன கொண்டுவருக என்றூர். இவ்வாறு சேரற்கும் சோழற்கும் உரையாமை நோக்கிப் பாண்டியற்கு இயைபு உணர்க. பிறர்க்கு உட்காதே நகாதே வருகஎன்பவர், இப்பாண்டியற்கு மட்டும். "செய்யத்தகாதென்று தேம்பாதே, இயைந்துதையற்கு வேண்டுவன கொண்டு வருக" என்றது கண்டு உய்த்துணர்க: இயைந்து வருக என்றது இயைபாமையை நினைந்து கூறியதாதல் காண்க. பதினெட்டா நாள் விடியல் வருக என்க. ஈண்டு - இக்கோவலூர்க்கு. 'விடியல்பதி' என்னுஞ் சீர் 'கணவன்வர' (சிலப் - வஞ்சின) என்பது போல வந்தது. தையற்கு - பெண்புறத்திற்கு. அவனுட்டுப் பிறந்த மகளிராதலான் வேண்டுவன கொணர்தற்கு விரும்பினுர் என்பது மாம். தென்னன் - தென்றிசை நாடாள்பவன். விடியலைக் குறித்தது, மணவினை காலையிற் றெடங்குவது கருதி. (21)

698\. புகார்மன்னன் போன்னித் திருநாடன் சோழன்
றகாதேன்று தானங் கிருந்து—நகாதே

கடிது வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டா நாள்.

(இ-ள்.) புகார்ப்பட்டின வேந்தன், பொன்னி நதியாற்றிரு வளர் நாடன், சோழன் - குடிப்பெயர். நகாதே - இகழப்படாமலே: எள்ளல்பற்றிய நகை. அங்கிருந்து நகாது-இங்கு வாராமல் அங்கிருத்த லான் நகப்படாதே என்க. கடிக்கோவலூர் என்றது "விந்தமேய கற்புடைய மடக்கன்னி காவல்பூண்ட கோவலூர்" என்பதுபற்றி. (22)

699. என்ன வெழுதுவித்தா ளின்ப மணவோலை
தென்னன் முதலோர்க்குச் சேரவிட்டா—ணன்னர்
மணத்துக் கெலாமும் வருவித்தாள் பெண்டிர்
கணத்துச் சிறந்தாள் கடிது.

(இ-ள்.) ஓலைவிடுத்த முறையிற் றென்னனை முதலாக்கியது முற்பட அவனினைவு தெரிதல் கருதியெனக் கொள்க. நன்னர் - நன்மை: "தொல்லைச் செய்த நன்னரு மறியேன்" (பெருங்கதை நரவாண. (5 - 7) என்ப. (23)

700. வேள்பாரி செய்யும் விழுச்சிறப்பு முற்றவுமே
நீள்பார நெளிய நிகழ்வித்தா—ளாள்பாரி
லின்பாரி முன்னு ளிழைத்தபே ரன்பினுக்குத்
தன்பா லியன்றவெலாந் தந்து.

(இ-ள்.) ஆள்பாரில் - பேரரசர் ஆள்கின்ற உலகில். நீள்பார் சிறப்புப் பொருள்களின் பொறையாற்றாது நெளியும் வண்ண நிகழ் வித்தாள். பாரி பிரியலாற்றாது விடைதராமலிழைத்த பேரன்பிற்கு என்க. அவ்வன்பே இவள் செய்ய இயலாமல் இயன்றவெலாந்தந்து நிகழ்வித்தாள் எ-று. நெளிய - "மலைமுதுகு நெளிய" (சிலப் - கால் கோள்) என வருதலான் அறிக. (24)

701. அதிகன் வழியெழினிக் கவ்வோலை போக்கி
நிதிய நிறைவித்தா ணீடு—கதுமெனச்
செய்வ வனைத்துந் திருந்தப் புரிவித்தாள்
தெய்வ மிழைப்பதெனச் சீர்த்து.

(இ-ள்.) அதிகன் இறத்தலான் அவன் வழி வந்தவனாகிய எழினிக்கு. எழினி அதிகன் தவ மகன் ஆவன். அவ்வோலை -

அக்கல்யாண வோலை. தெய்வமிழைப்பதென - தெய்வ முன்னின்று எதுவுஞ் செய்வது என்று சொல்லும் வண்ணம். "குடிசெய்வ லென்ற வொருவற்குத் தெய்வ, மடிதற்றுத் தான்முந் துறும்" (குறள் - 1023) என்றது காண்க. ஈண்டுத் தெய்வம் 'ஆயந்தா'வையே குறித்தல் 'மடிதற்று' என்பதனுன் அறியலாம். கதுமென்ன - விரைவாக. (பொருநராறு - 101.) (25)

702. தான்சேய் போருட்குத் தனிமாடம் வேண்டுவதாத்
தேன்சேய்தார்க் காரிக்குச் சேப்பினள்—வான்சேய்
யறஞ்சேய்தார்க் கேயோ வவனியின் மீது
மறஞ்சேய்தார்க் கேயோ வளம்.

(இ-ள்.) மறஞ்செய்தார் - பாவஞ் செய்தவர். வான் செய்யறம் - துறக்கத்தை உண்டுபண்ணும் தருமம். அவனியின்மீது என்பது இடைநிலை விளக்கு. வளம் - செல்வம். (26)

703. பாரி யிலாது படர்ந்தாலும் பாரிபுரி
காரியமா நல்லறமே காப்பதாற்—பாரி
யறத்தின்வே ருவனேன வார்சோல்வா ரஃதேத்
திறத்து மிவர்க்குறவாந் தேர்ந்து.

(இ-ள்.) காப்பது - காத்துச் செய்வது. பாரி - தருமமூர்த்தி எ-று. அஃது - அவ்வறம். எத்திறத்தும் - மூவேந்தர் பகைத்தழித்த நிலையினும். இவர்க்கு - இம்மகளிர்க்கு. உறவாம் - தந்தை முறையாகும்; பாரி அறமாதலான் அறம் இவர்க்குத் தந்தை முறையாதலுணர்க. (27)

704. உற்று ரோருகோடி யுற்றுலு மேளவையேனுங்
கற்று ளோருத்தியி ணை காணுவரோ—மற்றுரு
மில்லாக் குறையே யிலையாகப் பூரித்துப்
பல்லாற்றுஞ் சேய்தாள் பணி.

(இ-ள்.) "சொல்லுதல் வல்லான் நூறுயிரவருளொருவன்" (648 - குறளுரை மேற்கோள்) என்பதனுற் கற்றார் ஒருவர்க்குப் பிறர் எத்துணையோ டலர் ஒவ்வாமை காண்க. உற்றாரில்லாத குறை தீர்ந்து ஔவை என்னுங் கற்றாளொருத்தியானே நிரம்புதல் காட்டியபடி. இணை - ஒப்பு. மற்று ஆரும் - தாயுந்தந்தையும் கபிலனும். பூரித்து - நிறைவித்து. (28)

705. பெண்புறத்தார் செய்யும் பெரிய சிறப்பனைத்து
மண்புறத்தோர் காண வலம்வரச்செய்—துண்புறத்துத்
துப்புரவு முற்றுந் துகடீரத் தந்தமைத்தா
ளொப்புரவுக் கெல்லா முற.

(இ-ள்.) துப்புரவு - உணவுக்காவன. ஒப்புரவு - வரையாது வழங்குதல். உற - மிக. (29)

706. வதுவைநாள் போத மறமன்னர் கோவற்
பதிபுகா நின்றுரைப் பண்போ—டெதிரே
வணங்கி வரவேற்றான் மாமலைய னௌவை
யிணங்கிப் பரவ வினிது.

(இ-ள்.) வதுவைநாள் - மணவினை நாள். மறமன்னர் - வீர வேந்தர். பண்பு - பழமைபாராட்டுமியல்பு. பரவ - வாயாற் புகழ. (30)

707. மதவா ரணத்து வரிசையெலாந் தந்து
பதிகாண வில்லம் பரப்பி—வதுவைப்
பணியெல்லாந் தாமே பரிவோ டியற்றி
யணிசெய்தா ரம்மூவ ராங்கு.

(இ-ள்.) மதவாரணத்து - மதயானையின்மேல். பதிகாண - ஊரார் பார்க்க. வதுவைப்பணி - மணவினை: மணவறையணிசெய்தார். இல்லம்பரப்பி - கோயிலிடம்பட வைத்து. பரிவோடு - இரக்கத்துடன். (31)

708. தாயத்தார் செய்த தகாச்செயற்கு நோந்தமையித்
தேயத்தார்க் கெல்லாந் தெருட்டினராய்ச்—சேயோத்த
பாரி மகளிர் பரவுந் திருமணந்தங்
காரியமாச் செய்தார் கலந்து.

(இ-ள்.) சேயொத்தபாரி என்றது 'செருவெஞ்சேஎய்' என்பது பற்றி. எல்லாம் என்றது காரி முதலானோரையும் உளப்படுத்தி. பரவுந் திருமணம் - ஏத்துதற்குரிய திருத்தக்கமணம்;என்றது, கற்புடையாட்டியர் மணமாதலிற் பரவுதல் காட்டிற்று. கண்ணகி மணத்தற்கு முன்னரே இளங்கோவடிகள் "தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்று, மாதரார் தொழுதேத்த வயங்கிய" (மங்கல) தன்மை

கூறுதலானுணர்க. தங்காரியமா - தம்மகளிர் மணவினையாக. கலந்து - மூவரும் ஒருங்கு கூடி: தாயத்தார் போர்க்கு ஒருங்கு கூடியதினைக. (32)

709. இதனிடையி னிங்கே யிருஞால முற்றும்
வதுவையினிற் போந்து மடக்கு—மதனாற்
குறைந்தனபா னெய்யென்று கூறக்கேட் டௌவை
யறைந்தனளோர் பாட லவண்.

(இ-ள்.) பிறகுறையாது பாலு நெய்யுங் குறைந்தன என்றது, அற்றைப் பொழுதிற்கறப்பதனுனும் புதிதாக வெண்ணெயை உருக்குவதனுமென்று கொள்க. (33)

710. முத்திவரும் பெண்ணை முதுநீ ரோடுதவழ்ந்து
தத்திவரு நெய்பா றலைப்பெய்து—குத்திச்
செருமலைதெய் வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா.

(இ-ள்.) முத்து இவரும் "பெண்ணையீர்த்த நெடுவேய்கள் படு முத்தமுந்தவுந்தி" (திருநெடுந்தாண்டகம்) என்பதனுன் அறிக. முதுநீர்-யாறுண்டாகிய நாள்முதலுள்ள பழையநீர். தத்திவரும் - தாவி வரும்: 'தத்திப்புக' (பரிபாடல்); நெய்பால் ஒன்றையொன்று முந்து தற்கண் தாவி வரும் என்றார். நெய்யும் பாலும் தலையின் வைத்துக் கொண்டு; "ஔவை பாடலுக்கு நறுநெய்பால் பெருகி யருந்தமிழறி வினுற் சிறந்து... ...தெய்வமாநதி நீர்பரந்த நாடு" என்றார் வரந் தருவாரும். குத்திச்செருமலை தெய்வீகன் - வேலாற்குத்திப் போர் மலைகின்ற தெய்வீகன்: "தந்தையரொப்பர் மக்கள்" (தொல் - கற்பி) என்றதனுற் றெய்வீகன் கோவலூர் என்றார். நெய்யும் பாலும் கோவலூர் வரும் அளவிற்கொண்டு வந்து அப்பால் நீரோயோடுக என்றது காண்க. ஓடிவா என்றது விரைவுபற்றி, இதுபழம்பாடல். (34)

711. என்ற பொழுதத் திரும்பெண்ணை நன்னீர்வாய்ச்
சென்று குறைபடாத் தீம்பாலுந்—துன்றுநறு
நெய்யுஞ் சிறந்து நிறைகுடங்க ளெண்ணிலவா
யுய்யும் படிவந்த வூங்கு.

(இ-ள்.) நீரின் வருதலான் நீரிற்சென்று குறைபடாமை பாலுக்கும் நெய்க்கும் வேண்டிற்று. உண்ணும்படி - உண்பாரும்படி. ஊங்கு - உவ்விடத்து. (35)

712. பூதம் பணிகேட்பப் பொய்யாத வௌவையிவ
ணேதும் படிகண்டா ருள்வியந்தார்—மாதருளே
பாரறிந்த கற்றுடீம் பாடற் சுவைபெண்ணை
நீரறிந்து நல்க னினைந்து.

(இ-ள்.) ஐம்பெரும்பூதத்தின் ஒன்றாகிய நீர் ஏயபணிகேட்டுச் செய்ய; இங்ஙனம் பணிசெய்தற்கு ஏது, பொய்யாமை யென்று காட்டிய வாறு. பார் அறிந்த - உலகந்தெரிந்த. மாதருள்ளே கற்றாள் என்க. மாதருள் உலகறிந்தார் சிலரென்றும் அச்சிலருள்ளும் கற்றாள் இவ ளென்றுங்கொள்க. பெண்ணை நதி சுவையறிந்ததற்கிணையச் சுவை யுடைய பாலு நெய்யும் நல்கல் னினைந்து, கண்டார் உள்வியந்தார் என்க. (36)

713. பாடிய பெண்ணையும் பாடற் சுவைக்குதவ
நீடிய பெண்ணையு நின்றிசைத்துக்—கூடியவூ
ரீடில் சிறப்பெய்த வீண்டு மிருமகளிர்
பீடு புகழ்ந்தார் பெரிது.

(இ-ள்-) பாடிய பெண் - ஔவை. பெண்ணை - பெண்ணையாறு. இருமகளிர்-பாரிமகளிர் இருவர். மகளிர்பீடு-மகளிர் பெருமை.

714. இன்னவண மெல்லா மினிதாய்ப் பெருங்கோவன்
மன்னன் றிருக்கோயில் வாய்வளங்க—டுன்ன
மணஞ்செய் நலவேளை வந்ததா லென்றார்
கணஞ்செய் மறையோர் கணித்து.

(இ-ள்.) கணஞ்செய் மறையோர் - குழாங்கொண்ட வேதியர். கணித்து - கணக்கிட்டு. நல்வேளை - சுபமுகூர்த்தம். (38)

715. பாரி மகளிரோடு பார்மூவர் போதமுடிக்
காரி புதல்வருடன் காணவந்தா—ரொரு
மிருதிறத் தாரு மிருந்தார் மணஞ்செய்
திருவறையி னேராச் சிறந்து.

(இ-ள்.) மகளிர் பெருமை தெரியப் பேரரசர் மூவரும் அவரு டன் வருதல் கூறிற்று. முடிக்காரி - மலையமான்திருமுடிக்காரி. (39)

716. அந்தணரை யேத்தி யருந்தழலைக் கும்பிட்டுத்
தந்த பெரியோரைத் தாமிறைஞ்சிச்—சிந்தையிடைத்
தெய்வத்தைப் பேணித் திருமணையில் வீற்றிருந்தா
ருய்யத் திகழ்மகா ருங்கு.

(இ-ள்.) அருந்தழலை - அந்தணர் மந்திரவிதியினுக்கிய அரிய வேள்வித்தீயை: உய்யத்திகழ்மகார் - வாழ விளங்குமக்கள். (40)

717. மறையோன் விதிமுறையின் வஞ்சியார் வேந்த
னிறையார்ந்த வங்கவையை நேரே—முறையாய்ந்த
தெய்வீக னுக்குத் திகழநீர் பெய்தளித்துச்
செய்தான்கண் ணுலச் சிறப்பு.

(இ-ள்.) 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட' (சிலப். மங்கல) என்றது காண்க. வஞ்சியார் வேந்தன் - சேரன்; 'வஞ்சியார் கோமான்' என்பது சிலப்பதிகாரம். நீர் பெய்து - தாரைவார்த்து. முறை யாய்ந்த - நீதியை ஆராய்ந்தறிந்த. (41)

718. சோழ வளநாடன் றேல்லுறையூர் மன்னர்பிரா
னேழுலகு மேத்து மிசைப்பாரி—வாழ்மகளாஞ்
சங்கவையைத் தம்பிக்குத் தானநீர் பெய்தளித்துப்
பொங்குஞ் சிறப்பெடுத்தான் போந்து.

(இ-ள்.) தானநீர் பெய்தளித்து - தானமாகத் தாரை வார்த்துக் கொடுத்து. தம்பிக்கு - தெய்வீகன்றம்பியாகிய திருக்கண்ணற்கு. ஏழுலகு மேத்துதல், "அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர், கொடுத்தா ரெனப்படுஞ் சொல்" (நாலடி - ஈகை. 10) என்பதனுற் கூறிற்று. (42)

719. வையைக்கோன் றேன்னன் மதுரை வளநாட
னைய லிருவர்க்குந் தான்கோணர்ந்த—மோய்வளங்க
ளேல்லாஞ் சிறக்க வெடுத்து வழங்கினனுற்
பல்லோரு மேத்தப் பரிந்து.

(இ-ள்.) மதுரை வளநாடன் - மதுரையைத் தலைநகராகக் கொண்ட வளநாடுடையான். "புகாஅர் நன்னாட்டதுவே" (அகம் - 181) என்புழிப்புகார் நாடு என்றாற்போலக் கொள்க. மொய் வளங்கள் - நெருங்கிய செல்வம். பரிந்து - இரங்கி. ஔவை வேண்டியவாறு தான் கொணர்ந்த வளங்கள் என்று வினைக. (43)

720. வேதிய ருய்த்த விதிவழியிற் பாரிதரு
கோதையர்கை யுள்ளங் கோளப்பிடித்தா—ராதித்
திருப்பூட்டிச் செந்தழலைச் சேவித்தார் காரி
விருப்பூட் டியமக்கள் வேட்டு.

(இ-ள்.) கோதையரை உள்ளங்கொள்ளாசிற்கக் கைப்பிடித்தார் என்க. ஆதித்திரு - முதன்மையாகிய திருமகள் வடிவமைந்த மங்கலவணி. "மங்கலக்கழுத்துக்கெல்லாந்தானணி" என்றார் கம்பநாடர். மணவினைக்குச் சான்றாகிய தழற்செல்வனை வேட்டு வணங்கினர். வேட்டு - ஆகுதி நெய் பெய்து. (44)

721. அம்மி மிதிப்பித் தருந்ததியை நேர்காட்டிச்
செம்மைத் தழலைத் திருவலம்வந்—திம்மைக்
கிருதலைப் புள்ளோப்ப வீருயிரோன் றாகேன்
றேருகடவுட் போற்றினா ருங்கு.

(இ-ள்.) அம்மிக்கல்லை மிதிக்கச் செய்து, வானத்து அருந்ததியென்னுந் தெய்வக்கற்புடையாட்டியை நேரே காண்பித்து. நேர் காட்டி - ஒப்புக்காட்டி எனினுமமையும். ஒருடம்பின் இரண்டு தலைகளையுடையதோர் பறவைக்கு, அவ்விரு தலையிலும் உயிரொன்றாதல் போலத், தம்முயிரும் ஒன்றாக என்று வேண்டி, ஒப்பற்றகடவுளை மனமொழி மெய்களாற் போற்றினர் என்க. "ஒருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க், கீருயி ரென்ப ரிடைதெரியார்" (புறப். வெ. 10 - 9) என்றது காண்க. "பிரிவின் றியைந்த துவரா நட்பி,னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே" (அகம் - 12) என்றது காண்க. (45)

722. அந்தண ராசி யறைந்தா ரரசரோடு
வந்த பெரும்புலவர் வாழ்த்தேடுத்தார்—கந்தமலர்
மாரி பொழிந்து மகிழ்ந்தார் விசும்பிமையோர்
பாரி மகார்வதுவை பார்த்து.

(இ-ள்.) ஆசி - ஆசீர்வாதம். விசும்பு இமையோர் - வானுலகத்துள்ள இமையாதகண்ணர். கந்தமலர் - மணமலர். பாரி மகார் வதுவை - பாரிமகளிர் கல்யாணம். (46)

723. காரி மகாரோடு காரிகையார் வாழ்மணத்திற்
சேர வறுகிட்டார் தேர்வேந்தர்—பாரிக்குத்
தாயத்தார் செய்தபிழை தம்பா லணுகாது
நேயத்தா லெல்லா நிரைத்து.

(இ-ள்.) காரி மகாரோடு காரிகையார் வாழ்தற்குரிய மணத்து என்க. அறுகிடுதல் - ஒருமணவினை. தலைவன் தலைவியரை, மூத்த உறவினர் அறுகும் மஞ்சளரிசியுங் கொண்டு "ஆல்போற்றழைத்து அறுகுபோல் வேரோடி, மூங்கில்போற் பின்னி முசியாமல் வாழ்ந்திடுவீர்" என்று வாழ்த்தித் தூவுவது ஆகும். நிரைத்து - வரிசைப்படவைத்து. "அறுகெடுப்பாரயனுமரியும்" (பொற்சுண்ணம் - 5) என்பது ஆளுடையவடிகள் திருவாக்கு. (47)

724. பாரி யுளனேற் பனிமொழியார் நன்மணநாண்
மாரி யெனப்பொன் வரையாது—நேர்பொழிவ
னன்று னறங்கொண் டவனேப்ப வீவலெனச்
சொன்னனல் லௌவை துணிந்து

(இ-ள்.) பாரி அறந்துணையாக் கொள்ளுதலாற்றுணிந்து சொன்னாள் என்க. (48)

725. கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீ ரதுதவிர்ந்து
பொன்மாரி யாகப் பொழி.

(இ-ள்.) இது பழம்பாடல். வருணன் - மழைக்கடவுள். "மழைக்கண்ணல்" என்ப. கோவற்குப் பெருமைதரு மணமாதலாற் கோவற்பெருமண என்க. அரசன்கோயின் மணமாதலான் அஃது ஊர்க்குப் பொதுவாய மணம் எனினுமமையும். சிலப்பதிகாரத்து "மாநகர்க்கீந்தார் மணம்" (மங்கல) என்றது காண்க. நன்மாரி - நன்மேகம்; பொன்மாரி - பொன்மழை; "காஞ்சனம்பொழி காஞ்சியதன்கணே" எனச்செயங்கொண்டார் பாடுதலானும் இவ்வரிய நிகழ்ச்சி யுணர்க.

726. என்ற வளவி னிருவிசும்பின் மேனின்று
பொன்றுகளே யெங்கும் பொழிதரக்கண்—டன்று
வியந்தார் வறிஞரெலாம் வேணவாத் தீர
நயந்தார் சுமந்தார் நனி.

(இ-ள்) பொன்றுகள் - பொற்பொடி. நயந்து நனிசுமந்தார். அவாத் தீர்தல் கூறவே வறுமை தீர்தல் கூறவேண்டாதாயிற்று. (50)

727. தெய்வ மணவோலை தீட்டப் பெரும்பெண்ணை
நெய்யு நறும்பாலு நேருதவ—மெய்யாகப்
பொன்வான் பொழியப் புகன்ற தமிழ்ப்பேரியாட்
கென்னும் புகழ்வதென்று ரீங்கு.

(இ-ள்) தெய்வம் - விநாயகக் கடவுள். தீட்ட - எழுத. பெரும் பெண்ணை - பெரிய பெண்ணையாறு. தமிழ்ப் பெரியாள் - தமிழாற் செயற்கரிய செய்வாள். (51)

728. உள்ளம் வியந்த வொருமூவர் பந்தர்க்கீழ்த்
தள்ளும் பனந்துண்டந் தாங்கண்டு—தெள்ளியீர்க்
கீதுங் கனிதருமோ வென்று ரதுகேட்டங்
கோதின ளௌவைகவி யொன்று.

(இ-ள்.) தெள்ளியீர்க்கு - தெள்ளறிவுடையநும்பொருட்டு. ஈதும் - உம்மை இழிபு குறித்தது. ஒதியகவி

திங்கட் குலத்துச் செழியனுஞ் சோழனுஞ் சேரனுமே
மங்கைக் கறுகிட வந்துநின் றூர்மணப் பந்தரிலே
சங்கோக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கோங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தரல் வேண்டும் பனந்
[துண்டமே.

என்பது. இது பழம்பாடல். வாராத பேரரசர் மூவரும் மணப் பந்தரில் வந்து மணமங்கைக்கு அறுகிட னின்றார்; இவர் செய்தது தெய்வசம்மத மென்பது தெரியப் பனந்துண்டமாகிய நீஇம்மூவர்க்கும் ஒத்த பங்காக மூன்று பழந்தரல்வேண்டும் (எ-று). 'கொங்கு மலை

நாடென்பது தெரியக் குறத்தியைக் கூறினர். "நெடுவெற்பகங் கொங்கின் வீழ்பனிநோய்" என்றார் நம்பியாண்டார் நம்பியாரும் (திருத்தொண்டர் திருவந்தாதி). "முகஞ்செய்த குரும்பையென ..............பெருத்த வின்னிளமுலை" என்பது குறிஞ்சிக்கலி (56). வேண்டும் என்பது உம்மீற்றான் வந்ததோர் எதல்கண்ணிய வியங்கோள்: (சிந். 201). (52)

729. என்று மொழிசெய்ய வீர்ந்த பனந்துண்டஞ்
சென்று சிறுகுருத்துச் சேரவிட்டு—நன்று
குரும்பையாய்க் காயாய்க் கொழுங்கனியா யங்கே
விரும்பியவா றீன்றதெழ விட்டு.

(இ-ள்.) ஈர்ந்த பனந்துண்டம் எழவிட்டு - ஈர்வாள் துணித்த பனந்துண்டம் சிறுத்தப்பட்டவளவில்; விரும்பியவாறு ஈன்றது என்க. துண்டஞ் சென்று - துண்டம் வளர்ந்து. சிறு குருத்து - இளங் குருத்து. (53)

730. ஔவை படைத்த வரிய விருத்தியினைச்
செவ்வி தறிந்தார் திறன்மன்ன—ரிவ்வாறு
சீரிய கோவல் சிறந்ததிசை வேள்பாரி
நாரியர்கண் ணுலத்தா னன்கு.

(இ-ள்.) அரிய இருத்தி - அரிய சித்திப்பேறு. செவ்விது - செம்மைத்தாக. கூழைப் பலாத் தழைக்கப் பாடியதனல் ஔவை இருத்திவலியறியலாம். * (54)

731. தெய்வ மணமென்று தேற வேலாம்புரிந்த
வெளவை யறிவாட்டி யாங்குள்ள—வெவ்வேவரு

* "கூழைப் பலாத்தழைக்கப் பாடிக் குறச்சிறார்
மூழக் குழக்குத் தினைதந்தார்—சோழாகேள்
உப்பிற்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
யொப்பிக்கு மென்ற னுளம்" என்பதும்

"கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
வோரிலையாய்க் கொம்பா யுயர்மரமாய்ச்—சீரிய
வண்டுபோற் கொட்டை வளர்காயாய்ப் பின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் புனி." என்பதும் காண்க(தமிழ் நாவலர் சரிதை.)

நாற்பொருளு மீதென்று நாடி யுளந்தெளியப்
பாற்படவைத் தோதினுள் பாட்டு.

(இ-ள்.) தெய்வமணம் - தெய்வம் புணர்த்த வதுவை. நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு. பாற்பட - பாகுபட (55)

732. ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருப்பட்—டாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

(இ-ள்.) இது பழம்பாடல். எஞ்ஞான்றும் என்பதை நான்கிற்குங் கூட்டிக்கொள்க. எஞ்ஞான்றும் அறம் ஈதற்கண்ணது, பொருள் எஞ்ஞான்றுந் தீவினைவிட்டு ஈட்டற்கண்ணது. எஞ்ஞான்றுங் காதலையுடைய தலைவனுந் தலைவியும், உள்ளம் ஒரு தன்மைப்பட்டு அன்புபட் டொழுகற்கண்ணது காமம். எஞ்ஞான்றும் பரனை நினைதலான் இம்மூன்றும் நிலையாமல் ஒழிதற்கண்ணது பேரானந்தவீடு எ-று. இன்பம் காமம் என்பதாதல் "இணைவே லுண்க ணந்தையு மின்பக் கொடியொத்தாள்" (சிந். நாமகள். 365) என்புழிக் காமவல்லியை இன்பக்கொடியெனக் கூறுதலான் உணரலாம். அறம்விடுதல் - அறத்தால் வரும் போகமாகிய பயனை விடுதல் என்ப. பேரின்ப வீடு என்றதனுற் முங் கூறிய வின்பம் சிற்றின்பம் என்றலும் ஆம். எ. இரண்டும் தேற்றம். (56)

733. எனவோது மேளவை யிணையடியைத் தொட்டு
மனையோ டிறைஞ்சுமண மக்க—ணினைவெய்த
வோரின் கவியா னுணர்த்தி வழுத்தினு
ணாரியரை யுள்ள நயந்து.

(இ-ள்.) மனையோடு வணங்குதலான் இங்ஙனம் வாழ்த்தினுள் என்று கருதுக. நினைவு எய்த - மறவாது நினைக்க. வரும்பாட்டில் 'இன்றுபோலிரும்' என்றது உணர்த்தியதாகவும் 'என்று மிரும்' என்றது வழுத்தியதாகவுங் கொள்க. ஓரின்கவி - ஒப்பற்ற இனிய பாடல். நாரியரை - பாரி மகளிரை. உள்ள நயந்து - மகளிரை உள்ளத்து விரும்பி. (57)

734. ஆயன் பதியி லரன்பதிவந் துற்றளக
மாயனு துங்கருவி யானலு—நேயமொடு
குன்றுபோல் வீறுங் குவிமுலையார் தம்முடனே
யின்றுபோ லென்று மிரும்.

(இ-ள்.) இது பழம்பாடல். ஆயன்பதி - ஆய்க்குடியில் வளர்ந்த திருமால் பள்ளிகொண்ட ஆலிலை; ஈண்டு அஃதொத்த வயிற்றிற்கு ஆயது. அரன்பதி - சிவபிரான் இடங்கிய கைலைமலை; ஈண்டு அஃதொத்த முலைக்காயது; முலை வயிற்றின் வீழினும் என்பது கருத்து. அளகம் - முன்னுச்சி மயிர். ஆயன் ஊதுங் கருவி - சங்கம்; சங்கு போல் நரைத்தாலும் இன்றுபோல் என்றும் நேயமொடு இரும் எ-று. குன்றுபோல் வீறுங் குவி முலையார் என்றது, இன்று நேயஞ் செய்தற்கு ஏதுவுண்மை குறித்தவாறு. "அண்ணாந் தேந்திய வனமுலை தளரினு.........நரையொடு முடிப்பினு, நீத்தலோம்புமதி" என்ற நற்றிணை (10) கினைக. இன்றுபோல் எல்லாரும் வாழ்த்தெடுப்ப இரும் என்க. இரும் என்பது முன்னிலைப் பன்மையின் வருதல் "பழுதில் காட்சியீர் நீயிருந்தொழும்" (மணி - மந்திரம் - 70) என்னு மணிமேகலையுட்போலக் கொள்க. என்றுமிரும் என்றதனுலிம்மகளிர் நித்திய சுமங்கலைகளாதல் குறித்தார். நேயமொடு இரும் என்றதனுல் இவர் இன்பவாழ்வு குறித்தார். (58)

735. என்றிசைக்கக் கேட்டா ரிரும்பே ரரசவையோர்
நன்றிசைக்கு மந்தணர்பன் னூவலவர்—சேன்
[றிசைத்த
வாழி யோலிமுழங்கி வான மேதிர்முழங்க
வேழுலகுங் கேட்ட திசை.

(இ-ள்.) நன்றிசைக்குமந்தணர் - உலகிற்கு நல்லது இஃதென்று சொல்லும் அந்தணர். நன்றிசைத்தல் நாவலர்க்குங் கொள்க. (59)

736. பண்டா மறிவருளிற் பாரி தருமகளிர்
கோண்டார்க் கினிமை கோளவியன்றார்—கண்டார்
மனையுறையுந் தேய்வங்கோன் மற்றிவ ரேன்று
நினையும் வணநிறையு ணின்று.

(இ-ள்.) கொண்டார் - தலைவர். மனையுறையுந் தெய்வம்- இல்லுறை கடவுள். நிறையுள் நின்று கொண்டார்க்கு அறிவாலும் அருளாலும் இனிமைசெள ஒழுகினர் எ-று. இதனை "அஞ்சவந்த வுரிமைக்கண்ணும்" என்னுங் கற்பியலடிக்கு நச்சினர்க்கினியருரை நோக்கியுணர்க. பண்டு ஆம் அறிவு அருளின்-தொன்மையேஉயிரோடுண்டாம் அறிவாலும் அருளாலும்; அறிவு, அருள், நிறை மூன்றும் மகளிர்க்கு வேண்டுதல் "உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால் நாணுடையாள் பெற்ற நலம்" என்னு நாலடிப்பாட்டான் உணர்க. (60)

737. காரி யுவந்தேளவை கான்மேல் வணங்கிநிற்கப்
பாரி லுனதறமே பாலிக்க—நாரியர்க்கு
மாமனீ யுன்னன் மகளிர்போ லன்புசெய்து
சேமமோடு வாழ்கென்றாள் சீர்த்து.

(இ-ள்.) உனது அறமே பாலிக்கச் சேமமொடு வாழ்க என்று சொன்க. உன் நன்மகளிர்போலன்பு செய்து வாழ்க என்றது, மகளிர்க்கு வேறு தந்தை தாயரில்லாத தன்மை நினைவித்ததாம். சேமம் - காப்பு. மாமன் நீ என்றது, முறைமையால் நீ மாமன் ஆவை எ-று. (61)

738. கற்ற முதுக்குறைவி காண முடிவேந்த
ருற்று நெருங்களவி லுங்கவர்க்குச்—சிற்றரசர்
சீர்பெருக நீவிர் திருந்துகோ லோச்சினுங்கள்
பார்பெருகு மென்றாள் பரிந்து.

(இ-ள்.) முதுக்குறைவி - அறிவாட்டி: இயல்பாகிய அறிவின் மேலுங் கற்றவள் ஆதலின் கற்ற முதுக்குறைவி எனலாயிற்று: சிற்றரசர் சீர்பெருகக் கோலோச்சின் என்றது, முன்னம் அங்ஙனஞ் செய்யாமை நினைவித்ததாம். பரிந்து - இரங்கி. (62)

739. ஒன்று புரிந்தடங்கி யோங்கு மிருபிறப்போர்
நன்றுபுரி முத்தீயி னுடாள்வீர்—என்றும்
அறமே யுடன்வரூஉ மாழ்பவமுங் நீர்க்குப்
புறம்வே றிலையாற் புணை.

(இ-ள்.) ஒன்று - உயிர்; "உருவ்மெரி கார்மேனி யொன்று" (இயற்பா—1-5) என்ப. ஒன்று புரிந்து - உயிரை விரும்பி. அடங்கி - மனமடங்கி. ஓங்கும் இரு பிறப்போர் - இவற்றுலெல்லாரினும் மேம்படும் இருபிறப்பினையுடைய அந்தணர். நன்று இயற்றிய மூன்று வேள்வித்தீயை ஒத்து, நாடு பகுத்தாளும் வேந்திர் என்க. மழைவளந் தரும் வேள்வித்தீயொடு உவமித்து இவர் தூய மேம்பட்ட பெரு நிலையை நினைவூட்டினர். ஆழ்பவ மூந்நீர்க்கு - ஆழ்த்தும் பிறவிக்கடற்கு. புணைபுறத்தின் வேறில்லை அறமே புணையாயுடன் வரும் என்க. இது "வாழச் செய்த நல்வினை யல்ல தாழுங் காலைப்-புணைபிறி தில்லை, யொன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர், முத்தீப் புரையக் காண்டக விருந்த, கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்" (367) என்னும் புறப்பாட்டைத் தழீயது (63)

740. பாரி மகளிரைப்போய்ப் பார்த்தா ளவர்தம்மை
வாரி யெடுத்தணைத்தாண் மார்போடு—சீரியீர்
நுங்கண் மனம்போல நும்வாழ்வு பொங்குகென
வங்கண் மொழிந்தா ளவர்க்கு.

(இ-ள்.) போய்ப் பார்த்தாள் என்றது, மகளிர் மணந்த பின்னர்த் தலைவருடன் அருங்கடிவரைப்பிற் சென்றிருத்தல் குறித்தது. 'மனம்போல வாழ்வு' என்பது முதுமொழி. (64)

741. மணவாளப் பிள்ளைகளை மற்றேளவை நோக்கிக்
குணவாள ராயின்பங் கூர்வீ—ரிணையின்
றடையா நெடுங்கதவு மஞ்சலென்ற கையு
முடையீராய் வாழ்கென்று ளோர்ந்து.

(இ-ள்.) அடையா நெடுங்கதவாற் கொடையும், அஞ்சலென்ற கையால் அருளும் வீரமும் குறித்தார். குணவாளர் - குணத்திற்கு ஆட்பட்டவர். பிள்ளைகள் - மக்கள். (65)

742. கற்ற திருமகளிர் காதலிமா ராமாறு
பெற்ற வரியபெரும் பேறுள்ளீர்—முற்றவுமைக்
கற்றூர் சுலவக் கரைகாணாப் பல்வளனும்
வற்றாது வாழ்க மகிழ்ந்து.

(இ-ள்.) கற்ற மகளிர், திருமகளிர் என்க. கற்றலை முற்கூறியது, உடம்போடு கழியுந் திருப்போலாது உயிருடன் சேறலான். கற்றூர் சுலவ - கல்வி வல்லவர் சூழ்ந்திருக்க. பல்வளன் - பல்வகைச் செல்வமாகிய கடல். அரிய பெரும்பேறு - முடிவேந்தர்க்கும் அரியதாய பெருமைப் பேறு. (66)

743. ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்றன் வீரமே வீரமா—மென்றானுஞ்
சாவாமைக் கற்பதே கல்வி தனைப்பிற
ரேவாம லுண்பதே யூண்.

(இ-ள்.) இதுபழம்பாடல். ஒன்றாகக் காண்பதே காட்சி - உயிர்க்கு ஆக்கம் உண்டாகத் தெரிவதே ஞானம். உடற்கும் பொருளுக்கும் ஆக்கங் காண்பது உயர்ந்த ஞானமாகாது என்பது கருத்து. புலன் ஐந்து - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; இவற்றிற் செல்லும் உள்ளத்தை வென்றவன் வீரமே சிறந்த தறுகண்மையாம். எக்காலத்தும் சாவாமைப்பொருட்டுக் கற்பதே உயர்ந்த கல்வி. தனைப் பிறரேவாமல்

என்றது, தான் பிறரான் ஏவப் பெறுமல் எ-று. கூலியுணவாகாமற் றூனே முயன்றீட்டிய வுணவினைக் குறிப்பது. சாவாமைக் கற்பது - புகழ் இறவாமைப் பொருட்டுக் கற்றல் என்றலுமுண்டு. "மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப், பெண்ணினுட் கற்புடையாட் பெற்றானு - முண்ணுநீர்க், கூவல் குறைவின்றித் தொட்டானு மிம்மூவர், சாவா வுடம்பெய்தி னோர்" என்பது திரிகடுகம். "ஈந்தவரல்ல திருந்தவர்யாரோ" என்றார் கம்பநாடரும். (67)

744. அன்பெனனும் வெள்ள மகத்துண்டா யோடுவதை
மன்பதைகள் வாழ வழிப்பாய்த்தி—யின்புருவாய்க்
காக்குங் கருணைக் கடலிற் புகவிடலே
யார்க்கும்யாஞ் சொல்லு மறம்.

(இ-ள்.) "அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க், கென் போ டியைந்த தொடர்பு" (குறள் - 73) என்பதுபற்றி, அன்பு வெள்ளம் அகத்துண்டு என்றதாம்: வரம்பு கடந்தும் செல்வதாதலின் வெள்ளம் எனப்பட்டது. மன்பதைகள் - உயிர்த்தொகைகள். வாழ வழிப்பாய்த்தி - வாழும்வண்ணம் வழியிற் பாயச் செய்து. இன்பு உருவாய் - ஆநந்த ரூபியாய். காக்குங் கருணைக்கடலில் - எவ்வுயிர்க்கும் போகமும் வீடும் தந்து காக்கும் அருட்கடலாகிய இறைவன் கண். புகவிடலே - புக்கொடுங்கவிடுதலே. யார்க்கும் - எல்லார்க்கும். யாம் சொல்லும் அறவுரை எ-று. ஒவ்வோருயிரும் தன்னைத்த பிற வுயிரிடையும் உயிர்களைப்படைத்த கடவுளிடையும் அன்பு செய்க என்பது கருத்து: உயிரை வருத்திக் கடவுளிடன் அன்பு செய்தலும் கடவுளை யொழித்து உயிரிடை அன்பு செய்தலும் அறமாகாதென்று காட்டியவாறு. (68)

745. எவ்வெவ் வுலகத்தில் யார்யார்க்கு மொத்தவற
மௌவை திருவா யவிழ்த்துள்ள—செவ்வியினிற்
பாரி மகளிரவள் பாதம் பணிந்துகண்கள்
வாரி சொரியவிள்வார் மற்று.

(இ-ள்.) எவ்வெவ்வுலகத்தில் - எந்த எந்த நாட்டிலும். யார் யார்க்கும் - எல்லாமக்கட்கும். ஒத்தஅறம் - இயற்றற்கொத்த தருமத்தை. செவ்வி - அமயம். கண்கள் வாரி சொரிய - விழிகள் மகிழ்நீர் பொழிய. (69)

746. தந்தையாய்த் தாயாய்த் தனித்தெய்வ மாகியெம்முன்
வந்து பெருவாழ்வின் வைத்தீரா—னுந்தம்மைச்

சிந்தையிடை வைப்பதலாற் செய்யுங்கைம் மாறுதா
னேந்தவுல கத்து மிலே.

(இ-ள்.) எம்முன் வந்திலென்றது, தந்தையும் தாயும் தெய்வமும் இப்போது முன்வராமை குறித்தது. சிறு நிலையிருந்த எம்மைப் பெரிய வாழ்வின் வைத்தீர் என்க. தந்தையையும் தாயையும் தெய்வத்தையும் நினைவதல்லது, வேறு அவர்க்கு மக்கள் செய்யுங் கைம்மாறின்மை காண்க. (70)

747. என்று மகளி ரிசைத்த பொழுதௌவை
ஒன்று மறிவோ டுயர்குடிக்கோத்—தின்றுரைத்தீர்
தூண்டா விளக்கனையீர் தோமின்றி வாழ்விரென
மீண்டா டகரூர் விரைந்து.

(இ-ள்.) உயர்குடி உயர்ந்தகுலம்; "நலத்தின்க ணாரின்மை தோன்றினவனைக் குலத்தின்க ணையப் படும்" (குறள் - 958) என்பதனல் உயர்குலனும் இழிகுலனும் உண்மையுணர்க. "காட்டுங் குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்" (ஷை, 959) என்பதும் நினைக. இவர் மனைக்கு விளக்காயினமை தோன்றத் தூண்டா விளக்கனையீர் என்றாள். "குற்றமேகாக்க பொருளா" (ஷை, 434) என்றதுபற்றித் தோமின்றி வாழ்விரென்றாள். தோம் - காமம் முதலிய அறுவகைக் குற்றம். தகடூர் - அதியன் ஊர். இம்மகளிர் மணவினையே காரியமென்பது தெரிய அதன் முடிவில் விரைந்து மீண்டாள் எ-று. (71)

748. அங்கவையா ருள்ளத் தணியா சனமமர்ந்து
தங்குந் திருக்கோவ ருன்புரந்தான்—றுங்கப்
பொருவிறெய் வீகன் புலவோர்க்கு நல்கித்
திருவும் புகழுஞ் சிறந்து.

(இ-ள்.) "தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே, காமத்துக் காழில் கனி." (குறள். 1191) என்பதனல் உள்ளத் தணியாசனமமர்ந்து எனப்பட்டது. அரியாசனத்தமர்வார்க்கும் இஃதோரருண்மைத்தென்க. துங்கத் தெய்வீகன் என்க. (72)

749. சங்கவையா ருள்ளத்திற் றங்கித் திருக்கண்ணன்
பொங்கியசீர் முள்ளூர்ப் பொருப்பளித்தான்—
றுங்கவளச்
சோழர் துணையாகிச் சோழியவே ஞதியென
வாழ்புலவர் வாழ்த்த மகிழ்ந்து.

(இ-ள்.) சோழிய ஏனாதி - சோழிய ஸேநாதி: ஸேநாபதி - படைமுதலி; இஃது ஏனாதியெனச் சிதைந்துவந்தது ; ஸமயம்

அமயம் என்றூதல் போன்றது: இவன் முள்ளூர் மலையுடையனுதல் 174-ஆம் புறப்பாட்டான் அறிக. (73)

750. ஏரார்தாய் மாம னிருஞ்சேடன் ருள்பரவிச்
சீரா கவகவி சேகரன்ரு—ஞராத
காதலான் வண்டமிழர் கற்றுவப்பான் பாடினுன்
கோதிலாப் பாரி கோடை.

(இ-ள்.) மகட்கொடுத்த மாமனின் வேறு தெரியத் தாய் மாமன் என்றதாம். இருஞ்சேடன் - பெருமையையுடைய சேட நாமன். தாள் பரவி - திருவடிகளை வழுத்தி. கோதிலாப் பாரி கொடைக்கணுள்ள ஆராத காதலால், அக்கொடையை, வண்மையை யுடைய தமிழ் மக்கள் கற்று மகிழற்பொருட்டுப் பாடினுன் எ-று. சீராகவன் இயற்பெயர்; கவிசேகரன் சிறப்புப் பெயர்; இயற்பெயருஞ் சிறப்புப் பெயரும் இயைந்து தொகைச்சொல்லாயினமையால் "சிறப் பினுகிய பெயர்நிலைக் கிளவிக்கு, மியற்பெயர்க் கிளவி முற்படக் கிள வார்" (தொல் - சொல். 41). என்னுஞ் சூத்திரத்தோடு மாறு படாமை சேனுவரையர் உரைநோக்கிக் கண்டுகொள்க. தாள் பரவிப் பாடினுன் - ஆசிரியன் அடியை ஏத்திப் பாடி முடித்தான்; தன்னைப் பிறன்போலக் கூறியவாறு. நூல் முடிவிடத்தும் பரவல் "முக்குடை யான் ருளிணையென் றலைவைத்தேனே" (சங்-முத். 544) எனத் திருத்தக்க தேவர் கூறிய நெறியைத் தழீஇயது. (74)

751. சேது பதியுந் திருந்தரசண் ணுமலையும்
ஆதி யவன்கலையோங் காலயமு—மூதுலகி
னீடூழி வாழ நினைந்துதமிழ்த் தாய்க்கணிந்தேன்
நாடூர்கோள் பாரிகோடை நன்கு.

(இ-ள்) சேதுபதி - தன்ம சேது காவலர். இவர் தமிழ் வளர்த் தவரும் இந்நூலாசிரியனை நெடிது பல்லாண்டு புரந்தவருமாவர். அண்ணுமலையார் தமிழ்நாட்டுச் சருவகலா நிலையம் நிறுவியவரும் இவ் வாசிரியனைப் புரப்பவருமாவர். கலையோங்கு ஆலயம் - ஓங்குங் கலா லயம். அவன் கலாலயம் - அண்ணுமலை விசய வித்தியாலயம் எ-று. ஆதியவன் - முதன்மையையுடைய அண்ணுமலையார். நாடு ஊர்கொள் பாரிகொடை - நாடும் நகருமும் போற்றிக்கொள்ளுதற்குரிய பாரி கொடை மாலையை, தமிழ்த்தாய்க்கு நன்கணிந்தேன் என்க. தமிழ்த் தாய்க்கு அணிதலாய இது நாடும் ஊரும் விரும்பிக்கொள்ளற்குரிய திப்பியமாதல் குறித்தது. (75)

752. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மேன்பதுதான்
பல்வித்த கத்தும் பகுத்துணர்ந்து—வெல்விற்கைப்

பாரிகோடைக் காதை பரிந்து மகிழ்ந்தேற்றான்
மாரிநிக ரண்ணா மலை.

(இ-ள்) "செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்" (குறள் 411.) என்ப. பல்வித்தகத்தும் - பலசதுரப்பாட்டானும். பகுத்துணர்ந்து. பாகுபட வைத்து ஆராய்ந்து. வெல்விற்கை கூறியது பகைவர் ஓடு கழற் கம்பலை காண்டல் பற்றி. கொடைக்காதை என்றது தன்னையும் வழங்கிய பாரிகாதையாதல் குறித்தது. பரிந்து - மகிழ்ந்து, இரங்கி இன்புற்று; இந் நூல் இரக்கமும் உவகையுமே மிகச் செய்தல் காண்க. கொடைக்காதை ஏற்றுக் கொள்ளுதற்கு ஏது மழைபோல அளிப்ப வன் ஆதலால் என்பது குறித்து மாரி நிகரண்ணாமலையென வந்தது. கொடைவீரவெண்பாமாலையாதலானும், தமிழ்த்தாய்க்கணிந்த திப்பிய மாதலானும் ஏற்றான் என்க. (76)

753. ஆளுடைய நம்பி யருமைபா ராட்டுகோடை
வேளுடைய மெய்ச்சீர் மிளிர்காதை—நீளரசார்
அண்ணா மலைக்குரிமை யாக்கினனவ் வள்ளியோன்
கண்ணார் கலைக்கழகக் கண்.

(இ-ள்.) ஆளுடைய நம்பி சுந்தரமூர்த்தி நாயனார்க்குப் பெரியோர் வழங்குந் திருப்பெயர். அவர் அருமை பாராட்டு கொடைவேள் என்றது, "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று திருப்பாட்டருளியது பற்றி. மக்களைப்பாடாது எந்தை புகலூர் பாடுமின் என்று புலவர்க்கு வற்புறுத்த பதிகத்து, இவ்வள்ளலருமையைத் தனியே யெடுத்துக் காட்டிய சிறப்பு நினையத் தகும். அவர் பாராட்டிய சிறப்பான் மெய்ச்சீராதல் துணிந்தது. எ-று. மெய்ச்சீர் மிளிர்காதை - சத்தியகீர்த்தி விளங்குஞ் சரிதம். நீள் அரசு ஆர் அண்ணாமலைக்கு - தன் குலத்தின் வழி வழியாக நீளுதற்குரிய அரசுத்திருநிறைபும் அண்ணாமலையென்னும் பெயர் பூண்டாற்கு. அவ்வள்ளியோன் கண் ஆர் கலைக்கழகக்கண் - அவ்வள்ளல் கண்ணாக நிரம்பும் பல்கலைக் கழகத்திடத்து. நீளரசார் அண்ணாமலைக்கு உரிமை யாக்கினன் என்க. உரிமையாக்குதற்கு ஏது, இத்தமிழ் நாடு வாழப் பல்கலைக் கழகம் நிலைபெறுவித்து அதனைக் கண்போற் போற்றிப் புரக்கும் அவன் வள்ளன்மையே யென்பது உடம்பொடு புணர்த்திக் கொள்ள வைத்தவாறும். (77)

மகளிர் திருமணத்திறம் முற்றிற்று.

இத்திறத்திற் செய்யுள் (77)

பாரி காதை பொருட்குறிப்புடன் நிறை வேறியது.

# பொருட்குறிப் பகராதி

(எண். பக்க எண்)

அகடேர்பசிப்பகை—வயிற்றை யூர்ந்துகொள்ளும் பசியாகிய பகை 157
அகனமர்தல் 67
அகிச்சத்திரநாடு 86
அங்கணம் 143
அங்கவை, பெயர் 111
அங்கவை, சங்கவை 270
அசதிக்கோவை 196
அசும்பு—தேன்கசிவு 298
அசைதல்—அலைதல் 160
அசைவு—வருத்தம் 260
அஞ்சி—பெயர் 6
அட்டமிமதியம் குளத்தின் வளைந்தகரைக்குவமை 300
அட்டில்—அடுக்களை 214
அடகு—இலையுணவு 162, 217, 329, 330
அடகென்று சொல்லி அமுதத்தையிட்டது 331
அடியார்க்கு நல்லார் 350
அண்ண ணெடுவரை 182
அண்ணாமலையார் 383
அண்ணாமலையார் சருவகலா நிலையம 383
அண்ணாமலை விசுவ வித்யாலயம் 383
அணைமுதல்—தறி 105
அத்தாணிமாடம் 91
அத்தியாளி 88
அதர்—வழி 162
அதிகாரி விசேடணம் 104
அதியற்குப் பனைமாலையும் எழுபொறிநாட்டத் தெழாத் தாயமுங் கூறியது 329
அதியன்—பெயர் 195
அதியன் ஔவைக்கு நெல்லிக்கனியீந்தது 158
அந்தணர்க்கும் விறற்புகழுண் டென்பது (315). "விறற் புகழ் நிறப்ப விளங்கிய கேள்வித்திறத்திற்றிரி வில்லா வந்தணர்" (பரிபாடல். பக். 166)
அந்தரிக்ஷம்—நற்கதி 290
அந்தில்—அசை 299
அந்துவன் சேரல்—கருவூரரசன் 321
அம்மி மிதித்தல்—ஓர் மணச்சடங்கு 373
அயிரை—ஓர்மலை. செல்வக் கடுங்கோ நாட்டது. 220
அயிரைமலை சேரர்கொங்கு நாட்டிற்கும் சேரர்கடன் மலைநாட்டிற்கு மிடையது என்பது 320
அரசர்க்கு வேல்வினை கொலையே யன்றென்பது (22) "கூர் வேற்பாரி" (புறம். 116) "அறத்தின் மண்டிய மறப்போர்" (புறம். 62)
அரசர் தேவியர்தாமே அட்டிற் றொழில் புரிதலுண் டென்பது 214
அரசர் புலவரைத் தமக்கு மேலே நிறுவல் 98
அரசர் பெண்டிர் கலையில் "மடைநூற் செய்தி" கூறப்படுதல் 214

அரசரது குடையுங்கோலும் அளி செய்தற்குந்தெறல் செய்தற்கும் அடையாளம் 228
அரசன் குடை அரசர்க்கு அலங்காரமாகவும், உலகிற்கமுதளிப்பதாகவும் உள்ளதென்பது 91
"அலங்காரமெனவுலகிற் கமுதளிக்குந் தனிக் குடையாய்" (கம்பரா. சடாயுகாண். 22)
அரசன் புலவர் மாட்டுப் பொதுநோக்கொழித்தல் வேண்டுமென்பது. 337
"பொது நோக்கொழிமதி புலவர் மாட்டே" (புறம். 121)
அரசுகட்டில் — வேத்தணை 77
அரண் — புக்கில் 181
அரன்பதி — கைலைமலை 378
அரி — அரிசி 213
அரியல் — அரித்துவிழும் தேன் 317
அரியாசனம் 382
அரிவைபுணரரு பசுங்காய் தின்றது 308
அருங்கடிவரைப்பு 380
அருச்சுனன் 176
அருட்பாரி — அறஞ்செய்தற்கேதுவாகிய அருளுடையவன் 22
அருத்தி — ஆவல் 348
அருந்ததிகாணல் - மணவினை 373
அருவேள் — பாரி 326
அருளுள்ள விலங்குகளும் உண்டென்பது 102
"சிறந்ததன் றீம்பாலறந்தரு நெஞ்சோடருள் சுரந் தூட்டு மிதனெடு (மணிமேகலை ஆபுத்திரன். 53-54)
அல் — இரவு 254
அல்லாந்து — அலமந்து 314
அலகு — அளவு 260
அவ்வியம் — அழுக்காறு 225
அவதானி — ஞாபகத்திறமையால் ஏக காலத்திற் பலவற்றை வினையவல்லவன் 8
அவதி — காலவெல்லை 210
அவபிரதம் — யாகத்தின் முடிவில் நீராடுகை 356
அவையமுல்லை 21
"நவைநீங்க நடுவுகூறுமவை மாந்தர் இயல்புரைத்தல் (பு. வெ. மா. 8, 19)
அவலம் — கவலை 176
அவலித்தல் — கவலுதல் 278
அழுக்காற்றை மேற்கட்டியென்றது 327
அழுக்காறு — பொறாமை; அழுக்கையுடைய ஆறு. சாடு 224
அழுந்தூர் 141
அளவை 121
அற்புப் பேறு 123
அறத்தாற்றின் இன்பந்துய்த்து அறம் வளர்த்தலாற் சரீரருணம் தீர்வதென்பது 279
அறப்புறம் — தருமத்திற்கு விடப்பட்ட இறையிலிநிலம் 333
அறப்பேறு 123
அறம் உயிர்க்கணிபாதல் — பொருளின்பங்களையும் உடம்பையும் வெறுத்தாரும் அறத்தைப் பூணுதலான் இஃது உயிர்க்கணியாதல் என்பது 212
'அறம்பின்' என்பது கலந்திமை யென்புழிப்போல மெலிந்தது 317
அறம்பூணுதல் 212
அறம்விடுதல் — அறத்தால் வரும் போகமாகிய பயனை விடுதல் 377
அறிவாட்டி 158
அறுகிடுதல் — ஓர்மணவினை 374
அறைதல் — துணிதல் 129

அன்பிற்கு விளை நிலம் அசம் 137
அன்பின் இழை—அன்பினால் இழைத்த மங்கலிய சூத்திரம் 213
அன்பினை யளத்தல் இயலாதென்பது 137
அனுவதித்தல்—திரும்பச் சொல்லுதல் 1:0
அஜகஜாந்தரம்—பெரு வித்தியாசம் 87
ஆகுபெயர் 171, 216
ஆசிரியமாலை 65
ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்னும் மணக்கட்கு வேள்வியக்கியில்லாமை 127
ஆடல்—வெற்றி 210
ஆடி—கண்ணாடி 211
ஆத்தல்—பிணித்தல் 77
ஆத்திரையன் பேராசிரியன் 256
ஆததாயிகள்—கொடியோர் 284
ஆதந்தோம்பல் 120
ஆதித்திரு—முதன்மையாகிய திருமகள் வடிவமைந்த மங்கலவணி 373
ஆதரம்—ஆவல் 66
ஆதுலர்—வறியவர் 336
ஆம்—புனல் 163
ஆம்பல்—யானை 69
ஆய்தம் ஒரு மாத்திரையுடையதாய் வந்தது 126
ஆய்தல்—நுணுகுதல் 324
ஆயனூதுங்கருவி—சங்கம் 378
ஆர்கலி—சமுத்திரம் 108, 261
ஆர்தல்—உண்ணுதல் 116
ஆர்முழா—வினைத்தொகை 319
ஆரவை 73
ஆரியநாடு—மேற்கடற் பக்கத்துத் தொண்டிக்கு வடக்கணுள்ள நாடு 73
ஆரியன்—கபிலன் 316
ஆவணம்—கடைத்தெரு 215, 218
ஆவினன்குடியைக் கூறிய பின் வையையை வைத்தது வையாவிநாட்டு மலையிற் றோற்றமுடைய காரணத்தால் வையை என்று பெயர்பெற்றது கருதி என்பது 164
ஆழியுள்ளவேந்தர்—சக்கிரவர்த்திகள் 300
ஆளி—சிங்கக்குட்டி 87, 105
ஆளுடையடிகள் 20
ஆளுடையநம்பி 384
ஆற்ற—மிக 282
ஆன்றது—அமைந்தது 170
இகல்—பகை 234
இங்கிதம்—குறிப்பு 81
இசும்பு—ஏற்றிழிவு 163
இசைக்கருவிப் பயிற்சியிலும், இசைப்பயிற்சியிலும், ஆட்டத்திலும் முறையே பாண்டிய சோழ சேரர் சிறந்தவரென்பது 240
இசைத்தல்—புகழ்தல் 296
இசை நுணுக்கம்—ஓர் இசை நூல் 240
இட்டு நெறி—சிறுவழி 199
இடபம், சிங்கம் மீனம் இவை சனிக்குப் பகைராசி 299
இடைகழி திருக்கோவலூர்க் கோயிற்பெயர் 360
இடைநிலைத் தீபகம் 62
இணையார மார்பன் 83
இதரேதரத் தொகை 71
வீரசோழியம் தொகை 6
இயலிசைகளுள் இன்பங் கொழிக்கு மென்பது 2
இயவுட்சீர் 357
இயவுள்—கடவுள் 101, 198, 357
இயற்பெயருஞ் சிறப்புப் பெயரும் 383
இராக்கதமணம் 361
இராசராசேச்சுரன் 8
இராமாநுசயதிவரர் 7

இருகன்றிற்குள்ளொருகு மீற்று—(189) "இரண்டு கன்றினுக்கிரங்குமோரர் வெனவிருந்தார்" (கம்பரா-மந்திர. 34)
இருங்கோவேள் 311, 325
இருத்தல்—வினையற்றிருத்தல் "வேனில் வீற்றிருக்கும் (சிலப். மனையறம். உரை).
இருத்தி—சித்தி 162, 348, 376
இருந்தை—கரி 257
இருநிதி—சங்கநிதி, பதுமநிதி 304
இருபெயரொட்டுப் பண்புத்தொகை 187
இரும் என்பது முன்னிலைப் பன்மையின் வருதல் 378
இல்செய்தல்—கோயிலெடுத்தல் 357
இல்பொருளுவமை 318
இல்லறத்தார்க்கு ஒருவேளையுணவிற்கென விதித்தது முப்பத்திரண்டு கவளங்கள் 205
இல்லொடுவரவு 123
இல்வாழ்க்கைக்கு என்பது "கிழங்குமணற் கீன்றமுளை" என்புழிப்போல உருபு மயங்கிவந்தது. 142
இலம்பாடு—வறுமை 70
இலவர்—வறியர் 228
இலைக்கறி 217
இவர்தல்—ஏறுதல்
இழைபு—இசைப்பாட்டு 68 (தொல். செய். 243)
இளங்கோவடிகள் 262, 274
இளஞ்செழியன் 112
இளம்பூரணர் 75
இளம்பூரணவடிகள் 129
இளவிச்சிக்கோ 304
இளையர்—இளமகளிர் (122) "நன்மென்சிறடிக்கல்லா விளையர்" (சிறுபாண். 33)
இளையவர்—வேலையாட்கள் 17
இறத்தல்—மிகுதல் 300
இறந்தது தழீஇய உம்மை 161
இறல்—சிதைதல் 287
இறவு—மீன்வகை 71
இறுதல்—இடைமுரிதல் 172
இறும்பு—குறுங்காடு 36, 243
இறைவன்—எப்பொருளினுந் தங்குபவன் 260
இன்—அல்வழிச்சாரியை 180, 190
இன்றொற்பது—சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த ஓர் நீதிநூல் 330
இனியபொன்—இல்பொருளுவமை 318
இனைதல்—வருந்துதல் 274, 325 346,
இனைவு—வருத்தம் 219
ஈத்ததற்கிரங்காமை 35
ஈதல்வேந்தர்க்குச் சிறந்த செயல் 23
உகுதல்—இறத்தல் 210
உச்சிமோத்தல் 106
உஞற்றல்—செய்தல் 360
உடம்பாட்டின் வந்தவியங்கோள் 215
உடம்பொடு புணர்த்தல் 160
உடலுதல்—போர்புரிதல் 242
உடையார் 348
உடையாருள் மலையமான் கோத்திரத்தார் இன்றும் உள்ளன என்பது 348
உண்டிசுருக்குதல் பண்டிக் கழகு 192
உண்ணிறை 111
உத்தராயணகதி வீட்டுநெறியென்பது 350
உபேந்திரன் 258
உம்மை இழிவுசிறப்பு 130
உம்மை உயர்வின் வந்தது 192
உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது 175, 202, 277

உய்த்து—உடன்கொண்டு 289
உரறுதல்—முழங்குதல் 326
உருத்து—வெகுண்டு 151, 244
உருவகம்—ஓர்பொருளணி 171, 187
உலகளந்தமூர்த்தி 360
உலோவுதல்—இவறல் 1, 319
உவமைக்குவமையாதல் இன்றென்பது 294
உவர்க்கூவல் 101
உழத்தல்—வருந்துதல் 277
உழையர்—பக்கலிருப்பவர் 107
உழையர்—ஏவற்சிலதி 213
உறவிகள்—உயிர்த்தொகைகள் 6
உறுகண்—துன்பம் 327
உறுதி—உற்றகாரியம்
உறுமுடி—பெருமுடி 227
உன்னமரம் பூத்துத் தழைத்தல் நன்னிமித்தம் 318
ஊங்கு—மேல் 119
ஊருணி—ஊராருண்ணும் நீர்நிலை 33, 232
ஊழி 117
எச்சம்—வழி, சந்ததி 172
எஞ்சுதல்—குறைதல் 289
எடுத்தல்—உயர்த்தல் 217
எடுத்துக்காட்டுவமை 76, 144
எண்ணாள்மதி—அட்டமி மதியம் 300
எண்பேராயம் 107
எதிர்மறைவினை 266
எய்ப்பினில்வைப்பு—இளைத்தபோது கொள்ளற்கு வைத்தநிதி 181
எல்—ஒளி (262) பகல் (286)
எல்லாவுயிர்க்கண்ணும் ஓம்பச் செல்வது அருள் 209
எவ்வி—பெயர் 209
எவ்விமிழலைக்கூற்றம் 209
எழால்—யாழ் 294
ஏகதேசவுருவகம், 119, 130, 145, 159, 277
ஏகாரம், தேற்றம் 251
ஏகாரம், பிரிநிலை 119
ஏதிலர்—பிறர் 29, 89, 96
ஏந்தல்—அரசன் 196
எய்தல்—அடைதல் 24
ஏர்—அழகு 210
ஏல்வை—அமயம் 205
ஏழிசை 240
ஏழேழ்படிகால் 310
ஏற்பார்—இரவலர் 318
ஏனாதிமுள்ளூர் மலையுடையன் 383
ஐங்குரவர் 113
ஐது—அழகிது 167
ஐம்பெருங்குழு 107
ஐயம்—இல்லாரிரக்கும் பொருள் 169
ஐயனாரிதனார் 14
ஒட்பம்—அறிவு 21, 62
ஒடிதல்—உடைதல் 236
ஒடு உயர்பின் வந்தது 185
ஒடு எண்ணுப்பொருளில் வந்தது 191
ஒப்புரவு—வரையாது வழங்குதல் 369
ஒய்சளர் யாதவர் வகையினர் 310
ஒருத்தல்—யானையிற்றலையாயது 37
ஒருவர் பலவுடம்பில் இயங்குதல் உண்டென்பது 195
ஒல்லுதல்—இயலுதல் 252 282
ஒலியல்—தலைமாலை 23
ஒழுகை—சகடம் 298
ஒளிநாடு—தென்பாண்டிக்குக் கீழ்பாலுள்ளதென்பது 70
ஒளிப்பற்று—பாண்டிநாட்டின் கீழ்ப்பகுதி 118
ஒளியர்—மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர் 70
ஒளியர்—அரசுரிமையுடையர் 118
ஒற்கம்—தளர்வு 213, 215, 221
ஒன்று—உயிர் 379
ஓ-ஐயப்பொருளில் வந்தது 185

ஓ-வியப்பின்கண் வந்தது 185
ஒட்டைச்செவி 102
ஒவல்—நீங்கல் 158
ஒவுதல்—நீங்குதல் 102
ஔவை—தவப்பெண் 336
ஔவை பாண்குடியில் வளர்ந்தது (புலவர்புராணம்) 166
ஔவைமார்—ஆரியாங்கனைகள் 336
ஔவை விறலியென்பது 166
கங்காளன்—என்பணிவேடத்தன், சிவபிரான் 365
கஞ்சத்தார் அந்தணர்க்குரியது 107
கடப்பாடு 209
கடல்விளை யமிழ்தம் 144
கடவுள்வாகை 288
கடவுளர் அரசர் ஒற்றை மாலைசூடணியாரென்பது 83
கடன்கொண்டும் கடன்செய்தல் அருளுடையாரியல்பு 209
கடுவன்—ஆண்குரங்கு 303
கண்ணோட்டம் 334
கண்ணீர் செல்வத்தையழிக்கும் படை. 172
"அல்லற்பட்டாற்று தழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும்படை (குறள்-555)
கண்தேடல்—கண்ணுற்றேடிக் காண்டல் 362
கணியர்—நாளாய்ந்து கூறுவோர் 363
கதுமென—விரைவாக 368
கந்தருவம் 119
கபிலர்கல் 290, 357
கபிலம்—செந்நிறம் 27
கபிலர் 70, 150, 241, 253, 266, 312, 319, 320, 322
கபிலர் கனல்புகுதல் 290
கபிலர் வடக்கிருத்தல் 346
கபிலரே புலவர்க்கு முதல்வர் என்பது 14
கபிலன் இள்ளையைக் கதிர்கொணரப் பயில்வித்தது (அகம்-78) 237
கம்பநாடர் 264
கமம்—நிறைவு 36
கமை—பொறுமை 40
கரப்பார் 10
கரப்பு 6
கரிகாலன் அழுந்தூர்வேட்குப் பெயரன் என்பது 141
கரிசில் உணர்வு—மெய்ப்பொருள் காணும் அறிவு
கல்லாமற் பாகம்படுதல் 111
கல்விக்கடல்—ஔவை 326
கல்விஞானக்கண் என்பது 313
கல்விநலப்பெருமை 114
கல்விப்பெருமிதம் 149
கல்வியில்லாதவன் எள்ளும்படியன் 115
கலந்தவர் தம்முட்பெயர் மாறுதல் 107
கலிகன்றி—திருமங்கையாழ்வார் 301
கலைமகட்கு நிலாப்போன்ற மேனி 4
கலைமகள் பெருமக்கட்குப் பாலளித்தல் (3) "தண்டரளவரை முலைப்பாலமுதந் தந்து (கூத்தன்கவிச்சக்கிரவர்த்தி)
கலையாட்டி—வாணி 3
கலையேறு பேய்த்தேரை நீரென்றலைதல் (அகம் 241) 132
கவிசார்வபௌமர் 68
கவிருசனம் 7
கவிசேகரன் 383
கவிநடை 4
கவிநடைக்குக்காசு—ஈரைங்குற்றம் 4
கழாத்தலை மேடு 312
கழாத்தலையார் 309
கழாத்தலையை வம்பேவைது ஈரரையம்மாய்ந்தது 312

கழுவாய்—தீர்வு 190, 266, 366
கள்ளைச்சுவைத்தவர் அறிவழிதல் 85
களர்வைத்தல் 12
கற்புடைப் பெண்டிரைவானுந்தொழுமென்பது 263
கற்புடையாட்டியுடைமையே மூவேந்தர் செல்வத்தினுஞ் சிறப்பதென்பது 338
கற்றார் பிரிவு துன்புறுத்துமென்பது 196
கற்றிளைய—கற்ற, இளைய என்பது திரிந்தது 115
கறங்குதல்—சுழலுதல் 177
கன்மங்கள் மூன்று, வேள்வி, கொடை, தவம் 6
கன்றுதல்—சினத்தல் 301
கன்னன் 106
கன்னிமார் கல்யாணம், சீதா கல்யாணம்போல வந்தது 359
காசினியோர்—உலகோர் 207
காட்சி—ஞானம் 380
காணுதல்—உண்டுபண்ணுதல் 107
காந்தருவம் 73
காமத்தைக் கீழ்விரிப்பென்பது 327
காமம் வினைவினைத் தின்பது 117
காமமே வெகுளிக்குக் காரணம் 150
காய்சினம்—வெகுளி 142
கார் 33
கார்பெற்ற கற்பு 21
காரி—பெயர் 315
காரிகை—அழகு 220
காரிகொடுத்தகளைக்கொட்டு 328
காரி திருமாற்கடிமை செய்தது 360
காரிமக்கள் 315, 361
காவலர்க்குக் கற்றார்சூழல் 17
காவற்சாகாடு 61
காவிதிப்பட்டம் 118
காவிரி விச்சிமலைச் சாரற்பட்டை கொண்டு பகடாடி வருதல் 303
காளிதாசர் 104, 297
கிழி—கிழிமுடிப்பு 170
கிள்ளி வளவன் 315
கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கிடப் புக்கதும் கோவூர் கிழார் பாடி உய்யக்கொண்டதும் (புறம்-46) 334
கிளர்வது—சிறப்பது 325
கீதைப்பாட்டு 272
கீரந்தை மனைவி 122
குடங்கை—உள்ளங்கை 167
குணங்கள்—அகப்பண்பு 159
குணம்—கயிறு 99
குதிரை தாளத்திற்கேற்ப நடக்குமென்பது 19
குப்தர்காலம் 303
குமாண்டூர் 7
குயில்கள் மாவிற்கூவுதல் 19
குரவர் 7
குரிசில்—தலைவன் 160
குலாவுதல்—சூழ்தல் 355
குழுமல்—கூடுதல் 73
குளகம்—பலபாட்டொரு வினைகொள்ளும் 237, 329
குளிர்ந்து—தங்கி 192
குற்றியலிகரம் அலகுபெறுதல் 356
குறள் 91, 162
குறி—கருத்து 90
குறிக்கோள்—உள்ளத்தில் ஒன்றைக் குறித்துக் கொள்ளற்குரிய துணிவு 90
குறிஞ்சிப்பாட்டு 48
குறுமுடி குடியிற்பிறந்தவர் வேளெனப் பெயர்பெறுதல் 227
குறுமுடி மன்னர்க்கும் பேரரசர் தரும் பரிசில் உண்டென்பது 141

கூடல் மறையொலியான் உயர்ந்த நகரென்பது 165
கூடலிற் பாண்டியர் ஆடக மாட முண்டென்பது 165
கூத்தன் கவிச்சக்கிரவர்த்தி 3
கூந்தற்கிழவர்—கூந்தலைத் தொடுதற்குரியவர், கண வர் 297
கூர்த்தல்—சினத்தல் 276
கூர்தல்—மிகுதல் 286
கூலம்—தானியம் 208
கூவல்—கிணறு 101, 207
கூழ் 16, 141
கூழைப் பலாத்தழைக்கப் பாடியது 376
கெழீஇயது—நட்டது 355
கேடில் விழுச்செல்வம் கல்வி 43
கையறுநிலை 355
கொங்கு நாடு கருவூராகிய வஞ்சியை உடையது 321
'கொங்கு தேர்வாழ்க்கை' யென்னும் பாடல் 353
கொங்கு மலை நாடென்பது 376
கொட்டி 13
கொடுங்கால்—காரியூர் 315
கொடுங்கால் முன்றுறை 315
கொடுங்குன்றம் 110, 234
கொடுத்தாரெனப்படுஞ் சொல் மூவுலகுங் கேட்கு மென்பது 57
கொடைமடம் 59, 105
கொண்டான்—தலைவன் 378
கொம்பன்னர்—கொடியைத் தாங்கும் பற்றுக்கோடு போலக் குடி தாங்க வல்ல வர் 117
கொல்லிமலை 110
கொன்—அச்சம் 300
கோ—இராசசாதி 295
கோசன்புத்தூர்ப்பற்று 110
கோடானுகோடி 175
கோடியர்—கூத்தர் (65) யாழ்ப்பாணர் (240)
கோடுதல்—கோணுதல் 206
கோதை—சேரன் பெயர் 366
கோப்பெருஞ் சோழர் 107
கோயிற்புறம்—கோயிற்கு விட்ட இறையிலி நிலம் 333
கோவல்—காரி தலைநகர் 315
கோவல்—திருக்கோவலூர் 325
கோவூர் கிழார் 361
கௌவை—துன்பம் (199) பழி (222)
சங்கரநமச்சிவாயர் 365
சங்கவை—பெயர் 111
சமயதிவாகர விருத்தி 121
சயங்கொண்டார் 38
சயந்தன் 258
சரமோபாயநிட்டை 7
சாகாடு—சகடம் 61
சாகுந்தலநாடகம் 354
சாகுந்தலம் 297
சாடு—சொற்சாதுரியம் 12
சாத்து—திரள் 298
சாதுவன்—யார்க்கும் நன் மையே செய்பவன் 249
சாமுண்டிதேவநாயகன் 47
சால்பு—சான்றாண்மை 299
சாவிற்சாதல் 82
சான்றோர்—வீரர்; 314
பொறியடங்கியோர் 351
சித்தவிமானம் 57
சில்காததூரம்—காதத் திற் சிலவாகிய தூரம் 165
சிலதி—குற்றேவல் மகள் 213, 218
சிற்றரசர்க்கும் கோலுண் டென்பது 78
சிறுசொல்—பொருண்முற் றாச் சொல் 76
சிறுவரை—சிறியகால வெல்லை 22
சின்னத்துணி—கிழிந்த துணி 328
சீடன்—மாணவன் 8
சீத்தல்—நசைதசையாகச் சீவுதல் 5
சீத்து—துடைத்து 1
சீமத்து—பாக்கியம் 201

சீர்—பாரம் (67). சீர்தூக்குங் கோல் என்புழிச்சீர் பாரமாதல் உணர்க; தாளம், 68, 210
சீர்த்தல்—சிறத்தல் 113
சீராகவன்—பெயர் 383
சீரிஞ்சயோன்—தாளங் கெடாத இசைவல்லவன் 210
சீலம்—மிகப்பெரியோன் மிகச் சிறியோனுடனும் வேற்றுமையின்றிக் கலந்தொழுகும் பெருந் தன்மை 208
ஸ்ரீ கீதை 90
சுடர்வழுதி—வினைத்தொகை 123
சுரப்போக்கு 10
சுருங்கை வழி—கரந்த கற்படை 286
சுலவுதல்—சூழ்தல் 344
சுலவும்—சூழும் 142
சுவாகதம்—நல்வரவு 72
சுளுறவு—ஆணையிடுகை 90
செங்கோலரசர்க் கின்றியமையாத எழுபேறுகள் 125
செத்தபறை—செய்தற்பறை 280
செந்துறைச் செய்யுள் 68
செந்நா 11
செய்யுளாதலின் வேட்கை, அவா, வேணவா எனவாயிற்று 122
செயங்கொண்டார் 374
செருத்தல்—மடி 90
செல்வக்கடுங்கோ கருவூரினனென்பது 321
செல்வக்கடுங்கோ வாழியாதன் 317, 322, 323
செவ்வி—அமயம் 332
செவ்வித்தமிழ் 15
செவ்வியாள்—பதனறிந்தவள் 168
செழியன்—பாண்டியன் 119
சென்னி—சோழன் 305
சென்னியென்ற பெயரொற்றுமையாற் சோழர்க்குப் பாடல்வன்மையுண்டென்பது 241
சேட்டை—மூதேவி 327
சேதுபதி—தன்மசேது காவலன் 383
சேமம்—காப்பு 379
சேரமான் அதியன் 329
சேரமான் வாராயெனவழைத்தகதை 328
சேரர்கள் வேளிர்குடியிற் மணத்தல் 118
சேரர் பாண்டியர் சோழரென்பதே முறையென்பது 366
"போந்தை வேம்பே யாரெனவரூஉம்" (தொல்-புறத். 5)
சேனாவரையர் 383
சொல்—நெல் 179
சோழர் வேள்குடியில் மணத்தல் 118
சோழன்—குடிப்பெயர் 367
சோழிய ஏனாதி 382
சோலை—விடாமழை 325
சௌபரி—மாந்தாதா மருமகனாகிய ஓர் இருடி 195
ஸேனாபதி—ஏனாதியெனச் சிதைந்தது 382
ஞாயில்—சூட்டு 242
ஞாயிறு—கபிலற்குவமை 337
ஞெமிர்தல்—பரத்தல் 83
தக்கயாகப்பரணி 257
தகடூர்—அதியன் ஊர், 157, 162, 190, 193. 382
தகடை—தகடூர் 157
தகுந்தானம்—இரட்டைத் தவிசினிருக்கை 337
தஞ்சம்—பற்றுக்கோடு 342
தட்ப—தடுக்க, 170, 340
தடவு—ஓமகுண்டம் 309
தடுமாறுவமம் 75
தடையது—தடைப்படுத்தது 233

தண்சுடர் 119
தணந்தார்—அகன்றவ 7
தத்தாபகாரதோஷம் 93
தத்துதல்—தாவுதல் 370
தந்திக—தருக 118
தந்தையரொப்பர் மக்கள் 323
தந்தையுந் தாயுங் குரவர் 346
தபுத்தல் 98
தம்நாட்டையும் இரவலர்க் கீவது வள்ளியோ ரியல் பென்பது 79
தமம்—இருள் 36
தமனியம்—பொன் 208
தமிழ்க்கல்வி யுடைமை யுயர் வென்பது 116
தமிழ்ப் பாரிவேள் 301
தமிழ்ப் பெரியாள்—தமிழாற் செயற்கரிய செய்வாள் 375
தமிழ் வையை 301
தரதமம் 63
தருதல்—பெறுதல் 305
தலைப்பு 68
தலையாம் ஒழுக்கு
தலைவள்ளல்—வள்ளற்றலை வன் 14
தலைவன் தலைவியர் இல் வாழ்க்கைக் குவமையாக மானை எடுத்தாளுதல் 129
தலைவன் தலைவியைத் துயருறுத்தல் கூடாதென் பது 127
தலைவனது எட்டுக்குணங் கள் 121
தவ்வாக்குடி—தள்ராதகுடி மக்கள் 15
தவளம்—வெண்மை 180
தவிர்தல்—தங்குதல் 325
தழற்செல்வன்—அவிகொண் டுய்ப்பவன் 354
தளர்நிலை 100
தளி—கோயில் (67), மழை(300)
தறுகட்பெருமிதம் 149
தறுகண்—அஞ்சாமை 123
தாடகை 5
தாமேதுதவராதல் 119
தாய்க்கன்றித் தந்தைக்கும் ஈனுதல் கூறுவது 280
தாரகம்—ஆதாரம் 239
தாரம்—பண்டம் 293
தாரு—மரம் 179
தாவா—கெடாத 202
தாள்—முயற்சி 245
தாள்வரை—பாதசைலம் 182, 235
வெற்பினடி—பின் முன்னு கத் தொக்க ஆறும் வேற் றுமைத் தொகை 182, 291
தான் என்பது அது வன்றி இஃதொன்று என்பதுபட நின்றதோரிடைச் சொல் (115) (திருக்கோ. பேராசி ரியர் உரை)
தாணநீர் 4
தானைமுரசு—படைமுரசு 38
திங்கள் கல்விக்கோப்பாவது 186
திடர்—மேடு 171
திணை—குலம் 341
திப்பிய 100, 154
திப்பியம்—சிறந்தபொருள் 383
திருக்கண்ணன்—தெய்வீ கன் நம்பி 362, 372
திருக்கழுத்து—திருமகள் இறைகொள்ளுங்கழுத்து 211
திருக்கோவலூர் வீரட்டே சுரர் கோயிற் சாசனம் 290, 345
திருக்கோவலூரில் உலகளந்த மாயன்கோயி லுண்டென் பது 360
திருக்கோவலூரில் மூன்று சத்திகளும் விளங்குதல் 314
திருக்கோவை—ஓர் நூல் 240
திருத்தக்கதேவர்—பெயர் 4, 383
திருந்தவை—தீயவையாகா நல்லவை 156
திருப்பல்லாண்டு 256
திருப்பூட்டுதல்—மங்கல ணி யணிதல் 217

திருமங்கை மன்னன் 360
திருமாவியனகர்க் கருவூர் சேரர் தலைநகர் 324
திருவடி பிடிப்பான் 80
திருவள்ளுவ மாலை 224
திருவாதவூர்—பாண்டிநாட்டதோரூர் 70
திருவீழ்மார்பு—திருவிரும்பப் பட்ட மார்பு, திருக்கழிகின்ற மார்பு 123
திலீபன் 104
தீ உயரு மியல்பினது 354
தீட்டல்—எழுதல் 375
தீந்தமிழ்—இனியதமிழ் 317
தீப்பாய்ந்த சீதாதேவியை நெய்யாகுதிக்குவமித்தல் 349
தீப்பால்—தீவினை 116
தீர்தல்—நீத்தல் 253
துகள்—குற்றம் 150
துகளீதல்—குற்றமேறிடுதல் 151
துச்சில்—ஒதுக்கிடம் 172
துஞ்சுதல்—இறத்தல் 346
துடவை—தோட்டம் 217
துப்புரவு—உணவுப்பொருள் 369
துரிசு—அழுக்கு 350
துரீஇ—தேடி 270
துரோணர் 86
துரோணர் அகிச்சத்திர நாடாண்டது 86
துவ்வாக்கனி—உண்ணாத பழம் 283
துவராபதி 310
துவன்றுதல்—நெருங்குதல் 335
துனைதல்—விரைதல் 325
தூ—பற்றுக்கோடு 161
தூதுவர்க் குருவப்பொலிவு வேண்டுமென்பது 120
தெய்வப்ப[illegible] திப்பியமான கிருஷி 281
தெய்வப்பாரி 76
தெய்வமணம்—தந்தை கொடுப்பப் புக்கமணம் 216
தெய்வமழை 5
தெய்வ முனி—அகத்தியர் 178
தெய்வீகன் 362, 370
தெருள்—அறிவு 305
தெற்றி—மேடை 57
தெற்றென—தெளிய 231
தெறுதல்—சுடுதல் 325
தென்பறநாடு 110
தென்றல் மெல்லிதாக அசைதல் 164
தென்னன்—பாண்டியன் 332
தேர்க்கு மணிகட்டுவது 55
தேனன்றுமலை 321
தொகை நூல்களில் ஔவை காரியைப்பாடாமை 340
தொடை—அம்பு 235
தொல்வேளிர் 146
தொழுத்தை—பணிப்பெண் 146
தொழும்பு—அடிமை 6
தொன்மறவர்—மூதிற்குடி வீரர் 244
தோம்—குற்றம் 382
நக்கீரர் 233
நக்கீரனார் கபிலரைப் புகழ்ந்தது 358
நச்சினார்க்கினியர் 20, 42, 118, 223, 306
நசிதல்—கெடுதல் 209
நசை—ஆசை 1[illegible]1, 141
நட்டார்க்குத் தோற்றலை நாணாதான் 97
நட்பிற்கரசிருக்கை 101
நடுகல் 357
நடைநவின்ற பிராயமா 69
நடைவயிற்றோன்றிய இரு வகை விடை 323
நந்தினி 36
நந்துதல்—கெடுதல் 391
நப்பசலையார் 263
நம்பியாண்டார் நம்பி 14,376
நயன் 121
நயினாராச்சான் பிள்ளை 7
நல்லாதனார் 18, 113
நல்லார் கற்பு 13
நல்லோரைப் பின்பற்றி நடத்தல் 61

நல்லோள் கணவன் 40
நலகாலம் 123
நவநீதப்பாட்டியல் 208
நவை—குற்றம் 206
நள்ளார்—பகைவர் 16
நளிமங்குல்—பெருமையை
யுடைய முகில் 20
நற்பு 21
நற்றமிழ் 15
நற்றிணை 209
நறவு 142
நன்குடி 122
நன்மருந்து 33
நன்முடி 78
நன்றி—அறம் 104
நன்னர்—நன்மை ...
நன்னன் 308
நா—ஞானேந்திரியமும் கர்
மேந்திரியமும் ஆதல் 106
நாக்கடிப்பு 133
நாகநாதசேதுபதி 8
நாட்டரையன்—பாரி 72
நாடு—உலகம் 115
நாணின்மைபழியென்பது 88
நால்வகையமுதம் 24
நால்வாய்—தொங்கும் வாய் 364
நாலடி 207
நாலுதல்—தொங்குதல் 170
நான்மணி 13, 74
நான்மாடக்கூடல் 165
நிகளம்—சங்கிலி 173
நிச்சல் நிரப்பு 130
நித்தியசுமங்கலைகள் 378
நியதி 117
நிரப்பு—வறுமை 116, 205
நிலமகளழுதகாஞ்சி 86
நிலமயக்கம் 96
நிலாமுக்கிப்புள் 185
நிலைவிளக்கு 140
நிழலில் நீளிடைத்தனிமரம் 11
நிறை—கற்பு 213
நீர் இழிபு மியல்பினது 354
நீலச்சிற்றுடை 328
நின் அரசர் அண்ணமலை 384
நுழைபுலம் 11
நெடுமுடி—வணங்காமுடி 365
நெடுமை—நெடுமொழியென்
புழிப்போல வணங்காமை
யைக் குறிப்பானுணர்த்
திற்று 315
நெய்தனிலத்தார் 209
நேரார்—பகைஞர் 246
நேரியர்—நேரிமலையை
யுடைய சோழர் 113
நேரிழையார்—மெய்யழகிற்
கியைந்த மெல்லிய அணி
யினர் 270
நோக்கு 121
நோய்தீர் மருந்துமரம் 332
நோய்மரம் 332
நோன்று—வலிபொறுத்து 239
ப்ரஹ்மை—வாஹம் 107
பகடு—யானை 179
பகர்தல்—விலைகூறுதல் 221
பகரம்—அழகு 179
பகலோன்—சூரியன் 1
பகையின் எச்சமும் கடனின்
எச்சமும் தீயினெச்சமும்
பின்வளர்ந்து தெறுமென்
பது 221
பச்சைமலை 110
பசை—அன்பு 354
பசைதல்—ஒட்டுதல் 61
பஞ்சவன்—பாண்டியன் 176
பட்டினப்பாலை 299
படர்தல்—செல்லுதல் 160
படி—தன்மை 189
படிக்கால்—ஏணி 242
படிகால்—வழித்தோன்றல், 256
தலைமுறை 310
படுத்தல்—வைத்தல் 289
பண்ணியம்—பண்டம்,
உணவு 236
பண்ணிற்கழகு கேட்டார்நன்
றென்றல் 210
பண்பு—பாடறிந்தொழுகல் ...
பணித்தல்—ஏவுதல் 10
பதடி 102

பதன்—செவ்வி 340
பதுமாபதி 140
பப்ருவாகனன் 176
பயத்தல்—பயன்பெற நல்குதல் 310
பயந்தவர்ப் பழிச்சல் 7
பயனிலைபுரிந்த வழக்கு 75
பரசுதல்—துதித்தல் 343
பரவுதல்—ஏத்துதல் 369
பரிகரம்—படையாட்கள் 343
பரிசனத்தார் 108
பரிசில்விடை 69
பரிதல்—இரங்குதல் 260, 379
பரிமா—புரவி 68
பரிமேலழகர் 311
பருணிதர்—அறிந்தடங்கிய பெரியோர் 97
பல்குதல்—நிறைதல் 281, 299
பலாப்பழுத்த என்பது பலாம் பழுத்தவென மெலிந்தது 317
பழமொழி 102
பழிக்கப்படும் இயல்பை விலக்குதல் 111
பழிச்சுதல்—புகழ்தல் 359
பழிநாணுவானையே நட்புக்கோடல் (88). "பழிநாணுவானைக் கொடுத்துங் கொளல் வேண்டு நட்பு (குறள் - 194)
பழிமுறுவல் 147
பழுநி—பழுத்து 296
பழுமரம்—பழுத்தமரம் 66
பழையனூர்க்காரி 328
பழையனூர் தொண்டைநாட்டதென்பது 328
பறநாடு 13, 198, 199
பறம்பு 343
பறம்பு உழவருழாதன நான்கு பயனுடைமை 240
பறம்புநாடு முந்நூறூர்த்தென்பது 22
பறம்புமலை புகழ் வடிவினது 119
பனந்தண்டம் பழமீந்தது 375
பனைமாலையும் எழுபொறி நாட்டத் தொழாத்தாயமும் உரியற்குக் கூறுதல் 329
பஹூவஹூஹா: ராஜா நஃ 297
பாக்கம்—நெய்தனிலத்தூர் 96
பாங்கு—நன்மை 22, 359
பாட்டரையன் 72
பாடறிந்தொழுகல் 289
பாண்டிக்கோவை 165
பாண்டிநாட்டு நல்ல தமிழ் வழக்குமுண்மை 165
பாண்டிமண்டல சதகம் 109
பாண்டியர் வேள்குடியின் மணத்தல் 118
பாண்டியர்க்கு வேட்பந்தாரென்பது 223
பாண்டியன் கைகுறைத்த வரலாறு 122
பாணர்—இசைவல்லவர் 37
பாத்து—பகுத்து 125
பாயது—பரந்தது 153
பார்கற்பத்தியம்—பிருகஸ்பதி அருளிய நூல் 71
பாரி 298, 300, 302
பாரி அறப்பயனைக் கருதாது அறஞ்செய்தல் (99) "அறவிலை வாணிகன்" (புறம்-134)
பாரித்தல் (113)
பாரி தமிழ்த்தலை வள்ளல் 14
பாரி கிழவி னிளிடைத் தனி மரம் (11)
பாரிபறித்தபறி (328)
பாரிமகளிர் (111)
பாரிமகளிர் பார்ப்பார்க்கு மணஞ்செய்விக்கப்படவில்லையென்பது (290)
"மொய்வைத்தியலும....கபிலக் கல்லது" (திருக்கோவலூர்ச்சாசனம்)
பாரிமுல்லைக்குத் தேரீத்தது 218
பாரியூர் 110
பாரியூர்க்கறை 110
பாரிவண்மைப்புகழ் 111
பாரீஸ்வரம் 119

பாரீஸ்வரர் 110, 120
பால்—ஊழ் 116, 352
பாலதந்வா 7
பாவித்தல்—காத்துநடத்தல் 343
பாலையில் நெறிகூருது கில னென்றொழிந்தது. ஆண்டுப் புகுவாரின்மை குறித்தது 163
பாவலர்—ஐவகைப்பாவும் வல்லவர் 156
பாவாழ்நர்—செந்துறைப் பாட்டால் உயிர்வாழ் பாணர் 210
பாவேந்தர்—செய்யுளை ஆள வல்ல தலைவர் 258
பாழ்ங்கடம்—பாலைநிலம் 232
பாழ்ஞ்செவி—ஒட்டைச் செவி 102
பாற்கரன்—ஸ்ரீ பாஸ்கர சேதுபதி 8
பான்முலையை அறுத்தல் பாவமென்பது 90
பான்மை—இயல்பு 263
பிசிராந்தையார் 107
பிரமதத்தன்—ஓர் ஆரிய மன்னன் 358
ஆரியவரசன் யாழ்ப் பிரமதத்தன். குறுந் (184)
பிரயாகை 303
பிரான்மலைக் கல்வெட்டு 110
பிருகற்பதி—தேவகுரு 263
பிழைத்தல்—செய்வது தப்புதல் 81
பிறந்தகத்துச் செல்வியர்'' புக்ககத்து மிடிப்படுவ ரென்பது 142
பிறர் மகளிர் மெய்யைத் தன் மனத்திலெழுதிக்கொள்ளாத உரம். (131) "கோட்டியுட் கொம்பர் குவிமுலை நோக்குவோ னேட்டிட மனவனுரமிலி (பரிபாட்ல். 12)
பிறிதின்கிழமை 8
பிறிதுமொழிதல்—ஓர்பொருளணி 70
பின்மொழி நிலையல் 3
பின்வருவை மகளிர் 141
பின்றுதல்—பிற்படுதல் 99
பீடா—பிரயாகைக்கடுத்த ஒரூர் 303
பீடுநடை—பெருமிதநடை 39
பீறுதல்—கிழிதல் 175
புக்கசம் 142, 143
புகலுதல்—விரும்பல் 227, 343
புகழுடம்பு 147
புகற்சி—விருப்பம் 249
புகன்று—விரும்பி 72
புகா—உணவு (204)
புகாக்காலை—உணவு வேளை. (தொல். களவி. 16)
புகுவாயில் 121
புகைக்கொடி—தூமகேது 299
புடவி—பூமி 6
புணர்வு நினைந்துவகையுண்டாதல் (148) (தொல். மெய்ப்பாட். 11)
புணரி—கடல் 272
புத்தேட்படிமை—தெய்வத் திருவுருவம் 200
புரசை—கழுத்திடு கயிறு 343
புரப்பு—காப்பு 275
புரவு—காவல் 229
புரை—குற்றம் 313, 355
புல்வேளூர் 193
புல்லெனல்—பொலிவழிதல் 197
புலத்தல்—வெறுத்தல் 229, 304
புலவர் குழுவிற்கு அணிகலம் உவமையாதல் 197
புலவன்—வியாழன் 71
புலன்—நாடகச் செய்யுள் 68
புலன் ஐந்து—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் 380
புலனழுக்கற்ற அந்தணாளன் 350
புலனுழுதுண்மார்—அறிவால் உழுதுண்ணுங் கற்றோர் 335
புலிகடிமால் 310, 311
புற்கை—உணவு 210

புறங்காத்தல் 333
புறந்தருதல்—காத்தல் 271
புறம் 115, 342
புறம் புறம்பாதல்போலப் புறம் புறம்பாயிற்று 180
புன்கண்மை—வறுமை 335
பூங்கோவலூர் 323
பூசல்—போர் 304
பூதவுடம்பு 147
பூதன் ஒளவையை உண்பித்தது 193
பூதனை அதியன் மறப்பித்தது 193
பூந்துறைநாடு 163
பூரித்தல்—நிறைவித்தல் 368
பூரியர்—கயவர் 284
பூவைநிலை 83
பெட்டல்—விரும்பல் 296
பெட்டாங்கு—விரும்பிய பரிசு 296
பெண்புறன்—பெண்ணுக்குரியதாக்குஞ் செல்வம் 333
பெரியவர் புல்லுங்காற்றான் புல்லும் பேதைமை 84
பெருங்கொற்றனைக் கற்பிசை செய்நற்றமிழோன் என்றது 15
பெருமை—செயற்கரிய செய்தற்றன்மை 3
பெருக்கினான்—நீக்கினான், அறுத்தான். மங்கலமொழி 212
பெருங்கதை 4, 17, 88, 343
பெருங்கோப்பெண்டு 133
பெருந்தகுவி 324
பெரும்பற்றப் புலியூர்நம்பி 70
பெரும்பிறிது—சாவு 224
பெருமிதம்—பேரெல்லை 227
பெருவாயின்முள்ளியார் 121
பெருவிறல் 84
பெற்றி—தன்மை 280
பேய்த்தேர்—கானல் நீர் 132
பேரணி—திருமங்கலியம் 216
பைங்கூழ்—பசியபயிர் 63, 349
பொங்கர்—சோலை 10, 162
பொத்து—புரை 196
பொதி—மூடை 200
பொதுளும்—தழைக்கும் 318
பொய்—இயல்பாக உள்ளீடில்லாதது 2:6
பொய்யாமொழியார் 71
பொருந்திலிளங்கீரனார் 358
பொருவுதல்—பொருந்தல் 207
பொருள்நுட்பம் 177
பொருளுணராரிடம் கல்வி பயனின்றென்பது 102
பொலம்—பொன் 68
பொற்பு—பொலிவு 212
பொற்றாலி கொடுத்தும் இரவலரையோம்பும் வள்ளன்மை இந்நாட்டுண்டென்பது (213)
"ஈகையரிய விழையணி மகளிரொடு சாயின்றென்பவாஅய் கோயில் (புறம்-127).
பொறியுடன்கொண்டு உயிர்போய்ப் பிறிதோருடலிற் புகுதல் 272
போக்கியம்—அனுபவத்திற்குச் சிறந்தபொருள் 208
போர்வைக்கோ 23
போர்புகுவார் நீராடிப் புகுதல் 243
போழ்க்குத்தும் 37
பௌவம்—கடல் 186
மக்கட் பேற்றிற்கு வரம் வேண்டுமென்பது 360
மக்கள் ஆண்பெண் பொதுப்பெயர் 123
மக்களுட்பதடி 102
மக—அகரவீற்றுப் பெயர் 169
மகட்பாற்காஞ்சி 121
மகட்பேசுதற்கண் நாளும் புள்ளுஞ் செவ்வியும் ஏற்கவுரைத்தலும் வேண்டப்படுதல் 340
மகண்மறுத்தல் காரணமாக அரசர்க்குப் போர் நிகழ்தல் 109
(புறம்-109, 115, 119)
மகண் மறுத்தற்றுறை 230

மகதைநாடு 110
மகளிர் உணர்விலராயின் ஒத்த வின்பத்தின ராகாமை 115
மகளிர் எழில்பகை விளைத்தல் 276
மகளிர் நல்கல்—கன்னிகா தானஞ் செய்தல் 315
மகன்றில்—அன்றில் 39
மகனறிவு தந்தையறிவு 323
மகாஅர் 316
மகிஷமண்டலம் 8
மங்கலமடந்தை 144
மங்கலமொழி 212
மச்சநாடு 110
மஞ்சள்நோய் 225
மடங்கல்—சிங்கம் 106
மடப்பம் 123
மடப்புறம்—மடங்கட்குவிட்ட இறையிலி நிலம் 333
மடல் மகளிர்க்கொவ்வாதாதல் 124
மடலூர்தல் 124
மடவர்—அறிவிலார் 159
மடைநூற்செய்தி அரசர் பெண்டிர் கலையிலொன்றென்பது 214
மண்டை—பிச்சைக்கலம் 298
மண்ணுலகினும் விண்ணுலகே மெய்க்கு மிக மகிழுமென்பது 225
மண்டேய—உலகுதன்னளவிற் சிறிதாக (157)
மணிமேகலை 282
மதக்கல்—யானை 235
மதி—ஒளவைக்குவமை 337
மதி—பெண்டன்மையுடைமை 186
மதிநுட்பம் தெய்வந்தருவது மதிப்பேறு 121
மந்தி—குரங்கிற்பெண் 303
மயில்—மலைநாட்டுப்புள் 15
மல்லல்—அழகு 22
மலரும் பூவினும் பாடல் சிறந்ததென்பது 63. "போதே மலர்ந்தன்ன சொல்லோதுவார் (ஸ்ரீகீதை). "சொல்லென்னும் பூம்போது" (மதுரைக். வெண்பா.)
மலையமான் கோத்திரத்தார் 346
மலையமான் மக்களைக் கிள்ளி வளவன் யானைக்கிட்டதும் கோவூர் கிழார் பாடி உய்யக்கொண்டதும் 315
மலையமானுக்கு மக்கள் இருவரிற் குறையாரென்பது 315
மலையன்—மலையமான் திருமுடிக்காரி 314, 345
மலையன், புலவர், அந்தணர், ஆதுலர் என்ற மூவர்க்கும் வாயிலடையாமை 336
மலையன் மாளிகை தெய்வ வலிகொண்ட அரணையுடையதென்பது 337
மற்று வினைமாற்றின்கண் வந்தது 125
மறம்—வீரம் 234, 236
மறித்தல்—தடுத்தல் 269
மறுதலை 147
மன்பதை—உயிர்த்தொகை 7, 381
மன்மதகாகளம்—குயில் 20
மன்ற—தேற்றமாக 103
மன்றமுழுதுண்பான்—வாய்மூப்பன் 172
மன்னவனை இறையென்பது 2
மனைக்கு விளக்கமடவார் 343
மாக்கோதை 128
மாகறலூர்கிழான் 47
மாங்குடி கிழார் 110
மாணி—பிரமசாரி 365
மாந்துதல்—பருகல் 269
மாரியூறு—மழையாலாகிய இடையூறு 113
மாவிற்குயிலும் மருதிற்கிளியும் வதிதல் 20

மாவூர்வளவன் 334
மாறன் 113
மாறன் பொறையனார் 74
மாரோகத்து நப்பசலையார் 339, 358
மாரோகம்—கொற்கைசூழ் நாடு 359
மாழ்குதல்—சோர்தல் 264
மானசார நூல்—ஓர்சிற்பநூல் 87
மிகை—குற்றம் 282, 287, 305
மிச்சில்—எஞ்சியது 144
மிசைதல்—உண்ணுதல் 8
மிடி—வறுமை 142
மிருதி—ஸ்மிருதி 145
மீளாவிருள்—நித்தியநரகம் 289
முக்குற்றம்—காமம், வெகுளி, மயக்கம் 231
முகத்துக்கரிபூசல் 257
முச்சுடர்—ஞாயிறு, திங்கள் எரி 231
முடியுடைப் பேரரசர்க்கு வேள்குல மகளிர்பாற் றோன்றிய நன்மக்கட்குப் பேரரசுண்டென்பது 141
முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளர் 118
முடை—கெட்டநாற்றம் 286
முத்தமிழ்—இயல், இசை, நாடகம் 166
முதலூழி 206
முதனூல் 10
முதுக்குறைவி—பேரறிவாட்டி 161, 379
முதுகுடி—வேளாண்குடி 16
முப்பாலை—வள்ளுவனார் வைப்பென்பது 121
மும்மதம் 365
முரண்—இருபாற்படுதல் 71
முருகாறு—திருமுருகாற்றுப்படை 165
முழவம்—மத்தளம் 20
முன்னோர் ஆரியர்துவன்றிய பேரிசையுடையதென்பது 335
முன்னோர்மலை ஊரிக்குரியது 316
முறை 117
முன்றில்—முற்றம் 290, 298
முனைதல்—போர்புரிதல் 24
மூதிற்குடி—பழங்குடி 16
மூதௌவை—அறிவுடைய ஔவை 187
மூரி—வன்மை 290
மூவர்—தமிழ்வேந்தர் மூவர்; ஐவர் பாண்டவரைக் குறிப்பதுபோலக்கொள்க 307
மூவுலகு—தமிழ்வேந்தர் மூன்று நாடு 21, 156
மெத்துதல்—புகழ்தல் 220
மெய்—மார்பு 244
மெய்ப்பட்டதாயகடன்—சரீரருணம் 279
மெய்ப்பாடு—இங்கிதம் 118
மென்மை—சாயல் 122
மேதைக்கலையாட்டி ஔவை 4
மேரு மந்தரபுராணம் 14
மேலாப்பு—விதானம் 327
மேலையருள்—மேலுலகத்திற்குக் காரணமான திருவருள் 101
மையற்களிறு—மதயானை 361
மொய்—வலிமை, பெருமை 290
மொய்ம்பு—வலிமை 142
மோய்—தாய் 3
யாணர்—புதுவருவாய். 300
யார்—ஆர்எனமரீஇயிற்று 171
யூதபதி 37
வஞ்சியார் வேந்தன்—சேரன் 372
வடக்கிருத்தல்—வடக்கண் நோக்கி வினையற்றிருத்தல் 346, 350
வடக்கிருந்துயிர் நீத்தார்க்குக் கல் நடுதல் 357
வடநூல் வழக்கு 206
வடமீன்—அருந்ததி 338
வணர்தல்—வளைதல் 63
வதுவரர்—மணமகார் 363
வதுவை—மணம் 17, 109, 116, 144

வரந்தருவார் 370
வரிப்புனைபந்து 37
வருணன்—மழைக்கடவுள் 374
வலித்தல்—உறுதி செய்தல் 271, 346
வலிவலம்—ஓர்சிவஸ்தலம் 364
வழங்காவழி—நடவாஇடம் 201
வழி—சந்ததி 289
வழி நூல் 10
வழியுரைப்பார்—அரசர் கூறியதை அனுவதிக்குந் தூதிவர் 120
வழுதியர்—பாண்டியர் 10
வற்கடம்—வறற்காலம், பஞ்சம் 205
வறிது—பயனின்மை 325
வறுங்காலே—வற்கடக்காலம் 210
வன்பால்—பாலேநிலம் 132
வலியபகுதி, மென்பாற்கு எதிரிடை 163
வனப்பு 125
வனம்—எயில்சூழ்காடு 290
வாமன முனிவர் 14
வாராத சேட்புலம்—மீண்டு வருதலில்லாத சேய்மையிடம் 318
வாரிதி—கடல் 116
வாலறிவு—தூய அறிவு 166
வான்கண் மருந்து—அமிழ்தம் 106
வான்மீகி முனிவர் 17
வானம் வாழ்த்தி—வானம் பாடிப் புள் 65
வானவன்—சேரன் 158, 305
விச்சி 311
விச்சிக்கோ 303, 307, 309, 310, 325, 331, 341
விச்சிமலே 303
விச்சியர் 303
விச்சியென்னும் பெயர் நெடுங் காலத்திற்கு முன்னொட்டு இந் நாவலந்தீவின் வழங்குதல் 303
விச்சியென்னும் முத்திரை 303
விசயாசனம் 105, 187
விசயை—சீவகன்தாய் 275
விசும்பு—வானம் 163
விஞ்சுதல்—மிகுதல் 230, 305
விடாய்—வெய்யதாகம் 353
விடியல்பதி என்பது கணவன் வர என்பதுபோல வந்தது 366
விடுமாற்றம் 230
வித்தகம்—சதுரப்பாடு 384
விதானம்—மேலாப்பு 23
விதிவிலக்கு—விதிக்கு விலக்கைக் கூறுவது 272
விதுமரபு—திங்களின்வழி 129
விந்தை—வெற்றித்திரு 113
வியஞ்சனம்—கறிமுதலியன 215
வியாச பாரதம் 176
வியோகம்—நீக்கம் 226
விரகு—உபாயம் 72
சதுரப்பாடு (229)
விருதுப்பெயர்—பட்டப் பெயர் 140
வில்லகவிரல் 19
விழியின் விழித்தல் 102
விழுக்கொடை என்றது மறுமைக்கு ஆம் என்று தன் பேறு கருதாது கொடுப்பதுபற்றி 160
விழுச்சேய்—மூத்த பிள்ளேயார் 364
விழுப்பம்—உயர்வு 23
விள்ளுதல்—உரைத்தல் 200
விளம்பிநாகனுர்—நான்மணிக் கடிகை ஆசிரியர் 115
விளித்தல்—அழைத்தல் 273
விறல் 84
வினே ஐந்து 169
வீரமுரசம் 235
வீரர் பகைவரைக் கொன்று உதிரத்தை நெற்றியிலிடுதல் 257
"பூதநெற்றியிற் புண்டரம் புகுந்தியாது தானவர் நெய்த்தோரிழக்கவே (தக்க யாகப்)

வீரைக்கவிராசபண்டிதர் 69
வீறணை—வீராசனம் 87
வீறுதல்—மிக்குப்பொலிதல் 16
வெக்கை—வெம்மை 164, 285
வெட்டென வுரைத்தல் 340
வெண்டுறைச் செய்யுள் 68
வெண்ணிவாயில் 142
வெந்நிலம்—பாலை
வெய்யோன்—சூரியன் 259
வெள்ளிதெற்கேகுதல் வற்கடச்குறி 299
வெளில்—யானைகட்டுந்தறி
வெற்றிவிழையுமரசர்க்கு அன்புநிலை பெறுதலரிதென்பது 135
வேட்டல்—ஆகுதி செய்பெய்தல் 373
வேடன் பசியைப் புறயாற்றிய கதை 220
வேண்டுமென்பது உய்மீற்றான் வந்ததோர் ஏவல் கண்ணியவியங்கோள் 376
வேந்தர் தேரிற் றனிச்சேறலுண்டென்பது 45
வேந்தன்—இந்திரன் 23
வேலானும் மரந்தடிதலுண்டென்பது 46
வேள்வியங்கி—யாகத்தீ 127
வேளிர்—குறுநிலமன்னர் 54
வேளிர்—அறக்கடவுளே வீரமணிந்தாற் போல்வர் 120
வேளிர்க்குக் குறமுடியுண்டென்பது 78
"மன்னர் பாங்கிற் பின்னோராகுப"
(தொல்- அகத்-30-நச்)
வேளைக்கணி—முகூர்த்தங் காணுஞ் சோதிடன்

# வேள்பாரியைப்பற்றிய

# மேற்கோள்கள்

## புறநானூறு

### கபிலர் பாடியன.

1. " சேயிழை பெறகுவை வாணுதல் விறலி
... ... ... ... ... ...
... நெடுவரைக் கோடுதோ றிழிதரு
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே " (105)

2. "மடவர் மெல்லியர் செல்லினுங்
கடவன் பாரி கைவண் மையே " (106)

3. "பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே" (107)

4. " அறம் பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னா னவர்வரை யன்னே " (108)

5. "அளிதோ தானே பாரியது பறம்பே
... ... ... ... ...
யாணறி குவனது கொள்ளு மாறே
... ... ... ... ...
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங் கீயும்மே " (109)

6. "யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே (110)

### மூவேந்தரும் பறம்புமுற்றியிருந்தாரைப் பாடியது

7. "அளிதோ தானே பேரிருங் குன்றே
... ... ... ... ...
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே" (111)

8. "பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே"

### பாரி மகளிரைப் பார்ப்பார்ப்படுக்கக் கொண்டுபோவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது

9. "ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்று மன்ற
... ... ... ... ...
தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே" (114)

### பாரி மகளிரைக் கொண்டுபோம் கபிலர் சொல்லியது

10. "தேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பல்வே
லண்ணல் யானை வேந்தர்க்
கின்னா னாகிய வினியோன் குன்றே" (115)

11. "பெரிய நறவிற் கூர்வேற் பாரிய
தருமையறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே" (116)

12. "கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கு
மாய்தொடி யரிவையர் தந்தை நாடே" (117)

13. 'தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
றேர்வண் பாரிதண் பறம்பு நாடே" (118)

14. "மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்து
மிரவலர்க் கீயும் வள்ளியோ னாடே" (119)

15. "வருந்தா யாணர்த்து நந்துங்கொல்லோ
விரும்பல் கூந்தன் மடந்தையர் தந்தை
யாடுகழை நரலுஞ் சேட்சிமைப் புலவர்
பாடி யானாப் பண்பிற் பகைவ
ரோடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற னாடே" (120)

16. "விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினுங்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தண னீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுந
னினக்கியான் கொடுப்பக் கொண்மதி" (200)

பாரி மகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டுசென்று
கபிலர் பாடியது

17. "இவர்யா ரென்குவை யாயி னிவரே
யூருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமா
னெடுமாப் பாரி மகளிர், யானே
தந்தை தோழ னிவரென் மகளி
ரந்தணன் புலவன் கொண்டுவந் தனனே
நீயே ... ... ...
... ... ... ...

வேளிருள் வேளே ... ...
யான்றர விவரைக் கொண்மதி'' (201)

பாரி மகளிரை இருங்கோவேளுழைக் கொண்டு சென்ற கபிலர் பாடியது

18. "நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
வொலியற் கண்ணிப் புலிகடி மாஅ
லும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
யிகழ்ந்ததன் பயனே யியறே ரண்ண
லெவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
றேற்றாப் புன்சொ னோற்றிசிற்பெரும
விடுத்தனன் வெலீஇயர்நின் வேலே" (202)

19. "மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
... ... ... ...
இம்மை போலக் காட்டி யும்மை
யிடையில் காட்சி நின்னோ
டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே" (236)

வேள்பாரி துஞ்சியவழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது

## கபிலர் பாடியது

### நற்றிணை

1. "புள்ளும்பதி சேரினும் புணர்ந்தோர்க் காணினும்
பள்ளி யானையின் வெய்ய வுயிரினை
கழிபட வருந்திய வெவ்வமொடு பெரிதழிந்
தெனவ கேளாய் நினையினை நீநனி
யுள்ளினும் பனிக்கு மொள்ளிழைக் குறுமகள்

பேரிசை யுருமொடு மாரி முற்றிய
பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி
பலவுறு குன்றம் போலப்
பெருங்கவி னெய்திய வருங்காப் பினளே (253)

## பதிற்றுப்பத்து 7—1 கபிலர் பாடியது

"ஓவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன நல்லோள் கணவன்
பொன்னி னன்ன பூவிற் சிறியிலைப்
புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ
புலர்ந்த சாந்திற் புலரா வீகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர விரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென
விரக்கு வாரே னெஞ்சிக் கூறே
னீத்த திரங்கா னீத்தொறு மகிழா
னீத்தொறு மாவள் ளியனென நுவலுநின்
னல்லிசை தரவந் திசினே" (61)

## பாரி மகளிர்

"அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே." (புறம். 112)

## பெருஞ் சித்திரனார்

"முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும்." ... ...
... ... (புறம். 158)

## புறத்திணை நன்னாகனார்

"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீ
ரோரூ ருண்மையி னிகந்தோர் போலக்

காணாது கழிந்த வைகல் காணா
வழிநாட் கிரங்குமென் னெஞ்சமவன்
கழிமென் சாயல் காண்டொறு நினைந்தே." (புறம். 176)

## மிளைக் கந்தன்

### குறுந்தொகை.

"வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய வுவர்க்கு மென்றனி
ரைய வற்றா லன்பின்பாலே" (196)

## மதுரை நக்கீரனார்

### அகநானூறு

"உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தா ளாம்பன் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளம ருழக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி." (78)

## ஔவையார்

"புலங்கந் தாக விரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கல னீயு
முரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பி
னிரை பறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய ரோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபட
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு." (அகம்-303)

## நல்லூர் நத்தத்தனுர்

### சிறுபாணற்றுப்படை

"..................................சுரும்புண
நறவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியும்." (87—91)

### பழமொழி

1. "முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையுந்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமுஞ் சான்றேர்க் கணி." (361)

2. "மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுட்
பொன்றிறந்து கொண்டு புகாவாக நல்கினுள்
ஒன்றுரு முன்றிலோ வில்." (171)

## சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரம்

### திருப்புகலூர்ப் பதிகம்.

"மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்
இவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங்
கொடுப்பாரிலைப்
பொடிக்கொண் மேனியெம் புண்ணிய னெந்தைபுகலூர்
பாடுமின் புலவீர்கா
ளடுக்குமே லமருலகமாள்வதற் கியாது
மையுறவில்லையே."

### புறப்பொருள் வெண்பாமாலை.

பாடாண்படலம்.

"முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையு
மெல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
யிரவாம லீந்த விறைவர் போனீயுங்
கரவாம லீகை கடன்."

## தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல்

### நச்சினார்க்கினியர்—பேராசிரியர் உரை.

"செம்பொரு ளாயின் வசையெனப் படுமே" (செய். 125)

### உரை மேற்கோள்

"எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
யெம்மிக ழாதவர் தம்மிக ழாரே
தம்புக ழிகழ்வோ ரெம்புக ழிகழ்வோர்
பாரி யோரி நள்ளி யெழினியாய்
பேகன் பெருந்தோள் மலைய னென்றிவ்
வெழுவரு ளொருவனு மல்லை யதனு
னின்னை நோவ தெவனோ
முட்டாற் றுக்குறைக் கட்டி போல
நீயு முளையே நின்னன் னோர்க்கே
யானு முளனே தீம்பா லோர்க்கே.
குருகினும் வெளியோய் தேளத்துப்
பருகுபா லன்னவென் சொல்லுகுத் தேனே"

### பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன்கோவை

"அரும்பா மளவிற் றனத்தொடொவ் வாயல ராமளவிற்
கரும்பா மொழிவத னத்தொடொவ் வாய்களி யானை
செம்பொன்
தரும்பாரி வாணன் றமிழ்த்தஞ்சை யான்றரி
யாரின் முன்செய்
பெரும்பாவ மல்லது நீர்நின்ற பேறல்லி
பெற்றிலையே." (பாடல் 37.

### யாப்பருங்கல விருத்தி மேற்கோள்கள்

1. "தடங்கடன் மண்ணிற் றருமருள் விரும்பிய
சின்மென் கிளவித் தெய்வப் பாரியும்
இல்லை யாகிய இரவலர் வினையெனத்
தன்னுடன் பொத்திய தாசிடு சிதவலு
மடுத்த மெய்யன் கடைத்தலை மூன்சனத்
திவது நோக்கி

விளை முனைகெட வேவிய வெட்சி
கால்பிற்றந் தோலா தாங்கே மதிநிலை
வென்றி வேழ மிகுதி பாடி
நின்றனன் விறலி நெருந லின்றே
அஞ்சி பாடிய வவ்வை போல
வறுமை யுற்ற சிறுமை மூதுரை
தணந்து மிக்க தழற்பொலி திருமணி
யணிந்தரைத் திஞ்ச வல்லிநின் றோளே."

2. "ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை—காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தாஅனுந் தோளான்
விறனுள்ளூ ருள்ள தலர்" (யாப். விருத். சூத். 94)

## யாப்பருங்கலக்காரிகை

### செய்யுளியல் மேற்கோள்.

"நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி." (காரிகை. 5)

## திருப்புகழ்

" வஞ்சக லோப மூடர்
தம்பொரு ளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்

வண்புகழ் பாரி காரி
யென்றிசை வாது கூறி
வந்தியர் போல வீணி லழியாதே

செஞ்சர ணாத கீத
கிண்கிணி நீபமாலை
திண்டிறல் வேல்ம யூர முகமாறும்

செந்தமிழ் நாளுமோதி
யுய்ந்திட ஞான மூறு
செங்கனி வாயி லோர்சொ லருள்வாயே

பஞ்சவ னீடு கூறு
மொன்றிடு தாப மோடு
பஞ்சற வாது கூறு — சமண்மூகர்

பண்பறு பீலி யோடு
வெங்கழு வேற வோது
பண்டித ஞான நீறு — தருவோனே

குஞ்சரம் யாளிமேவு
பைம்புன மீது லாவு
குன்றவர் சாதி கூடி — வெறியாடிக்

கும்பிட நாடி வாழ்வு
தந்தவ ரோடு வீறு
குன்றுதோ றுடல் மேவு — பெருமாளே

(திருப்புகழ். 1, 236)

பாரதம்

வரந்தருவார் பாயிரம்

" ஔவை பாடலுக்கு நறுநெய்பால் பெருகி
யருந்தமி ழறிவிஞற் சிறந்து
பௌவநீ ராடைத் தரணிமர்ன் மார்பிற்
டயிலுமுத் தரியமும் போன்று
மொய்வரால் கெண்டை வாளைசேன் மலக்கு
முதலிய சனமெதிர் கொள்ளத்
தெய்வமா நதிநீர் பரக்குநா டந்தத்
திருமுனைப் பாடிநன் னுடு."

South Indian Inscription (Vol VII. No. 863.)
Reference to: கபிலர் தீப்பாய்ந்தசெய்தி

"வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரி சுழஞ்செல
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது."

அண்ணாமலையார் சதகம்.

"சிங்கள மெனுங்தேய முழுதாளு மன்னவன்
சிறந்த வேள் பாரி சரளன்"
... ... ... ...
... ... ... ...

## தமிழ் நாவலர் சரிதை.

ஔவையார்

திருக்கோவலூரில் அங்கவை சங்கவை என்கிற பெண்கள் வீட்டில் ஔவைக்கு இலைக்கறியிட்டபோது பாடிய

### வெண்பா.

1. "வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி சிறையிட்டுப்—பொய்யே
யடகென்று சொல்லி யமுதத்தை யிட்டீர்
கடகஞ் செறியாதோ கைக்கு."
சிற்றாடை கொடுக்க அப்போது பாடியது.

2. "பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரியன் றீத்த களைக்கொட்டுஞ்—சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையுமிம்மூன்று
நீலச்சிற் றாடைக்கு நேர்."

அங்கவை சங்கவையைத் தெய்வீகனுக்குந் திருக்கண்ணனுக்குங் கல்யாணம் பண்ணுவிக்கும்போது ஓலையெழுத விநாயகனை அழைத்த

### வெண்பா.

3. "ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் செம்மல்—கரிமுகவன்
கண்ணுல வோலை கடிதெழுத வாரானேற்
றண்ணுண்மை தீர்ப்பேன் சபித்து."

சேர சோழ பாண்டியர்க்கு விநாயகன் எழுதப் பாடிய

### வெண்பாக்கள்.

4. "சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமகள்

அங்கவையைக் கொள்ள வரசன் மனமியைந்தான்
* சங்கியா தேவருக தான்.''

5. "புகார்மன்னன் பொன்னித் திருநாடன் சோழன்
றகா தென்று தானங்கிருந்து—நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டா நாள்.''

6. "வையைத்துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையற்கு
வேண்டுவன கொண்டு விடியல்பதி னெட்டாநாள்
ஈண்டு வருக விரைந்து.''

மூவரும் வந்தபோது பனந்துண்டத்தைப் பாடியது.

7. "திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனு
மங்கைக் கறகிட வந்துநின் றூர்மணப்பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பை விட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனி சிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.''

அக்கலியாணத்திற் பெண்ணையாற்றைப் பாடியது.

8. "முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திவரு நெய்யா றலைப்பெய்து—குத்திச்
செருமலைதெய் வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா.''

அப்போது வருணனைப் பாடியது.

9. "கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீ ரதுதவிர்ந்து
பொன்மாரி யாகப் பொழி.''

**நந்திக்கலம்பகம்**

செம்பியர் தென்னர் சேர
ரெதிர்வந்து பாய செருவென்ற பாரி (81)

* சங்கவையுங் கொள்ளற்குத்தான் என்பதும் பாடம்

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 9 | பயந்தவர்ப | பயந்தவர்ப் |
| 19 | 31 | குயில்களா | குயில்கள் |
| 22 | 12 | லெங்கணுமம | லெங்கணும் |
| 24 | 7 | கூறுப | கூறிய |
| 26 | 30 | வ்ளமை | வளமை |
| 31 | 20 | அறிவானுங் | அறிவானும் |
| 33 | 1 | ஒற்றுமைப | ஒற்றுமைப் |
| 34 | 5 | நெஞ்செசா | நெஞ்சோ |
| 35 | 33 | கற்றவர்க்கா | கற்றவர்க்காங் |
| 36 | 3 | புலவர்க்குப | புலவர்க்குப் |
| 38 | 12 | அரவம | அரவம் |
| 39 | 35 | வடன் | வுடன் |
| 40 | 14 | பொன்றந்து | பொன்றுறந்து |
| 44 | 31 | திரைக்கு | குதிரைக்கு |
| 47 | 28 | யேறு | யேற |
| 48 | 3 | ஒட்டுதலான் | ஒட்டுதலான் |
| ,, | 8 | புறப்பாடில் | புறப்பாட்டில் |
| ,, | 35 | ளூட்டிய | ளூட்டிய |
| 50 | 24 | படா | படர் |
| ,, | 30 | ஆண்மைமைப்புடை | ஆண்மைமய்ய புடைய |
| 51 | 8 | என்று | இச்சொல்லை நீக்குக. |
| 54 | 2-3 | "வளர்பைங் கொடிப் பண்புய்யானம் வைக்குங் கொடிக் கெய்தில் சேய்த்தே" | "வனத்தே தழைக்குங் கொடிப்பண் புய்யானம் வளர்க்குங் கொடிக்குப் பெருந்தாரமன்றோ" |
| ,, | 17 | நறுவி | நறுவீ |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 56 | 2 | இரவர் | இரவா |
| 56 | 3 | எனபது | என்பது |
| 57 | 6 | ஓரறிவுயிர் | ஓரறிவுயிர் |
| 62 | 10 | ழோர்ர்புற் | ழோர்புற் |
| 63 | 16 | கமிழ் | கமழ் |
| 68 | 24 | மொழிப் | மொழிப |
| 69 | 2 | ஏற்ருருஞ் | ஏற்றருஞ் |
| 74 | 17 | மறனு | மறனும் |
| 75 | 23 | வேளபார் | வேள்பாற் |
| 76 | 34 | காதலர்ர்ந் | காதலார்ந் |
| 88 | 16 | பரக்கு | பரக்கும் |
| 90 | 22 | யறனில் | வறனில் |
| 93 | 16 | மூடி | முடி |
| ,, | 19-20 | அச்சாத்தல் | அச்சத்தால் |
| 95 | 13 | பேராசரும் | பேரரசரும் |
| ,, | 32 | பழப்பில் | பழிப்பில் |
| 96 | 13 | தக்குழிப | தக்குழிப் |
| ,, | 29 | ஒருகை | ரோகை |
| 97 | 5 | வ்ருந்து | வருந்து |
| 102 | 10 | நெஞ்சமோ | நெஞ்சே |
| 106 | 12 | நொக்கி | நோக்கி |
| 113 | 9 | க்ல்லாமற் | கல்லாமற் |
| 121 | 8 | 8?–93 | 89–91 |
| 122 | 29 | கட்டுரைக் காதை | கட்டுரை காதை |
| 126 | 24 | வாழ்க்கைப் | வாழ்க்கை |
| 127 | 25 | சிறந்தவா | சிறந்தவர் |
| 129 | 18-19 | இனிதுற | இனிதுமன்ற |
| 130 | 2 | அதனின்று | அதினின்று |
| 133 | 16 | வாயலில் | வாயிலில் |
| ,, | 25 | பேரூர்த் | பேரூர் |
| 137 | 7 | ஆகாதது | ஆகாது |
| 141 | 4 | விளக்கு | விளக்க |
| ,, | 35 | வேட்டுப் போனதாக | வேட்குப் போனகை |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 143 | 4-5 | கிழத்தியையும் | கிழத்தியரையும் |
| 145 | 10 | காரண | கரண |
| 145 | 35 | திறததுக்கே | திறத்துக்கே |
| 150 | 5 | மகளிடை | மகளிரிடை |
| 151 | 8 | 55 | 59 |
| 154 | 5 | களி | கள |
| 160 | 28 | தன்மக | தம்மக |
| 165 | 18 | பேரூர்த் | பேரூர் |
| 173 | 23 | தான் | தாம் |
| 174 | 11 | ஒருவனுண | ஒருவனூண் |
| 177 | 21 | பிறங்கும் | பிறங்கும |
| 179 | 4 | கிழெரூறும் | நீழெரூறும் |
| ,, | 21 | மெய்ப்பாட்டியில் | மெய்ப்பாட்டியல் |
| 181 | 33 | கவிவாழ | கவிவாழ் |
| 182 | 16 | வுரைதது | வுரைத்து |
| 185 | 23 | நெருன் | நெருந |
| 189 | 8 | உள்ளும் | உள்ளுருகும் |
| 190 | 15 | உள்ளது | உன்னது |
| 191 | 22 | 254 | இவ்வெண்ணை நீக்குக |
| 193 | 3 | பெயர்ந | பெயர்ந் |
| ,, | 9 | திறம் | தின்ம் |
| 195 | 4 | என்றும் | என்னும் |
| 198 | 9 | தன் | என் |
| ,, | 33 | கெனினும் | கெனினும |
| 200 | 5 | தன்னை | என்னை |
| 207 | 3 | குறல் | குறள் |
| 208 | 18 | ஆளினம் | ஆனினம் |
| ,, | 30 | இக்கத்தினல் | இரக்கத்தினல் |
| 209 | 9 | தொன்றும | தொன்றும் |
| 211 | 19 | குறல் | குறள் |
| 213 | 21 | புரியா | புரிவா |
| 215 | 4 | தேர் | வோர் |
| 216 | 21 | மணிமங்கல | மணமங்கல |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 219 | 13 | இதுபாரிகூற்று | 18 ஆம் வரியில் என்க என்பதன் பின் சேர்க்க |
| 223 | 11 | அழூக்காறு | அழுக்காறு |
| ,, | 24 | ரோராணுகி | றேராணுகி |
| 225 | 1 | செவ்வியசிர் | செவ்வியதேர் |
| 234 | 27 | குற்றம் | குன்றம் |
| 235 | 27 | காப்பினனே | காப்பினளே |
| 236 | 11 | இதன் | இதன்கண் |
| ,, | 24 | அடை அடை | அரண் அடை |
| 137 | 15 | இப்பாட்டு | இப்பாட்டுக் |
| 243 | 28 | சிதைய | சிதைய என்னும் |
| 244 | 29 | விழுத்தலை | விழுத்தலையோ |
| 246 | 2 | படிவுரைத்தேம் | படியுரைத்தேம் |
| 250 | 1 | தன்னைப | தன்னைப் |
| 257 | 24 | யிரவிடைக்கண் | யிரவிடை |
| 258 | 23 | வாராக் | வாராச் |
| 264 | 23 | பகைஞர் | படைஞர் |
| 266 | 2 | அவர் | அவன் |
| 267 | 4 | சுடரினின்று | சுடரினின்ற |
| 269 | 23 | தன் | என் |
| 276 | 23 | தன் | என் |
| 278 | 3 | நினைத்த | நிலைத்த |
| 279 | 7 | பெற்று | பெற்ற |
| 289 | 27 | நீர்படுத்தி | நீர்ப்படுத்தி |
| 293 | 29 | பெருப்பெயர் | பெரும்பெயர்ப் |
| 295 | 11 | கொடைமையை | கொடைமையானும் |
| 297 | 11 | ஸஹஸ்ரவஹுஹாராஜா | ஸஹஸ்ரவஹுஹா: ராஜா நः |
| 298 | 29 | இன்னகயைார் | இன்னகையார் |
| 300 | 10 | றெர் | றேர் |
| 312 | 33 | படிஇயர் | படீஇயர் |
| 315 | 27 | மேவிப | மேவிப் |

| பக்கம். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 316 | 18 | வெல்லாம | வெல்லாம் |
| 318 | 18 | தான் | தான |
| 320 | 33 | மன்னுற | மனனுற |
| ,, | 34 | 58 | இவ்வெண்ணை நீக்குக |
| 323 | 21 | ருயிரமுஞ் | ருயிரமுந் |
| 347 | 32 | நம்மை | அவரை |
| 349 | 21 | வான்மிக முனிவர் | வான்மீக முனிவர் |
| 355 | 22 | யென்க | யென்ன |
| 356 | 17 | ஒன்றுமில்லது | ஒன்றுமில்லது |
| 365 | 1 | தோலைப | தோலைப் |
| 371 | 2 | உண்ணும்படி | உய்யும்படி |
| 374 | 27 | பெருமண | பெருமணம் |
| 383 | 31 | நகருமும் | நகரமும் |
| 384 | 7 | மகிழ்ந்து | இரங்கி |
| ,, | ,, | இரங்கி | மகிழ்ந்து |
| ,, | 12 | ஏன்க | என்க |

குறிப்பு:— 23–ஆம் பாடலின் முன்னுள்ள பறம்புமலை என்பதை 25–ஆம் பாடலின் முன்னர்க் கொள்க.

557-ஆம் பாட்டுரையில் வடபான்முனிவன் தடவு என்புழி, தடவு. ஓமகுண்டமென்று பழைய வுரையைத் தழுவி எழுதப்பட்டது இப்போது ஆராய்ச்சியில் அது காசிபர் சுனையாகத் துணிகின்றேன். தடவு சுனையாதல் "தடவு வாய்க்கலித்த மாயிதழ்க்குவளை" எனக் கபிலரே கூறுதலா னறியலாம் (புறம், 105). ஈண்டுக் குறித்த துவரை அக் காச்யப பூமியாகிய கச்மீரத்தில் வராகத் துவாரா வை யடுத்து இருந்த பழைய துவாரவதியேயாகும். புலிக்கடிமால் என்பது சோழர் புலிக் கொடியைக் கடிகின்ற மால் என்று பொருள்படும். இவ்வுண்மைகள் இதனை யடுத்து யான் வெளியிடும் வேளிர் ஆராய்ச்சியில் நன்கு தெளியலாம்.

—:o:—

# பாரிகாதை

## திறங்களுக்கு உரிய பக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. பாயிரத்திறம் | ... | 1 |
| 2. வளம்பாடு திறம் | ... | 13 |
| 3. தேர் முல்லைக்கீத்த திறம் | ... | 44 |
| 4. கபிலர் நட்புக்கோட்டிறம் | ... | 62 |
| 5. பாண்டியற்கு மணமறுத்த திறம் | ... | 110 |
| 6. ஔவை பறியுண்ட திறம் | ... | 156 |
| 7. பொன் துறந்து புகாநல்கு திறம் | ... | 205 |
| 8. மூவேந்தர் தளர்ந்த திறம் | ... | 222 |
| 9. வஞ்சித்துக்கொன்ற திறம் | ... | 246 |
| 10. கையறவுரைத்த திறம் | ... | 260 |
| 11. கபிலர் மகளிரைப் பார்ப்பார்ப் படுத்த திறம் | ... | 290 |
| 12. மகளிர்பால் ஔவைவரவுரைத்த திறம் | ... | 324 |
| 13. கபிலர் தீப்பாய்ந்த திறம் | ... | 345 |
| 14. மகளிர் திருமணத் திறம் | ... | 359 |

# அநுபந்தம்

இந்நூல் அச்சிட்டு நிறைவேறும் அமையத்துச் சென்னைக் 'கவர்ண்மெண்டு பிரஸ்' ஸிலிருந்து எனக்கு வழக்கம்போல் விடுக்கப்பெற்ற "South Indian Inscriptions, Vol. VIII" என்ற சாஸனத் தொகுதி நூலில், தென்பறம்புநாடு பாண்டிநாட்டதென்பதும் கபிலர் பிறந்த திருவாதவூர் அப்பறம்புநாட்டதென்பதும் No. 423-ம் சாஸனத்தாலும், பிரான்மலை என்ற கொடுங்குன்றத்தை அடுத்து, அறுநூற்றுவனேரிப்பற்றில் பாரீசுரம் என்ற ஊருள்ளதென்பது No. 435-ம் சாஸனத்தாலும் தெரிந்து பெருமகிழ்வுற்றேன். பாண்டிமண்டலசதகமுடையார் "வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டியன் மண்டலமே" என்று கூறியதனையும், பறம்பிற்கோமான் பாரிக்கு உயிர்த் துணைவரான கபிலர் திருவாதவூரிற் பிறந்தவர் என்னும் வரலாற்றினையும், "துவரையாண்டு...வந்த வேளிர்" எனப் புறநானூற்றிற் கபிலர் கூறியதனையும் இச்சாஸனங்கள் ஆதரித்தல் கண்டுகொள்க. இச்சாஸனத் தொடர்கள் வருமாறு:—

## South Indian Inscriptions, Vol. VIII.

No. 423— "தென்பறம்பநாட்டுத் திருவாதவூரில் திருவாதவூர்ப் பெருமான்" (பக். 222)

No. 435— "திருக்கொடுங்குன்றமுடைய நாயனார்க்குத் துவராபதிவேளார் கட்டின பூபாலபுரந்தரன் சந்திக்கு ...உடலாகவிட்ட சுரபிநாட்டுத் திருக்காய்குடிப்பற்றில் கொற்றமங்கலமும், இந்நாட்டு அறுநூற்றுவனேரிப்பற்றில் பாரீசுரமும்" (பக். 227)